## வேதாகம தியானங்கள் - பாகம் *4*

# விசுவாசத்தின் சரிபார்ப்பு



"*Faith' s Checkbook*" என்னும் ஆங்கில புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு


**சார்லஸ் ஸ்பர்ஜன்**

## வேதாகம தியானங்கள் - பாகம் 4

# விசுவாசத்தின் சரிபார்ப்பு

"*Faith's Checkbook*" என்னும் ஆங்கில புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு

**சார்லஸ் ஸ்பர்ஜன்**

**WOG BOOKS 100**

First Edition 2023

**Author / ஆசிரியர்:**

Charles Spurgeon / சார்லஸ் ஸ்பர்ஜன்

**Creator / உருவாக்கியவர்:**

Yesudas Solomon / ஏசுதாஸ் சாலொமோன்

**Copyright: Public Domain / இலவசம் / பொதுதளம்**

This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us. இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.

**Download / பதிவிறக்கம்:**

www.WordOfGod.in and www.Archive.org

**Contact Us:**

**Email:** wordofgod@wordofgod.in

**Mobile/WhatsApp:** +91 7676 50 5599

**Follow Us:**

**YouTube:** Bible Minutes

**Facebook**: Bible Minutes

சார்லஸ் ஸ்பர்ஜன் எழுதிய “Faith’s Checkbook” என்னும் ஆங்கில புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு.

இந்த மொழிபெயர்ப்பு www.TamilChristian.com என்னும் இணையதளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

A daily devotion by Charles Spurgeon. Tamil version is taken from the website www.TamilChristian.com

*If you are using this PDF in mobile, Navigation by Index may not work with Google Drive's PDF viewer. I would recommend ReadEra App for better performance and navigation experience.*

# பொருளடக்கம் மாதங்கள் வாரியாக


01 ஜனவரி........................................................ 1

02 பிப்ரவரி ..................................................... 41

03 மார்ச்...................................................... 79

04 ஏப்ரல்......................................................119

05 மே..........................................................158

06 ஜூன் .......................................................197

07 ஜூலை ...................................................... 235

08 அகஸ்ட் ..................................................... 275

09 செப்டம்பர்.................................................316

10 அக்டோபர்................................................. 355

11 நவம்பர்.................................................... 397

12 டிசம்பர் .................................................. 436


# பொருளடக்கம் தலைப்பு வாரியாக


## 01 ஜனவரி ............................................. 1

1. திருமறையின் முதல் வாக்குறுதி.......................................................3
2. மேற்கொண்டு வெற்றியடைதல்.........................................................4
3. ஒரு வாக்குறுதியின் மேல் சார்ந்திருங்கள்..............................................5

4. அயர்ந்து இளைப்பாறுதல் ....................................................6
5. அதிசயமான உத்தரவாதம் .....................................................7
6. புற ஆதாரங்களிலிருந்து உதவி...............................................8
7. எப்பொழுதும் வளர்ந்து கொண்டேயிருத்தல் ..................................9
8. இதய சுத்தமும் வாழ்க்கையும்.................................................10
9. கொடுப்பதனால் நன்மை பெறுதல்.............................................12
10. புனிதமான பலன்..............................................................13
11. விசுவாசம் வானவில்லைக் காண்கிறது .......................................14
12. முடிவுபரியந்தமும் அன்புவைத்தார்............................................15
13. ஒருபோதும் தள்ளப்படமாட்டோம்..............................................17
14. இளைப்பாறுதல் ஒரு நன்கொடை ...............................................18
15. விசுவாசத்தினால் வரும் செல்வம் ...........................................19
16. மெல்லிய சத்தமும் கேட்கப்படும் ...........................................20
17. ஒன்றைக் குறித்தும் அச்சம் இல்லாதவன்...................................22
18. கிறிஸ்துவும் அவர் பிள்ளைகளும் ...........................................23
19. வாயினால் அறிக்கையிடுதல், இருதயத்தில் விசுவாசித்தல் ....................24
20. ஜெயங்கொள்ளுகிறவன்..........................................................25
21. கடவுளின் விரோதிகள் தலை வணங்கிப் பணிவார்கள்.........................27
22. கிறிஸ்தவ உதாரகுணம் ........................................................28
23. நிறைவான பலி.................................................................29
24. நம் பாதங்களைக் குறித்து அக்கறை..........................................30
25. பாவங்களை அறிக்கையிடும்போது கடவுள் செயல்ப்படுகிறார் ............31
26. கடவுள் அச்சத்தை நீக்கிவிடுகிறார்...........................................33
27. விலையுயர்ந்த மனம் திரும்புதல் ............................................34
28. இனி கண்ணீர் சொரிவதில்லை ...............................................35
29. கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் பெறுவோம்.......................................36
30. தெய்வீகமான பயணத் துணைவர்...............................................38
31. கடவுள் எப்போதும் கவனித்துக் கேட்கிறார் ..................................39

## 02 பிப்ரவரி.................................................. 41

1. நம்பிக்கையை இழக்கவேண்டாம் ...............................................43
2. வளருங்கள் .......................................................................44

3. அவர் இலவசமாகக் கொடுக்கிறார் ....................................................45
4. அவர் திரும்ப வருவார்..................................................................46
5. நீதிக்குத் தகுதி உள்ளவர்கள்...........................................................47
6. பட்டணத்தில் ஆசீர்வாதம் ..............................................................49
7. திரும்பக் கட்டப்படுவீர்கள்............................................................50
8. மகிழ்ச்சியான பாதுகாப்பு................................................................51
9. மாசு அகற்றப்பட்டது....................................................................52
10. நிலையானதொரு சாட்சி................................................................54
11. நம் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்?.........................................55
12. கர்த்தர் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.................................56
13. வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் ......................................58
14. தகுதியற்றவர்களுக்குக் காட்டப்படும் கிருபை...............................59
15. எப்போதும் நினைவுள்ளவராய் இருக்கிறார்....................................60
16. நீங்கள் கடவுளோடு ஈடுபடுகிறீர்கள்..............................................61
17. கடவுள் உங்களை வலு உள்ளவர்கள் ஆக்குவார்.............................62
18. கடவுள் பதில் அளிப்பார்...............................................................64
19. தொலைவில் நலம் உண்டு .............................................................65
20. நித்தமும் வழி நடத்துவார்..............................................................66
21. முக்கியத்துவமற்றவர்களுக்கு ஆசீர்வாதம் .......................................67
22. கடந்த நாட்களில் தப்புவிக்கப்பட்டவிதம் விசுவாசத்தைத் தோற்றுவிக்கிறது..........69
23. முறிவு பெறாத ஐக்கியம்................................................................70
24. உங்கள் வேண்டுதல் கேட்கப்பட வேண்டுமென்றால் நீங்கள் செவிகொடுங்கள்.........71
25. பிரித்து வைக்கப்பட்டவர்கள் .........................................................73
26. உண்மை நிலைநாட்டப்பட்டது.......................................................74
27. தடுமாற்றமற்ற நம்பிக்கை...............................................................75
28. பரலோகத்தின் மெய்யான சுதந்திரம்.................................................76

## 03 மார்ச் ................................................ 79

1. புறம்பே தள்ளப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சி.......................................81
2. இரகசியமாகத் தருமம் செய்தல்.........................................................82
3. அழிவுக்கு ஆளாக விடப்படவில்லை..................................................83

4. கடவுளைக் கனம் பண்ணு.....84
5. வீட்டின்மேல் ஆசீர்வாதங்கள்.....85
6. திக்கற்றவர்களின் ஆதரவாளர்கள்.....86
7. கட்டுகளிலிருந்து விடுதலை.....88
8. நம் பொருட்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.....89
9. சமாதானத்துக்காக விண்ணப்பம்.....90
10. ஒளியில் நட.....91
11. யாருடைய போர் ?.....93
12. மகிழ்சியோடு புறப்பட்டுப் போதல்.....94
13. உன் இளமையை அசட்டைபண்ணாதே.....95
14. தெளிவான ஆறுதல்.....96
15. கடவுள் ஒரு புகலிடம்.....97
16. பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டு.....99
17. அஞ்சுவதற்கு அச்சம் கொள்ளுதல்.....100
18. செம்மையானவர்களாக நிலைத்திருங்கள்.....101
19. மகிமை அடைவதற்கு தகுதி உள்ளவர்கள்.....103
20. பரம முன்னேற்பாடு.....104
21. இடறுதலைத் தவிருங்கள்.....105
22. தாழ்மை உள்ளவர்களுக்குக் கிருபை.....106
23. நம்பக்கூடிய வழிகாட்டி.....107
24. ஸ்திரப்படுத்தி, காத்துக்கொள்ளுவார்.....108
25. வலுவூட்டும் தூக்கம்.....110
26. ஏழைகளைப் பராமரித்தல்.....111
27. தேவனிடத்தில் சேருதல்.....112
28. நல்வழி காட்டுதல்.....113
29. அஞ்சாத நம்பிக்கை.....114
30. விண்ணப்பம், ஸ்தோத்திரம், துதி.....115
31. மனஞ் சோராமை.....117

## 04 ஏப்ரல்.....119

1. அரசரின் நெடுஞ்சாலை.....121
2. மெய்யான இதயவலிமை.....122

3. எச்சரிக்கைக்குச் செவிகொடுத்தல் ....................................................123
4. கடவுளின் குளவிகள்......................................................................124
5. மறக்கப்படவில்லை ..........................................................................125
6. ஒரே அரசர், ஒரே ஆண்டவர்............................................................126
7. மனிதனுக்குப் பயப்பட வேண்டியதில்லை..........................................128
8. வேலைமுடியும்வரை விடாமுயற்சியுடன் இருத்தல்..............................129
9. திருமறையின் உயர்வு......................................................................130
10. நோக்கிப் பார்த்துப் பிழைத்துக்கொள்.................................................131
11. நெருங்கிய கூட்டுறவு......................................................................132
12. அவர் இனி நினைப்பதில்லை. ...........................................................134
13. புதிதாக்கப்பட்ட சரீரம்....................................................................135
14. அவர் தெரிந்தெடுப்பதே நான் விரும்புவதாகும். ...................................136
15. நீதிமான் விரும்புகிற காரியம் கொடுக்கப்படும். ....................................137
16. யாவும் பரிசுத்தமாக்கப்படும்.............................................................139
17. எதிரிகள் சமாதானமாவார்கள்...........................................................140
18. ஒருபோதும் உன்னை விட்டு விலகமாட்டார்........................................141
19. தேடிக் கண்டுபிடிப்பதில் நிபுணர்.......................................................143
20. உணர்ச்சியினாலல்ல விசுவாசத்தினால் ...............................................144
21. கடவுள் கைம்மாறு செய்வார்.............................................................145
22. தூக்கிவிடுவதற்கு வல்லமை...............................................................146
23. மரணத்தைக் குறித்து அச்சமில்லை......................................................147
24. ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான தகுதி ...............................................148
25. பிள்ளைகளுக்கு எதை விட்டுப்போவது ? .............................................150
26. கருணையுடன் நடத்துதல்..................................................................151
27. கடவுள் தம் வேலையை முடித்து விடுகிறார்...........................................152
28. அது ஓர் ஒப்பந்தம் ஆகிறது...............................................................153
29. மன்னித்து மறந்து விடு.....................................................................155
30. மேற்கொள்பவரின் பரிசு....................................................................156

## 05 மே.................................................158

1. பாட்டினால் நிறைந்து......................................................................160
2. ஆத்மீக விதைப்பு...........................................................................161

3. அவர் தொனியைக் கேட்க ஆயத்தமாயிருங்கள்...................................162
4. தோல்வியில் வெற்றி.......................................................................163
5. ஏன் சிறையில் நிலைத்திருக்கவேண்டும் ? ...........................................164
6. பொறாமைக்கு மருந்து.....................................................................165
7. தீமையானவற்றை அகற்று ..................................................................166
8. உதவி தேவை .................................................................................167
9. நம்பிக்கை மகிழ்ச்சியைக் குறிக்கிறது................................................169
10. கடவுளுக்குப் பயப்படுங்கள்.............................................................170
11. இறுதித் தேர்வுக்காகக் காத்திருங்கள்.................................................171
12. ஊழியக்காரரர் கனப்படுத்தப்படுவார்கள் ............................................172
13. பகல் சமீபமாயிற்று .........................................................................173
14. சுகம் பெறுவதற்கு அறுவை சிகிச்சை.................................................175
15. கடவுளின் உயர்வான இடங்கள்..........................................................176
16. பிறருக்குக் கொடு! பெற்றுக்கொள்.......................................................177
17. கையிறுக்கம் பண்ணத்தேவையில்லை...................................................178
18. இழப்புகள் சரி செய்யப்படும் .............................................................179
19. கடவுளுக்காக நாம் பேசலாம்.............................................................180
20. நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை....................................................182
21. மேகங்கள் இல்லாமல் மழை உண்டா ? ...............................................183
22. உறுதியான நம்பிக்கையின் பாட்டு.......................................................184
23. கடவுள்மேல் முழுவதுமாக சார்ந்திருத்தல்...........................................185
24. ஒருவரே பெரும்பான்மையானவர் .......................................................186
25. கடவுளின் பொக்கிஷசாலை.................................................................188
26. சாதாரணமானவை ஆசீர்வதிக்கப்படும் ................................................189
27. வாழ்க்கையைப்போலவே கனியும் இருக்கும்...........................................190
28. கடவுளுக்கு அவர் வாக்குறுதியை நினைவூட்டு ......................................191
29. மீன் பிடிக்கிறவர்கள் அவருக்குப் பின்சென்றார்கள்...............................192
30. தூய முன்னோக்கு.............................................................................194
31. திடன் கொள்ளுங்கள்..........................................................................195

## 06 ஜூன்.................................................197

1. கடவுளின் வாக்குறுதி மாறுவதில்லை.....................................................199

*2.* உடனே விடுதலை....................................................200
*3.* தடுமாறாமை....................................................201
*4.* மதிப்பு மிக்கது....................................................202
*5.* வேறுபாடு இருக்கிறதா ?....................................................203
*6.* அவர் எப்போதும் கவனித்துக் கேட்கிறார்....................................................204
*7.* பத்திரமான இடம்....................................................205
*8.* வேண்டிக்கொண்டால் ஞானம் பெறுவோம்....................................................207
*9.* நம்பத்தகு நாமம்....................................................208
*10.* ஒரு மேய்ப்பர் அவர்களைப் பாதுகாப்பார்....................................................209
*11.* வெட்கப்பட அவசியமில்லை....................................................210
*12.* பத்திரமாகத் தனித்து வாசம்பண்ணுதல்....................................................212
*13.* தெய்வீக வேளாண்மை....................................................213
*14.* எப்போதும் கூடவே இருக்கிறார்....................................................214
*15.* குடும்பத்திற்கான ஆசீர்வாதம்....................................................215
*16.* விசுவாசிப்பவனாயும் உள்ளவனாயும் இரு....................................................216
*17.* நம் போர்க்களம்....................................................218
*18.* கடவுளே செய்வார்....................................................219
*19.* உத்தமமான இருதயம்....................................................220
*20.* ஆண்டவரே நம் தோழன்....................................................221
*21.* ஒரு பெண்ணின் போர்....................................................222
*22.* அவர் நம்மோடும் நாம் அவரோடும்....................................................224
*23.* பகைவரின் திட்டங்கள் அழிக்கப்பட்டன....................................................225
*24.* ஆண்டவர் அதிகமாய்க் கொடுப்பவர்....................................................226
*25.* பரலோகத்திற்கு செல்லும் படிகள்....................................................227
*26.* சமீபமாயிருக்கிறது....................................................228
*27.* நன்றியுள்ளவர்களாய்த் தக்கவிதமாய் வாழுங்கள்....................................................230
*28.* கர்த்தர் நோக்கிப்பார்த்தார்....................................................231
*29.* ஜெபம் செய்வதற்கு அழைப்பு....................................................232
*30.* பின்னோக்கியும் முன்னோக்கியும்....................................................233

## *07 ஜூலை ........................................................ 235*

*1.* தேவன் நம்மோடு இருக்கிறார்....................................................237

2. புது வலுவுண்டாக்கும் நித்திரை........................................238
3. முழு தூரமும் நம் வழித்துணையானவர்........................................239
4. தேவனின் வார்த்தையே தேவையான உணவு........................................240
5. பூரண விடுதலை........................................241
6. அவர் அன்பு அவர் குமாரன்........................................243
7. மலைப் பாடகர்கள்........................................244
8. தேவதூதர்கள் பாளயம்........................................245
9. உண்மையும் பயன் உள்ளவனும் ஆனவன்........................................246
10. சபையை நேசி........................................247
11. கடவுளை விட்டுப் பிரிக்கப்படுவதில்லை........................................248
12. யார், எப்போது, எப்படி இரட்சிப்பது?........................................250
13. முழு நிறை நம்பிக்கை........................................251
14. அவர்மேல் வைக்கப்படும் பாரங்கள்........................................252
15. துயரப்படுகிறவருக்கு ஆறுதல் அளிக்கப்படும்........................................253
16. நொண்டியானவனுக்கு ஒரு வார்த்தை........................................254
17. உண்மைக்காக வீரதீரமாயிருத்தல்........................................256
18. வனாந்தரத்தில் ஆன்மீகக் கூட்டுறவு........................................257
19. கடும் உழைப்புக்குரிய பாதரட்சைகள்........................................258
20. அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்கள்........................................259
21. நட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள்........................................260
22. நிலையான வாக்குறுதி........................................262
23. நினைவுபடுத்திக்கொள்ளவே மாட்டார்........................................263
24. முற்றிலும் தூய்மை........................................264
25. நம்மை அச்சுறுத்தக் கூடியது ஒன்றுமில்லை........................................265
26. பெயர் மாற்றம்........................................266
27. வெறும் வார்த்தைகளை விட மேலானவை........................................268
28. அடங்கியிரு, உயர்த்தப்படு........................................269
29. நம் பகைவரை அவர் நிலைகுலையச் செய்கிறார்........................................270
30. பின்னால் சந்திப்பதாக வாக்குறுதி........................................271
31. வேண்டுகோளும் விடுதலையும்........................................273

## *08 அகஸ்ட் ........................................ 275*

1. பிள்ளைகளோடும் உடன்படிக்கை ....................................................277
2. அவர் போதிப்பவைகளைப் பேசுங்கள்....................................................278
3. பரிசுத்தமானவைகளை அனுபவிக்கும் உரிமை.................................279
4. அவர் ஆசீர்வதித்துக் காக்கிறார்....................................................280
5. வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது.....................................281
6. போய் உன் சொத்தைக் கைப்பற்றிடு..........................................283
7. வாழ்வில் வளம் பெறுவதற்கான வழிகள்.....................................284
8. நம்பக்கூடியவர் மேல் நம்பிக்கை...................................................285
9. வெட்டிஎடுத்தலும் கனிதருதலும்....................................................286
10. உயர்த்துவதற்காக அவர் தாழ்த்துகிறார்.....................................287
11. அமர்ந்திரு ஓடிவிடாதே...................................................................289
12. இருளில் வெளிச்சம் .........................................................................290
13. கூப்பிடுகிறதற்கு முன்னும் கூப்பிடும்போதும் ...........................291
14. தண்டிக்கப்படுவோம் ஆனால் எந்நாளுமல்ல................................292
15. பெயர்அளிக்கும் உத்தரவாதம்.........................................................293
16. பாவத்தை வெளிப்படுத்தி அறிக்கைசெய் ......................................295
17. பெரும்பான்மையோர் யார் பக்கம்.....................................................296
18. தொடுகிறவர்களும் கண்டுபிடிக்கிறவர்களும்.................................297
19. நீதிமானுக்குப் பலன் உண்டு ...........................................................298
20. வரையறைக்குட்படாத விடுதலை .....................................................300
21. அழுகை நிறைந்த இரவு, மகிழ்ச்சியான பகல்................................301
22. கடவுளை மகிமைப்படுத்தும் கோபம்..................................................302
23. அன்பு கூரு, ஞானத்தைத் தேடு.........................................................303
24. கடவுள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்......................................305
25. உணவும் இளைப்பாறுதலும் ..............................................................306
26. நுட்பமான மனச்சாட்சி உடையவர்.......................................................307
27. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ..............................................................308
28. எந்தச் சூழ்நிலையிலிருந்தும்..............................................................310
29. ஏராளமான உணவு...............................................................................311
30. ஆறுதல், அபாயமின்மை, திருப்தி .......................................................312
31. புனிதமானது, நித்தியமானது, மாறாதது ...........................................314

**09 செப்டம்பர்...............................................316**

1. கீழ்ப்படிதலில் அன்பில் நிலைத்திருத்தல்..........................................318
2. அறிந்துகொள்வதற்காகப் பின்பற்று..................................................319
3. ஆன்மாவின் மரணத்திலிருந்து.........................................................320
4. போரின்றி வெற்றி .............................................................................321
5. நான் எங்கிருந்தாலும் என்னோடிருப்பார்...........................................322
6. வலுவான இதயம்..............................................................................324
7. சர்வவல்லவரின் கிருபை ...................................................................325
8. நெரிந்ததும் புகைகிறதும் .................................................................326
9. அச்சத்துக்கு இடமுண்டு.....................................................................327
10. உள்ளேவருதல் வெளியேபோதல் .....................................................328
11. துன்புறுவோர் வலிமை வாய்ந்த விசுவாசிகள் ஆகிறார்கள்..................330
12. என் வீட்டாரைக் குறித்து என்ன ?..................................................331
13. பரலோகத்தின் பனி..........................................................................332
14. கடவுள் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம் .......................................334
15. மிகவும் பத்திரமான ஒதுக்கிடம்........................................................335
16. கண்டிப்பாகப் பரிசு பெறுவோம்........................................................336
17. பனையையும் கேதுருவையும் போல...................................................337
18. முழுப் பாதுகாப்பு.............................................................................338
19. பாடுவதற்கான காரணம் ...................................................................340
20. முழு மனப்பூர்வம்.............................................................................341
21. உபத்திரவங்களினால் வரும் ஆசீர்வாதங்கள்......................................342
22. படகுகள் ஓடாத விசாலமான நதிகள்..................................................343
23. தூசியிலும் பதரிலும் இருந்து விடுதலை............................................345
24. உயிரளிக்கும் ஓடை .........................................................................346
25. பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது ............................................................347
26. மீட்கப்பட்டவர்களின் மத்தியில்.........................................................348
27. இருட்டில் தெய்வீக ஒளி...................................................................349
28. வேலைமுடிந்தது அவரில் இளைப்பாறுங்கள்.......................................350
29. இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தவே............................................352
30. நம் வாயை விரிவாய்த் திறக்க வேண்டும்...........................................353

## 10 அக்டோபர்............................................... 355

1. அவர் நினைவில் இருக்கும் உடன்படிக்கை........................................357
2. நித்திய வீட்டுக்குப் போகிற வழியில் ஆறுதல் ................................358
3. ஆண்டவரின் அழகை பிரதிபலிப்பவர்கள்..........................................359
4. ஆற்றல் வாய்ந்த காந்தம்........................................................................361
5. ஆண்டவரின் ஆணைப்படி.........................................................................362
6. நம் வழிகாட்டியின் தலைமையில்.............................................................363
7. அவரே முதலில் தோழமைகொள்கிறார்...................................................365
8. ஒருபோதும் தனிமையாய் இருப்பதில்லை..................................................366
9. தம் பலிகளைப் பரிசுத்தப்படுத்துவது எது ?.........................................367
10. ஐக்கியத்திற்குத் திறந்த வாசல் .............................................................369
11. கட்டுப்பாடுகளற்றுப் பயணம் செய்தல்.......................................................370
12. உடன்படிக்கை கிருபையின் அடையாளம்...................................................371
13. செய்ய வேண்டியதும் பெறுவதும்.............................................................373
14. ஒருபோதும் வெட்கமடைய மாட்டோம்.......................................................374
15. உணவு பெற்று ஆதரிக்கப்படுதல்..............................................................375
16. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருத்தல் .....................................................376
17. தூய அச்சம்..................................................................................................378
18. கண்ணீருக்குப் பின் கெம்பீரமான அறுவடை..............................................379
19. கட்டுப்பாட்டுக்குள்ளான சிட்சிப்பு............................................................380
20. ஒவ்வொரு பாவத்திலிருந்தும்......................................................................381
21. கடவுளின் பெருக்கல் வாய்ப்பாடு...............................................................382
22. அவர் வாக்குறுதியைக் குறித்து மன்றாடுதல்..............................................384
23. வெளிச்சத்தின் அறுவடை மகிழ்ச்சி...........................................................385
24. கடவுள் பற்றில் திடநிலை .............................................................................386
25. முதலாவது கடவுள் பின் மற்றவை.................................................................388
26. நமக்காக.........................................................................................................389
27. அவர் சேவை, அவர் சமூகம், அவர் நாமம்.....................................................390
28. அறியாமையினால் ஏற்படும் பாவங்கள்..........................................................391
29. வித்தியாசத்தை நிலைநிறுத்து.......................................................................392
30. முழுவதுமாக சுத்திகரிக்கப்படல்....................................................................394
31. வேலை முடியும்வரை இறவாப்புகழ் ................................................................395

**11 நவம்பர் ............................................ 397**

1. முழு நிறைவும் பேணப்படுதலும்....................................................399
2. பரலோக செல்வம்..............................................................................400
3. ஆண்டவரின் நேரத்தில்....................................................................401
4. வாய்க்கால்களை வெட்டுங்கள் .......................................................402
5. வேதனை தருபவை முடிவடையும்..................................................404
6. மனமகிழ்ச்சியும் இருதயத்தின் வேண்டுதல்களும் ............................405
7. மெய்யான தாழ்மையான பரிசு........................................................406
8. கிருபையின் பரிமாணம்..................................................................407
9. தேவையான அறிவு .........................................................................408
10. தடுமாற்றம் இல்லாமல் நட ..........................................................410
11. ஆண்டவரின் சுதந்தரமான மக்கள்.................................................411
12. திருப்தியடைந்த ஆன்மாக்கள் .......................................................412
13. குறைவுபடாத காவல்.....................................................................413
14. பயன்படுத்தக் கூடிய நாமம்..........................................................414
15. வரம் பெற்ற செல்வம்.....................................................................416
16. வாய்க்காதே போதும் ஆயுதங்கள் ...................................................417
17. கர்த்தர் ஒருநாளும் கைவிடமாட்டார் ..............................................418
18. தெளிவான தெய்வநிலை.................................................................419
19. கீழ்ப்படிதலிலிருந்து ஆசீர்வாதத்துக்கு ..........................................420
20. பசி திருப்தியாக்கப்பட்டது.............................................................422
21. புறம்பான மேல்நோக்கிய பார்வை .................................................423
22. ஆக்கினைத் தீர்ப்பில்லை ...............................................................424
23. விடாமுயற்சியை அடைதல்..............................................................425
24. மன்னிக்கும் தேவன்.........................................................................426
25. சமபூமிகளாக்கப்பட்ட மலைகள்......................................................428
26. பரலோக இரசவாதம்.........................................................................429
27. உன்போக்கிலெல்லாம் இளைப்பாறுதல் .........................................430
28. தேவன் ஆசீர்வதிக்கக் கூடியவைகளைச் செய் .................................431
29. எவ்விதம் காத்திருப்பது என்று அறிந்துகொள்.................................432
30. ஆண்டவர் முன் வரிசையில் இருக்கிறார் கர்த்தர் தாமே....................434

## 12 டிசம்பர்...................................................... 436

1. சரியாக நடப்பதற்கு ஏற்ற பாங்கு ....................................................438
2. நம் புனித முன்மாதிரி........................................................................439
3. எல்லா நிலையிலும் சமாதானம்............................................................440
4. மூடி பாதுகாப்பு அளிப்பார் .................................................................441
5. அரண்களாகிய உயர்ந்த இடங்கள்.......................................................442
6. கடப்போம், அமிழ்ந்துபோகமாட்டோம்.................................................444
7. பெலன்கொடுத்துச் சமாதானம் அருளுவார் ..........................................445
8. பின்பற்றினால் கனம்பண்ணப்படுவாய்..................................................446
9. விசுவாசத்தின் முழுமை.......................................................................447
10. கடவுள் நம் நண்பர் ..........................................................................449
11. நம்பிக்கையோடுசெய், செய்துவிட்டு நம்பு ..........................................450
12. அமைதியடைந்த இதயம்....................................................................451
13. மாலை பகலாக மாறும்......................................................................452
14. பழமையானது ஒன்றுமில்லை.............................................................453
15. உலக ஒப்பந்தம் ...............................................................................455
16. தெய்வீக வெளியேற்றுதல் ..................................................................456
17. நெருக்கமான அருமையான தோழமை...................................................457
18. மூடுவார் ஆதரவாக இருப்பார்.............................................................458
19. இன்னல்கள். முறிக்கப்படாத எலும்புகள்..............................................459
20. மக்களைமக்களாகவும் கடவுளைக் கடவுளாகவும் கருதுதல்.................461
21. சினத்திலிருந்து அன்புக்கு ..................................................................462
22. அனுகூலமான துணையானவர்.............................................................463
23. செல்வம்............................................................................................464
24. பாட்டுக்களோடு யோர்தானுக்கு அப்பால் .............................................465
25. அவர் வந்தார், இனி வருவார் ..............................................................467
26. கடவுள் ஒருவரையே நீ நம்பமுடியும்....................................................468
27. அவர் இரக்கமும் உடன்படிக்கையும் ....................................................469
28. வரம்பற்ற உறுதி ...............................................................................470
29. அவர் பரம வீட்டுக்கு நம்மைச் சுமந்து செல்வார்.................................471
30. பூரணமடையும் வரை அன்பு கூர்ந்தார்................................................473
31. மோட்சத்தில் புதியவர் அல்ல...............................................................474

# 01 ஜனவரி

1. திருமறையின் முதல் வாக்குறுதி
2. மேற்கொண்டு வெற்றியடைதல்
3. ஒரு வாக்குறுதியின் மேல் சார்ந்திருங்கள்
4. அயர்ந்து இளைப்பாறுதல்
5. அதிசயமான உத்தரவாதம்
6. புற ஆதாரங்களிலிருந்து உதவி
7. எப்பொழுதும் வளர்ந்து கொண்டேயிருத்தல்
8. இதய சுத்தமும் வாழ்க்கையும்
9. கொடுப்பதனால் நன்மை பெறுதல்
10. புனிதமான பலன்
11. விசுவாசம் வானவில்லைக் காண்கிறது
12. முடிவுபரியந்தமும் அன்புவைத்தார்
13. ஒருபோதும் தள்ளப்படமாட்டோம்
14. இளைப்பாறுதல் ஒரு நன்கொடை
15. விசுவாசத்தினால் வரும் செல்வம்
16. மெல்லிய சத்தமும் கேட்கப்படும்
17. ஒன்றைக் குறித்தும் அச்சம் இல்லாதவன்
18. கிறிஸ்துவும் அவர் பிள்ளைகளும்
19. வாயினால் அறிக்கையிடுதல், இருதயத்தில் விசுவாசித்தல்
20. ஜெயங்கொள்ளுகிறவன்
21. கடவுளின் விரோதிகள் தலை வணங்கிப் பணிவார்கள்
22. கிறிஸ்தவ உதாரகுணம்
23. நிறைவான பலி
24. நம் பாதங்களைக் குறித்து அக்கறை
25. பாவங்களை அறிக்கையிடும்போது கடவுள் செயல்ப்படுகிறார்
26. கடவுள் அச்சத்தை நீக்கிவிடுகிறார்

*27. விலையுயர்ந்த மனம் திரும்புதல்*
*28. இனி கண்ணீர் சொரிவதில்லை*
*29. கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் பெறுவோம்*
*30. தெய்வீகமான பயணத் துணைவர்*
*31. கடவுள் எப்போதும் கவனித்துக் கேட்கிறார்*

# 1. திருமறையின் முதல் வாக்குறுதி

*உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவன் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் (ஆதி 3:15).*

வீழ்ச்சியடைந்த மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட முதல் வாக்குறுதி இது. இதில் நற்செய்தி முழுவதும், கிருபையின் உடன்படிக்கையுடைய சாரமும் அடங்கியுள்ளன. ஸ்திரியின் வித்தாகிய நம் ஆண்டவர் இயேசு குதிக்காலில் காயம் அடைந்தார். அது பயங்கரமான காயமாயிருந்தது. ஆனால் இறுதியாகப் பாம்பின் தலையில் ஏற்படும் காயம் எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும்! இயேசு பாவத்தை ஏற்று, மரணத்தை வென்று, சாத்தானின் ஆற்றலை நிலைகுலையச் செய்த போது இது நடைமுறையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. ஆனால் நம் ஆண்டவரின் இரண்டாம் வருகையின் போதும், நியாயத் தீர்ப்பு நாளிலும் பூரணமாக நிறைவேற்றப்படுவதை எதிர்நோக்கியுள்ளது. குதிக்காலில் காயம் அடைவது போல் நம்மிலுள்ள பாவத்தன்மையின் தீய சக்திகளால் நாம் இடுக்கண் அடைவோம் என்பது முன்னுரைக்கும் வாக்குறுதியாக நமக்கு உள்ளது. ஆனால் பழைய பாம்பின் தலையை நசுக்கும் கிறிஸ்துவால் நாம் வெற்றி அடைவோம். பிசாசின் சோதனைகளாலும் அவன் வித்தாகிய தீயவர்களின் இரக்கமற்ற தன்மையாலும் ஏற்படும் அனுபவங்களினால் நாம் இந்த வாக்குறுதியின் இரண்டாம் பாகத்தை அறிந்து கொள்ள வேண்டியதாயிருக்கலாம். நாம் நொண்டி நொண்டி நடக்கத்தக்கதாக அவர்கள் நம் குதிக்காலைக் காயப்படுத்தலாம். ஆனால் நாம் திகில் அடையாதபடி இந்த வாக்குறுதியின் முதல் பாகத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்வோமாக. ஸ்திரீயின் வித்தாகிய இயேசு கிறிஸ்துவில் நாம் வெற்றி பெறுவோம் என்னும் நம்பிக்கையில் மகிழ்ச்சி பெறுவோமாக!

# 2. மேற்கொண்டு வெற்றியடைதல்

*சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார் (ரோ.16:20).*

நேற்று ஆராய்ந்தவாக்குறுதியை இது சிறப்பாகத் தொடர்கிறது. குதிக்காலில் காயம் அடைவது மட்டுமல்லாமல் தீயவனை மேற்கொள்வதிலும் நாம் நம் உடன்படிக்கையின் தலைவரை ஒத்திருக்க வேண்டும் என்பது தெளிவாய்த் தெரிகிறது. பழைய வலுசர்ப்பம் நம் கால்களின் கீழேயும் நசுக்கிப் போடப்படும். ரோமாபுரியில் இருந்த விசுவாசிகள் அவர்கள் சபையில் ஏற்பட்டிருந்த சச்சரவுகளினால் துயரம் அடைந்திருந்தார்கள். ஆனால் சமாதானத்தின் கடவுளான அவர்கள் கடவுள் அவர்கள் ஆன்மாவுக்கு இளைப்பாறுதல் அளித்தார். தந்திரமான எதிரி விழிப்பாய் இராதவர்களின் கால்கள் தடுமாறவும், ஆவியில் எளியவர்களின் இதயம் ஏமாற்றம் அடையவும் செய்வான். ஆனால் அவனோ தோல்வியடைவான். அவன் துன்பம் கொடுத்தவர்களின் கால்களால் மிதிக்கப்படுவான். கடவுளின் மக்களுக்கு ஏற்படும் இந்த வெற்றி அவர்கள் சொந்தத் திறமையினால் அல்லது ஆற்றலினால் ஏற்படாது. அவன் அவர்கள் கால்களின் கீழே நசுக்கப்பட்டாலும் அது கடவுளாலேயே நிறைவேறும்.

நாம் தைரியமாகச் சோதனைக்காரனை மிதித்துப் போடுவோமாக. இழிவான ஆவிகள் மட்டுமல்லாமல் இருளின் அதிபதியும் நம்மால் தோல்வியடைவான். நாம் சந்தேகப்படாமல் கடவுளின் மேல் உறுதியான நம்பிக்கை வைத்து, சீக்கிரம் கிடைக்கப் போகும் வெற்றியை எதிர்பார்த்துக் காத்திருப்போமாக! சீக்கிரம் என்பது மகிழ்ச்சி அளிக்கும் சொல்லாகும். சீக்கிரத்தில் நாம் பழைய பாம்பை மிதித்துப்போடுவோம். தீமையை நசுக்கிப் போடுவது எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும்! சாத்தானுக்கு

அவன் தலை மனிதரின் கால்களால் நசுக்கப்படுவது எவ்வளவு மானக்கேடாகும். இயேசுவின் மேலுள்ள நம்பிக்கையினால் சோதனைக்காரனை மிதித்துப் போடுவோமாக!

# 3. ஒரு வாக்குறுதியின் மேல் சார்ந்திருங்கள்

நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும்....... தருவேன் (ஆதி.28:13).

எந்த ஒரு வாக்குறுதியும் தனியாக ஒருவருக்கென்று கொடுக்கப்பட்டதல்ல. அது ஒரு விசுவாசிக்கு மட்டுமல்லாமல் எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவானது. சகோதரனே, நீ விசுவாசத்தினால் ஒரு வாக்குறுதியின் மேல் சார்ந்து, மன அமைதி பெறுவாயானால் அவ்வாக்குறுதி உன்னில் நிறைவேறும். யாக்கோபு இராத்தங்கி, நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்ட இடத்தைச் சொந்தமானதாக அடைந்தான். அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்துத் தன் தலையின் கீழ் வைத்துப் படுத்துக் கொண்டபோது அந்த இடத்தைத் தான் சொந்தமாகப் பெறப்போவதாக அவன் சிறிதும் நினைக்கவில்லை. ஆனால் அவன் அவ்விதம் பெற்றான். அவன் சொப்பனத்தில் அந்தவியப்புக்குரிய ஏணியைக் கண்டான். விசுவாசிகள் எல்லோருக்கும் அது வானத்தையும் பூமியையும் இணைக்கும் ஏணியாகும். ஏணியின் அடிப்பாகம் இருந்த நிலம் கண்டிப்பாக அவனுடையதாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் அவன் வானத்துப் படிக்கட்டுகளை அடைய முடியாது. கடவுளின் எல்லாவாக்குறுதிகளும் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கின்றன. அவர் நம்முடையவராயிருக்கிறார். ஆகவே, ஒவ்வொரு வாக்குறுதியையும் நம்பி, அதன் மேல் சார்ந்து, மன அமைதியுடன் இருப்போமேயானால் அது நம்முடையதாகும்.

சோர்வுற்றவர்களே, வாருங்கள். ஆண்டவரின் சொற்களைத் தலையணைகளாகப் பயன்படுத்துங்கள். அவரைக் குறித்தே கனவு

காணுங்கள். உங்கள் வெளிச்சத்தின் ஏணி இயேசுவே. உங்கள் ஆன்மாவுக்கும் உங்கள் கடவுளுக்கும் இடையே அவர் மீது தேவதூதர் மேலும் கீழும் போவதைக் காணுங்கள்.இந்த வாக்குறுதி கடவுள் உங்களுக்காகவே கொடுத்தது என்று திட்டமாய் நம்புங்கள். இச் சொற்கள் உங்களிடமே சிறப்பாகக் கூறப்பட்டவை என்று நீங்கள் நினைப்பது தவறல்ல.

# 4. அயர்ந்து இளைப்பாறுதல்

அவர்களைச் சுகமாகப் படுத்துக்கொண்டிருக்கப்பண்ணுவேன் (ஓசி.2:18).

ஆம், விசுவாசிகள் சமாதானம் உள்ளவர்களாய் இருப்பார்கள். மேற்கூறிய வாக்கியம் வரும் பகுதி காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும் சமாதானமாயிருப்பதைக் குறித்துக் கூறுகிறது. இது உலகிலுள்ள எதிரிகள், விளக்கமற்ற கேடுகள், சிறு சிறு தொல்லைகள் மத்தியில்கிடைக்கும் சமாதானம் ஆகும். இவற்றில் ஏதாவது ஒன்று நாம் சுகமாய்ப் படுத்துக் கொள்வதற்குத் தடையாய் இருக்கலாம். ஆனால் ஒன்றும் அவ்விதத் தடை ஏற்படுத்தாது. நம் மக்களை அச்சுறுத்தும் எல்லாவற்றையும் ஆண்டவர் முழுவதுமாக அழித்து விடுவார். வில்லையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் தேசத்தில் இராதபடிக்கு முறித்து விடுவேன்.

அமைதியின்மை ஏற்படுத்தக் கூடிய கருவிகள் எல்லாம் தூள் தூளாக உடைக்கப்பட்டபின் ஆழ்ந்த சமாதானம் நிலைத்திருக்கும். இப்படிப்பட்ட சமாதானத்தோடு இளைப்பாறுதல் கிடைக்கும். அவரே தமக்குப்பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். இவ்விதம் தேவையானவை எல்லாம் கிடைக்கப் பெற்று, கடவுளால் அமைதிப்படுத்தப்பட்டு விசுவாசிகள் அயர்ந்து இளைப்பாறுவதோடு பாதுகாப்புடனும்

இளைப்பாறுகிறார்கள். சுகமாய்ப் படுத்துக்கொள்வது, சாதாரணமாகப் படுத்துக்கொள்வதைப்போன்றது மட்டுமல்ல. நாம் சுகமாகப்படுத்துக் கொள்ள வாக்குப்பண்ணப்பட்ட நாட்டுக்கும், பிதாவின் வீட்டுக்கும், அன்பின் கூடத்துக்கும், கிறிஸ்துவின் சமூகத்திற்கும் அழைத்துச் செல்லப்படுகிறோம். இப்போது நாம் மெய்யாகவே சுகமாய்ப்படுத்துக் கொள்ளலாம். விசுவாசிக்கு உட்கார்ந்திருந்து கவலைப்படுவதைவிட சமாதானத்தோடு படுத்துக் கொள்வது பாதுகாப்பானதாகும்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. தேற்றரவாளன் நம்மைப் படுத்துக்கொள்ளச் சொல்லும்வரை நாம் உண்மையான இளைப்பாறுதல் பெறுவதில்லை.

# 5. அதிசயமான உத்தரவாதம்

நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன் (ஏசா.4:10).

சேவை செய்யவாவது பாடு அனுபவிக்கவாவது அழைக்கப்படும்போது நாம் நம் ஆற்றலைக் கணக்கெடுக்கிறோம். அது நாம் எதிர்பார்த்ததற்கும் நமக்குத் தேவையான அளவுக்கும் குறைவாய் இருப்பதைக் கண்டறிகிறோம். ஆனால் மேற்கூறப்பட்ட வாக்கியம் நமக்கு அருளப்பட்டிருக்கும் போது நம் உள்ளம் கலங்க வேண்டியதில்லை. ஏனெனில் நமக்குத் தேவையானவை எல்லாம் அளிக்கப்படுவதாக உறுதியுரை அளிக்கப்பட்டுள்ளது. கடவுள் எல்லாம் வல்லவர், அவர் நமக்குப் பகிர்ந்து கொடுக்கக் கூடியவர். அவர் அவ்விதம் செய்வதாக வாக்களித்தும் இருக்கிறார். அவர் நம் ஆன்மாவின் உணவாகவும் நம் உள்ளத்தின் நலமாகவும் இருந்து, நமக்கு ஊக்கம் அளிப்பார். கடவுள் ஒரு மனிதனுக்கு எவ்வளவு ஆற்றல் அளிக்கக் கூடும்

என்பதை விரிந்துரைக்க இயலாது. பரம ஆற்றல் கிடைத்ததும் மனித பெலவீனம் எதற்கும் தடையாய் இருக்க முடியாது.

கடுமையான உழைப்பிலும் சோதனையிலும் உழன்றகாலங்களில் சிறப்பான ஆற்றல் பெற்று, நாம் வலிமையடைந்ததைக் குறித்து வியப்படைந்தது நம் நினைவில் இல்லையா? ஆபத்துக் காலத்தில் அமைதியாய் இருந்திருக்கிறோம். இழப்பு ஏற்பட்டபோது அடங்கி இருந்திருக்கிறோம். பொய்யாய்க் குற்றம் சாட்டப்பட்ட போது தன்னிறைவு உள்ளவர்களாய் இருந்திருக்கிறோம். நோய்வாய்ப்பட்டபோது பொறுமையாய் இருந்திருக்கிறோம். வழக்கத்திற்கு மாறான சோதனை ஏற்படும் போது கடவுள் எதிர்பாராத ஆற்றல் அளிக்கிறார் என்பது உண்மை. நாம் ஆற்றலற்ற நிலையிலிருந்து எழுச்சியடைகிறோம். கோழைகள் ஆண்மை ஆற்றல் அடைகிறார்கள். பேதைகள் அறிவு பெறுகிறார்கள். அமரிக்கையானவர்கள் அந்நேரத்தில் எதைப் பேச வேண்டுமோ அதைப் பேசும் திறன் அடைகிறார்கள். என் பெலவீனம் என்னைப் பின் வாங்கச் செய்கிறது. ஆனால் கடவுளின் வாக்குறுதி எனக்குத் துணிச்சல் அளிக்கிறது.ஆண்டவரே உம் வார்த்தைகளின்படி என்னை வலிமை உள்ளவனாக்கும்.

# 6. புற ஆதாரங்களிலிருந்து உதவி

நான் உனக்குச் சகாயம் பண்ணுவேன் (ஏசா.41:10).

நேற்றைய தினத்தின் வாக்குறுதி நமக்குத் தேவையான ஆற்றலை உத்தரவாதம் செய்தது. இந்த வாக்குறுதி நாம் தனியாகசெயல்பட முடியாத நிலையில் இருக்கும் போது உதவியை வாக்குப்பண்ணுகிறது. ஆண்டவர் நான் உனக்குச் சகாயம் பண்ணுவேன் என்கிறார். நம் வலிமை புற ஆதாரங்களிலிருந்து வரும் உதவியினால் நிறைவு பெறுகிறது. கடவுளுக்குச் சரி என்று தோன்றும் போது, நம் போராட்டங்களில் நம்பக்கம் இருந்து உதவ நண்பர்களை ஏற்படுத்துவார். மக்களால்

உதவி கிடைக்க ஏற்பாடு செய்யாவிட்டாலும் அவரே நம்பக்கம் இருப்பார். இது எவ்வளவு சிறப்பு வாய்ந்ததாகும்! பேரெண்ணிக்கையான மக்களைக் காட்டிலும் நம் மாண்புறு நண்பர் நம்மோடிருப்பது நலமானதே.

அவர்உதவி தக்க நேரத்தில் கிடைப்பதாகும். அவர் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையானவர். அவர் உதவி தெய்வீக ஆற்றல் உடையது. ஒவ்வொருவருக்கும் தேவையானதும் ஏற்றதுமான உதவியை அளிக்க அவர் அறிந்திருக்கிறார். மனிதரின் உதவி பயனற்றதாயிருக்கலாம். ஆனால் அவர் உதவி ஆற்றல்வாய்ந்தது. அவர் ஆதரவு மனித உதவியை விட மேலானது. ஏனெனில் அவர் நம் பாரங்களையெல்லாம் எற்றுக் கொள்கிறார். நம் தேவைகளையெல்லாம் நிறைவாக்குவார். கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்?

கடந்த காலத்தில் அவர்நம் சகாயராய் இருந்துள்ளபடியால் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் அவரில் உறுதியான நம்பிக்கை வைக்கக் கூடியவர்களாய் இருக்கிறோம். கர்த்தாவே, நீர் எனக்குச் சகாயராயிரும் என்பது நம் வேண்டுதலாகும். ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்என்பது நம் அனுபவமாகும். எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் என்பது நம் எதிர்பார்க்குதலாகும். சீக்கிரத்தில் கர்த்தாவே நீர் எனக்குத் துணை செய்தீர் என்பது நம் பாட்டாகும்.

# 7. எப்பொழுதும் வளர்ந்து கொண்டேயிருத்தல்

இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் (யோ.1:50).

மெய்ப்பித்துக் காட்டப்பட்ட ஒரே சான்றினால் இயேசுவே தேவனுடைய குமாரனும், இஸ்ரவேலின் அரசரும் ஆனவர் என்று

ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறு பிள்ளையைப் போன்ற விசுவாசம் இருந்த ஒருவருக்கு இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டது. காண்பதற்கு ஆர்வம் உள்ளவர்கள் காண்பார்கள். நம் கண்களை மூடிக்கொள்வதாலேயே நாம் குருடராகிறோம்.

இதற்குள்ளாகவே நாம் அதிகம் கண்டுள்ளோம். பெரியகாரியங்களையும் தேடிக்காணக்கூடாதவைகளையும் ஆண்டவர் நமக்குக் காண்பித்துள்ளார். அதற்காக அவருக்குத் துதி செலுத்துகிறோம். ஆயினும் அவர் வார்த்தைகளில் இன்னும் அதிகமான உண்மைகளும், அனுபவ ஆழமும், கூட்டுறவு ஏற்றமும், பயன்தரும் செயல்களும், ஆற்றல்கண்டுணர்தலும், அன்பும், அறிவுநுட்பமும் இருக்கின்றன. நாம் ஆண்டவரை நம்ப ஆயத்தமாயிருந்தால் இனி இவற்றையும் காண்போம். தவறான சித்தாந்தங்களைப் புனைந்து உருவாக்குதல் அழிவுக்கு இழுத்துச் செல்லும். ஆனால் உண்மையைக் காணும் ஆற்றல் ஆசீர்வாதமாயிருக்கும்.

வானம் நமக்குத் திறக்கப்படும் அங்கு செல்வதற்கான வழி மனிதகுமாரனில் நமக்குத் தெளிவாக்கப்படும். மேலும் கீழுமுள்ள அரசுகளுக்கு இடையே நிலைத்துள்ள தெய்வீகத் தோழமைத் தொடர்பு நமக்கு இன்னும் அதிகமாக வெளிப்படுத்தப்படும். ஆன்மீகப் பொருட்களைக்காணநம் கண்களைத் திறந்து வைத்திருந்து, இன்னும் அதிகமான உண்மைகளைக் காண்பதை எதிர்நோக்கியிருப்போமாக! நம் வாழ்க்கை சிதறி அழிந்து விடாது என்றும், நாம் மகிமை பொருந்தின கடவுளைக் காணும்வரை வளர்ந்து கொண்டும் பெரிய பெரிய சம்பவங்களை அறிந்து கொண்டும்போவோம் என்றும், அவரைக்கண்டபின் எப்போதும் அவரைப் பார்த்துக் கொண்டேயிருப்போம் என்றும் நம்புவோமாக!

# 8. இதய சுத்தமும் வாழ்க்கையும்

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத்.5:8).

சுத்தம், முக்கியமாக இதயத்தில் சுத்தத்தையே நம் இலக்காகக் கொள்ளவேண்டும். உட்புறத்தில் நாம் ஆவியாலும் வார்த்தையாலும் சுத்தமாக்கப்பட வேண்டும். அப்போது கீழ்ப்படிதலினாலும், நம்மை முற்றிலுமாக ஒப்படைப்பதாலும் வெளிப்புறத்தில் சுத்தம் உள்ளவர்களாய் இருப்போம். உள்ளன்புக்கும், புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாம் தீமையை விரும்பினால் நன்மையானவைகளைப் புரிந்து கொள்ள இயலாது. இதயம் கறைபடிந்ததாய் இருந்தால் கண்பார்வை மங்கியதாய் இருக்கும். புனிதமற்றவைகளை நேசிக்கும் மனிதர் புனிதமான கடவுளை எவ்விதம் காண முடியும் ?

இவ்வுலகில் கடவுளைக் காண்பது எவ்வளவு சிறப்பு வாய்ந்த உரிமையாகும்! அவருடைய கணநேரத் தோற்றம் பூலோகத்தை மோட்சமாக்கும். இதயத்தில், சுத்தம் உள்ளவர்கள் இயேசு கிறிஸ்துவில் பிதாவைக் காண்கிறார்கள். அவரையும், அவர் உண்மை, அன்பு, குறிக்கோள், வல்லமை, உறுதியளிக்கும் அருள், உடன்படிக்கை எல்லாவற்றையும் காண்கிறார்கள். இதயத்தில் பாவம் இல்லாவிட்டால்தான் இவற்றை உணரமுடியும். கடவுள் பற்றை இலக்காகக் கொண்டவரே என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது என்று கூறமுடியும். எல்லா அநீதிகளிலிருந்தும் நம்மைச் சுத்திகரித்த பின்தான் உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்று மோசே விரும்பினது போல் நாம் விரும்பினால் நம் விருப்பம் நிறைவேறும். அவர் இருக்கிற வண்ணமாகவேஅவரைத் தரிசிப்போம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைக்கிறவனெவனும் அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான். இக்காலத்தில் அவரோடுள்ள தோழமையும், இனி

வரும் காலத்தில் பேரின்பம் தரவல்ல தெய்வீகக் காட்சியைக்காண்போம் என்ற நம்பிக்கையுமே உடனடியாக இதயத்திலும் வாழ்க்கையிலும் சுத்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு நம்மைத் தூண்டுபவையாகும். ஆண்டவரே, நாங்கள் உம்மைத் தரிசிக்கத்தக்கதாக எங்கள் இதயத்தைச் சுத்தமுள்ளதாக்கும்.

# 9. கொடுப்பதனால் நன்மை பெறுதல்

*உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும் (நீதி.11:25).*

என் ஆத்துமா தழைத்து ஓங்க வேண்டுமென்று விரும்பினால், பொருளைத் திரட்டிச் சேர்த்து, குவித்து வைக்கக்கூடாது. ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிக்கவேண்டும். வாழ்வு வளம்பெற உலகப்பிரகாரமான வழி அற்பத்தனமாயும் கஞ்சத்தனமாயும் இருப்பதாகும். ஆனால் அது கடவுளின் வழி அல்ல. அவர் வாரியிறைத்தும் விருத்தி அடைவாரும் உண்டு, அதிகமாய் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும்உண்டு என்கிறார். ஆதாயம் பெற நம்பிக்கையான வழி பிறருக்குக் கொடுப்பதேயாகும். இவ்விதம் மறுபடியும் மறுபடியும் கொடுத்தால் என் தாராள மனப்பான்மையின் நற்பயனாக என் நல்வாழ்வுக்கேற்ற வலிமையை நான் அடைவேன் என்று எதிர்பார்க்கலாம்.

நான் செல்வப்பெருக்குஉள்ளவன் ஆவேன் என்கிற நிச்சயம் உள்ளவனாய் இருக்க முடியாது. நான் கொழுத்தவனாய் இருக்க முடியும். ஆனால் மிகவும் கொழுத்தவனாய் இருக்க மாட்டேன். அதிகமான செல்வம் பொதுவாகப் படுத்திருப்பவர்களைப்போல் என்னை எளிதாக நடமாட முடியாதவனாகவும், உலகப்பற்று என்னும்நோய் உள்ளவனும் ஆக்கி, ஒருவேளை என் இருதயத்தைச் சீர்கேடடையவும் செய்து விடலாம். ஆனால் உடல்நலம் இருக்கக் கூடிய அளவு மட்டும் நான் பருமனுடையவனாய் இருந்தால் திருப்தி உள்ளவனாயும் இருக்கலாம், அதோடு ஆண்டவர்

போதுமானளவு திறனும் கொடுத்திருந்தால் நான்முற்றிலுமாக மனநிறைவு உள்ளவனாய் இருக்கலாம்.

ஆனால் மனஞ்சார்ந்ததும் ஆன்மாவைச் சார்ந்ததுமான நிறைவை அடைவதையே நான் பெரிதும் நாடுகிறேன். இந்த நிறைவு என் கடவுளையும், அவர் சபையையும், மக்களையும் குறித்து நான் பரந்த மனப்பான்மை கொண்டிருந்தால் மட்டுமேஏற்படும். நான் கருமித்தனம் பண்ணி என் மனம் மோசமான நிலை அடையாமல் இருக்கட்டும். நான் தாராள மனப்பான்மை உள்ளவனாயும் பரந்த கொள்கை உடையவனாகவும் இருந்தால் என் ஆண்டவரைப்போல் ஆவேன். அவர் எனக்காகத் தம்மையே அளித்தார். அவருக்கு நான் எதையும் கொடுக்கவிருப்பம் இல்லாமல் இருப்பேனா ?

# 10. புனிதமான பலன்

*எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் (நீதி.11:25).*

நான் மற்றவர்களைக் குறித்து அக்கறையோடு சிந்தித்துப் பார்த்தால் கடவுளும் என்னைப்பற்றிச் சிந்தித்துப் பார்ப்பார். ஏதாவது ஒரு விதத்தில் நமக்குப் பலன் அருளுவார். ஏழைஎளியவர்கள் மேல் நான் அக்கறை கொண்டால் கடவுள் என்மேல் அக்கறை கொள்வார். நான் சிறு பிள்ளைகளைப் பராமரித்தால் கடவுள் என்னை அவர் பிள்ளைபோல் நடத்துவார். அவர் மந்தைக்கு உணவுஅளித்தால் அவர் எனக்கு உணவு அளிப்பார். அவர் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சினால் என் ஆன்மாவை நீர் பாய்ச்சப்பட்ட தோட்டம் ஆக்குவார். இவை கடவுளின் வாக்குறுதிகள். இப்பரம ஒப்பந்தத்தில் என் பங்கை நிறைவேற்றி இந்த வாக்குறுதிகளின் நிறைவேறுதலை எதிர்நோக்கி இருப்பேனாக.

நான் நோய்நிலை அடையும்வரை என்னைப்பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கலாம். நான் உணர்வற்றவன் ஆகும்வரை என் உள்ளுணர்வுகளைக் காத்துப் பேணிவரலாம். நான் வருந்தக்கூடப் பெலனற்றவன் ஆகும்வரை என் தளர்ச்சியைக் குறித்துத் துயரப்படலாம். நான்தன்னயமற்றவனாகி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மேல் எனக்குள்ள அன்பினால் என்னைச் சுற்றியுள்ளவர்களின் ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படுவது எனக்கு ஆதாயமாயிருக்கும். என் நீர்த்தேக்கத் தொட்டியில் தண்ணீர் குறைந்து கொண்டே போகிறது. அதை நிரப்பத்தக்கதாக மழைபெய்யவில்லையே! நான் என்ன செய்யலாம்? அதன் அடைப்புக் கட்டையை இழுத்து விட்டு என்னைச் சுற்றி வாடிக்கொண்டிருக்கும் செடிகளுக்குத் தண்ணீர்பாயச் செய்யலாம். அப்போது நான் பார்ப்பது என்ன? என் தொட்டியிலிருந்து நீர் வெளியேறிக் கொண்டிருக்கும் போதே அதுநிரப்பப்படுகிறது. மறைவாயுள்ள நீரூற்று ஒன்று இயங்கத் தொடங்குகிறது. நீர் வெளியேறாமல் இருக்கும் போது நீரூற்று அடைக்கப்பட்டிருந்தது. ஆனால் மற்றவைகளுக்கு நீர் பாய்ச்ச என் தொட்டியிலிருந்து தண்ணீர் வெளியேறும் போது ஆண்டவர் என்னை நினைவு கூருகிறார். அல்லேலூயா!

# *11. விசுவாசம் வானவில்லைக் காண்கிறது*

*நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும் போது, அந்த வில் மேகத்தில் தோன்றும் (ஆதி.9:14).*

தற்போது கவலைக்கிடமான பலவிதமான மேகங்கள் காணப்படுகின்றன. ஆனால் உலகம் வெள்ளத்தினால் அழிக்கப்பட்டு விடுமோ என்று நாம் பயப்படுவதில்லை. அவ்விதமான அச்சம் நம்மில் தோன்றாதவாறு வானவில்லைப் பலமுறை பார்க்கிறோம். நோவாவோடு கடவுள் செய்த உடன்படிக்கை நிலைத்திருக்கிறது. அதைக்குறித்து நாம் ஐயம்

கொள்ள வேண்டியதில்லை. அப்படியிருக்கும்போது வானத்தை இருட்டாக்கும் துன்ப மேகங்கள் அழிவுக்கு இழுத்துச் சென்றுவிடும் என்று நாம் நினைப்பது ஏன்? இப்படிப்பட்ட ஆதாரமற்ற, இகழ்ச்சிக்குரிய அச்சங்களை மனதிலிருந்து அகற்றி விடுவோமாக!

இடருக்கான மேகங்களை ஐம்புலன்கள் காணும்போதெல்லாம் விசுவாசமோ நம்பிக்கையான உடன்படிக்கையின் வாக்குறுதியான வானவில்லைப் பார்க்கிறது. அழிவின் அம்புகளை எய்யக்கூடிய வில் ஒன்று கடவுளிடம் இருக்கிறது. ஆனால் அதை நன்றாய்ப் பாருங்கள். அது மேல்நோக்கியிருக்கிறது அது அம்பும் நாணும் இல்லாத வில் அது பார்வைக்காக மட்டுமே தொங்கவிடப்பட்டிருக்கும் வில்லாகும். அது இனி ஒருபோதும் அழிவுக்காக உபயோகிக்கப்பட மாட்டாது. அது படுகொலைக்காக இரத்தச் சிவப்பான வில்லும் அல்ல. சினத்திற்கான கருமையான வில்லும் அல்ல மகிழ்ச்சியையும் களிப்பையும் வெளிப்படுத்தும் பலவண்ண வில்லாகும் ஆகையால் நாம் தைரியம் கொள்வோமாக. அவர் செய்த உடன்படிக்கைக்கு எதிர்மாறாக கடவுள் ஒருநாளும் நம் வானத்தை இருண்டதாக்க மாட்டார். அவர் அப்படிச் செய்தாலும் நாம் அவரை நம்பலாம். ஏனெனில் அவர் மாறக்கூடியவரல்ல, பொய்சொல்லுகிறவருமல்ல, அவருடைய சமாதானத்தின் உடன்படிக்கையை நிலைபெறச் செய்யத் தவறுவதுமில்லை. பூமியின்மேல் ஜலப்பிரளயம் மறுபடியும் ஏற்படும்வரை நாம் கடவுளைச் சந்தேகிப்பதற்கு ஏதுவில்லை.

# 12. முடிவுபரியந்தமும் அன்புவைத்தார்

ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார் (புல.3:31).

அவர் சிறிதுகாலம் ஒதுக்கி வைப்பார். ஆனால் என்றென்றைக்கும் அல்ல. பெண்ணொருத்தி சில நாட்கள் தன் ஆபரணங்களை அணிந்து கொள்ளாமல் இருக்கலாம். அதனால் அவற்றை மறந்து விடவும் மாட்டாள், குப்பை மேட்டில் எறிந்து விடவும் மாட்டாள். நம் ஆண்டவரும் அவர் நேசிப்பவர்களை ஒதுக்கித் தள்ளி விட மாட்டார். ஏனெனில் அவர் இவ்வுலகத்தில் இருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார். முயல்கள் தங்கள் பொந்துகளின் உள்ளேயும் வெளியேயும் ஓடுவதுபோல், சிலர் நாம் சில காலம் கிருபை உள்ளவர்களாயும், பின் சிறிதுகாலம் கிருபை அற்றவர்களாயும் இருப்பதாகப் பேசுகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. ஆண்டவரின் அன்பு பொறுப்புணர்ச்சி வாய்ந்ததும் நிலையானதும் ஆகும்.

அவர் நித்தியத்திலிருந்து நம்மைத் தெரிந்தெடுத்துள்ளார். நித்தியமாக நம்மேல் அன்பு உள்ளவராய் இருப்பார். அவர் நமக்காக மரணம் அடையும் வரை நம்மை நேசித்தார். ஆகையால் அவருக்கு நம்மேல் உள்ள அன்பு ஒருநாளும் இல்லாமற் போகாது என்று நாம் திட்டமாய் நம்பலாம். விசுவாசியின் இரட்சிப்போடு ஆண்டவரின் மகத்துவம் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால், மகிமை பொருந்திய அரச சபைக்கான ஆடைகளை அவர் எவ்விதம் களைந்து போடமுடியாதோ, அவ்விதம் அவர் விசுவாசிமேலும் அன்பு கூராமல் இருக்கமுடியாது. தலையாக இருக்கும் அவர் ஒருபோதும் அவர் உறுப்புகளை ஒதுக்கி விட முடியாது. கணவராக இருக்கும் அவர் ஒருபோதும் தம் மணப்பெண்ணைத் தள்ளி விடமுடியாது.

உங்களை ஒதுக்கிவிட்டார் என்று நினைத்தீர்களா? தமக்கென்று உங்களை நிச்சயம் பண்ணியுள்ளவரைக் குறித்து நீங்கள் அவ்விதமான தீய எண்ணம் கொண்டது ஏன்? அது இனிமேல் ஒருநாளும் உங்கள் மனதில் வராதபடி, அதை உங்கள்

மனதிலிருந்து நீக்கிவிடுங்கள். தேவன் தான் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளி விடவில்லை. (ரோமர் 11:2) தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் (மல் 2:16) என்று அவர் கூறியுள்ளார்.

## 13. ஒருபோதும் தள்ளப்படமாட்டோம்

*என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை (யோ.6:37).*

தம்மிடம் வந்தவரை தம் ஆண்டவர் தள்ளிவிட்டதாக எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அதைப்பற்றி அறிந்து கொள்ள நமக்கு விருப்பம் உண்டு. ஆனால் அப்படி ஒரு இடத்திலும் சொல்லப்படவும் இல்லை சொல்லப்படப் போவதும் இல்லை. இழக்கப்பட்ட ஆன்மாக்களாய் நரகத்திலுள்ள ஒருவராவது நான் இயேசுவண்டை போனேன். அவர் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார் என்று சொல்ல முடியாது. அவர் கொடுத்துள்ள வாக்கை உங்களிடமாவது என்னிடமாவது தவறமாட்டார். அப்படிப்பட்ட ஐயத்தை விட்டு ஒழிப்போமாக.

இக்காலத் தீமைகளைக் குறித்து இயேசுவோடு உரையாடுவதற்கென்று சென்றால் அவர் நம்மோடு பேசுவார் என்றும் நம்மைத் தள்ளிவிட மாட்டார் என்றும் திட்டமாய் நம்பலாம். அவரிடம் பலமுறை சென்றவர்களும் ஒருமுறை கூடச் செல்லாதவர்களுமாகச் சேர்ந்து, அவரண்டை போகலாம், வாருங்கள். நம்மில் ஒருவரின் முகத்திலாவது அறைந்தாற் போல் கிருபையின் கதவுகளை மூடிவிட மாட்டார்.

இவர் பாவிகளை ஏற்றுக் கொள்கிறார். ஒருவரையும் புறக்கணிப்பதில்லை என்று அவரைப் பற்றிச் சொல்லப்பட்டது. நாம் தளர்விலும் பாவத்திலும், ஊசலாடும் விசுவாசத்தோடும்,

குறைந்த அறிவோடும், ஒடுங்கிய நம்பிக்கையோடுமே அவரண்டை நெருங்குகிறோம். ஆனால் அவர் நம்மைத் தள்ளிவிடுவதில்லை. நாம் ஜெபத்தோடு போகிறோம் அந்த ஜெபமும் அரைகுறையானதாய் இருக்கிறது. குற்றத்தை ஒப்புக்கொண்டு போகிறோம் அவ்விதம் ஒப்புக்கொள்வதும் குறையுடையதாய் இருக்கின்றது. அவரைத் துதித்துக் கொண்டு போகிறோம் அந்தத் துதியும் அவர் இரக்கங்களுக்கு ஏற்ற அளவாய் இருப்பதில்லை. ஆயினும் அவர் நம்மை ஏற்றுக் கொள்கிறார். நாம் நோயுற்றவர்களாயும், மாசுபடுத்தப்பட்டவர்களாயும், பயன் அற்றவர்களாயும், மதிப்பு இல்லாதவர்களாயும் அவரண்டை வந்தாலும் அவர் ஒருபோதும் நம்மை ஒதுக்கித் தள்ளுவதில்லை. ஒருபோதும் புறக்கணிக்காதவரிடம் இன்றே மறுபடியும் செல்வோமாக!

# 14. இளைப்பாறுதல் ஒரு நன்கொடை

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்.11:28).

இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவில் இளைப்பாறுதல் அடைந்துள்ளோம். இரட்சிக்கப்படாதவர்கள் அவரண்டை வந்தால் இளைப்பாறுதலைப் பெறுவார்கள். ஏனெனில் மேற்கூறிய வசனத்தில் அதைத் தருவதாக அவர் வாக்களிக்கிறார். எதுவும் நன்கொடையைவிட இலவசமானதாக இருக்கமுடியாது. அவர் மகிழ்ச்சியோடு கொடுப்பதை, நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோமாக. புகழார்வம், பிறர் பொருளை அடைய இச்சை, சிற்றின்ப அவா, ஏக்கம் இவற்றால் ஏவப்பட்டு நீங்கள் கடுமையாக உழைக்கிறீர்கள். இந்த இரக்கமற்ற அடிமைத்தனத்திலிருந்து இயேசு உங்களை விடுதலை செய்து, உங்களுக்கு இளைப்பாறுதல் அளிப்பார். நீங்கள்

ரஞ்சுமக்கிறவர்களாயிருக்கிறீர்கள். ஆம், பாவம், அச்சம், கவலை, கண்ணீர், மரணபயம் ஆகிய பாரங்களைச் சுமக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அவரண்டை வந்தால், அவர் உங்கள் பாரங்களை இறக்கிவிடுவார். நாம் இனிமேலும் பாவச்சுமையைத் தூக்காதவாறு, பாரமாக நம்மை அழுத்திய பாவச் சுமையை அவர் சுமந்தார். பாரமான சுமையினால் அழுத்தப்பட்டு, வருத்தப்படுகிறவர்கள் ஒவ்வொருவரும் வருத்தப்படாமலிருக்க அவர் தம்மையே சுமைதாங்கி ஆக்கினார்.

இயேசு இளைப்பாறுதல் அளிக்கிறார். இது உண்மை. இதை நீங்கள் நம்புகிறீர்களா? இதைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால் உடனே செயல்படுங்கள். மற்றவைகளை நம்புவதை விட்டுவிட்டு, இயேசுவைப் பற்றிய எண்ணம் மட்டுமே உள்ளவர்களாயும், அவர் தம்மைக் குறித்துக்கொடுத்துள்ள சான்றுறுதியையும், அவரைப்பற்றிய எல்லாவற்றையுமே நம்பினவர்களாயும் அவரண்டை வாருங்கள். அவ்விதம் வரும்போது அவர் கொடுக்கும் இளைப்பாறுதல் ஆழமிக்கதாயும், பாதுகாப்பு அளிக்கிறதாயும், புனிதமானதாயும், நித்தியமானதாயும் இருக்கும். மோட்சநிலை ஏற்படுத்தக்கூடிய இளைப்பாறுதலை அவர் அளிக்கிறார். இன்று அவரண்டை வரும் எல்லாருக்கும் அதை அளிக்கிறார்.

## 15. விசுவாசத்தினால் வரும் செல்வம்

எளியவன் என்றென்றைக்கும் மறக்கப்படுவதில்லை. சிறுமைப்பட்டவர்களுடைய நம்பிக்கை ஒருபோதும் கெட்டுப்போவதில்லை. (சங்.9:18).

மரபுரிமையால் ஏழ்மை நிலையில் இருப்பது கடினமானதாகும். ஆனால் கடவுளை நம்புகிறவர்கள் விசுவாசத்தினால் செல்வம் உடையவர்கள் ஆகிறார்கள். கடவுள் தங்களை மறந்துவிடவில்லை என்று அவர்கள் அறிகிறார்கள்.

நற்காரியங்களைப் பகிர்ந்தளிப்பதில் கடவுள் தம் சித்தப்படி அவர்களைக் கவனிக்கத் தவறிவிட்டதுபோல் காணப்பட்டாலும் யாவும் சரியாக்கப்படும் காலத்தை அவர்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள். லாசரு எப்போதுமே பணக்காரன் வாசல் அருகே, நாய்கள் மத்தியில் இருக்கமாட்டான். ஆபிரகாம் மடியியில் இருக்கும் நிலையை ஒருநாள் அடைவான்.

இப்போதும்கூட ஏழைகளாய் ஆனால், கடவுளுக்கு மதிப்புமிக்கவர்களாய் இருக்கும் மக்களை அவர் நினைவில் வைத்து இருக்கிறார். ஏனெனில் அந்நாட்களில் இருந்த ஒருவர் நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார் என்கிறார். இக்காலத்திலும் அது உண்மையாய் இருக்கிறது. கடவுள் பற்று உள்ள ஏழைகள் மகத்தானவைகளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இந்த வாழ்க்கைக்கும் கடவுள் பற்றுக்கும் தேவையான எல்லாவற்றையும் அவர் கண்டிப்பாக அருளுவார் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்கள் நன்மைக்காக எல்லாம் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்கள் ஆண்டவரோடு இன்னும் நெருங்கிய தோழமை இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அவர் இரண்டாம் முறை வருவதையும், அந்த மகிமையில் பங்குபெறுவதையும் எதிர்நோக்கியிருக்கிறார்கள், இந்த எதிர்பார்க்குதல் அழிந்துவிடாது. ஏனெனில் அது நித்தியகாலமாக உயிரோடிருக்கும் இயேசு கிறிஸ்துவைச் சார்ந்திருக்கிறது. அவர் நிலைத்திருப்பதுபோல அதுவும் நிலைத்திருக்கும். பணக்காரரான பாவிக்கு விளங்காத பல பாடல்களை ஏழையான பாவி பாடுகிறான். இவ்வுலகில் குறைவு இருந்தால் மேலுலகில் ஆயத்தமாயிருக்கும் உயர் நிலையை நினைத்துப் பார்ப்போமாக.

# 16. மெல்லிய சத்தமும் கேட்கப்படும்

அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் (யோவே.2:32).

நான் அவரை நோக்கிக் கூப்பிடாமல் இருப்பது ஏன்? என் மெல்லிய சத்தத்தைக்கூட கேட்கத்தக்கதாகக் கடவுள் எனக்கு மிக அருகில் இருக்கும்போது நான் இப்பக்கமும் அப்பக்கமும் ஓடுவது ஏன்? நான் உட்கார்ந்து சூழ்ச்சிகளை உருவாக்குவதும், திட்டங்களைப் புனைவதும் ஏன்? என்னையும் என் பாரங்களையும் ஆண்டவர்மேல் போட்டுவிடாமல் இருப்பது ஏன்? நேராக ஓடுபவரே சிறந்த பந்தய ஓட்டக்காரர் — நான் உயிரோடிருக்கும் கடவுளிடமே உடனே நேராக ஓடாதது ஏன்? வேறு இடங்களிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது வீண். ஆனால் கடவுளிடம்தான் அது கிடைக்கும். ஏனெனில் அவ்விதம் அளிப்பதாக அவரே வாக்களித்துள்ளார்.

நான் அவரை நோக்கிக் கூப்பிடலாமா என்று கேட்கவேண்டியது அவசியமில்லை. ஏனெனில் எவனோ என்பதில் என்னையும் சேர்த்துதான் கூறியிருக்கிறது. கடவுளை நோக்கிக் கூப்பிடும் யாவரையும் குறிப்பிட்டுத்தான் அவ்விதம் கூறப்பட்டுள்ளது. ஆகையால் மேலே குறிப்பிடப்பட்ட வாக்கியத்தின்படி நான் செயல்பட்டு, அவ்வளவு பெரிய வாக்குறுதி அளித்துள்ள மகிமை பொருந்திய ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுவேன்.

எனக்கு உடனடியாக உதவி தேவை. எவ்விதம் விடுதலை கிடைக்கும் என்பதை நான் அறியேன். ஆனால் அதைக் குறித்து நான் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில் வாக்கை அளித்துள்ளவர் அதை நிறைவேற்றத்தக்க வழிவகைகளைக் கண்டுபிடிப்பார். நான் அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவருக்கு அறிவுரை கூற முயல்வது எனக்கடுத்ததல்ல. நான் அவருடைய ஊழியக்காரனேயல்லாமல் ஆலோசகன் அல்ல.

நான் அவரை நோக்கிக் கூப்பிடுவேன். அவர் எனக்கு விடுதலை அளிப்பார்.

# 17. ஒன்றைக் குறித்தும் அச்சம் இல்லாதவன்

அவர் நான் உன்னோடே இருப்பேன்.... என்றார் (யாத்.3:12).

கடவுளே மோசேக்கு ஒரு வேலை கொடுத்து அனுப்புவதால் அவர் மோசேயைத் தனியே அனுப்பமாட்டார். அது அபாயமிக்க வேலையாகும். அதைச் செய்வதற்கு மிகுந்த ஆற்றல் தேவை. அப்படியிருக்க உலகிலேயே வலிமை மிக்க அரசை எதிர்த்து நிற்க ஏழை எபிரெயன் ஒருவனைத் தனியே அனுப்பினால் அது ஏளனத்துக்கு உரியதாகிவிடும். தெய்வீக ஆற்றல் உடைய கடவுள் பார்வோனையும் எகிப்தின் வலிமையான படைகளையும் ஏழை மோசேக்கு நிகராக்குவது நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகும். ஆகையால் இதில் கேள்விக்கே இடம் இல்லாதபடி அவர் நான் உன்னோடே இருப்பேன் என்கிறார்.

என்னைப் பொறுத்தவரையில்கூட இது உண்மையாகும். கடவுளின் வேலையாகச் செல்லும்போது அவர் ஆற்றல்மேல் சார்ந்தவனாய், அவர் மகிமை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு சென்றால் அவர் நிச்சயமாக என்னோடு இருப்பார். அவரே என்னை அனுப்புவதானால் என்னை ஆதரிப்பது அவர் பொறுப்பாகும். இது போதும் அல்லவா? இதைவிட அதிகமாக இன்னும் என்ன வேண்டும்? எல்லா தூதர்களும் என்னோடு இருந்தால்கூட என் வேலையில் நான் தோல்வி அடையலாம். ஆனால் அவர் என்னோடு இருந்தால் நான் கண்டிப்பாக வெற்றி பெறுவேன். இந்த வாக்குறுதிக்குத் தகுந்தபடி நான் செயல்படவேண்டும் என்பதைக் குறித்து மட்டுமே

கவனமாயிருக்கவேண்டும். பயத்தோடாவது, அரைமனதோடாவது, கவனம் இல்லாமலாவது, தகாத துணிவோடு நான் போகக்கூடாது. தனக்குத் துணைவராகக் கடவுளைப் பெற்றிருக்கும் மனிதன் எப்படிப்பட்டவனாய் இருக்கவேண்டும்? அவ்விதமான சிறந்த துணைவரைக் கொண்டிருக்கும்போது ஆண்மையோடு அச்சமின்றி மோசேயைப்போல பார்வோனிடம் போவது இன்றியமையாததாகும்.

## 18. கிறிஸ்துவும் அவர் பிள்ளைகளும்

அவருடைய ஆத்துமா தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியை கண்டு நீடித்த நாளாயிருப்பார் (ஏசா.53:10).

நம்முடைய ஆண்டவராகிய இயேசு வீணாக மரணமடையவில்லை. அவர் மரணம் தியாகத்தன்மை வாய்ந்தது. ஏனெனில் நம் பாவங்களுக்குத் தண்டனையாக நாம் மரணம் அடைந்திருக்கவேண்டும். ஆனால் நமக்குப் பதிலாக அவர் மரித்தார். அவர் அவ்விதம் நமக்குப் பதிலாக மரித்ததைக் கடவுள் ஏற்றுக்கொண்டார். அவர் யாருக்காகத் தம் ஆன்மாவைத் தியாக பலியாக ஒப்புக்கொடுத்தாரோ அவர்களை இரட்சித்திருக்கிறார். மரணத்தின்மூலமாக அவர் அதிகமான பலனைக் கொடுக்கும் கோதுமைமணிபோல் ஆனார். இயேசுவுக்குத் தொடர்ந்து வழி வழியாகப் பிள்ளைகள் இருந்துகொண்டேயிருக்கவேண்டும். ஏனெனில் அவர் நித்திய காலத்துக்குமான தகப்பன். அவர் இதோ, நானும், நீர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்று தம் பிள்ளைகளைக் குறித்துச் சொல்லுவார்.

தகப்பன் தன் குமாரரில் புகழ்பெறுவான். சங்கீதத்தில் வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவைகளால் தன் அம்பறாத்துணியை நிரப்பின புருஷன் பாக்கியவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

*இயேசுவின் அம்பறாத்துணி நிறைய அவ்விதமாக அம்புகள் இருக்கின்றன. தகப்பனின் சாயல் பிள்ளைகளில் காணப்படும். கிறிஸ்துவின் உருவம் அவர் பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்களில் காணப்படவேண்டும். மனிதனின் வாழ்வும் அவன் வித்தில் நீடிக்கப்பட்டு, விரிவாக்கப்படுவதுபோல் தோன்றுகிறது. இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் அவரை விசுவாசிப்பவர்கள் மூலமாகத் தொடர்ந்து நீடிக்கிறது.*

*இயேசு வாழ்கிறார். ஏனெனில் அவர் வித்தை அவர் காண்கிறார். அவர் கண்களை நம்மேல் வைத்திருக்கிறார். நம்மில் மகிழ்ச்சியடைகிறார். தம் ஆத்தும வருத்தத்தின் பலனாக நம்மைக் கண்டு உணர்கிறார். பயங்கரமான தம் தியாகத்தின் பயனை நம் ஆண்டவர் அனுபவித்து மகிழ்வதைக் குறித்தும் அவர் மரணத்தின் பயனை ஒருபோதும் காணாமல் இருக்கமாட்டார் என்பதைக் குறித்தும் மகிழ்ச்சி அடைவோமாக. நமக்காகக் கண்ணீர் சிந்தின கண்கள் இப்போது நம்மை ஆனந்தமாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. ஆம், அவரை நோக்கிப் பார்ப்பவர்களை அவர் பார்க்கிறார். இது எவ்வளவு மகிழ்ச்சியானதாகும்!*

# 19. வாயினால் அறிக்கையிடுதல், இருதயத்தில் விசுவாசித்தல்

*கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் (ரோ.10:9).*

*நான் வாயினாலே அறிக்கையிட வேண்டும். நான் அவ்விதம் அறிக்கையிட்டிருக்கிறேனா? கடவுள் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பின இரட்சகர் இயேசுவே என்று அவரில் என்*

நம்பிக்கையை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறேனா? கடவுள் எதிர்பார்க்கும் விதத்தில் ஒப்பக்கொண்டிருக்கிறேனா? இவ் வினாக்களுக்கு உண்மையாக விடை அளிப்பேனாக !

இருதயத்தில் விசுவாசித்தலும் அவசியம் என்று மேலே கூறப்பட்டுள்ளது. உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவில் நான் மனமார நம்பிக்கை வைத்துள்ளேனா? நான் இரட்சிக்கப்படுவதற்கு அவர் ஒருவரே நம்பிக்கை என்று அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறேனா? இது என் உள்ளத்திலிருந்து தோன்றும் விசுவாசமா? கடவுளுக்கு முன்பாக விடையளிப்பதாக எண்ணி உண்மையாக விடையளிப்பேனாக.

நான் கிறிஸ்துவை அறிக்கையிட்டு அவரில் விசுவாசித்திருக்கிறேன் என்று ஒப்புக்கொண்டால் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். தலைப்பில் கூறப்பட்டுள்ள வாக்கியம் நான் இரட்சிக்கப்படலாம் என்று சொல்லவில்லை. வானத்தில் சூரியன் எவ்வளவு தெளிவாகக் காணப்படுகிறதோ அதைப்போல் மிகத் தெளிவாக இரட்சிக்கப்படுவாய் என்று கூறுகிறது. நான் விசுவாசியாகவும், அறிக்கையிடுகிறவனாகவும் இந்த வாக்குறுதியை எனக்குரியதாக ஏற்று, இப்போதும், வாழ்க்கை முழுவதும், மரணமடையும்போதும், நியாத்தீர்ப்பு நாளிலும் கடவுளின் சமூகத்தில் நின்று மன்றாடலாம்.

பாவத்தின் பழியிலிருந்தும், ஆற்றலிலிருந்தும், தண்டனையிலிருந்தும், இறுதியாகப் பாவத்திலுமேயிருந்து நான் இரட்சிக்கப்படவேண்டும். நீ இரட்சிக்கப்படுவாய் என்று கடவுள் கூறியிருக்கிறார். நான் அதை நம்புகிறேன். நான் இரட்சிக்கப்படுவேன். நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். சதாகாலங்களிலும் கடவுளுக்கு மகிமை உண்டாவதாக.

## 20. ஜெயங்கொள்ளுகிறவன்

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் (வெளி 2:7).

போர் நடக்கும் நாளில் ஒருவனும் ஓடிவிடவாவது, தூய போருக்குச் செல்ல மறக்கவாவது முடியாது. நாம் ஆட்சி செய்ய வேண்டுமெனில் போரிடவேண்டும். எல்லா எதிரிகளையும் முறியடித்து, வெற்றி பெறும் வரை போரிட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். இல்லையெனில் இந்த வாக்குறுதி நமக்கு உரியதல்ல. ஏனெனில் இது போரில் ஜெயங்கொள்ளுகிறவனுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. உலகில் தோன்றியிருக்கும் எல்லா கள்ளத் தீர்க்கதரிசிகளையும், அவர்கள் போதனையின் பயனாய் ஏற்பட்டுள்ள எல்லா தீமைகளையும் மேற்கொள்ளவேண்டும். ஆதியில் கொண்டிருந்த அன்பு குறைவடைவதையும் உள்ளம் தளர்ச்சி அடைவதையும் மேற்கொள்ளவேண்டும். எபேசு சபைக்கு ஆவியானவர் கூறியவற்றையெல்லாம் வாசித்துப்பாருங்கள்.

வெற்றியே பெறும் நம் தலைவரைப் பின்பற்றிச் சென்று, கிருபையினால் நாம் வெற்றி பெற்றால், நாம் கடவுளின் பரதீசின் நடு மையத்திற்கே போகவும், சுடரொளி பட்டயத்தை வீசிக்கொண்டிருக்கும் கேருபீனையும் கடந்து சென்று, ஜீவவிருட்சத்தை அடையவும் அனுமதிக்கப்படுவோம். அந்த விருட்சத்தின் கனியைப் புசிப்பவன் என்றைக்கும் உயிரோடு இருப்பான். இவ்விதமாக நாம் பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்திலிருந்து தப்பிப் பிழைத்து, நித்திய வாழ்வைப் பெறுவோம். அவ்வாழ்வு குற்றம் இன்மையின் முத்திரையும், கடவுளைப் போன்ற தூய்மையின் நித்திய தத்துவத்தின் இயல்பான விளைவும் ஆகும். என் உள்ளமே துணிவுகொள். போரிடாமல் பின்னிட்டு ஓடிவிட்டால், புதியதும் முன்னிலும் மேம்பட்டதுமான ஏதேனின் இன்பங்களை இழந்துவிடவேண்டியதாகும். வெற்றி

பெறும்வரை போரிட்டால் பரதீசில் கடவுளோடு நடமாடும் வாய்ப்பைப் பெறுவோம்.

# 21. கடவுளின் விரோதிகள் தலை வணங்கிப் பணிவார்கள்

*நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள் (யாத்.7:5).*

கடவுள் பயம் இல்லாத மக்களுக்குப் போதிப்பது மிகவும் கடினமானது. எகிப்தியர்கள் யேகோவாவைப்பற்றி அறியார்கள். ஆகையால் தங்களுக்கென்று விக்கிரகங்களை உண்டுபண்ணிக் கொண்டு, கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? என்று கேட்கக்கூடத் துணிகிறார்கள். ஆயினும் பெருமை உள்ள ஆத்துமாக்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவற்றை நொறுக்கஆண்டவர் சித்தம் கொள்ளுகிறார். அவர் நியாயத் தீர்ப்புக்கள் இடிபோல் அவர்கள் தலைமேல் விழும்போதும், இருள் சூழ்ந்து கொள்ளும்போதும், அவர்கள் விளைச்சல் அளிக்கப்படும்போதும், அவர்கள் புதல்வர் கொள்ளப்படும் போதும் யேகோவாவின் ஆற்றலை ஒரளவுஉய்த்துணர்கிறார்கள். நாத்திகர் முழங்கால்கள் கூட முடங்கத்தக்கதாக உலகில் வேறு பல நிகழ்ச்சிகளும் நடைபெறும். அவர்கள் கடவுளை நிந்திப்பதைக் குறித்து நாம் கலக்கம் அடைய வேண்டியதில்லை. ஆண்டவருக்கு அவர் நாமத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அவர் சிறந்த விதமாகஅதைச் செய்து முடிப்பார்.

தம் மக்களைக் கடவுள் இரட்சித்துக் காப்பாற்றியது, இஸ்ரவேலரின் கடவுளே உண்மையானவரும் உயிருள்ளவருமான யேகோவா என்று எகிப்தியரை அறிந்து கொள்ளச் செய்தது ஆற்றல் மிக்க செயலாகும். பத்து வாதைகளினால் இஸ்ரவேலரில் ஒருவர் கூடமரணமடையவில்லை. தெரிந்து கொள்ளப் பட்டவர்களில் ஒருவர்கூட சிவந்த சமுத்திரத்தில்

*மூழ்கிவிடவில்லை. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இரட்சிக்கப்படுவதையும் உண்மையான விசுவாசிகள் மேன்மை அடைவதையும் காண்பது கடவுளின் எதிரிகளில் பிடிவாத குணமுள்ளவர்களையும் கூட யேகோவாவேகடவுள் என்று அறிக்கையிடச் செய்யும்.*

*எல்லா நாட்டினரும் இயேசுவைத் தலைவணங்கிப் பணிந்து, ஆண்டவரே என்று அழைக்கும் வரை நற்செய்தியைப் போதிப்பதில், மக்களை முகம்தாள் வைக்கும் கடவுளின் ஆற்றலோடும் அவர் பரிசுத்த ஆவியோடும் செயல்பட்டால் எவ்வளவுஇனிமையாயிருக்கும்!*

# *22. கிறிஸ்தவ உதாரகுணம்*

*சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார் (சங்.41:1).*

*ஏழைகளைப் பற்றி நினைத்துப் பார்ப்பதும் அவர்கள் மேல் அக்கறை கொள்வதும் கிறிஸ்தவர்களின் கடமையாகும். இயேசு தரித்திரர்கள் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னதினால் அவர்கள் எப்போதும் நம்மோடும் நமக்கு அருகிலும் இருப்பார்கள் என்பதைக்குறிப்பிட்டார்.*

*பலர் ஆலோசனை செய்யாமலே ஏழைகளுக்கு அவசரமாகப் பணம் உதவி செய்கிறார்கள். பலர் ஒன்றுமே கொடுப்பதில்லை. அருமையான இந்த வாக்குறுதி ஏழைகளைப்பற்றி சிந்தித்து, அவர்கள் நிலையை ஆராய்ந்து, அவர்கள் நன்மைக்கான திட்டங்களை வகுத்து, அவற்றை அன்பாதரவுடன் செயல்படுத்துகிறவர்களுக்கே கொடுக்கப்பட்டதாகும். பணம் கொடுப்பதை விட ஏழைகள்மேல் அக்கறை காட்டுவதால் அதிகமான உதவி செய்யலாம். அக்கறையும் கொண்டு, பணஉதவியும் செய்வது சிறப்பானது.*

ஏழைகளைக் குறித்துச் சிந்தனை உள்ளவர்கள் கடுந்துன்பம்அடையும் போது தாம் அவர்கள்மேல் அக்கறைகொண்டு துணைபுரிவதாக ஆண்டவர் வாக்குறுதி அளித்துள்ளார். மற்றவர்கள் தொல்லைப்படும் போது அவர்களுக்கு உதவி செய்தால் அவர் நம் தொல்லைகளிலிருந்து நம்மை மீட்பார். நாம் மற்றவர்களுக்குத் தக்க சமயத்தில் உதவி செய்ய முயல்வதைஆண்டவர் கண்டால் தக்க சமயத்தில் நாம் அவரிடமிருந்து பொருத்தமான உதவியைப் பெறுவோம். நாம் எவ்வளவு உதார குணமுள்ளவர்களாய் இருந்தாலும் நமக்குத் துன்பங்கள் வரலாம். ஆனால் நாம் பிறருக்கு உதவி செய்கிறவர்களாயிருந்தால் நம் துன்பத்திலிருந்து தனிப்பட்ட முறையில்விடுதலை பெறும் உரிமை நமக்கு உண்டு என்று ஆண்டவரிடம் மன்றாடலாம். அவர் தாம் கொடுத்த வாக்கையும் செய்த ஒப்பந்தத்தையும் மறுக்கமாட்டார். கஞ்சத்தனமானவர்கள் தங்களுக்கே உதவி செய்வார்கள். ஆனால் பெருந்தன்மையும் அன்பாதரவும் உள்ள விசுவாசிகளுக்கு ஆண்டவர் துணைபுரிவார். நீங்கள் மற்றவர்களுக்குச் செய்வதை ஆண்டவர் உங்களுக்குச் செய்வார். மற்றவர்களுக்காக உங்கள் பணப்பைகளைக் காலிபண்ணத் தயங்காதேயுங்கள்.

# 23. நிறைவான பலி

*அது தன் பாவ நிவர்த்திக்கென்று அங்கீகரிக்கப்படும்படி தன் கையை அதின் தலைமேல் வைக்கக்கடவன் (லேவி.1:4).*

பலியிடுகிறவன் தன் கையைக் காளையின் மேல் வைப்பதனால் அதுஅவனுக்காகப் பலியிடப்படுவதாகிறது. அப்படியானால் நாமும் விசுவாசத்தின் கரத்தை இயேசுவின் மேல் வைத்தால் அவர் எவ்வளவு அதிகமாக நமக்கு உரியவர் ஆவார் என்று நினைத்துப் பாருங்கள்! என் தவறுகளுக்காகக் வேண்டி நான் நின்று, என் பாவங்களை நான் அறிக்கையிடும் போது

என்விசுவாசம் அதன் கரத்தை உம் அருமையான சிரசின் மேல் வைக்கிறது.

பாவியின் பாவப்பரிகாரமாகக் காளை ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் இயேசு கிறிஸ்து எவ்வளவு அதிகமாக நம் பாவங்களையெல்லாம் சுமக்கக்கூடியவர் ஆவார்? இவ்விதம் நமக்குப் பதிலாள் ஆன உண்மையைக்குறித்துப் பலர் வாதிடுகிறார்கள். ஆனால் நம் நம்பிக்கை, மகிழ்ச்சி, பெருமை எல்லாம் அதுவே. நம் பாவப் பரிகாரியாக இயேசு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் முன்குறித்திருக்கிறார்.

இதை வாசிப்பவர் இப்போதே ஆண்டவரின்நிறைவான பலியைத் தன்னுடையதாக ஏற்று அதனால் வரும் அனுகூலங்களை அடைய கவனமாயிருக்க வேண்டும். இதை முன்பு ஒருமுறை செய்திருந்தால் இப்போது மறுபடியும் புதுப்பிக்க வேண்டும். இதுவரை ஒருபோதும் செய்திராவிட்டால் உடனே செய்ய வேண்டும். நீங்கள் இப்போதே இயேசுவைஏற்றுக்கொண்டால் அவர் உங்களுடையவர் ஆவார். அவர் மேல் சார்ந்திருங்கள். பலமாகச் சார்ந்திருங்கள். எந்தச் சந்தேகத்திற்கும் இடம் இல்லாதபடி அவர் உங்களுடையவர் ஆவார். நீங்கள் கடவுளோடு ஒப்புரவாகிவிட்டீர்கள். உங்கள் பாவங்கள் நீங்க சுத்திகரிக்கப்பட்டு விட்டீர்கள்.நீங்கள் இப்போது ஆண்டவருடையவர்கள்.

# 24. நம் பாதங்களைக் குறித்து அக்கறை

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார் (1.சாமு.2:9).

நம் பாதை வழுக்குவதாயிருக்கிறது.நம் பாதங்களோ தளர்ந்தவையாய் இருக்கின்றன. ஆயினும் ஆண்டவர் நம் பாதங்களைக் காப்பார். கீழ்ப்படிதலான விசுவாசத்தோடு நம்மை

அவருக்குப் புனிதமானவர்களாக ஒப்புக்கொடுத்தால் அவரே நம் ஆதரவாளராய் இருப்பார். நம்மைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவதுமட்டுமல்லாமல் நம் போக்கையும் வரத்தையும் காப்பார்.

நாம் தடுக்கி விழுவதனால் நம்முடைய ஆடைகள் அழுக்காகி, ஆன்மாக்கள் காயப்பட்டு, எதிரிகள் கடவுளைப் பழிக்காதபடி நம் பாதங்களைக் காப்பார்.

நாம் தவறான பாதைகளிலும், அறிவற்றவழிகளிலும், உலகின் போக்கிலும் அலைந்து திரியாதபடி நம் பாதங்களைக் காப்பார்.

சோர்வினால் நம் பாதங்கள் வீங்கிவிடாதபடியும், பாதை நீண்டும் கரடுமுரடாயும் இருப்பதால் அவை புண்ணாகிவிடாதபடியும் அவற்றைக் காப்பார்.

நம் மிதியடி இரும்பும்வெண்கலமுமாய் இருக்கும். ஆகையால் நாம் வாளின் முனையையும் விஷப்பாம்புகளையும் மிதித்தாலும் நம் பாதங்கள் காயங்கள் அடையாதபடி காப்பார்.

நம்மைக் கெடுக்கும் நோக்கம் கொண்டவர்களான வஞ்சனையுள்ள எதிரிகள் நம்மைச் சிக்க வைத்துவிடாதபடி நம் பாதங்களை அவர்வலைக்கு நீங்கலாக்கி விடுவார்.

மேற்கூறப்பட்ட வாக்குறுதி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் நாம் தளர்ச்சி அடையாதபடி ஓடலாம். அச்சம் இல்லாமல் நடக்கலாம், நம்முடைய பாதங்களைக் காப்பவர் மெய்யாகவே அவற்றைக் காப்பார்.

## 25. பாவங்களை அறிக்கையிடும்போது கடவுள் செயல்ப்படுகிறார்

நான்பாவஞ்செய்து செம்மையானதைப் புரட்டினேன். அது எனக்குப் பிரயோஜனமாயிருக்கவில்லை. என் ஆத்துமா படுகுழியில் இறங்காதபடி, அவர் அதை இரட்சிப்பார்! ஆகையால் என் பிராணன் வெளிச்சத்தைக் காணும் (யோபு 33:27-28).

இவை கடவுளின் அடியாரான ஒருவரின் அனுபவத்திலிருந்து கூறப்பட்ட உண்மை வார்த்தைகளாகும். இவை ஒரு வாக்குறுதிக்கு ஒப்பானவை. ஆண்டவர் செய்துள்ளவைகளையும், செய்து வருபவைகளையும் உலகம் நிலைபெற்றிருக்கும் வரை தொடர்ந்து செய்து வருவார். தம்மிடம் வந்துதங்கள் பாவங்களை நேர்மையாக அறிக்கையிடுபவர்களை அவர் அன்போடு ஏற்றுக்கொள்வார். சொல்லப்போனால் தங்கள் தவறான செய்கையினால் மனக்கலக்கம் அடைந்துள்ளவர்களைக் கண்டுபிடிக்க அவர் விழிப்புள்ளவராகவே இருக்கிறார். ஆகவே மேலே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை நம்வார்த்தைகளாக நாம் ஏற்றுக்கொள்ளக் கூடும் அல்லவா? நாமும் பாவம் செய்திருக்கிறோமல்லவா? நான் பாவஞ்செய்துள்ளேன் என்று மனதார ஒப்புக்கொள்ளுமாறு நாம் பாவஞ்செய்திருக்கிறோம் அல்லவா? உண்மை வழியிலிருந்து மாறிச்சென்று வேண்டுமென்றே பாவஞ் செய்திருக்கிறோம்அல்லவா? பாவம் செய்வதால் நித்திய இழப்பு ஏற்படுமேயல்லாமல் இலாபம் ஒன்றும் ஏற்படுவதில்லை என்று உணர்ந்தும் பாவம் செய்திருக்கிறோம் அல்லவா? இதையெல்லாம் உண்மையாக ஒப்புக்கொண்டு கடவுளிடம் செல்வோமாக! இதற்கு அதிகமாக ஒன்றையும் அவர் நம்மிடமிருந்துஎதிர்பார்க்கவில்லை. இதற்குக் குறைவாக ஒன்றையும் நாம் செய்யவும் முடியாது.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த வாக்குறுதியை நிறைவேற்றக் கெஞ்சுவோமாக. பாவத்திற்குத் தண்டனையாக நாம் விழுந்து, துன்பப்படவேண்டிய நரகக் குழியிலிருந்து அவர் நம்மைத்தப்புவிப்பார். அவர் நமக்கு வெளிச்சமும் உயிரும்

அருளுவார். அப்படியிருக்க நாம் ஏன் நம்பிக்கையை இழக்க வேண்டும்? ஏன் சந்தேகப்பட வேண்டும்? பணிவான ஆத்துமாக்களை ஆண்டவர் ஏளனம் செய்வதில்லை. அவர் வாக்களித்தபடியே செய்வார். குற்றவாளிகள் மன்னிக்கப்படலாம். மரணதண்டனை அடைய வேண்டியவர்கள் மன்னிப்புப் பெறலாம். ஆண்டவரே, நாங்கள் எங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு நீர் மன்னிக்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.

# 26. கடவுள் அச்சத்தை நீக்கிவிடுகிறார்

*யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை (எண்.22:23).*

இந்த வசனம் மடத்தனமானவையும்மூடநம்பிக்கையோடு தொடர்புள்ளவையுமான எல்லாப் பயங்களையும் வேரோடு அற்றுப் போகப்பண்ணக்கூடியது அல்லவா? பில்லிசூனியம், குறிசொல்லுதல் முதலியவற்றில் ஏதாவது உண்மை இருந்தால் கூட அவை ஆண்டவரின் மக்களைப் பாதிக்க முடியாது. கடவுள் ஆசீர்வதிக்கும் மக்களைப் பிசாசுசபிக்க முடியாது.

பாலாமைப்போன்ற கடவுள் பயமற்ற மனிதர் இஸ்ரவேலை வீழ்த்த தந்திரமாகத் திட்டமிடலாம். அவர்கள் இரகசியத் திட்டங்களும் தந்திரச் செயல்களும் வெற்றிபெற முடியாது. அவர்கள் வெடிமருந்து ஈரமாயும் அவர்கள் வாளின் முனை கூரற்றுமே இருக்கும்.சூழ்ச்சி செய்ய அவர்கள் ஒன்றாகக் கூடுகிறார்கள். ஆனால் ஆண்டவர் அவர்களோடு இல்லாதபடியால் அவர்கள் கூடுவது பயனற்றதாகி விடுகிறது.

நாம் அமர்ந்திருந்து, அவர்கள் வலைகள் பின்னுவதைக் குறித்துக் கவலையற்றிருக்கலாம். ஏனெனில் நாம் அந்த வலைகளில் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. அவர்கள் பெயல்சேபூலின்

உதவியை வேண்டி நிற்கலாம். அவனுடைய ஆழ்ந்த அறிவைக்கூடப் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றால் எவ்விதப் பயனும் ஏற்படாது. அவற்றின் மந்திர ஆற்றல் பயனற்றுப்போம். அவர்கள் முன்னுரைத்தவற்றில் ஏமாற்றமே அடைவார்கள். இதைஅறிந்து கொள்வது நமக்கு எவ்வளவு ஆசீர்வாதமானதாகும்! இது நம் உள்ளத்திற்கு ஆழ்ந்த அமைதி அளிக்கக் கூடியது. கடவுளின் யாக்கோபுகள் கடவுளோடு போராடுகிறார்கள். ஆனால் அவர்களோடு வேறே யாரும் போராடி மேற்கொள்ள முடியாது. கடவுளின் இஸ்ரவேல்களோடு கடவுள் இருப்பதால் ஆற்றல்உள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை மேற்கொள்ளும் ஆற்றல் வேறே யாருக்கும் இல்லை. சாத்தானைக் குறித்தாவது, வஞ்சகமான வார்த்தை உடையவர்களும் சூழ்ச்சி வாய்ந்ததும், ஆழம் காண முடியாததுமான திட்டங்கள் வகுப்பவர்களுமான இரகசியமான எதிரிகளைக் குறித்தாவதுநாம் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. உயிரோடிருக்கும் கடவுளை நம்புகிறவர்களுக்கு அவர்கள் ஒரு தீங்கும் செய்ய முடியாது. பிசாசையும் அவன் பெருமுயற்சியையும் நாம் தைரியமாக எதிர்த்து நிற்கலாம்.

## 27. விலையுயர்ந்த மனம் திரும்புதல்

அங்கே உங்களுடைய எல்லா வழிகளையும் உங்களைத் தீட்டுப்படுத்தின உங்களுடைய எல்லாக் கிரியைகளையும் நினைத்து, நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாப் பொல்லாப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே அருவருப்பீர்கள் (எசேக்.20:43).

நாம் ஆண்டவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆதரவும் சமாதானமும், பாதுகாப்பும் உள்ளவர்களாய் இருந்தால் இரக்கம் உள்ள ஆண்டவருக்கு எதிராக நம்மில் காணப்பட்ட குறைபாடுகள், கேள்விகளைக்குறித்து மனந்திரும்ப

ஏவப்படுகிறோம். மனந்திரும்புதல் மிகவும் மதிப்பு மிக்க செயலானபடியால் அதை முதல் தரமான வைரத்துக்கு ஒப்பிடலாம். இரட்சிப்பின் விளைவாகக் கடவுளின் அடியார்கள் பரிசுத்தம் பண்ணப்படுவார்கள் என்றும் அருள் வாக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.மனந்திரும்புதலை ஏற்றுக் கொள்கிறவர் அதை நம்மிலே உண்டாக்கவும் வல்லவராயிருக்கிறார். அவர் கட்டாயப்படுத்தி, மனக்கசப்போடு மனந்திரும்ப வைப்பதில்லை. ஆனால் அவருடைய இனியபோதனைகளைக் கேட்டு அவரைப்பற்றி அறிந்து, முழுமனதோடு மனந்திரும்ப ஏவுகிறார்.இயேசுகிறிஸ்து நம்முடைய இரத்தத்தினால் நமக்குப் பாவமன்னிப்பைச் சம்பாதித்தார் என்பதும் இந்தக் கிருபை பெற நாம் தகுதியற்றவர்கள் என்பதும் கல்லான மனிதர்களையும் உருகச் செய்யும். நம் மனம் கல்லாய் உருகிப் போயிருக்கிறதா? அப்படியானால் உடன்படிக்கையில் அன்பைநினைத்துப் பார்க்கலாம். அப்போது பாவத்தை விட்டு விடுவோம். பாவத்தை நினைத்து வருந்துவோம். பாவத்தை வெறுப்போம். கடவுளின் எல்லையற்ற அன்பைப் புறக்கணித்து பாவம் செய்வதை வெறுத்து நம்மையே வெறுப்போம். ஆண்டவரிடம் நெருங்கி, நம்முடைய பாவங்களை நினைவுகூரவும், மனந்திரும்பவும், மனஸ்தாபப்படவும், அவரிடம் திரும்பவும் நமக்கு உதவிபுரிய வேண்டிக் கொள்வோமாக. உண்மையான துக்கத்தால் நம் இதயம் கரையும் அனுபவத்தைப் பெற்றால் எவ்வளவு நலமாயிருக்கும்! நம் பாவங்களுக்காகக் கண்ணீர் சிந்தினால் எவ்வளவாக நம்துயரம் குறையும்! ஆண்டவரே கல்லான இதயத்தை நொறுக்கும், அல்லது அதோடு பேசி கண்ணீர் சிந்தி மனம் திரும்பச் செய்யும்.

# 28. இனி கண்ணீர் சொரிவதில்லை

*அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் (வெளி 21:4).*

நாம் விசுவாசிகளானால் இது நம் அனுபவமும் ஆகலாம். இனித் துக்கம் இல்லை. கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டு விடும். இது அழுகையின் உலகம். ஆனால் இந்நிலை மாறிவிடும். இந்த அதிகாரத்தின் முதல் வசனத்தில் புதிய வானமும் புதிய பூமியும் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பாவத்தில் விழுந்ததைக் குறித்தாவது, அதனால் ஏற்பட்ட அவலநிலையைக் குறித்தாவது அழவேண்டியதிருக்காது. இரண்டாம் வசனத்தைப் பாருங்கள். அதில் மணப்பெண்ணையும் அவள் திருமணத்தைப் பற்றிக் கூறப்பட்டிருப்பவைகளையும் கவனியுங்கள். ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் எல்லையற்ற மகிழ்ச்சிக்கான காலமாகும். அங்கே அழுகைக்கு இடம் இல்லை. மூன்றாம் வசனத்தில் கடவுள் மனிதர்களோடே வாசமாயிருப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சமூகத்தில் நித்திய மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும். கண்ணீருக்கு இடம் இருக்காது.

துக்கமும், அழுகையும், நோவும் இல்லாத நிலையில் நாம் எப்படி இருப்போம்? நாம் நினைத்துப் பார்ப்பதற்கும் மேலான மகிமை வாய்ந்த நிலையில் இருப்போம். அழுதழுது சிவந்து போன கண்களே, வெந்துயர் கண்ணீர் வடிப்பதை நிறுத்துங்கள். இன்னும் சிறிது காலத்துக்குப்பின் கண்ணீரெல்லாம் மறைந்து விடும். அன்பின் தேவன் கண்ணீரையெல்லாம் துடைப்பது போல் வேறு யாரும் துடைக்க முடியாது. அதைச் செய்ய அவரே வருகிறார். சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும் இப்பொழுது ஆண்களும் பெண்களும் அழவேண்டியதாயிருக்கின்றது. ஆண்டவரே வாரும், தாமதியாதேயும்.

# 29. கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் பெறுவோம்

*நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால், நீயும் உனக்குப் பின்வரும் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு, நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக் கேள் (உபா.12:28).*

*இரட்சிப்பு நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் ஏற்படா விட்டாலும் கீழ்ப்படிகிறவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் ஆண்டவரின் உண்மையான அடியார்களுக்கு மறுக்கப்படவில்லை. நம் ஆண்டவர் நமக்காகச் சாபமானபோது நம் சாபங்களை ஒழித்து விட்டார். ஆனால் எந்த ஆசீர்வாதமும் ஒழிக்கப்படவில்லை.*

*ஆண்டவரின் சித்தம் வெளிப்படுத்தப்படும்போது நாம் உற்றுக் கவனிக்க வேண்டும். அதின் சில பகுதிகளை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆண்டவரின் வார்த்தைகள் யாவையும் கவனித்துக் கேட்கவேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக நமக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது. கடவுள் கட்டளை இட்டவைகளையெல்லாம் கைக்கொள்ள மனதுள்ளவர்களாய் இருக்க வேண்டும். தகப்பனுக்கும் அவர் பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதத்துக்கான வழி இதுவேயாகும். ஆண்டவரின் ஆசீர்வாதங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கு மூன்றாம் நான்காம் தலைமுறை வரை இருக்கும். அவர்கள் அவர் முன்பாய் உத்தமமாய் நடந்தால் அவர்கள் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்ற சந்ததியினர் என்று எல்லா மக்களும் அறியச் செய்வார்.*

*நேர்மையற்ற நடத்தையினாலாவது வஞ்சகத்தினாலாவது எந்த ஆசீர்வாதமும் பெற முடியாது. உலகத்தோடு ஒப்புரவு கொண்டு புனிதமற்ற வழிகளிலும் வாழ்வதால் நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் எந்த நன்மையும் ஏற்படாது. கடவுளுக்கு*

முன்பாக நாம் நல்லவர்களாய் இருந்தால் எல்லாம் நம் நன்மைக்கேதுவாய் இருக்கும். நேர்மையாய் நடப்பதால் நம் வாழ்வு வளம்பெறவில்லையென்றால் நாணயக்கேட்டினால் வளம்பெறாது. கடவுளுக்கு மகிழ்ச்சியை அளிப்பவை நமக்கு மகிழ்ச்சியைத் தரும்.

# 30. தெய்வீகமான பயணத் துணைவர்

*நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து... (ஆதி.28:15).*

நம் பயணத்தில் நமக்கு உதவி வேண்டுமா? இங்கே சிறப்பான இரண்டு உதவி நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளன. அவை கடவுள் நம்மோடு இருப்பார். அவர் நம்மைப் பேணிக் காப்பார். எல்லா இடங்களிலும் இவை இரண்டும் நமக்குத் தேவை. நாம் நம்முடைய விருப்பப்படி அல்லாமல் கடவுளின் சித்தப்படி வேறொரு நாட்டுக்குப் போக வேண்டியிருந்தால் அது தவிர்க்க முடியாதது என்று எண்ணி வருந்துகிறோம். ஒரு விசுவாசி எல்லா நாடுகளிலும் யாத்திரிகராகவும் வெளியாராகவுமே இருக்கிறார். ஆயினும் கடவுள் தலைமுறை தலைமுறையாகத் தம் அடியாருக்கு இருந்தது போல் விசுவாசிக்கும் எல்லா இடங்களிலும் தங்கும் இடமாக இருக்கிறார். உலகப் பிரகாரமான ஓர் அரசரின் பாதுகாப்பு நமக்கு இல்லாமற் போகலாம். ஆனால் கடவுள் நான் உன்னைப் பாதுகாப்பேன் என்று சொன்னால் நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. இது ஒரு பயணிக்கு ஆசீர்வாதமான பயண இசைவுச் சீட்டும், நாடுவிட்டுக் குடிபெயர்ந்து செல்பவருக்குத் தெய்வீகமான பயணத்துணைவரும் ஆகும்.

யாக்கோபு தன் தகப்பன் வீட்டை விட்டு எங்கும் சென்றதில்லை. தாயின் செல்லப் பிள்ளையாய் இருந்தான். தன் சகோதரனைப்போல் துணிச்சலுள்ள வேட்டை வீரனாய் இருக்கவில்லை. ஆயினும் அயல் நாடு சென்றபோது கடவுள்

அவனோடு கூடச் சென்றார். அவனுக்கு மூட்டை முடிச்சு அதிகமில்லை. உடன் செல்கிறவர்களும் யாருமில்லை. ஆயினும் எந்த இளவரசனுக்கும் அவனைப்போல் சிறப்பு வாய்ந்த மெய்க்காவலர்கள் இருந்ததில்லை. அவன் வெளியிடத்தில் படுத்துத் தூங்கினபோதுகூட தேவதூதர் அவனுக்குக் காவலாயிருந்தார்கள். கடவுளும் அவனோடு பேசினார். ஆண்டவர் நம்மைப் போகச் சொல்லிக் கட்டளையிட்டால் நாமும் இயேசு கிறிஸ்து சொன்னது போல் இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்று செல்வோமாக!

# 31. கடவுள் எப்போதும் கவனித்துக் கேட்கிறார்

என் தேவன் என்னைக் கேட்டருளுவார் (மீகா 7:7).

நண்பர்கள் நம்பிக்கைக் கேடு செய்கிறவர்களாய் இருக்கலாம். ஆனால் ஆண்டவர் ஆன்மாவிடமிருந்து விலகிச் செல்லமாட்டார். அதற்கு மாறாக அந்த ஆன்மாவின் வேண்டுதலைக் கேட்டு அறிவார். மீகா தீர்க்கதரிசி உன் மடியிலே படுத்துக் கொள்கிறவனுக்கு உன் வாயைத் திறவாமல் எச்சரிக்கையாயிரு....... மனிதனுடைய சத்துருக்கள் அவன் வீட்டார்தானே என்கிறார். இது இரங்கத் தக்க நிலையாகும். இவ்வித நிலையிலும் நம் மேலான நண்பர் உண்மையானவராகவே இருக்கிறார். அவரிடம் நம் கவலையை எல்லாம் கூறலாம்.

நம் அனுபவ அறிவு மக்களோடு சண்டையிட்டுக் கொண்டிராமல் ஆண்டவரை நோக்கிப் பார்க்கவே தூண்டுகிறது. உறவினர் நம் வேண்டுதல்களை அசட்டை பண்ணினால் நம் இரட்சிப்பின் கடவுளிடம் செல்வோமாக! ஏனெனில் அவர் நம் வேண்டுதல்களைக் கேட்பார். மற்றவர்கள் அன்பில்லாமல் அநீதி

செய்வதால் அவர் உடனே கேட்பார். நாம் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே என்று ஆர்ப்பரித்து மகிழலாம்.

கடவுள் உயிருள்ளவராய் இருப்பதால் அவர் கேட்கக்கூடியவராய் இருக்கிறார். அவர் அன்புள்ள கடவுளாய் இருப்பதால் கண்டிப்பாகக் கேட்பார். அவர் உடன்படிக்கையின் கடவுளாக இருப்பதால் நம் வேண்டுதல்களைக் கேட்பதாக உறுதியளித்துள்ளார். அவர் என் கடவுள் என்று ஒவ்வொருவரும் சொல்லக் கூடியதாய் இருந்தால் என் கடவுள் என் வேண்டுதலைக் கேட்பார் என்றும் திட்டமாகக் கூறலாம். துக்கத்தினால் நொந்துபோய் இருப்பவர்களே, உங்கள் கவலைகளை உங்கள் ஆண்டவருக்குத் தெரியப்படுத்துங்கள். நான் தனிமையில் முழங்கால்ப்படியிட்டு என் கடவுள் என் வேண்டுதல்களைக் கேட்பார் என்று என் உள்ளத்தில் சொல்லுவேன்.

# 02 பிப்ரவரி


1. நம்பிக்கையை இழக்கவேண்டாம்

2. வளருங்கள்

3. அவர் இலவசமாகக் கொடுக்கிறார்

4. அவர் திரும்ப வருவார்

5. நீதிக்குத் தகுதி உள்ளவர்கள்

6. பட்டணத்தில் ஆசீர்வாதம்

7. திரும்பக் கட்டப்படுவீர்கள்

8. மகிழ்ச்சியான பாதுகாப்பு

9. மாசு அகற்றப்பட்டது

10. நிலையானதொரு சாட்சி

11. நம் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்?

12. கர்த்தர் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்

13. வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்

14. தகுதியற்றவர்களுக்குக் காட்டப்படும் கிருபை

15. எப்போதும் நினைவுள்ளவராய் இருக்கிறார்

16. நீங்கள் கடவுளோடு ஈடுபடுகிறீர்கள்

17. கடவுள் உங்களை வலு உள்ளவர்கள் ஆக்குவார்

18. கடவுள் பதில் அளிப்பார்

19. தொலைவில் நலம் உண்டு

20. நித்தமும் வழி நடத்துவார்

21. முக்கியத்துவமற்றவர்களுக்கு ஆசீர்வாதம்

22. கடந்த நாட்களில் தப்புவிக்கப்பட்டவிதம் விசுவாசத்தைத் தோற்றுவிக்கிறது

23. முறிவு பெறாத ஐக்கியம்

24. உங்கள் வேண்டுதல் கேட்கப்பட வேண்டுமென்றால் நீங்கள் செவிகொடுங்கள்

25. பிரித்து வைக்கப்பட்டவர்கள்

26. உண்மை நிலைநாட்டப்பட்டது

27. தடுமாற்றமற்ற நம்பிக்கை
28. பரலோகத்தின் மெய்யான சுதந்திரம்

# *1. நம்பிக்கையை இழக்கவேண்டாம்*

*ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் (மல்.4:2).*

*மேலே கூறப்பட்ட கருணை நிறைந்த வாக்குறுதி மகிமையுள்ள நம் ஆண்டவரின் பிறப்பில் ஒருமுறை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவர் இரண்டாம் வருகையில் முழுவதுமாக நிறைவுபெறும். ஒவ்வொரு நாளும் நம்மை ஊக்குவிக்கவும் அது பயன்படுகிறது. இதை வாசிப்பவரே, உமக்கு வாழ்க்கை ஒளியற்று இருக்கிறதா? இருள் அதிகமாகிக் கொண்டே போகிறதா? ஆயினும் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை. சூரியன் விரைவில் உதிக்கும். இரவின் இருள் அதிகமாவது சீக்கிரம் பொழுது புலரும் என்பதைத் தான் காட்டுகிறது.*

*உதிக்கும் சூரியன் சாதாரணமானதல்ல — அதுதான் உண்மையான சூரியன். அது நீதியின் சூரியன் அதன் ஒவ்வொரு கிரணமும் தூய்மையானது. நம்மை ஊக்குவிக்க வருகிறவர் நீதியின் பாதையிலும் இரக்கத்தின் பாதையிலும் வருகிறார். நம்மை இரட்சிப்பதற்காகக்கூட அவர் எந்தச் சட்டத்தையும் மீறுவதில்லை. இயேசு, கடவுளின் தூய்மையை வெளிப்படுத்துவது போல அவர் அன்பையும் வெளிப்படுத்துகிறார். நமக்கு வரும் விடுதலை நியாயமானதாய் இருப்பதால் அது பாதுகாப்பு அளிக்கிறதாயும் இருக்கும்.*

*நாம் ஆண்டவரின் நாமத்துக்குப் பயப்படுகிறோமா? உயிருள்ள ஆண்டவரின்மேல் பயபக்தி உள்ளவர்களாய் இருக்கிறோமா? அவர் பாதையில் நடக்கிறோமா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வது அவசியம். அவ்விதம் செய்தால் இரவு சீக்கிரம் கழிந்து விடும். விடியற்காலையில் நம் ஆன்மாவின் நோய், துக்கம் யாவும் முழுவதுமாக நீங்கிவிடும். இனிமேல் அவை நம்மை*

வருத்தமாட்டா. வெளிச்சமும், வெப்பமும், மகிழ்ச்சியும், தெளிவான பார்வையும் நமக்குக் கிடைக்கும். அதற்குப் பின் எல்லா நோயிலிருந்தும் வேதனையிலிருந்தும் சுகம் கிடைக்கும்.

இயேசு நம்மில் உதயமாகி இருக்கிறாரா? அப்படியானால் நாம் சூரிய ஒளியில் அமர்ந்திருக்கலாம். அவர் தமது முகத்தை மறைத்துக் கொண்டாரா? அவர் உதயமாகும் வரை காத்திருக்கலாம். சூரியன் உதயமாகி, ஒளிவீசுவதைப்போல அவரும் நிச்சயமாய் ஒளிவீசுவார்.

## 2. வளருங்கள்

நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள் (மல்.4:2).

ஆம், சூரியன் பிரகாசிக்கும் போது நோயுள்ளவர்கள் படுக்கைகளை விட்டெழுந்து, சுத்தமான காற்றை சுவாசிப்பதற்காக வெளியே நடமாடுகிறார்கள். இளவேனிற் காலம் வந்தவுடன் ஆடுமாடுகள் தங்கள் தொழுவங்களை விட்டு மேய்ச்சலுக்காக புல்லுள்ள இடங்களை நோக்கிச் செல்லுகின்றன. அதேபோல் நமக்கும் நம் ஆண்டவரோடு நெஞ்செறிந்த கூட்டுறவு இருந்தால் நாம் மனத்தளர்ச்சியால் அடைபட்டிருக்கும் நிலையை விட்டு உறுதியான நம்பிக்கையோடு நடமாடத் தொடங்குகிறோம். நாம் மகிழ்ச்சியின் உச்ச நிலையை அடைந்து இம்மை வாழ்வுக்கானவைகளில் நாட்டம் கொள்ளாமல் மோட்சவாழ்வுக்கானவைகளை நாடிச் செல்கிறோம்.

நீங்கள் புறப்பட்டுப் போவீர்கள், வளருவீர்கள் என்பன இரண்டு வாக்குறுதிகளாகும். என் ஆன்மாவே, நீ இவை இரண்டையும் அனுபவிக்க ஆவலாயிரு. நீ ஏன் அடைபட்டுக் கிடக்க வேண்டும்? எழுந்து விடுதலை பெற்றவனாக நடமாடு. தம்முடைய ஆடுகள் உள்ளும் புறம்பும் சென்று, மேச்சலைக்

*கண்டடையும் என்று இயேசு கூறியுள்ளார். நீங்களும் போய் அளவில்லாத அவர் அன்பின் நிறைவை அனுபவியுங்கள்.*

கிருபையில் இன்னும் ஏன் குழந்தையாகவே இருக்கிறீர்கள்? வளருங்கள். தொழுவத்தில் பராமரிக்கப்பட்டால் கன்றுக்குட்டிகள் விரைவில் வளருகின்றன. உங்களுக்கு உங்கள் இரட்சகரின் பராமரிப்பு உண்டு. ஆகவே கிருபையிலும் உங்கள் ஆண்டவரையும் இரட்சகரையும் பற்றிய அறிவிலும் வளருங்கள். ஒடுக்கப்பட்டவர்களாயும் வளர்ச்சி தடைப்பட்டவர்களாயும் இராதேயுங்கள். நீதியின் சூரியன் உங்கள் மேல் உதித்துள்ளார். மொட்டுக்கள் சூரியனைக் கண்டு மலர்வது போல் நீங்களும் அவர் கிரணங்கள் பட்டதும் மலருங்கள். உங்கள் இருதயத்தைத் திறந்து, விரிவாக்கி அவரில் எல்லாவற்றிலும் வளருகிறவர்களாய் இருங்கள்.

# 3. அவர் இலவசமாகக் கொடுக்கிறார்

*தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லோருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோ.8:32).*

இது ஒரு வாக்குறுதி போல் காணப்படாவிட்டாலும் இதுவும் ஒரு வாக்குறுதிதான். ஒருவாக்குறுதி மட்டுமல்ல. பல வாக்குறுதிகளின் திரட்டு ஆகும். பல செம்புக் கற்களும், மரகதக் கற்களும், வைரக்கற்களும் தங்கத்தில்ப் பதிக்கப்பட்டுள்ளதைப் போன்ற விலையேறப்பெற்ற வாக்குறுதியாகும். இது நமக்கு எந்தக் கவலையும் ஏற்படாதவாறு ஒருநாளும் விடையளிக்கப்படாத வினா ஆகும். நம் ஆண்டவர் நமக்காக இயேசுவையே கொடுத்தபின் வேறு எதையாவது கொடுக்க மறுப்பாரா? இவ்வுலகிலும் மேல் உலகிலும் நமக்குத் தேவையானவற்றையெல்லாம் அவர் அருளுவார். ஏனெனில் அவர்

அளிப்பதற்கு ஓர் எல்லை இருந்திருக்குமேயானால் தம் சொந்தக் குமாரனை அளிக்காமல் இருந்திருப்பார்.

இன்று எனக்கு என்ன வேண்டும்? அது வேண்டுமென்று நான் கேட்டால் போதும் நான் அதை அக்கறையோடு நாடிச்செல்ல வேண்டியதிருக்கலாம். ஆனால் ஆண்டவர் கொடுக்க விரும்பாத ஒன்றை கட்டாயப்படுத்தியும் வற்புறுத்தியும் பெறவேண்டியதிருக்காது. ஏனெனில் அவர் இலவசமாகக் கொடுப்பார். அவர் தாமாகத் தானே தம் சொந்தக் குமாரனை இலவசமாக அருளினார். அந்த ஈவை யாரும் குறிப்பிட்டுக் கேட்டிருக்கமாட்டார்கள். அதைக் கேட்க யாரும் துணிந்திருக்க மாட்டார்கள். அவ்விதம் கேட்டிருந்தால் அது வரம்பு மீறியதாய் இருந்திருக்கும். அவர் இலவசமாகத் தாமாகவே தம் ஒரே பேறான குமாரனை அருளினார். ஆகையால் என் ஆன்மாவே, நீ நம் பரமபிதா எல்லாவற்றையும் கொடுப்பார் என்று அவரை நம்ப முடியாதா? எதையும் பெறுவதற்கு உன்னில் வலிமை தேவை என்றால் குறைபாடுடைய உன் வேண்டுதல் எல்லாம் வல்ல கடவுளை வற்புறுத்த முடியாது. ஆனால் அவருடைய அன்பு உன்னுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்ய நீரூற்று போல் எழும்பி, பொங்கி வழிந்தோடும்.

# 4. அவர் திரும்ப வருவார்

*நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன் (யோ.14:18).*

அவர் நம்மை விட்டுச் சென்றுள்ளார். ஆயினும் நம்மை அனாதைகளாக விடவில்லை. நம் ஆறுதலான அவர், நம்மை விட்டுச் சென்றுவிட்டார். ஆயினும் நம்மை ஆறுதல் அற்றவர்களாக விடவில்லை. அவர் நீண்ட காலமாகத் திரும்பி வராமல் இருந்தாலும் அவர் எப்படியும் மறுபடியும் வருவார் என்பதே நமக்கு ஊக்கம் அளிப்பதாகும். இயேசு கிறிஸ்து வந்து

கொண்டிருக்கிறார். அவர் இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். நம்மை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கிறார். நான் வருவேன் என்கிறார். யாரும் அவரைத் தடுக்கவாவது கால்மணிநேரம் தாமதப்படுத்தவாவது முடியாது. அவர் தனிப்பட்ட முறையில் நம்மிடம் நான் உங்களிடத்தில் வருவேன் என்கிறார். அவ்விதமே வருவார். அவர் தம் சொந்த மக்களுக்காக, அவர்களிடம் வருகிறார். மணவாளன் இன்னும் வரவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு இவை ஆறுதல் அளிக்கும் சொற்களாகும்.

அவர் நமக்கு மகிழ்ச்சி அளிக்க அவர் நம்மோடு இல்லையே என்னும் எண்ணம் ஏற்படும்போது ஏங்கித் தவிக்கிறோம். ஆனால் நாம் நம்பிக்கையற்றுத் துக்கப்படுவதில்லை. நம் ஆண்டவர் சிறிது கோபம் கொண்டு கொஞ்ச நேரம் நம்மைவிட்டு மறைந்திருப்பார். ஆனால் கருணையோடு திரும்ப வருவார். அவர் ஒருவிதத்தில்தான் நம்மை விட்டுப் போயிருக்கிறார். அவர் அவ்விதம் போகும்போது மறுபடியும் வருவதாகத்தான் வாக்குறுதியளித்துத்தான் போயிருக்கிறார். ஆண்டவரே சீக்கிரம் வாரும் நீர் இல்லாவிடில் இந்த உலகவாழ்க்கையில் உயிராற்றல் இல்லை. உம் இனிய முகமலர்ச்சியைக் காணவேண்டுமென்று பெருமூச்சுடன் ஏங்கிக் கொண்டிருக்கிறோம். நீர் எப்பொழுது எங்களிடம் வருவீர்? நீர் வருவீர் என்று திட்டமாய் நம்புகிறோம். மானைப்போலத் தீ விரித்து வாரும் எங்கள் கடவுளே, தாமதியாதேயும்.

# 5. நீதிக்குத் தகுதி உள்ளவர்கள்

*அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களைக் கடந்து போவேன் (யாத்.12:13).*

விலைமதிப்பற்ற அந்த இரத்தத்தைப் பார்ப்பது எனக்கு ஆறுதல் அளிக்கிறது. கடவுள் அதைப் பார்க்கும்போது அது என்

பாதுகாப்புக்கு உத்தரவாதஞ் செய்கிறது. நான் அதைப் பார்க்க முடியாமற் போனாலும் கடவுள் அதைக் கண்டு, அதனால் என்னைக் கடந்து போகிறார். என் விசுவாசம் தெளிவற்றதாய் இருப்பதால் நான் மனஅமைதியற்று இருந்தாலும் நான் பத்திரமாய் இருக்கிறேன். ஏனெனில் கடவுளின் பார்வை தெளிவானதாய் இருக்கிறது. சிறப்பான இரத்தத்தின் தியாகத்தை அவர் பார்க்கிறார். இது நமக்கு அளவிலா மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாகும்.

தம் அருமையான குமாரனுடைய மரணத்தின் ஆழ்ந்த உள்

அர்த்தத்தையும் வரம்பு கடந்த நிறைவையும் அவர் காண்கிறார். அதனால் நாம் நீதிக்குத் தகுதியுள்ளவர்கள் ஆக்கப்பட்டதையும் அவருடைய இணையற்ற பண்புகள் மேன்மை அடைவதையும் அமைதியாக நினைவு கூருகிறார். படைப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது அது நல்லது என்று கண்டார். அப்படியிருக்க இரட்சிப்பு முழுவதுமாக நிறைவேற்றப்பட்டதைக் குறித்து அவர் என்ன கூறுகிறார்? அவருடைய நேசகுமாரன் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவரானதைக் குறித்து என்ன கூறுகிறார்? இயேசுவில் அவர் அடைந்த மகிழ்ச்சியையும் இயேசு தம்மைத் தாமே பழுதற்ற பலியாக ஒப்புக் கொடுத்ததினால் ஏற்பட்ட மனநிறைவையும் யாரும் விவரிக்க முடியாது.

நாம் இப்போது அமைதியளிக்கும் பாதுகாப்பு உள்ளவர்களாய் இருக்கிறோம். அது உண்மையென்று உணர்ந்து கொள்ள கடவுளின் தியாகமும் அவர் வார்த்தைகளும் எமக்கு ஆதாரமாக இருக்கின்றன. அவர் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நமக்காக அவரை ஒப்புக்கொடுத்தபடியினால் கண்டிப்பாக நம்மைக் கடந்து போவார். இரத்தம் தெளிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் நித்திய இரட்சிப்பு அருளுவதாக நீதியும் அன்பும் ஒன்றுசேருகின்றன.

# 6. பட்டணத்தில் ஆசீர்வாதம்

*நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் போது....... பட்டணத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா.28:2-3).*

பட்டணம் கவலை நிறைந்த இடம். அங்கு அடிக்கடி செல்பவர்கள் அங்கு வளர்ச்சி அதிகமாயிராமல் தேய்மானமே அதிகமாயிருப்பதைக் கண்டார்கள். சத்தமும், பரபரப்பும், இரைச்சலும், கொடிய வேதனையுமே அங்கு நிறைந்திருக்கும். அது சோதனைகளும், இழப்பும், கவலையும் நிறைந்த இடமாகும். ஆனாலும் கடவுளின் ஆசீர்வாதத்தோடு அங்கு போவது அங்கு காணப்படும் இடர்களைக் குறைப்பதாய் இருக்கிறது. இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றவர்களாய் அங்கு இருந்தால் நாம் செய்யும் பணிகளில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. பணிசெய்யத் தேவையான ஆற்றலும் கிடைக்கிறது.

பட்டணத்தில் இருக்கும்போது கிடைக்கும் ஆசீர்வாதம் ஒருவேளை நம்மை உயர்ந்த பதவியில் வைக்காது. ஆனால் நாம் நல்லவர்களாக இருக்கச் செய்யும். ஒருவேளை நம்மை செல்வம் உடையவர்களாக்காது. ஆனால் நம்மை உண்மை உள்ளவர்களாக இருக்கச் செய்யும். நாம் பளு தூக்குகிறவராக, எழுத்தாராக, மேலாளராக, வியாபாரியாக, நகர அமைதி காப்பவராக அல்லது வேறு எந்த வேலை செய்பவராக இருந்தாலும், நகரத்தில் பயனுள்ளவர்களாக இருக்க வாய்ப்புக்கள் கிடைக்கும். மீன்கள் திரளாக இருக்கும் இடத்தில் மீன் பிடித்தால் ஏராளமான மீன்கள் கிடைக்கும். அதே போல மக்கள் கூட்டமாய் இருக்கும் இடத்தில் நம் ஆண்டவரின் வேலையை நம்பிக்கையோடு செய்யலாம். கிராமத்தில் அமைதியாய் வாழ்வதை நாம் விரும்புகிறவர்களாய் இருக்கலாம். ஆனால் நகரத்தில் வேலை செய்ய நாம்

அழைக்கப்பட்டால் நாம் ஊக்கமாக ஊழியம் செய்ய அங்கே வாய்ப்பு இருப்பதால் அதை நாம் விரும்புவோம்.

ஆண்டவர் நமக்கு இன்று இந்த வாக்குறுதி கொடுத்துள்ளபடியால் பல நன்மைகளை எதிர்நோக்கியவர்களாய் இருக்கலாம். ஆண்டவரின் சத்தத்தைக் கேட்கவும் அவர் ஆணைகளை நிறைவேற்றவும் ஆயத்தமாய் இருப்போமாக! நாம் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதங்களைப் பெறுவோம். அவர் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.

# 7. திரும்பக் கட்டப்படுவீர்கள்

நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக் கட்டப்படுவீர் (யோபு 22:23).

எலிப்பாஸ் பேசியபோது சிறப்பான உண்மையை வெளியிட்டார். அது வேதத்தில் பல இடங்களில் தெளிவாக்கப்பட்டுள்ள கருத்துக்களின் சுருக்கமுமாகும். இதை வாசிப்பவரே, பாவம் உம்மைப் படு குழிக்குள் இழுத்துச்சென்று விட்டதா? அழிவுற்றவரைப்போல் இருக்கிறீரா? கடவுளின் கரம் உமக்கு விரோதமாகி விட்டபடியால் வறுமை நிலையும் நைந்த உள்ளமும் உள்ளவராயிருக்கிறீரா? உமக்கு இவ்வுளவு சேதம் ஏற்பட்டதற்கு உம் மடமைதான் காரணமா? அப்படியானால் நீர் செய்யவேண்டிய முதல்வேலை ஆண்டவரிடம் திரும்புவதேயாகும். ஆழ்ந்த மனஸ்தாபத்தோடும் நேர்மையான விசுவாசத்தோடும் ஆண்டவரிடம் திரும்பி வாரும். அது உம்முடைய கடமையாகும். ஏனெனில் ஆண்டவரை சேவிப்பதாக உறுதிகூறிவிட்டு அவரை விட்டுச் சென்று விட்டீர். திரும்பி வருவதே நீர் செய்யத்தக்க விவேகமான செயலுமாகும். ஏனெனில் அவருக்கு விரோதமாக செயலாற்றி விட்டு வளமையடைய முடியாது. இது உடனடியாகச் செய்யவேண்டியதொன்றாகும். ஏனெனில் சர்வ வல்லமையுள்ள அவர் தண்டிக்கவும் கூடியவர்.

ஆகையால் திருந்துவதற்கு அவர் கொடுக்கும் தண்டனை இது வரை அளித்ததைவிடக் கடுமையானதாய் இருக்கலாம்.

திரும்பி வரச்சொல்லி உங்களை உங்களை அழைக்கும் வாக்குறுதியைப் பாருங்கள.; நீங்கள் கட்டப்படுவீர்கள் என்கிறார். சர்வ வல்லமையுள்ள அவர் ஒருவரே விழுந்து போனதூண்களை எடுத்து நிறுத்தவும், ஆட்டம் கண்டுள்ள சுவர்களைப் புதுப்பிக்கவும் கூடியவர். நீங்கள் அவரண்டை வந்தால் அவர் அவ்விதம் செய்வார். தாமதியாதேயுங்கள் நீங்கள் எதிர்த்து எழ முயன்றால் நொறுக்கப்பட்ட உங்கள் மனம் தளர்வுறலாம். ஆனால் உளங்கனிந்து குற்றத்தை ஒப்புக்கொண்டு அறிக்கை செய்தால் அமைதி கிடைக்கும். தாழ்மையுள்ள நம்பிக்கை ஆறுதலளிக்கும். மனந்திரும்பி விசுவாசித்தால் நலமுடன் இருக்கலாம்.

# 8. மகிழ்ச்சியான பாதுகாப்பு

*என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசா.41:10).*

இடறிக் கீழே விழுவதைக் குறித்து அச்சம் கொள்வது நற்பயன் விளைவிக்கிறதாகும். துணிவுடன் செயல்படுவது விவேகத்தின் அறிகுறியல்ல. சிறப்பான ஆதாரம் இல்லாவிட்டால் நாம் விழுந்து விடுவோம் என்று நினைக்கத் தூண்டும் சந்தர்ப்பங்கள் நமக்கு ஏற்படலாம். இங்கு சிறப்பான ஆதாரம் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நம்மைத் தாங்குவதற்குக் கடவுளின் வலது கரமே காத்திருக்கிறது. அவருடைய கரங்கள் வானத்தையும் பூமியையும் அவற்றிற்கான இடத்தில் வைப்பதுபோன்ற முக்கிய வேலைகளைச் செய்தாலும் அவை நமக்கு வாக்குப்பண்ணப்படவில்லை. சிறப்பான அவரது வலது கரமே நம்மைத் தாங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது அவர் ஆற்றலையும் கைத் திறனையும் குறிக்கிறது. வலது கை ஆற்றலோடும் திறனோடும் செயல்படும். ஆண்டவர் என் நீதியின்

வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று கூறுகிறார். கடவுளாகவும் அரசராகவும் செயல்பட உதவும் அந்தக் கை அவரை நம்புகிறவர்களைத் தாங்கவும் நீட்டப்படும். நம்மைத் தாக்கும் ஆபத்து அச்சம் தரக்கூடியது. ஆனால் நமக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு மகிழ்ச்சி அளிக்கக் கூடியது. கடவுள் தாங்கிப் பிடிப்பவனைப் பிசாசு விழத் தள்ள முடியாது.

நம் பாதங்கள் வலுக்குறைந்தனவாய் இருக்கலாம். ஆனால் கடவுளின் வலது கரம் எல்லாம் செய்ய வல்லமையானது. நம் பாதை கரடுமுரடானதாய் இருக்கலாம். ஆனால் எல்லாம் வல்ல கடவுள் நமக்கு ஆதரவளிப்பார். ஆகையால் நாம் தைரியமாக முன்னோக்கிச் செல்லலாம். நாம் விழுந்து விடமாட்டோம். எல்லாவற்றுக்கும் ஆதாரமாய் இருக்கும் கடவுள்மேல் நாம் எப்பொழுதும் சார்ந்திருப்போமாக. தம் ஆற்றல் நமக்குப் பயன்படாமல் இருக்க அவர் செய்யமாட்டார். ஏனெனில் அவர் நீதியுள்ளவர். அவர் இந்த வாக்குறுதியைக் குறித்து உறுதியுள்ளவர். அவர் குமாரனுக்கும் உறுதி உள்ளவர். ஆகையால் நமக்கும் உறுதியுள்ளவராய் இருப்பார். இதனால் நாம் மிகவும் மகிழ்ச்சி உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவ்விதம் இருக்கிறோமா?

# 9. மாசு அகற்றப்பட்டது

அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறது போல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறது போல அவர்களைப் புடமிடுவேன். அவர்கள் என் நாமத்தைத் தொழுது கொள்வார்கள். நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன். இது என் ஜனமென்று நான் சொல்லுவேன். கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள் (சக.13:9).

கடவுளின் கிருபை விலையேறப்பெற்ற உலோகமாக நம்மைத் தரமாற்றுகிறது. அதன் இன்றியமையாத விளைவாக நாம்

உலைக்களத்தில் நெருப்பால் புடமிடப்பட வேண்டியதாகிறது. நாம் இவ்விதம் தரம் மாற்றப்படுவதற்கு நம்மை ஒப்புக் கொடுக்கிறோமா? அல்லது வயல் வெளிகளிலுள்ள கற்களைப்போல அப்படியே அசையாமல் கிடக்கும் வாழ்க்கையை வாழ்வதற்காக நாம் மதிப்பில்லாதவர்கள் என்று கடவுளால் கருதப்படத்தக்கவர்களாய் வாழ்ந்து வருகிறோமா? அவ்விதம் வாழ்வது இழிந்த வாழ்வைத் தெரிந்து கொள்வதாகும். அதாவது ஏசாவைப்போல் கூழுக்காக உடன்படிக்கையின் பங்கை இழப்பதைப் போலாகும். இல்லை ! ஆண்டவரே உம்முடைய சமூகத்திலிருந்து ஒதுக்கித் தள்ளப்படுவதைவிட உலைக்களத்தில் தள்ளப்படுவதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம்.

நெருப்பு மாசை அகற்றித் தூய்மையாக்குகிறது, அழித்துவிடுவதில்லை. நாங்களும் நெருப்பிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு விடுவோம். அங்கேயே கிடந்து வெந்து அழிந்து விடமாட்டோம். ஆண்டவர் தம் மக்களை வெள்ளியைப் போல் மதிக்கிறார். ஆகையால் அவர்களில் உள்ள மாசை நீக்க வேண்டுமென்று கவலை கொள்கிறார். நாம் விவேகம் உள்ளவர்களாய் இருந்தால் அவ்விதம் சுத்தப்படுவதை மறுக்கமாட்டோம், வரவேற்போம். உலோகங்களை உருக வைக்கும் கலத்திலிருந்து எடுக்கப்பட்டு விடவேண்டும் என்றல்லாமல், நம்மிலுள்ள மட்ட உலோகக் கலப்பு நீக்கப்பட வேண்டும் என்பதே நம் வேண்டுதலாயிருக்கும்.

ஆண்டவரே, நீர் எங்களை மெய்யாகவே புடமிடுகிறீர். கொடிய அக்கினியில் உருக நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம். இது உம்முடைய வழியாகும். உம்முடைய வழி மிகவும் சிறப்பு வாய்ந்தது. இச்சோதனையின் போது எங்களைத் தாங்கிப்பிடித்துக் கொண்டு எங்களை முற்றிலுமாகத் தூய்மையாக்கும். அதன் பின் நாங்கள் எப்போதும் உம்முடையவர்களாயிருப்போம்.

# 10. நிலையானதொரு சாட்சி

*நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கும் முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய் (அப்.22:15).*

வானத்திலிருந்து ஆண்டவர் பேசியதைப் பார்க்கவும் கேட்கவும் பவுல் தெரிந்து கொள்ளப்பட்டார். இவ்விதமாகக் கடவுள் அவரைத் தெரிந்து கொண்டது அவருக்குக் கிடைத்த தனிச்சலுகை ஆகும். ஆனால் அச்சலுகையின் பயன் அவரோடு முடிந்து விடவில்லை. அது மற்றவர்களிலும் மாறுதல் பண்ணவேண்டும் என்னும் குறிக்கோளை உடையதாயிருந்தது. அந்த மாறுதல் சிலரில் மட்டுமல்ல எல்லா மனிதரிலும் ஏற்படவேண்டும். பவுலினாலேயே ஐரோப்பாவிலுள்ளவர்கள் நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றார்கள்.

ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளவைகளுக்கு நாம் சாட்சியாயிருக்க வேண்டும். சிறப்பு வாய்ந்த அவற்றை மறைத்து வைப்பது நம்மை இடருக்கு உள்ளாக்கும். முதலாவது அவர் வெளிப்படுத்துகிறவைகளை நாம் பார்க்கவும் கேட்கவும் வேண்டும். இல்லாவிடில் நாம் சொல்லுவதற்கு ஒன்றுமே இருக்காது. நாம் பார்க்கவும் கேட்கவும் பின் அவற்றைக் குறித்துச் சாட்சி கூற ஆவல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அது நாம் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்ததாய் இருக்க வேண்டும் என்பதற்காக நீ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் இருக்க வேண்டும். நீ அவருக்குச் சாட்சியாய் இருப்பாய் என்று வசனம் கூறுகிறது. அந்தச் சாட்சி நிலையானதாயும் கருத்தைக் கவர்கிறதாயும் இருக்க வேண்டும். மற்ற எல்லாவற்றையும் விட இதையே நாம் முக்கிய வேலையாகக் கருத வேண்டும். நாம் சொல்லுவதை ஆர்வத்தோடு ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு முன் மட்டும் சாட்சியாயிருப்பது

போதுமானதல்ல. சகல மனுஷருக்கு முன்பாக என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது வாலிபர், முதியவர், செல்வர், ஏழைகள், நல்லவர், கெட்டவர் எல்லாரையும் அது குறிக்கிறது. ஊமையான ஆவி பிடித்தவர்கள் போல் நாம் வாயை மூடிக்கொண்டு இருக்கக் கூடாது. மேலே கூறப்பட்ட வசனம் ஒரு கட்டளையும் வாக்குறுதியும் ஆகும். அதற்கு நாம் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடாது. நீ சகல மனுஷருக்கு முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய் நீங்கள் எனக்குச் சாட்சியாயிருப்பீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

ஆண்டவரே, நானும் அவ்விதமாயிருக்க இந்த வாக்கை என்னில் நிறைவேற்றும்.

# 11. நம் பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்?

*உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன் (ஏசா.44:3).*

இயற்கை மரபின்படி நம் பிள்ளைகளில் கடவுளின் ஆவி இல்லை என்பதை நாம் தெளிவாய்க் காண்கிறோம். அவர்கள் எதிர்காலத்தைக் குறித்து நாம் அச்சம் கொள்ளத்தக்கதாகப் பல பண்புகள் அவர்களில் இருப்பதைக் காண்கிறோம். இதனால் நாம் வேதனையோடு வேண்டுதல் செய்கிறோம். நம் மகன் வேண்டுமென்றே தவறு செய்யும் போது ஆபிரகாமைப் போல இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக என்று அங்கலாய்த்து ஜெபிக்கிறோம். நம் குமாரத்திகள் அரசிகளாய் இருப்பதைவிட அன்னாள்களாய் இருப்பதை விரும்புகிறோம். ஆகையால் மேலே கொடுக்கப்பட்ட வசனம் நமக்கு ஊக்கம் ஊட்டுவதாய் இருக்கின்றது. இதன் முற்பகுதியில் என் தாசனாகிய யாக்கோபே,..... பயப்படாதே என்று இருக்கிறது. இது நம் அச்சங்களை அகற்றக் கூடியது.

ஆண்டவர் தம் ஆவியை அருளுவார். நிறைவாக ஊற்றுவார். அது உண்மையாகவே நித்திய ஆசீர்வாதமாய் இருக்கும்படி உறுதியான பயனுள்ளதாய் அருளுவார். இவ்விதமாகத் தெய்வீக ஆவி ஊற்றப்படுவதால் நம் பிள்ளைகளில் ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான். ஒருவன் யாக்கோபின் பெயரைத் தரித்துக் கொள்வான்.

இது ஆண்டவரிடம் விவரம் கேட்கவேண்டிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். ஆகையால் குறித்த நேரங்களில் தெளிவான விதமாக நம் பிள்ளைகளுக்காக நாம் வேண்டுதல் செய்ய வேண்டுமல்லவா? நாம் அவர்களுக்குப் புதிதான இருதயங்களை அளிக்க முடியாது. ஆனால் பரிசுத்த ஆவி அவர்களுக்கு அளிக்கக் கூடும். அவற்றைக் கொடுக்கச் சொல்லி நாம் ஆண்டவரைக் கெஞ்சிக் கேட்க முடியும். முதன்மையான தந்தையான அவர் நாம் நம் பிள்ளைகளுக்காகச் செய்யும் வேண்டுதலைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிறார். நமக்கு அன்பானவர்கள் யாராவது பேழைக்கு வெளியில் இருக்கிறார்களா? ஆண்டவரின் கரத்தினால் அவர்கள் நம்மோடு பேழைக்குள் இழுக்கப்படும்வரை நாம் களைப்படையாமல் வேண்டிக்கொண்டே இருப்போமாக!

# 12. கர்த்தர் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்

*கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிப் பார். நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து..... பெருகப்பண்ணுவேன் (ஆதி.13:14-16).*

இது நினைவில் வைக்கவேண்டிய முக்கியமானதொரு நிகழ்ச்சியின் போது கொடுக்கப்பட்ட சிறப்பான ஆசீர்வாதமாகும். குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சச்சரவை ஆபிரகாம் தீர்த்து வைத்தார். அவர் எனக்கும் உனக்கும்….. வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர் என்று கூறினார். ஆகவே சமாதானம் பண்ணுகிறவர்களுக்கான ஆசீர்வாதத்தைப் பெற்றார். சமாதானத்துக்கு ஆண்டவரும், சமாதானம் கொடுப்பவருமானவர் சமாதானத்தைத் தேடுகிறவர்களுக்கும் அனுசரிக்கிறவர்களுக்கும் தம் இரக்கத்தை வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறார். கடவுளோடு நெருங்கிய தோழமை கொள்ள நாம் விரும்பினால் சமாதானத்துக்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆபிரகாம் தன் உறவினனோடு பெருந்தன்மையோடு நடந்து கொண்டு, முதலாவது நிருபத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமையை அவனுக்குக் கொடுத்தார். சமாதானத்துக்காக நாம் நம் உரிமையை விட்டுக் கொடுத்தால், ஆண்டவர் நமக்கு எல்லாவற்றையும் சரி செய்வார். மூதாதையரான ஆபிரகாம் அவர் கண்ணெட்டும் தூரம் வரையிலுள்ள நிலத்தை அவருடையதாக்கிக் கொள்ளலாம் என்னும் வாக்குறுதி அவருக்குக் கொடுக்கப்பட்டது. நாமும் விசுவாசத்தினால் அவ்விதம் செய்யலாம். அப்பகுதியைத் தனதாக்கிக் கொள்ள ஆபிரகாம் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் ஆண்டவர் அவருக்கும் அவர் சந்ததியினருக்கும் அதை நீங்கா உடைமையாக வழங்கினார். உடன்படிக்கையின் ஈவுகளாக நாம் பல ஆசீர்வாதங்களுக்கு உரிமையுள்ளவர்களாய் இருக்கிறோம். எல்லாம் நம்முடையவை. நாம் ஆண்டவரை மகிழ்விக்கும் போது அவர் நம்மை எல்லா இடங்களையும் பார்க்கச் செய்கிறார். நாம் கிறிஸ்துவினுடையவர்களாகவும் கிறிஸ்து நம்முடையவராகவும் இருப்பதினால் நிகழ்காரியங்களானாலும் எல்லாம் நம்முடையனவே.

# 13. வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்

நீ வெளியிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா.28:3).

ஈசாக்கு சாயங்கால வேளையிலே தியானம் பண்ணச் சென்றபோது அவர் ஆசீர்வதிக்கப்பட்டார். நாம் தனிமையாக இருந்த பல சமயங்களிலும் ஆண்டவர் நம்மைச் சந்தித்திருக்கிறார் அல்லவா? நாம் அப்போது அடைந்த மகிழ்ச்சிக்கு மரங்களும் புதர்களும் சாட்சி பகரும் அல்லவா? அதே விதமான ஆசீர்வாதத்தை நாம் மறுபடியும் எதிர்பார்க்கிறோம்.

போவாஸ் அறுவடை செய்த சமயம் அவர்கள் வேலையாட்கள் கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்று ஆசீர்வதித்தபோது அவர் ஆசீர்வதிக்கப்பட்டார். ஏர் உழும் ஒவ்வொருவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக. ஒவ்வொரு விவசாயியும் ஆண்டவர் சத்துக்குக் கீழ்ப்படிந்தால் இந்த வாக்குறுதியை வற்புறுத்தலாம்.

ஆதாமைப்போல் வயலில் வேலை செய்ய நாம் போகிறோம். முதல் ஆதாமின் பாவத்தினால் நிலத்தின்மேல் சாபம் விழுந்தது போல, இரண்டாம் ஆதாமின் மூலமாக ஓர் ஆசீர்வாதம் ஏற்பட்டது பெரிய ஆறுதலாகும்.

தேகப்பயிற்சிக்காக நாம் வயல் வெளிக்குச் செல்கிறோம். ஆண்டவர் அந்தத் தேகப்பயிற்சியை ஆசீர்வதித்து, நமக்கு நற்சுகம் அளிப்பார் என்றும், அச்சுகத்தை அவர் மகிமைக்காகப் பயன்படுத்துவோம் என்றும் நம்பி மகிழ்ச்சி அடைகிறோம்.

இயற்கையை ஆராய்வதற்காக வயல் வெளிக்குச் செல்கிறோம். அந்த அறிவு தேவனுடைய ஆசீர்வாதத்தினால் பயனுள்ள முறையில் பயன்பட புனிதப்படுத்தப்படும் என்னும்

நம்பிக்கையேயல்லாமல் அதைப் பார்ப்பதினால் மட்டும் பயன் ஏற்படாது.

இறுதியாக இறந்தவர்களை அடக்கம் பண்ணுவதற்காக வயல் வெளிக்குச் செல்கிறோம். நாம் இறந்த பின்னும் மற்றவர்கள் நம்மை அங்கு எடுத்துச் செல்வார்கள். கல்லறையில் அழுகிறவர்களாய் இருந்தாலும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவோம்.

# 14. தகுதியற்றவர்களுக்குக் காட்டப்படும் கிருபை

கர்த்தரை நம்பியிருக்கிறவர்களையே கிருபை சூழ்ந்து கொள்ளும் (சங்.32:10).

நம்பிக்கைக்கு எவ்வளவு சிறந்த பரிசு கிடைக்கும் என்று பாருங்கள். என் ஆண்டவர் எனக்கு அதை முழுவதுமாக அளிப்பாராக! நம்புகிறவன் எல்லாரையும் விடத் தான் பாவி என்று உணர்கிறான். ஆனால், இதோ, அவனைக் கிருபை சூழ்ந்து கொள்ளும். அவன் எதற்கும் தகுதியற்றவன் என்று உணர்கிறான். ஆனால் கிருபை அவனைச் சூழ்ந்து கொள்கிறது. ஆண்டவரே, நான் உம்மை நம்புகிறேன். எனக்கு இவ்விதமான கிருபையை அருளும்.

என்னுடைய ஆத்துமாவே, உனக்கு எவ்வளவு சிறந்த மெயக்காவலர் உண்டு என்பதைக் கவனித்துப்பார். ஓர் இளவரசனைப் போர் வீரர்கள் சூழ்ந்திருப்பதைப் போல கிருபை உன்னைசு; சூழ்ந்து கொள்ளும். கிருபையின் காவற்படையினர் முற்புறத்திலும் பிற்புறத்திலும் எல்லாப் பக்கங்களிலும் உன்னைச் சூழ்ந்திருப்பார்கள். நாம் கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருப்பதால் கிருபையினால் சூழப்பட்டிருக்கிறோம்.

என் ஆத்துமாவே நீ எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கிறாய் என்பதை நினைத்துப் பார். காற்று மண்டலம் உன்னைச் சுற்றிலும் இருப்பது போல ஆண்டவரின் கிருபையும் உன்னைச் சூழ்ந்து இருக்கிறது. துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு. ஆனால் உனக்கு எத்தனையோ கிருபைகள் இருப்பதால் உன் வேதனைகள் குறிப்பிடத்தக்கவையல்ல. நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள் செம்மையான இருதயமுள்ளவர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழக்கமிடுங்கள் என்று கூறுகிறார். இதற்குக் கீழ்ப்படிந்து, நான் கர்த்தரில் களிகூருவேன். என் மகிழ்ச்சியை எல்லாருக்கும் வெளிப்படுத்துவேன். என் ஆண்டவரே, உம் கிருபை என்னைச் சூழ்ந்து கொண்டிருப்பது போல் நான் நன்றி கூறும் கீத சத்தங்களால் உம் சமூகத்தை நிரப்புவேன்.

# 15. எப்போதும் நினைவுள்ளவராய் இருக்கிறார்

*கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார் (சங்.115:12).*

இந்த வாக்கியத்தின் முதற் பகுதிக்கு நான் என் முத்திரையிட்டு எனதாக்கிக்கொள்ள முடியும். நீங்களும் அவ்விதம் செய்ய முடியாதா? ஆம், யேகோவா நம்மை நினைத்திருக்கிறார் நமக்கு வேண்டியதைக் கொடுத்திருக்கிறார் ஆறுதல்படுத்தியிருக்கிறார். விடுதலை அளித்திருக்கிறார். வழிநடத்தியும் இருக்கிறார். அவர் அருள் செயல்களில் எல்லாம் நம்மை நினைத்திருக்கிறார். அற்பமான நம் விவகாரங்களை அவர் ஒருநாளும் புறக்கணித்ததில்லை. அவர் மனம் நம்மைப் பற்றிய எண்ணங்களால் நிறைந்திருக்கிறது. நினைத்திருக்கிறார் என்பது அதைத்தான் குறிக்கிறது. ஆதியிலிருந்தே இவ்விதம் இருந்திருக்கிறது. இதற்கு ஒருநாளும் ஒருதடையும்

ஏற்பட்டதில்லை. சிறப்பான சமயங்களில் அவர் நம்மை நினைத்திருப்பதை நம் தெளிவாய்க் கண்டிருக்கிறோம். இப்போது அத்தருணங்களை நன்றியோடு நினைவு கூருவோமாக! ஆம் உண்மையாகவே கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்.

இந்த வாக்கியத்தின் இரண்டாம் பகுதி முதற் பகுதியிலிருந்து ஊகித்தறியும் கருத்தாகும். கடவுள் மாறாதவராயிருப்பதால் இறந்த காலத்தில் நம்மை நினைத்திருந்தது போல் எதிர் காலத்திலும் நினைப்பார். இவ்விதம் நினைத்திருப்பது நம்மை ஆசீர்வதிப்பதற்கு ஒப்பானதாகும். இங்கு காரணாகாரியத் தொடர்பை மட்டும் நாம் காணவில்லை. ஆனால் அகத்தூண்டுதலினால் நாம் வெளியிடுவதையும் காண்கிறோம். அவர் ஆசீர்வதிப்பார் என்பது பரிசுத்த ஆவியின் சான்றையும் உள்ளதாயிருக்கின்றது. இது ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் குறிக்கின்றது. இந்த வாக்குறுதின் பிரித்தறியக் கூடிய பண்புற்ற தன்மை, அது எல்லையற்றது என்பதைக் காட்டுகிறது. அவர் தெய்வீகக் கருத்துக்கேற்றபடி நம்மை நித்திய நித்தியமாய் ஆசீர்வதிப்பார். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி என்று சொல்லுவோமாக!

# 16. நீங்கள் கடவுளோடு ஈடுபடுகிறீர்கள்

என் உக்கிரக கோபத்தின்படியே செய்ய மாட்டேன். எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன். ஏனென்றால் நான் மனுஷனல்ல தேவனாயிருக்கிறேன் (ஓசி.11:9).

இவ்விதமாக நம்மை அழியாமற் பேணும் தம் இரக்கங்களை ஆண்டவர் தெரியப்படுத்துகிறார். ஒருவேளை இதை வாசிப்பவர் ஆண்டவரைக் கோபப்படுத்தி இருக்கலாம். ஆகையால் நீர் விரைவில் அழிவுறுவீர் என்றும் அச்சுறுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் மேலே கூறப்பட்டுள்ள

வாக்குறுதி நீர் நம்பிக்கை இழக்காமல் இருக்க உம்மைத் தாங்கிப் பிடிக்கும். உம்முடைய வழிகளை ஆராய்ந்து பார்த்து, உம் பாவங்களை அறிக்கையிடுமாறு ஆண்டவர் உம்மை இப்போது அழைக்கிறார். அவர் மனிதராயிருந்தால் பலநாட்களுக்கு முன்னரே உம்மோடுள்ள தொடர்பைத் துண்டித்திருப்பார். மனிதரைப்போல் அவர் செயல்ப்படுபவராய் இருந்தால் நீர் செய்ததற்கு அவர் கோபமாய்ப்பேசி, பின் அடித்து நொறுக்கியிருப்பார். அதுவே உம் முடிவாய் இருந்திருக்கும். ஆனால் அப்படி நேரிடவில்லை. ஏனெனில் பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாய் இருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது.

அவர் கோபமாயிருக்கிறார் என்று நீங்கள் உணருவது உண்மை. ஆனால் அவர் எப்போதுமே கோபமாயிருப்பதில்லை. நீங்கள் பாவத்தை விட்டு இயேசுவண்டை திரும்பினால் கடவுள் கோபமற்றவராகி விடுவார். அவர் மனிதனாயிராமல் கடவுளாக இருப்பதால் நீங்கள் பாவத்தில் ஆழ்ந்திருந்தாலும் உங்களுக்கு மன்னிப்பு உண்டு. நீங்கள் கண்டிப்பான மனிதனோடாவது ஈடுபடாமல் கடவுளோடு ஈடுபடுகிறீர்கள். எந்த மனிதனும் உங்களோடு பொறுமையாய் இருக்க முடியாது. உங்களால் துக்கம் அடைந்துள்ள உங்கள் பரம தகப்பனைச் சோர்வடையச் செய்தது போல் தேவதூதனைக் கூட முற்றிலும் சோர்வடையச் செய்திருப்பீர்கள். ஆனால் கடவுள் சகிப்புத் தன்மை உடையவர். உடனே வந்து அவர் எப்படிப்பட்டவர் என்பதை அனுபவத்தில் கண்டறியுங்கள். குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள், நம்புங்கள், உங்கள் பாவ வழியைவிட்டுத் திரும்புங்கள், இரட்சிப்படைவீர்கள்.

# 17. கடவுள் உங்களை வலு உள்ளவர்கள் ஆக்குவார்

நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள். உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு (2.நாளா.15:7).

அரசரான ஆசாவுக்கும் யூதா நாட்டுக்கும் கடவுள் பலத்த காரியங்களைச் செய்திருந்தும் அவர்கள் பலம் அற்றவர்களாய் இருந்தார்கள். கடவுளின் பாதையில் நடக்க அவர்கள் கால்கள் தள்ளாடிக் கொண்டும் அவர்கள் இதயங்கள் தயங்கக் கொண்டும் இருந்தன. ஆகையால் அவர்கள் கடவுளோடு இருக்கும் வரை அவர் அவர்களோடு இருப்பார் என்றும், அவர்கள் அவரை விட்டு விலகிப்போனால் அவரும் அவர்களை விட்டு விலகிப் போவார் என்றும் எச்சரிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு அருகிலிருந்த அரசு கிளர்ச்சி செய்தபோது எவ்வளவு தொல்லைகள் அடைந்தது என்றும், மனந்திரும்பியபோது கடவுள் எவ்விதம் அதற்குக் கருணை காட்டினார் என்றும் நினைப்பூட்டப்பட்டார்கள். அவர்களைத் தம்மோடு ஒப்புரவுபடுத்தி நேர்மையில் ஆற்றல் உள்ளவர்கள் ஆக்குவதே ஆண்டவரின் திட்டமாகும். நாமும் அவ்விதமே இருக்க வேண்டும். நம்மால் இயன்றவரை கடவுளுக்கென்று உழைக்க வேண்டும்.

கடவுளுக்குச் சேவை செய்வது முக்கியம் என்று கருதினால் முழுமூச்சுடன் செய்ய வேண்டும். கடவுளின் ஊழியத்தை மன உறுதியோடும் தளரா ஊக்கத்துடனும் செய்தால் சிறந்த பயனை அடைவோம். நம் உழைப்பு வீணாய்ப் போகாது என்பதை நாம் அறிவோம். அரை மனதுடன் செய்யப்படும் வேலையினால் ஈதொரு பயனையும் அடையமாட்டோம். ஆனால் நாம் முழு மனதுடன் செய்தால் நம் வாழ்வு வளம்பெறும். இதை எழுதியவர் வாழ்க்கையில் பலத்த புயல் ஏற்பட்டு அவர் அலைக்களிக்கப்பட்ட போது இந்த வாக்குறுதி அவருக்கு அனுப்பப்பட்டது. மதிப்பு வாய்ந்த சரக்குடன் பத்திரமாகத் துறைமுகத்தை அடையமுடியும்

என்னும் நம்பிக்கையோடு, நம்மாலானவரை கடினமாக உழைக்க வேண்டியது அவசியம் என்பதை அது அவருக்கு உணர்த்தியது.

# *18. கடவுள் பதில் அளிப்பார்*

*அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார் (சங்.145:19).*

அவருடைய ஆவியே இந்த விருப்பத்தை நம்மில் உருவாக்கியிருக்கிறது. ஆகையால் அவர் பதில் அளிப்பார். தன் மனத்தினுள் இருக்கும் அவர் உயிராற்றலே இவ்விதம் கூப்பிடத் தூண்டுகிறது. ஆகையால் அவர் கண்டிப்பாகக் கேட்பார். அவருடைய தூய சக்திக்கு உட்பட்ட மக்களே அவருக்குப் பயப்படுகிறார்கள். ஆகவே கடவுளை மகிமைப்படுத்தி அவரை அறிவதன் மகிழ்சியை நித்தியமாய் அனுபவிப்பதே அவர்கள் விருப்பமாகும். தானியேலைப்போல அவர்கள் பல விருப்பங்கள் உள்ளவர்கள். அவர்கள் ஆசைகள் நிறைவுபெற ஆண்டவர் உதவுவார்.

தூய விருப்பங்கள் புல்லின் இதழ் போன்றவையாகும். அவை வளைந்து, கதிர் வரும்வரை பரலோக உழவர் அவற்றைப் பேணிக் காப்பார். கடவுளுக்குப் பயந்தவர்கள் தூய்மையுடன் விளங்கி, பயனுடையவர்களாயும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயும் இருந்து அதன் மூலம் தங்கள் ஆண்டவர் புகழ் அடைய விரும்புகிறார்கள். அவர்கள் தேவையில் பொருள்களையும், பொறுப்பில் உதவியையும், தடுமாற்றத்தில் அறிவுரையையும், இக்கட்டில் விடுதலையையும் விரும்புகிறார்கள். சில வேளைகளில் அவர்கள் விரும்பம் வலிமை வாய்ந்ததாயும் அவர்கள் நிலை நெருக்கடியானதாயும் இருப்பதால், அவர்கள் நோவிலிருக்கும் சிறு பிள்ளைகளைப்போல மனவேதனையோடு உரத்துக் கூக்குரலிடுகிறார்கள். அந்நேரத்தில் ஆண்டவர் அவர்கள்

வேதனையைப் புரிந்துகொண்டு, அவர் வாக்குறுதிப்படி தேவையானவைகளையெல்லாம் செய்து, அவர்களை இரட்சிக்கிறார்.

ஆம், நாம் கடவுளுக்குப் பயப்படுகிறவர்களாய் இருந்தால் வேறே எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. நாம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டால் நிச்சயமாக இரட்சிக்கப்படுவோம்.

இதை வாசிப்பவரே, இந்த வசனம் எப்போதும் உம் வாயிலிருக்கட்டும். அது உமக்குத் தேனிட்ட பணிகாரம்போல் இருக்கும்.

# 19. தொலைவில் நலம் உண்டு

உன்னை நான் சிறுமைப்படுத்தினேன். இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன் (நாகூம் 1:12).

வேதனைக்கும் ஓர் எல்லை உண்டு. கடவுள் அதை அனுப்புகிறார். கடவுள் அதை நீக்குகிறார். நீங்கள் பெருமூச்சுடன் இது எப்போது முடியும்? என்று ஏங்குகிறீர்களா? இந்த உலக வாழ்க்கை முடிவடையும்போது நம் துயரங்களும் நிச்சயமாகவும் இறுதியாகவும் முடிவடையும். நம் ஆண்டவர் வரும்வரை அமைதியாகக் காத்திருந்து, நம் ஆண்டவரின் சித்தத்தைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்வோமாக.

நம் பரமபிதா அவர் திட்டப்படி பிரம்பை உபயோகித்தபின் அதை அகற்றிவிடுகிறார். நம் மடமை அடித்து விரட்டப்பட்டபின் நாம் அடிபடவேண்டியதில்லை. நம் நற்பண்புகள் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்லது நம்மைச் சோதிப்பதற்காக நமக்கு அந்த வேதனை கொடுக்கப்பட்டிருக்குமேயானால் ஆண்டவரின் புகழ்ச்சிக்கு நாம் சாட்சியாயிருந்தபின் அது நீங்கிவிடும். நாம் அவருக்கு

அளிக்கவேண்டிய புகழ்ச்சியையெல்லாம் அளிக்கும்வரை அந்த வேதனை நம்மைவிட்டு நீங்குவதை நாம் விரும்பமாட்டோம்.

இன்று ஆழ்ந்த அமைதி இருக்கலாம். ஆனால் எவ்வளவு சீக்கிரம் கொந்தளிப்பு தொடங்கும் என்று யாரும் அறியோம். கோதுமை நீண்ட காலமாகக் கொடுந்துன்பம் அனுபவித்தபின் சூடடிக்கும் கோல் அதன் இடத்தில் மாட்டப்படுகிறது. கோதுமையோ களஞ்சியத்தில் சேர்க்கப்படுகிறது. இப்போது நாம் துக்கப்பட்டுக்கொண்டிருந்தால் சில மணி நேரத்துக்குள் மகிழ்ச்சி அடையலாம். இரவைப் பகலாக்குவது ஆண்டவருக்கு கடினமல்ல. இருண்ட மேகத்தை அனுப்புபவர் வெகு சீக்கிரத்தில் அதை அகற்றிவிடலாம். ஆகையால் நாம் மகிழ்ந்து ஆர்ப்பரிப்போமாக! நல்ல காலத்தை எதிர்பார்த்து நாம் அல்லேலூயா பாடுவோமாக!

# 20. நித்தமும் வழி நடத்துவார்

*கர்த்தர் நித்தமும் உன்னை வழி நடத்துவார் (ஏசா.58:11).*

நீங்கள் தொல்லைக்கு ஆளாகி இருப்பது ஏன்? வழிதப்பிப்போய்விட்டீர்களா? இருண்ட காட்டுக்குள் மாட்டிக்கொண்டு வெளியே வர வழி கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கிறீர்களா? அமைதியாய் நின்று, கடவுள் இரட்சிக்கும் விதத்தைப் பாருங்கள். அவருக்கு வழி தெரியும். நீங்கள் அவரை நோக்கிக் கூப்பிட்டால் அவர் உங்களை வழி நடத்துவார்.

ஒவ்வொரு நாளும் மனக்குழப்பம் உண்டாக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிலையில் கடவுள் நித்தமும் வழிநடத்துவார் என்று அறிவது மகிழ்ச்சி அளிக்கிறது அல்லவா? நாம் போகும் வழியை நாமே தெரிந்துகொண்டாலும், மற்ற மனிதரின் ஆலோசனையைக் கேட்டாலும் கடவுளின் வழி நடத்துதலை ஒதுக்கித் தள்ளிவிடுகிறவர்களாவோம். நாம் சுய சித்தத்தை தவிர்த்தோமேயானால் நாளின் ஒவ்வொரு மணி

நேரத்திலும், ஆண்டின் ஒவ்வொரு நாளிலும், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு ஆண்டிலும் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் ஆண்டவர் உதவுவார். நாம் வழிநடத்தப்பட விரும்பினால் வழிநடத்தப்படுவோம். நம் வழியை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தால் நாம் பாதை தவறிப்போகாதபடி நம்மை வழிநடத்துவார்.

ஆயினும் இந்த வாக்குறுதி யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளதென்று கவனியுங்கள். அதற்கு முன்னால் உள்ள வசனத்தை வாசித்துப் பாருங்கள். நீ பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து என்று சொல்லியிருக்கிறது. அதாவது நாம் மற்றவர்கள்மேல் அக்கறை கொள்ளவேண்டும். அவர்களுக்குக் காய்ந்த ரொட்டித் துண்டுகள் மட்டும் கொடுப்பது சரியல்ல. நாம் எவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறோமோ அவற்றைக் கொடுக்கவேண்டும். மற்றவர்கள் தேவையில் இருக்கும்போது நாம் அவர்களுக்கு அன்பும் இரக்கமும் காட்டினால் ஆண்டவர் நம் தேவைகளைக் கவனித்து நம்மை நித்தமும் வழிநடத்துவார். இயேசு உலோபிகள், ஏழைகளை ஒடுக்குகிறவர்களின் தலைவரல்ல. இரக்கமும் இளகிய நெஞ்சமும் உள்ளவர்களின் தலைவர். அப்படிப்பட்டவர்களே தங்கள் வழியைத் தவறவிடாத யாத்திரிகர்கள் ஆவர்.

# 21. முக்கியத்துவமற்றவர்களுக்கு ஆசீர்வாதம்

*கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார் (சங்.115:13).*

மேலே கூறப்பட்டுள்ள வசனம் முக்கியத்துவமற்றவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகும். உலகப் பிரகாரமான பொருள்களிலும், தாலந்துகளிலும், செல்வாக்கிலும்,

மதிப்பிலும் சிறிதளவே உள்ளவர்களைக் குறித்து நம் கடவுள் கருணை நிறைந்த அக்கறை உள்ளவராய் இருக்கிறார். படைக்கப்பட்டுள்ளவற்றில் சிறியவைகளைக் குறித்தும் கடவுள் கவலைப்படுகிறார். அடைக்கலான் குருவி தரையில் விழுவதில்கூட கவனம் உள்ளவராய் இருக்கிறார். கடவுள் பார்வையில் ஒன்றும் சிறியதல்ல. அவர் திட்டங்கள் நிறைவேறுவதற்கு அற்பமானவைகளைப் பயன்படுத்துகிறார். மனிதரில் சிறியவர்களாகக் கருதப்படுபவர்கள் தங்கள் இழிந்த நிலை ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று வேண்டிக்கொண்டால் தங்கள் ஒடுங்கிய நிலையும் மகிழ்ச்சியானதென்று அறிவார்கள்.

கடவுளுக்குப் பயப்படுகிறவர்களில் பெரியோரும் சிறியோரும் உண்டு. சிலர் குழந்தைகளைப் போன்றவர்கள். வேறு சிலர் இரட்சகர் போன்றவர்கள். ஆனால் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்குச் சிறிதளவே பற்று இருந்தாலும், அது ஆசீர்வதிக்கப்பட்ட பற்று. ஊசலாடும் நம்பிக்கை இருந்தாலும், அது ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை. பரிசுத்த ஆவியின் ஒவ்வொரு இனிமைப் பண்பும் மொட்டுப் போலிருந்தாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தை ஏற்றதாய் இருக்கிறது. அதுவுமல்லாமல் இயேசு கிறிஸ்து சிறியோரையும் பெரியோரையும் தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலேயே வாங்கியிருக்கிறார். ஆட்டுக்குட்டிகளையும் பெரிய ஆடுகளையும் பாதுகாத்துப் பேணுவதாக ஒப்பந்தம் செய்துள்ளார். எந்தத் தாயும் தன் பிள்ளை சிறியதென்று அதைப் புறக்கணிப்பதில்லை. அது எவ்வளவு சிறிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாக அதைப் பேணிக் காக்கிறாள். ஆண்டவர் ஏதாவது சலுகை காட்டுவதாயிருந்தால் மக்களை பெரியோர், சிறியோர் என்று வரிசைப்படுத்துவதில்லை, சிறியோர், பெரியோர் என்றே வரிசைப்படுத்துகிறார்.

# 22. கடந்த நாட்களில் தப்புவிக்கப்பட்டவிதம் விசுவாசத்தைத் தோற்றுவிக்கிறது

*பின்னும் தாவீது: என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான் (1.சாமு.17:37).*

நாம் தாவீதினுடைய வார்த்தைகளை மட்டும் பார்த்தோமேயானால் இது ஒரு வாக்குறுதி அல்ல. ஆனால் உட்கருத்தில் மெய்யாகவே ஒரு வாக்குறுதியாயிருக்கிறது. ஏனெனில் இதைச் சொன்னது தாவீது. ஆண்டவர் இதை உண்மையாக்கி, வலியுறச் செய்தார். கடந்த நாட்களில் தப்புவிக்கப்பட்ட விதங்களை எடுத்துக்கூறி, அப்போதிருந்த புதிய ஆபத்திலிருந்து ஆண்டவர் விடுதலை அளிப்பார் என்று நம்பினார். நம்மால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறபடியால் ஆண்டவர் தம்மை நம்பும் மக்களைக் கடந்த காலங்களில் தப்புவித்ததைப்போலவே நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் தப்புவிப்பார்.

ஆகவே கடந்த நாட்களில் ஆண்டவர் செய்துள்ள அருள் செயல்களை நினைவுபடுத்திக்கொள்ளலாம். முன் நாட்களில் நம் சொந்த ஆற்றலால் நாம் தப்புவிக்கப்படுவோம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டோம். ஆயினும் ஆண்டவர் நம்மைத் தப்புவித்தார். அவர் மறுபடியும் நம்மைத் தப்புவிக்கமாட்டாரா? அவர் தப்புவிப்பார் என்று நாம் நிச்சயமாய் அறிந்திருக்கிறோம். தாவீது தன் எதிரியைச் சந்திக்க ஓடினதுபோல் நாமும் ஓடுவோம். ஆண்டவர் நம்மோடு இருந்திருக்கிறார். இப்போதும் நம்மோடு

இருக்கிறார். அவர் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று கூறியிருக்கும்போது நாம் ஏன் பயந்து நடுங்குகிறோம்? கடந்த நாட்களில் நடந்தது கனவா? மாண்டுபோன சிங்கத்தையும் கரடியையும் நினைத்துப் பாருங்கள். அப்படியிருக்க இந்தப் பெலிஸ்தியன் எம்மாத்திரம்? அவன் சிங்கமும் கரடியுமல்ல என்பதும் நாம் முன்பு மேற்கொண்ட எதிரிகளிலிருந்து வித்தியாசமானவன் என்பதும் உண்மையே. ஆனால் கடவுள் மாறாதவராயிருக்கிறார். மற்ற நிகழ்ச்சிகளில் அவர் புகழ் அடைந்ததுபோல் இதிலும் அடையவேண்டும். நாம் ஓர் இராட்சதனால் கொல்லப்படுவதற்காக காட்டு மிருகங்களிலிருந்து தப்புவிக்கப்படவில்லை. ஆகவே நாம் துணிவு கொள்வோமாக.

# 23. முறிவு பெறாத ஐக்கியம்

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோ.15:6).

கிறிஸ்துவுக்காக நாம் வாழ்வதற்காக அவரில் நாம் நிலைத்திருக்கவேண்டும் என்பது இன்றியமையாதது. இந்த வாக்குறுதியின் தாராளமான மகிழ்ச்சியை நாம் பெறுவதற்கு உரிமையுள்ளவர்களாக அவரில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம். இயேசுவில் நிலைத்திருப்பது என்பது வேறொருவர் அல்லது வேறொரு பொருளின்மேலுள்ள அன்பினால் ஒருபோதும் அவரை விட்டுச் செல்லாமல், அவரோடு உயிருள்ளதும், அன்பானதும், நெஞ்சறிந்ததும், தானே ஆர்வம் தெரிவிக்கிறதுமான இணைப்பில் நிலைத்திருப்பதாகும். கொடி எப்போதும் செடியின் அருகில் இருப்பதை மாத்திரமல்லாமல், அதிலிருந்து எப்போதும் உயிராற்றலையும் கனி கொடுக்கும் ஆற்றலையும் பெறுகிறது. ஒரு விதத்தில் விசுவாசிகள் எல்லாரும் கிறிஸ்துவில்

நிலைத்திருக்கிறார்கள். ஆனால் அதைவிடவும் மேலானது ஒன்று இருக்கிறது. கிருபாசனத்தண்டையில் சென்று, எல்லையற்ற ஆற்றல் பெறுவதற்கு நாம் அதையும் அறிந்துகொள்வது அவசியமாகும். நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ என்று சொல்லப்பட்டது. தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஏனோக்குகளுக்கும், இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருக்கும் யோவான்களுக்கும், கிறிஸ்துவோடுள்ள இணைப்பினால் நிலையான ஆன்மீக கூட்டுறவு உள்ளவர்களுக்குமே இது சொல்லப்பட்டதாகும்.

இருதயம் அன்பினால் நிலைத்திருக்கவேண்டும். மனம் விசுவாசத்தில் வேரூன்றியிருக்கவேண்டும். நம்பிக்கை கடவுளுடைய வார்த்தையோடு உறுதியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மனிதன் ஆண்டவரோடு ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். அப்படியில்லாவிடில் ஜெபத்தினால் ஆற்றல் பெறும் சக்தியை நமக்கு அளிப்பது ஆபத்தானதாகிவிடும். நானல்ல, இனி கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார் என்று இருப்பவருக்குத்தான் தங்கள் பகுத்துணர்வைப் பயன்படுத்தும் அதிகாரம் கொடுக்கப்படக்கூடும். ஆண்டவரோடு உள்ள தோழமையை முறித்துக் கொள்பவர்களே, நீங்கள் எவ்வளவு ஆற்றலை இழந்து விடுகிறீர்கள் என்று உணர்கிறீர்களா? உங்களுடைய வேண்டுதல்கள் வல்லமைமிக்கவையாய் இருக்கவேண்டுமானால் ஆண்டவர் உங்களிலும், நீங்கள் அவரிலும் நிலைத்திருக்கவேண்டும்.

## 24. உங்கள் வேண்டுதல் கேட்கப்பட வேண்டுமென்றால் நீங்கள் செவிகொடுங்கள்

நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோ.15:7).

நாம் சொல்வதை இயேசு கேட்கவேண்டுமென்று விரும்பினால் அவர் சொல்வதை நாம் முதலாவது கேட்கவேண்டுமென்பதை அறிந்துகொள்ளுங்கள். நாம் கிறிஸ்துவுக்குச் செவிகொடுக்கவில்லையானால் அவர் நமக்குச் செவிகொடுக்கமாட்டார். நாம் கேட்கும் அளவுக்கு ஏற்றவாறு நாம் கேட்கப்படுவோம்.

அதுமட்டுமல்லாமல், நாம் கேட்பது நம்மில் நிலையாகத் தங்கியிருந்து, நம் பண்பின் ஒரு வேகமாகவும் ஆற்றலாகவும் நிலைத்திருக்கவேண்டும். இயேசு போதித்த உண்மைகளையும், அவர் வெளிப்படுத்திய நல்லொழுக்கப் போதனைகளையும் அவர் ஆவியின் உள்ளத் தூண்டுதலையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிடில் கிருபாசனத்தண்டையில் நமக்கு எந்தவித உரிமையும் இருக்காது.

நாம் ஆண்டவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அவை நம்மில் நிலைபெற்றிருக்கச் செய்தால், நமக்கு எவ்விதம் எல்லையற்ற சலுகைகள் வெளியிடப்படும் என்பதை நினைத்துப் பாருங்கள். நாம் ஏற்கெனவே நம்முடைய சித்தத்தை ஆண்டவரின் ஆணைக்கு ஒப்புக்கொடுத்துவிட்டபடியால் நாம் ஆண்டவர் சித்தப்படி வேண்டிக்கொள்வதைப் பெற்றுக்கொள்வோம். இவ்விதம் பரலோகத்தின் திறவுகோல்களைப் பயன்படுத்தவும், மேகங்களை அனுப்பவும் அல்லது தடை செய்யும் எலியாக்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களில் ஒருவர் பொதுப்படையான ஆயிரம் கிறிஸ்தவர்களைவிட மேன்மையானவர். சபைகளுக்காகவும், உலகுக்காகவும் நாம் வேண்டுதல் செய்கிறவர்களாயும் லூத்தரைப்போல் நமக்கு வேண்டியதை ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்கிறவர்களாயும்

இருக்க தாழ்மையோடு விரும்புகிறோமா? அப்படியானால் பிரியமானவரின் சத்தத்தைக் கேட்டு, அவர் சொல்வதை நம் மனதில் வைத்துப் போற்றி, அதற்குக் கவனமாகக் கீழ்ப்படியவேண்டும். பயனுள்ளதாய் வேண்டுதல் செய்யவிரும்புகிறவன் கடவுளுடைய சத்தத்தைக் கவனமாய்க் கேட்கவேண்டும்.

## 25. பிரித்து வைக்கப்பட்டவர்கள்

நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள் (ஏசா.61:6).

இஸ்ரவேலுக்கென்று கொடுக்கப்பட்ட இந்த வாக்குறுதி ஆவியின் வித்தானவர்களுக்கு, அதாவது எல்லா விசுவாசிகளுக்கும் ஆவியின் பிரகாரமாக உரியதாகும். நாம் நம் உரிமைகளுக்கேற்றபடி வாழ்ந்தால் கடவுளுக்கென்று தெளிவாகவும், தனிமாதிரியாகவும் வாழ்வோம். ஆகையால் நாம் தூய ஊழியத்திற்கென்று தனியே பிரத்து வைக்கப்பட்டவர்கள் என்று மக்கள் கண்டு, நம்மைக் கர்த்தரின் ஆசாரியர் என்பார்கள். மற்றவர்களைப்போல் நாம் வேலைசெய்கிறவர்களாகவும், வியாபாரம் செய்கிறவர்களாகவும் இருக்கலாம். ஆயினும் நாம் முழுவதுமாக கடவுளின் ஊழியத்தைச் செய்பவர்களாகவே இருப்போம். நம்முடைய ஒரே பணி இயேசு கிறிஸ்துவின்மூலமாகக் கடவுளுக்கு நம்மைப் படைத்து, நிலைத்த பலியான வேண்டுதலையும், துதியையும், சான்றுரையையும் ஏறெடுப்பதாகும்.

இதுவே நம்முடைய நோக்கமாயிருப்பதால் கவனமாற்றம் ஏற்படுத்தக்கூடிய மற்ற வேலைகளை நம்மைப் போல் உயரிய சேவை செய்ய அழைக்கப்படாதவர்களுக்கு விட்டுவிடலாம். மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும். மறு ஜாதியார் நின்றுகொண்டு உங்கள் மந்தைகளை மேய்த்து, அந்நிய

புத்திரர் உங்கள் பண்ணையாட்களும், உங்கள் திராட்சத் தோட்டக்காரருமாயிருப்பார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறதே. அவர்கள் அரசியலில் ஈடுபடட்டும். நிதி பற்றிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கட்டும், விஞ்ஞானத்தை ஆராயட்டும், திறனாய்வு வாதங்களைச் சரி பார்க்கட்டும். ஆனால் நாம் இயேசு கிறிஸ்துவைப்போல நித்திய கட்டளையாக ஆசாரிய ஊழியத்துக்குப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவர்களாக அவ்வித பணிக்கு நம்மை அர்ப்பணிப்போமாக.

இந்த வாக்குறுதி புனிதமான கடமை ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு, தூய்மைக்கான ஆடைகளை அணிந்துகொண்டு, ஆண்டவர் முன்னிலையில் நாள் முழுவதும் சேவை செய்வோமாக.

## 26. உண்மை நிலைநாட்டப்பட்டது

சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும், பொய் நாவோ ஒரு நிமிஷ மாத்திரம் இருக்கும் (நீதி.12:19).

உண்மை நீடித்திருக்கும். காலம் உண்மையைக் கடுந்தேர்வுக்கு உள்ளாக்கினாலும் அது அச் சோதனையை சிறப்பாக மேற்கொள்கிறது. ஆகையால் நான் உண்மையைப் பேசி, இக்காலத்தில் அதற்காகத் துன்புற நேரிட்டாலும், நான் மனநிறைவுடன் பொறுமையாய் இருக்கவேண்டும். அதேபோல கடவுளைப்பற்றிய உண்மையையும் நான் நம்பி அதை விளப்பரப்படுத்த முயன்றால் அதற்குப் பலமான எதிர்ப்பு இருக்கலாம். ஆனால் நான் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் இறுதியாக உண்மையே வெல்லும்.

பொய் சிறிது காலமே வெற்றி பெறுவதுபோல் இருக்கும். பொய் நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும். அது ஓர் இரவில் முளைத்து அடுத்த நாள் இரவில் அழிந்துபோகும் செடியைப்

போன்றது. எவ்வளவுக்கு அதிகமாக அதன் வளர்ச்சி இருக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாக அதன் அழிவும் வெளிப்படுத்தப்படும். ஆனால் என்றும் மாறாத உண்மையை ஒப்புக்கொள்வதும் அதைப் பாதுகாப்பதுமே நித்தியமாய் வாழ்பவருக்குச் சிறப்பாகும். நித்தியமான நற்செய்தி என்றும் மாறாத கடவுளைப்பற்றிய நிலையான உண்மையாகும். பழமொழி ஒன்று, உண்மையைப் பேசுபவன் சாத்தனை வெட்கமடையச் செய்கிறான் என்று கூறுகிறது. கடவுளைப்பற்றிய உண்மையைச் சொல்பவன் நரகத்திலுள்ள எல்லாப் பிசாசுகளையும் அவமானத்துக்கு உள்ளாக்கி, தங்கள் பொய்யான வார்த்தைகளைப் பரப்பிக்கொண்டிருக்கும் பாம்பின் வித்துக்கள் ஆனவைகளைச் சீர்குலையச் செய்வது உறுதி.

என் ஆத்துமாவே, பெரியவைகளையும் சிறியவைகளுமானவைகளில் நீ எப்போதும் உண்மையையே கடைப்பிடிக்கவேண்டும் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிரு. முக்கியமாக மனிதருக்குள் கிருபையும் உண்மையும் வரக்காரணமாயிருந்த அவர் பக்கமே எப்போதும் இருக்கவேண்டும்.

## 27. தடுமாற்றமற்ற நம்பிக்கை

துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான். அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும் (சங்.112:7).

உறுதியற்ற நிலை அச்சந்தருகிறதாகும். நம் குடும்பத்தினரிடமிருந்து எந்தச் செய்தியும் வராவிட்டால் நாம் கவலைக்குள்ளாகிறோம். செய்தி வராமலிருந்தால் எல்லாம் நல்லபடியாகவே இருக்கும் என்று நாம் நம்பத்துணிவதில்லை. இவ்விதமான துயர நிலைபை மாற்றக்கூடியது நம்பிக்கையே ஆகும். ஆண்டவர் தம்முடைய ஆவியினால் மனதை

அமைதியடையச் செய்கிறார். ஆகவே நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் குறித்தான எல்லா பயங்களும் ஓடிவிடுகின்றன.

சங்கீதக்காரன் விளக்கும் திடநம்பிக்கையை நாம் தளரா ஊக்கத்துடன் நாடவேண்டும். அது ஆண்டவரின் ஏதாவதொரு வாக்குறுதியை நம்புவது மட்டுமல்ல, ஆனால் அவர் ஒருநாளும் நமக்கு எந்தத் தீமையும் செய்யவும் மாட்டார், யாரும் செய்ய அனுமதிக்கவும் மாட்டார் என்னும் உறுதியான நம்பிக்கை உள்ளவர்களாய்த் தடுமாற்றமின்றி நம் கடவுளில் பற்றுவைப்பதே ஆகும். இவ்விதமாய் உறுதியான நம்பிக்கை உள்ளவர்களாய் இருந்தால், வாழ்க்கையில் நமக்குத் தெரிந்தவைகளையும் தெரியாதவைகளையும் குறித்து அச்சம் கொள்ளமாட்டோம். நம் கடவுளை நாளைய தினத்தின் கடவுளுமாய் இருப்பதால் நமக்கு நாளைய தினத்தைக் குறித்து பயம் இருக்காது. நமக்குத் தெரியாமல் என்ன நிகழ்ச்சிகள் நேர்ந்திருந்தாலும் நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஏனெனில் நம் யெகோவா தெரிந்தவைகள் தெரியாதவைகளின் கடவுளாயிருக்கிறார். என்ன நேரிட்டாலும் நாம் ஆண்டவரை நம்புவோம் என்னும் உறுதியான தீர்மானம் உள்ளவர்களாய் இருக்கிறோம். எவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டாலும் நம் கடவுளே பெரியவரும் சிறப்புள்ளவருமாய் இருக்கிறார். ஆகையால் தபாற்காரர் கதவைத் தட்டினாலும் நள்ளிரவில் தந்தி வந்தாலும் நாம் அச்சம் அடையமாட்டோம். ஆண்டவர் உயிரோடு இருக்கிறார். அவர் பிள்ளைகள் பயப்படவேண்டியதில்லை.

## 28. பரலோகத்தின் மெய்யான சுதந்திரம்

பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலைத்துள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, (எபி.10:34).

இது நல்லது. இங்கு நமக்குள்ள சுதந்திரம் பொய்த் தோற்றமுடையது. இதில் சாரம் இல்லை. ஆனால் மகிமை

பொருந்திய நாட்டில் நமக்கு மெய்யான சுதந்திரம் இருக்கிறது என்று கடவுள் வாக்குறுதி அளித்துள்ளார். அது உண்மை என்னும் உறுதி நமக்கு இருப்பதால் நிலையுள்ள சுதந்திரம் நமக்கு அங்கு இருக்கிறது என்பதை நிச்சயமாய் நம்புகிறோம். இப்போதே நாம் அதை உள்ளவர்களாய் இருக்கிறோம். புதரிலுள்ள இரண்டு பறவைகளைவிட கையிலுள்ள ஒரு பறவை சிறந்தது என்று சொல்லப்படுகிறது. நமக்கோ புதரிலும் கையிலும் பறவைகள் இருக்கின்றன. இப்போதே பரலோகம் நமக்குச் சொந்தமாயிருக்கிறது. அதை நம் உடமையாய் அடைவதற்கான ஆவணமும், அதைப்பற்றிய மெய் உறுதிப்பாடும், அதன் முதற்கனிகளும் நம்மிடம் இருக்கின்றன. விலைகொடுத்து வாங்கினதினாலும், வாக்குறுதியினாலும், உள்ளத்தில் அறிவதினாலும் பரலோகம் நம்முடையதாய் இருக்கிறது. இதை நாம் காதினால் மட்டும் கேட்காமல் நம் மனதிலேயே அறிகிறோம்.

இங்கு நாம் நமக்குள்வற்றை இழந்தாலும் யோர்தானின் அக்கரையில் நமக்கு இருக்கும் சிறப்பான சுதந்தரத்தைப்பற்றிய நிச்சயம் நம் மனதைச் சமாதானம் அடையச் செய்யலாமல்லவா? ஒருவேளை செலவு செய்வதற்கான பணத்தை நாம் இழக்கலாம். ஆனால் நம் அரும்பொருள் பத்திரமாயிருக்கிறது. நம் இரட்சகர் உயிரோடு இருக்கிறார். அவர் நமக்கென்று ஆயத்தம்பண்ணின இடம் நிலைத்திருக்கிறது. ஆகையால் நாம் நிழல்களை இழந்து விட்டாலும் நம் சுதந்திரம் நிலைத்து இருக்கிறது. நமக்காக சிறப்பான நாடும், சிறப்பான வாக்குறுதியும் இருக்கின்றன. சிறப்பான உடன்படிக்கையினால் இவையெல்லாம் நம்முடையவை ஆகின்றன. ஆகையால் நாம் மகிழ்ச்சி உள்ளவர்களாய் ஆண்டவரை நோக்கி, நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தை துதிப்பேன் என்று சொல்வோமாக.

# 03 மார்ச்

1. புறம்பே தள்ளப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சி
2. இரகசியமாகத் தருமம் செய்தல்
3. அழிவுக்கு ஆளாக விடப்படவில்லை
4. கடவுளைக் கனம் பண்ணு
5. வீட்டின்மேல் ஆசீர்வாதங்கள்
6. திக்கற்றவர்களின் ஆதரவாளர்கள்
7. கட்டுகளிலிருந்து விடுதலை
8. நம் பொருட்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்
9. சமாதானத்துக்காக விண்ணப்பம்
10. ஒளியில் நட
11. யாருடைய போர் ?
12. மகிழ்சியோடு புறப்பட்டுப் போதல்
13. உன் இளமையை அசட்டைபண்ணாதே
14. தெளிவான ஆறுதல்
15. கடவுள் ஒரு புகலிடம்
16. பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டு
17. அஞ்சுவதற்கு அச்சம் கொள்ளுதல்
18. செம்மையானவர்களாக நிலைத்திருங்கள்
19. மகிமை அடைவதற்கு தகுதி உள்ளவர்கள்
20. பரம முன்னேற்பாடு
21. இடறுதலைத் தவிருங்கள்
22. தாழ்மை உள்ளவர்களுக்குக் கிருபை
23. நம்பக்கூடிய வழிகாட்டி
24. ஸ்திரப்படுத்தி, காத்துக்கொள்ளுவார்
25. வலுவூட்டும் தூக்கம்
26. ஏழைகளைப் பராமரித்தல்
27. தேவனிடத்தில் சேருதல்
28. நல்வழி காட்டுதல்

29. அஞ்சாத நம்பிக்கை
30. விண்ணப்பம், ஸ்தோத்திரம், துதி
31. மனஞ் சோராமை

# 1. புறம்பே தள்ளப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சி

கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள். என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர் கர்த்தர் மகிமைப்படுவராக என்கிறார்களே. அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி காணப்படுவார். அவர்களோ வெட்கப்படுவார்கள் (ஏசா.66:5).

வாக்குறுதிகளை விளக்கும் இச் சிறு நூலை வாசிப்பவர்களில் ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் மேற்கூறிய வாக்கியம் பொருந்துவதாகும். அந்த ஒருவரையும் ஆண்டவர் மேற்கூறிய வார்த்தையினால் மகிழ்விக்கிறார். வாழும் சமூகத்திலிருந்து தவறாகப் புறம்பே தள்ளப்பட்டுள்ளவர்களுக்காக நாம் வேண்டுதல் செய்வோமாக. அவர்கள் மகிழ்ச்சியடைய ஆண்டவர் அவர்களுக்கு காணப்படுவாராக!

ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு நடுங்கும் கருணை நிறைந்த மக்களுக்கே இந்த வசனம் பொருந்தும். அவர்கள் மெய்ப்பற்றும் தூய உள்ளமும் கொண்டவர்களாய் இருந்தபடியால் மற்றவர்களால் வெறுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டார்கள். மேலும் சமயத்தின் பேராலும் கடவுளை மகிமைப்படுத்தும் தன் பேராலும் அவர்கள் இவ்விதம் புறக்கணிக்கப்பட்டது அவர்களுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. கடவுளின் பெயரால் பிசாசுக்கு ஆதரவாக எவ்வளவு செய்யப்படுகிறது என்று பாருங்கள். இவ்விதம் பழைய சர்ப்பம் கடித்து, விஷத்தையும் உள்ளே செலுத்துவதற்கு யேகோவாவின் பெயரைப் பயன்படுத்துவது அதன் மதிநுட்பத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

அவ்விதம் துன்புறுத்தப்படும் ஆண்டவரின் மக்களுக்கு அவர் காணப்படுவது நம்பிக்கை ஊட்டுவதாகும். அவர் தாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவராகவும் அவர்கள் ஆதரவாளராகவும் காணப்படுகிறார். இவ்விதம் அவர் செயல்படும்போது கடவுளுக்குப் பயப்படுகிறவர்களுக்கு விடுதலையும் அவர்களைத் துன்புறுத்துபவர்களுக்கு அவமானமும் ஏற்படுகிறது. ஆண்டவரே! மனிதர் ஏளனம் செய்கிறவர்களுக்கு இந்த வாக்குறுதியை நிறைவேற்றும்.

# 2. இரகசியமாகத் தருமம் செய்தல்

நீயோ தர்மஞ் செய்யும்போது, உன் தர்மம் அந்தரமங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரக்கத்தில் பார்க்கிற உன் பிதாதாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத்.6:3-4).

மனிதர் காணும்படியாக ஏழைகளுக்குக் கொடுப்பவர்களுக்கு ஒரு வாக்குறுதியும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் பலனை உடனே அடைந்துவிடுகிறார்கள். அவர்கள் இரண்டுமுறை பலனை எதிர்பார்க்கமுடியாது. நாம் அந்தரங்கமாகத் தருமம் செய்வோமாக. நமக்குங்கூட அது அந்தரங்கமாய் இருப்பதாக. நீங்கள் ஒழுங்காகச் சாப்பிடுவதை எவ்விதம் கணக்கு வைக்காமல் இருக்கிறீர்களோ அவ்விதம் ஏழைகளுக்கு உதவி செய்வதையும் கணக்கு வைக்காமல் இருக்குமாறு இயல்பான முறையில் அடிக்கடி ஏராளமாகத் தருமம் செய்யுங்கள். நான் எவ்வளவு உதாரகுணமுள்ளவனாய் இருக்கிறேன் என்று நீங்களே கூறிக்கொள்ளாமல் தருமம் செய்யுங்கள். அவ்விதம் கூறினால் உங்களுக்கே பலன் அளித்துக்கொள்ளுகிறீர்கள். பலன் அளிப்பதைக் கடவுளுக்கே விட்டுவிடுங்கள். அவர் எல்லாவற்றையும் பார்க்கவும், கணக்கு வைக்கவும், பலனளிக்கவும்

தவறுவதில்லை. தன் இரக்க குணத்தினால் இரகசியமாக சுறு சுறுப்பாய் இருக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன். யாரும் அறியாமல் செய்யும் அன்புச் செயல்களினால் அவன் சிறப்பான மகிழ்ச்சியைக் கண்டு கொள்ளுகிறான். இது இரகசியமாக உண்ணப்படும் ரொட்டியைப்போன்றது. இது அரசர்களின் பெருவிருந்தைவிட ருசிமிக்கது. இன்று இவ்வித இன்பப் பெருவாழ்வில் நான் எவ்விதம் ஈடுபடலாம்? ஆன்மா இளகி, இரக்கம் காட்டி நான் விருந்தில் ஈடுபடுவேன்.

இரகசியமாகத் தருமம் செய்கிறவனுக்கு இப்போதும் இதற்குப் பின்னும் ஆண்டவரே பலனளிப்பார். இது அவர் குறித்த காலத்தில் குறித்த விதமாய் இருக்கும். இந்த வாக்குறுதி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதை நித்திய வாழ்விலேயே அனுபவிப்போம்.

## 3. அழிவுக்கு ஆளாக விடப்படவில்லை

என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர். உம்முடைய பரிசுத்தவானை அழிவைக்காணவொட்டீர் (சங்.16:10).

இவ் வார்த்தைகள் இயேசு கிறிஸ்துவினால் தான் முழுவதுமாய் நிறைவேறுகின்றன. அவரில் இருப்பவர்களுக்கெல்லாம் ஒரு மாறுபாடோடு பொருந்துகிறது. நம் ஆன்மா பாதாளத்தில் விடப்படாது. நம்முடைய உடல் அழிவுக்கேதுவானதாய் இருப்பினும் உயிரோடு எழுப்பப்படும். இதை வாசிப்பவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் இதன் திட்டவட்டமான பொருத்தத்தை அல்லாமல் பொதுக் கருத்தையே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நரகத்தின் படுகுழியில் தள்ளப்பட்டது போல நாம் ஆவியில் மிகவும் சோர்வடைந்து விடலாம். ஆனால் நாம் அந்த நிலையிலேயே இருந்துவிட மாட்டோம். இதயத்திலும்,

ஆன்மாவிலும் உணர்வு நிலையிலும் மரணத்தின் வாயிலில் இருப்பது போன்ற உணர்ச்சி நமக்கு ஏற்படலாம். ஆனால் நாம் அந்நிலையிலேயே இருந்துவிட மாட்டோம். நாம் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் இழந்து மரணமடைவது போன்ற நிலையைக் கூட அடையமாட்டோம். நாம் மிகவும் தாழ்த்தப்பட்டாலும் ஆண்டவர் அனுமதிக்கும் வரைதான் போவோம். சிறிது காலம் அவநம்பிக்கையினால் அவதியுறுவோம். ஆனால் அழிவடைவதில்லை. இரவில் இருள் அதிகமாய் இருக்கையிலும் நம்பிக்கையின் நட்சத்திரம் ஒளிவீசுகிறது. ஆண்டவர் நம்மை மறந்து, நம்மை எதிரியின் கையில் ஒப்படைப்பதில்லை. நாம் நம்பிக்கையின் நிச்சயத்தில் இளைப்பாறலாம். ஏனெனில் என்றும் கிருபையாயிருப்பவரோடு நாம் ஈடுபடுகிறோம். நாம் நிச்சயமாக மரணத்திலிருந்தும் இருளிலிருந்தும் மனக்கசப்பிலிருந்தும் விடுபட்டு வாழ்வுக்கும், ஒளிக்கும், விடுதலைக்கும் உயர்வோம்.

# 4. கடவுளைக் கனம் பண்ணு

*என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் (1.சாமு.2:30).*

கடவுளைக் கனம் பண்ணுவதையே என் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகவும் என் நடத்தையின் விதியாகவும் கொண்டுள்ளேனா? அப்படியானால் அவர் என்னைக் கனம் பண்ணுவார். ஒருவேளை சிறிதுகாலம் மக்கள் என்னைக் கனம் பண்ண மாட்டார்கள். ஆனால் கடவுளே முடிவான பயனுடைய விதமாய் நான் கனம் அடையச் செய்வார். மனச்சாட்சியின்படி நடப்பதனால் அவமானம் அடைவதற்குக் கூட ஆயத்தமாயிருப்பதே கனம் அடைவதற்கு நிச்சயமான வழி என்று இறுதியில் அறிவோம்.

ஏலி தன் குடும்பத்தைச் சரியான வழியில் நடத்தி, ஆண்டவரைக் கனம் பண்ணவில்லை. அவர் குமாரர் தங்கள்

புனிதமான பணிக்கேற்றவாறு நடந்து, ஆண்டவரைக் கனம் பண்ணவில்லை. பிரதான ஆசாரியராயிருக்கும் பொறுப்பை அவர் குடும்பத்திலிருந்து எடுத்து விட்டார். இளமையான சாமுவேலை நாட்டின் தலைவராக்கி, ஏலியின் மரபு வரிசையில் யாரும் அப்பதவியை வகிக்காதவாறு செய்து விட்டார். என் குடும்பத்தினர் கனம் அடைய வேண்டுமானால் நான் ஆண்டவரை எல்லாவற்றிலும் கனம் பண்ண வேண்டும். ஒழுக்கக் கேடானவர்கள் உலகப் பிரகாரமாகப் புகழ் அடைவதை ஆண்டவர் தடுக்காமல் விடலாம். ஆனால் அவரே அளிக்கும் மேன்மையையும், புகழ், கனம், நித்திய வாழ்வையும் அவருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவரைக் கனம் பண்ணக் கவனமாயிருப்பவர்களுக்கே ஒதுக்கி வைத்துள்ளார்.

இன்று ஆண்டவரைக் கனம் பண்ண நான் என்ன செய்யலாம்? அவரைப் பற்றிச் சாட்சி கூறுவதன் மூலமும், செயல் முறையில் அவருக்குக் கீழ்ப்படிதலின் மூலமும் அவர் புகழை உயர்த்துவேன். என் பொருளினாலும் அவருக்கென்று சிறப்பாக ஏதாவது ஒருவிதத்தில் சேவை செய்வதினாலும் அவரைக் கனம் பண்ணுவேன். அவர் என்னைக் கனம் பண்ணுவார் என்னும் நிச்சயம் எனக்கு இருப்பதால் அமர்ந்திருந்து, நான் எவ்விதத்தில் அவரைக் கனம் பண்ணலாம் என்று சிந்திப்பேனாக!

# 5. வீட்டின்மேல் ஆசீர்வாதங்கள்

*நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையே அவர் ஆசீர்வதிக்கிறார் (நீதி.3:33).*

நீதிமான் கர்த்தருக்குப் பயப்படுகிறான். ஆகையால் அவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் வீட்டின் கூரை பாதுகாப்பு அளிப்பது போல் கடவுளும் பாதுகாப்பு அளிக்கிறார். அவன் வீடு அன்பின் இருப்பிடமாகவும், திருப்பணிக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளியாகவும், பரலோகத்தின் ஒளிவீசும் இடமாகவும்

*இருக்கின்றது. அங்கு ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் நாமம் பயபக்தியோடு போற்றப்படுகிறது. ஆகையால் ஆண்டவர் அந்த வாசஸ்தலத்தை ஆசீர்வதிக்கிறார். அது ஒரு சிறு குடிசையாக அல்லது பெரிய மாளிகையாக இருக்கலாம். ஆனாலும் அதன் அளவிற்காக அல்லாமல் அதில் வாசம் செய்பவர்களின் பண்புக்காக ஆண்டவர் அதை ஆசீர்வதிக்கிறார்.*

*எந்த வீட்டின் தலைவனும் தலைவியும் கடவுளுக்குப் பயந்தவர்களாய் இருக்கிறார்களோ அந்த வீடு அதிகமாய் ஆசீர்வதிக்கப்படும். ஒரு மகனோ, மகளோ, வேலைக்காரனோ கூட குடும்பத்தினர் மேல் ஆசீர்வாதம் கொண்டு வரலாம். எந்த ஒரு குடும்பத்தில் ஒருவரோ அல்லது இருவரோ ஆண்டவருடைய மதிப்பின்படி நீதிமான்களாய் இருக்கிறார்களோ அந்தக் குடும்பத்தைப் பொதுவாக ஆண்டவர் பாதுகாத்து, வளமையுறச் செய்து, அதற்குத் தேவையானவற்றை அளிக்கிறார். ஏனெனில் அவர் கிருபையினாலேயே அவர்கள் நீதிமான்களாய் இருக்கிறார்கள். அன்பானவர்களே, பெத்தானியாவில் இருந்த சகோதரிகளைப் போல் நாமும் இயேசுவை நிலையான விருந்தினராய் வைத்திருக்கலாம். அப்போது நாம் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்போம்.*

*நம் வேலையிலும், மற்றவர்களை நியாயந்தீர்ப்பதிலும், அண்டை அயலாரோடு பழகும் விதத்திலும், நம் சிறப்பியல்பிலும், எல்லாவற்றிலும் நாம் நீதிமான்களாய் இருப்பதைக் குறித்து கவனமாய் இருப்போமாக. நீதியுள்ள கடவுள் அநீதியான நடவடிக்கைகளை ஆசீர்வதிக்கமாட்டார்.*

## 6. திக்கற்றவர்களின் ஆதரவாளர்கள்

*திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம் பெறுகிறான் (ஓசி.14:3).*

நாம் வேறு யாரையும் எதையும் நம்பாமல் ஆண்டவரை மட்டும் நம்புவதற்கு மேற்கூறிய வசனம் சிறந்த தூண்டுகோல் ஆகும். ஒரு பிள்ளைக்கு இயற்கையாக இருக்க வேண்டிய பாதுகாப்பாளர் இல்லாது போனால் கடவுள் அதன் காப்பாளர் ஆகிறார். அதே விதமாக ஒரு மனிதன் அவனுக்கு ஆதரவாயிருந்த எல்லாவற்றையும் இழந்து நிற்கும் நிலையில் அவன் உயிருள்ள கடவுள் மேல் சார்ந்து கொண்டால் அவரில் அவனுக்குத் தேவையானவற்றையெல்லாம் பெறுவதை அறிவான். கடவுள் பரம தகப்பன் என்று திக்கற்றவர்கள் நம்பினால் அவர் அவர்களுக்குத் தேவையானவற்றிற்கெல்லாம் ஏற்பாடு செய்வார். கடவுளின் கரத்தை மட்டுமே பற்றிக் கொள்வது என்றால் என்ன என்பதை இதை எழுதியவர் நன்கு அறிவார். காணமுடியாதவராயிருந்தும் நித்திய காலமாய் உயிரோடு இருக்கும் கடவுளின் மேல் நம்பிக்கை வைத்தலின் சிறப்பிற்கு உண்மை நிகழ்ச்சிகளினால் சான்றுறுதி கூறவும், அது எவ்விதம் பயனுள்ளது என்று நிச்சயமாய்க் கூறவும் அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

தகப்பன் பராமரிப்பில் இருக்கும் சிறுவர்கள் கூட சில வேளைகளில் நல்ல நிலையிலிருப்பதில்லை. ஆனால் திக்கற்றவர்களாய் கடவுளோடிருப்பவர்கள் பல் வகை நலம் பெற்றவர்கள் ஆவார்கள். உலகில் கடவுள் இல்லாமல் பல காப்பாளர்கள் இருப்பதை விட எந்த நண்பரும் இல்லாமல் கடவுளை மட்டும் நம்பியிருப்பது மேல். பெற்றோர் இல்லாமல் இருப்பது துன்பம் தருவதாகும் ஆனால் ஆண்டவர் இரக்கத்தின் ஊற்றாய் இருக்கும் வரை நாம் திக்கற்றவர்கள் ஆவதில்லை. திக்கற்ற பிள்ளைகளே மேற்கூறிய வசனத்தின்படி இன்று இரக்கத்திற்காக வேண்டிக் கொள்ளுங்கள். அதே விதமாக ஆதரவாளர்களை இழந்தவர்களே நீங்களும் செய்யுங்கள். ஆண்டவரே, உம்மில் நான் இரக்கத்தைக் கண்டடையட்டும். எவ்வளவுக்கு அதிகமாக நான் திக்கற்றவனாகவும்

ஆதரவற்றவனாகவும் இருக்கிறேனோ அவ்வளவுக்கு அதிகமான நம்பிக்கையோடு உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன்.

# 7. கட்டுகளிலிருந்து விடுதலை

கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகின்றார் (சங்.146:7).

கடந்த நாட்களில் அவர் அவ்விதம் செய்திருக்கிறார். யோசேப்பு, இஸ்ரவேலர், மனாசே, எரேமியா, பேதுரு இவர்களையும் இன்னும் பலரையும் நினைத்துப் பாருங்கள். அவர் இப்போதும் இவ்விதம் செய்யக் கூடியவர். அவர் ஒரு வார்த்தையினால் பித்தளையினாலான கம்பிகளை முறிக்கிறார். ஒரு பார்வையினால் இரும்பு விலங்குகளை உடைத்து விடுகிறார். இன்றும் அவ்விதமே செய்து வருகிறார். ஆயிரக்கணக்காண இடங்களில் மனக்கலக்கம் உள்ளவர்கள் ஒளியினிடத்திற்கும், விடுதலைக்கும் வருகிறார்கள். இப்போதும் இயேசு கட்டுண்டவர்களுக்கு விடுதலையையே அறிவிக்கின்றார். இந்த விநாடியிலும் பூட்டப்பட்டிருந்த கதவுகள் திறக்கப்படுகின்றன. கால் விலங்குகள் அறுந்து விடுகின்றன.

அன்பான நண்பனே நீ இப்போது துக்கத்தினாலும், தயக்கத்தினாலும், அச்சத்தினாலும் துயருற்றிருந்தால் உனக்கு விடுதலை அளிப்பதில் அவர் ஆனந்தம் அடைவார். உனக்கு விடுதலை அளிப்பது இயேசுவுக்கு மகிழ்ச்சி அளிக்கும். விடுவிக்கப்படுவதினால் நீ எவ்வளவு மகிழ்ச்சி அடைவாயோ அவ்வளவு மகிழ்ச்சியை அவரும் அடைவார். இரும்புத் தளையை நீ முறிக்க வேண்டியதில்லை. கற்சுவர்களினாலும் இரும்பு விலங்குகளினாலும் நீ விடுதலையற்றவனாய் இருந்தால் அவர் விடுதலை அளிப்பார். அவரை நம்பு அதுவே போதும். அவர் உன்னை விடுவிப்பார். நீ இப்போதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிலும், வரம்புகளும் கட்டுப்பாடுகளுமற்ற அவர்

கிருபையிலும் இரட்சிப்பதற்கு அவருக்குள்ள முழு ஆற்றலிலும் நம்பிக்கை வைத்தால் சாத்தான் உனக்கு விலங்கிட முடியாது. பாவம் உன்னைக் கட்டுப்படுத்த முடியாது. மனமுறிவு கூட உன்னை இறுகப் பற்ற முடியாது.

எதிரியை எதிர்த்து நில்லுங்கள். யேகோவா கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார் என்பதே உங்கள் கீதமாயிருக்கட்டும்.

# 8. நம் பொருட்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்

உன் கூடையும் மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் (உபா.25:8).

கடவுளுக்குக் கீழ்ப்படிதல் நம் உழைப்பின் பயன்கள் எல்லாவற்றின் மேலும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குகிறது. கூடைகளில் பழவகைகளைப்போல் அன்றே பறித்து உபயோகிக்கப்படுகிறவைகள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். பின்னால் உபயோகப்படுத்துகிறதற்காகச் சேமித்து வைக்கப்படுகிறவைகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். ஒரு வேளை நம்மிடம் ஒரு கூடையில் வைக்கும் அளவே பொருட்கள் இருக்கலாம். ஒருவேளை காலையில் வேலைக்குப் போகும்போது சாப்பிட்டு விட்டுப் போக சிறிதளவு உணவும், இரவில் வேலையிலிருந்து வந்ததும் சாப்பிடத் தேவைக்குப் பற்றாத அளவு உணவுமே நம் கூடையில் இருக்கலாம். இது நல்லது. ஏனெனில் அந்தக் கூடையும் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்னும் வாக்குறுதி நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் அந்த நாளுக்குத் தேவையான உணவையே பெறக்கூடிய நிலைமையில் நாம் இருந்தால் இஸ்ரவேலரைப் போல் செல்வ வள நிலையில்

*இருப்போம்: ஏனெனில் ஆண்டவர் தமக்குப் பிரியமான இஸ்ரவேல் மக்களுக்கு உணவு அளித்தபோது அந்தந்த நாளுக்குத் தேவையான மன்னாவையே அளித்தார். அதற்கு மேல் அவர்களுக்குத் தேவையாய் இருந்தது என்ன? அதற்கு மேல் உனக்குத் தேவையாய் இருப்பது என்ன?*

*ஆனால் பொருட்களைச் சேமித்து வைக்கும் கிடங்கு நமக்கு இருக்குமேயானால் இன்னும் எவ்வளவு அதிகமாக ஆண்டவர் அதை ஆசீர்வதிக்கவேண்டியது அவசியமாயிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். பொருட்களைப் பெறுவதில் கவனம் தேவை. அவற்றைக் கையாளுவதில் கவனம் தேவை. அவற்றை உபயோகிப்பதில் கவனம் தேவை. ஆகவே ஆண்டவர் அவற்றை ஆசீர்வதிக்காவிட்டால் அவை, நம் கடவுள்களாகி, நம் கவலைகள் நம்மை ஒன்றுமற்றவர்கள் ஆக்கும் வரை நம் இதயத்தை அரித்தெடுத்து விடும்.*

*ஆண்டவரே எங்கள் பொருட்களை ஆசீர்வதியும். அவற்றை உம் மகிமைக்கென்று பயன்படுத்த ஆசீர்வதியும். நாங்கள் உலகப் பிரகாரமான பொருட்களுக்கு அவற்றிற்குத் தகுந்த மதிப்பையே அளிக்கத் துணைபுரியும். நாங்கள் சேமித்து வைப்பவை ஒருநாளும் எங்கள் ஆத்துமத்தை ஆதாயப்படுத்துவதற்கு இடர் உண்டாக்காமல் இருக்கட்டுமாக!*

# ***9. சமாதானத்துக்காக விண்ணப்பம்***

*நான் உங்களைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள். அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும் (எரேமி.29:7).*

*இந்த வசனத்தில் அடங்கியுள்ள தத்துவம் அண்டவரை அறியாதவர்களும் அவர் அரசுக்கு*

அப்பாற்பட்டவர்களுமானவர்களுக்கும் குறிப்பாச் சொல்வது என்னவெனில், நாம் குடியிருக்கும் சமூகத்தினர் இடையே சமாதானமும் வளமையும் வளர்வதற்கு நாம் ஆவல் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதே. சிறப்பாக நம் நாட்டினரும் நகரத்தினரும் ஆசீர்வதிக்கப்பட நாம் இடைவிடாது ஆண்டவரிடம் மன்றாடவேண்டும். அவரவர் நாட்டிற்காகவும் மற்ற நாடுகளுக்காகவும் அக்கறையாக வேண்டிக்கொள்வது ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏற்றது.

நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவரின் வரமாகிய சமாதானம் நிலைத்திருக்கவேண்டுமென்று ஆர்வத்துடன் வேண்டிக்கொள்வோமாக. சச்சரவினால் நம் தெருக்களில் இரத்தம் சிந்தப்பட்டாலும், வெளிநாடுகளில் நடைபெறும் யுத்தத்தில் வீரம் மிக்க நம் போர்வீரர் கொல்லப்பட்டாலும் நாம் யாவரும் அப்போரைக் குறித்துப் புலம்பவேண்டியது அவசியம். ஆகவே நாம் சமாதானத்துக்காக வேண்டிக்கொண்டு, நம் நாட்டிலுள்ள பல பிரிவினரும் வெளிநாடுகளிலுள்ள பல இனத்தினரும் நட்புறவின் தளைகளால் பிணைக்கப்படுவதற்கான தத்துவங்கள் வளர ஊக்கமுடன் உழைப்போமாக.

நம் நாட்டினர் சமாதானமாயிருக்கையில் நமக்கும் சமாதானம் வாக்களிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் விரும்பத்தக்கது. ஏனெனில் நாம் நம் குடும்பத்தினரைக் கடவுளுக்குப் பயன்படுகிறவர்களாக வளர்க்கலாம். நற்செய்தியையும் எந்தத் தடையும் இடையூறும் இல்லாமல் போதிக்கலாம். இன்றைய தினத்திலே நம் நாட்டினரின் பாவங்களை அறிக்கையிட்டு, ஆண்டவரின் மன்னிப்பையும் ஆசீர்வாதத்தையும் இயேசுவின்மூலமாய் கேட்டு வேண்டிக்கொள்வோமாக.

# 10. ஒளியில் நட

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் (யோ.12:46).

நடு இரவில் இருப்பதுபோல் இந்த உலகம் இருட்டில் இருக்கிறது. நம்பிக்கையினால் நாம் வெளிச்சம் உள்ளவர்களாய் இருக்கவும், மற்ற மக்களைச் சூழ்ந்திருக்கும் இருளில் நாம் இல்லாதிருக்கவும் இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்.

எவனும் என்பது பரந்தகன்ற சொல். இது உங்களையும் என்னையும் குறிக்கிறது. நாம் இயேசுவை நம்பினால் மரண நிழலில் இருக்கமாட்டோம். ஒருநாளும் முடிவடையாத வெப்பம் பொருந்திய வெளிச்சத்தில் இருப்போம். இபபோதே நாம் அந்த வெளிச்சத்துக்கு வராமல் இருப்பது ஏன்?

சில வேளைகளில் மேகம் நம்மேல் நிழலிடலாம். ஆனால் நாம் இயேசுவை நம்பினால் நாம் இருளில் நிலைத்திருப்பதில்லை. நமக்குப் பகலில் இருப்பதுபோன்ற வெளிச்சம் அளிக்க அவர் வந்தார். அவர் வந்தது வீணாய்ப் போய்விடலாமா? நமக்கு நம்பிக்கை இருந்தால் சூரியவெளிச்சத்தைப் பெறும் சிறப்புரிமை உள்ளவர்கள் ஆவோம். அவ் வெளிச்சத்தைப் பெற்று அனுபவிப்போமாக. இயற்கையான ஒழுக்கச் சீர்கேடும், அறியாமையும், ஐயுறவும், மனக்கசப்பும், பாவமும், திகிலுமான இரவிலிருந்து நம்மை விடுவிக்கவே இயேசு வந்தார். சூரியன் உதித்தால் வெளிச்சமும் வெப்பமும் அளிக்காமற் போவதில்லை. அதைப்போலவே அவரும் வீணாக வரவில்லை என்பதை விசுவாசிகள் எல்லாரும் அறிவார்கள்.

அன்பான சகோதரனே, உன் சோர்வை உதறித் தள்ளு. இருளில் நிலைத்திராமல் வெளிச்சத்தில் நிலைத்திரு. உன் நம்பிக்கை, மகிழ்சி, பரலோகம் எல்லாம் இயேசுவில்தான். அவரை நோக்கிப் பார். அவரையே நோக்கிப் பார். சூரிய உதயத்தின்போது பறவைகளும் கிருபாசனத்தின்முன்

தேவதூதர்களும் மகிழ்சி அடைவதுபோன்ற மகிழ்சியை நீயும் பெறுவாய்.

## 11. யாருடைய போர் ?

கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும். யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில்ஒப்புக்கொடுப்பார் (1.சாமு.17:47).

யுத்தம் கர்த்தருடையது என்றும், நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்றும், கடவுளின்ஆற்றலைச் சிறந்தவிதமாக வெளிப்படுத்தும் விதத்தில் வெற்றி கிடைக்கும் என்றும் நிச்சயமாய் நம்புவது அவசியம். எல்லா மக்களும் கடவுளை மறந்துவிடுகிறார்கள். இஸ்ரவேலரின் ஜனக்கூட்டம் கூட கடவுளை மறந்துவிடுகிறது. மக்களின் ஆற்றலும் உதவியும் இல்லாமலே அவர் திட்டம்நிறைவேற்றப்படும் என்பதை வெளிப்படுத்தும் அரிய நிகழ்ச்சி நடைபெறும்போது அந்த வாய்ப்பை நன்முறையில் பயன்படுத்துவது அவசியம். இஸ்ரவேலர்கூட பட்டயத்தையும் ஈட்டியையுமே அதிகம் நம்புகிறார்கள். தாவீதின் கையில் பட்டயம் இல்லாவிட்டாலும் அயலாரின் சேனையைக்கூட தம்கடவுள் முறியடித்துவிடக்கூடும் என்று அவர் அறிந்தது மனநிறைவு அளிக்கிறதாகும்.

உண்மைக்காகவும் நீதிக்காகவும் நாம் போராடும்போது நமக்குத் தனித் திறமை அல்லது செல்வம் அல்லது நாம் காணக்கூடிய ஆற்றல்கிடைக்கும்வரை காத்திருக்கவேண்டியது அவசியமில்லை.ஓடையருகே உள்ள கூழாங்கற்களையும் நம் கவணையும் எடுத்துக்கொண்டு எதிரியைச் சந்திக்க ஓடுவோமாக. அது நம் யுத்தமாய் இருந்தால் நாம் துணிவு உள்ளவர்களாய் இருக்க முடியாது. ஆனால் நாம் இயேசுவுக்காக அவர் வலிமையின்மேல் மட்டும் சார்ந்து போரிட்டால் நம்மை

எதிர்த்துநிற்கக்கூடியவர் யார்? தயக்கத்திற்கான அறிகுறி ஏதும் இல்லாமல் வீரத்துடன் பெலிஸ்தியரை எதிர்ப்போமாக. சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கையில் நமக்கு எதிராக நிற்கக்கூடியவர் யார்?

# 12. மகிழ்சியோடு புறப்பட்டுப் போதல்

செபுலோனைக் குறித்து: செபுலோனே, நீவெளியே புறப்பட்டுப் போகையிலும்....... சந்தோஷமாயிரு (உபா.33:18).

கோத்திரத்தாரின் ஆசீர்வாதங்கள் நம்முடையவை ஆகும். ஏனென்றால் கடவுளை ஆவியில் தொழுது கொண்டு, மாம்சத்தின்மேல் எவ்வித நம்பிக்கையும் இல்லாத இஸ்ரவேலர் நாம். செபுலோன் வெளியே புறப்பட்டுப்போகையில் யோகோவா அவனை ஆசீர்வதிப்பதால் அவன் மகிழ்ச்சியடையவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வாழ்த்தில்நமக்கான வாக்குறுதி ஒன்றும் மறைந்துள்ளது. நாம் வெளியே புறப்பட்டுப் போகும்போது மகிழ்ச்சி தரும் சந்தர்ப்பங்களை எதிர்நோக்குவோமாக.

நாம் பயணம் செய்யும்போது கடவுளின் அருள் நம் பயணப் பாதுகாப்பாகும். நாம் பிற நாட்டில் குடியேறச் செல்லும்போதுதரையில் பயணம்செய்யும்போதும், கடலில் பயணம் செய்யும்போதும் கடவுள் நம்மோடு இருக்கிறார். நாம் நற்செய்தியை அறிவிக்கச் செல்லும் போது இயேசு இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே இருக்கிறேன் என்கிறார். நாம் ஒவ்வொரு நாளும்வேலைக்குப் போகிறோம். மகிழ்ச்சியோடு போகலாம். எனெனில் காலையிலிருந்து மாலைவரை கடவுள் நம்மோடு இருப்பார்.

வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது அன்று என்ன நேரிடுமோ என்று நம்மில் ஒருவித அச்சம் தோன்றுகிறது. ஆனால் மேலே கூறப்பட்டுள்ளஆசீர்வாதம் நம்மை உற்சாகப்படுத்தக்கூடியது. பயணத்துக்காக நம் பெட்டிகளை ஆயத்தம்செய்யும்போது இந்த வசனத்தை எழுதி நம் பெட்டிக்குள் வைக்கலாம். நம்மைப் பாட ஏவுமாறு நம் நாவிலே வைத்துக்கொள்ளலாம். கப்பலும் நங்கூரம் பாய்ச்சும்போது ஒரு பாட்டு பாடலாம். ரெயில்பெட்டிக்குள் ஏறும்போது ஒரு சங்கீதம் பாடலாம். ஆரவாரிப்பவர் கூட்டத்தோடு நாம் சேர்ந்துகொள்ளலாம். ஒவ்வொரு வினாடியும் மகிழ்ச்சி நிறைந்த இருதயத்தோடு ஆண்டவரைப் புகழ்வோமாக.

# 13. உன் இளமையை அசட்டைபண்ணாதே

*அப்பொழுது நான்: ஆ, கர்த்தராகிய ஆண்டவரே,இதோ, நான் பேச அறியேன். சிறு பிள்ளாயிருக்கிறேன் என்றேன். ஆனாலும் கர்த்தர்: நான் சிறு பிள்ளையென்று நீ சொல்லாதே. நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக என்றார் (எரேமி.1:6-7).*

எரேமியா இளமைப் பருவத்தினனாய் இருந்தான். ஆகையால் சிறப்பான ஒரு செய்தியை எடுத்துச் செல்லும் தூதுவராக ஆண்டவரால்அனுப்பப்பட்டபோது பின் வாங்கினான். அனால், அவன் நான் சிறு பிள்ளையாய் இருக்கிறேன் என்று சொன்னதை அவனை அனுப்பினவர் ஏற்றுக்கொள்ளவில்லை. கடவுளுக்காகப் பேச அவன் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தபடியால், அவன் தன்னிலே உள்ள குறைபாடுகளை நினைக்க வேண்டியதுஅவசியமில்லை. யாருக்கு என்ன செய்தியைக் கூறவேண்டும் என்பதைக்கூட அவன் நினைக்கவேண்டியதில்லை. கடவுள் அனுப்பின

*இடத்துக்குப்போய் அவர் கட்டளையிட்டவைகளையே கூறவேண்டும். இதை அவன் சுய ஆற்றலாலும் செய்ய வேண்டியதில்லை. அதற்கான ஆற்றல் அவனுக்குக்கொடுக்கப்பட வேண்டும்.*

*இதை வாசிக்கும் இளமையான சில போதகர்களும் ஆசிரியர்களும் இதே நிலையில் இருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் எவ்வளவு இளமையானவர்கள் என்பதையும் உங்கள் அறிவும் அனுபவமும் எவ்வளவ வளமற்றது என்பதையும் கடவுள் அறிவார். உங்களைஅனுப்புவதற்காக அவர் தெரிந்துகொண்டால் அந்தப் பரலோக அழைப்கைக் குறித்து நீங்கள் கூச்சப்படக்கூடாது. உங்கள் வளர்ச்சியில் கடவுள் நம் ஆற்றலை வெளிப்படுத்துவார். நீங்கள் மெத்தூசாலாவைப்போல் வயது முதிர்ந்தவராயிருந்தால் உங்கள் வயதும் அனுபவமும் உங்களுக்கு எவ்வளவுஉதவி செய்யக்கூடும் என்று நினைக்கிறீர்கள்? நீங்கள் சாலோமோனைப் போல் ஞானமுள்ளவராயிருந்தால் அவரைப்போல் தன்னிச்சை உள்ளவர்களாய் இருப்பீர்கள். உங்களுக்குக் கூறப்பட்ட செய்தியையே சொல்லுங்கள். அப்பொழுது ஞானம் உள்ளவர்களாய் இருப்பீர்கள். உங்களக்குக்கட்டளையிடப்பட்டபடியே செய்யுங்கள். அப்பொழுது பகுத்தறிவு உள்ளவர்களாய் இருப்பீர்கள்.*

# ***14. தெளிவான ஆறுதல்***

*ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல நான் உங்களைத் தேற்றுவேன் (ஏசா.66:13).*

*ஒரு தாய் எவ்வளவு கனிவாகத் தேற்றுவாள் என்று நினைத்துப் பாருங்கள். தன் குழந்தையின் துக்கத்தில் அவள் எவ்விதம் பங்கு பெறுகிறாள் என்றுகவனியுங்கள். குழந்தையைத் தன் மார்போடு அணைத்து, அதன் துக்கத்தையெல்லாம் தன் இதயத்திற்கு மாற்ற முயற்சி செய்கிறாள். நம் தாயிடம்*

எல்லாவற்றையும் சொல்லலாம். வேறு எவரும் தேற்றக்கூடாத விதமாய் அவள் தேற்றுவாள். ஆறுதல் அளிப்பவர்கள் எல்லாரிலும் குழந்தை தன்தாயையே அதிகம் நேசிக்கிறாள். இது உண்மையென்று பெரியவர்களும் கண்டு அறிந்திருக்கிறார்கள்.

தாயைப் போலவே யேகோவாவும் அருள் பாலிக்கிறவராயிருக்கிறாரா? இதுவே அவரின் மேம்பாடு ஆகும். அவர் தகப்பனாயிருக்கிறார் என்பதை மனமார உணர்கிறோம். அவர்தாயைப்போலகூட இருப்பாரா? இருப்பார் என்பது நம்மை அவரோடு தோழமை கொள்ளவும், அவரில் தங்குதடையின்றி உறுதியான நம்பிக்கை வைக்கவும், அவரில் மனஅமைதி பெறவும் அழைக்கிறது அல்லவா? கடவுளே தேற்றரவாளன் ஆகும்போது எந்தக் கடுந்துயரமும் அதிக காலம்நிலைத்திருக்காது. அழுகையும் பெரு மூச்சுமே முதலில் வெளிப்பட்டாலும் நம் துயரின் காரணத்தை அவரிடம் எடுத்துச்சொல்வோமாக. நம் கண்ணீரைக் கண்டு அவர் நம்மை இகழமாட்டார். நம் தாய் அவ்விதம் செய்வதில்லையே! அவளைப்போல அவரும் நம் வலுக்குறைவை எண்ணிப் பார்ப்பார். நம்தாயைவிட நிச்சயமானதும் இடையூரற்றதுமான விதத்தில் நம் குற்றங்குறைகளை ஒதுக்கிவைத்துவிடுவார். நாம் தனியாக நம் துக்கத்தைச் சுமக்கவேண்டியதில்லை. அவ்விதம் செய்வது இவ்வளவு தயவும் இரக்கமும் உள்ளவருக்குக் காட்டும் இரக்கமற்ற செயலாகும். ஆகையால் அன்பே உருவான நம்கடவுளோடு ஒவ்வொரு நாளையும் தொடங்கலாம். தாய்மார் தங்கள் பிள்ளைகளைக் குறித்து ஒருபோதும் சலிப்படையாததுபோல் அவரும் இருப்பார். ஆகையால் நம் நாள் முடியும்வரை அவரோடு தைரியமாக இருக்கலாம்.

# 15. கடவுள் ஒரு புகலிடம்

ஆகையால் நான் அவர்களைத் தூரமாகப் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந்தாலும், நான்அவர்களைத் தேசங்களிலே சிதறடித்திருந்தாலும், நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்குப் பரிசுத்த ஸ்தலமாக இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் (எசேக்.11:16).

வெளிப்படையாகக் கடவுளின் அருளை இழந்துவிட்டதுபோல காணப்பட்டாலும், நாம் அவர் அருள் துணையை இழந்துவிடவில்லை என்று அறியவேண்டும். அந்நியநாட்டிற்கு மக்களைத் துரத்திவிடும் கடவுள் அவர்களோடு அங்கேயும் இருப்பார். சொந்த நாட்டில் அவர் பரிசுத்த ஸ்தலங்களில் கடவுள் எப்படிப்பட்டவராக இருந்தாரோ அவ்விதமெல்லாம் இருப்பார். அலைந்து திரிவதற்காகெனத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே, இதைப் புரிந்துகொள்ளுங்கள்.

கடவுள் அவர் மக்களுக்கு அடைக்கலம் அளிப்பவர். எதிரிகளிடம் இருந்து தப்பி ஓடுகிறவர்களுக்குப் புகலிடம் ஆனவர். அவர்கள் ஆராதிக்கும் இடமும் அவரே. யாக்கோபு வயல் வெளியில் படுத்துறங்கி, விழித்து மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில்இருக்கிறார் என்று சொன்னபோது கடவுள் அவரோடு இருந்ததுபோல அவர் மக்களோடும் இருக்கிறார். நித்தியமானவரின் அமைதி நிறைந்த வாசஸ்தலமாகிய மகா பரிசுத்த ஸ்தலம்போல் அவர்களுக்கு அமைதி நிறைந்த பரிசுத்த ஸ்தலமாயும் இருப்பார்.

கிறிஸ்து இயேசுவில் கடவுள்கிருபையின் புகலிடம் ஆனவர். ஆண்டவராகிய இயேசுவே உடன்படிக்கைப் பெட்டி. கிறிஸ்துவாகிய நம் பரிசுத்த ஸ்தலத்தில் ஆரோனுடைய கோலும், மன்னா உள்ள கலசமும், நியாயப்பிரமாணங்களடங்கிய பலகைகளும் இருக்கின்றன. கடவுளில் நாம் பரிசுத்தமும், ஆன்மீகக் கூட்டுறவின்தனச் சிறப்பு வாய்ந்ததுமான தொழுகை

ஸ்தலத்தைக் கண்டடைகிறோம். இனியும் நமக்குத் தேவையானது என்ன? ஆண்டவரே, இந்த வாக்குறுதியை நிறைவேற்றி, எப்போதும் எங்கள் பரிசுத்த ஸ்தலமாக இரும்.

# 16. பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டு

நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள்எவைகளோ, அவைகளையே செய்யுங்கள். அப்பொழுதுசமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார் (பிலி.4:9).

பவுலைப்போல ஒருவரை முழுவதும் பின்பற்றுவது அனுகூலமாயிருக்குமேயானால் அதுஎவ்வளவு நல்லது என்று நினைத்துப்பாருங்கள். இன்றும் என்றும் அவரைப் பின்பற்றுவதற்கான அருளுக்காகவேண்டிக்கொள்ளுவோமாக.

கடவுளின் கிருபையால் பவுல் சொன்னவைகளையும் செய்தவைகளையும் நாமும் பின்பற்றினால் மேலே கூறப்பட்டுள்ள சிறப்பான வாக்குறுதிநம்முடையதாகும். சமாதானத்தை நேசிப்பவரும் அதற்குக் காரணர் ஆனவரும், அதைத் தூண்டுபவருமான கடவுள் நம்மோடிருப்பார். உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்பது இனிமையானதொரு வாழ்த்து ஆகும். சமாதானத்தின் தேவன் நம்மோடு இருப்பார் என்பது இன்னும் சிறந்ததாகும். அதுஊற்றோடு ஓடையும், சூரியனோடு அதன் கிரணங்களையும் நாம் உடையவர்களாய் இருப்பதைப் போன்றதாகும். புறம்பான சூழ்நிலை நம் அமைதியைக் குலைத்துவிடுவதாக அச்சுறுத்தினாலும், சமாதானத்தின் தேவன் நம்மோடு இருந்தால் எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தை உணர்ந்துமகிழ்வோம். சமாதானத்தின் காரணர் நம்மோடு இருந்தால் மக்கள் மனவேறுபாடு கொண்டாலும் நாம் சமாதானம்பண்ணுகிறவர்களாய் இருப்போம்.

மெய்மையின் பாதையில்தான் உண்மையான சமாதானத்தைக் கண்டடைவோம். சமாதானத்தை வளர்ப்பதாக நினைத்துக்கொண்டு நாம்நம்பிக்கையைக் கைவிட்டாலும், நீதியின் வழியைவிட்டு விலகினாலும் தவறுசெய்தவர்களாவோம். நாம் மெய்யறிவு உடையவர்களாயும் மெய்மை அறிந்தவர்களாயும் இருந்தால் முதலில் தூய்மையாயும் பின் அமைதி நாடுகிறவர்களாயும் இருக்கவேண்டும் என்பதை உணர்வோம். நாம் பவுலைப்போலவாழ்ந்தால் அந்த அப்போஸ்தலனோடு இருந்ததுபோல சமாதானத்தின் தேவன் நம்மோடு இருப்பார்.

# 17. அஞ்சுவதற்கு அச்சம் கொள்ளுதல்

நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம். உன்னைக் காக்கும்படி நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொன்னார் (எரேமி.1:8).

அச்சம் நம்மை மேற்கொண்டு, நம் துணிவை இழக்கச்செய்யும்போது, நாம் பாவத்தில் விழுந்துவிடும் ஆபத்தில் இருக்கிறோம்.இறுமாப்பு அடைவதைக் குறித்து திகில் அடையவேண்டும். அதேபோல் கோழைத்தனத்தைக் குறித்து திகில் அடைவது அவசியம். தானியேலைப்போல தைரியம் காட்டுவோம். சிறப்பு வாய்ந்த நம் படைத்தலைவருக்குச் சேவைசெய்ய துணிவுமிக்க படைவீரரே வேண்டும்.

துணிவுள்ளவர்களாய் இருப்பதற்கான காரணம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தம்மோடு இருப்பவர்களோடு கடவுள் இருக்கிறார். போராட்டத்துக்கான நேரம் வரும்போது கடவுள் ஒருபோதும் தொலைவில் இருக்கமாட்டார். எதிரிகள் அச்சுறுத்துகிறார்களா?

மரணமடையக்கூடியமனிதனுக்குப் பயப்படுவதற்கு நீங்கள் யார்? உங்கள் அமைதியை இழக்கும் நிலையில் இருக்கிறீர்களா?

நீங்கள் சேவிக்கும் கடவுள் தம் அடியாருக்கு அப்பமும் தண்ணீரும் தேடிக்கொடுப்பார். நீங்கள் அவரை நம்பமுடியாதா? அவர்கள் உங்களை எள்ளி நகையாடுகிறார்களா? இதனால் உங்கள்எலும்புகள் அல்லது இருதயம் உடைந்துபோகும் நிலையில் இருக்கிறதா? கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளுங்கள். அதுமட்டுமல்ல, அவற்றால் மகிழ்சி அடையுங்கள்.

உண்மையுள்ளவர்களையும், நீதி உள்ளவர்களையும், தூய்மை உள்ளவர்களையும்விடுவிப்பதற்காகக் கடவுள் அவர்களோடு இருக்கிறார். அவர் உங்களையும் விடுவிப்பார். தானியேல் சிங்கக்கெபியிலிருந்தும், சீரிய ஒழுக்கம் உடையவராயிருந்தும் எவ்விதம் வெளியே வந்தார்கள் என்பதை நினைத்துப்பாருங்கள். உங்கள் நிலை அவர்களைப்போல மோசமானதல்ல.அப்படியிருந்தால்கூட ஆண்டவர் உங்களைத் தாங்கி, வெற்றி வீரர் ஆக்குவார். அஞ்சுவதற்கு அச்சம் கொள்ளுங்கள். உங்கள் மோசமான எதிரி உங்களுக்குள்ளேயே இருக்கிறான். முழங்காற்படியிட்டு, உதவிக்காக வேண்டிக்கொள்ளுங்கள். பின் எழுந்து, நான் பயப்படாமல்நம்பிக்கையாயிருப்பேன் என்று சொல்லுங்கள்.

# 18. செம்மையானவர்களாக நிலைத்திருங்கள்

செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம் (நீதி.15:8).

இது ஒரு வாக்குறுதியைப் போன்றது. ஏனெனில் இது இக்காலத்தைப்பற்றிய ஒரு செய்தியைத் தெரிவிக்கிறது. இச்செய்தி எக்காலத்துக்கும் உரியது. செம்மையானவர்களின் ஜெபம் கடவுளுக்குப் பெருமகிழ்சி அளிக்கிறது. அதில் அவர் பிரியப்படுகிறார். நாம் முதலாவது செம்மையானவர்களாய் இருக்க கவனமாய் இருக்கவேண்டும். அதாவது இப்பக்கம் அல்லது

அப்பக்கம் சாயாமல் செம்மையான பாதையில் நடக்கவேண்டும். நம் நடத்தையில் கோணலாய் இருக்கக்கூடாது. தட்டுத் தளர்வற்ற நேர்மையும் வாய்மையும் உள்ளவர்களாய்ச் செம்மையானவர்களாய் இருக்கவேண்டும். நாம் சறுக்குகிறவர்களாயும், நிலைமாறுகிறவர்களாயும் இருந்தால் நாமாகவே நிலைமாறிக்கொள்ள வேண்டியதாகும். நேர்மையற்ற வழிகளில் செல்ல முயன்றால் நாம் விண்ணப்பம் செய்ய முடியாத நிலையில் இருப்பதை உணர்வோம். நாம் விண்ணப்பம் செய்வதைப்போல் பாசாங்கு செய்தால் அது பரலோகத்தை எட்டவில்லை என்பதை அறிந்துகொள்வோம்.

நாம் செய்மையான நெறியில் செயல்புரிந்து ஆண்டவர் வெளிப்படுத்தியுள்ள அவர் சித்தத்தைப் பின்பற்றுகிறோமா? அப்படியானால் நம்பிக்கையோடு அதிக ஊக்கமாய் வேண்டிக்கொள்வோமாக. நம் ஜெபம் அவருக்கு விருப்பம் என்றால் அவருக்கே மகிழ்ச்சி அளிக்கும் ஒன்றை வேண்டா வெறுப்போடு செய்யாமல் இருப்போமாக. ஜெபத்தின் இலக்கணத்தை அவர் எண்ணிப்பார்ப்பதில்லை. இவற்றில் குறையிருந்தால் ஒருவேளை மனிதர் அதை இழிவாகக் கருதலாம். ஆனால் கடவுள் தகப்பனைப்போல அவர் குழந்தைகளின் மழலையிலும் புதிதாகப் பிறந்த அவர் குமாரர் குமாரத்திகள் திக்கித் திக்கிப் பேசுவதிலும் மகிழ்சி அடைகிறார். ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் மகிழ்சி அடைவதினால் நாம் ஜெபம் செய்வதில் மகிழ்சி அடையவேண்டும் அல்லவா? நாம் செய்தி சொல்ல கிருபாசனத்தின்முன் செல்வோமாக. ஜெபம் செய்வதற்கான பல காரணங்களை ஆண்டவர் கண்டுபிடித்துள்ளார். நாம் அதற்காக அவருக்கு நன்றி சொல்லவேண்டும்.

# 19. மகிமை அடைவதற்கு தகுதி உள்ளவர்கள்

*கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார் (சங்.84:11).*

இப்போது நமக்குத் தேவையானது கிருபை. அது இலவசமாகக் கிடைக்கும் கொடைப்பொருளைவிட வேறே எது இலவசமானதாய் இருக்கமுடியும்? இன்று நாம் தாங்கிப்பிடிக்கிறதும், வலுவுட்டுகிறதும், நேர்மைப்படுத்துகிறதும், மனநிறைவு அளிப்பதுமான கிருபை பெறுவோம். இந்நிமிடம்வரை ஒவ்வொரு நாளும் அவர் கிருபை அளித்துள்ளார். அது எதிர்காலத்துக்கும் போதுமானதாகும். நமக்குக் குறைவான அளவே கிருபை கிடைத்திருக்குமேயானால் நம்மில்தான் குறை இருக்கும். ஏனெனில் ஆண்டவர் கட்டுக்குள் இறுக்கப்பட்டவருமல்ல. அவர் அளிக்க மறுத்துவிடுவாரோ என்று அஞ்சாமல் நமக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவைக் கேட்கலாம். அவர் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய கடவுள்.

அவர் ஒருவேளை பொன் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் கிருபை அருளுவார். அவர் ஒருவேளை இலாபம் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால் கிருபை அருளுவார். அவர் நிச்சயமாக நமக்குச் சோதனை அனுப்பலாம். ஆனால் அதற்கு ஏற்ற அளவு கிருபையும் அருளுவார். உழைக்கவும் தீங்கு அனுபவிக்கவும் நாம் அழைக்கப்படலாம். அந்த அழைப்போடு அதற்குத் தேவையான கிருபையும் அருளப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள வசனத்தின் மகிமையும் அருளுவார் என்று சொல்லப்பட்டுள்ளது. நமக்கு இதற்குள் மகிமை தேவையில்லை. நாம் அதற்குத் தகுதியானவர்களாயும் இல்லை.

ஆனால் தகுந்த வரிசைப்படி நாம் அதை அடைவோம். கிருபையின் அப்பத்தைப் புசித்தபின் மகிமையின் திராட்ச இரசத்தைக் குடிப்போம். கிருபை என்னும் தூய பிரகாரத்தின் வழியாக மகிமை என்னும் மகா பிரதான பிரகாரத்துக்கு நாம் செல்லவேண்டும். வசனத்தில் மகிமையும் என்று கூறப்பட்டுள்ளது நம்மை ஆனந்தக்களிப்படையச் செய்யக்கூடியது. சிறது காலமே நாம் காத்திருக்கவேண்டும். பின் நித்திய மகிமை அடைவோம்.

# 20. பரம முன்னேற்பாடு

அற்ப விசுவாசிகளே ! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? (மத்.6:30).

துணிமணிகள் மிகுந்த விலை உள்ளவையாய் இருக்கின்றன. மாற்று ஆடை எங்கிருந்தது வருமோ என்று அற்ப விசுவாசிகள் கவலைப்படுகிறார்கள். பாதரட்சைகளின் அடிப்பாகம் தேய்திருக்கிறது. புதுப் பாதரட்சைகளின் அடிப்பாகம் தேய்ந்திருக்கிறது. புதுப் பாதரட்சைகள் வாங்குவது எப்படி என்று கலங்குகிறோம். அக்கவலைக்கெல்லாம் முன்னேற்பாடாக நம் ஆண்டவர் அன்பாதரவுடன் என்ன செய்திருக்கிறார் என்று பாருங்கள். சாலோமோன் முதலாய் உடுத்திராதவிதமாகக் காட்டுப் புல்லை உடுத்துவித்துள்ளார். அப்படிப்பட்டவர் தம் சொந்த மக்களை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? நிச்சயம் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை நம் ஆடைகளில் கிழிந்துள்ள பாகங்கள் தைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நமக்கு ஆடைகள் எப்படியும் இருக்கும்.

ஏழை போதகர் ஒருவரின் உடைமைகள் மிகவும் பழமையானவையாயும் கிழிந்ததும் இருந்தன. ஆனால் அவர் ஆண்டவரின் ஊழியக்காரரானபடியால் ஆண்டவர் தமக்கான

உடைகளை அளிப்பார் என்று எதிர்பார்த்தார். இந்நூலின் ஆசிரியர் போதகரான நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்று அவர் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார். பணம் சேர்த்து அந்தப் போதகருக்கு உதவவேண்டும் என்னும் எண்ணம் அவருக்கு வரவே ஏழைப் போதகருக்குப் புது உடைகள் கிடைத்தன. இவ்விதமாக ஆண்டவருக்கென்று உழைத்தவர்களுக்குத் தேவையான உடைகளை ஆண்டவர் அளித்துள்ளதற்குப் பல எடுத்துக்காட்டுகளை நாம் அறிந்திருக்கிறோம். மனிதன் பாவஞ் செய்தபோது அவனுக்கு ஆடைகள் தேவைப்பட்டவிதமாக அவனைப் படைத்தவர், இரக்கமாக அவனுக்கு அவற்றை அளித்தார். நம் ஆதித் தாய் தந்தையர்க்கு ஆண்டவர் அளித்திருந்த ஆடைகள் அவர்கள் தங்களுக்கென உண்டுபண்ணினவைகளைவிடச் சிறந்தவைகளாய் இருந்தன.

# 21. இடறுதலைத் தவிருங்கள்

*அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய். உன் கால் இடறாது (நீதி. 3:23).*

அதாவது நாம் தூய்மையும் விவேகமுமுள்ள வழியில் நடந்தால் நாம் காப்பாற்றப்படுவோம். நெடுஞ்சாலையில் பகல் வேளையில் பயணம் செய்பவருக்கு ஓரளவு பாதுகாப்பு உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வழி உண்டு. அதாவது வாழ்க்கையில் அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான அழைப்பு, அதில் கடவுள் பயத்தோடும் பற்றோடும் நடந்தால் அவர் நம்மைத் தீமையிலிருந்து பாதுகாப்பார். நாம் எல்லா வசதிகளுடனும் நடக்காவிட்டாலும் பாதுகாப்போடு நடக்கிறவர்களாய் இருப்போம். வாலிபரைப்போல நாம் ஓடமுடியாவிட்டாலும் நல்ல மனிதரைப் போல நடக்கமுடியும்.

நமக்குப் பெரிய ஆபத்து நம்மிலேயே இருக்கிறது. நம்முடைய தளர்ந்த பாதங்கள் தடுக்கி விழக்கூடியவையாய்

இருக்கின்றன. இவ்விதம் இடறும் தன்மையை நீக்க இன்னும் அதிகமான நேர்மை உணர்வுக்காக வேண்டிக்கொள்வோமாக. சிலர் வழியில் உள்ள கல்லைப் பார்க்காதபடியால் இடறுகிறார்கள். நாம் பாவத்தை உணர்ந்து, அதற்குத் தப்பிச் செல்வதற்குக் கடவுளின் கிருபை நமக்குத் துணைபுரிகிறது. தாம் தெரிந்துகொண்டவர்களைத் தாங்குபவரை நம்பி, இந்த வாக்குறுதி நம்மில் மெய்யாகுமாறு வேண்டிக்கொள்வோமாக.

ஐயா! நம் கவனம் இன்மையே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய இடர். ஆனால் இதைக் குறித்துக் கவனமாயிருக்க இயேசு கிறிஸ்து விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டுள்ளார்.

இந்த நாளில் ஒருமுறைகூட இடறாமல் இருக்க, கிருபை கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! நாம் கீழே விழாமல் இருந்தால் மட்டும் போதாது. நம் பாதம் சிறிதளவுகூட இடறாமல் வழுவாதபடி நம்மைக் காப்பவரை இறுதியில் போற்றிப் புகழவேண்டும் என்பதே நம் வேண்டுதலாய் இருக்கவேண்டும்.

# 22. தாழ்மை உள்ளவர்களுக்குக் கிருபை

தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக்.4:6).

தாழ்மையான இருதயங்கள் கிருபையை நாடிச் செல்வதினால் அதைப் பெறுகின்றன. தாழ்மையான இருதயங்கள் கிருபையின் சக்திக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பதினால் அவைகளுக்கு அதிகமான கிருபை அளிக்கப்படுகிறது. தாழ்மையான இருதயங்கள் கிருபையின் ஓடைகள் பாயும் பள்ளத்தாக்குகளில் தங்கியிருப்பதினால் கிருபையை அனுபவிக்கின்றன. தாழ்மையான இருதயங்கள் கிருபைக்காக நன்றி

உள்ளவைகளாயிருந்து, ஆண்டவருக்குக் கிருபை அளிப்பது அவர் மேன்மைக்கு ஏற்றதாயிருக்கிறது.

இதை வாசிப்பவரே, வாரும். தாழ்மையான இடத்தை ஏற்றுக்கொள்ளும் ஆண்டவர் உமக்கு முக்கியத்துவம் அளிக்கத்தக்கதாக நீர் முக்கியத்துவம் அற்றவரென்று எண்ணிக்கொள்ளும். ஒருவேளை நீர் பெருமூச்சோடு நான் தாழ்மையுள்ளவன் அல்ல என்றே நினைக்கிறேன் என்று சொல்லலாம். ஒருவேளை உண்மையான தாழ்மை உள்ளவர்களே இவ்விதம் நினைக்கலாம். சிலர் தாங்கள் தாழ்மையாய் இருப்பதாக பெருமை கொள்ளுகிறார்கள். இது மிகவும் கேவலமான பெருமையாகும். நாம் தேவையில் இருப்பவர்களும், உதவியற்றவர்களும், தகுதியற்றவர்களும், நரகத்திற்கே தகுதி உள்ளவர்களும் ஆனவர்கள். ஆகையால் நம்மில் தாழ்மை இல்லாவிடில் நாம் தாழ்மை உள்ளவர்கள் ஆவது அவசியம். தாழ்மை அற்றவர்களாய் நாம் செய்துள்ள பாவங்களுக்காக நம்மைத் தாழ்த்தலாம். அப்படிச்செய்தால் ஆண்டவர் அவர் தயவை நாம் அனுபவிக்கச்செய்வார். கிருபை்யே நம்மைத் தாழ்மை உள்ளவர்கள் ஆக்குகிறது. கிருபையே இந்தத் தாழ்மையோடு இன்னும் அதிகமான தாழ்மை அளிக்கப்படும் வாய்ப்பைக் கண்டுபிடிக்கிறது. நாம் உயர்வதற்காகத் தாழ்மையாய் இருப்போமாக. கடவுள் நம்மை வளம்பெற்றவர்கள் ஆக்குவதற்காக நாம் ஆவியில் எளிமை உள்ளவர்கள் ஆவோமாக. நாம் தாழ்த்தப்படாமல், கடவுளின் கிருபையால் உயர்த்தப்படும்படியாகத் தாழ்மை உள்ளவர்களாய் இருப்போமாக.

## 23. நம்பக்கூடிய வழிகாட்டி

குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி (ஏசா.42:16).

மகிமை வாய்ந்த பரம்பொருளான யேகோவா குருடரின் வழிகாட்டியாவதை நினைத்துப் பாருங்கள்! இது எவ்வளவு எல்லையற்ற அருள்பாலிக்கும் பண்பைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது என்று பாருங்கள். ஒரு குருடன் தான் அறியாத வழியைக் கண்டுபிடிக்க முடியாது. வழியை நன்றாக அறிந்திருந்தாலும்கூட அதில் நடந்து செல்வது அவனுக்குக் கடினமாகும். வழிகாட்ட யாரும் இல்லாவிட்டால் அறியாத வழியிலே நடந்துசெல்ல அவனுக்கு முடியவே முடியாது. இயற்கையாக நாம் இரட்சிப்பின் வழியை அறியாத குருடராயிருக்கிறோம். ஆகிலும் ஆண்டவர் நம்மை அதற்கு வழி நடத்தி, தம்மண்டைகொண்டு சேர்த்து, நம் கண்களைத் திறக்கிறார். எதிர்காலத்தைக் குறித்து நாம் யாவரும் குருடராயிருக்கிறோம். ஒருமணி நேரத்திற்குள் என்ன நடக்கும் என்று பார்கமுடியாதவர்களாய் இருக்கிறோம். ஆனால் ஆண்டவர் இயேசு நம் பயணத்தின் இறுதிவரை நம்மை வழி நடத்துவார். அவருக்கு மகிமை உண்டாவதாக.

நமக்கு எவ்விதமாக விடுதலை வரும் என்பதை நாம் அறியோம். ஆனால் ஆண்டவர் அறிவார். நாம் எல்லா ஆபத்துகளிலிருந்தும் தப்பும்வரை அவர் நம்மை வழிநடத்துவார். சிறந்த வழிகாட்டியாகிய அவர் கைகளில் தங்கள் கைகளை வைத்து தங்களையும் தங்கள் வழியையும் அவரிடமே ஒப்புவிப்பவர்கள் பாக்கியவான்கள். அவர் முழுதூரமும் அவர்களை வழிநடத்துவார். பின் அவர்களைப் பரலோகத்தின் மகிமைக்குள் அழைத்துச் சென்று, அவர் நடத்திவந்த பாதையைக் காண அவர்கள் கண்களைத் திறக்கும்போது அவர்கள் தங்கள் சிறந்த உபகாரியைப் புகழ்பாடும் பாட்டு எப்படிப்பட்டதாயிருக்கும்! ஆண்டவரே, என் வழியை நான் அறியாதபடியால், கண்தெரியாத ஏழைப் பிள்ளையாகிய என்னை இன்று வழிநடத்தும்.

## 24. ஸ்திரப்படுத்தி, காத்துக்கொள்ளுவார்

*கர்த்தரே உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார் (2.தெச.3:3).*

பல சந்தர்ப்பங்களில் மக்கள் நம்பிக்கையற்றவர்களாய் இருப்பதுபோல உய்த்துணர்வும் அற்றவர்களாய் இருக்கிறார்கள். இன்று நம்மோடு துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் இருக்கிறார்கள். அவர்களோடு வாதிடுவதும் சமாதானமாய் இருக்கப் பிரயாசப்படுவதும் பயனற்றதாகும். அவர்கள் இருதயத்தில் பொய்யராகவும் பேச்சில் வஞ்சிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். அதனாலென்ன? நாம் அவர்களைக் குறித்துக் கவலைப்படவேண்டுமா? இல்லை. நாம் ஆண்டவரண்டை திரும்பலாம். அவர் உண்மையுள்ளவர். அவர் கொடுத்துள்ள எந்த வாக்குறுதியையும் மீறமாட்டார். அவர் நியாயத்திற்கு ஒவ்வாதவராக நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவும் மாட்டார். நாம் அவரிடமிருந்து எதிர்பார்ப்பவைகளைக் குறித்து நேர்மை அற்றவராய் இருக்கவும் மாட்டார். நம் கடவுள் உண்மையுள்ளவர். இதுவே நமக்கு மகிழ்சி அளிப்பதாகும்.

துன்மார்க்கர் நம்மைக் கீழே விழத்தள்ளாதபடி நம்மை ஸ்திரப்படுத்துவார். நம்மைத் தாங்கும் தீமைகள் நமக்கு எவ்விதத் தீங்கும் செய்யாதபடி நம்மைக் காத்துக்கொள்வார். நாம் மனிதரோடு போராடவேண்டியதாயிராமல் நம்மேல் இரக்கம் உள்ளவரான இயேசுவில் அடைக்கலம் பெறக்கூடியதாயிருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாகும். உண்மையான இதயம் ஒன்று உண்டு. அதில் நாம் சார்ந்து அமைதி பெறுவோமாக. ஆண்டவர் அவர் அடியாராகிய நம்மில் தம் கிருபையின் நோக்கத்தை நிறைவேற்றுவார். அதைக் குறித்து நாம் எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டியதில்லை. கடவுளின் பாதுகாப்பையும் முன்னேற்பாட்டையும் நாம் அனுபவிக்காதபடி மனிதராவது பிசாசாவது ஏதும் செய்யமுடியாது. ஆண்டவர் நம்மை

ஸ்திரப்படுத்தி, காத்துக்கொள்ளவேண்டுமென்று இன்று வேண்டிக்கொள்வோமாக.

# 25. வலுவூட்டும் தூக்கம்

நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய். நீ படுத்துக்கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும் (நீதி.3:24).

இதை வாசிப்பவர் ஒருவேளை சிறிது காலம் வியாதிப்படுக்கையில் இருக்க வேண்டியதாயிருக்கிறதா? அப்படியானால் நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய் என்னும் வாக்குறுதியை மனதில் கொண்டு, வருத்தமின்றி படுக்கைக்குச் செல்.

இரவில் படுக்கைக்குப் போகும்போது இந்த வார்த்தை நமக்கு அமைதி அளிக்கட்டும் நாம் தூங்கும்போது நம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியாது. ஆனால் ஆண்டவர் இரவு முழுவதும் நம்மைப் பாதுகாப்பார். ஆண்டவரின் பாதுகாப்பில் படுத்துக்கொள்ளுகிறவர்கள் அரண்மனைகளிலுள்ள அரசரையும் அரசிகளையும்விட அதிகமான பாதுகாப்பு உள்ளவர்கள் ஆகிறார்கள். நாம் படுத்துக்கொள்ளும்போது நம்முடைய கவலைகளையும் புகழார்வங்களையும் கைவிடுகிறவர்களாயிருந்தால், கவலைப்படுகிறவர்களும் பிறர் பொருளை இச்சிக்கிறவர்களும் பெறாதவிதமாய் நம் தூக்கத்தினால் புது வலு பெறுவோம். கெட்ட சொப்பனங்கள் அகற்றப்படும். அப்படியே அவை வந்தாலும் அவை சொப்பனங்கள்தானே என்று அவற்றால் ஏற்பட்ட கருத்தை மறந்துவிடுவோம்.

இவ்விதமாய் நித்திரை செய்தல் நமக்கு நல்லது. பேதுரு மறுநாள் மரணமடைய வேண்டும் என்று தீர்ப்பு பெற்றிருந்தாலும் எவ்வளவு ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். தேவதூதனிடம்

வெளிச்சம்கூட அவனை விழிப்படையச் செய்யவில்லை. அவனை விலாவிலே தட்டி எழுப்பவேண்டியதாயிருந்தது. இரத்தசாட்சிகள் எரிக்கப்படும் முன்னும் அவ்விதமே தூங்கினார்கள். அவரே தமக்குப் பிரியமானவருக்கு நித்திரை அளிக்கிறார். இன்பமான நித்திரைபெற நம் வாழ்க்கை இன்பமானதாயிருக்க வேண்டும். நம் மனநிலை இன்பமானதாய் இருக்கவேண்டும். நம் தியானம் இன்பமானதாய் இருக்கவேண்டும். நம் அன்பு இன்பமானதாய் இருக்கவேண்டும்.

## 26. ஏழைகளைப் பராமரித்தல்

*படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார் (சங்.41:2).*

ஏழைய எளியவர்களின்மேல் கவனம் செலுத்துகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி இது என்பதை நினைவிற்கொள்ளுங்கள். நீங்கள் அப்படிப்பட்டவர்களில் ஒருவரா? அப்படியானால் இது உங்களுக்கு உரியது.

ஏழைகளைப் பராமிரிப்பவர்கள் வியாதியாய் இருக்கும்போது ஏழைகளின் கடவுள் அவரை எவ்விதம் தாங்குவார் என்று பாருங்கள். வியாதிப்பட்டவரின் உடலை அன்பான கரங்கள் தாங்குவதுபோல நித்திய கரங்கள் அவர் ஆத்துமாவைத் தாங்கும். இந்த உருவகம் எவ்வளவு கனிவு நிறைந்ததாயும் பரிவுமிக்கதாயும் இருக்கிறதென்று பாருங்கள். அதுவுமல்லாமல் நம் கடவுள் நம் பலக்குறைவில் நம் வியாதியிலும் எவ்விதம் அக்கறை காட்டுகிறார் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இந்தியாவிலாவது, சீனாவிலாவது உள்ள கடவுள்கள் இவ்விதம் செய்ததாக நாம் கேள்விப்பட்டது உண்டா? இது இஸ்ரவேலரின் கடவுளின் தனிச்சிறப்பு ஆகும். அவரே நல்ல மனிதர்கள் நோய்வாய்ப்படும்போது பேணிக் காப்பவரும் அவர்கள் ஊழியக்காரரும் ஆகத் திட்டமிடுகிறார். அவர் ஒரு கையால்

அடித்தால் மறு கையால் தாங்குகிறார். ஒருவர் ஆண்டவரின் மார்பில் சாய்ந்து, அங்கேயே தாங்கப்படுவது எவ்வளவு கவலையற்ற நிலையாகும். கடவுளே அவர்கள் நலிவு போகும் சிறந்த மருந்து ஆவார். கடவுளின் அன்பே தளர்வுறும் நோயாளியைத் தூண்டி எழுப்பும் மருந்தாகும். நோயாளி எலும்புக்கூடாய் காணப்பட்டாலும் அது அவர் ஆத்துமாவை இராட்சதன்போல வலுவுள்ளதாக்கும். அண்டவரைப்போல சிறந்த வைத்தியருமில்லை. அவர் வாக்குறுதியைப்போல சத்து நிறைந்த சிறந்த மருந்தும் இல்லை. அவர் அன்பைப்போல சிறந்த திராட்ச இரசமும் இல்லை.

இதை வாசிப்பவர் ஏழைகளுக்குச் செய்யவேண்டிய கடமையில் தவறியிருந்தால், அவர் எவற்றையெல்லாம் இழந்துகொண்டிருக்கிறார் என்று அறிந்து உடனே அவர்கள் நண்பரும் உதவியாளரும் ஆவது நல்லது.

## 27. தேவனிடத்தில் சேருதல்

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் (யாக்.4:8).

நாம் தேவனிடத்தில் எவ்வளவு கிட்டிச் சேருகிறோமோ அவ்வளவு கிருபையாக அவர் தம்மை வெளிப்படுத்துவார். கெட்ட குமாரன் தன் தகப்பனிடம் வந்தபோது தகப்பன் அவனைச் சந்திக்க ஓடிச் சென்றார். வெளியே விடப்பட்ட புறா பேழைக்குத் திரும்பியபோது நோவா கையை நீட்டி அதைத் தம்மிடமாய் இழுத்துக்கொண்டார். பாசமிக்க மனைவி தன் கணவனிடம் தோழமையைத் தேடும்போது அவர் பறந்து வந்து சேருகிறார். அன்பான நண்பனே! நமக்காக கிருபையுடன் காத்துக்கொண்டிருக்கும் கடவுளண்டை சேர்வோமாக. அவர் நம்மை எதிர்கொண்டழைக்க வருவார்.

ஏசாயா 58:9ஐ எப்போதாவது வாசித்திருக்கிறீர்களா? கடவுள் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார் என்றும் நாம் தேடும்போது இதோ நான் இருக்கிறேன் என்று அவர் சொல்லுகிறார் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவர் நீ என்னிடம் சொல்ல விரும்புவது என்ன? நான் உனக்காக என்ன செய்யவேண்டும்? உன்னை ஆசீர்வதிக்க நான் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்கிறார். அவரண்டை செல்ல நாம் தாமதிப்பது ஏன்? மன்னிக்கவும், ஆசிர்வதிக்கவும், ஆற்றவும், தேற்றவும், உதவிசெய்யவும், விடுதலையளிக்க விரைந்து வரவும் ஆண்டவர் அருகில் இருக்கிறார். நாம் அவரண்டை செல்லவேண்டும் என்பதே முக்கியமாகும். இதைச் செய்தால் எல்லாம் செய்து முடிந்ததுபோல் ஆகும். நாம் மற்றவர்களண்டை சென்றால் அவர்கள் சீக்கிரத்தில் நம்மேல் சலிப்படைந்து நம்மைவிட்டுச் சென்றுவிடுவார்கள். ஆனால் நாம் ஆண்டவரையே தேடிச்சென்றால் அவரில் எந்த மாறுதலும் ஏற்படாது. அவர் மகிழ்சி நிறைந்த நிறைவான தோழமையின்மூலம் நமக்கு அருகிலேயே வருவார்.

## 28. நல்வழி காட்டுதல்

கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் (உபா.28:13).

நாம் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்பதை நம் எதிரிகள் காணச் செய்வார். இது நியாயப்பிரமாணத்தின் வாக்குறுதியானாலும் இது கடவுளின் மக்களுக்கும் உரியதாகும். ஏனெனில் இயேசு சாபத்தை நீக்கி, ஆசீர்வாதங்களை நிலைநிறுத்தியிருக்கிறார்.

தூய செல்வாக்கினால் மக்களுக்கு நல்வழி காட்டுவது பரிசுத்தவான்களின் கடமையாகும். அவர்கள் அங்கேயும் இங்கேயும் இழுத்துச்செல்லப்பட்ட வால்ப்பாகமல்ல. இக் காலத்

*தூண்டுதல்களுக்கு நாம் இடங்கொடுக்காமல் இக்காலத்தவர்கள் கிறிஸ்துவை வணங்கத் தூண்டவேண்டும். ஆண்டவர் நம்மோடு இருந்தால் நாம் சமய சுதந்தரத்துக்கு ஏங்குகிறவர்களாய் இருக்கமாட்டோம். ஆனால் மக்கள் யாவரும் அவரை வணங்குகிறவர்கள் ஆக முயற்சி செய்வோம். ஆண்டவராகிய இயேசு தம் மக்களை ஆசாரியர்கள் ஆக்கியிருக்கிறார் அல்லவா? ஆகையால் நாம் போதகர்களாய் இருக்கவேண்டுமே அல்லாமல் அவிசுவாசிகளின் தத்துவங்களிலிருந்து கற்பவர்களாய் இருக்கக்கூடாது. கிறிஸ்துவில் நாம் உலகை ஆள்கிறவர்கள் ஆக்கப்படவில்லையா? அப்படியிருக்க நாம் மக்களின் கருத்துக்களுக்கு அடிமைகளாயும் பாரம்பரியங்களின் ஊழியக்காரராயும் இருப்பது ஏன்?*

*அன்பான நண்பனே, நீ உண்மையாகவே இயேசுவின் பக்கம் இருக்கிறாயா? பலர் கோழைகளாய் அல்லது தன்னம்பிக்கை அற்றவர்களாய் இருப்பதால் மௌனம் சாதிக்கிறார்கள். ஆண்டவர் இயேசுவின் நாமம், முதல் இடம் பெறாமல் இருக்க நாம் இடம் கொடுக்கலாமா? நம் சமயம் வால்போல் தயங்கித் தயங்கி ஒன்றன்பின்னாலே போய்க்கொண்டிருக்கலாமா? அது வழிகாட்டியாய் நம்மையும் மற்றவர்களையும் தூண்டும் ஆற்றலாய் இருக்கவேண்டுமல்லா?*

## 29. அஞ்சாத நம்பிக்கை

*நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை (அப்.18:10).*

*பவுல் கொரிந்து பட்டணத்தில் ஆண்டவருக்கென்று வேலை செய்யும்வரை கூட்டத்தினரின் சிற்றம் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. யூதர் தங்களையே எதிர்த்துக்கொண்டு தேவதூஷணம் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் நற்செய்தி போதிக்கப்படுவதையோ கேட்டவர்கள் மனம்*

மாறினதையோ தடுக்க முடியவில்லை. கோபாவேசமான மனதின்மேல்கூட கடவுளுக்கு வல்லமை உண்டு. மனிதனின் கோபம் வெளிப்படும்போதுகூட கடவுளால் அவன் அவரைத் துதிக்கச் செய்யமுடியும். ஆனால் கோபத்தை அவன் அடக்கும்போது அவரால் நம் சிறப்பை வெளிப்படுத்த முடியும். அவன் கோபத்தை அடக்கச் செய்யவும் அவரால் முடியும். நீர் மீட்ட ஜனங்களே கடந்துபோகும்வரையும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினால் கல்லைப்போல அசைவற்றிருப்பார்கள்.

நீங்கள் உங்கள் கடமையைச் செய்வதாக அறியும்போது எந்த மனிதனுக்கும் பயப்படாதேயுங்கள். இயேசு எவ்விதம் நேராகப் போயிருப்பாரோ அவ்விதமே செல்லுங்கள். உங்களை எதிர்க்கிறவர்கள் நெரிந்தநாணலையும் மங்கியெரிகிற திரியையும்போல ஆகிவிடுவார்கள். பல சந்தர்ப்பங்களில் மக்கள் அச்சங்கொண்டிருந்ததாலேயே அவர்கள் அஞ்சவேண்டியதாயிருக்கிறது. அனால் கடவுள்மேல் கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கை இராட்சதன் பாதையிலுள்ள நூலாம்படை நீக்கப்படுவதைப்போல் அச்சத்தை நீக்கிவிடும். ஆண்டவர் அனுமதி அளிக்காமல் ஒருவரும் நமக்குத் தீங்கு செய்யமுடியாது. பிசாசையோ ஒரு வார்த்தையால், விரட்டக்கூடிய அவர் பிசாசின் அடியார்களையும் கட்டுப்படுத்த முடியும். ஒருவேளை நீங்கள் அவர்களுக்குப் பயப்படுவதற்கு அதிகமாக அவர்கள் உங்களுக்குப் பயப்படலாம். ஆகையால் தைரியமாக முன்னேறிச் செல்லுங்கள். நீங்கள் எதிரிகளை எதிர்பார்த்த இடத்தில் நண்பர்களையே காண்பீர்கள்.

## 30. விண்ணப்பம், ஸ்தோத்திரம், துதி

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.

அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி.4:6-7).

நாம் ஒன்றைக் குறித்தும் ஏக்கம் கொள்ளவேண்டியதில்லை. எல்லாவற்றையும் குறித்து விண்ணப்பம் செய்யவேண்டும். நாம் ஒன்றைக் குறித்தும் கவலைப்படவேண்டியதில்லை. கடவுளோடு மகிழ்ச்சியின் தோழமை கொள்ளவேண்டும். உங்கள் வாழ்க்கையின் ஆண்டவரும் உங்கள் ஆத்துமாவின் பாதுகாவலரும் ஆனவரிடம் உங்கள் விருப்பங்களைத் தெரியப்படுத்துங்கள். ஒரு மடங்கு சுகந்தவாசனையான துதியோடு இரு மடங்கு ஜெபத்தோடும் அவரிடம் செல்லுங்கள். சந்தேகத்தோடு வேண்டிக்கொள்ளாமல் ஸ்தோத்திரத்தோடு வேண்டிக்கொள்ளுங்கள். நீங்கள் வேண்டிக்கொள்ள அவரிடம் போகிறீர்கள் என்பதை எண்ணிப் பார்த்து அவர் கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள். அவர் உங்களுக்குக் கிருபை அளிக்கிறார். ஆகையால் அவருக்கு நன்றி செலுத்துங்கள். ஒன்றையும் மறைக்காதேயுங்கள். எந்தத் தேவையைப்பற்றிய எண்ணமும் உங்கள் மனதில் இருந்து அரிக்க விடாதேயுங்கள். உங்கள் விண்ணப்பங்களைத் தெரியப்படுத்துங்கள். எந்த மனிதனிடமும் ஓடாதேயுங்கள். இயேசு கிறிஸ்துவின் பிதாவும் உங்களை நேசிக்கிறவருமான உங்கள் கடவுளிடம் மட்டும் போங்கள்.

இதனால் தேவசமாதானத்தைப் பெறுவீர்கள். நீங்கள் அனுபவிக்கும் சமாதானத்தை உங்களால் விளங்கிக்கொள்ளமுடியாது. அது உங்களை ஆட்கொள்ளும். கிறிஸ்து இயேசுவுக்குள் இருதயங்களையும் சிந்தனைகய்யும் அது காத்துக்கொள்ளும். ஜீவனாகிலும் மரணமாகிலும், வறுமையாகிலும், நோவாகிலும், அவதூறாகிலும் எது வந்தாலும் அலைக்கழிக்கும் காற்றையும் இருண்ட மேகத்தையும் பொருட்படுத்தாமல் நீங்கள் இயேசுவில் நிலைத்திருப்பீர்கள். இந்த

ஆணைக்கு நீங்கள் கீழ்ப்படியமாட்டீர்களா? ஆண்டவரே, நான் உம்மை விசுவாசிக்கிறேன். என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்.

# 31. மனஞ் சோராமை

சடிதியான திகிலும் துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது நீ அஞ்சவேண்டாம். கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார் (நீதி 3:25-26).

கடவுள் சுறு சுறுப்பாக நியாயந்தீர்த்துக்கொண்டிருந்தாலும் அவர் மக்கள் பயப்பட வேண்டியதே இல்லை. ஏனெனில் அவர் தீமை செய்ய வரவில்லை. நீதிமான்களைப் பாதுகாக்கவே வந்திருக்கிறார்.

அவர்கள் தங்களுக்குள்ள துணிவை வெளிப்படையாகக் காட்ட வேண்டுமென்று விரும்புகிறார். கடவுளின் பிரசன்னத்தை அனுபவித்தவர்களாகிய நாம் மனஞ் சோராமல் சமயத்திற்கேற்ற மன அமைதி உள்ளவர்களாய் இருக்கவேண்டும். ஆண்டவரே திடீரென்றுதான் வருவார். ஆனபடியால் திடீரென்று நேரிடும் எதைக் குறித்தும் நாம் திகைக்க வேண்டியதில்லை. எதிர்பாராத தீமைகள் தாக்கும்போது பரபரப்பின்றி இருப்பது தேவனுடைய அன்பினால் நமக்குக் கிடைத்த மதிப்புமிக்க ஈவாகும்.

ஆண்டவர் தெரிந்துகொண்டவர்கள் வேறுபாடு கண்டறிகிறவர்களாக இருந்து, தீயவர்களின் அழிவு பிரபஞ்சத்திற்கு ஏற்படக்கூடிய பெரும் இடர் அல்ல என்று அறிந்துகொள்ள விரும்புகிறார். பாவமே தீமையானது. அதற்குக் கிடைக்கும் தண்டனை சமுதாயம் அழுகிவிடாமல் பேணப்பயன்படும் உப்பைப் போன்றது. பாவத்தினால் வரும் நரகத்தைக் குறித்து

அதிர்ச்சியடைவதைவிட நரக தண்டனை பெற ஏதுவாயிருக்கும் பாவத்தைக் குறித்தே அதிகம் அதிர்ச்சியடையவேண்டும்.

அதேபோல ஆண்டவரின் மக்கள் அமைதியான ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கவேண்டும். சாத்தானும் அவனுடைய சர்ப்பமாகிய வித்துக்களும் சூழ்ச்சித்திறம் மிக்கவர்களாய் இருக்கிறார்கள். அனால் கடவுளோடு நடப்பவர்கள் அவனுடைய வஞ்சக வலையில் விழமாட்டார்கள். இயேசுவை நம்பகிறவரே, நீர் தைரியமாக முன்னேறிச் செல்லும். ஆண்டவர் உம் உறுதியான நம்பிக்கையாய் இருப்பாராக.

# 04 ஏப்ரல்


1. அரசரின் நெடுங்சாலை
2. மெய்யான இதயவலிமை
3. எச்சரிக்கைக்குச் செவிகொடுத்தல்
4. கடவுளின் குளவிகள்
5. மறக்கப்படவில்லை
6. ஒரே அரசர், ஒரே ஆண்டவர்
7. மனிதனுக்குப் பயப்பட வேண்டியதில்லை
8. வேலைமுடியும்வரை விடாமுயற்சியுடன் இருத்தல்
9. திருமறையின் உயர்வு
10. நோக்கிப் பார்த்துப் பிழைத்துக்கொள்
11. நெருங்கிய கூட்டுறவு
12. அவர் இனி நினைப்பதில்லை.
13. புதிதாக்கப்பட்ட சரீரம்
14. அவர் தெரிந்தெடுப்பதே நான் விரும்புவதாகும்.
15. நீதிமான் விரும்புகிற காரியம் கொடுக்கப்படும்.
16. யாவும் பரிசுத்தமாக்கப்படும்
17. எதிரிகள் சமாதானமாவார்கள்
18. ஒருபோதும் உன்னை விட்டு விலகமாட்டார்
19. தேடிக் கண்டுபிடிப்பதில் நிபுணர்
20. உணர்ச்சியினாலல்ல விசுவாசத்தினால்
21. கடவுள் கைம்மாறு செய்வார்
22. தூக்கிவிடுவதற்கு வல்லமை
23. மரணத்தைக் குறித்து அச்சமில்லை
24. ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான தகுதி
25. பிள்ளைகளுக்கு எதை விட்டுப்போவது ?
26. கருணையுடன் நடத்துதல்
27. கடவுள் தம் வேலையை முடித்து விடுகிறார்
28. அது ஓர் ஒப்பந்தம் ஆகிறது

29. மன்னித்து மறந்து விடு
30. மேற்கொள்பவரின் பரிசு

# 1. அரசரின் நெடுங்சாலை

*அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையாயிருந்தாலும் திசை கெட்டுப்போவதில்லை (ஏசா.35:8).*

பரிசுத்தத்தின் பாதை நேராகவும் தெளிவாகவும் இருக்கிறபடியால் பேதையர்கூட தொடர்ந்து அந்த வழியே போனால் திசை கெட்டுப்போவதில்லை. உலகப் பிரகாரமான ஞானம் உள்ளவர்கள் பல வளைவுகளையும் திருப்பங்களையும் கடந்து சென்றாலும் பயங்கரமான பிழைகளில் மாட்டிப் பொதுவாக வழியைத் தவறவிடுகிறார்கள். உலகப் பிரகாரமான போக்கு குறைபாடுடையதும் குறு நோக்கம் உடையதுமாகும். மக்கள் அதைத் தாங்கள் செல்லும் வழியாகத் தெரிந்துகொண்டால் இருண்ட மலைகள் வழியாக அவர்கள் செல்லவேண்டியதிருக்கும். அறிய ஆர்வமுடைய மனதுடையவர்கள் ஆண்டவர் கட்டளைப்படி செய்வதையே அறிவார்கள். இதனால் அரச பாதுகாப்புடன் அரசரின் நெடுஞ்சாலையில் இவர்கள் நடந்து செல்கிறார்.

இதை வாசிப்பவர் இடுக்கண் அடையும்போது அதிலிருந்து விடுபட ஒருபோதும் பொய் சொல்லாமலும் முற்றிலும் நேர்மையாய் இராத செயல் செய்யாமலும் இருப்பது அவசியம். அவர் முற்றிலும் உண்மையும் நேர்மையும் ஆன நெடுஞ்சாலையில் சென்றால் சிறந்த பாதையில் செல்பவர் ஆவார். நம் வாழ்க்கையில் ஒருபோதும் சுற்றி வளைத்துப் போகாமல் நிலைபிறழ்வதைக் குறித்து எண்ணாமலும் இருப்பது அவசியம். நீதியாய் நடந்து அச்சமின்றி இருங்கள். இயேசுவைப் பின்பற்றி எந்தத் தீய விளைவுகளையும் பொருட்படுத்தாமல் இருங்கள். தவறு செய்வதால் பயங்கரமான கேடு நம்மைத் தாக்காமல் இருப்பதைத் தடுக்க முயன்றோமேயானால் அந்த முயற்சியிலேயே பயங்கரமான எந்தக் கேட்டையும் விடத் தீமையானதொன்றிற்குள்

சிக்கிவிடுவோம். கடவுளின் பாதையே சிறந்ததாயிருக்கும். அந்த வழியில் நடக்க கவனமாயிருங்கள். மக்கள் உங்களைப் பேதைகள் என்று நினைத்தாலும் நீங்கள் மெய்யாகவே ஞானம் உள்ளவர்களாய் இருப்பீர்கள்.

ஆண்டவரே, உம் அடியார்களை அவர்கள் எதிரிகளிலிருந்து காப்பாற்ற சிக்கலற்ற பாதையில் நடத்தும்.

# 2. மெய்யான இதயவலிமை

நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு (1.தீமோ.4:15).

இது ஊக்கந்தளராத தியானத்தாலும், ஆண்டவர் சேவைக்கென்று நம் முழு மனதையும் ஈடுபடுத்தி உழைப்பதாலும் நம்மில் ஏற்படும் முன்னேற்றம் யாவரும் காணத்தக்கதாயிருக்கும் என்பதைக் குறித்த வாக்குறுதியாகும். கடவுளுடைய வார்த்தையை அவசரம் அவசரமாய் வாசிப்பதினாலல்ல. ஆழ்ந்து தியானிப்பதினாலேயே முழு பயன் அடைவோம். சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டேயல்லாமல் மெய்யான இதய வலிமையின்றிக் காட்டப்படும் பரபரப்பிலும் படபடப்பிலும் அல்ல.

கடவுளுக்குப் பாதியும் உலகப் பொருளுக்குப் பாதியும் அல்லது கிறிஸ்துவுக்காகப் பாதியும் நமக்காகப் பாதியும் என்று ஊழியம் செய்ய நாம் முற்பட்டால் முன்னேறமாட்டோம். கடவுளுக்கென்றே முழுவதுமாக சேவை செய்ய நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இல்லையெனில், பரலோகத்துக்கான அலுவல்களில் நாம் குறைவுபட்டவர்களாய்க் காணப்படுவோம். சீர்தூக்கிப் பார்க்கும்போது நாம் எவ்விதம் முன்னேற்றத்தையும் காட்ட முடியாது.

நான் ஒரு போதகரா? நான் இரண்டாந்தரமான தொழில்களில் அக்கறை காட்டாமல் முழுவதுமாகப் போதகருக்கான பணிகளிலேயே ஈடுபடுவேன், கட்சி அரசியலும் வீணான வேடிக்கைகளிலும் நான் அக்கறை காட்டவேண்டியதில்லையே! நான் ஒரு கிறிஸ்தவனா? இயேசுவுக்கென்று உழைப்பதையே என் தொழிலாகவும் வாழ்நாள் பணியாகவும் ஒரே குறிக்கோளாகவும் கொள்வேன். நாம் முழுவதும் இயேசுவோடும், முற்றிலும் இயேசுவுக்காகவும் இருக்கவேண்டும். இல்லையெனில் நம்மில் முன்னேற்றமும் மேம்பாடும் காணப்படாது. நாம் கையாளவேண்டுமென்று ஆண்டவர் விரும்பும் ஆற்றல் வாய்ந்த சக்தியையும் சபையாவது உலகமாவது உணரவும் முடியாது.

## 3. எச்சரிக்கைக்குச் செவிகொடுத்தல்

நான் இந்த ஸ்தலத்திற்கும் அதன் குடிகளுக்கும் விரோதமாக அவர்கள் பாழும் சாபமுமாவார்கள் என்று சொன்னதை நீ கேட்டபோது, உன் இருதயம் இளகி, நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால் நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் (2.இராஜா.22:19).

பலர் எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி, அதனால் அழிவடைகிறார்கள். கடவுளின் வார்த்தையைக் கேட்டு நடுங்குகிறவன் மகிழ்ச்சி உள்ளவன். யோசியா நடுங்கினான் ஆகையால் கடவுள் யூதாவுக்கு அதன் பெரிய பாவங்களுக்காக வரப்பண்ணின எல்லாப் பொல்லாங்கையும் யோசியா காணாமல் இருக்கச் செய்தார். உங்களுக்கு இந்த விதமான பரிவு இருக்கிறதா? நீங்கள் இவ்விதமாக உங்களைத் தாழ்த்துகிறீர்களா? அப்படியானால் தீங்கு நாளில் காக்கப்படுவீர்கள். அவரவர் காலத்தின் பாவங்களுக்காகப் பெருமூச்சோடு அழுது

*கலங்குகிறவர்களைக் கடவுள் குறித்து வைத்திருக்கிறார். கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பாதுகாப்படையும்வரை அழிவைக் கொண்டுவரும் தூதன் தன் பட்டயத்தை அதன் உறையிலேயே வைத்திருக்கக் கட்டளையிடப்படுகிறான். அவர்கள் கடவுளுக்குப் பயப்படுகிறவர்களாயும் ஆண்டவர் சத்தத்தைக்கேட்டு நடுங்குகிறவர்களாயும் இருக்கிறார்கள். காலங்கள் பொல்லாதவையாய் இருக்கின்றனவா? சடங்காச்சாரங்களும், சிலைவணக்கமும் உண்மையான கடவுள்மேல் பற்றின்மையும் விரைவாக அதிகரித்து வருகின்றனவா? இதன் காரணமாக நிறைந்த நாட்டின்மேல் தண்டனை வரும் என்று அஞ்சுகிறீர்களா? நீங்கள் அஞ்சுவது சரிதான். ஆயினும் நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்வாய். நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை என்னும் வாக்குறுதியில் அமர்ந்திருங்கள். அதைவிட மேலானது ஆண்டவரே வந்துவிடுவார். நம் துக்க நாட்கள் முடிந்துபோம்.*

# 4. கடவுளின் குளவிகள்

*உன் முகத்திற்கு முன்னின்று ஏவியரையும் கானானியரையும் ஏத்தியரையும் துரத்திவிட, குளவிகளை உனக்கு முன்னே அனுப்புவேன் (யாத்.23:28).*

*அந்தக் குளவிகள் என்னவென்று நாம் சிந்திக்கவேண்டியதில்லை. அவைகள் கடவுளின் சொந்த சேனை. இஸ்ரவேலர் எளிதில் வெற்றியடைவதற்காக அவை அவர்களுக்கு முன்னே போய் எதிரிகளைக் கொட்டி வருத்த அனுப்பப்பட்டிருந்தன. தம் மக்கள் போரில் ஈடுபடுவதற்கு முன்னதாகவே நம் கடவுள் தாம் தெரிந்துகொண்டுள்ள விதத்தில் தம் மக்களுக்காகப் போர் செய்து எதிரிகளை அவமானப்படுத்திவிடுவார். பல சமயங்களில்*

சீர்திருத்தவாதிகள்கூட ஈடுபடாதவிதத்தில் சிறந்த முறைகளைப் பயன்படுத்தி, பகைவர் உண்மையைக் குறித்துக் குழப்பமடையச் செய்வார். இஸ்ரவேலரின் எதிரிகளை அலைக்கழிக்கும் பலமாகிய சக்திகள் நிலவுகின்றன. யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் பூமியானது ஸ்திரீக்கு உதவியாக, விழுங்கினது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் ஒன்றிற்காகவும் ஒருபோதும் பயப்படவேண்டியதில்லை. நம் ஆத்துமாவின் பகைவருக்கு எதிராக தங்கள் வழியிலே செல்லும் நட்சத்திரங்கள் போர் செய்யும். பல தடவைகள் நாம் போருக்காகச் செல்லும்போது நம் எதிரிகளை அங்கு காண்பதில்லை. கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார். நீங்கள் அங்கு சும்மாயிருப்பீர்கள். நம் ஆயுதங்களைவிட கடவுளின் குளவிகள் வலிமை வாய்ந்தவை. யேகோவா என்னென்ன முறைகளைப் பயன்படுத்தி, வெற்றிகிடைக்கச் செய்வார் என்பதை நாம் நினைத்துப்பார்க்கக்கூட முடியாது. நாம் போருக்குப் புறப்படுவதற்கான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாடுகளை இயேசுவுக்கென்று வெல்வதற்காக முன்னேறிச்செல்லவேண்டும். இறுதியில் அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்கினது என்று நாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளத்தக்கதாக அவர் நமக்கு முன்னே சென்று வழியை ஆயத்தம்பண்ணி வைத்துள்ளார் என்று காண்போம்.

## 5. மறக்கப்படவில்லை

நீ என் தாசன். இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை (ஏசா.44:21).

யேகோவா தம் தாசரில் அன்புகூருவதை நிறுத்தத்தக்கதாக அவர்களை மறப்பதில்லை. அவைகளைச் சிறிது காலத்திற்காக என்று அல்ல, நித்தியத்திற்காகத் தெரிந்துகொண்டுள்ளார்.

அவர்களைத் தெய்வீகக் குடும்பத்தில் சேர்த்துக்கொண்டபோதே அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்று அறிந்திருந்தார். அவர்கள் பாவங்களை மேகத்தைப்போல அவர் நீக்கிவிட்டார். நீக்கப்பட்ட பாவங்களுக்காக அவர்களைத் துரத்திவிடமாட்டார் என்று நாம் திட்டமாய் நம்பலாம். துரத்திவிடுவாரோ என்று நினைத்துப் பார்ப்பதுகூட தேவதூஷணமாகும்.

அவர்களைப்பற்றி நினைக்காமல் இருக்கத்தக்கதாக அவர்களை மறக்கவும் மாட்டார். அவர் நம்மை ஒரு வினாடி மறந்தால்கூட நாம் அழிந்துவிடுவோம். ஆகையால் அவர் நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்கிறார். மனிதர் நம்மை மறந்துவிடுகிறார்கள். நாம் நன்மை செய்தவர்கள் நமக்கு விரோதிகள் ஆகிறார்கள். அடிக்கடி மாறும் இயல்புகள் மக்களின் இதயத்தில் நமக்கு நிலையான இடம் இருப்பதில்லை. ஆனால் கடவுள் தம் உண்மையான ஊழியர் ஒருவரை ஒருநாளும் மறப்பதில்லை. அவர் நாம் செய்கிறவைகளுக்கல்லாமல் தாம் செய்தவைகளுக்காகவே நம்மைத் தம்மோடு பிணைத்துக்கொள்கிறார். நாம் அதிகமான விலைகொடுத்து வாங்கப்பட்டதுமல்லாமல் அதிக காலம் நேசிக்கப்பட்டும் வந்துள்ளபடியால் இப்போது மறக்கப்படமுடியாது. பிதா நம்மில் தம் குமாரனின் மணவாட்டியைக் காண்கிறார். பரிசுத்த ஆவி நம்மில் தம் பயனுள்ள வேலையைக் காண்கிறார். ஆண்டவர் நம்மைப் பற்றி நினைக்கிறார். இன்று நாம் உதவிபெற்றவர்களாயும், தாங்கிப்பிடிக்கப்பட்டவர்களாயும் இருப்போம். ஆண்டவர் ஒருபோதும் நம்மை மறக்காமல் இருப்பாராக

# 6. ஒரே அரசர், ஒரே ஆண்டவர்

அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாட்களில் ஒரே கர்த்தர் இருப்பார். அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும் (சக.14:9).

இது பாக்கியமான எதிர்பார்த்தல். இது உணர்ச்சி ஆர்வம் மிக்க ஒருவரின் கனவல்ல. ஆனால் தவறமாட்டாத வேத வார்த்தையின் உறுதிமொழியாகும். ஒருநாள் மக்கள் யாவரும் யேகோவாவை அறிந்திருப்பார்கள். எல்லா நாட்டினரும் அவர் கிருபையுள்ள அரசியல் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்வார்கள். இன்று அவ்வாறில்லை. யார் பெரிய அரசர்முன் பணிகிறார்கள்? உலகில் எத்தனை எத்தனை தலைவர்களும் தேவர்களும் இருக்கிறார்கள். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் இடையேயும் அவரையும் அவர் நற்செய்தியையும் குறித்து எத்தனை எத்தனை மாறுபட்ட எண்ணங்கள் இருக்கின்றன. ஒருநாள் ஒரே அரசரும் ஒரே யேகோவாவும் இருப்பார். உயிருள்ள கடவுளுக்கு ஒரே பெயரும் இருக்கும். ஆண்டவரே, அந்த நாள் விரைவில் வரச் செய்யும். நாங்கள் ஒவ்வொரு நாளும் உம் ராஜ்யம் வருவதாக என்று வேண்டிக்கொள்கிறோம்!

அந்த நாள் எப்படியும் வரும் என்ற நிச்சயத்தை இழந்துவிடாதபடி அது எப்போது வரும் என்பதைக் குறித்து விவாதம் செய்யப்போவதில்லை. தீர்க்கர்கள் வழியாகப் பரிசுத்தஆவி பேசினது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக ஒருநாள் பூமி ஆண்டவரின் மகிமையால் நிறைந்திருக்கும். இயேசு வீணாக மரிக்கவில்லை. பரிசுத்த ஆவி வீணாக கிரியை செய்யவில்லை. பிதாவின் நித்திய நோக்கங்கள் நிறைவேறாமல் தடுக்கப்படக்கூடாது. சாத்தான் வெற்றிபெற்ற இங்கேயே இயேசு அரசராக அணிமுடி சூட்டப்படுவீர். எல்லாம் வல்ல கடவுள் அரசாளுவார். ஆகவே உறுதியான நம்பிக்கையில் நிலைநிறுத்தப்பட்டவர்களாய் நம் அன்றாடக வேலைக்கும் போருக்கும் செல்வோமாக !

# 7. மனிதனுக்குப் பயப்பட வேண்டியதில்லை

அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள் (உபா.28:10).

அப்பொழுது நாம் அவர்களுக்குப் பயப்படுவதற்குக் காரணம் இருக்காது. பயப்படுவது நம்பிக்கை அல்ல. நம்பிக்கை இன்மையும் திகிலான ஆவியையுமே குறிப்பதாகும். நாம் பரிசுத்தரான யேகோவாவுக்கு உரியவர்களாய் இருக்கிறோம் என்று பொருத்தமாக அவர் பெயரைத் தரித்திருக்கிறோம் என்று மக்கள் காண வற்புறுத்தப்படத்தக்கதாக கடவுள் நம்மை அவரைப்போல ஆக்கக்கூடியவர்.

கடவுளின் உண்மையான அடியார்களைக் குறித்து தெய்வ பயமற்றவர்கள் அஞ்சுகிறார்கள் என்று உறுதியாக நம்புங்கள். அவர்களை வெறுப்பதோடு அவர்களுக்கு அஞ்சுகிறவர்களாயும் இருக்கிறார்கள். ஆமான் நல்லவனாக மொர்தெகாயை அழிக்க முயற்சி செய்தாலும் அவனைக் குறித்து நடுங்குகிறவனாய் இருந்தான். நம் எதிரிகளின் வெறுப்பே பயத்தினால் ஏற்பட்டதாகும். ஆனால் அதை ஒப்புக்கொள்ளாதவாறு அவர்கள் பெருமை உடையவர்களாய் இருக்கிறார்கள். நாம் சிறிதளவேனும் அச்சமோ கூச்சமோ இல்லாதபடி உண்மையும் நேர்மையுமான வழியில் செல்வோமாக. நாம் பயப்படவே வேண்டியதில்லை. தீமைசெய்து, சேனைகளின் கர்த்தருக்கு விரோதமாகப் போரிடுகிறவர்களே பயப்படவேண்டியது அவசியம். நித்திய கடவுளின் பெயர் நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் நாம் பாதுகாப்பு உள்ளவர்களாய் இருக்கிறோம். ஏனெனில் ஆதிகாலத்தில் உரோமன் ஒருவன் நான் உரோமன் என்று சொன்னாலே அந்தப் பெரிய சாம்ராஜ்யத்தின் சேனைகளின்

பாதுகாப்புக்கு உரிமை கொண்டாடலாம். ஆகவே கடவுளின் அடியார் ஒவ்வொருவருக்கும் சர்வவல்லமையுள்ள கடவுளே பாதுகாவலராயிருக்கிறார். அவர் அடியார் ஒருவரையும் பாதுகாப்பின்றி விடவே மாட்டார். அவர் பாதுகாப்புக்காகப் பரலோகத்தில் உள்ள எல்லா தூதரையுமே அனுப்பிவிடுவார். நீதிக்காகச் சிங்கங்களை விடத் துணிவுமிக்கவர்களாயிருங்கள். கடவுள் உங்களோடு இருக்கிறார்.

# 8. வேலைமுடியும்வரை விடாமுயற்சியுடன் இருத்தல்

அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று: பவுலே திடன்கொள். நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சி கொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும் என்றார் (அப்.23:11).

நீர் ஆண்டவருக்குச் சாட்சியாக இருக்கிறீரா? இப்போது ஆபத்தில் இருக்கிறீரா? அப்படியானால் உம் வேலை முடியும் வரை நீர் இறவாமையுள்ளவர் என்பதை நினைவில் கொள். நீர் இன்னும் பலவற்றிற்குச் சாட்சியாக இருக்கவேண்டும் என்று ஆண்டவர் நினைத்திருந்தால் அவ்விதம் சாட்சிகூற நீர் உயிரோடு இருப்பீர். ஆண்டவர் மறுபடியும் பயன்படுத்த நினைத்திருக்கும் பாத்திரத்தை உடைக்கக்கூடியவர் யார்?

உங்கள் எஜமானருக்கென்று நீங்கள் செய்யவேண்டிய வேலையெல்லாம் முடிந்துவிட்டால் அவர் உங்களைப் பரம வீட்டுக்கு அழைத்துச்சென்று எதிரிகள் தாக்கக்கூடாத இடத்தில் வைப்பது உங்களுக்கு வருத்தம் அளிக்கவேண்டியதல்லவே. இயேசுவுக்கென்று சாட்சி கொடுப்பதிலேயே நீங்கள் அக்கறை உள்ளவர்களாய் இருக்கிறீர்கள். அது செய்து முடிக்கப்படும்வரை யாரும் உங்களைத் தடுக்கமுடியாது. ஆகையால் அமர்ந்திருங்கள்.

கொடுரமான அவதூறோ, விவரங்களைத் தீயவிதமாய்த் திரித்துக்கூறுவதோ, நண்பர்கள் கைவிட்டு விடுவதோ, முற்றிலும் நம்பினவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்வதோ எது நேரிட்டாலும் உங்களைக் குறித்து ஆண்டவர் வைத்திருக்கும் திட்டத்தைத் தடுக்க முடியாது. துக்கம் நிறைந்த இரவில் ஆண்டவர் உங்கள் அருகில் நின்று நீ இன்னும் எனக்காகச் சாட்சி கொடுக்கவேண்டும் என்கிறார். அமைதியாய் இருங்கள் ஆண்டவரில் மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருங்கள்.

இந்தக் கணத்தில் உங்களுக்கு இந்த வாக்குறுதி தேவையில்லாவிட்டாலும் கூடிய சீக்கிரத்தில் அது தேவைப்படும். ஆகவே அதைப் போற்றி வைத்திருங்கள். அயல் நாடுகளில் நற்செய்தியைக் கூறுகிறவர்களை தங்கள் நம்பிக்கைக்காகத் துன்புறுத்துகிறவர்களையும் அவர்கள் பணிமுடியும்வரை ஆண்டவர் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்ள மறவாதேயுங்கள்.

# 9. திருமறையின் உயர்வு

*உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறலில்லை (சங்.119:165).*

ஆம். மேலான இந்தப் புத்தகத்தை உண்மையாகவே நேசிப்பவர்கள் மகத்துவமான கடவுளின் சமாதானத்தைப் பெறுவார்கள். அது அவர்களின் பாதுகாப்பாயும் இருக்கும். நாம் ஆண்டவரின் கட்டளைகளை எப்போதும் உணர்ந்தவர்களாக வாழ்வோமாக. அது வேறெதுவும் கொடுக்கக்கூடாத சமாதானத்தை நம் இதயங்களில் உண்டாக்கும். திருமறையின் வார்த்தைகள்மூலமாகப் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளனாகக் கிரியை செய்து ஆத்துமத்தின் மனக் கொந்தளிப்பை அடக்கச் சாதகமான சக்திகளை வெளியே நிலவ விடுகிறார்.

திருமறையின் வாசகங்களை நிறைவாகத் தன் மனதில் வைத்திருக்கும் மனிதனுக்கு ஏதும் முட்டுக்கட்டையாய் இருக்காது. அவன் ஒவ்வொரு நாளும் தன் சிலுவையைச் சுமக்க ஆயத்தமாயிருக்கிறான். அது அவனுக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறது. கொடிய சோதனைக்கும் அவன் ஆயத்தமாயிருந்து அது புதியதொரு அனுபவம் என்று கருதாதபடியால் அதனால் தளர்வடைவதில்லை. பலரைப்போல் அவன் வளமையான வாழ்வினால் இடறலடைவதில்லை. துன்பமான வாழ்வினால் மனம் உடைந்துபோவதுமில்லை. ஏனெனில் வெளி வாழ்க்கையின் மாறுதல்கள்மேல் அவன் அக்கறை காட்டுவதில்லை. மற்றவர்கள் இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பாhகள்? என்று கேட்கும் நிலைக்குக் கொண்டு சேர்க்கும் விசுவாசத்தைக் குறித்த ஏதாவதொரு கடினமான மறைபொருளை ஆண்டவர் அவர் பங்காக்கினால் விசுவாசி யாதொரு கேள்வியும் கேட்காமல் அதை ஏற்றுக்கொள்கிறான். ஏனெனில் அவனுடைய அறிவுத்திறனைச் சார்ந்த இக்கட்டுகள் எல்லாம் ஆண்டவரின் கட்டளைகள்மேல் அவருக்குள் பயபக்தியினால் மேற்கொள்ளப்படுகின்றன. அக்கட்டளைகளே அவன் வாழ்க்கைக்கான மேலான ஆணைகள். அவன் மகிழ்ச்சியுடன் அவற்றிற்குப் பணிந்து வாழ்கிறான். ஆண்டவரே, இன்று என்னில் இவ்விதமான அன்பும் சமாதானமும் அமைதியும் ஏற்படக் கிரியை செய்யும்.

# 10. நோக்கிப் பார்த்துப் பிழைத்துக்கொள்

*அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை. கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார் (எண்.21:8).*

இது மகிமையான நற்செய்தியின் அமைப்புரு ஆகும். நம் கண்முன்னே இயேசு குற்றவாளியைப்போல சிலுவையில்

தொங்குகிறார். அவரை நோக்கிப் பார்த்தால் பாவமாகிய பாம்புக்கடியிலிருந்து சுகம் பெறுவோம். எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான். இதை வாசிப்பவர் தன் பாவங்களுக்காகத் துக்கப்படுகிறவரானால்..... எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்னும் வார்த்தைகளை கவனித்துப் பார்க்கட்டும். நோக்கிப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவரும் இது உண்மை என்று அறிவார்கள். நான் அது உண்மை என்று கண்டுபிடித்துள்ளேன். நான் இயேசுவை நோக்கிப் பார்த்து உடனே பிழைத்தேன். இதைத் திட்டமாய் அறிவேன். இதை வாசிப்பவரே, இயேசுவை நோக்கிப் பார்த்தால் நீரும் பிழைப்பீர். விஷத்தினால் உமக்கு வீக்கம் கண்டிருக்கிறது என்பதும் உமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதும் உண்மை. ஆனால் அதற்கான இந்த நிவாரணம் சந்தேகத்திற்கு இடமானது அல்ல. கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்.

வெண்கலத்தினாலான சர்ப்பம் அரும் பொருளாக சுகம் உள்ளவர்கள் பார்ப்பதற்காக உயரத்தில் வைக்கப்படவில்லை. ஆனால் கடிக்கப்பட்டவர்களுக்குச் சுகம் அளிக்கவே அது உயரத்தில் வைக்கப்பட்டது. இயேசு மெய்யான பாவிகளின் மெய்யான இரட்சகராக மரித்தார். கடிக்கப்பட்டதானால் நீர் குடிகாரனாயாவது, திருடனாயாவது, தூய்மை கெட்டவராயாவது, புனிதநிலை கெட்டவராயாவது மாறியிருந்தால் மகத்துவமான இரட்சகரை நோக்கிப் பார்ப்பது மேற்கூறிய நோய்களிலிருந்து உமக்குச் சுகமளித்து, நீர் தூய்மை உள்ளவராயும் கடவுளோடு கூட்டுறவு உள்ளவராயும் வாழச்செய்யும். நீர் நோக்கிப் பார்த்துப் பிழைப்பீராக !

## 11. நெருங்கிய கூட்டுறவு

இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமி.31:34).

உண்மையாகவே நாம் வேறு எதைப்பற்றியும் அறியாவிட்டாலும் ஆண்டவரை அறிந்திருக்கிறோம். இன்றே நம் அனுபவத்தில் இந்த வாக்குறுதி உண்மையாய் இருக்கிறது. இது அற்பமான சிறு வாக்குறுதியல்ல. நம்மில் அற்பமான விசுவாசியும் கிறிஸ்து இயேசுவின் கடவுளை அறிகிறோம். நாம் விரும்புகிற அளவு முழுவதுமாக அல்ல, ஆனால் உண்மையாகவும் கற்பனை அல்லாத விதமாகவும் ஆண்டவரை அறிகிறோம். அவரைப்பற்றிய கோட்பாடுகளை மட்டும் நாம் அறிந்திருக்கவில்லை. ஆனால் அவரையே அறிந்திருக்கிறோம். அவர் நம் பிதாவும் நண்பரும் ஆனவர். நாம் நேராகவே அவரோடு பழகியிருக்கிறோம். என் ஆண்டவரே, என் தேவனே என்று நாம் சொல்லக்கூடும். நாம் கடவுளோடு நெருங்கிய கூட்டுறவு உள்ளவர்களாயிருக்கிறோம். அவருடைய தூய தோழமையின் பல மகிழ்ச்சி நிறைந்த காலங்கள் செலவிட்டிருக்கிறோம். இனி நாம் நம் கடவுளுக்கு அந்நியரல்ல. ஆண்டவரின் இரகசியத்தை அறிந்தவர்களாய் இருக்கிறோம்.

இது இயற்கை நமக்குப் போதிப்பதைவிட அதிகமானது. மாம்சமும் இரத்தமும் கடவுளை நமக்கு வெளிப்படுத்தவில்லை. கிறிஸ்து இயேசுவே பிதாவை நமக்கு வெளிப்படுத்தினார். இவ்விதமாக ஆண்டவரே அவரை நாம் அறிந்துகொள்ளச் செய்திருக்கும்போது, இதுவே இரட்சிப்பைப்பற்றிய அறிவின் ஊற்றல்லவா? கடவுளை அறிவதே நித்திய வாழ்வு. ஆகவே, கடவுளை நாம் அறியத் தொடங்கியவுடன் புது வாழ்வில் உயிரடைவதன் அறிகுறிகளை உணர்கிறோம். என் ஆத்துமாவே,

இதை அறிந்தபடியால் மகிழ்ந்து இந்த நாள் முழுவதும் உன் கடவுளைப் போற்றித் துதி.

## 12. அவர் இனி நினைப்பதில்லை.

நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமி.31:34).

நாம் ஆண்டவரை அறிந்துகொள்ளும்போது நம் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுகிறோம். அவர் கிருபையின் கடவுள் என்று நம் குற்றங்களை மன்னிக்கிறவர் என்றும் அறிகிறோம். இதை அறிவதே மகிழ்ச்சி அளிக்கிறதாய் இருக்கிறது.

இந்த வாக்குறுதி கடவுளுக்கே உரியவிதமாகக் கொடுக்கப்படுகிறது. கடவுள் நம் பாவங்களை இனி நினையாதிருப்பதில்லை என்கிறார். கடவுள் மறப்பாரா? அவர் மறந்து விடுவதாகச் சொல்கிறார். அவர் சொன்னபடி செய்வார். நாம் பாவம் செய்யாதவர்கள் என்றே அவர் எண்ணுவார். நம் பாவங்களுக்கு எல்லாம் அவர் சிறப்பாகப் பரிகாரம் தேடிவிட்டபடியால் கடவுளின் மனதைவிட்டு அவை அகன்றேவிட்டன. ஆகையால் ஆதாம் குற்றமற்ற நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுபோல விசுவாசி கிறிஸ்து இயேசுவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறான். சொல்லப்போனால் விசுவாசி ஆதாமைவிடச் சிறந்த நிலையில் இருக்கிறான். ஏனெனில் அவனில் தெய்வீக நேர்மை இருக்கிறது. ஆதாமுக்கோ மனிதருக்குரிய தன்மைதான் இருந்தது.

மகிமை பொருந்திய ஆண்டவர் நம் பாவங்களுக்கேற்ற தண்டனை அளிக்கவேண்டும் என்பதற்காக அவற்றை நினைவில் வைக்கவும் மாட்டார். அவற்றினால் அவர் அன்பை கடுகளவும் குறைக்கவும் மாட்டார். ஒருவருக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் திருப்பிக்கொடுத்துவிட்டால் அது எப்படிக் கடனாய்

இராமற்போகிறதோ அதைப்போல நம் ஆண்டவர் தம் மக்களின் பாவங்களை முழுவதுமாகத் துடைத்து அழித்துவிடுகிறார். நம் பாவங்களுக்காக நம் உயிர் உள்ளவரை துக்கப்படுவது நம் கடமையாகும். நாம் அவ்விதம் செய்தாலும் அவை ஒருநாளும் நமக்கு எதிராக பயன்படுத்தப்படப்போவதில்லை என்பதைக் குறித்து நாம் மகிழ்ச்சிகொள்ளலாம். இது பாவத்தை வெறுக்க நம்மை ஏவுகிறது. கடவுள் இலவசமாக நமக்கு மன்னிப்பு அளித்துவிட்டது இனி ஒருபோதும் கீழ்ப்படியாமல் இருந்து அவரைத் துக்கப்படுத்தக்கூடாது என்பதைக் குறித்து கவனமாயிருக்க நம்மைத் தூண்டுகிறது.

## 13. புதிதாக்கப்பட்ட சரீரம்

*நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலி.3:2).*

பல சமயங்களில் நாம் நோயினால் அவதிப்பட்டு யோசிக்கவும் கடவுளை ஆராதிக்கவுங்கூட இயலாத நிலையில் இருக்கும்போது மெய்யாகவே இந்தச் சரீரம் அற்பமானது என்று உணர்கிறோம். மாம்சத்துக்கேதுவான வெறியினால் சோதனைகள் ஏற்படும்போது நம் சரீரத்தை அற்பமானது என்று குறிப்பிட்டதில் தவறில்லை என்று அறிகிறோம். நம் சரீரங்கள் நம்மைத் தாழ்வுபடுத்துகின்றன. அவை செய்யும் சிறப்பான காரியம் அதுதான். நம் சரீரங்கள் நம்மை மிருகங்களோடு ஒன்று சேர்ப்பதினாலும் நம்மைத் தூசியோடு இணைப்பதினாலும் நாம் உண்மையாகவே தாழ்மை உள்ளவர்களாயிருப்பது அவசியமாகும்.

ஆனால் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இதையெல்லாம் மாற்றிவிடுவார். நம் சரீரத்தை அவருடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பானதாக்குவார். இயேசுவை நம்புகிறவர்கள் ஒவ்வொருவரிலும் இந்த மாறுதல் ஏற்படும். விசுவாசத்தினாலே அவர்கள் ஆன்மாக்கள்

புதிதாக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக்கப்பட்ட அவர்கள் ஆவிக்கு எற்றதாக அவர்கள் சரீரங்களும் புதிதாக்கப்படும். இந்த மாற்றம் எவ்வளவு சீக்கிரம் ஏற்படும் என்று நாம் சொல்லமுடியாது. ஆனால் அதைக் குறித்த நிச்சயம் இக்காலச் சோதனைகளையும் மாம்சத்தைச் சார்ந்த துன்பங்களையும் சகிக்க உதவமுடியும். இன்னும் சிறிது காலத்தில் இயேசு இப்போது இருப்பதைப்போல நாமும் இருப்போம். அதற்குப் பின் நெற்றி வலியினாலோ, வீங்கின கைகால்களினாலோ, மங்கிவரும் கண்களினாலோ, திடனற்ற மனதினாலோ அவதியுற வேண்டியதில்லை. வயது முதிர்ந்தவர் பலனற்றவராயும் நோயுற்றவர் நோவு மிகுந்தவராயும் இருக்கவேண்டியதில்லை. இந்தச் சரீரம் அவர் மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்தப்படும். இது எவ்வளவு சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று பாருங்கள். அவ்விதமான உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கும் நம்பிக்கையோடு நம் சரீரமும் அமர்ந்திருக்கமுடியும்.

# 14. அவர் தெரிந்தெடுப்பதே நான் விரும்புவதாகும்.

*சிறப்பான தேசத்தை நமக்குச் சுதந்தரமாகத் தெரிந்தளிப்பார் (சங்.47:4).*

நம்முடைய பகைவர் வரண்ட பகுதியையே நம் பங்காக அளிப்பார்கள். ஆனால் நாம் அவர்கள் கைகளில் ஒப்பக்கொடுக்கப்படவில்லை. நாம் சுதந்தரமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். அவர் அளவில்லாத ஞானத்தின்படி நமக்கான இடத்தைக் குறித்திருக்கிறார். நம்மைவிட மிகுந்த ஞானமுள்ளவர் நம் வாழ்க்கைக்கான வழியை வகுத்தமைக்கிறார். எல்லாவற்றையும் கடவுளே நிலைப்படுத்துகிறார். அவ்விதம் இருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். கடவுள் நமக்காக எல்லாவற்றையும்

தெரிந்தெடுக்கவேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். யாவும் கடவுளின் திட்டப்படி இருக்கவேண்டுமென்றே நாமும் எண்ணுகிறவர்களாய் இருக்கிறோம்.

நம் அறிவு குறைவானது என்று நாம் அறிந்திருக்கிறபடியால் நம் வாழ்க்கை முறைகளை நாமே அமைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பமாட்டோம். நம் வாழ்க்கையான படகை நம் பகுத்துணர்வு செலுத்துவதைவிட ஆண்டவர் செலுத்தும்போது பத்திரமாயிருக்கிறோம் என்னும் அமைதி உள்ளவர்களாய் இருக்கிறோம். தொல்லை நிறைந்த இக்காலத்தையும், இன்னதென்று அறியாத எதிர்காலத்தையும் நம் பிதாவும், இரட்சகரும், தேற்றரவாளனும் பொறுப்பில் மகிழ்ச்சியோடு ஒப்படைத்துவிடுகிறோம்.

என் ஆத்துமாவே, இன்று உன் விருப்பத்தையெல்லாம் ஆண்டவர் பாதத்தில் வைத்துவிடு. சமீப காலத்தில் உன் விருப்பப்படி இருக்கவேண்டுமென்று சிறு பிள்ளைத்தனமாயும் உன் இச்சைப்படியும் நடந்துகொண்டிருந்தால் முட்டாள்தனம் மிகுந்த உன்னை மறந்துவிட்டு, உன் வாழ்க்கையை ஆண்டவர் கரத்தில் ஒப்புவித்து, அவர் தெரிந்தளிப்பார் என்று சொல். ஆண்டவர் தலைமையைக் குறித்து மற்றவர்கள் கருத்து வேறுபாடு தெரிவித்து, மக்களின் உரிமையைக் குறித்தே பெருமை உடையவர்களாய் இருந்தால், அவர்களிடம் எனக்கு அவர் தெரிந்தளிப்பார் என்று கூறுங்கள். அவரை நமக்காகத் தெரிந்தளிக்கவிடுவதே நாமே சுயமாகத் தெரிந்துகொள்வதாகும். நான் சுதந்தரம் உள்ளவனாக அவர் என்னை ஆட்கொள்ள வேண்டுமென்று தெரிந்துகொள்கிறேன்.

# 15. நீதிமான் விரும்புகிற காரியம் கொடுக்கப்படும்.

நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும் (நீதி.10:24).

நீதிமானின் விருப்பம் நீதியானது. ஆகையால் அதைக் கடவுள் அளிக்கும்போது எவ்விதத் தீங்கும் நேராது. அநீதியானவனுக்கு இந்த வாக்குறுதி அளிப்பது அவனுக்கு நல்லதல்ல, சமுதாயத்துக்கும் நல்லதல்ல. ஆண்டவரின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிவோமாக. அப்போது அவர் நேர்மையாக நாம் விரும்பகிறவற்றைக் கொடுப்பார்.

நீதிமான்கள் நேர்மையற்றவைகளை விரும்பும்போது அவை அவர்களுக்குக் கொடுக்கப்படமாட்டா. அவை அவர்களின் நேர்மையான விருப்பமாய் இரா. அவை அவர்களுடைய அலையாயும் எண்ணங்களும், அறியாமையால் ஏற்படும் பிழைகளுமேயாகும். ஆகையால் அவை கொடுக்கப்படாமலிருப்பது நல்லதே. அவர்களுடைய நேர்மையான விருப்பங்கள் ஆண்டவரின் சமுகத்தில் தெரிவிக்கப்படும். அவர் அவைகளைக் கொடுக்கமாட்டார்.

ஆண்டவர் சிறிதுகாலம் நாம் கேட்கிறவைகளை அளிக்காமல் இருக்கிறாரா? இன்றைய தினத்தின் வாக்குறுதி நாம் அதை மறுபடியும் கேட்கும்படி நமக்கு ஊக்கம் அளிப்பதாக. நமக்கு அவர் எதையாவது கொடுக்கவே முடியாது என்று சொல்லிவிட்டாலும் நாம் அவருக்கு நன்றிகூறவேண்டும். ஏனெனில் நம்முடைய நன்மைக்காக அவர் அவ்விதம் மறுப்பது நல்லது என்றே நாம் அறிகிறோம்.

சில காரியங்களை நாம் தைரியமாகக் கேட்கலாம். நாம் முக்கியமாகத் தூய்மை உள்ளவர்களாயும், பயன்உள்ளவர்களாயும், கிறிஸ்துவைப் போன்றவர்களாயும், மோட்சத்துக்குத் தகுதியும் ஆயத்தமும் உள்ளவர்களாயும் இருப்பதையுமே விரும்புகிறோம். இவை மாம்சத்துக்கேதுவான விருப்பங்கள் அல்ல. தெய்வத்திறம்

வாய்ந்த விருப்பங்கள் ஆகும். இவை நீதிமான்களின் விருப்பங்கள் ஆகும். இவை சாதாரண மனிதனின் விருப்பங்கள் அல்ல. கடவுள் இவற்றை ஓர் அளவுப்படி மட்டும் அளிக்கமாட்டார். நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் அளிப்பார். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். என் ஆன்மாவே, இந்நாளிலே உனக்கு வேண்டியதையெல்லாம் கேள்.

## 16. யாவும் பரிசுத்தமாக்கப்படும்

அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும் (சக.14:20).

யாவும் தூய்மையாக்கப்பட்டு, குதிரைகளின் மணிகள் ஆண்டவருக்குப் பரிசுத்தம் என்னும் ஒலியெழுப்பும். அந்நாள் பாக்கியமான நாள். என்னைப் பொறுத்தமட்டில் அந்த நாள் வந்துவிட்டது. நான் கடவுளுக்கென்று எல்லாவற்றையும் தூய்மைப்படுத்துகிறேனா? நான் அணிவதும் களைவதுமான உடைகள் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியைக் குறித்து என்னை நினைவுபடுத்தவேண்டுமல்லவா? நான் செய்யும் வேலை ஆண்டவருக்கு ஏற்றவிதமாகச் செய்யப்படவேண்டுமல்லவா? இன்று என் உடைகள் என் ஆசாரிய ஊழியத்துக்கான உடைகளாகவும். என் உணவு சாக்கிரமெந்துகளாகவும், என் வீடு ஆலயமாகவும், என் மேஜை பலிபீடமாகவும், என் பேச்சு தூபவர்க்கமாகவும், நான் ஓர் ஆசாரியனாகவும் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் ! ஆண்டவரே, உம் வாக்குறுதியை நிறைவேற்றி, எனக்கு யாதொன்றும் சாதாரணமானதாகவாவது, அசுத்தமானதாகவாவது இராமல் இருக்கச் செய்யும்.

விசுவாசத்தினால் நான் இதை எதிர்பார்ப்பேனாக ! இது நிறைவேறும் என்று நம்புவதனால் இது நிறைவேற உதவி

புரிவேனாக. நான் இயேசுவுக்குச் சொந்தமானபடியால், எனக்கு உள்ளவற்றையெல்லாம் என் ஆண்டவர் கணக்கெடுத்துக்கொள்வாராக. ஏனெனில் எல்லாம் அவருக்கே உரியவை. நான் இன்று அவற்றை உபயோகிக்கும் விதத்திலிருந்து இது உண்மையென்று நிரூபிக்கத் தீர்மானம் செய்கிறேன். காலையிலிருந்து மாலைவரை நான் செய்வதையெல்லாம் மகிழ்ச்சியும் தூய்மையான விதிப்படி செய்வேன். என் மணிகள் ஓசை எழுப்பும். அவற்றைத் தடுப்பது ஒன்றும் இல்லையே. என் குதிரைகளுக்கு மணிகள் இருக்கும். இனிய இசை பரிசுத்தவான்களுக்கு உரியது. என் மணிகள், இசை, மகிழ்ச்சி எல்லாம் பரிசுத்தமாக்கப்பட்டு, மகிழ்ச்சிகரமான கடவுளின் நாமத்தை ஒலிக்கும்.

# 17. எதிரிகள் சமாதானமாவார்கள்

*ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (நீதி.16:7).*

என் வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருப்பதைக் குறித்து நான் கவனமாயிருக்கவேண்டும். நான் அவ்விதம் இருந்தால்கூட எனக்குச் சத்துருக்கள் இருப்பார்கள். நிச்சயமாக இருப்பார்கள் என்று கூறலாம். ஏனெனில் நான் சரியானவற்றையே செய்ய முயலுகிறவனாய் இருப்பேன். இது எவ்வளவு சிறந்த வாக்குறுதியாகும். ஆண்டவர் மனிதனின் கோபம் தம்மைப் போற்றும்படி செய்வார். அது எனக்குத் தொல்லை அளிக்காதபடி அதைத் தணித்தும் விடுவார்.

என் சத்துரு எனக்குத் தீமை செய்ய நினைத்திருந்தாலும் அவன் அவ்விதம் செய்யாதபடி கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திவிடுவார். யாக்கோபைத் துரத்திச் சென்ற லாபான் அவன்மேல் கைபோடாதபடி மாற்றிவிட்டார். ஏசா,

யாக்கோபிடையே ஏற்பட்ட மாறுதலைப்போல சத்துருவின் கோபத்தை நீக்கி, அவன் நண்பனாகச் செய்வார். நாம் திரும்பி வந்தபோது ஏசா தம்மையும் தம் குடும்பத்தினரையும் வாளினால் வெட்டிவிடுவான் என்று யாக்கோபு பயந்தான். ஆனால் ஏசாவோ சகோதர அன்போடு யாக்கோபைச் சந்தித்தான். தரிசு பட்டணத்துச் சவுலை மாற்றியதுபோல வெறிகொண்ட எதிரியையும் கிறிஸ்துவில் சகோதரராகவும் உடன் ஊழியக்காரராகவும் ஆண்டவர் மாற்றிவிடுவார். மற்றவர்களைத் துன்புறுத்தும் ஆவி செயல்படும் ஒவ்வொரு இடத்திலும் ஆண்டவர் இவ்விதம் கிரியை செய்தால் எவ்வளவு நலமாயிருக்கும்.

சிங்கக் கெபியில் தானியேல் சந்தித்த சிங்கங்கள் அமைதியும் தோழமையும் உள்ளவைகளாய் மாறினதுபோல ஒருவரின் எதிரிகள் மாறிவிட்டால் அவர் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தவர் ஆவார். கடைசி எதிரி எனப்படும் மரணத்தைச் சந்திக்கும்போது நான் சமாதானம் உள்ளவனாய் இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். எல்லாவற்றிலும் ஆண்டவரை மகிழ்ச்சி அடையச் செய்கிறவனாய் இருக்கவேண்டும் என்பதைக் குறித்து மட்டும் நான் மிகுந்த கவனமாயிருப்பேனாக. மகா உன்னதமானவருக்கு மகிழ்ச்சி அளிக்கும் நம்பிக்கையும் தூய்மையும் நான் அடைவேனாக.

# 18. ஒருபோதும் உன்னை விட்டு விலகமாட்டார்

*நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை (யோசு.1:5).*

யோசுவாவுக்குச் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் பலமுறை மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகின்றன. ஏனெனில்

புதிய ஏற்பாட்டில் நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்ற அவர் சொல்லியிருக்கிறாரே என்பதற்கு அடிப்படையே அந்த சொற்கள் தாம்.

அன்பானவர்களே, போரிட வேண்டிய வாழ்க்கை நமக்குமுன் இருக்கிறது. ஆனால் சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். நாம் பலத்த ஜாதியாருக்குத் தலைமை தாங்கி நடத்த அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர்கள் நிலையற்ற தன்மை உள்ளவர்களா? நமக்குத் தேவையான ஞானத்தையும் விவேகத்தையும் அளிப்பதாக இந்த வாக்குறுதி அளிக்கிறது. தந்திரமும் வலிமையும் வாய்ந்த எதிரிகளோடு நாம் போராடவேண்டியிருக்கிறதா? இங்கு நமக்கு ஆற்றலும், பேராண்மையும், துணிவும், வெற்றியும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. நாம் மகிமையான சுதந்தரத்தை வெல்லவேண்டுமா? ஆண்டவரே நம்மோடு இருக்கிறார் என்பதனால் நம் நோக்கம் நிறைவேறும்.

யேகோவா நம்மைக் கைவிட்டு விட்டால் நம் நிலைமை பயங்கரமானதாகிவிடும். ஆனால் அவர் ஒருபோதும் அவ்விதம் செய்யமாட்டார். ஆகையால் பரிசுத்தமான கடவுள் உண்மையுள்ளவர் என்னும் நம்பிக்கையில் நம் கலக்கமெல்லாம் மறைந்துவிடுகிறது. ஆண்டவர் ஒருபோதும் நம்மை விட்டு விலகமாட்டார். என்ன நேரிட்டாலும் அவர் நம் பக்கத்திலேயே இருப்பார். நண்பர் நம்மைக் கைவிட்டுவிடுகிறார்கள். அவர்கள் உதவி கோடை மழையைப்போலவே இருக்கிறது. ஆனால் கடவுள் உண்மையுள்ளவர். இயேசு என்றும் மாறாதவர். பரிசுத்த ஆவியானவர் நம்மில் தங்கி இருக்கிறார்.

என் ஆன்மாவே, நீ நம்பிக்கையோடு அமர்ந்திரு. மேகக் கூட்டங்கள் ஒன்றுசேரலாம். அனால் ஆண்டவர் அவற்றைக் கலைத்துவிடுவார். கடவுள் என்னைக் கைவிடமாட்டார் என்பதனால் நானும் என் விலாசத்தை விடமாட்டேன். அவர்

என்னைவிட்டு விலகமாட்டார் என்பதனால் நானும் அவரைவிட்டு விலகமாட்டேன். இவ்விதமா நிலையான நம்பிக்கை எனக்கிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

# 19. தேடிக் கண்டுபிடிப்பதில் நிபுணர்

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப்பார்ப்பேன் (எசேக்.34:11).

அவர் தெரிந்துகொண்டவர்கள் மேய்ப்பனையும் மந்தையையும் அறியாமல் அலைந்துதிரியும் ஆடுகளைப்போல இருக்கும்போது இவ்விதம் செய்வார். ஆண்டவர் தாம் தெரிந்துகொண்டவர்களை எவ்வளவு அதிசய விதமாய்த் தேடிக் கண்டு பிடிக்கிறார். இயேசு தேடிக் கண்டுபிடிக்கும் மேய்ப்பராகவும் இரட்சிக்கும் மேய்ப்பராகவும் சிறப்பானவராகவுமிருக்கிறார். பிதா அவரிடம் கொடுத்தவர்களில் பலர் நரகத்தின் வாசல் அருகே எவ்வளவ தூரம் போகமுடியுமோ அவ்வளவு தூரம் போய்விட்டாலும் ஆண்டவர் தேடிக்கொண்டே அலைந்து அவர்களைக் கண்டு பிடித்து, கிருபையினால் அவர்களைச் சேர்த்துக்கொள்கிறார். அவர் நம்மையும் தேடிக் கண்டுபிடித்திருக்கிறார். நம் ஜெபத்தில் நினைவுகூரும் வழிதப்பி அலைபவர்களுக்காக நம்பிக்கை உள்ளவர்களாய் இருப்போமாக. ஏனெனில் அவர்களையும் அவர் கண்டுபிடித்துவிடுவார்.

உண்மையும் தூய்மையுமான மேய்ச்சல் இடங்களிலிருந்து விலகி, அலைந்து திரியும் எல்லா ஆடுகளையும் ஆண்டவர் இவ்விதம் தேடிக் கண்டபிடிக்கிறார். அவர்கள் பயங்கரமான குற்றத்திலாவது துயர் அளிக்கும் பாவத்தினாலாவது வீழ்ந்துவிடலாம். ஆனால் அவர்களுக்காகத் தம் பிதாவிடம் உத்தரவாதம் செய்துள்ள ஆண்டவர் அவர்களில் ஒருவராவது அழிவுவரை செல்லவிடமாட்டார். அருளினாலும்

கிருபையினாலும் அந்நிய நாடுகளிலும், வறுமையின் இருப்பிடங்களிலும், இருண்ட குகைளிலும், மனக்கசப்பின் ஆழத்திலும் தேடிச் செல்வார். பிதா அவருக்குக் கொடுத்துள்ள ஒருவரையாவது அவர் இழந்து விடமாட்டார். ஒருவரைக்கூட விடாமல் மந்தையிலுள்ள எல்லாரையும் தேடிக் கண்டுபிடித்து இரட்சிப்பது இயேசுவின் கடமை உணர்ச்சியாகும். இந்நேரத்தில் நான் காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பிப் போனேன் என்று கதறும் நிலையில் இருந்தால், நான் பற்றிக்கொள்ள எவ்வளவு அருமையான வாக்குறுதி எனக்கு இருக்கிறது.

## 20. உணர்ச்சியினாலல்ல விசுவாசத்தினால்

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ரோ.1:17).

நான் மரணமடையவதில்லை. என் கடவுளாகிய ஆண்டவரை நம்பமுடியும். நான் முழுவதுமாக நம்புகிறேன். இந்த நம்பிக்கை என்னை உயிருடன் இருக்கச் செய்யும். வாழ்க்கையில் நேர்மையாக நடந்தவர்களில் ஒருவனாக நானும் எண்ணப்படுவேன். ஆயினும் நான் குற்றமற்றவனாய் இருந்தாலும் என் சுய நீதியினால் வாழ முயலமாட்டேன். ஆண்டவராகிய இயேசுவின் கிரியைகளைப் பற்றிக்கொண்டு அவர்மேல் உள்ள நம்பிக்கையினால் மட்டுமே வாழ்வேன். என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக என் சரீரத்தைத் தீக்கிரையாக்க நேர்ந்தாலும் என் வீரத்தையும், உறுதியையும் நம்பாமல் விசுவாசத்தினால் மட்டுமே வாழ்வேன்.

மன உணர்ச்சியினாலும் கிரியைகளினாலும் வாழ்வதை விட விசுவாசத்தினால் வாழ்வதே நிச்சயமானதும் மகிழ்ச்சிகரமானதும் ஆகும். கிளையானது கொடியை விட்டுத் தனியே வாழக்கூடும், என்றாலும் தானாகத் தனித்து வாழ்வதைவிட கொடியோடு இணைந்து வாழ்வதே அதற்கு நலமானதாகும். இயேசுவைப் பற்றிக்கொண்டு அவரிடமிருந்தே எல்லாவற்றையும்

பெற்று வாழ்வது இனியதும் புனிதமானதும் ஆகும். நீதிமான்களே, இவ்விதம் வாழவேண்டுமென்றால் ஏழைப் பாவியாகிய நான் அவ்விதம் வாழவேண்டுமென்பது எவ்வளவு அவசியம் என்று நினைத்துப்பாருங்கள். ஆண்டவரே, நான் நம்புகிறேன். நான் உம்மை முழுவதுமாக நம்பவேண்டும். உம்மை நம்புவதே என் வாழ்க்கை. அவ்விதமாக இருக்கவேண்டுமென்று நான் உணர்கிறேன். இறுதிவரை அவ்விதம் நிலைத்து இருப்பேன்.

## 21. கடவுள் கைம்மாறு செய்வார்

ஏழைக்கு இரங்ககிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் (நீதி.19:17).

நாம் ஏழைகள்மேல் இரக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதை மற்றவர்கள் பார்த்து, பாராட்டுவதற்காக அல்ல. அவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்துவதற்காகவும் அல்ல. பரிவினாலும், இரக்க உணர்ச்சியினாலும் மட்டுமே. அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

ஏழைகளிடமிருந்து நாம் எந்தக் கைம்மாறும் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் நன்றியுள்ளவர்களாய் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் அவர்களுக்குக் கொடுத்ததை ஆண்டவருக்குக் கொடுத்த கடனாக எண்ணவேண்டும். நன்றிக்கடன் செலுத்துவதைஅவர்தம் பொறுப்பாக ஏற்றுக்கொள்கிறார். அதை அவர் செய்வார் என்று நாம் எதிர்பார்த்தால் ஏழைகளிடமிருந்து கடன் வாங்கும்போது நம்மை எவ்வளவு உயர்வாக மதிக்கிறார் என்பதை நினைத்துபஇ பாருங்கள். பற்று வரவுக் கணக்கில் ஆண்டவரின் பெயரைப் பெற்ற வியாபாரி சிறிய தொகையையே பறஇறாக வைத்திருப்பது பயனற்றது. அதைப் பெரிய தொகையாக்கலாம். தெவையில்

*இருப்பவராக நம்மிடம் அடுத்தாற்போல் வருபவருக்கு உடனே உதவி செய்வோமாக !*

*கைம்மாறைப்பற்றி நாம் நினைக்கக்கூடாது. ஆயினும் அதைக் குறித்து கடவுளிடம் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவா நாமம் மகிமைப்படுவதாக. அவர் வாக்குறுதியே பொன்னையும் வெள்ளியையும்விடச் சிறந்ததாகும். பொதுவான பணக்குறைவினால் நம்மிடமும் பொருள் குறைவாயிருக்கிறதா? நம் விற்பனைச் சீட்டை தாழ்மையாக நம்பிக்கையென்னும் வஙஇகியில் ஒப்படைப்போமாக. இதை வாசிப்பவர் யாராவது ஏழைகளிடத்திலஇ கடுமையாக நடந்துகொண்டதுண்டா? அவருக்காகப் பரிதாபப்படுவோம். ஆண்டவர் அவரை மன்னிப்பாராக.*

# 22. தூக்கிவிடுவதற்கு வல்லமை

*குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார். மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கிவிடுகிறார் (சங்.146:8).*

*நான் மடங்கடிக்கப்பட்டவனாய் இருக்கிறேனா? அப்படியானால் ஆண்டவரின் சமுகத்தில் கிருபையுள்ள அவர் சொற்களை வற்புறுத்திக் கூறுவேன். மடங்கடிக்கப்பட்டவர்களைத் தூக்கிவிடுவது அவர் வழி, பழக்கம், வாக்குறுதி, மகிழ்ச்சி ஆகும். பாவ உணர்ச்சியும் அதனால் ஏற்பட்ட மனச்சோர்வும் என்னை வேதனைப்படுத்துகிறதா? அப்படியானால் இச்சந்தர்ப்பத்தில் அவர் என்னை தூக்கிவிடவேண்டும். ஆண்டவரே, உம் கிருபையினால் என்னைத் தூக்கிவிடும்.*

*அல்லது மரணத்தினால் யாராவது இழந்து துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறேனா? அல்லது சூழ்நிலை மாற்றத்தினால் கவலையடைந்திருக்கிறேனா? இங்கேயும் தேற்றரவாளன்*

ஆறுதலளிக்க முன்வருகிறார். தூய திரியேகரில் ஒருவர் தேற்றரவாளனாயிருப்பது எவ்வளவு கிருபை நிறைந்த செயல் ஆகும். மகிமை நிறைந்தவர் இவ்வேலையைத் தமதாக்கிக் கொண்டிருப்பதால் அதைச் செய்தே தீருவார்.

சிலர் மடங்கடிக்கப்பட்டு, கீழேயே விழுந்து கிடப்பதால் அவர்கள் பெலவீனத்திலிருந்து இயேசு ஒருவரே அவர்களைப் பெலப்படுத்தி, தூக்கிவிட முடியும். அவராலே செய்ய முடியும். அவர் கண்டிப்பாகச் செய்வார். நம்மை நற்சுகத்துக்கும், நம்பிக்கைக்கும், மகிழ்ச்சிக்கும் உயர்த்த அவரால் முடியும். கடந்த காலத்தில் கடுந்துன்ப அனுபவங்கள் ஏற்பட்டபோது அவர் அவ்விதம் உதவியிருக்கிறார். அவர் மாறாத இரட்சகர். அன்பும் இரக்கமும் நிறைந்த செயல்களைச் செய்துகொண்டேயிருப்பார். இன்று மடங்கடிக்கப்பட்டவர்களாயும், துக்கம் நிறைந்தவர்களாயும் இருக்கும் நாமும் உயர்த்தப்படுவோம். இப்போது நம்மைப் பரியாசம் செய்பவர்கள் வெட்கப்பட்டுப் போவார்கள். ஆண்டவரால் உயர்த்தப்படுவது எவ்வளவு மகிமையானதாகும். நம்மை உயர்த்தக்கூடிய அவர் வல்லமையைக் காண்பதற்காக இப்போது மடங்கடிக்கப்பட்டவர்களாய் இருப்பதைக் குறித்து நாம் கவலைப்படக்கூடாது.

## 23. மரணத்தைக் குறித்து அச்சமில்லை

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (வெளி 2:11).

ஆண்டவர் தம்முடைய ஆலயத்துக்குத் திடீரென்று வந்துவிட்டாலன்றி முதல் மரணத்தை நாம் அனுபவிக்க வேண்டியதிருக்கும் மரணம் துயரார்ந்த கிடங்கு அல்ல. அது மகிமைக்குச் செல்லும் வழியேயாகும் என்று இயேசு மாற்றி

அமைத்துள்ளபடியால் நாம் அச்சமின்றி அதற்காக ஆயத்தத்துடன் காத்திருப்போமாக.

முதல் மரணத்தைக் குறித்து அல்ல இரண்டாம் மரணத்தைக் குறித்தே நாம் அச்சம் கொள்ளவேண்டியதாகும். அதாவது ஆன்மா சரீரத்தை விட்டுப் பிரிவதைக் குறித்ததல்ல, இறுதியாகக் கடவுளிடமிருந்து மனிதன் முழுவதுமாகப் பிரிக்கப்படுவதைக் குறித்தே அச்சம் கொள்ளவேண்டும். இதுதான் உண்மையான மரணமாகும். இந்த மரணம் சமாதானம் சந்தோஷம் நம்பிக்கை எல்லாவற்றையும்

அழித்துவிடுகிறது. கடவுள் இல்லாவிட்டால் ஒன்றும் இல்லை. நாம் உயிரோடு இருப்பதைவிட இந்தவிமான மரணம் பயங்கரமானது.

கடவுளின் கிருபையினால் நாம் இறுதிவரை போராடி மகிமையான யுத்தத்தில் வெற்றிபெற்றால் இரண்டாவது மரணம் நம்மைத் தொடமுடியாது. மரணத்தை குறித்தும் நரகத்தைக் குறித்தும் நாம் பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் நாம் நித்திய வாழ்வின் வாடாத கிரீடத்தைப் பெறுவோம். இந்த நம்பிக்கை போர் செய்ய நமக்கு ஊக்கம் அளிக்கிறது. நித்திய வாழ்வுக்காக வாழ்நாளெல்லாம் போர் புரியலாம். இரண்டாவது மரணத்தினால் சேதப்படாமலிருக்க வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடலாம்.

ஆண்டவரே மேற்கொள்வதற்கான நம்பிக்கையை எங்களுக்கு அருளும். சாத்தானும் பாவமும் எங்களைத் தொடர்ந்து வந்தாலும் சேதம் அடையாமலிக்கும்

கிருபையை அருளிச் செய்யும்.

# 24. ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான தகுதி

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப்பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்.3:10).

பலர் இந்த ஆசீர்வாத்தைப்பெற தங்களைத் தகுதியுள்ளவர்களாக்க என்ன செய்ய வேண்டும் என்பதைக் கவனிக்காமல் இதை வாசித்து இந்த ஆசீர்வாதத்தை அருளிச்செய்ய வேண்டிக்கொள்ளுகிறார்கள். நம்முடைய கடவுளாகிய ஆண்டவருக்கும் அவர் வேலைக்கும் நாம் கொடுக்கவேண்டியவைகளைக் கொடுக்காமல் வானத்தின் பலகணிகள் திறக்கப்படும் என்றாவது ஆசீர்வாதங்கள் பொழியும் என்றாவது எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் யாவரும் தாங்கள் செலுத்தவேண்யெவைகளைக் குறைவின்றிச் செலுத்தினால் தூய பணிகளுக்குத் தேவையான பொருள் குறைபாடு ஏற்படாது.

பலர் கடவுளிடமிருந்து திருடுவதால் ஏழைகளாகவே இருக்கிறார்கள். பல ஆலயங்களும் தங்கள் போதகர்களைப் பசியினால் வாட விட்டுவிடுவதால் பரிசுத்த ஆவியானவரின் வருகையைத் தடை செய்துவிடுகிறார்கள். கடவுளின் ஊழியக்காரருடைய வாழ்க்கைக்குத் தேவையானவை அவர்களுக்கு அளிக்கப்படாவிட்டால் அவர்கள் ஊழியத்தில் நம் ஆன்மாவுக்குத் தேவையான உணவு குறைவுபடுவதைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஊழியங்கள் பணக்குறைவினால் வாடும்போதும் பணமின்றி ஆண்டவரின் சேவை தடைப்படும் போதும் ஆன்மாக்கள் செழித்து வளரக்கூடும் என்று நாம் எப்படி எதிர்பார்க்கலாம்? நான் நினைத்துப் பார்ப்பேன் சமீப காலத்தில்

நான் கடவுளுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறேன்? என் கடவுளுக்குக் கொடுப்பதில் நான் அற்பத்தனமாய் இருந்திருக்கிறேனா? என் இரட்சகருக்கு வேண்டா வெறுப்புடன் கொடுத்திருக்கினோ? இது சரியல்ல ஏழைகளுக்கு உதவிசெய்தும் அவர் ஊழியத்துக்குப் பணம் கொடுத்தும் என் ஆண்டவராகிய இயேசுவுக்குத் தசமபாகத்தை நான் உவந்து அளித்தால் என்மேல் ஆசீர்வாதங்களைப் பொழிய அவருக்குள்ள வல்லமையை மெய்ப்பிப்பேன்.

# 25. பிள்ளைகளுக்கு எதை விட்டுப்போவது ?

நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான். அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள். (நீதி.20:7).

நம் குடும்பத்தினரைக் குறித்து நாம் கவலைப்படுவது இயற்கையே. ஆனால் அதை நாம் நடத்தையைச் சரிப்படுத்துவதைக் குறித்த கவலையாக்கினால் நாம் ஞானம் உள்ளவர்கள் ஆவோம். ஆண்டவர் முன் நாம் உத்தமர்களாய் நடந்தால் நம் பிள்ளைகளுக்கு ஏராளமான சொத்துக்களை விட்டுப் போவதைவிட அவர்களை அதிகமாய் ஆசீர்வதிக்கிறவர்களாய் இருப்போம். ஒரு தகப்பனின் தூய வாழ்க்கையே அவன் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லும் பெருஞ்சொத்தாகும்.

நேர்மையான மனிதன் தன் முன்மாதிரியைத் தன் பின் சந்ததியாருக்கு விட்டுச் செல்கிறான். அது உண்மையான செல்வச்சுரங்கமாகும். எத்தனை எத்தனையோ பேர் வாழ்க்கையில் தங்கள் வெற்றிக்குக் காரணம் தங்கள் பெற்றோரின் முன்மாதிரியேயாகும் என்று சொல்லக் கூடும்.

அப்படிப்பட்ட தகப்பன் தன் நன்மதிப்பையும் விட்டுச் செல்கிறார். நம்பக்கூடிய ஒருவரின் பிள்ளைகள் என்றாலும்

நற்பெயர் பெற்றிருந்த ஒரு வியாபாரியின் சந்ததியார் என்றாலும் மக்கள் நம்மை மதிப்பார்கள். தங்கள் குடும்பத்தின் நற்பெயரைப் பேணிக்காக்க வாலிபர் கவனமாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

எல்லாவற்றுக்கும் மேலாக அவன் தன் பிள்ளைகளுக்காகத் தாம் செய்த வேண்டுதல்களையும் ஜெபங்களைக் கேட்கும் ஆண்டவரின் ஆசீர்வாதங்களையும் விட்டுச் செல்கிறார். இவற்றினால் நம் பிள்ளைகள் சலுகைகள் பெறுகிறவர்கள் ஆகிறார்கள். நாம் மரித்த பின்பும் கடவுள் அவர்களை இரட்சிப்பார். அவர்கள் இப்போதே இரட்சிக்கப்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

நம் நேர்மையே நம் பிள்ளைகளைக் கடவுள் இரட்சிப்பதற்கான வழியாய் இருக்கலாம். நம் நம்பிக்கை உண்மையானதென்பது நம் வாழ்க்கையினால் மெய்ப்பிக்கப்பட்டால் அவர்களும் இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்களாய் இருப்பார்கள். ஆண்டவரே இந்த விருப்பம் என் குடும்பத்தாரில் நிறைவேறக் கிருபை செய்யும்.

## 26. கருணையுடன் நடத்துதல்

இப்படி உன் தேவனாகிய கர்த்தர் நீ செய்யும் எல்லாவற்றிலும் உன்னை ஆசீர்வதிப்பார் (உபா.15:18).

இஸ்ரவேலரில் எஜமான் ஆனவர் குறித்த காலத்தில் தன்னிடம் அடிமையாகச் சேவித்தவனுக்கு விடுதலை அளிக்கவேண்டும். வேலையை விட்டுப் போகும்போது அவன் ஏதாவது தொழில் செய்ய அவனுக்குத் தாராளமாய்க் கொடுத்து அனுப்ப வேண்டும். இதை மகிழ்ச்சியோடும் மனக்கசப்பில்லாமலும் செய்தால் அந்த எஜமானனின் தாராள மனப்பான்மையை ஆண்டவர் ஆசீர்வதிப்பதாகச் சொன்னார்.

*இந்த போதனையின் கருத்தும் கிறிஸ்துவின் விதிமுறைகளும் நம்மிடம் வேலை செய்பவர்களைச் சரியான விதமாக நடத்த வேண்டும் என்பதையே உறுதிசெய்கின்றன. ஆண்டவர் நம்மை எவ்விதம் நடத்துகிறார் என்பதை நினைவிற்கொண்டு நாமும் மற்றவர்களைத் தகுந்தவிதமாக நடத்தவேண்டும். கிருபை நிறைந்த கடவுளின் பிள்ளைகளானவர்கள் தாராள மனப்பான்மை உள்ளவர்களாய் இருப்பது அவசியம். நமக்கு ஊழியம் செய்பவர்களை நாம் கொடுமைப்படுத்தினால் நம் தொழிலில் நம் எஜமானர் நம்மை ஆசீர்வதிப்பார் என்று எப்படி எதிர்பார்க்கலாம் ?*

*தாராளமான மனப்பான்மை உள்ளவர்களுக்கு எவ்விதமான ஆசிவழங்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். செய்யும் எல்லாவற்றிலும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்போமேயானால் அது மிகச் சிறந்த ஆசீர்வாதமேயாகும். இந்த ஆசீர்வாதத்தை வாழ்வின் வளத்திலும் மனத்திருப்தியிலும் ஆண்டவர் காட்டும் சலுகையின் மூலமும் பெறுவோம். நாம் அவர் சிறப்பான பாதுகாப்பில் இருக்கிறோம் என்றும் அவர் அன்பு எம்மைச் சூழ்ந்திருக்கிறது என்றும் உணரச் செய்யும் சிறந்த ஆசீர்வாதம் அவர் காட்டும் சலுகையே ஆகும். இதனால் இவ்வுலக வாழ்க்கை இனிவரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை முன் குறித்து காட்டுவதாகக் கொள்ளலாம். கடவுளின் ஆசீர்வாதம் சொத்து செல்வத்தை எல்லாம் விடச்சிறந்தது. ஏனெனில் அது ஐசுவரியந்தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்.*

# 27. கடவுள் தம் வேலையை முடித்து விடுகிறார்

*கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் (சங். 138:8).*

என் ஆன்மாவில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை முடிவுபரியந்தம் நடத்துவார். என்னைப்பற்றிய எல்லாவற்றைக் குறித்தும் கடவுள் அக்கறையுள்ளவராய் இருக்கிறார். இப்பொழுது நல்லவிதமாய்த் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாமல் இருக்கிறவைகளைக் கவனித்து பாதுகாத்து முற்றுப்பெறச் செய்வார். இது நமக்கு ஆறுதல் அளிப்பதாகும். கிருபையின் கிரியையை நான் முற்றுப்பெறச் செய்ய முடியாது. இது நமக்குத் திட்டமாய்த் தெரியும். ஏனெனில் ஒவ்வொரு நாளும் நான் தவறு செய்கிறேன். இவ்வளவு நாள்வரை நான் தாக்குப்பிடித்ததே ஆண்டவர் எனக்குத் துணைபுரிந்ததால்தான் ஆண்டவர் என்னை விட்டுச் செல்வாரேயானால் என் கடந்த கால அனுபவங்கள் எல்லாம் ஒன்றுமில்லாமற் போகும். நானும் வழியில் அழிந்து விடுவேன். ஆனால் ஆண்டவர் தொடர்ந்து என்னை ஆசீர்வதிப்பார். என் நம்பிக்கை அன்பு என் நற்பண்புகள் என் வாழ்க்கையின் குறிக்கோள் எல்லாம் முற்றுப்பெறச் செய்வார். என்னில் அவர் கிரியை செய்யத் தொடங்கி இருப்பதால் அவர் இவ்விதம் செய்து முடிப்பார். எனக்கு ஊக்கத்தை அளித்துள்ளார். கருணை நிறைந்த என் பேரார்வச் செயல்களை நிறைவு பெறச் செய்துள்ளார். எந்த வேலையையும் அவர் முடிவடையுமுன் நிறுத்திவிடுவதில்லை. ஏனெனில் அது அவர் தன்மையுமல்ல. அவர் மகிமைக்கு ஏற்றதுமில்லை. கிருபை பொருந்திய அவர் திட்டங்களை எவ்விதம் நிறைவேற்றுவது என்று அவர் அறிவார். தீமை வாய்ந்த என் தன்மையும் உலகமும் பிசாசும் அவர் கிரியை செய்வதைத் தடுக்க முயற்சி செய்தாலும் நான் அவர் வாக்குறுதிகளைச் சந்தேகிப்பதில்லை. என்னைப்பற்றியவற்றை அவர் முற்றுப்பெறச் செய்வார். நான் எப்போதும் அவரைப் போற்றிப் புகழ்வேன். ஆண்டவரே இந்நாளில் கிரியை நிறைந்த உம் செயல்கள் வளர்ச்சியடையட்டும்.

## 28. அது ஓர் ஒப்பந்தம் ஆகிறது

நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் (2.கொரி 6:16).

இது ஒருவர் மேல் ஒருவர் பற்றுக் காட்டும் ஓர் ஒப்பந்தம். இருவரும் ஒருவருக்கு ஒருவர் உரியவர்கள். கடவுள் அவர் மக்களுக்கு உரியவர். தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் கடவுளுக்கு உரியவர்கள். பரிசுத்தவான்கள் கடவுளைத் தங்கள் சிறந்த சொத்தாகக் கருதுகிறார்கள். கடவுள் அவர்களைத் தம் சிறப்பான பொக்கிஷமாகக் கொள்கிறார். இது ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆறுதல் அளிப்பதாகும்.

இவ்வாறு ஒருவர்மேல் ஒருவர் பற்று உள்ளவர்களாயிருத்தல் ஒருவர்மேல் ஒருவர் அக்கறை காட்டவும் தூண்டுகிறது. கடவுள் எப்போதும் தம் சொந்த மக்களைப்பற்றி எண்ணம் உள்ளவராயிருப்பார். அவர்களும் அவரைப்பற்றிய எண்ணம் உள்ளவர்களாய் இருப்பார்கள். இன்றைய தினம் என் கடவுள் எனக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார். நான் அவருக்காக என்ன செய்யலாம்? என் எண்ணங்கள் அவரைப்பற்றினவாக இருக்க வேண்டும். ஏனெனில் அவர் என்னைப் பற்றி நினைவுள்ளவராய் இருக்கிறார். இது இப்படி இருக்க வேண்டும் என்று மட்டும் நான் எண்ணாமல் திட்டமாய் அப்படியிருக்கிறதா என்பதைக் குறித்து கவனமாய் இருக்கவேண்டும்.

இது ஒருவரோடு ஒருவரைத் தோழமை உள்ளவர்களாகவும் ஆக்குகிறது. கடவுள் நம்மில் நிலைத்திருக்கிறார். நாம் அவரில் நிலைத்திருக்கிறோம். அவர் நம்மோடு உறவாடுகிறார். நாம் அவரோடு உறவாடுகிறோம். இது மகிழ்ச்சிகரமான கூட்டுறவு ஆகும்.

ஆண்டவரை என் கடவுளாக ஏற்றுக்கொள்ளவும் கடவுளான அவருக்கு ஏற்றவிதமாக அவரை நம்பவும் அவருக்காக உழைக்கவும் தேவையான பண்பு எனக்கு இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! யேகோவாவை ஆவியோடும் உண்மையோடும் நேசித்து வழிபட்டு போற்றிப் புகழ்ந்து அவருக்குக் கீழ்ப்படியக் கூடுமானால் எவ்வளவு சிறப்பாயிருக்கும். இதுதான் என் உள்ளத்தின் விருப்பமாகும். அதை நான் அடையும் போது என் மோட்சத்தைப் பெற்றவன் ஆவேன். ஆண்டவரே எனக்கு உதவி செய்யும். உம்மை என் கடவுளாக ஏற்றுக் கொள்ளத் துணைபுரிவதற்கு என் கடவுளாயிரும். இயேசு கிறிஸ்து மூலம் வேண்டிக்கொள்கிறேன்.

## 29. மன்னித்து மறந்து விடு

தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே. கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை இரட்சிப்பார் (நீதி.20:22).

அவசரப்படாதே உன்சினம் தணியட்டும். பழிவாங்குவதற்காக எதுவும் சொல்லாதே. எதுவும் செய்யாதே. உன் கைத்தடியை எடுத்துக்கொண்டு உன் போர்களில் நீயே

சண்டை செய்யப் போவாயேயானால் அறிவுக் கேடாகஏதாவது செய்துவிடுவாய். அதுவுமல்லாமல் ஆண்டவர் இயேசுவின் தன்மையையும் காட்டுகிறவனாய் இருக்கமாட்டாய். அக்குற்றத்தை மன்னித்து அதை விட்டுவிடுவது நற்பண்பாகும். உனக்குச் செய்யப்பட்ட தீமை மனதிலே உறுத்திக் கொண்டு இருக்கச் செய்து எவ்விதம் பழிவாங்கலாம் என்று ஆழ்ந்து திட்டமிட்டுக் கொண்டேயிருப்பது பழைய காயங்களை ஆறவிடாமல் தடுப்பதையும் புதுக்காயங்கள் ஏற்பட வழி வகைகள் ஆயத்தம் செய்து கொடுப்பதையும் போன்றதாகும். மன்னித்து மறந்து விடுவது நல்லது.

ஒருவேளை ஏதாவது செய்யாவிட்டால் அதிகமாய் இழந்துவிட நேரிடும் என்று நீ எண்ணினால் மேலே கூறப்பட்ட வாக்குறுதியில் சொல்லப்பட்டிருப்பதுபோல் கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார். இந்த ஆலோசனையை நீ விலைக்கு வாங்க வேண்டியதில்லை. ஆனால் இது மிகவும் விலையேறப் பெற்றதாகும். குழப்பம் இல்லாமல் அமைதியாய் இரு. கர்த்தருக்குக் காத்திரு. உன் மனக்குறையை அவரிடம் எடுத்துச் சொல். அதுவே உன் மனக்கனத்தைக் குறைக்கும். அதோடு அவர் உன்னை இரட்சிப்பார் என்ற வாக்குறுதியும் உனக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. உன்னை விடுவிப்பதற்கு ஏற்ற வழியை ஆண்டவர் கண்டு பிடிப்பார். அவர் அதை எவ்விதம் செய்வார் என்பதை நானாவது நீங்களாவது ஊகித்துப் பார்க்க முடியாது. ஆனால் அவர் கண்டிப்பாகச் செய்வார். நீங்கள் சிறு சச்சரவுகளில் ஈபடுவதையும் அசுத்தத்தோடு மல்லுக்கு நிற்பதால் அசுத்தம் அடைவதையும்விட ஆண்டவர் உன்னை இரட்சிக்கும் வாய்ப்புக்குக் காத்திருப்பது எவ்வளவு மேலானது என்று நினைத்துப்பாருங்கள். சினத்தை விட்டுவிடுங்கள். எல்லோருக்கும் மேலான நியாயாதிபதியிடம் உங்கள் வழக்கை விட்டுவிடுங்கள்.

## 30. மேற்கொள்பவரின் பரிசு

ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக் கூடாததுமாகிய புதிய நாமத்தைக் கொடுப்பேன். (வெளி 2:17).

என் உள்ளமே, தூயப்போரை விடாமுயற்சியுடன் செய்ய ஊக்கம் உள்ளதாயிரு. ஏனெனில் வெற்றிக்கான பரிசு மிகவும் சிறப்புள்ளதாகும். இன்று நாம் பாசறையைச்

சுற்றி விழும் வானுலகத்துக்குரிய உணவை உண்கிறோம். அது வனாந்தரத்தின் உணவு வானுலகத்திலிருந்து வரும் உணவு கானானுக்குச் செல்லும் யாத்திரிகளுக்கு எப்போதும் கிடைக்கும் உணவு. ஆனால் இயேசு கிறிஸ்துவில் நமக்கென்று இதைவிட மேலான ஆன்ம வாழ்வும் அதற்கான உணவும் காத்திருக்கின்றன. அது இப்போது நம் அனுபவத்திலிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த பொற்பாத்திரத்தில் சிறிது மன்னா பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. அது பல்லாண்டுகாலமாக அவ்வாறு வைக்கப்பட்டிருந்தாலும் கெட்டுப் போகவில்லை. அதை ஒருவரும் ஒருநாளும் பார்த்ததில்லை. உடன்படிக்கைப் பெட்டியில் அது மகா பரிசுத்த ஸ்தலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதேபோல விசுவாசியின் உயர்வான வாழ்க்கை கடவுளில் கிறிஸ்துவோடு மறைத்து வைக்கப் பட்டுள்ளது. நாம் விரைவில் அதை அடைவோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையின் மூலமாய் வெற்றி பெற்றபின் அரசரின் விருந்தில் பங்கு பெற்று அரச விருந்தை உண்போம். இயேசு கிறிஸ்துவை உண்போம். நமக்கு மறைக்கப்பட்டிருக்கும் மன்னாவும் வனாந்தரத்தின் மன்னாவும் அவரே. நம் உயர்வான நிலையிலும் கீழான நிலையிலும் எல்லாவற்றுக்கும் எல்லாமும் அவரே. போரிட அவர் நமக்கு உதவி செய்கிறார். வெற்றியை அளிக்கிறார். அவரே பரிசும் ஆகிறார். ஆண்டவரே மேற்கொள்ள எனக்கு உதவி செய்யும்.

# 05 மே

1. பாட்டினால் நிறைந்து
2. ஆத்மீக விதைப்பு
3. அவர் தொனியைக் கேட்க ஆயத்தமாயிருங்கள்
4. தோல்வியில் வெற்றி
5. ஏன் சிறையில் நிலைத்திருக்கவேண்டும் ?
6. பொறாமைக்கு மருந்து
7. தீமையானவற்றை அகற்று
8. உதவி தேவை
9. நம்பிக்கை மகிழ்ச்சியைக் குறிக்கிறது
10. கடவுளுக்குப் பயப்படுங்கள்
11. இறுதித் தேர்வுக்காகக் காத்திருங்கள்
12. ஊழியக்காரர் கனப்படுத்தப்படுவார்கள்
13. பகல் சமீபமாயிற்று
14. சுகம் பெறுவதற்கு அறுவை சிகிச்சை
15. கடவுளின் உயர்வான இடங்கள்
16. பிறருக்குக் கொடு! பெற்றுக்கொள்
17. கையிறுக்கம் பண்ணத்தேவையில்லை
18. இழப்புகள் சரி செய்யப்படும்
19. கடவுளுக்காக நாம் பேசலாம்
20. நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை
21. மேகங்கள் இல்லாமல் மழை உண்டா ?
22. உறுதியான நம்பிக்கையின் பாட்டு
23. கடவுள்மேல் முழுவதுமாக சார்ந்திருத்தல்
24. ஒருவரே பெரும்பான்மையானவர்
25. கடவுளின் பொக்கிஷசாலை
26. சாதாரணமானவை ஆசீர்வதிக்கப்படும்
27. வாழ்க்கையைப்போலவே கனியும் இருக்கும்
28. கடவுளுக்கு அவர் வாக்குறுதியை நினைவூட்டு

29. மீன் பிடிக்கிறவர்கள் அவருக்குப் பின்சென்றார்கள்
30. தூய முன்னோக்கு
31. திடன் கொள்ளுங்கள்

# 1. பாட்டினால் நிறைந்து

பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும் (ஏசா.55:12).

பாவம் மன்னிக்கப்பட்டதும் நம் துக்கம் நீங்கி மகிழ்ச்சி தொடங்குகிறது. ஆண்டவர் தம்மோடு ஒப்புரவாக்கப்பட்டவர்களுக்கு இவ்வித மகிழ்ச்சியையே அளிக்கிறார். அது பொங்கி வழிந்து இயற்கையையே மகிழ்ச்சியால் நிரப்புகிறது. பருப்பொருள் சார்ந்த உலகில் இசை நிறைந்திருக்கிறது. புதிதாக்கப்பட்ட இதயம் அதை வெளிப்படுத்தி நாதமாக்கும் முறையை அறிந்திருக்கிறது. படைப்பு இசைக்கருவியாகும். கிருபை நிறைந்த மனிதன் அதன் சுரத் தொகுதியைக் கண்டு பிடித்து அதில் பண்இசைத்து படைப்பையெல்லாம் ஒருங்கிசைத்து துதிபாடச் செய்கிறான். மலைகளும் குன்றுகளும் இயற்கையின் பெரிய பொருள்களும் இசைக்குழுவில் கெம்பீரமாய் முழங்குகின்றன. காட்டிலுள்ள மரங்களும் மற்றும் உயிருள்ளவை எல்லாம் இன்னிசையின் நயத்தை வெளிப்படுத்துவதில் ஈடுபடுகின்றன.

கடவுளின் செய்தி எங்கும் எடுத்துச் செல்லப்பட்டு ஆன்மாக்கள் இரட்சிக்கப்படும்போது எங்கும் பாட்டினால் நிறைந்திருக்கிறது. இளம் விசுவாசிகள் பாவங்களை அறிக்கையிடுவதையும் நன்கு அறிவுறுத்தப்பட்ட பரிசுத்தவான்கள் சாட்சி கூறுவதையும் கேட்கும்போது நம்மில் மகிழ்ச்சி பொங்கி நாம் ஆண்டவரைத் துதித்துப்பாட ஏவப்படுகிறோம். அப்போது பர்வதங்களும் மலைகளும் காடுகளும் வயல் வெளிகளும் நம் பாட்டை எதிரொலித்து உலகையே இன்னிசை பரப்பும் இசைக் கருவியாளர் குழுவாக்குகிறது. ஆண்டவரே மகிழ்ச்சிகரமான மே

தினத்தில் இசை பாடும் வானம்பாடி பாடி மகிழ்வதுபோல இன்னிசை நிறைந்திருக்கும் உலகிற்குள் என்னை வழிநடத்தும்.

## 2. ஆத்மீக விதைப்பு

ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலேயே நித்திய ஜீவனை அறுப்பான் (கலா.6:8).

விதையை விதைக்கும் போது விதையை இழந்துவிடுவதுபோல தோன்றுகிறது. ஏனெனில் நல்ல விதையை அப்படியே மறுபடியும் பார்க்க மாட்டோம் என்றாலும் நாம் பூமிக்கு விதைக்கிறோம் ஆவிக்கு விதைப்பது கற்பனையான தெளிவற்ற செயல்போல தோன்றுகிறது. ஏனெனில் நாம் தன்னலந்துறக்கிறோம். ஆனால் யாதொரு பயனும் அடைவதில்லை. ஆயினும் நாம் கடவுளுக்கேற்றவிதமாய் வாழப்படித்தும் கடவுளின் சித்தத்துக்குக் கீழ்ப்படிவதை நாடி உழைத்தும் அவர் மகிமைக்கேற்றவைகளைச் செய்தும் ஆவிக்கு விதைப்பது நாம் விதைப்பது வீணாய்ப் போவதில்லை. வாழ்க்கை நித்தியவாழ்க்கை நம் பரிசாயிருக்கும். இங்கு ஆண்டவரைப் பற்றி அறிவதிலும் கடவுளோடு ஒன்று படுவதிலும் கடவுளில் மகிழ்ச்சி அடைவதிலும் அதை அனுபவிக்கிறோம். முடிவற்ற பேரின்பக் கடலுக்கு இந்த வாழ்க்கை எம்மை இழுத்துச் செல்கிறது. ஆழமாகிக் கொண்டேயும் அகலமாகிக் கொண்டேயும் ஓடும் ஆற்றைப்போல செல்லுகிறுது.

இந்நாளில் நாம் மாம்சத்துக்கென்று விதைக்காமல் இருப்போமாக அவ்விதம் செய்தால் ஒழுக்கக்கேட்டைதான் அறுவடை செய்வோம். ஏனெனில் மாம்சம் அவ்விதமே நம்மை வழிநடத்தும். மிகத்தூய்மை வாய்ந்த ஆண்டவரின் கிருபை மிகுந்த ஆவியை மகிமைப்படுத்த முயல்வதன் மூலம் மிகவும் உயர்வும் தூய்மையுமானவற்றிற்காக வாழ்ந்து நம்மேல் வெற்றிபெற்றவர்களாக ஆவிக்கேதுவானவற்றை விதைப்போமாக.

நித்திய வாழ்வை அறுவடை செய்யும்போது அது எவ்வளவு சிறந்த அறுவடையாயிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். முடிவில்லாத இன்பங்களான எவ்வளவு சிறந்த கதிர்கள் அறுவடை செய்யப்படும் என்பதையும் எண்ணிப்பாருங்கள். அந்த அறுவடை நாள் எவ்வளவு மேன்மை வாய்ந்த அறுவடை நாளாயிருக்கும். ஆண்டவரே உம்முடைய குமாரனுக்காக எங்களை அவ்வித அறுவடை செய்கிறவர்களாக்கும்.

# 3. அவர் தொனியைக் கேட்க ஆயத்தமாயிருங்கள்

முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது சீக்கிரமாய் எழும்பிப்போ. அப்பொழுது பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் (2.சாமு.5:24).

ஆண்டவர் அசைவதைக் காட்டும் அடையாளங்கள் நம்மை அசைக்கவேண்டும். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறோம். அப்போது நாம் உயிர்ப்புடன் இருக்கவேண்டுவது அவசியம். அந்த அரிய வாய்ப்பை நாம் பயன்படுத்திச் செயல்படவேண்டும். நாம் எக்காலத்திலும் பெலிஸ்தரோடு போர் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம். அதிலும் கர்த்தரே நமக்கு முன்பாகப் புறப்பட்டிருக்கும்போது நாம் வீர தீரமாகப் போரிடவேண்டும். காற்று மரங்களின் நுனிகளை அசையச் செய்ததைத் தாவீதும் அவர் மனிதரும் தாக்குதலுக்கான அடையாளமாகக்கொண்டு முன்னேறினார்கள். அப்போது ஆண்டவரே பெலிஸ்தரை முறியடித்தார். இந்த நாளிலே நம் நண்பர் பலரிடம் அவருக்காகப் பேச ஆண்டவர் வாய்ப்பளித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! சந்தர்ப்பம் ஏற்படும்போது அதைப் பயன்படுத்துவதற்குக் கவனமாயிருப்போமாக. ஒருவேளை இன்று நற்செய்தியின்

நாளாயிருக்கலாம். ஆன்மாக்களை வெல்லும் பருவமாயிருக்கலாம். காற்றின் இரைச்சலை கேட்கவும் முன் அறிகுறிக்குக் கீழ்ப்படியவும் ஆயத்தமாய் இருப்பது அவசியம். அப்பொழுது கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்பது ஒரு வாக்குறுதியன்றோ? அது நம்மை செயல்பட ஊக்கவிக்கப்போதுமானதன்றோ? கர்த்தர் நமக்கு முன்னால் போகும்போது நாம் பின்தங்கக் கூடாது.

# 4. தோல்வியில் வெற்றி

என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே. நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் (மீகா 7:8).

இது ஒடுக்கப்பட்டு, இழிவாக நடத்தப்படும் ஒருவரின் மனநிலையை வெளியிடலாம். சத்துரு சிறிது காலம் நம் வாழ்க்கையை இருண்டதாக ஆக்கலாம். ஆனால் ஆண்டவரில் நமக்கு நிச்சயமான நம்பிக்கை இருக்கிறது. நாம் அவரை நம்பி, நேர்மையாக நடந்தோமேயானால் இருண்டதும் வாட்டமுற்றதுமான நம் நாட்கள் சீக்கரத்தில் முடிந்துவிடும். எதிரி சிறிது காலமே நம்மை அவமதிப்பான். கர்த்தர் சீக்கிரத்தில் அவர்கள் மகிழ்ச்சியைப் புலம்பலாகவும் நம் பெருமூச்சுகளைப் பாடலாகவும் மாற்றிவிடுவார்.

ஆன்மாக்களின் எதிரி நம்மைவிட நல்லவர்கள்மேல் வெற்றி பெற்றதுபோல் நம் மேலும் வெற்றிபெற்று விட்டால் நாம் கலங்கவேண்டியதில்லை. சீக்கிரத்தில் அவனை மேற்கொள்வோம் என்று தைரியம் கொள்ளலாம். விழுந்த நாம் சீக்கிரத்தில் எழுந்துவிடுவோம். ஏனெனில் நம் கடவுள் விழுந்துவிடவில்லை. அவர் நம்மைத் தூக்கிவிடுவார். நாம் ஒரு நிமிடம் இருட்டில் இருந்தாலும் அதிலேயே நிலைத்திருக்கமாட்டோம். ஏனெனில் நம் ஆண்டவர் வெளிச்சத்தின் ஊற்றானவர். அவர் சீக்கிரத்தில் நம் நாட்களை மகிழ்ச்சியானவை ஆக்குவார். நாம் தளர்ச்சியடைவும்

சந்தேகப்படவும் வேண்டியதில்லை. சக்கரம் ஒருமுறை சுழலும்போது கீழானோர் மேலானோர் ஆவார்கள். இப்போது சிரிப்பவர்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்களின் வீம்பான தற்புகழ்ச்சி நித்திய இகழ்ச்சியாக மாற்றப்படும். அவர்கள் புலம்பி விழுவார்கள். அனால் தூயவர்களாயிருந்து இப்போதும் புலம்புகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கடவுளால் தேற்றப்படுவார்கள்.

## 5. ஏன் சிறையில் நிலைத்திருக்கவேண்டும் ?

உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி.... (உபா.30:3).

கடவுளின் சொந்த மக்கள் பாவத்தினால் தங்களைச் சிறைக் கைதிகளாக விற்றுவிடலாம். இது மிகவும் கசப்பான வேரின் கனியாகும். கடவுளின் பிள்ளை பாவத்தினால் விற்கப்பட்டு, தன் சுதந்தரத்தை இழந்து, தன் ஜெபத்தின் வல்லமையையும் தன் ஆண்டவரின் மகிழ்ச்சியும் அற்றவனாய், சாத்தானின் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பது எவ்வளவு பயங்கரமான அடிமைத்தனம் ஆகும். நாம் இவ்வித அடிமைத்தனத்திற்கு உட்படாதபடி கவனமாயிருப்போமாக. நாம் இவ்வித அடிமைகள் ஆகிவிட்டாலும் கலங்க வேண்டியதில்லை.

நாம் நித்திய அடிமைகளாய் வைக்கப்பட்டிருக்கமுடியாது. நம்மை எதிரியின் கையிலேயே விட்டுவைக்கக்கூடாதென்று நம் ஆண்டவராகிய இயேசு மதிப்பிற்கு அரிய விலை கொடுத்து நம்மை மீட்டிருக்கிறார். சுதந்திரமடைய வழி உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு என்பதே. நாம் முதலாவது எங்கு இரட்சிப்பு பெற்றோமோ அங்கு மறுபடியும் பெறுவோம். அது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பும் விடுதலையும் பெற்ற

கிறிஸ்துவின் சிலுவையின் அடியேயாகும். அதுவுமல்லாமல் ஆண்டவர் கட்டளையிட்டுள்ளபடி அவர் சத்தத்துக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். இதை நம் முழு மனதோடும், ஆத்துமாவோடும் செய்தோமேயானால் நம் சிறையிருப்பின் நாட்கள் முடிந்துவிடும்.

பொதுவாக நம்முடைய விக்கிரகங்களை விட்டுத் திரும்பி, உயிருள்ள ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து, நம்மைத் தாழ்த்தும்போது நம் ஆவியின் சோர்வும் ஆன்மாவின் துயரும் நீக்கப்பட்டுவிடுகின்றன. நாம் சிறைக் கைதிகளாய் இருக்கவேண்டியதில்லை. நாம் விரைவில் சீயோனின் குடிமக்களாக மாறிவிடலாம். ஆண்டவரே, எங்கள் சிறையிருப்பைத் திரும்பிவிடும்

# 6. பொறாமைக்கு மருந்து

உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமை கொள்ளவிடாதே. நீ நாடேறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு, நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண்போகாது (நீதி.23:17-18).

துன்மார்க்கர் வாழ்வு வளமையுறும்போது நாம் அவர்கள்மேல் பொறாமை கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். நம் மனது துக்கத்தால் களைத்து இருக்கும்போது மகிழ்ச்சி பொங்கும் அவர்கள் சத்தத்தைக் கேட்டு, எல்லாம் அவர்கள் நன்மைக்கேதுவாக நடக்கிறது என்றுகூட நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. இது முட்டாள்தனமானதும் பாவமானதும் ஆகும். அவர்களைப்பற்றி நாம் நன்கு அறிந்திருந்தாலும் முக்கியமாக அவர்கள் முடிவை நினைத்துப் பார்த்தாலும் நாம் அவர்களுக்காகப் பரிதபிக்கவேண்டும்.

ஒருநாள் எவ்வளவு நீளமானதாகத் தோன்றினாலும் அந்த நாள் முழுவதும் கடவுளைத் தொழுதுகொண்டும், அவரோடு உரையாடிக்கொண்டும், அவர் சமூகம் எப்போதும் நம்மோடு இருக்கிறது என்ற உணர்வோடு இருப்பதுமே பொறாமைக்குத் தகுந்த மருந்தாகும். உண்மையான கடவுள் பக்தி நீதி நியாயம் தெளிவாய்த் தெரிவதும், ஆசைகள் மேம்பட்டதாய் இருப்பதுமான உயர்நிலைக்கு ஆன்மாவை உயர்த்துகிறது. நம்மில் எவ்வளவுக்கெவ்வளவு மோட்சத்தைப்பற்றிய எண்ணம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாக உலகத்துக்குரியவைகள்மேல் நாட்டம் கொள்வோம். கடவுள்மேல் உள்ள பயம் மனிதர்மேல் உள்ள பொறாமையைப் போக்கிவிடும்.

அமைதியுடன் எதிர்காலம்பற்றி ஆராய்தல் பொறாமையை அறவே நீக்கிவிடும். கடவுள் பயம் அற்றவர்களின் செல்வமும் சிறப்பும் பயன் அற்றவை ஆகும். செல்வச் சிறப்பு வாய்ந்த பாவிக்கு நியாயத்தீர்ப்பின்போது அவன் செல்வத்தினால் பயன் என்ன? ஆனால் கடவுளுக்குப் பயன் என்ன? ஆனால் கடவுளுக்குப் பயப்படும் மனிதனின் முடிவு சமாதானமானதும் பாக்கியமானதும் ஆகும். அவனிடமிருந்து யாரும் அவன் மகிழ்ச்சியைப் பறித்துக்கொள்ள முடியாது. ஆகையால் அவன் பொறமையைவிட்டு இனிய திருப்தி உள்ளவானய் இருப்பானாக.

# 7. தீமையானவற்றை அகற்று

சபிக்கப்பட்ட பொருளில் ஒன்று உன் கையில் இருக்கவேண்டாம். நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நீ கைக்கொண்டு, உன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்யும்படி, அவர் சத்தத்திற்குச் செவிகொடுப்பாயானால், கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உனக்குத் தயைசெய்து, உனக்கு இரங்கி அவர் உன் பிதாக்களுக்கு

ஆணையிட்டபடி உன்னை விருத்தியடையப்பண்ணுவார் (உபா.13:17-18).

விக்கிரக ஆராதனை செய்யும் மக்கள் நிறைந்த நகரங்களை இஸ்ரவேலர் பிடித்து, அங்குள்ள பொருட்களை விக்கிரக ஆராதனைய்யால் கறைப்பட்ட சாபமானவையாகவும் நெருப்பினால் அழிக்கப்படவேண்டியவையாகவும் கருதி, அழித்துவிடவேண்டும். கிறிஸ்தவர்கள் பாவங்களையெல்லாம் ஒரேவிதமானவையாய் கருதவேண்டும், தீய பழக்கம் ஒன்றையும் விட்டுவைக்கக்கூடாது. ஆவி, ஆன்மா, சரீரத்தைக் கட்டிவிடவேண்டும். இவ்விதம் தீமையை விட்டுவிடுவதனால் கிருபை கிடைக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் தேவனுடைய கிருபையின் கனியாக அதை வரவேற்கிறோம். எக்காரணத்தைக்கொண்டும் அதை அடையாமல் இருப்பதை நாம் விரும்பமாட்டோம்.

நம் பாவங்களைக் குறித்து நாம் இரக்கம் உள்ளவர்களாய் இருக்கக் கடவுள் ஏவினால் நம்மேல் மிகுந்த கிருபை உள்ளவராய் இருப்பார். நாம் தீமையைக் குறித்துக் கோபம் கொண்டால் கடவுள் அதற்குப்பின் நம்மேல் கோபம் கொண்டிருப்பதில்லை. பாவங்களைச் செய்யாமல் இருக்கவும், விட்டுவிடவும் நாம் எவ்வளவுக்கு முயற்சி எடுக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக நம்மேல் ஆசீர்வாதங்களைப் பொழிகிறார். சமாதானத்துக்கும், வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும், கிறிஸ்து இயேசுவில் மகிழ்ச்சிக்குமான வழி பின்வரும் வசனத்தில் விளக்கப்பட்டுள்ளது. சபிக்கப்பட்ட பெருளில் ஒன்றும் உன் கையில் இருக்கவேண்டாம். ஆண்டவரே, இன்று என்னைச் சுத்திகரியும், தீர்மானம் செய்து, பாவத்தைவிட்டுவிடுபவர்களுக்கு இரக்கம் காட்டப்படும். அவர்கள் செழிப்பும், விருத்தியும், மகிழ்ச்சியும் அடைவார்கள்.

# 8. உதவி தேவை

நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் (மத்.20:7).

ஆம். கிறிஸ்துவின் திராட்சத் தோட்டத்தில் வயதானவர்களுக்கு வேலையுண்டு. இது பதினோராம் மணி வேளையானாலும் அவர் நமக்கு வேலை கொடுப்பார். இது எவ்வளவு பெரிய கிருபையாகும். இந்த அழைப்பைக் கேட்டு, வயதானவர் ஒவ்வொருவரும் வேலைக்குச் செல்ல ஆர்வம் காட்ட வேண்டும். வயதானவர்களை யாரும் வேலைக்கு வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் கடைக்குக் கடை சென்றாலும் கடைக்காரர்கள் நரைத்த அவர்கள் தலைகளைக் கண்டு வேலை இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இயேசுவோ அவர்களை வேலைக்கு அமர்த்தி, நல்ல கூலியும் கொடுப்பார். இது கிருபையாகும். ஆண்டவரே, வயதானவர்கள் சிறிதளவுகூடத் தாமதமும் செய்யாமல் உம் வேலையில் வந்து சேரத் துணைபுரியும்.

தளர்ச்சியுற்ற முதியோருக்குக் கடவுள் கூலி கொடுப்பாரா? சந்தேகப்படாதேயுங்கள். அவர் வயலில் வேலைசெய்தால் தகுந்த கூலியை அளிப்பதாக கூறுகிறார். திட்டமாக இப்போது கிருபையும் இனிவரும் காலத்தில் மகிமையும் அவர் அளிப்பார். இப்போது ஆறுதலையும் வருங்காலத்தில் இளைப்பாறுதலையும் அளிப்பார். நாளுக்குத் தேவையான பெலனையும் மரணமாகிய இரவுவரும்போது மகிமையான காட்சியையும் அளிப்பார்.

இவற்றையெல்லாம் ஆண்டவராகிய இயேசு வாலிபத்தில் தம் ஊழியத்தைச் செய்யத் தொடங்குபவருக்கும் வயதான பின் மனம் மாறுபவருக்கும் இலவசமாக அளிப்பார்.

இரட்சிக்கப்படாதவரும் முதியோருமான ஓர் ஆணுக்காவது பெண்ணுக்காவது நான் இதை எடுத்துச் சொல்லி, இயேசு கிறிஸ்துவுக்காக என் முயற்சியை ஆசீர்வதிக்குமாறு

வேண்டிக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்டவர்களை எங்கு கண்டுபிடிக்கமுடியும் ? அப்படிப்பட்டவர்களைத் தேடிப்பிடித்து, அன்புடன் இச்செய்தியைக் கூறுவேன்.

# 9. நம்பிக்கை மகிழ்ச்சியைக் குறிக்கிறது

அவருடைய பரிசுத்த நாமத்தை நம்பியிருக்கிறபடியால் நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூறும் (சங்.33:21).

நம்பிக்கை என்னும் வேர் மனமகிழ்ச்சி என்னும் பூவை பூக்கும். நாம் முதலில் மகிழ்ச்சி அடையாவிட்டாலும் ஏற்ற காலத்தில் அடைவோம். நாம் துக்கத்தில் இருக்கும்போது கடவுள்மேல் நம்பிக்கை வைக்கிறோம். ஏற்ற காலத்தில் அவர் நம் நம்பிக்கைக்குத் தகுந்த பலனை அளிப்பதால் நம் நம்பிக்கை நிறைவேறி, நாம் நம் ஆண்டவரில் மகிழ்ச்சி அடைகிறோம். சந்தேகம் வேதனையை உண்டாக்குகிறது. ஆனால் தக்க வேளையில் நம்பிக்கையினால் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்த வசனத்தில் சங்கீதக்காரனால் வெளியிடப்படும் நம்பிக்கை தூய பற்றுறுதியினால் அருளப்படும் வாக்குறுதியாகும். அதை நம்முடையதாக்கிக்கொள்ளத் தேவையான கிருபைக்காக வேண்டிக்கொள்வோமாக. தாவீதின் கடவுள் எவ்வளவு நிச்சயமாய் நம் கடவுளாய் இருக்கிறாரோ அதைப்போல நாம் இப்போதும் மகிழ்ச்சியாயிராவிட்டாலும் திட்டமாக இனி இருப்போம்.

நாம் இன்னும் அதிகமாக அவர்மேல் நம்பிக்கை வைக்கவும் உடனபடியாகத் தடையின்றி மகிழ்ச்சியடையவும் தக்கதாக ஆண்டவரின் தூய நாமத்தை ஆழ்ந்து ஆராய்வோமாக. அவர் தூய்மையுள்ளவர், நீதியுள்ளவர், உண்மையுள்ளவர், கிருபையுள்ளவர், நேர்மையானவர், மாறாதவர், இப்படிப்பட்ட கடவுள் நம்பத் தகுந்தவர் அல்லவா? அவர் ஞானம் மிக்கவர். வலிமை மிக்கவர், எல்லா இடத்திலும் நிறைந்திருப்பவர். நாம்

மகிழ்சியுடன் அவர்மேல் சார்ந்திருக்க முடியாதா? ஆம், முடியும். இப்போதே எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் செயல்படுவோமாக. யேகோவாயீரே: தேவையானது அருளப்படும். யேகோவாஷாலோம்: சமாதானம் அனுப்பப்படும். யேகோவாஷம்மா: எப்போதும் அருகிலிருப்பார். யோகோவாநிசி: பகைவர்மேல் வெற்றிபெறுவோம். உம் நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்புவார்கள். ஆண்டவரே, உம்மை நம்புகிறவர்கள் உம்மில் மகிழ்ச்சியடைவார்கள்.

# 10. கடவுளுக்குப் பயப்படுங்கள்

அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே (எபி.13:6).

கடவுள் ஒருபோதும் நம்மை விட்டுச் செல்லவும்மாட்டார். நம்மைக் கைவிடவும் மாட்டார் என்பதனால் நமக்குள்ளவைகளில் நாம் திருப்தியுடன் இருக்கலாம். ஆண்டவர் நமக்கு உரியவரானபடியால் நாம் நண்பர்கள், சொத்து, இருப்பிடம் இல்லாதவர்கள் ஆகிவிடமாட்டோம். இந்த உறுதியான நம்பிக்கை இருப்பதனால் நாம் மக்கள் யார்மேலும் சார்ந்திருக்கவேண்டியதில்லை என்று உணர்கிறோம். இவ்வளவு மேலானவரின் ஆதரவு நமக்கு இருப்பதால் நாம் மனிதர் முன் ஒடுங்கி நடக்கவும், நாம் சரியென்று எண்ணுகிறபடி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் தயங்குவதில்லை. ஆனால் நாம் சொல்ல நினைப்பதை தைரியமாகச் சொல்லுகிறோம். மறுக்கும்போது எதிர்த்து நிற்கிறோம்.

கடவுளுக்குப் பயப்படுகிறவர் வேறு எதைக்குறித்தும் பயப்படவேண்டியதில்லை. பெருமையால் நம்மை வருத்துவோரின் மிரட்டலைக் குறித்து எவ்வித பயமும் ஏற்படாதவாறு நாம் உயிருள்ள கடவுள்மேல் பயபக்தி உள்ளவர்களாய்

இருக்கவேண்டும். மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் வசனத்தை அப்போஸ்தலன் எழுதினபோது செய்யக்கூடியதாயிருந்த தீங்கைப்போல இப்பொது செய்ய முடியாது. சித்திரவதைக்கருவிகளும், கழுமரங்களும் இப்போது பயன்படுத்தப்படுவதில்லை. போப் இப்பொது யாத்திரிகர்களை எரிக்கமுடியாது. கள்ளப் போதகர்களைப் பின்பற்றுகிறவர்கள் ஏளனம் செய்தாலும் இகழ்ந்து பேசினாலும் நாம் அதைக் குறித்து வியப்படைவதில்லை. ஏனெனில் இவ்வுலகத்தின் மனிதர் பரலோகத்தின் வித்தை நேசிக்கிறவர்களாய் இருக்கமுடியாது. அப்படியானால் நாம் என்ன செய்யலாம்? இந்த உலகத்தினர் ஏளனம் செய்வதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். அது நம் எலும்புகளை உடைப்பதில்லை. கடவுளுடைய உதவியுடன் தைரியமாய் இருப்போமாக. உலகம் கொந்தளிக்கும்போது கொந்தளிக்கட்டும். நாம் அதைக் குறித்து பயப்படாமல் இருப்போமாக.

# 11. இறுதித் தேர்வுக்காகக் காத்திருங்கள்

*காத் என்பவன்மேல் ராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும். அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்து விழுவான் (ஆதி.49:19).*

நம்மில் சிலர் காத் கோத்திரத்தினரைப்போல் இருந்திருக்கிறோம். சிறிது காலம் நம் பகைவர் நம்மைவிடப் பெருந்தொகையினராய் இருந்து பெரிய பட்டாளத்தைப்போல் நம்மேல் தாக்கியிருக்கிறார்கள். ஆம், அந்நேரத்தில் நம்மை மேற்கொண்டு, சிறிது காலமே இருக்கக்கூடிய வெற்றியின் மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். இவ்விதம் நம் குடும்ப உரிமையின் முதற்பாகத்தை உண்மையாக்கியிருக்கிறார்கள். ஏனெனில் தாண் கோத்திரத்தினரைப்போல் கிறிஸ்துவின் மக்கள்மேல் பாயும் ராணுவக்கூட்டம் வெற்றிபெறும். இவ்விதம் தோல்வியடைவது வேதனை அளிப்பதாகும். நம் பிதாவின்

வாழ்த்தின் இரண்டாவது பகுதியாகிய அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்து விழுவான் என்பதை விசுவாசத்தினால் நாம் நம்பியிராவிட்டால், மனமுறிவு கொண்டிருப்போம். நன்றாய் முடிவதெல்லாம் நல்லதே என்று ஒரு கவிஞர் கூறும்போது உண்மையே கூறுகிறார். ஒரு போரின் முடிவை முதலில் ஏற்படும் வெற்றியினால் அல்லது தோல்வியினால் நிச்சயிக்கமுடியாது. முடிவிலே ஏற்படும் விளைவினாலேயே நிச்சயிக்கமுடியும். முடிவிலே ஆண்டவர் உண்மைக்கும் நீதிக்குமே வெற்றி அளிப்பார். திரு. பனியன் சொல்லுவது போல் முடிவிலே என்பது நித்திய காலத்துக்குமான முடிவைக் குறிக்கிறது. ஏனெனில் அதற்குப்பின் எதுவும் நேரிடமுடியாது.

நமக்குத் தேவையான நன்மை செய்வதில் பொறுமையும், விடாமுயற்சியும், மகிமை வாய்ந்த நம் படைத்தளபதிமேல் அமைதியான நம்பிக்கையுமேயாகும். இறுதியில் முடிந்தது அல்லேலூயா என்று சொல்லும்வரை ஒரே நோக்குடன் வேலையைச் செய்வதும், கஷ்டங்களைச் சகிப்பதும் எப்படி என்பதை நம் ஆண்டவராகிய இயேசு நமக்குப் போதிப்பார். வெற்றி! வெற்றி! அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்து விழுவான் என்னும் இந்த வாக்குறுதியை நாம் நம்புகிறோம்.

# 12. ஊழியக்காரரர் கனப்படுத்தப்படுவார்கள்

அத்திமரத்தைக் காக்கிறவன் அதின் கனியைப் புசிப்பான். தன் எஜமானைக் காக்கிறவன் கனமடைவான் (நீதி.27:18).

தன் எஜமானைக் காக்கிறவன் தன் சேவைக்காக அத்திப் பழங்களைப் பெறுகிறான். நல்ல எஜமானைக் காக்கிறவனோ கனமடைவான். எஜமானரில் சிறந்தவர் அண்டவராகிய இயேசு. அவருக்காக சிறிய சேவை செய்யும் சலுகை பெறுவதுகூட கனத்திற்கு உரியதாகும். சில எஜமானருக்கு வேலை செய்வது சகப்பான பழங்களைக் கொடுக்கும் காட்டு மரத்தைக் காத்து,

கூலியாகக் கசப்பான பழங்களைத் தின்பதைப் போன்றதாகும். ஆனால் என் ஆண்டவர் இயேசுவுக்கு ஊழியம் செய்வது இனிப்பான பழங்களைக் கொடுக்கும் அத்திமரத்தைக் காப்பதைப் போன்றதாகும். அதைத் தொடர்ந்து செய்து வருவது வேலையில் உயர்வு பெறுவதைப் போன்றதாகும். அதில் வெற்றி பெறுவது இவ்வுலகில் பேரின்பம் அளிப்பதாகும். அதற்கான வெகுமானம் மேலுலகில் மகிமை அடைவதாகும்.

அத்திரம் பழுக்கும்போது, அதாவது மேல் உலகில், நாம் உயர் மகிமை அடைவோம். இவ்வுலகில் நம் வேலை முடிந்தவுடன், இப்போது நம் கையாள்களாய் இருக்கும் தேவதூதர் நம்மைப் பரம வீட்டுக்குத் தாங்கிச் செல்வார்கள். இயேசு இருக்கும் பரலோகம் நம் மதிப்புக்குரிய மாளிகையாகும். நம் நித்திய பங்கு மதிப்புக்குரிய பேரின்பம் ஆகும். ஆண்டவரே, நம் மதிப்புக்குரிய தோழராய் இருப்பார். தன் எஜமானைக் காக்கிறவன் கனமடைவான் என்னும் வாக்குறுதி பின் முழு அர்த்தத்தையும் கற்பனை செய்து பார்க்கக்கூடியவன் யார்?

ஆண்டவரே, என் எஜமானைக் காக்க எனக்கு உதவி செய்யும். நீர் என்னைக் கனப்படுத்தும்வரை நான் கனத்தைப்பற்றிய எண்ணமே இல்லாமல் வாழக் கிருபை செய்யும். உம்முடைய பரிசுத்த ஆவி என்னைத் தாழ்மையும், பொறுமையும், காத்திருக்கும் தன்மை உள்ள ஊழியக்காரன் ஆக்கட்டும்.

## 13. பகல் சமீபமாயிற்று

விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன் (வெளி 2:28).

இருள் நீங்கி, விடியற்காலை வரும்வரை இயேசுவில் விடிவெள்ளி நட்சத்திரத்தைக் காண்பது எவ்வளவு பெரிய பாக்கியமாகும். பெத்லகேமின் நட்சத்திரம் மறுபடியும்

காணப்பட்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த வீணான செய்தியை வாசித்ததை நான் நினைவுகூருகிறேன். விசாரித்துப் பார்த்ததில் அது விடிவெள்ளி நட்சத்திரம் என்று அறிந்துகொண்டோம். பெரிய தவறு ஒன்றும் செய்யப்படவில்லை.

இயேசுவைச் சூரியனாகக் காண்பதே சிறந்தது. அவ்விதம் காணமுடியாதபோது, அவரைப் பகலை முன்னறிவித்து, நித்திய ஒளி சீக்கிரத்தில் காணப்படும் என்று தெரிவிக்கும் நட்சத்திரமாகக் காண்பதே அதற்கு அடுத்தப்படியாகச் சிறப்பு வாய்ந்ததாகும். நான் எவ்விதம் சிறந்து விளங்கவேண்டுமென்று விரும்புகிறேனோ அவ்விதம் இன்று இராவிட்டாலும், இயேசுவைக் காண்கிறேன். ஒருநாள் அவரைப்போல் இருப்பேன் என்னும் நம்பிக்கையை அது எனக்கு அளிக்கிறது. நம்பிக்கையினால் இயேசுவைக் காண்பது மகிமை பொருந்தினவராய் அவரைக் காண்பதற்கும் அவர் சாயலாக மாற்றப்படுவோம் என்பதற்குமான வருங்குறிச் சின்னமாகும். நான் விரும்பும் வெளிச்சமும் மகிழ்ச்சியும் என்னில் இந்நேரம் இல்லாவிடினும் நான் இனி ஒரு காலத்தில் அவற்றைப் பெறுவேன். ஏனெனில் எவ்வளவு தெளிவாக நான் விடிவெள்ளி நட்சத்திரத்தைக் காண்கிறேனோ அவ்வளவு நிச்சயமாக அந்த நாளைக் காண்பேன். விடிவெள்ளி நட்சத்திரம் சூரியனை விட்டு வெகுதூரம் செல்வது இல்லை.

என் ஆத்துமாவே, ஆண்டவர் உனக்கு விடிவெள்ளி நட்சத்திரத்தை அளித்துள்ளாரா ? ஆண்டவர் உனக்குக் கொடுத்துள்ள உண்மை, கிருபை, நம்பிக்கை, அன்பு இவற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறாயா? அப்படியானால் இவற்றில் இனிவரும் மகிமையின் விடிவெள்ளி உனக்குக் காணப்பட்டுள்ளது. நீ தீமையை மேற்கொள்ளவும், நீதியில் நிலைத்திருக்கவும் செய்கிறவர் அவற்றினாலேயே விடிவெள்ளி நட்சத்திரத்தையும் உனக்கு அளித்துள்ளார்.

# 14. சுகம் பெறுவதற்கு அறுவை சிகிச்சை

கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். நம்மைப் பீறினார். அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார். நம்முடைய காயங்களைக் கட்டுவார் (ஓசி.6:1).

சுகம் அளிக்கு முன் பீறுவது ஆண்டவரின் வழியாகும். இது அவர் உள்ளத்தின் உண்மையான அன்பும் சுகம் அளிப்பதற்கு அவர் கைகளினால் செய்யப்படும் அறுவைச் சிகிச்சையும் ஆகும். காயங்களைக் கட்டுமுன் புண்படுத்துகிறார். இல்லையெனில் அது உறுதியில்லாத வேலையாகும். நற்செய்தி கொடுக்கப்படுமுன் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. தேவை நிறைவு செய்யப்படுமுன் அது தேவை என்னும் உணர்வு அவசியம். இதை வாசிப்பவர் இன்று ஆவியின் உறுதிப்பாடான அழுத்தும் கரங்களின் கீழ் இருக்கிறாரா? அல்லது பயம்கொள்வதற்கு அடிமைத் தனத்தின் ஆவியை மீண்டும் பெற்றிருக்கிறாரா? சுகம் பெறுவோம் நம் காயங்கள் கட்டப்படும் என்னும் நற்செய்தியைப் பெறுவதற்கு அழுத்தும் கரங்களின் கீழ் இருப்பது முன் ஏற்பாடு ஆகும்.

என் உள்ளமே சோர்ந்து போகாதே தாறுமாறாகக் கிழிக்கப்பட்ட உன் காயங்களோடும் கன்றிப்போன காயங்களோடும் சீழ்ப்பிடிந்துள்ள புண்ணோடும் ஆண்டவரிடம் வா அவரே குணப்படுத்தக் கூடியவர். அவர் மகிழ்ச்சியோடு அதைச் செய்வார். நொறுங்குண்ட இதயத்தின் காயத்தைக் கட்டுவது நம் ஆண்டவரின் பணியாகும். அதில் அவர் நன்கு பழக்கப்பட்டவராயிருக்கிறார். நாம் தாமதிக்க வேண்டியதில்லை. ஆண்டவரை விட்டுத் தூரம் விலகிப் போயிருந்தால் உடனே அவரிடம் திரும்பி விடுவோமாக. இரணமாயிருக்கும் நம் காயங்களை அவரிடம் காட்டி அவரே அவற்றைச் சுகப்படுத்தக்கூடும் என்று எடுத்துக்கூறி குணப்படுத்தச் சொல்லி

வேண்டிக் கொள்வோமாக. அறுவைச் சிகிச்சை செய்யும் வைத்தியர் யாரும் காயத்தைக் கீறிவிட்டு நோயாளி இரத்தம் இழந்து மரணம் அடையவிட்டு விடுவாரா? ஆண்டவர் நம் பழைய வீட்டை இடித்துப்போட்டு அதை விட நல்ல வீட்டைக் கட்ட மறுத்துவிடுவாரா? கவலை நிறைந்த ஏழை ஆத்துமாக்களின் துயரத்தை வேண்டுமென்றே அதிகமாக்குவாரா? ஆண்டவரே அது உமக்கு வெகு தூரமாயிருப்பதாக !

# 15. கடவுளின் உயர்வான இடங்கள்

என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன் (சங்.91:14).

ஆண்டவர் என்னிடம் இவ்வாறு சொல்லுகிறாரா? ஆம். அவர் நாமத்தை நான் அறிந்திருந்தால் இவ்விதம் சொல்லுகிறார். அவர் மகிமைப்படுவராக. என்னை அவர் அறிந்திருக்கிறார். நான் அவரை அனுபவத்தில் கண்டு அறிந்திருக்கிறேன். ஆகையால் அவரை நம்புகிறேன். அவர் பாவத்தை வெறுக்கும் கடவுள் என்று அறிந்திருக்கிறேன். ஏனெனில் அவர் ஒருபோதும் தீமையைக் கண்டும் காணாததுபோல இருக்கமாட்டார் என்று அவர் ஆவியின் உறுதிப்பாடான வல்லமையின்மூலம் போதிக்கப்பட்டிருக்கிறேன். இயேசு கிறிஸ்துவில் அவர் பாவத்தை மன்னிக்கும் கடவுள் என்று அறிந்திருக்கிறேன். ஏனெனில் அவர் என் பாவங்களையெல்லாம் மன்னித்திருக்கிறார். அவர் நாமம் நம்பத்தகுந்தது. இதை நான் திட்டவட்டமாய் அறிந்திருக்கிறேன். ஏனெனில் என் கஷ்டங்கள் பெருகிவிட்டபோதிலும் அவர் என்னைக் கைவிட்டதில்லை.

இதை அறிவது கிருபையின் பரிசாகும். கிருபையின் வேறொரு பரிசு உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவது ஆகும். கிருபையை அறிந்தால் ஆண்டவர் இதையும் பரிசாக அளிக்கிறார். இதுதான் கிருபையின்மேல் கிருபை. நாமே உயர உயர ஏறிக்கொண்டுபோனால் நம் நிலைமை ஆபத்தானதாகும். ஆனால்

அவரே நம்மை உயரத்தில் வைத்தால் இது பத்திரமான இடமாய் இருக்கும். அவர் நம்மை இன்னும் அதிகமாகப் பயன்படுத்துவார். இன்னும் மேலான அனுபவங்களுக்கும், ஊழியத்தில் வெற்றிக்கும், ஊழிக்காரரின் தலைவர் பதவிக்கும், சிறுவருக்குத் தகப்பனாயிருக்கும் நிலைக்கும் உயர்த்துவார். இவ்விதம் செய்யாவிட்டால் தம்மோடு நெருங்கிய தோழமைக்கும், தெளிவான நுண்ணறிவுத் திறனுக்கும், தூய வெற்றிக்கும், நித்திய மகிமையை எதிர்நோக்கும் கிருபைக்கும் உயர்த்துவார். கடவுள் நம்மை உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கும்போது சாத்தான் நம்மை கீழே இழுத்துவிடமுடியாது. இந்த நாள் முழுவதும் நாம் இவ்விதமாக உயர்ந்த அடைக்கலத்தில் இருப்போமாக !

## *16. பிறருக்குக் கொடு! பெற்றுக்கொள்*

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத்.5:7).

மன்னிக்காதவன் மன்னிப்பைப் பெறுவதும் ஏழைகளுக்குக் கொடுக்காதவன் தன் தேவைகளுக்கு ஏற்றவைகளைப் பெற்றுக்கொள்வதும் சரியல்ல. நாம் அளிக்கும் அளவின்படியே ஆண்டவரும் நமக்கு அளிப்பார். கொடிய எஜமான்களாகவும் கடன் கொடுக்காதவர்களாயும் இருப்பவர்கள் ஆண்டவரும் தங்களிடம் கடுமையாக நடந்துகொள்வதைக் காண்பார்கள். இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும்.

இந்த நாளில் மன்னிக்கவும் ஏழைகளுக்குக் கொடுக்கவும் பிரயாசப்படுவோமாக. மற்றவர்களைத் தாங்குகிறவர்களாகவும், பொறுத்துக்கொள்கிறவர்களாகவும் இருப்போமாக. இரக்கம் உள்ளவர்களாகவும், கனிவு நிறைந்தவர்களாகவும், இளகிய மனம் உள்ளவர்களாகவும் இருப்போமாக. மக்களின் நடத்தைக்கேற்ப கடுமையாச் செயலாற்றுகிறவர்களாகவும், சலுகையற்ற முறையில்

கடுமையாகச் செயலாற்றுகிறவர்களாகவும், சிறுபிள்ளைத்தனமாக சச்சரவுகளைத் தொடங்குகிறவர்களாகவும் எளிதில் திருப்திகொள்ளாதவர்களாகவும், இருப்பது நல்லதல்ல. நமக்கு பாக்கியவான்களாய் இருக்கவேண்டும் என்றும், இரக்கம் பெறவேண்டும் என்றும் விருப்பம் உண்டு. நாம் இரக்கம் பெறுவதற்கு ஏற்றவாறு இரக்கம் உள்ளவர்களாய் இருப்போமாக. நாம் பாக்கியவான்களாய் இருப்பதற்குச் செய்யவேண்டியவைகளைச் செய்வோமாக. இரக்கம் காட்டுவது மகிழ்வளிக்கிற செய்கை அல்லவா? சினம்கொண்டவர்களாகவும், பெருந்தன்மை அற்றவர்களாகவும் இருப்பதைவிட இரக்கம் உள்ளவர்களாய் இருப்பது வாழ்வுக்கு இனிமை அளிக்கிறது அல்லவா? அதே பாக்கியமானதாகும். அதுவுமல்லாமல் இரக்கம் பெறுவது சிறந்த பரிசாகும். கடவுளுடைய கிருபையேயல்லாமல் வேறு எது அவ்வித பரிசை எடுத்துக்கூறக்கூடும்? நாம் மற்றவர்களின் கடுகளவுக் குற்றத்தையே மன்னித்தால் ஆண்டவரும் அந்த அளவான நம் குற்றங்களையே மன்னிக்கிறார்.

## 17. கையிறுக்கம் பண்ணத்தேவையில்லை

உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள் (நீதி.28:10).

நீதிமொழிகளின் புத்தம் வாக்குறுதிகள் நிறைந்த புத்தகமாகும். கடவுளின் மக்களிடையே வாக்குறுதிகள் பழமொழியாய் இருக்கவேண்டும். இந்த வாக்குறுதி சிறப்பு வாய்ந்ததாகும். நல்ல காரியங்கள் வருங்காலத்தில் பெறத்தக்கதாகவுள்ள உடைமைகள் என்று நினைக்கவே நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் அவை நமக்கு உரியனவாக இருக்கின்றன என்று இங்கு கூறப்பட்டுள்ளது.

நம் பகைவரின் வன்மமும், தந்திரமும் நம்மை அழித்துவிட முடியாது. அவர்கள் வெட்டின குழியில் அவர்களே விழுவார்கள். நம் பரம்பரை உடைமை நமக்கு நீங்கா உடைமையாக

வழங்கப்பட்டிருப்பதால் நாம் அதை அடையாமற்பண்ணவும் தடுக்கவும் யாராலும் முடியாது.

அப்படியானால் இப்போது நம்மிடம் என்ன இருக்கிறத? இயேசுவின் விலைமதிக்கமுடியாத இரத்தத்தினால் அமைதியான நன்மை தீமை அறியும் நேர்மை உணர்வு இருக்கிறது. மாறாத தேவ அன்பு நமக்குக் காட்டப்படுகிறது. தேவையான நேரங்களில் எல்லாம் வேண்டுதலின்மூலம் கடவுளோடு உரிமைத் தகுதி இருக்கிறது. நம்மைப் பாதுகாக்க கடவுளின் அருள் இருக்கிறது. நமக்குச் சேவை செய்ய கடவுளின் தூதர்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நம்மில் கடவுளின் ஆவி நிலைத்திருக்கிறது. நிகழ் காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும் எல்லாம் நம்முடையவையே. இயேசு நம்முடையவர். ஆம், தூய திரியேகர் நம்முடையவர். அல்லேலூயா. நாம் நன்மையானவைகளைப் பெற்றிருப்பதால் ஏங்கவும், புலம்பவும், கையிறுக்கம்பண்ணவும், அடிமைபோல வேலைசெய்யவும் அவசியமில்லை. நாம் கடவுளில் வாழ்ந்து, நாள் முழுவதும் அவரில் மகிழ்ந்திருப்போமாக. தூய ஆவியானவரே, எங்களுக்கு உதவி செய்யும்.

# 18. இழப்புகள் சரி செய்யப்படும்

வெட்டுக்கிளிகளும்.... பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்கு திரும்ப அளிப்பேன் (யோவே.2:25).

ஆம். நாம் பெருமூச்சுடன் வீணாகக் கழிக்கும் ஆண்டுகள் நமக்குத் திரும்பவும் அளிக்கப்படும். நாம் ஊக்கமின்றி வாழ்ந்த காலத்தில் இழந்த அந்த ஆண்டுகளுக்காகவும் சேர்த்து, ஊக்கத்துடன் உழைத்த தேவையான ஏராளமான கிருபையைக் கடவுள் கொடுக்கக்கூடியவர். பின்வாங்கிப்போதல், உலகப்பற்று, அனலும் குளிரும் இல்லாமல் இருத்தல் முதலியவை வெட்டுக்கிளிகளைப்போல் நம்மை அரித்துவிடும். பாவங்களை

நாம் கொடிய தொல்லைகளாகக் கருதுகிறோம். அவை நம் அருகில்கூட வராமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். தம் மிகுந்த கிருபையால் கடவுள் இப்பொது அவற்றை அகற்றியிருக்கிறார். அவருக்கென்று ஊழியம் செய்ய நாம் ஆர்வம் மிக்கவர்களாய் இருக்கிறோம். அவர் நாமம் மகிமைப்படுவதாக, தாம் ஊக்கமின்றி வாழ்ந்த கடந்த காலம் மறைந்துவிடத் தக்கதாக ஏராளமான ஆவியின் கிருபையைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். மிகுந்த கிருபையினால் நம் கசப்பான அனுபவத்தைப் பயனுள்ளதாக்கி, மற்றவர்களை எச்சரிக்க அதை உபயோகிக்கலாம். கடந்த காலக் குற்றங்கள், குறைபாடுகள் காரணமாக நாம் தாழ்மையிலும், சிறுபிள்ளையைப்போல் ஆதரவை எதிர்பார்க்கும் நிலையிலும், தவறுகளுக்காக வருந்தவதிலும் வேரூன்றி நிலைக்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் இன்னும் விழிப்பள்ளவர்களாயும், ஆர்வச் சுறுசுறுப்பு உள்ளவர்களாயும், மென்மையானவர்களாயும் இருந்தால் நாம் இழந்துபோனவைகளுக்காக வருந்துவதன்மூலம் ஆதாயம் அடைகிறவர்களாய் இருப்போம். அன்பின் அற்புதத்தின் மூலமாக நாம் வீணாக்கின ஆண்டுகளை மறுபடியும் பெறுவோம். இது மிகச்சிறந்த வரமாகத் தோன்றுகிறதா? நாம் அதை நம்பி, அதற்காக உழைத்தால், பேதுருவின் பெலவீனம் கண்டுபிடிக்கப்பட்டு, துணிந்து எண்ணுவதற்கான அவர் குறை நீக்கப்பட்டபின் எவ்விதம் அவர் இன்னும் பயனுள்ளவிதமாய் ஊழியம் செய்ய முடிந்ததோ அவ்விதம் நமக்கும் முடிகிறது என்று உணர்வோம். ஆண்டவரே, உம் கிருபையினால் எங்களுக்கு உதவி செய்யும்.

## 19. கடவுளுக்காக நாம் பேசலாம்

இதினிமித்தம் நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்படுத்துவேன். என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய். நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால் என் வாய்போலிருப்பாய் (எரேமி.15:19).

பாவம் எரேமியா என்கிறோம். ஆயினும் நாம் சொல்வது சரியா என்று நினைத்துப் பார்க்கவேண்டும். புலம்பி அழும் தீர்க்கராகிய அவர் கடவுளின் தனிச் சிறப்பு வாய்ந்த ஊழியக்காரரில் ஒருவர். கடவுள் பலரைவிட அவரை உயர்வானவராக மதித்தார். உண்மையைப் பேசினதினால் அவர் வெறுக்கப்பட்டார். அவருக்கு இனிமையாய் இருந்த சொற்கள் கேட்டவர்களுக்குக் கசப்பாய் இருந்தன. ஆயினும் ஆண்டவர் அவரை ஏற்றுக்கொண்டார். அவர் திடப்பற்று உள்ளவராய் நிலைத்திருந்தால் அவர்மூலமாய் தாம் தொடர்ந்து பேசுவதாகக் கடவுள் அறிவித்தார். அவர் மக்களிடம் தைரியமாயும் உண்மையாயும் இருந்து அக்காலத்து அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் நன்மையும் தீமையுமானவைகளை எடுத்துச் சொன்னால் அவர் கடவுளின் வாய் போலிருப்பார் என்று கூறினார்.

இது எவ்வளவு மதிப்பு வாய்ந்த நிலையாகும் என்று நினைத்துப் பாருங்கள். ஒவ்வொரு போதகரும் விசுவாசியும்கூட இந்நிலையை அடைய நாட்டம்கொள்ளவேண்டியது அவசியம் அல்லவா? கடவுள் நம்மூலமாய்ப் பேசினால் அது பெரிய அற்புதம் ஆகும் அல்லவா? நாம் நிச்சயமான உண்மையைப் பேசுவோம். அதை வல்லமையோடு பேசுவோம். அதனால் மிகுந்த பலன் ஏற்படும். அதை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அது ஆசீர்வாதமாயிருக்கும். அதை ஏற்றுக்கொள் மறுக்கிறவர்கள் தங்கள் பொறுப்பிலேயே அவ்விதம் செய்வார்கள். நம் சொற்கள் பலருக்கு ஆத்தும ஆகாரம் அளிப்பவையாய் இருக்கும் . நாம் தூங்குகிறவர்களைத் தட்டி எழுப்புகிறவர்களாகவும் மரித்தவர்களை உயிர்ப்பிக்கிறவாகளாகவும் இருப்போம்.

இதை வாசிப்பவரே, ஆண்டவரால் அனுப்பப்படும் ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் மேலே கூறப்பட்டவை பொருந்துவனவாக இருக்கவேண்டுமென்று ஜெபியுங்கள்.

# 20. நாம் சந்தேகப்பட வேண்டியதில்லை

நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து... (ஏசா.45:2).

மேலே கூறப்பட்டவை கோரேசுக்குச் சொல்லப்பட்டவை. ஆயினும் ஆண்டவரின் ஆன்மீக ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் வருங்காலத்துக்கு எல்லாம் பொருந்துபவை. நாம் நம்பிக்கையோடு முன்னேறினால் நம் பாதை நமக்காகச் செவ்வைப்படுத்தப்படும். பாதையில் மக்களால்ஏற்படுத்தப்பட்டுள்ள வளைவுகளும், திருப்பங்களும் சாத்தானின் சூழ்ச்சித் திரத்தால் உண்டாக்கப்பட்ட மேடு பள்ளங்களும் செம்மையாக்கப்படும். அவர்கள் சூழ்ச்சித்திறத்தால் ஏற்படுத்திய பாதையில் நாம் செல்லவேண்டியதில்லை. வெண்கலக் கதவுகள் உடைக்கப்படும்.இரும்புத் தாழ்ப்பாள்கள் முறிக்கப்படும். மதிற்சுவர்களைத் தகர்ப்பதற்கான பெருஞ்சம்மட்டியாவது கடப்பாரையாவது நமக்குத் தேவையில்லை. செய்வதற்கு அரிதான ஆண்டவரே நமக்காகச் செய்வார். எதிர்பாராது நிறைவேறும்.

கோழைத்தனமான அச்சத்தினால் நாம்உட்கார்ந்து விட வேண்டியதில்லை. கடமையை நிறைவேற்றும் பாதையில் நாம் முன்னேறிச் செல்வோமாக. ஏனெனில் ஆண்டவர் நான் உனக்கு முனனே செல்லுவேன் என்று சொல்லியிருக்கிறார். காரணம் கேட்காமல் பாய்ந்து தாக்கவேண்டியது நம் கடமையாகும். அது ஆண்டவரின் வேலை. அதைச் செய்துமுடிக்க அவர் உதவி செய்வார். அவருக்கு முன்பாக எல்லா தடைகளும் தகர்த்து எறியப்படும். வெண்கலக் கதவுகளை உடைத்துவிடுவேன் என்று அவர் சொல்லவில்லையா? யாதொன்றும் அவர் நோக்கத்தைத் தடுக்கவும் அவர் கட்டளைக்கு முட்டுக்கட்டை போடவும் முடியாது. கடவுளுக்குச் சேவை செய்பவர்களுக்குஎல்லையில்லா

வாய்ப்பு உண்டு. மனித முயற்சிக்கு வழி அடைக்கப்பட்டதுபோல தோன்றலாம். ஆனால் நம்பிக்கை உள்ளவர்களுக்கு வழி தெளிவாய் இருக்கிறது. இந்த வாக்குறுதியில் சொல்வதுபோல யேகோவா இருமுறை நான் செய்வேன் நான் செய்வேன் என்று சொல்வதைச் சந்தேகிப்பதற்குநாம் யார் ?

# 21. மேகங்கள் இல்லாமல் மழை உண்டா ?

மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின் மேல் பொழியும். (பிர.11:3).

அப்படியானால் இப்போது நமக்குக் காணப்படும் கார்மேகங்களைக் குறித்து நாம்பயப்படுவது ஏன்? அவை சூரியனை மறைத்து விடுகின்றன என்பது உண்மைதான் ஆனால் சூரியன் குளிர்ச்சி அடைந்து விடவில்லையே ! சீக்கிரத்தில் அது பிரகாசிக்கும். அந்தக் கார் மேகங்களில் மழை நிறைந்திருக்கிறது. அவை எவ்வளவுக்கெவ்வளவு கறுப்பாய் இருக்கின்றனவோஅவ்வளவுக்கவ்வளவு மழை பொழியும். மேகங்கள் இல்லாமல் நமக்கு எப்படி மழை கிடைக்கும் ?

நம் தொல்லைகள் நமக்கு எப்போதும் ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்திருக்கின்றன. எப்போதும் அவை அவ்விதமே கொண்டுவரும். அவை ஒளிமயமான கிருபையைச் சுமந்து வரும்கருப்பு இரதங்கள் சீக்கிரத்திலே அவை மழையைப் பொழிந்து விடும். அதனால் ஒவ்வொரு சிறு பூண்டும் பயன் பெறும். நம் ஆண்டவர் நம்மைத் துக்கத்தில் மூழ்கும்படி செய்யலாம். ஆனால் கோபத்தினால் மூழ்கடிக்க மாட்டார். தம் கிருபையினால் நமக்குப் புத்துயிர் ஊட்டுவார். நம்ஆண்டவரின் அன்புக் கடிதங்கள் பலமுறை கறுப்பு ஓரம் உள்ள உறைகளிலேயே நமக்கு வருகின்றன. அவர் வாகனங்கள் இரைச்சலுடன் நகரலாம்.

*ஆனால் அவற்றில் நன்மைகள் நிறைந்திருக்கின்றன. அவர் கோவிலிலிருந்து வாசமுள்ள அழகிய மலர்களும் ஊட்டமளிக்கும் பழங்களும் தோன்றுகின்றன.நாம் மேகங்களைக் குறித்துக் கவலைப்படுவது அவசியமில்லை. ஏனெனில் ஒரு மாதத்தில் மழை பெய்வதனால் அடுத்த மாதத்தில் அழகான பூக்கள் தோன்றுகின்றன.*

*ஆண்டவரே மேகங்கள் உம் பாதத்தின் தூசியாகும். மேகமூட்டமான இருண்ட நாளில் நீர் எவ்வளவு அருகில் இருக்கிறீர்.அன்பினால் உம்மைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். மேகங்கள் மழையைப் பொழிந்து குன்றுகளை பூரிப்படையச் செய்வதை நம்பிக்கையினால் காண்கிறேன்.*

## 22. உறுதியான நம்பிக்கையின் பாட்டு

*நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர். என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர். உமது வலது கரம் என்னை இரட்சிக்கும் (சங்.138:7).*

*தொல்லையின் ஊடே நடப்பது துயரம் மிகுந்ததா? இல்லை. ஏனெனில் அதற்கென்று சிறப்பு வாக்குறுதி ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டபின் ஒன்றும் தொல்லையாய் இராது. நான் என்ன சொல்லவேண்டும் என்று ஆண்டவர் இங்குஎனக்குப் போதிக்கிறார். நீர் என்னை உயிர்ப்பிப்பீர் என்றே சொல்லவேண்டுமென்று போதிக்கிறார். எனக்கு இன்னும் உயர்வான வாழ்வும், அதிகமான ஆற்றலும், நம்பிக்கையும் இருக்கும். ஒருவர் மயக்கம் அடையும் நிலையில் இருக்கும்போது குளிர்ந்த காற்று மீண்டும் உணர்வு பெறச்செய்வதுபோல் பல தடவைகளில் தொல்லைகள் நம்மைப் புத்துணர்ச்சி பெறச் செய்கின்றன அல்லவா?*

என் பகைவர், முக்கியமாக என் பரம விரோதியானவன் எவ்வளவு கோபம் அடைகிறான். நான் என் கரங்களை நீட்டிப் போர் புரியலாமா? அவ்விதம் செய்யமாட்டேன்.என் ஆண்டவருக்குச் சேவை செய்யவே அவற்றைப் பயன்படுத்துவேன். அதுவுமல்லாமல் அதற்கு அவசியமும் இல்லை. ஏனெனில் என் ஆண்டவர் எனக்காக அவருடைய நீண்ட கரங்களைப் பயன்படுத்தி, என்னைவிடச் சிறந்தவிதமாக அவர்களோடு போர் புரிவார். பழிவாங்குதல் எனக்குரியது. நானேபதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆற்றலும் ஞானமும் நிறைந்த அவர் வலது கரத்தால் என்னை இரட்சிப்பார். இதைவிட அதிகமாக நான் விரும்பக்கூடியது என்ன?

என் இதயமே, இந்த வாக்குறுதியை உன் பற்றுறுதியின் பாட்டாகவும் உன் தூய்மையின்ஆறுதலாகவும் பயன்படுத்தும்வரை அதைக் குறித்து உனக்குள்ளேயே தியானம் பண்ணு. நீ புத்துணர்ச்சி பெறவேண்டுமென்று வேண்டிக்கொள். உனக்காக எல்லாவற்றையும் செய்து முடிக்கும் ஆண்டவரிடம் மீதியை விட்டுவிடு.

# 23. கடவுள்மேல் முழுவதுமாக சார்ந்திருத்தல்

கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார் (சங்.72:12).

தேவையில் இருப்பின் கூப்பிடுகிறான். அவன் வேறு என்ன செய்யமுடியும்? இதைவாசிப்பவரில் தேவையில் இருப்பவர் உடனே கர்த்தரை நோக்கி கூப்பிடட்டும். ஏனெனில் இதுவே அவர் செய்யக்கூடிய ஞானமான செயல். உங்கள் நண்பர்களிடம் உங்கள் தொல்லைகளைச் சொல்லி அழாதேயுங்கள். ஏனெனில் அவர்கள் உங்களுக்கு உதவி செய்வதுகூட ஆண்டவர்

துணைசெய்வதினால்த்தான். நீங்கள் உடனே செய்யக்கூடியது கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதுதான். வேறு யாரிடமும் ஒடுவதால் பயன் ஏற்படாது.

ஐயோ, எனக்கு நண்பர்களும் உதவி செய்யக்கூடியவர்களும் யாரும் இல்லையே என்று நீங்கள் புலம்புகிறீர்கள். அது நல்லதுதான்.ஆண்டவரே நண்பரும் துணைபுரிபவருமானவர் என்று நீங்கள் அவர்மேல் சாரலாம். இரண்டுவிதமானவர்கள் உதவியும் உங்களுக்குத் தேவை என்று உங்கள் தேவையை இருமடங்காக்குங்கள். இம்மைக்குரிய கிருபைகளுக்காகக்கூட நீங்கள் கடவுளை நோக்கிக் கூப்பிடலாம். ஏனெனில் அவர்பிள்ளைகளுக்குவேண்டியதாகவுள்ள அந்தத் தேவைகளுக்காகவும் அவர் கவலைப்படுகிறார். ஆன்மீகத் தேவைகள் அழுத்தும் சுமைபோன்றவை. அவைகளுக்காக நீங்கள் வேண்டிக்கொண்டால் ஆண்டவர் உங்கள் கூப்பிடுதலைக் கேட்டு, உங்களை விடுவிப்பார். உங்களுக்குத் தேவையானவைகளையும்கொடுப்பார்.

இதை வாசிக்கும் ஏழையான நண்பரே, எல்லாம் வளமும் தரத்தக்க ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டுப் பாருங்கள். உதவியற்றவரே, அவர் உதவியை ஆதாரமாகக்கொள்ளுங்கள். அவர் ஒருபோதும் என்னைக் கைவிட்டதில்லை. உங்களையும் ஒருபோதும்கைவிடமாட்டார் என்று நான் திட்டமாய் நம்புகிறேன். இருப்பவராக ஆண்டவரிடம் செல்லுங்கள். அவர் உங்களுக்கு உதவியளிக்க மறுக்கமாட்டார். அவர் கிருபையையே உங்கள் வேண்டுதலாகக் கொள்ளுங்கள். இயேசு அரசரானவர். நீங்கள் மாள்வுற விட்டுவிடுவாரா? இதை நீங்கள்மறந்துவிட்டீர்களா ?

# 24. ஒருவரே பெரும்பான்மையானவர்

உங்களில் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார் (யோசு.23:10).

மனிதரை ஏன் எண்ணுகிறீர்கள்? பகைவரின் பக்கம் ஆயிரம் பேர் இருந்து, கடவுளோடு ஒருவர் மட்டும் இருந்தாலும் கடவுள் பக்கம் இருப்பவர்களைப் பெரும்பான்மையினராகக் கருதலாம். கிதியோன் கண்டுபிடித்ததுபோல மனிதரில் நமக்கு உதவி செய்கிறவாகளைக் கடவுள் தேவைக்கு அதிகமானவர்களாகக் கருதலாம். தமக்கு உதவி செய்ய வந்தவர்கள் தொகையைக் குறைத்து, தம் ஆற்றலை அதிகப்படுத்துமுன் கிதியோன் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருந்தார். ஆனால் கடவுளின் சேனை ஒருபோதும் தேவைக்குக் குறைவானதாய் இருப்பதில்லை. கடவுள் ஓர் இனத்தை உருவாக்க நினைத்தபோது ஆபிரகாமை மட்டுமே அழைத்து, அவரை ஆசீர்வதித்தார். பெருமையுடன் இருந்த பார்வோனை வென்று அடக்குவதற்கு பெரிய படையைப் பயன்படுத்தவில்லை. மோசேயையும் ஆரோனையும் உபயோகித்தார். மெய்யறிவார்ந்தவர்கள் சிலர் இதை ஒருவரே செய்யும் ஊழியம் என்கிறார்கள். அதிகாரிகளுக்குக் கீழ் செயல்படும் பயிற்சி பெற்ற ஊழியக்காரரைவிட இப்படிப்பட்டவர்களையே ஆண்டவர் அதிகம் உபயோகித்திருக்கிறார். சிம்சோன் வெட்டி வீழ்த்தினவர்களைவிட அதிகமானவர்களை இஸ்ரவேலர் வெட்டி வீழ்த்தினார்களா? சவுலும் அவர் படை வீரரும் ஆயிரம்பேரைக் கொன்றார்கள். தாவீதோ பதினாயிரம் பேரைக் கொன்றார்.

கடவுள் எதிரிகளுக்குச் சாதக நிலை கொடுத்தாலும் அவர்களை அழித்துவிடலாம். நமக்கு நம்பிக்கை இருந்தால் கடவுள் நம் பக்கம் இருப்பார். பகைவர் பக்கம் ஏராளமான பேர் இருந்தாலும் நமக்கு என்ன? ஒரு மேய்ப்பனின் நாய் பெரிய ஆட்டு மந்தையையே ஓட்டிச்செல்லக்கூடும்! என் சகோதரரே, ஆண்டவர்

உம்மை அனுப்பினால் அவர் ஆற்றல் அவர் தெய்வீகக் குறிக்கோளை நிறைவேற்றி முடிக்கும். ஆகையால் இந்த வாக்குறுதியை நம்பி தைரியம் உள்ளவர்களாய் இருங்கள்.

# 25. கடவுளின் பொக்கிஷசாலை

*கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலை (யைத்)…. திறப்பார் (உபா.28:12).*

முதலாவது இது மழை பெய்வதைக்குறிக்கிறது. ஏற்ற காலத்தில் கர்த்தர் இதை அளிப்பார். மழை ஆண்டவர் தம்முடைய அடியார்மேல் பொழிய ஆயத்தமாயிருக்கும் எல்லா விண்ணுலக பாக்கியங்களையும் குறிக்கும் தனிக் குறியாகும். ஆண்டவரின் உடைமையானவரின்மேல் இவ்வித மழை பொழிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

ஆண்டவரின் பொக்கிஷசாலையைத் திறக்க எலியா போன்ற பெரிய தீர்க்கராலேயே முடியும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அது உண்மையல்ல. இந்த வாக்குறுதி இஸ்ரவேலரில் திடப்பற்றுடைய ஒவ்வொருவருக்கும் உரியது. ஆண்டவரை நம்பும் நண்பரே, கர்த்தர்உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையைத் திறப்பார். வானம் திறப்பதை நீரும் கண்டு, உம் கையை நீட்டி, உமக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளலாம். உம்மைச் சுற்றிலும் உள்ள சகோதரருக்குத் தேவையானவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். நீர் கிறிஸ்துவிலும் அவர் வார்த்தைகள்உம்மிலும் நிலைத்திருந்தால் நீர் கேட்டுக்கொள்வது எதுவோ அது உமக்கு அருளப்படும். மறுக்கப்படமாட்டாது.

நீர் இன்னும் ஆண்டவரின் பொக்கிஷங்களைப்பற்றியெல்லாம் அறிந்துகொள்ளவில்லை. நீர் உய்த்தறிவதற்கு ஏற்றவாறு அவை அருளப்படும். நிச்சயமாக அவர்உடன்படிக்கையின் வலிமையை நீர் முழுவதுமாக இன்னும்

அநுபவிக்கவில்லை. ஆனால் அவர் அன்பை நீர் அறியச் செய்து, உம்மில் இயேசுவை வெளிப்படுத்துவார். ஆண்டவர் ஒருவரே இதைச் செய்யக்கூடும். ஆனால் அதற்கான வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. நீர் ஊக்கமான அவர் சத்தத்தைக்கேட்டு அவர் சித்தத்துக்குக் கீழ்ப்படிந்தால் கிறிஸ்து இயேசுவில் அவர் மகிமையின் செல்வங்கள் உம்முடையவையாகும்.

## 26. சாதாரணமானவை ஆசீர்வதிக்கப்படும்

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார் (யாத்.23:25).

இது எவ்வளவு சிறந்த வாக்குறுதியாகும்!கடவுளைச் சேவிப்பதே மனமகிழ்ச்சியளிக்கும். அதோடு அவர் நம்மை ஆசீர்வதிப்பது எவ்வளவு மேன்மையாகும். நாம் ஆண்டவருக்கென்று தேர்ந்துவிடப்பட்டவர்களால் நம்மோடு தொடர்புள்ள சாதாரணமானவையெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு அப்பத்தை எடுத்து, அதைஆசீர்வதித்தார். ஆசீர்வதிக்கப்பட்ட அப்பத்தில் நாமும் பங்குகொள்கிறோம். இயேசு தண்ணீரை ஆசீர்வதித்து அதைத் திராட்சரசமாக்கினார். மக்கள் குடித்து, மகிழ்ச்சியடையும் எந்தத் திராட்சரசத்தையும்விட நாம் குடிக்கும் தண்ணீர் எவ்வளவோ மேலானது. அதன் ஒவ்வொருதுளியிலும் ஒவ்வொரு வாழ்த்து இருக்கிறது. கடவுளின் மனிதனோடு எக்காலத்திலும் எல்லாவற்றிலும் கடவுளின் ஆசீர்வாதம் நிலைத்திருக்கிறது.

நம்மிடம் அப்பமும் தண்ணீரும் மட்டும் இருந்தால் என்ன? அவை ஆசீர்வதிக்கப்பட்ட அப்பமும் தண்ணீரும் ஆகும். நம்மிடம்எப்போதும் அப்பமும் தண்ணீரும் இருக்கும். இதன் உள் அர்த்தம் இதுதான். ஏனெனில் அவர் ஆசீர்வதிக்க அவை இருக்கவேண்டும். அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்.

அவன் தண்ணீர் அவனக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். சாப்பிடும்போது ஆண்டவர் நம்மோடு இருந்தால் நாம்சாப்பாட்டை ஆசீர்வதிக்க அவரைக் கேட்டுக்கொள்வது மட்டுமல்ல, சாப்பாடே அவர் ஆசீர்வாதமாக நமக்குக் கொடுத்தது ஆகும். ஆலயத்தில் மட்டுமல்ல, சாப்பாடு இடத்திலும் அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். அவருக்கு நன்றாக ஊழியம் செய்பவர்களுக்குத் தேவையானவற்றை அவர்அளிக்கிறார். சாப்பாடு ஆசீர்வதிக்கப்படுவது கிருபையினாலேயே. கடனுக்காக அல்ல, மூன்று மடங்காக்கப்பட்ட கிருபை அருளுகிறார். அவர் கிருபையினால் நமக்கு உணவு அளிக்கிறார். அவர் கிருபையினால் அதை ஆசீர்வதிக்கிறார்.

# 27. வாழ்க்கையைப்போலவே கனியும் இருக்கும்

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது (2.பேது.1:8).

நம் கனிகளினால் ஆண்டவரைப் பெருமைப்படுத்த நாம் விரும்பினால் நம்மில் சில தன்மைகள் இருக்கவேண்டும். ஏனெனில் நம்மில் இல்லாதது ஒன்றும் வெளிப்படையாகக் காணப்பட முடியாது. அது நம்பிக்கையில் தொடங்கவேண்டும். அதுதான் எல்லா சிறப்பியல்புகளுக்கும் அடிப்படை. பின்ஊக்கமாக உழைத்து அதோடு ஒழுக்கம், அறிவு, தன்னடக்கம், பொறுமை இவற்றைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவற்றோடு கடவுள் பற்றும் சகோதர அன்பும் நிலைத்திருக்கவேண்டும். இவையெல்லாம் நம்மில் ஒருங்கே இணைந்திருந்தால் நிச்சயமாக நம் வாழ்க்கையின் கனிகளாகக்கொத்து கொத்தாக பயனுடைமை என்னும் கனிகளை நாம் கொடுப்பவர்களாயிருப்போம். நாமும்

கடவுளின் வார்த்தையைக் கேட்கிறவர்களாய் மட்டுமல்லாமல், அதன்படி செய்கிறவர்களாயும் இருப்போம். இவை நம்மில் ஒரளவு இருப்பதுமட்டும் போதாது, ஆனால் மிகுந்திருக்கவேண்டும்.இல்லையெனில் நாம் கனிகொடுக்கமுடியாது. வாழ்க்கை நிரம்பி வழிவதே கனியாகும். நிரம்பி வழிவதற்கு முன் நாம் நிரப்பப்பட்டிருக்கவேண்டும்.

குறிப்பிடத்தக்க கடமைகளும் வாய்ப்புகளும் பெற்றிருந்தும் சிலர் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணுவதில் சிறப்பானமுன்னேற்றம் காட்டாமல் இருந்ததை நாம் அறிந்திருக்கிறோம். அவர்களைக் கூர்ந்து கவனித்தபின் கனி கொடுப்தற்கு அத்தியாவசியமான சில நற்பண்புகள் அவர்களில் இல்லாமல் இருந்ததே காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறோம். நாம் பயப்படுகிறவர்களாயிருக்க வரங்களை விடநற்பண்புகளே தேவை. ஒருவன் எப்படிப்பட்டவனாயிருக்கிறானோ அப்படிப்பட்டதாகவே அவன் வேலையும் இருக்கும். நாம் நன்றாக வேலைசெய்ய வேண்டுமானால் நல்லவர்களாய் இருக்கவேண்டும். கனிகொடாமல் இருக்கும் போதகர்களும் இதை வாசிப்பவராகிய உமக்கும்கூட இது சிறுஎச்சரிக்கையாயிருக்கட்டும்.

# 28. கடவுளுக்கு அவர் வாக்குறுதியை நினைவூட்டு

நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய் (வேன்) என்று சொன்னீரே (ஆதி.32:12).

ஆண்டவரோடு ஜெபத்தில் நீடித்திருப்பதற்கு இது நிச்சயமான வழி ஆகும். அவர் கூறியவற்றைத் தாழ்மையுடன் அவருக்குநினைவூட்டலாம். நீதியுள்ள நம் கடவுள் வாக்குமாறவும் மாட்டார். தம் வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருக்கவும் மாட்டார். ஆயினும் அவர் மக்கள் அவரை

வேண்டிக்கொள்ளவேண்டும் என்றும் அவர் வாக்குறுதியை நினைப்பூட்டவேண்டும் என்றும் விரும்புகிறார். இது அவர் மக்கள்நினைவாற்றலைக் கிளறிவிடுகிறது. அவர்கள் பக்திக்குப் புது ஊக்கம் அளிக்கிறது. அவர்கள் நம்பிக்கையைப் புதுப்பிக்கிறது. கடவுள் இவ்விதம் கூறியுள்ளது அவருக்காகவல்ல, நமக்காகத்தான். அவர் நோக்கங்கள் திட்டவட்டமானவை. அவர் மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும்அவர் திட்டங்களுக்கு அவரைக் கட்டுப்படுத்த ஏதும் தேவை இல்லை. ஆயினும் நமக்கு பெலனும் ஆறுதலும் அளிக்க இந்த வாக்குறுதியை அளிக்கிறார். ஆகையால் நீர் சொன்னீரே என்று நாம் மன்றாட வேண்டுமென்று விரும்புகிறார்.

ஆண்டவரின் கிருபை நிறைந்த வார்த்தைகளின்சாரம் நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்வேன் என்பதாகும். மெய்யாகவே என்பதை அழுத்திச் சொல்லவும். அவர் நமக்கு மெய்யான நன்மை, நிலையான நன்மை, தீமையே கலவாத நன்மை முதலிய நன்மைகளைச் செய்வார். அவர் நமக்குச் சிறப்பான எல்லாவித நன்மைகளையும்குறைவின்றி செய்ய நம்மையே நல்லவர்களாக்குவார். நாம் இங்கு இருக்கும்போதே நம்மை அவருடைய பரிசுத்தவான்கள் போல நடத்துவார். இது நல்லதாகும். சீக்கிரத்தில் இயேசுவோடும் அவர் தெரிந்துகொண்டுள்ளவர்களோடும் நம்மைச் சேர்த்துக்கொள்ளுவார்? இது மேலான நன்மையாகும். நம்மனதில் இந்த வாக்குறுதி நிலைத்திருக்குமேயானால் நாம் சினம் மிகுந்த எந்த ஏசாவுக்கும் பயப்படவேண்டியதில்லை. ஆண்டவர் நமக்கு நன்மை செய்யும்போது யார் நமக்குக் கேடு செய்யக்கூடும் ?

# 29. மீன் பிடிக்கிறவர்கள் அவருக்குப் பின்சென்றார்கள்

இயேசுஅவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார் (மாற்.1:17).

இயேசுவைப் பின்சென்றால்த்தான் நம் உள்ளத்தின் ஆசை நிறைவேறும். நாமும்மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாயிருப்போம். இயேசுவுக்காகத் திறமை வாய்ந்தவர்களாயிருப்போம். இயேசுவுக்காகத் திறமை வாய்ந்த

மீன்பிடிக்கிறவர்களாயிருக்க நாம் எவ்வளவு ஆசைப்படுகிறோம். ஆன்மாக்களை அவருக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ள நம்வாழ்க்கையைத் தியாகம் செய்யக்கூட ஆயத்தமாயிருக்கிறோம். ஆனால் இயேசு ஒருபோதும் பயன்படுத்த எண்ணாத முறைகளைப் பயன்படுத்தலாம் என்னும் சோதனைக்குள்ளாகிறோம். பகைவனின் யோசனைகளுக்கு இணங்கிவிடலாமா? அப்படியானால் நீரை வாரி விளையாடுகிறவர்களாய்இருப்போமேயல்லாமல் ஒரு மீனும் பிடிக்கிறவர்களாய் இருக்கமாட்டோம். நாம் வெற்றிபெறவேண்டுமானால் இயேசுவைப் பின்செல்ல வேண்டும். பரபரப்பூட்டும் முறைகளும், பொழுது போக்கு காட்சிகளும் இயேசுவைப் பின்செல்வது ஆகுமா?

மக்களைக் கட்டுவதற்காகஇக்காலத்தில் உபயோகப்படுத்தப்படும் சில முறைகளை இயேசு உபயோகித்திருப்பார் என்று கற்பனை செய்து பார்க்கக்கூட முடிகிறதா ? இப்பேர்ப்பட்ட சூழ்நிலைக்கிசைந்த முறைகளினாலே ஏற்படும் பயன் என்ன? கடைசி நாளில் இயேசு கணக்கில் சேர்க்கும் பயன் ஏதும் இல்லை.

நம் தலைவரைப்போல் நாம் போதிக்க வேண்டும். ஏனெனில் இம்முறையினாலேயே ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகின்றன. நாம் நம் ஆண்டவரின் கோட்பாடுகளைப்

போதித்து, நிறைவானதும், இலவசமானதுமான நற்செய்தியை அறிவிக்கவேண்டும். ஏனெனில் இதைப்போன்ற வலையினால்த்தான் ஆன்மாக்களைப் பிடிக்கமுடியும். போதிக்கிறவர் சாந்தத்தோடும் தைரியத்தோடும் அன்போடும் போதிக்க வேண்டும். ஏனெனில் மக்களின் இதயங்களைக் கவரக்கூடிய வழி இதுவேயாகும். கடவுளால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களாய்ப் பரிசுத்த ஆவியைச்சார்ந்து ஊழியம் செய்ய வேண்டும். இவ்விதமாய் நாம் இயேசுவுக்கு முன்னால் ஓடிவிடுகிறவர்களாயாவது, அவரை விட்டு வேறு வழியாகச் செல்கிறவர்களாயாவது இராமல் இயேசுவின் பின்னே செல்கிறவர்களாய் இருந்தால் நாம் மனிதர்களைப் பிடிக்கிறவர்களாய் இருப்போம்.

## 30. தூய முன்னோக்கு

அன்றியும் , மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 26:64).

உம்மைத் துன்பப்படுத்தினவர்கள் உம்மை ஒரு குற்றவாளியைப்போல் தங்களுக்கு முன் நிற்க வைத்தபோது நீர் உண்மையாகவே மதிப்பற்ற நிலையிருந்தீர். ஆயினும் அப்போது இருந்த தாழ்விலிருந்து நம்பிக்கையின் கண்கள் இனிவரும் உம் மகிமையைக் கண்டன.அன்றியும் இதுமுதல் என்பவை எவ்வளவு பொருள் செறிந்த வார்த்தைகள். வறுமை, நோய் உற்றிருக்கும்போது பிறரால் தூற்றப்படும்போதும், நானும் தூய உள்நோக்கு உள்ளவனாய் அன்றியும், இதுமுதல் என்னும் சொற்களை உபயோகிப்பேன். தளர்ச்சிக்குப் பதில் நீர் ஆற்றல்மிக்கவராய் இருக்கிறீர். அவமானத்துக்குப் பதில் எல்லா மகிமையும் உள்ளவராய் இருக்கிறீர். ஏளனம் செய்யப்பட்டதற்குப்

பதில் தொழப்படுகிறவராய் இருக்கிறீர். உம்முடைய கிரீடத்தின் புகழ் ஒளியை உம் சிலுவை மங்கச் செய்யவில்லை. உம் முகத்தின் அழகையும் அவர்கள் துப்பினஎச்சில் கெடுக்கவில்லை. சொல்லப்போனால் உம் பாடுகளினாலே நீர் இன்னும் மகிமையும் மேன்மையும் அடைந்திருக்கிறீர்கள்.

ஆகையால் ஆண்டவரே, நானும் இதுமுதல் என்பதிலிருந்து தைரியம் கொள்வேன். எதிர்கால வெற்றியின் நினைப்பில் இக்காலக் கஷ்டங்களைமறந்துவிடுவேன். உம் நாமத்துக்காக என்னை ஏளனம் செய்யும்போது நான் தடுமாற்றம் அடையாமல் இப்போதைய துன்பத்தைப் பற்றிய எண்ணம் அற்று இதுமுதல் என்பதை குறித்து அதிகம் அதிகமாய் எண்ணத்தக்கதாக உம் பிதாவின் அன்புக்கும் உம் பொறுமைக்கும் வழிநடத்தியருளும். நான்சீக்கிரத்தில் உம்மோடிருந்து, உம் மகிமையைக் காண்பேன். ஆகையால் நான் வெட்கப்பட்டுப்போவதில்லை. என் ஆன்மாவுக்குள் அன்றியும் இதுமுதல் என்று சொல்வேன்.

# 31. திடன் கொள்ளுங்கள்

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் (யோ.16:33).

உபத்திரவங்களைக் குறித்த நம் ஆண்டவரின் சொற்கள் உண்மையானவை. சந்தேகமில்லாமல் அவற்றில் என் பங்கை அனுபவிக்கிறேன். சூடடிக்கும் கோல் அகற்றப்படவில்லை. போரடிக்கும்களத்தில் நான் படுத்திருக்கும்வரை அது அங்கிருந்து எடுக்கப்பட்டு விடும் என்றும் நான் நம்பிக்கை கொள்ள முடியாது. பகைவரின் நாட்டில் இருக்கும்போது நான் எப்படி சொந்த நாட்டில் இருப்பது போல் இருக்கமுடியும்? நாடு கடத்தப்பட்டிருக்கும் போது எப்படி மகிழ்ச்சியாய் இருக்கமுடியும்? வனாந்தரத்தில் எப்படி வசதிகளுடன் வாழமுடியும்? இது என் இளைப்பாறுதல் அல்ல. இது

உலைக்களமும் கொல்லுலையும் சம்மட்டியும் உள்ள இடமாகும். என் ஆண்டவரின் வார்த்தைகளோடு என் அனுபவம் பொருந்துகிறது.

அவர் திடன் கொள் என்று எனக்குக் கட்டளையிடுவதைக்கவனித்திருக்கிறேன். ஆனால் ஐயோ நான் வாட்டம் அடைகிறவனாகவே இருக்கிறேன். நான் அதிகமாக சோதிக்கப்படும் போது சீக்கிரத்தில் என் ஆன்மா எளிதில் தளர்ச்சியடைகிறது. ஆனால் இவ்விதம் நேரிட நான் விடக்கூடாது. ஆண்டவர் என்னைத் திடன்கொள்ளச் சொல்லும் போதுநான் வாட்டமுறக் கூடாது.

நான் ஊக்கமடைய அவர் எவ்விதம் வாதம் செய்கிறார்? அவரே வெற்றி பெற்றிருக்கிறாரே அவர் நான் உலகத்தை ஜெயித்தேன் என்கிறார். அவர் போர் என்னுடையதை விடக் கடுமையாய் இருந்தது. நான் இன்னும் இரத்தம் சிந்தும்வரை எதிர்த்துநிற்கவில்லையே. மேற்கொள்வதைக் குறித்து நான் அவநம்பிக்கைக்கொண்டு தளர்ச்சி அடைவது ஏன்? என் ஆன்மாவே பகைவன் ஒருமுறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறான். என்பதைக் கவனி. முறியடிக்கப்பட்ட எதிரியோடு நான் போர் செய்கிறேன். உலகமே இயேசு உன்னை ஏற்கனவே வென்றுஅடக்கிவிட்டார். அவர் கிருபையின் மூலமாய் என்னிலும் மறுபடியும் உன்னை மேற்கொள்வார். ஆகையால் நான் திடன்கொண்டு வெற்றி வேந்தரான என் ஆண்டவரைப் பாடுவேன்.

# 06 ஜூன்

1. கடவுளின் வாக்குறுதி மாறுவதில்லை
2. உடனே விடுதலை
3. தடுமாறாமை
4. மதிப்பு மிக்கது
5. வேறுபாடு இருக்கிறதா ?
6. அவர் எப்போதும் கவனித்துக் கேட்கிறார்
7. பத்திரமான இடம்
8. வேண்டிக்கொண்டால் ஞானம் பெறுவோம்
9. நம்பத்தகு நாமம்
10. ஒரு மேய்ப்பர் அவர்களைப் பாதுகாப்பார்
11. வெட்கப்பட அவசியமில்லை
12. பத்திரமாகத் தனித்து வாசம்பண்ணுதல்
13. தெய்வீக வேளாண்மை
14. எப்போதும் கூடவே இருக்கிறார்
15. குடும்பத்திற்கான ஆசீர்வாதம்
16. விசுவாசிப்பவனாயும் உள்ளவனாயும் இரு
17. நம் போர்க்களம்
18. கடவுளே செய்வார்
19. உத்தமமான இருதயம்
20. ஆண்டவரே நம் தோழன்
21. ஒரு பெண்ணின் போர்
22. அவர் நம்மோடும் நாம் அவரோடும்
23. பகைவரின் திட்டங்கள் அழிக்கப்பட்டன
24. ஆண்டவர் அதிகமாய்க் கொடுப்பவர்
25. பரலோகத்திற்கு செல்லும் படிகள்
26. சமீபமாயிருக்கிறது
27. நன்றியுள்ளவர்களாய்த் தக்கவிதமாய் வாழுங்கள்
28. கர்த்தர் நோக்கிப்பார்த்தார்

29. ஜெபம் செய்வதற்கு அழைப்பு
30. பின்னோக்கியும் முன்னோக்கியும்

# *1. கடவுளின் வாக்குறுதி மாறுவதில்லை*

*உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிர 11:1).*

நாம்செய்யும்நன்மைகளினாலெல்லாம் உடனே பயன் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. நம் உழைப்புக்குக் கைம்மாறு செய்யக்கூடிய இடங்களிலும் மக்கள் இடையேயும் மட்டுமே எப்பவும் நாம் உழைக்கவும் கூடாது. எகிப்தியர்கள் நீல நதியின் தண்ணீர் மேல் தானியங்களைப் போடுவார்கள் அவைவீணாக்கப்பட்டது போல் தோன்றும். ஆனால் ஏற்ற காலத்தில் வெள்ளம் வடிந்து நெல் போன்ற தானியங்கள் அடியிலுள்ள சேற்றில் புதைந்து விடும். சீக்கிரத்தில் அவை முளைத்து வளர்ந்து அறுவடைக்கு ஆயத்தமாயிருக்கும். தீயவர்களும் நன்றியைப் பற்றிய உணர்வு இல்லாதவர்களுக்கும் இன்றுநன்மை செய்வோமாக. கவனமற்றவர்களுக்கும் பிடிவாதமுடையவர்களுக்கும் போதிப்போமாக. நம்பிக்கை தரக்கூடிய மண்ணின் மேல் சிறிதளவும் நம்பிக்கை தரக்கூடாத தண்ணீர் இருக்கலாம். ஆண்டவரில் எந்த இடத்திலும் நம் உழைப்பு வீண்போகாது.

ஆகாரத்தைத் தண்ணீர்களின் மேல்போடுவது நம் வேலையாகும். அதின் பலனைக் காண்பாய் என்னும் வாக்குறுதியைக் கடவுள் நிறைவேற்றுவார். அந்த வாக்குறுதி நிறைவேறாமற்போக அவர் விடமாட்டார். நாம் எடுத்துச்சொன்ன அவர் வார்த்தைகள் வீணாய்ப் போகா. அவை கண்டுபிடிக்கப்படும் ஒருவேளை இப்போதே அல்ல. ஆனால்நாம் விதைத்தவற்றின் பயனை எப்படியும் ஒருகாலத்தில் அறுப்போம். நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் ஒருவேளை ஆண்டவரே பொறுமையைப் பயிற்றுவிப்பார். வேதத்தில் அநேக நாள்களுக்குப்பின் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை

பலமாதங்களும் ஆண்டுகளும்கடந்து போகலாம். ஆகிலும் இந்த வாக்குறுதி மாறுவதில்லை. அது நிலைத்திருக்கும். இந்தக் கட்டளையை இன்றே நிறைவேற்ற நாம் கவனமாயிருப்போமாக.

# 2. உடனே விடுதலை

இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து உன் கட்டுக்களை அறுப்பேன் (நாகூம் 1:13).

அசீரியர் ஆண்டவரின்மக்களைச் சிறிது காலம் ஒடுக்கி வைத்திருப்பதை ஆண்டவர் தடுக்கவில்லை. ஆனால் அவர்கள் ஆற்றலை முறிக்கும் காலம் வந்தது. பல ஆன்மாக்கள் சாத்தானின் கட்டுப்பாட்டில் அகப்பட்டிருப்பதால் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கைதிகள் இப்போதும் நான் உன்மேல்இருக்கிற அவன் நுகத்தை முறித்து உன் கட்டுகளை அறுப்பேன் என்னும் நம்பிக்கை அளிப்பவையான சொற்களை உடனே கேட்டால் எவ்வளவு

நன்றாயிருக்கும்.

இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறிப்பேன் என்று ஆண்டவர் சொல்வதால் உடனே விடுதலையளிப்பதாகவாக்குப்பண்ணுகிறார் என்பதைக் கவனித்துப் பாருங்கள். உடனே விடுதலை கிடைக்கும் என்று நம்புங்கள். உங்கள் நம்பிக்கைப்படி இப்போதே நடக்கும். கடவுள் இப்போது என்று சொல்லும் போது நம்மில் யாரும் நாளை என்று சொல்லாதிருப்போமாக. மீட்பு குறைபாடற்றதாய் இருக்கும்என்பதைக் கவனியுங்கள். நுகம் அகற்றப்படும் என்று சொல்லப்படவில்லை. முறிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. கட்டுகள் அவிழ்க்கப்படும் என்று சொல்லப்படவில்லை. அறுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. தெய்வீக ஆற்றல் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.துன்பப்படுத்துகிறவர்கள் திரும்பி

வரமாட்டார்கள் என்பதற்கு உறுதியளிக்கிறது. நுகம் முறிக்கப்பட்டு விடுகிறது. ஆகையால் அதன் கனத்தால் நாம் மறுபடியும் குறுகிப்போகவேண்டியதில்லை. கட்டுக்கள் அறுக்கப்பட்டுப்போய்விடுகின்றன. ஆகையால் அவை நம்மை இனிக்கட்டிப்போடுவதில்லை. பூரணமான நித்திய விடுதலைக்காக ஆண்டவரை நம்பினால் எவ்வளவு நன்றாயிருக்கும். குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். ஆண்டவரே கட்டப்பட்டிருக்கும் உம் பிள்ளைகளுக்கு உம் வார்த்தையின்படி விடுதலையளியும்.

## 3. தடுமாறாமை

ஆண்டராகிய கர்த்தர் என் பெலன். அவர் கால்களை மான் கால்களைப் போலாக்கி உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார் (ஆப.3:19).

கடவுளின் மனிதனுடைய நம்பிக்கை ஒரு வாக்குறுதிக்கு ஒப்பானதாகும். ஏனெனில் அவன் நம்புவதே கடவுளின் திட்டமாகும். தீர்க்கர் வறுமை பஞ்சம் என்னும் ஆழமான பாதை வழியே செல்லவேண்டியிருந்தது. ஆனால் அவர் தவறி விழாமல் சென்றார். ஏனெனில் ஆண்டவர் அவரைநிலை பெற்றிருக்கச் செய்தார். ஒரு காலத்தில் அவர் மற்றவர்களுக்கு எதிர்த்து நிற்பது என்னும் மலை மேல் ஏறிப்போக அழைக்கப்பட்டார். ஆனால் ஆழங்களில் எவ்விதம் பயம் இல்லாமல் சென்றாரோ அவ்விதம் மலை மேலும் ஏறிப்போனார்.

கடவுள் அவருக்குப் பெலன் அளித்தார்.யேகோவாவே அவர் பெலன் ஆனார். அதை நினைத்துப் பாருங்கள். சர்வ வல்லமையுள்ள கடவுளே நம் பெலன் ஆவார்.

ஆண்டவர் அவர் தடுமாறாமல் நடக்கவும் செய்தார். மான் மேடுகளிலும் பாறைகளிலும் தடுமாறாமல் குதித்துச் செல்கிறது.

நாம் கடமையை நிறைவேற்ற கடினமான பாதைவழியேசெல்ல வேண்டியிருந்தாலும் தடுமாற்றம் இல்லாமல் செல்லக் கிருபை அளிப்பார். பாறைகளுக்கேற்றவாறு நம் பாதங்களை அவர் அமைக்கக் கூடியவர். ஆகையால் இடரற்ற நிலையில் நாம் அங்கு இருப்போம். அவரை விட்டுப் பிரிந்து நின்றால் நாம் அழிந்து விடுவோம்.

வரும் நாட்களில் நாம் உயரமான ஸ்தலங்களுக்கு அழைக்கப்படுவோம். பிரகாசமானவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கும் கடவுளின் மலைக்குக்கூட நாம் ஏறிப்போவோம். ஆ நம்பிக்கையின் பாதங்கள் எப்படிப்பட்டவை. அவற்றினால் காலையில் குதித்து வரும் மான்களின் பின்னே நாமும்ஆண்டவரின் மலை மேல் ஏறிப்போவோம்.

# 4. மதிப்பு மிக்கது

என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் (மல். 3:17).

நம் பெரிய அரசரிடம்அவர் பிதா கொடுத்த பட்டியல்படி சம்பத்து எல்லாம் சரியாய் இருக்கிறதா என்று கணக்கு எடுக்கும் நாள் வருகிறது என் ஆத்துமாவே மதிப்பு மிக்கவையாய் இயேசு எண்ணுபவற்றில் நீயும் ஒன்றாய் இருப்பாயா? அவர் உனக்கு மதிப்பு மிக்கவராய் இருந்தால் நீயும் அவருக்கு மதிப்புமிக்கவனாய் இருப்பாய். இன்று அவர் உனக்கு உரியவராய் இருந்தால் அந்த நாளிலே நீயும்

அவருக்கு உரியவனாய் இருப்பாய்.

மல்கியாவின் நாட்களிலே ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்படுபவர்கள் தங்கள் கடவுளே தாங்கள் பேசுவதைக்கேட்டுக்கொண்டிருக்கிறார் என்னும் எண்ணத்துடன்

ஒருவரோடொருவர் பேசும் பழக்கம் உள்ளவர்களாயிருந்தார்கள். கடவுள் அதை விரும்பினபடியால் அதைக் குறிப்பெடுத்து ஒரு நூலாக்கி பத்திரப்படுத்திக்கொண்டார்கள். அவர்கள் உரையாடலைக் குறித்து திருப்தியடைந்த அவர் அவர்கள் மேலும்திருப்தி உள்ளவர் ஆனார். என் ஆன்மாவே உன் உரையாடலை இயேசு கேட்டுக்கொண்டிருந்தால் அதைக்குறித்து அவர் மகிழ்ச்சி அடைவாரா? அது அவர் மகிமைக்கும் சகோதரர்கள் பத்திவிருத்திக்கும் ஏதுவாய் இருக்கிறதா சொல். என் ஆன்மாவே உண்மையைச் சொல்.

ஏழைகளாகியநாம் நம் ஆண்டவரின் சம்பத்தாக எண்ணப்படுவது எவ்வளவு பெரிய புகழாகும் என்று நினைத்துப் பாருங்கள். எல்லாப் பரிசுத்தவான்களும் இந்தப் புகழ் உடையவர்களாயிருக்கிறார்கள். இயேசு அவர்கள் என்னுடையவர்கள் என்று மட்டும் சொல்லவில்லை. அவர்கள் என்னுடையவர்களாய் இருப்பார்கள்என்கிறார். அவர் நம்மை விலை கொடுத்து வாங்கினார். தேடியலைந்து நம்மைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தார். இதுவரை தம் சாயலாக நம்மை உருவாக்கியிருப்பதால் தம் முழு ஆற்றலோடும் நமக்காகப் போர் புரிவார்.

# 5. வேறுபாடு இருக்கிறதா ?

கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதர் முதல் மிருகஜீவன்கள் வரைக்கும் ஒருநாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை (யாத்.11:7).

என்ன? நாயின் நாவைக்கூட அடக்கும் திறன் கடவுளுக்கு இருக்கிறதா? அவற்றைக் குலைக்காமல் இருக்கச் செய்ய அவரால் முடியுமா? முடியும் எகிப்தினரின்நாய் இஸ்ரவேலரின்

மந்தையிலுள்ள ஆட்டுக் குட்டிக்குத் தீங்கு செய்வதைக் கூடத்தடுக்க முடியும். கடவுள் நாய்களையும் மனிதரில் நாய் போன்றவர்களையும் நரகத்தின் வாசலிலுள்ள பெரிய நாயையும் வாயடங்கச் செய்யக் கூடியவரா? அப்படியானால் நாம் அச்சமின்றி நம் வழியேசெல்லலாம்.

நாய்களை நாவை அசைக்கா விட்டாலும் அவை கடிப்பதை நிறுத்தக் கூடியவர். அவை மிகுந்த சத்தம் போட்டாலும் தீமை செய்யாமலிருக்கக் கூடும். ஆயினும் அமைதி எவ்வளவு இனிமையாயிருக்கிறது. பகைவர் மத்தியில் நடந்து திரியும்போது அவர்கள் நம்முடன்சமாதானமாயிருக்க ஆண்டவர் செய்துள்ளார் என்று அறிவது எவ்வளவு மகிழ்ச்சி அளிக்கிறது. தானியேல் சிங்கக் கெபியில் இருந்தது போல் அழிக்க வல்லவர்கள் மத்தியில் நாம் தீங்கடையாமல் இருக்கிறோம்.

இஸ்ரவேலருக்கு ஆண்டவர் அன்று சொன்னது இன்று எனக்குப்பொருந்துமானால் எவ்வளவு நன்றாயிருக்கும். நாய் எனக்குத் தொந்தரவு கொடுக்கிறதா ? அவனைப் பற்றி என் ஆண்டவரிடம் சொல்லுவேன். ஆண்டவரே நான் கெஞ்சுவதை அவன் கவனிக்க மாட்டேன் என்கிறான். நீர் ஆற்றல் வாய்ந்த சொற்களைப் பேசும். அவன் அடங்கிப்படுத்துக்கொள்வான். என் கடவுளே எனக்குச் சமாதானத்தைக் கொடும். எனக்கும் கடவுள் பயம் அற்றவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நான் தெளிவாய்க் காணுமாறு உம் கரத்தின் கிரியையை எளிதில் பார்க்கச் செய்யும்.

# 6. அவர் எப்போதும் கவனித்துக் கேட்கிறார்

கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளுவார் (சங்.6:7).

இங்கு கூறப்பட்டுள்ள அனுபவம்என்னுடையதாகும். கடவுள் உண்மையுள்ளவர் என்பதை நான் திட்டமாய்க் கூறுவேன். அவர் ஊழியக்காரரான என் ஜெபத்திற்கு அவர் பலதடவைகள் ஆச்சரியமான விதங்களில் பதில் அளித்திருக்கிறார். இப்போது என் வேண்டுதல்களை அவர் கேட்கிறார். அவர் தூய நாமம் மகிமைப்படுவதாக.

அப்படியானால் என்ன சங்கீதக்காரனின் திடநம்பிக்கையில் மறைந்திருக்கும் வாக்குறுதி என்னுடையதுமாகும். நம்பிக்கையின் கரத்தால் நான் அதைப் பற்றிக்கொள்வேன். கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்வார். ஏற்றுக்கொண்டு அவருடைய அன்பு நிறைந்தஞானத்தின்படி ஏற்ற காலத்திலும் விதத்திலும் அதற்குப் பதில் அளிப்பார். குறைபாடான என் ஜெபத்தை மகா அரசர் முன் கொண்டுவருகிறேன். அவர் என்னைப் பார்த்து என் ஜெபத்தை ஏற்றுக்கொள்கிறார். என் பகைவர் நான் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். ஆனால் என் ஆண்டவர் கேட்பார்.கண்ணீரோடு ஏறெடுக்கும் என் ஜெபத்தைக் குறித்து அவர்கள் என்னை ஏளனம் செய்கிறார்கள். ஆனால் ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டு மனதில் வைக்கிறார்.

ஏழைப்பாவி எவ்விதமாய் ஏற்றுக் கொள்ளப்படுகிறான் என்று பாருங்கள். நாம் இயேசுவைஏற்றுக்கொள்கிறோம். தம் குமாரனுக்காக கடவுள் நம்மையும் நம் ஜெபத்தையும் ஏற்றுக் கொள்கிறார். பொன்னாலான வாசல் வழியே கூட என் ஜெபங்கள் தங்கு தடையின்றி செல்ல உரிமை வழங்கிய அந்த அருமை நாமம் மகிமைப்படுவதாக. ஆண்டவரே நீர் என் ஜெபத்தைக் கேட்பவரானபடியால்ஜெபிக்க எனக்குக் கற்றுக்கொடும்.

# 7. பத்திரமான இடம்

நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும்

அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை (யோ.10:28).

பரிசுத்தவான்கள் நித்திய பாதுகாப்புடன் இருப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். முதலாவது அவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள். ஆனபடியால் அவர் இரத்தத்தினால் மீட்டுக்கொண்டும் பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுமான அவர் ஆடுகளை ஒருபோதும் இழக்க அவர் சம்மதிக்கமாட்டார்.ஆவியின் வாழ்க்கை அழிவடையுமேயானால் அது மெய்மையான நித்திய வாழ்க்கை அல்ல. சிறிது காலத்திற்கே உரிய வாழ்க்கையாகும். ஆனால் ஆண்டவர் நித்திய வாழ்வைக் குறித்தே பேசுகிறார். ஆகையால் அதற்கு முடிவில்லை என்பது நிச்சயமாகிறது.

அதுவுமல்லாமல்ஆண்டவர் அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை என்று சொல்கிறார். வார்த்தைகளுக்கு அர்த்தம் இருக்கும்வரை விசுவாசிகளுக்கு அழிவில்லை என்பதை இது குறிக்கிறது. எவ்வித நம்பிக்கை இன்மையும் இந்த வாக்கியத்திலிருந்து இதன் அர்த்தத்தை எடுத்துவிட முடியாது.

இதைஇன்னும் தெளிவாக்க அவர் மக்கள் அவர் கையில் இருக்கிறார்கள் என்கிறார். அவர் கையிலிருந்து ஒருவனும் அவைகளைப் பறித்துக்கொள்வதுமில்லை என்றும் சொல்கிறார். நரகத்தின் சண்டாளன் கூட அவ்விதம் செய்ய முடியாது. சர்வவல்லமையுள்ள கையைப் பிடித்துக் கொண்டிருக்கும் நாம்பத்திரமாயிருக்கிறோம்.

உலகத்தின் மேல் நம்பிக்கையையும் உலகத்தைப் பற்றிய அச்சத்தையும் நீக்கி நம் மீட்பரின் உள்ளங்கையில் சமாதானத்தோடு இருப்போமாக.

# 8. வேண்டிக்கொண்டால் ஞானம் பெறுவோம்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்(யாக்.1:5).

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறைவுள்ளவனாயிருந்தால் என்று சொல்ல அவசியமேயில்லை. ஏனெனில் நான் குறையுள்ளவன் என்பது எனக்குத்திட்டமாய்த் தெரியும். நான் எவற்றை அறிந்திருக்கிறேன் ? சரியான பாதையை அறிந்திருக்கிறேனா? நான் மற்றவர்களுக்கு எவ்விதம் வழிகாட்ட முடியும் ? ஆண்டவரே நான் முட்டாள்தனம் நிறைந்தவனாயிருக்கிறேன். என்னிடம் ஞானமே இல்லை.

தேவனிடத்தில் கேட்கக்கடவன்என்று நீர் கூறியிருக்கிறீர். ஆண்டவரே நான் இப்போது உம்மிடத்தில் கேட்கிறேன். உம்முடைய பாதப்படியில் வந்து இந்த நாளின் குழப்பங்களுக்கும் நேர்மையான நிகழ்ச்சிகளுக்கும் தேவையான ஞானத்துக்காக வேண்டிக் கொள்கிறேன். ஏனெனில் நீர் என்னைத் தீங்கிலிருந்துகாப்பாற்றிவிட்டால் தெளிவான நிகழ்ச்சிகளில் கூட நான் என் முட்டாள்தனத்தைக் காட்டிவிடுவேன்.

நான் வேண்டிக்கொண்டாலே போதும் என்று நீர் சொல்லியிருப்பதற்காக நன்றி கூறுகிறேன். நான் நம்பிக்கையோடு வேண்டிக்கொண்டால், நீர் எனக்கு ஞானத்தை அருளுவீர்என்பது உம் கிருபையைக் காட்டுகிறது. இங்கு எனக்குச் சினம் மிகுந்த ஆசிரியரும் கடுஞ்சொல் பேசும் போதகரும் இல்லாமலே தாராளமான பயிற்சி அளிப்பதாக நீர் வாக்குப்பண்ணுகிறீர்.

*அதையும் ஞானத்தில் குறைவான என்னைப் போன்ற மூடனுக்குக் கட்டணம் இன்றி அளிப்பதாகக் கூறுகிறீர்.அப்போது அவனுக்குக் கொடுக்கப்படும் என்னும் உறுதியானதும் தெளிவானதுமான வார்த்தைகளுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன். அதை நான் நம்புகிறேன். மாம்ச சம்பந்தமாய் விவேகமுள்ளவர்கள் ஒருநாளும் கற்றுக்கொள்ள முடியாததும் மறைக்கப்பட்டுள்ளதுமான ஞானத்தை உம் பாலகனான நான் இன்றுஅறிந்து கொள்ளச் செய்வீர். உம் ஆலோசனையினால் எனக்கு வழிகாட்டி இறுதியில் உம் மகிமைக்குள் ஏற்றுக்கொள்வீர்.*

## 9. நம்பத்தகு நாமம்

*உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன். அவர்கள் கர்த்தருடைய நாமத்தின் மேல் நம்பிக்கையாய் இருப்பார்கள் (செப்.3:12).*

*உண்மையான சமயம் பணம் உள்ளவர்களிடையே மறையத்தொடங்கும்போது அது இவ்வுலகில் வறுமை உள்ளவர்களாயும் நம்பிக்கையில் வளமானவர்களாயும் இருப்பவர்களிடையே தங்கி வளரத்தொடங்குகிறது. இப்போதும் ஆண்டவருக்கென்று விசுவாசிகளான சிலர் மீதியாகவைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் நான் ஒருவனா ?*

*ஒருவேளை மக்கள் ஏழைகளாகவும் துன்பப்படுகிறவர்களாகவும் இருப்பதனால் ஆண்டவர்மேல் நம்பிக்கை வைக்கக் கற்றுக் கொள்கிறார்கள் போலும். பணம் இல்லாதவன் நம்பிக்கையினால் என்ன செய்யமுடியும் என்று பார்க்கவேண்டும். ஒரு மனிதன் அவன் எண்ணப்படி ஒன்றுக்கும் உதவாதவனாய் வேறொருவர் மேல் சிறந்த ஒருவர்மேல் யெகோவாவின்மேல் நம்பிக்கைவைப்பதே ஞானமுள்ள செயல் ஆகும். சிலர் எப்போதும் கடவுள் மேல் விசுவாசம் உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் வறியவரும்துன்பப்படுகிறவர்களும்*

ஆனவர்கள். அவர்களை உலகம் மதிக்காவிட்டாலும் அவர்கள் இருப்பது அந்நாட்டினருக்கே சொல்லமுடியாத ஆசீர்வாதம் கிடைப்பதற்கு வழியாகும். இவர்கள் ஆசை இச்சையினால் உலகில் ஏற்படும் சீர்கேட்டிலிருந்து பாதுகாப்பதற்கான உப்பைப் போன்றவர்கள்.

அவர்களில் நானும் ஒருவனா என்று நாம் மறுபடியும் நம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டும். என்னுள்ளேயும் என்னைச் சுற்றிலும் உள்ளதுமான பாவத்தினால் நான் தொந்தரவு அடைந்துள்ளேனா ? நான் ஆவியில் எளிமை உள்ளவனா ? என் அபிப்பிராயப்படி ஆவிக்குரியவளர்ச்சியில் பின்தங்கியவனாய் இருக்கிறேனா ? ஆண்டவரை விசுவாசிக்கிறேனா ? அதுதான் முக்கியம். இயேசு கடவுளின் நாமத்தையும் பண்பையும் தன்மையையும் வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார். அவரில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேனா ? அப்படியானால் இந்த உலகில் நான் ஒருநோக்கத்தோடு வைக்கப்பட்டிருக்கிறேன். ஆண்டவரே அதை நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும்

# 10. ஒரு மேய்ப்பர் அவர்களைப் பாதுகாப்பார்

அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள் (செப்.3:13).

உயிரற்ற உலகில் உயிருள்ளவிதையைப்போல் இருக்க ஆண்டவர் வைத்துள்ள வறியவர்களும் துன்பப்படுகிறவர்களுமானவர்களைக் குறித்து நேற்றுத் தியானித்தோம். அவர்கள் அநியாயம் செய்வதுமில்லை பொய் பேசுவதுமில்லை என்று தீர்க்கர் சொல்லுகிறார். அவர்களைப் பாதுகாக்க அவர்களிடம் பணமுமில்லை பதவியும் இல்லை.ஆகையால் துன்மார்க்கர் தங்களைப் பாதுகாக்கச்

சார்ந்திருந்த எந்த ஆயுதத்தையும் அவர்களால் பயன்படுத்தவும் முடியவில்லை. பாவத்தினாலாவது தந்திரத்தினாலாவது தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் அவர்களால் முடியவில்லை.

அப்படியானால் அவர்கள் அழிக்கப்பட்டு விடுவார்களாஇல்லவேயில்லை. அவர்கள் புசித்துப் படுத்துக்கொள்வார்கள். அவர்கள் ஆபத்தில்லாமல் இருப்பதுமன்றி தீமையைக் குறித்த பயமும் இல்லாமல் அமைதியாய் இருப்பார்கள். ஆடுகள் பலவீனமான மிருகங்கள். அவைகளுக்கு ஓநாய்கள் பயங்கரமான எதிரிகள், ஆனால் இந்த நேரத்தில் ஆடுகள்ஓநாய்களை விட எண்ணிக்கையில் அதிகமாய் இருக்கின்றன. ஆடுகளின் பக்கம் வெற்றியும் ஓநாய்களின் பக்கம் தோல்வியுமே இருக்கிறது. ஒரு நாள் வயல் வெளியெங்கும் ஆடுகள் நிறைந்திருக்கும். ஒரு ஓநாய் கூடக் காணப்படமாட்டாது. இதற்குக் காரணம் என்னவென்றால் ஆடுகளுக்கு ஒருமேய்ப்பர் இருக்கிறார். அவர் அவைகளுக்குத் தீனி பாதுகாப்பு சமாதானம் எல்லாம் அளிக்கிறார். பயப்படுத்துவாரில்லாமல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மனிதருக்காவது மிருகங்களுக்காவது அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. ஆண்டவர் அருகில் இருக்கும் போது அவர் மந்தையைப்பயப்படுத்தக் கூடியவர் யார் ? நாம் புல்லுள்ள இடங்களில் படுத்துக் கொள்வோம். ஏனெனில் இயேசுவே நம் ஆன்மாவுக்கு உணவும் இளைப்பாறுதலும் ஆனவர்.

# 11. வெட்கப்பட அவசியமில்லை

பயப்படாதே நீ வெட்கப்படுவதில்லை (ஏசா.54:4).

நம் விசுவாசத்தைக் குறித்து நாம்வெட்கப்பட வேண்டியதில்லை. நம் விசுவாசத்துக்கு அடிப்படையான வேதத்தை வீணான தர்க்கத்தை விரும்பும் விமரிசகர்கள் தாக்கலாம். ஆனால் தம்முடைய நூலில் ஒரு பிழையாவது

தேவைக்கு அதிகமாயாவது குறைவாயாவது இல்லை என்பதை ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டும் தெளிவாக்கிக் கொண்டேஇருக்கிறார். சாதாரண விசுவாசியாய் இருப்பது அவமானமல்ல. இயேசுவை நோக்கிப் பார்த்து அவரில் விசுவாசம் வைப்பது எந்த மனிதனுக்கும் தலைமேல் உள்ள சிறப்பு வாய்ந்த கிரீடமும் புகழில் சின்னமும் மார்பில் அணியும் எதையும் விட மேலானதும் ஆகும்.

நம் நம்பிக்கையைக்குறித்தும் நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. ஆண்டவர் அளித்த வாக்குறுதிப்படியே நடக்கும். நமக்குத் தேவையான உணவும் இளைப்பாறுதலும் அளிக்கப்படும். நாம் வழி நடத்தப்படுவோம். ஆசீர்வதிக்கப் படுவோம். நம் ஆண்டவர் வரும்போது நம் துக்க நாட்கள் முடிந்துவிடும். முதலாவதுஉற்சாகம் அளிக்கும் நம்பிக்கையையும் பின் நாம் நம்பினவைகளையும் அளித்த ஆண்டவரில் மகிமை கொள்வோம்.

நம் அன்பைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. ஏனெனில் இயேசு நமக்கு முற்றிலும் அழகானவர். அவருக்கு நம் உள்ளங்களைக் கொடுத்திருப்பதைக் குறித்துநாம் ஒருநாளும் வெட்கப்படவேண்டியதில்லை. புகழ் வாய்ந்தவரும் நமக்கு அருமையானவருமானவரைக் காண்பது நமக்கு அவரோடு உள்ள நெருங்கிய தொடர்பு நியாயமானதே என்று நிரூபிக்கும். இரத்த சாட்சிகள் அவருக்காக மரித்ததைக் குறித்து யாரும் அவர்கள் மேல் குறைகூற மாட்டார்கள்.கிறிஸ்துவின் பகைவர் நித்திய நிந்தையை அடையும் போது இயேசுவை நேசிப்பவர்கள் எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று தெரிந்து கொண்டதனால் பரிசுத்தவான்களால் மேன்மையானவர்களாகக் கருதப்படுவதை உணர்வார்கள்.

# *12. பத்திரமாகத் தனித்து வாசம்பண்ணுதல்*

*இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம் பண்ணுவான். யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும். அவருடைய வானமும் பனியைப் பெய்யும் (உபா.33:28).*

*நாம் எவ்வளவுக்கெவ்வளவு தனித்து வாசம் பண்ணுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பத்திரமாய் இருப்போம். தம் மக்கள் பாவிகளிடம் இருந்து தனித்து வாழவேண்டுமென்று கடவுள் விரும்புகிறார்.நீங்கள் அவர்களிடத்தில் இருந்து பிரிந்து வாருங்கள் என்றே அவர்களை அழைக்கிறார். வேதத்தில் நினைத்துக்கூடப் பார்த்திராத விதமாகக் கிறிஸ்தவ உலகம் பயங்கரமானதாய் இருக்கிறது. உலகப்பிரகாரமாக வாழும் கிறிஸ்தவன் ஆவியில் நோய் உள்ளவனாய் இருக்கிறான்.கிறிஸ்துவின் எதிரிகளோடு ஒத்துப்போகிறவர்கள் அவர்களைச் சேர்ந்தவர்களாகவே எண்ணப்படுவார்கள்.*

*நாம் பகைவர்களோடு ஒத்துப்போகும் போது அல்லாமல் நம் உற்ற நண்பரோடு தனித்து இருக்கும் போதே பத்திரமாய் இருப்போம். இவ்விதம் இருந்தால் உலகம் நம்மை ஏளனம்செய்தாலும் தூற்றினாலும் நிந்தித்தாலும் நாம் பாதுகாப்பு உள்ளவர்களாய் இருப்போம். உலகத்தின் நம்பிக்கையின்மை பெருமை ஆடம்பரம் அசுத்தம் முதலியவற்றினால் ஏற்படும் தீமைபயக்கும் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டவர்களாயும் இருப்போம்.*

*பாவத்தின் பயனாகநாட்டினரிடையே யுத்தங்களும் பஞ்சமும் ஏற்படும். அந்த நாளில் தனித்துப் பத்திரமாய் இருக்க கடவுள் அருள் செய்வார்.*

ஆபிரகாமை ஊர் என்னும் கல்தேயரின் நாட்டிலிருந்து பிரித்துக் கொண்டு வந்தார். ஆனால் ஆபிரகாம் பாதிவழியிலேயே தங்கி விட்டார். கானானுக்குச்செல்லவேண்டுமென்று பயணப்பட்டு கானானைச் சென்று அடையும் வரை அவர் ஒர் ஆசீர்வாதத்தையும் பெறவில்லை. பின்னர் பகைவர் மத்தியிலும் கூட அவர் தனியாக பத்திரமாய் இருந்தார். லோத்து சோதோமில் நண்பர் மத்தியில் இருந்தபோதிலும் பாதுகாப்பாய் இல்லை. கடவுளோடு தனித்து வாசம்பண்ணுவதிலேயே நம் பாதுகாப்பு இருக்கிறது.

# 13. தெய்வீக வேளாண்மை

*கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி அடிக்கடி அதற்குத் தண்ணீர் பாய்ச்சி ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதைஇரவும் பகலும் காத்துக்கொள்வேன் (ஏசா.27:3).*

தீர்க்கர் மூலமாய் அல்லாமல் ஆண்டவரே நேராகப் பேசும் போது விசுவாசிகளுக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. யேகோவாவே நம்திராட்சத்தோட்டத்தின் காவலராய் இருக்கிறார். அதை யார் கையிலும் நம்பிக்கொடுப்பதில்லை. தாமே நேரிடையாக அதைப் பராமரிக்கிறார். கடவுளே பராமரிக்கிறவர்கள் நல்லவிதமாக பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் அல்லவா?

ஒவ்வொரு நாளும் மட்டுமல்ல ஒவ்வொரு மணிநேரமும் மட்டுமல்ல அடிக்கடி கிருபையாக நமக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார். அதனால் நாம் எவ்வளவு செழிப்பாக வளரவேண்டுமென்று நினைத்துப்பாருங்கள். ஒவ்வொரு செடியும் எவ்வளவு பசுமையாய் இருந்து சிறப்பான கனிகளைக் கொடுக்க வேண்டும். எவ்விதம் குலைகுலையாய்திராட்சைப்பழங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் நினைத்துப் பாருங்கள்.

ஆனால் காட்டுப்பன்றிகளாலும் நரிகளாலும் தொந்தரவுகள் ஏற்படுகின்றன. ஆகையால் ஆண்டவரே எப்போதும் அதாவது இரவும் பகலும் நம் பாதுகாவலராய் இருக்கிறார். அப்படியிருக்கும்போது நமக்குத்தீங்கு செய்யக் கூடியது எது? நாம் ஏன் பயப்பட வேண்டும்? அவரே கவனிக்கிறார் அவரே தண்ணீர் பாய்ச்சுகிறார். அவரே பாதுகாக்கிறார். இதைவிட நமக்கு வேறு என்ன தேவை?

இந்த வசனத்தில் ஆண்டவர் கொள்வேன் என்று சொல்வதில் எவ்வளவோ உண்மை ஆற்றல் அன்பு பாதுகாப்புஇருப்பதை நாம் காண்கிறோம். அவர் சித்தத்தைத் தடுப்பது எது? செய்வேன் என்று அவர் சொல்லும் போது சந்தேகத்துக்கே இடமில்லையே ஆண்டவர் செய்வேன் என்று சொல்லும்போது நாம் தைரியமாக பாவத்தின் மரணத்தின் நரகத்தின் சேனைகளை எதிர்த்து நிற்கலாம். ஆண்டவரேகாத்துக்கொள்வேன் என்று நீர் சொல்வதால் உம்மைத் துதிக்கிறேன் என்று நான் பதில் அளிக்கிறேன்.

# 14. எப்போதும் கூடவே இருக்கிறார்

கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக் கொள்ளப் பிரியமானபடியால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார் (1.சாமு.12:22).

கடவுள் மக்களைத் தம் ஜனமாக்கிக்கொண்டதே அவர்களோடு எப்போதும் இருப்பதற்காகத்தான். அவர்களைக் கைவிடுவதற்காகவல்ல, அவர் அன்புக்காக அவர்களைத் தெரிந்துகொண்டார். அவர்களைத்தெரிந்துகொண்டதினால், அவர்கள்மேல் அன்புகூருகிறார். அவர்களைத் தெரிந்துகொண்டது அவர் பிரியத்தினால். அவர்கள்மேல் நிலையான பிரியம்கொண்டிருப்பது அவர்களைத் தெரிந்துகொண்டதினால்.

அவர்களைக் கைவிடுவது அவர் மகிமையுள்ள நாமத்துக்கு அவமரியாதையாகும். ஏனென்றால் அதுஅவர் தவறாகத் தெரிந்துகொண்டார் என்றாவது, அவர் அன்பு மாறும் தன்மையுள்ளது என்றாவது நினைக்கத்தூண்டிவிடும். ஆண்டவரின் அன்பு மாறாத தன்மையுள்ளது என்னும் சிறப்பு வாய்ந்தது. இந்தச் சிறப்பு ஒருபோதும் குறைவுபட அவர் விடமாட்டார்.

கடந்த காலத்தில் ஆண்டவர்காட்டின அன்பையும் இரக்கங்களையும் நினைவுகூர்ந்து, அவர் நம்மைக் கைவிடமாட்டார் என்னும் திட்டமான நம்பிக்கை உள்ளவர்களாய் இருப்போமாக. நம்மை அவருடைய ஜனமாக்கினவர் அவர் கிருபையின் செயலை மாற்றிவிடமாட்டார். நம்மைக் கைவிட்டு விடுவதற்காக அவர் மகிமையானசெயல்களைச் செய்திருக்கமாட்டார். அவர் குமாரனாகிய இயேசு நமக்காக மரித்துள்ளார். அவர் வீணாக மரிக்கவில்லை என்று நாம் திட்டமாய் நம்பலாம். அவர் யாருக்காக தம் இரத்தத்தைச் சிந்தினாரோ அவர்களைக் கைவிட்டுவிடுவாரா? நம்மைத் தெரிந்துகொண்டு இரட்சித்ததில் அவர்மகிழ்ச்சி அடைந்ததினால் நம்மை ஆசீர்வதிப்பதிலும் அவர் மகிழ்ச்சி அடைவார். நம்முடைய ஆண்டவராகிய இயேசு மாறும் அன்பரல்ல. தமக்குச் சொந்தமானவர்களில் அன்புகூர்ந்ததினால் முடிவுபரியந்தம் அவர்களில் அன்புகூருகிறார்.

# 15. குடும்பத்திற்கான ஆசீர்வாதம்

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார். நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய் (சங்.128:5).

இது கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கும் மனிதனுக்குக் கொடுக்கப்படும் வாக்குறுதியாகும். அவன் குடும்பம் ஆசீர்வதிக்கப்படும். அவன் மனைவியும் பிள்ளைகளும்

குடும்பத்தில் மகிழ்ச்சி அளிப்பவர்களாய் இருப்பார்கள். அதோடு சபையின் அங்கத்தினாகசபையும் செழித்து வளர அவன் விரும்புகிறான். ஏனென்றால் தன்னுடைய குடும்பத்தினருக்காக அவன் கவலைப்படுவதுபோல் ஆண்டவரின் குடும்பத்துக்காகவும் கவலைப்படுகிறான். கடவுள் நம் வீட்டைக் கட்டியிருக்கும்போது அவர் வீடு கட்டப்படவேண்டுமென்று நாம் விரும்புவது சரியல்லவா? நாம்செய்யும் நன்மையான காரியங்களினால் ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சபை நன்மையடையாவிட்டால் அவை உண்மையாகவே நன்மையானவை அல்ல.

சீயோனின் சபையோடு ஆண்டவரைத் தொழச் செல்லும்போது நீ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வாய். விண்ணப்பங்களும் துதிஸ்தோத்திரங்களும் ஏறெடுக்கப்பட்டு, மகா பெரிய பலிக்கு சாட்சி கூறப்படும். அவ்விடத்தில் உனக்குப் போதனை அளிக்கப்படும். நீ உற்சாகப்படுத்தப்படுவாய். ஆறுதலும் அடைவாய். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.

நீ மட்டும் நன்மைஅடையமாட்டாய். சபையே விருத்தியடையும். விசுவாசிகளின் எண்ணிக்கை பெருகும். அவர்கள் தூயபணி வெற்றிபெறும். கிருபை பொருந்தினவர்கள் சிலர் உயிரோடிருக்கும்வரை இந்த வாக்குறுதி உண்மையாய் இருக்கிறது. ஆனால் அவர்கள் மரணமடைந்ததும் மக்களின் ஊக்கம் குறைந்துவிடுகிறது. நாம்எப்போதும் எருசலேமுக்கு நற்காரியங்களைக் கொண்டு செல்பவர்களாய் இருப்போமாக. ஆண்டவரே, உம் கிருபையினால் எங்களை அப்படிப்பட்டவர்களாக்கும். ஆமென்.

# 16. விசுவாசிப்பவனாயும் உள்ளவனாயும் இரு

உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான் (மத்.13:12).

ஆண்டவர் ஒருவருக்கு மிகுந்த கிருபை அளித்திருந்தால் அவருக்கு இன்னும் அதிகம் கொடுப்பார்.சிறிதளவு நம்பிக்கை நல்ல ஆரம்பமாகும். நாளடைவில் அது அதிகரித்துக்கொண்டே போகும். அது மாய்மாலமான விசுவாசமாய் இருக்கக்கூடாது. ஆனால் உண்மையான விசுவாசமாய் இருக்கவேண்டும். நம் நம்பிக்கையைக் குறித்து நாம் உண்மையாய் உழைப்பது எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள்.நாம் ஒன்றும் உள்ளவர்களாய் இராமல் வெளியிடுகிறவர்களாய் மட்டும் இருக்கக்கூடாது. ஏனெனில் நாம் அப்படிப்பட்டவர்களாய் இருந்தால் நாம் ஊழியம் செய்வதிலிருந்தே நீக்கப்பட்டுவிடுவோம். வாக்குறுதியைப்போலவே எச்சரிக்கையும் உண்மையானதாகும்.

ஆண்டவர்மகிமைப்படுவாராக. கிருபையில் யாராவது குறைவுள்ளவர்களாய் இருந்தால், அவர்கள் பரிபூரணம் அடையும்வரை அவர் கிருபையைக் கொடுத்துக்கொண்டேயிருப்பார். அவ்விதம் கிருபையில் பரிபூரணம் அடைய நாம் விருப்பம் உள்ளவர்களாய் இருப்பது நல்லது. ஆனால் அதிகம் நேசிப்பவர்களாய்இருப்பது அதைவிட மேலானது. நாம் ஆண்டவருக்கென்று உழைப்பதற்குத் திறமை உள்ளவர்களாய் இருப்பது மற்ற எல்லா நன்மைகளுக்கும் கடவுளை நம்பத்தகுந்த விசுவாசம் உள்ளவர்களாய் இருப்பது அதைவிடச் சிறந்ததாகும்.

ஆண்டவரே, பாவத்தைக் குறித்த உணர்ச்சி எனக்குஅளித்திருப்பதால் நான் தீமையை முழுவதுமாக வெறுக்க எனக்கு உதவிசெய்யும். நான் இயேசுவை நம்பச் செய்திருப்பதால் நான் உறுதியான விசுவாசம் உள்ளவனாய் இருக்கச்செய்யும். உம்மில் நான் அன்புகூரச் செய்திருப்பதால் உம்மேல் தீவிரமான பாசம் உள்ளவனாக்கும்.

# 17. நம் போர்க்களம்

*உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும் (உபா.20:4).*

ஆண்டவரின் எதிரிகளேயல்லாமல் வேறு எதிரிகள் நமக்குக் கிடையாது. நாம் மனிதருக்கு எதிராகப் போர் புரியாமல் ஆவியைச் சார்ந்த துன்மார்க்கத்துக்கு எதிராகவே போர் புரிகிறோம். பிசாசோடும் போர்க்களத்துக்குள் அவன் கொண்டுவரும் தெய்வ நிந்தனை, பிழைகள்,நம்பிக்கையின்மை முதலியவற்றிற்கு எதிராகவே நாம் யுத்தம் செய்கிறோம். பாவத்தின் சேனைகளாகிய அசுத்தம், குடி, மற்றவர்களை ஒடுக்குதல், விசுவாசத்தை மறுதலித்தல், தேவபக்தியின்மை முதலியவற்றோடு நாம் போர் செய்கிறவர்களாயிருக்கிறோம். இவற்றுடன்மும்முரமாகப் போரிட்டாலும் வாள், ஈட்டி உபயோகிப்பதில்லை. போருக்காக நாம் பயன்படுத்தும் ஆயுதங்கள் சரீர சம்பந்தமானவையல்ல.

நம் கடவுளான யேகோவா தீமையானவற்றையெல்லாம் வெறுக்கிறார். ஆகையால் அவர் இந்தத் தெய்வீகப் போரில் நமக்காகப்போர்செய்ய நம்மோடு வருகிறார். அவர் நம்மைக் காப்பாற்றுவார். நன்றாகப் போர் செய்து வெற்றி பெறக் கிருபையளிப்பார். நாம் கடவுள் பக்கம் இருந்தால் அவர் நம் பக்கம் இருப்பார் என்று திட்டமாய் நம்பலாம். இவ்வளவு மாட்சிமையுள்ள நண்பர் நம்மோடு இருக்கும்போது போரின்முடிவு குறித்து நாம் சந்தேகம் கொள்ளவேண்டியதேயில்லை. உண்மை ஆற்றல் வாய்ந்தது. ஆகையால் எப்படியும் வெற்றி பெறும் என்பதல்ல. ஆனால் சர்வ வல்லமையுள்ள பிதாவிடமும், வானத்திலும், பூமியிலுள்ள எல்லா

அதிகாரமும் பெற்ற இயேசுவிடமும், மக்களிடையே தம்சித்தத்தை நிறைவேற்றும் பரிசுத்தஆவியிடமும் அந்த ஆற்றல் இருக்கிறது.

கிறிஸ்து போரர் வீரரே, ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளுங்கள், தூயவரான கடவுளின் நாமத்திலே தாக்குங்கள். விசுவாசத்தினாலே அவர் இரட்சிப்பைப் பிடித்துக்கொள்ளுங்கள். இந்தநாளிலே இயேசுவுக்காகவும் தூய்மைக்காகவும் எதையும் தாக்காமல் இராதேயுங்கள்.

# 18. கடவுளே செய்வார்

இப்பொழுது எழுந்தருளுவேன் இப்பொழுது உயருவேன் இப்பொழுது

மேன்மைப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.33:10).

வெட்டுக்கிளிகள் நாட்டைப் பாழ்படுத்தி நாட்டைப் பாதுகாக்கப்போரிட்டவர்கள் உட்கார்ந்து பெண்களைப்போல் அழுதபோது ஆண்டவர் உதவிக்கு வந்தார். சீயோனுக்குச் செல்லும் வழியில் பயணிகள் நடமாட்டம் இல்லாதபோதும் பாசானும் கர்மேலும் கனி கொடாத திராட்சைத் தோட்டங்களைப்போல் ஆனபோதும் ஆண்டவர் எழும்பி வந்தார். வருத்தப்படும்மக்களிடையே ஆண்டவர் மகிமைப் படுகிறார். ஏனெனில் அவர்கள் அவர் முகத்தைத்தேடி அவரை நம்புகிறார்கள். அவர்கள் வேண்டுதலைக் கேட்டு அவர்கள் பகைவரை முறியடித்து அவர்களுக்கு விடுதலை அளிக்க முன்வரும் போது அவர் இன்னும் அதிகமாக மகிமைப்படுகிறார்.

இன்று நமக்குத்துக்கநாளாயிருக்கிறதா? நம் விடுதலையில் ஆண்டவர் மகிமைப்படுவதைக்காண எதிர்பார்ப்போமாக. நாம் ஊக்கமாக ஜெபிப்பதில் முனைந்திருக்கிறோமா? அவரை நோக்கி இரவும் பகலும் வேண்டிக்கொள்கிறோமா? அப்படியானால் அவர்

கிருபையை அடையும் நேரம் வந்துவிட்டது. தகுந்த சமயத்தில்கடவுள் உதவிக்கு வர தம்மை உயர்த்துவார். அவர் மகிமையை நிறைவாகக் காட்டக் கூடிய சமயத்தில் அவர் வருவார். நம் விடுதலைக்காக ஏங்குவதைவிட அவர் மகிமைப்படும்படியாக ஏங்குகிறோம். ஆண்டவர் உயர்த்தப்படட்டும். அப்பொழுது நம் சிறப்பான ஆசை நிறைவேறிவிட்டது போல் ஆகும்.

ஆண்டவரே நீர் நீரே கிரியை செய்து வருகிறீர் என்பதை நாங்கள் காணத்தக்கதாக எங்களுக்குத் துணைபுரியும். எங்கள் உள்ளான ஆன்மாவில் உம்மை மகிமைப்படுத்துகிறவர்களாய் இருப்போமாக. நீர் எவ்வளவு நல்லவரும் பெரியவரும் ஆனவர் என்பதை எங்களைச் சுற்றியுள்ளவர்கள்காணச்செய்யும்.

# 19. உத்தமமான இருதயம்

நான் வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு என் இருதயம் உமது பிரமாணங்களில் உத்தமமாயிருக்கக் கடவது (சங்.119:80).

கடவுளின் பிரமாணங்களைக் கைக்கொள்பவர்கள் அவ்விதம் செய்வதைக் குறித்து ஒருநாளும் வெட்கப்பட்டுப் போவதில்லை என்றும் நம்பிக்கையை எழுப்புதலான இந்த விண்ணப்பம் நன்னுள் அடங்கியுள்ளது என்றும் நாம்கருதலாம்.

உத்தமமான இருதயம் வேண்டுமென்று இந்த ஜெபத்தில் வேண்டிக்கொள்கிறோம். நேர்மையான கருத்து அதைவிட நல்லது. ஆனால் உண்மையைக் குறித்த நேர்மையான இதயம் எல்லாவற்றையும் விடமேலானது. உண்மையை நாம் நேசிக்க வேண்டும். உணரவேண்டும். அதற்குக்கீழ்ப்படியவும் வேண்டும். இல்லையெனில் நாம் மெய்யாகவே கடவுளின் பிரமாணங்களில் நேர்மையானவர்களாய் இருக்கமாட்டோம். தீமையான இந்தக் காலங்களில் நேர்மையானவர்கள் பலர் இருக்கிறார்கள். இதை

எழுதுபவரும் வாசிப்பவரும் அப்படிப்பட்டவர்களில் இருவராய் இருந்தால் எவ்வளவுநன்றாயிருக்கும்.

தீர்ப்பு வழங்கப்படும் அந்த மாபெரிய நாளிலே பலர் அவமானம் அடைவார்கள். அப்போது தங்கள் கற்பனை எவ்வளவு முட்டாள் தனமானது என்று உணர்ந்து தாங்கள் பெருமையாக அவநம்பிக்கை கொண்டிருந்ததையும் வேண்டுமென்றே ஆண்டவருக்கு அடங்காமல் இருந்ததையும்குறித்து வருத்தம் அடைகிறவர்களாய் இருப்பார்கள். ஆனால் ஆண்டவர் போதித்தவைகளை நம்பி அவர் கட்டளைகுக் கீழ்ப்படிந்தவன் தான் செய்தது சரி என்று திட்டமாய் அறிந்தவனாய் இருப்பான். அப்போது நீதிமான்கள் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். யார் தூற்றப்பட்டவர்களாயும்மற்றவர்களின் வசைமொழிகளினால் தாக்கப்பட்டவர்களாயும் இருந்தார்களோ, அவர்கள் அந்நாளில் தாங்கள் அடைந்த அவமானம் மகிமையாக மாற்றப்பட்டுள்ளதைக் காண்பார்கள்.

மேலே கொடுக்கப்பட்ட வசனத்தை நாம் வேண்டுதல் ஆக்கினால் அதில் உள்ள வாக்குறுதி நமக்காகநிறைவேற்றப்படும் என்று நிச்சயமாய் நம்பலாம். ஆண்டவர் நம்மை நேர்மை உள்ளவர்கள் ஆக்கினால் நம்மைப் பாதுகாக்கவும் செய்வார்.

## 20. ஆண்டவரே நம் தோழன்

நான் மரணஇருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவர்Pர் என்னோடே கூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும்என்னைத் தேற்றும் (சங்.23:4).

மரணப்படுக்கையில் இருப்பவர்களுக்கு எவ்வித நம்பிக்கை தேவை என்பதை இந்த வார்த்தைகள் விளக்குகின்றன. எத்தனையோ பேர் தங்களுடைய கடைசி நேரத்தில்

மிக்கமகிழ்ச்சியுடன் அவற்றைத் திரும்ப திரும்ப சொல்லியிருக்கிறார்கள்.

உயிருடன் இருக்கும்போதே ஆவியில் தாங்கொணாத் துயர் அடைபவர்களுக்கும் இவை பொருந்தும். நம்மில் சிலர் பவுலைப் போல் ஒவ்வொரு நாளும் ஆன்ம வருத்தத்தினால் மரிக்கிறவர்களாய் இருக்கிறோம்.மோட்சப்பிரயாணத்தில் வானலோகக் குன்றுகளின் அடிவாரத்தில் பாய்ந்தோடும் ஆற்றுக்கு முன்னதாகவே மரண இருளின் பள்ளத்தாக்கை பனியன் விவரிக்கிறார். நம்மில் சிலர் இருண்டதும் பயங்கரமானதுமான மரண இருளின் பள்ளத்தாக்கைப் பலமுறை கடந்து சென்றிருக்கிறோம். வழியில்நமக்கு எதிர்ப்பட்ட கொடிய எண்ணங்கள் மனித புத்திக்கு எட்டாத திகில்கள் பயங்கரமான சோர்வு எல்லாவற்றையும் தைரியமாகத் தாங்கிக் கொள்ள ஆண்டவரே துணைபுரிந்தார் என்பதற்கு நாம் சாட்சி கூறலாம். நம் ஆவி நசுக்கப்பட்டபோது கூட ஆண்டவர் நம்மைத் தாங்கி நிலைநிறுத்திதீமையைக் குறித்து நாம் அச்சம் கொள்ளாமல் இருக்கச்செய்திருக்கிறார். நாம் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்திருக்கிறோம். ஆயினும் உயிரோடு இருந்திருக்கிறோம். ஏனெனில் சிறந்த மேய்ப்பரின் சமுகம் நம்மோடு இருந்ததை உணர்ந்து எதிரி நம்மைப் பயங்கரமாகக்காயப்படுத்தாதபடி அவர் துரட்டு கோல் நம்மைக் காப்பாற்றும் என்று திட்டமாய் நம்பியிருக்கிறோம்.

இப்பொழுது துக்கத்தினால் உங்கள் நாட்கள் இருண்டு போயிருகு;கின்றனவா? அமைதியாக இருந்து கடவுள் பேரில் நம்பிக்கை வைப்பதால் அவரை மகிமைப்படுத்துவோமாக.

## 21. ஒரு பெண்ணின் போர்

கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரியின் கையில் ஒப்புக்கொடுப்பார் (நியா.4:9).

இது அபூர்வமான ஒரு வசனம். ஆனால் இதைக் கிரகித்துக் கொள்ளத் தேவையான அளவு விசுவாசம் உள்ளவர்கள் உலகில் இருக்கலாம். பராக் போர் செய்ய அழைக்கப்பட்ட போதிலும் தெபராள் கூடச்சென்ற போதுதான் தைரியம் உள்ளவராகப் போருக்குச் சென்றார்.ஆகையால் கடவுள் அந்தப் போரை ஒரு பெண்ணின் போராக்கத் திட்டமிட்டார். இத்திட்டத்தினால் அவர் ஒரு மனிதனின் சுறுசுறுப்பற்ற தன்மையைக் கடிந்து கொண்டார். தமக்கு இன்னும் அதிகமான புகழைச் சேர்த்துக் கொண்டார். அவர் மக்களின் எதிரிகளை இன்னும் அவமானமடையச் செய்கிறார்.

இக்காலத்தில் ஆண்டவர் பலவீனமான மக்களைத் தம் கருவிகளாக உபயோகிக்க முடியும். அது ஏன் நானாயிருக்கக் கூடாது? பொதுவாக பொதுப்பணிகள் செய்ய அழைக்கப்படாதவர்களை அவர் உபயோகிப்பார். அவ்விதம் உபயோகிக்கப்படுகிறவன் ஏன் நீயாய் இருக்கக் கூடாது?இஸ்ரவேலரின் பகைவனை வெட்டினவள் ஒரு இராட்சசி அல்ல. ஆனால் தன் கூடாரத்தில் தங்கியிருந்த ஒரு பெண்ணே ஆவாள். அவள் பெரிய நாவன்மை உள்ளவளும் அல்ல ஆனால் மாடுகளைக் கறந்து வெண்ணெய் கடைந்து எடுத்த ஒரு பெண்ணே ஆவாள். ஆண்டவர் நம்மில் ஒருவரைத் தம் திட்டங்களைநிறைவேற்றப் பயன்படுத்த மாட்டாரா? யாகேலின் கூடாரத்துக்கு சிசெரா வந்தது போல் இன்று நம் வீட்டுக்கு யாராவது ஒருவர் வருவார். அவரை நாம் வெட்டிக் கொல்ல வேண்டியதில்லை. அவரைக் காப்பாற்றலாம் அவரை அன்போடு ஏற்றுக்கொண்டு நம் பெரிய பங்கான ஆண்டவர் இயேசு நமக்குக்கொண்டுவந்திருக்கும் மகிமையான இரட்சிப்பைப் பற்றிய உண்மையைச் சொல்லி விசுவாசித்துப் பிழைத்திருங்கள் என்னும் கட்டளையை வற்புறுத்திக் கூறலாம். துணிந்து பாவம் செய்து வந்த ஒருவர் ஒருவேளை இன்று சுவிசேஷத்தின் நற்செய்தியினால் தாக்கப்பட்டு மனம் மாறலாம்.

# 22. அவர் நம்மோடும் நாம் அவரோடும்

*கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும். துன்மார்க்கருடைய வருஷங்கள் குறுகிப்போம் (நீதி.10:27).*

மேலே கூறப்பட்டிருப்பதைக் குறித்துச் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாய் இருக்கத் தூண்டப்படுவார்கள். பாவத்தினாலும் ஒழுக்கக்கேட்டினாலும் ஆயுசு நாட்கள் குறுகிப்போவதை அது தடுக்கும். ஆண்டவராகிய இயேசுவில்நம்பிக்கை வைப்பது எப்படிப்பட்ட சுழ்நிலையிலும் அமர்ந்திருக்கும் தன்மையை அளிக்கிறது. அது ஒருவர் நோயுற்றிருக்கும்போது அவருக்குத் துணை புரியும். தம்மிடம் சிகிச்சைக்காக வந்தவர் மனதிலே அமைதி உள்ளவராய் இருந்தால் வைத்தியரின் மனம் மகிழும். கவலை மரணத்துக்குக்காரணமாயிருக்கும். ஆனால் கடவுள் மேல் இருக்கும் உறுதியான நம்பிக்கை சுகமளிக்கும் மருந்து போன்றதாகும்.

நம் ஆயுசு நாட்கள் பெருகுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அது உண்மையாகவே நம் நன்மைக்கேதுவாக இருந்தால் நாம் முதிர்வயது வரை வாழ்ந்துஏற்ற காலத்தில் அறுவடைக்கு ஆயத்தமாய் இருக்கும் விளைந்த கதிர்களைப் போல் கல்லறைக்குச் செல்வோம். நம் விரலில் சிறிது வலி ஏற்பட்டவுடன் நாம் மரணமடைந்து விடுவோம் என்று நினைத்து விடாமல் நாம் இன்னமும் நீண்ட காலம் உழைக்க வேண்டியதிருக்கும் என்று எதிர்பார்த்துவாழ்வோமாக.

நாம் சீக்கிரத்திலேயே மேல் உலகிற்கு அழைக்கப்பட்டு விட்டால் அதைக்குறித்தும் நாம் புலம்பவேண்டியதில்லை. மகிழ்ச்சியே அடைய வேண்டும். பிழைத்தாலும் மரித்தாலும் நாம்

கர்த்தருடையவர்களாய் இருக்கிறோம். நாம் பிழைத்திருந்தால் இயேசு நம்மோடுஇருக்கிறார். நாம் மரித்தால் நாம் இயேசுவோடு இருப்போம். நம் காலத்தை வீணாக்காமல் ஒவ்வொரு மணி நேரத்தையும் சிறப்பான விதமாகச் செலவு செய்தால் உண்மையாகவே நம் ஆயுசு நாட்கள் நீடிக்கப்பட்டவையாகும். இன்று அவ்விதமாக இருப்பதாக.

# 23. பகைவரின் திட்டங்கள் அழிக்கப்பட்டன

ஆகையால் கர்த்தர் ஆசீரியா ராஜாவைக் குறித்து அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை. இதின்மேல் அம்பு எய்வதுமில்லை. இதற்கு முன் கேடகத்தோடு வருவதுமில்லை. இதற்குஎதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை (2.இரா.19:32).

சனகெரிப் நகருக்கு எவ்விதத் தொல்லையும் அளிக்கவில்லை. அவன் செருக்குடன் பேசியிருந்தான். ஆனால் அவன் அச்சுறுத்தினபடி செயல்படமுடியவில்லை.தம் மக்களின் எதிரிகள் செயல்படுவதைக்கூட ஆண்டவர் தடுக்கக் கூடியவராயிருக்கிறார். சிங்கம் தன்வாயிலே ஆட்டுக்குட்டியை கௌவியிருந்தாலும் சிறந்த மேய்ப்பரானவர் அந்த ஆட்டைச் சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கிக் காப்பாற்றக்கூடியவர். நமக்கு ஏற்படும் மனக்கலக்கம்தெய்வீக ஆற்றலையும் ஞானத்தையும் வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பையே அளிக்கிறது.

மேலே கூறப்பட்டுள்ள நிகழ்ச்சியில் அந்தப் பயங்கரமான எதிரி தான் அழிக்க விரும்பிய நகரின் முன்கூடவரவில்லை. அதன் மதிற் சுவருக்கு மேலாக அம்பு எய்து துன்புறுத்தவுமில்லை.நகரிலிருந்து மாளிகைகளைத் தகர்த்தெறிய எந்த இயந்திரங்களையும் உபயோகிக்கவுமில்லை. நகரை முற்றுகையிடக் கொத்தளம் போடவுமில்லை. நம் பகைவர்களும்

நமக்கு எவ்விதத் தீங்கும் செய்யாதபடி கர்த்தர் காப்பாற்றுவார். அவர்கள் திட்டங்களை மாற்றி உள்ளத்தின் எண்ணங்களைக்கலைத்து விடுவதால் அவை நிறைவேறாமற் போவதைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. நம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து அவர் வழியில் நடந்தால் அவர் நம்மைக் காத்துப் பேணுவார். அவர் சிறப்பான முறையில் நமக்கு அளிக்கும் விடுதலையைக் குறித்து நாம் வியப்படைந்து அவரைப்போற்றித் துதிப்போம். எதிரி நம்மை எதிர்த்து வரும்வரை அவனுக்குப் பயப்படாமல் இருப்போமாக. அவன் வந்தால் ஆண்டவர் மேல் நம்பிக்கை வைப்போமாக.

# 24. ஆண்டவர் அதிகமாய்க் கொடுப்பவர்

அப்பொழுது அமத்சியா அப்படியானால் நான் இஸ்ரவேலின் சேனைக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்ன என்று தேவனுடைய மனுஷனைக் கேட்டான். அதற்குத்தேவனுடைய மனுஷன் அதைப்பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்குக் கொடுக்கக்கூடும் என்றான் (2.நாளா.25:9).

நீங்கள் தவறு செய்து விட்டால் அதனால் வரும் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.ஆண்டவருடைய சித்தத்துக்கு மாறாகமட்டும் எதுவும் செய்யாதிருங்கள். நீங்கள் நஷ்டத்தினால் இழப்பதைவிட அதிகமாக ஆண்டவர் கொடுக்கக் கூடியவர். அவர் அபு;படிக் கொடுக்காவிட்டால் நீங்கள் அவரோடு பேரம் பேசத்தொடங்குவீர்களா? யூதாவின் அரசன் விக்கிரகங்களை வணங்கினஇஸ்ரவேலின் சேனையைக் கூலிக்கு அமர்த்தியிருந்தான். அவர்களோடு கடவுள் இல்லாதபடியால் தீர்க்கர் அவர்களை அனுப்பிவிடச் சொன்னார். அவன் அவர்களை அனுப்பிவிட சம்மதித்தான். ஆனால் போர் செய்யாமலேயே அவர்களுக்கு நூறு தாலந்துகள் கொடுக்கத் தயங்கினான். இது எவ்வளவு

இழிவானதுஎன்று நினைத்துப் பாருங்கள். அவர்கள் போர் செய்யாமலேயே ஆண்டவர் வெற்றியைக் கொடுப்பதென்றால் அவர்களுக்குப் பேசின கூலியைக் கொடுத்து அனுப்பி விடுவது நல்லதல்லவா?

மனச்சாட்சிக்காகவும் சமாதானத்துக்காகவும் கிறிஸ்துவுக்காகவும் பணத்தை இழக்கவும்ஆயத்தமாயிருங்கள். ஆண்டவருக்கென்று இழப்பவை உண்மையான இழப்பல்ல என்று திட்டமாய் நம்புங்கள். இந்த வாழ்க்கையிலேயே நஷ்டத்துக்கு அதிகமாகவே ஈடு செய்யப்பட்டு விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் ஆண்டவர் நஷ்டம் ஏற்படுவதையே தடுத்து விடுகிறார். இயேசுவுக்கென்று நாம்இழப்பவை பரலோகத்தில் நித்தியவாழ்விலே ஈடு செய்யப்பட்டு விடுகின்றன. பேராபத்தைப்போல் தோன்றுவதைக் குறித்துப் பதட்டங் கொள்ளாதேயுங்கள். அதைப்பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்குக் கொடுக்கக்கூடும் என்னும் மெல்லிய சத்தத்துக்குச் செவி கொடுங்கள்.

## 25. பரலோகத்திற்கு செல்லும் படிகள்

வானம் திறந்திருக்கிறதையும் தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்தில் இருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவேஉங்களுக்குச் சொல்லுகிறேன் (யோவான் 1:51).

ஆம்! நாம் நம்பும்போது இன்று கூட இந்தக்காட்சியைக் காண்கிறோம். பரலோகம் திறந்திருக்கிறதைக் காண்கிறோம். எல்லா விசுவாசிகளுக்கும் இயேசுவேஅதைத் திறந்து விட்டிருக்கிறார். மறைபொருள்களும் மகிமையும் நிறைந்த அவ்விடத்தைக் கூர்ந்து நோக்குகிறோம். ஏனெனில் அவர் அதை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். நாம் சீக்கிரத்தில் அதை அடைவோம். ஏனெனில் அவரே அதற்கு வாசலாயிருக்கிறார்.

*யாக்கோப்பின்ஏணியைக் குறித்த விளக்கத்தை இப்போது விளங்கிக் கொள்கிறோம். வானத்துக்கும் பூமிக்கும் இடையே வாணிகத் தொடர்பு இருக்கிறது. நம் மத்தியஸ்தரான இயேசு என்னும் பாதை வழியே ஜெபங்கள் பரலோகம் செல்கின்றன. அவற்றிற்கு பதில் நமக்கு வருகிறது. நம் ஆண்டவரைப்பார்க்கும் போது நாம் இந்த ஏணியைப் பார்க்கிறோம். அவரில் மகா உன்னதங்களில் இருப்பவரின் சிங்காசனத்திற்கு செல்வதற்கான ஒளி மிகுந்த படிகள் நமக்கு நேரான வழியை உண்டு பண்ணிக்கொடுத்திருக்கின்றன. அதைப்பயன்படுத்தி நம் வேண்டுதல்களின் தூதர்களை மேலேஅனுப்பலாம். நம் மன்றாட்டுகளின் மூலம் பரலோகம் சென்று உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைக் கைப்பற்றி மக்களிடையே அவற்றை நாற்புறமும் பரப்ப கீழே இறங்கி வந்தால் நாமே அந்தத் தூதர்களைப் போன்றவர்களாவோம்.*

*யாக்கோபு சொப்பனத்தில் மட்டுமே கண்ட அந்தசிறப்பு வாய்ந்த காட்சி நமக்கு உண்மையான காட்சியாகும். இந்நாளிலே ஒவ்வொரு மணிநேரமும் நாம் ஆன்மீகக் கூட்டுறவில் ஏணியில் ஏறிச்சென்று மக்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் கீழே இறங்கி வரலாம். ஆண்டவராகிய இயேசுவே இது உம்வாக்குறுதி. அது நிறைவேறுவதை நாம்மகிழ்ச்சியோடு காண்போமாக!*

# 26. சமீபமாயிருக்கிறது

*நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே (யாக்.5:8).*

*உன்னதப்பாட்டின் கடைசி வசனத்தில் என் நேசரே தீவிரியும் என்று கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். யோவானுக்கு வெளிப்படுத்தின விஷேசம் கடைசி அதிகாரத்தில் ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் என்றும்*

மணவாளன்மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்று பதிலளிக்கிறார் என்றும் எழுதப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். ஆண்டவர் மகிமையுடன் வருவதை அவருக்கு அன்பானவர்கள் எதிர்நோக்கியவர்களாய் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே என்னும் வாக்குறுதியில் மகிழ்ச்சி உள்ளவர்களாய்இருக்கிறார்கள். இது எதிர்காலத்தைக் குறித்து நாம் பொறுமையுடன் இருக்கச் செய்கிறது. இதனால் நாம் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கிறோம்.

இந்த நம்பிக்கை நிகழ்காலத்தைத் தெளிவும் பிரகாசமும் உள்ளதாக்கி இப்பொழுது செய்ய வேண்டிய வேலை அல்லது சகிக்க வேண்டியபாடுகளுக்கு நம்மைத் தகுதி உள்ளவர்கள் ஆக்குகிறது. உங்களுக்குத் தாங்கமுடியாத தொல்லைகள் இருக்கின்றனவா? அப்படியானால் பொறுமையாய் இருக்கச்சொல்லி உங்களுக்கு ஆலோசனை கொடுக்கப்படுகிறது. நாம் விதைத்த விதைகள் பலன் கொடுக்கவில்லையே என்று சோர்வுற்றிருக்கிறோம்?மறுபடியும் நாம் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம் என்று அறிந்து கொள்கிறோம். பலவித சோதனைகளினால் நாம் சிறிது பின் வாங்கத் தொடங்குகிறோமா? அப்படியானால் உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் என்னும் வசனம் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது என்னும்உறுதியை அளிக்கிறது. ஆகவே நீங்கள் திடமானவர்களாயும் நிலையானவர்களாயும் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக உங்கள் அரசரின் வருகையை முன்னறிவிக்கும் வெள்ளியிலான எக்காளங்களின் தொனியைநீங்கள் கேட்பீர்கள். நீங்கள் பயப்படவே வேண்டியதில்லை. தைரியமாக எதிர்க்க வேண்டியவைகளை எதிர்த்து நில்லுங்கள். அவர் நிச்சயமாக வருவார். ஒருவேளை இன்றே வருவார்.

# 27. நன்றியுள்ளவர்களாய்த் தக்கவிதமாய் வாழுங்கள்

நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள். செம்மையானவர்கள் உமது சமூகத்தில் வாசம் பண்ணுவார்கள் (சங்.140:13).

நான் எப்போதும் ஆண்டவரின் நாமத்தைத்துதிக்கத் தக்கதாக என் இருதயம் நேர்மையானதாய் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். நல்லவர்களாய் இருப்பவர்களுக்கு அவர் நல்லவராய் இருக்கிறார். ஆகையால் நான் அவர்களில் ஒருவராயிருந்து எப்போதும் நன்றியுள்ளவனாகவே இருப்பது எனக்கு நலமாயிருக்கும். நீதிமான்கள் உண்மையாய்நடந்து கொண்டதினால் கடுமையான சோதனை அடையும் போது ஒருவேளை அவர்கள் தடுமாற்றம் அடைந்திருக்கலாம். ஆனால் தீமையான யோசனைகளை ஏற்றுக்கொள்ளாமலும் பிறழ்கிற நடத்தையை மேற் கொள்ளாமலும் இருந்ததற்காக கடவுளுக்கு நன்றி சொல்லும் காலம் வரும். உண்மையாய் நடந்துகொண்ட மனிதர்கள் நேர்மையான பாதையில் தங்களை நடத்தினதற்காக முடிவில் நேர்மையானவர்களின் கடவுளுக்கு நன்றி கூறுவார்கள். நானும் அவர்களில் ஒருவனாய் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

மேலே கூறப்பட்ட வசனத்தின் இரண்டாவது பாகத்தில் எவ்வளவு அருமையான வாக்குறுதிகொடுக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள் செம்மையானவர்கள் உமது சமூகத்தில் வாசம் பண்ணுவார்கள் மற்றவர்கள் குற்றவாளிகள் போல் காணப்படும் போது அவர்கள் கற்றுக்கொள்ளப்பட்டவர்களாய் இருப்பார்கள். அவர்கள் மகிமையான அரசரின் அவையைச் சேர்ந்தவர்களாயும் அவர்கள் விரும்பும்போதெல்லாம் அரசரைச் சந்திக்கும் சலுகை உள்ளவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் தனிச்சலுகைக்கு

உரியவர்கள் ஆனபடியால் யேகோவா அவர்களுக்கு சாதகமாயிருந்து அவர்களுடன் ஆர்வத்துடன் உரையாடுவார். இந்த மேன்மையும் சிறப்புரிமையும் எனக்கு இருக்க விரும்புகிறேன். அவை இருந்தால்உலகிலேயே பரலோக இன்பங்களை அனுபவிப்பதைப் போல் உணர்வேன். இன்றும் நாளையும் எல்லா நாட்களும் நான் உம் தூய சமூகத்தில் நிற்கக்கூடியவன் ஆகுமாறு நான் எல்லாவற்றிலும் திறமை உள்ளவனாயு; இருக்கச் செய்யும் அவ்வித நிலையிலிருந்தால் நான் எப்போதும் உமக்கு நன்றிசெலுத்துவேன். ஆமென்.

# 28. கர்த்தர் நோக்கிப்பார்த்தார்

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கிஇரட்சிப்பாய். உன்னை அனுபு;புகிறவர் நான் அல்லவா என்றார் (நியா.6:14).

கர்த்தர் கிதியோனை எவ்விதமாக நோக்கிப்பார்த்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் பார்வையினால் கிதியோன் சோர்வு நீங்கி மன உரம்பெற்றவன் ஆனான். ஆண்டவரை நோக்கிப் பார்ப்பதனாலேயே நாம் இரட்சிப்பு அடைவோமேயானால் அவர் நம்மை நோக்கிப் பார்க்கும்போது எவற்றையெல்லாம் அடைகிறவர்கள் ஆவோம் என்று நினைத்துப் பாருங்கள். ஆண்டவரே இன்று என்னை நோக்கிப் பார்த்து இந்த நாளின் கடமைகளையும்போராட்டங்களையும் ஏற்றுச் செய்வதற்கு ஏற்றவாறு வலு உள்ளவனாக்கும்.

யேகோவா கிதியோனிடம் என்ன வார்த்தை பேசினார்? போ என்றார். கிதியோன் தயங்கக்கூடாது. இவ்வளவு தளர்ச்சி உள்ளவனாய் இருக்கும் போது நான் எப்படிப் போகமுடியும்? என்று கிதியோன்கேட்டிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு சொல்லாதவாறு ஆண்டவர் உனக்கு இருக்கிற இந்தப்

பலத்தோடே போ என்றார். கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்ததினால் அவனுக்கு வலிமை அளித்தார். அவன் அந்த வலிமையினால் மீதியானியரை மேற்கொண்டு இஸ்ரவேலரைக் காப்பாற்றவேண்டியதாயிருந்தது. நான் நினைப்பதற்கும் எண்ணுவதற்கும் மேலான செயல்களை ஆண்டவர் என் மூலம் சாதிக்க நினைத்திருக்கலாம். அவர் என்னை நோக்கிப் பார்த்து என்னை வலிமையுள்ளவன் ஆக்கியிருக்கிறார். அவர் எனக்கு அளித்திருக்கும் ஆற்றலை நான் விசுவாசத்தோடு பயன்படுத்தவேண்டும். அவர் என் வலிமையோடு நான் கொடுத்திருக்கும் நேரத்தைப் பயனற்ற வகையில் செலவு செய் என்று ஒருபோதும் சொல்வதில்லை. அவர் என்னைப் பெலப்படுத்தியிருப்பதால் நான் முன்னேறிச் செல்லவேண்டும்.

கிதியோனைக் கேட்டது போல ஆண்டவர் என்னையும் நோக்கிஉன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா? என்று கேட்கிறார். ஆம் ஆண்டவரே நீரே என்னை அனுபு;புகிறீர். உம் ஆற்றலோடு உம் கட்டளைப்படி நான் செல்கிறேன். என்மூலமாய் நீர் வெற்றி பெறுவீர் என்று உறுதியாய் நம்புகிறேன்.

# 29. ஜெபம் செய்வதற்கு அழைப்பு

என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் (எரேமி.33:3).

வேண்டுதல் செய்வதற்கு கடவுள் நம்மைத் தூண்டுகிறார். ஜெபம் செய்வது நாம் செய்யவேண்டுவதான ஒரு பயிற்சி என்றும் அதனால் அதில் ஈடுபட்டிருப்பவர்களின் மனதைத்தவிர வேறு ஒன்றின் மேலும் எந்தவிளைவும் ஏற்படாது என்றும் சிலர் கூறுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல என்று நாம் அனுபவத்தின் மூலம் அறிந்திருக்கிறோம். மேலே கூறப்பட்ட வசனத்தில் உயிருள்ள கடவுளான யேகோவா தம் ஊழியக்காரரின்

வேண்டுதலுக்குப் பதில் அளிப்பதாகத் திட்டமான வாக்குறுதி அளிக்கிறார்.அவர் நம் ஜெபத்தைக் கேட்பாரா கேட்டுப் பதில் அளிப்பாரா என்பதைக் குறித்து எந்தவித சந்தேகமும் இல்லாமல் நாம் மறுபடியும் அவரண்டை நம் வேண்டுதல்களை ஏறெடுப்போமாக. காதுகளை உண்டாக்கினவர் கேட்காமல் இருப்பாரா? பிள்ளைகள் மேல் பெற்றோர் அன்புகூர வேண்டும் என்றுஏற்பாடு செய்தவர் தம் சொந்தப் பிள்ளைகளின் வேண்டுதலைக் கேட்காமல் இருப்பாரா? கடுந்துயரினால் தம்மை நோக்கிக் கெஞ்சும் தம் மக்களுக்குக் கடவுள் பதில் அளிப்பார். அவர்களுக்காக அவர் பல அதிசயங்களை சேமித்து வைத்துள்ளார். அவர்கள் இதுவரை பார்க்காததும் கேட்காததும்கனவுகூடக் கண்டிராததுமான செயல்களை அவர்களுக்காகச் செய்வார். தேவையானால் புது ஆசீர்வாதங்களைக் கூட உருவாக்குவார். அவர்களுக்கு உணவு அளிக்க கடலிலும் நிலத்திலும் துருவித்தேடுவார். அவர்கள் இக்கட்டில் இருக்கும்போது தேவையானால் அவர்களுக்குத் துணை புரிய பரலோகத்திலுள்ளதேவதூதர்களையெல்லாம் அனுப்புவார். அவர் கிருபையினால் நம்மைத் திகைப்படையச் செய்து முன்பு ஒருபோதும் இவ்விதம் நடந்ததில்லை என்று உணரச் செய்வார். அவர் நம்மிடம் கேட்பதெல்லாம் நாம் அவரை நோக்கி வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். இது ஒரு பெரிய காரியமா?நாம் இப்போதே மகிழ்ச்சியுடன் அவரை நோக்கி நம் வேண்டுதல்களை ஏறெடுப்போமாக.

## 30. பின்னோக்கியும் முன்னோக்கியும்

ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின உன் உடன் படிக்கையை நான் நினைத்து நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன் (எசேக்.16:60).

நாம் பாவிகளாயிருந்தாலும் ஆண்டவர் நம்மேல் அன்பு கூருகிறவராய் இருக்கிறார்.

அவர் பின்னோக்கிப் பார்க்கிறார். ஆதிநாட்களில் அவர் நம்மோடு உடன்படிக்கை செய்ததையும் நாம் அவருக்கு நம்மை ஒப்புக்கொடுத்ததையும் நினைத்துப்பார்க்கிறார். அவை மகிழ்ச்சியான நாட்கள். அவற்றைக்குறித்து நம்மைக் கடிந்து கொள்ளாமலும் வாய்மையற்றவர்களாய் இருந்ததற்காக நம்மேல் குற்றம் சாட்டாமலும் இருக்கிறார். நாம் அவரோடு செய்த உடன்படிக்கையை நினைத்துப் பார்க்காமல் அவர் தம்மோடு செய்த உடன்படிக்கையைநினைத்துப் பார்க்கிறார். அத்தூய ஒப்பந்தத்தில் அவர் பங்கில் மாய்மாலமே இல்லை. அவ்விதம் அன்புடன் பின்னோக்கிப் பார்க்கிறவர் எவ்வளவு கருணை நிறைந்தவர் என்று நினைத்துப் பாருங்கள்.

அவர் முன்னோக்கியும் பார்க்கிறார். அந்த உடன்படிக்கையை கைவிடக்கூடாதுஎன்னும் தீர்;மானம் உள்ளவராய் அவர் இருக்கிறார். நாம் அதில் நிலைத்திருக்காவிட்டாலும் அவர் நிலைத்திருக்கிறார். அவர் நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன் என்று மதிப்பார்வத்துடன் உறுதியாகக் கூறுகின்றார். தம் வாக்குறுதியிலிருந்து அவர் பின்வாங்கவே மாட்டார்.அவர் நாமம் மகிமைப்படுவதாக.

ஆண்டவரே இந்த மேன்மையான வார்த்தைகளை மனதில் என் வைத்து நான் ஒவ்வொரு நாளும் அவற்றை நினைவு கூர்ந்து பெலனடைய உதவி செய்யும்.

# 07 ஜூலை

1. தேவன் நம்மோடு இருக்கிறார்
2. புது வலுவுண்டாக்கும் நித்திரை
3. முழு தூரமும் நம் வழித்துணையானவர்
4. தேவனின் வார்த்தையே தேவையான உணவு
5. பூரண விடுதலை
6. அவர் அன்பு அவர் குமாரன்
7. மலைப் பாடகர்கள்
8. தேவதூதர்கள் பாளயம்
9. உண்மையும் பயன் உள்ளவனும் ஆனவன்
10. சபையை நேசி
11. கடவுளை விட்டுப் பிரிக்கப்படுவதில்லை
12. யார், எப்போது, எப்படி இரட்சிப்பது?
13. முழு நிறை நம்பிக்கை
14. அவர்மேல் வைக்கப்படும் பாரங்கள்
15. துயரப்படுகிறவருக்கு ஆறுதல் அளிக்கப்படும்
16. நொண்டியானவனுக்கு ஒரு வார்த்தை
17. உண்மைக்காக வீரதீரமாயிருத்தல்
18. வனாந்தரத்தில் ஆன்மீகக் கூட்டுறவு
19. கடும் உழைப்புக்குரிய பாதரட்சைகள்
20. அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்கள்
21. நட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள்
22. நிலையான வாக்குறுதி
23. நினைவுபடுத்திக்கொள்ளவே மாட்டார்
24. முற்றிலும் தூய்மை
25. நம்மை அச்சுறுத்தக் கூடியது ஒன்றுமில்லை
26. பெயர் மாற்றம்
27. வெறும் வார்த்தைகளை விட மேலானவை
28. அடங்கியிரு, உயர்த்தப்படு

29. நம் பகைவரை அவர் நிலைகுலையச் செய்கிறார்
30. பின்னால் சந்திப்பதாக வாக்குறுதி
31. வேண்டுகோளும் விடுதலையும்

# *1. தேவன் நம்மோடு இருக்கிறார்*

தேவன் உங்களோடே இருப்பார் (ஆதி.48:21).

வயது முதிர்ந்தவரான யாக்கோபு மரணமடையும் தறுவாயில் இருந்தபடியால் யோசேப்பைவிட்டுப்பிரியும் நேரம் வந்துவிட்டது என்று அறிந்தார். ஆனால் எவ்வித ஏக்கமும் இன்றி அவர் மகனை விட்டுப் பிரிய ஆயத்தமானார் என்று அறிகிறோம். எப்படியெனில் அவர் நம்பிக்கையோடு தேவன் உங்களோடே இருப்பார் என்று சொன்னார். நமக்கு அருமையான உறவினர் அல்லது உதவியாகஇருந்த நண்பர் மரணமடைந்து நம்மைவிட்டுப் பிரியும்போதும் ஆண்டவர் நம்மை விட்டுப்பிரியவில்லை. நமக்காக உயிரோடு இருந்து எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்னும் நம்பிக்கையினால் ஆறுதல் அடையவேண்டும்.

நாம் எளியவர்களாயும் இகழப்பட்டவர்களாயும் இருந்தாலும்தேவன் நம்மோடு கூடஇருந்தால் நம்மை உயர்வுபடுத்தக் கூடியவரின் தோழமை உள்ளவர்களாவோம். தேவன் நம்மோடு கூட இருந்தால் நம் தேவைக்கும் போதிய ஆற்றல் உள்ளவர்களாவோம். ஏனெனில் ஆண்டவர் எல்லாவற்றையும் செய்யக்கூடியவர் ஆவார். தேவன் நம்மோடு இருந்தால் நாம் எப்போதும்பாதுகாப்புடன் இருக்கிறவர்களாவோம். ஏனெனில் அவர் நிழலில் நடப்பவர்களுக்கு யாரும் எந்தத் தீங்கும் செய்யமுடியாது. இந்த நினைவுகள் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி அளிக்கக் கூடியவை என்று நினைத்துப் பாருங்கள். தேவன் இப்போது மட்டும் நம்மோடு இருக்கிறார் என்பது மட்டுமல்லஎப்போதும் நம்மோடு இருப்பார். தனிப்பட்டவர்களாகவும் குடும்பங்களில் உள்ளவர்களாகவும் சபையின் அங்கத்தினர்களாகவும் நம்மோடு இருப்பார். இயேசுவின் பெயரே இம்மானுவேல் அதாவது தேவன் நம்மோடிருக்கிறார் என்பதல்லவா? தேவன் நம்மோடிருக்கிறார் என்பது

எல்லாவற்றிலும்சிறந்ததல்லவா? ஆகவே நாம் ஊக்கந்தளராதவர்களாகவும் மகிழ்ச்சியான நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கலாம். ஆண்டவரோடு இருப்பவர்களுடன் அவர் இருப்பதனால் நம் குறிக்கோள் முன்னேற்றமடையும் உண்மை வெற்றி பெறும்.

இந்நூலை இன்று வாசிக்கும் ஒவ்வொரு விசுவாசியும்இந்த இனிய கருத்தை மனதிற்கொண்டு இன்பம் உள்ளவராய் இருப்பாராக இதைவிட மேலான இன்பம் ஒன்றுமில்லை.

# 2. புது வலுவுண்டாக்கும் நித்திரை

*அவரே தனக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார் (சங்.127:3).*

நம் வாழ்க்கை கவலைமிகுந்த ஒன்றல்ல ஆனால் மகிழ்ச்சியான நம்பிக்கை மிகுந்த ஒன்றாகும். நம் பரமபிதா அவர் பிள்ளைகளின் தேவைகளையெல்லாம் நிறைவாக்குவார். நாம் வேண்டிக் கொள்வதற்கு முன்னதாகவே நமக்கு என்ன தேவை என்று அவருக்குத் தெரியும். ஆகையால் நாம் சோர்வு அடையத் தக்கதாககண்விழித்திருந்து திட்டமிடவும் முன்னேற்பாடு செய்யவும் அவற்றை முனைந்து செயல்படுத்தவும் தேவையில்லை. நாம் உரிய நேரத்தில் படுத்து நித்திரை செய்யலாம். நம்பிக்கையோடு கடவுள் மேல் சார்ந்திருக்க நாம் அறிந்திருந்தால் நம் உள்ளத்தில் பயம் அரித்துக்கொண்டிருப்பதால் நித்திரை வராமல் தவிக்க மாட்டோம். நம் கவலைகளையெல்லாம் அவரிடம் வைத்து விடுவோம். அவரைக்குறித்து தியானிப்பது நமக்கு இனிமையாய் இருக்கும். அவர் நமக்கு புதுவலு உண்டாக்கும் நித்திரை அளிப்பார்.

ஆண்டவருக்குப் பிரியமானவராயிருப்பதேநமக்குக் கிடைக்கக் கூடிய பெரும் புகழாகும். இதை உடையவர்

வேறெதையும் அடைய ஆர்வம் அற்றிருப்பர். ஆகையால் தன்னயமான எந்த விருப்பமும் அவரில் தலைதூக்காது. பரலோகத்தில்கூட தேவனின் அன்பைவிட ஆழமானது ஒன்றுமில்லை. ஆகையால் என் உள்ளமே உனக்கு எல்லாம்கிடைத்திருக்கிறது. நீ அமர்ந்திரு.

நாம் இளைப்பாறுவதற்கு ஏற்ற நிலையையும் இளைப்பாறுதலையும் ஆண்டவர் நமக்கு அளிக்கும் வரை நாம் படுக்கையில் புரண்டு கொண்டே இருப்போம். அவரே நித்திரை அளிப்பவர். இயேசுவே நம் சமாதானமும் இளைப்பாறுதலும் எல்லாமும் ஆனவர்.வாழ்விலும் மரணத்திலும் அவர் மார்பில் நாம் சுகித்திருப்போம்.

# 3. முழு தூரமும் நம் வழித்துணையானவர்

*மரணபரியந்தம் நம்மை நடத்துவார் (சங்.48:14).*

நமக்கு வழித்துணை மிகவும் தேவை. ஒவ்வொரு சமயம் நாம் செய்யவேண்டியதையும் எங்கு திரும்ப வேண்டும் என்பதையும்குறித்து திட்டமான விபரங்கள் கொடுப்பவருக்கு நம்மிடம் இருக்கும் எல்லாவற்றையும் கொடுக்கக்கூட நாம் ஆயத்தமாய் இருப்போம். சரியான பாதையில் செல்லு வேண்டும் என்ற ஆசை நமக்கு உண்டு. ஆனால் இரண்டு பாதைகளில் எதில் செல்லலாம் என்று எமக்குத் தெரிவதில்லை. அப்போதுவழித்துணைக்காக ஏங்குகிறோம்.

நம் தேவனாகிய கர்த்தர் நமக்கு வழித்துணையாகத் திருவுளங் கொள்ளுகிறார். அவருக்குப் பாதை தெரியும். சமாதானமாக நம் பயணத்தின் இறுதியை அடையும்வரை நமக்குச் சரியான பாதையைக் காட்டுவார். இதைவிடப் பிழையில்லாத வழிகாட்டுதலை நாம்விரும்பமாட்டோம் என்பது உண்மை அல்லவா? நம்மை முழுவதுமாக அவர் வழிநடத்தலுக்கு

ஒப்புக்கொடுப்போமாக அப்படியானால் நாம் ஒருபோதும் வழி தவறமாட்டோம். அவரை நம் தேவனாகக் கொண்டால் அவர் நம் வழிகாட்டி என்பதைக் காண்போம். நாம் அவர் மேல் சார்ந்தே அடி எடுத்து வைத்துஅவர் கட்டளைகளையும் கைக்கொள்வோமானால் சரியான பாதையிலிருந்து தவறமாட்டோம்.

அவர் நித்தியமாக நம் கடவுளாய் இருப்பதால் எப்போதும் நம் வழிகாட்டியாகவே இருப்பார் என்பதே நம் ஆறுதல். மரண பரியந்தம் நம்மை வழிநடத்துவார். தெய்வீக வழிநடத்துதலைக்குறித்த இந்த வாக்குறுதி ஆயுள் பரியந்தம் பாதுகாப்பு அளிப்பதோடும் தொடர்பு உள்ளதாய் இருக்கின்றது. அதாவது உடனே இரட்சிப்புகிடைக்கும். நம் இறுதி மூச்சு வரை வழிநடத்தப்படுவோம். முடிவில்லாத பேரின்பம் அடைவோம். ஒவ்வொருவரும் நிச்சயமாக வாலிபத்தில் இதைத்தேடிஇடைப்பட்ட காலத்தில் இதில் திளைத்து முதிர் வயதில் இதில் மனஅமைதி அடைய வேண்டும் அல்லவா? இன்று நாம் வீட்டைவிட்டு வெளியே செல்லு முன் ஆண்டவரின் வழிநடத்து தலைத் தேடுவோமாக.

# 4. தேவனின் வார்த்தையே தேவையான உணவு

மனுஷன்அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் (மத்.4:4).

தேவன் சித்தங்கொண்டால் இயேசு நாற்பது நாட்கள் இருந்தது போல் நாமும் உணவு இன்றிவாழமுடியும். ஆனால் அவருடைய வார்த்தை இன்றி வாழவே முடியாது. அவருடைய வார்த்தையினாலேயே நாம் படைக்கப்பட்டோம். அதன் மூலமாய்

மட்டுமே நாம் உயிர் வாழமுடியும். ஏனெனில் அவர் வலிமையின் வார்த்தையினால் எல்லாவற்றையும் ஆதரிக்கிறார். அப்பம் இரண்டாம் தரமான ஆகாரமேஆகும். நம் வாழ்வாதாரம் ஆண்டவரே அப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட அவர் கிரியை செய்ய முடியும். ஒரே விதமாகக் கிரியை செய்ய வேண்டுமென்று நாம் அவரை வரையறைப் படுத்தக்கூடாது. காணக்கூடியதைக் குறித்து மட்டுமே நாம் அக்கறை காட்டுகிறவர்களாய் இருக்கக்கூடாது.காணக்கூடாத கடவுளைக் குறித்து கவனமாய் இருக்க வேண்டும். மிகுந்த வறுமையிலிருந்த சமயம் அப்பம் குறைவுபட்டபோது பசியும் குறைந்தே காணப்பட்டதாக விசுவாசிகள் கூறியிருப்பதை நாம் கேட்டிருக்கலாம். வேறு சிலருக்கு எப்போதும் போல தேவைகள் நிறைவு செய்யப்படாதபோது எதிர்பாராதவிதத்தில் ஆண்டவர் உதவி அனுப்பியிருந்திருக்கிறார்.

ஆண்டவரின் வார்த்தையைக் குறித்து நாம் அக்கறை உள்ளவர்களாய் இருக்கவேண்டும். அதன் மூலமாய் மட்டுமே நாம் பிசாசோடு எதிர்த்து நிற்கமுடியும். அவர் வார்த்தை நம்மிடமிருந்து எடுக்கப்பட்டு விட்டால் நாம் எளிதில்தளர்வுறுவோம் ஆனபடியால் நம் எதிரியின் கையில் சிக்கிவிடுவோம். நம் ஆத்துமாக்களுக்கு உணவு தேவை. தேவனுடைய வார்த்தையே அந்த உணவு. அதைத் தவிர வேறே எதுவும் இல்லை. இவ்வுலகில் உள்ள எல்லா நூல்களும் போதகர்களும் ஒருவேளைக்குக்கூட நம் ஆத்துமாவுக்குத் தேவையான உணவைஅளிக்க முடியாது. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற வார்த்தையே விசுவாசியின் வாயை நிரப்ப முடியும். ஆண்டவரே இந்த அப்பத்தை தவறாமல் எங்களுக்குக் கொடுத்தருளும். அதை உயர்வான உணவைவிட மேலானதாகக் கருதுகிறோம்.

# 5. பூரண விடுதலை

ஆனால் அந்நாளிலே உன்னைத் தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை (எரே.39:17).

ஆண்டவருக்காக அவருடைய உண்மையான ஊழியக்காரர் துன்பப்படும்போது அவரிடமிருந்து அன்பும் இனிமையுமான செய்திகளைப் பெறுவார்கள். அவர்கள் மேல் பரிவும் இரக்கமும் கொண்டு அவர்களுக்கு உதவி செய்கிறவர்களுக்கு அறிவிக்கவும் நற்செய்தியைப் பெறுவார்கள்.ஏபெத்மெலேக்கு இழிவாகக் கருதப்பட்ட ஒரு எத்தியோப்பியரே ஆனால் அவர் எரேமியாவுக்கு இரக்கம் காட்டினார். ஆகையால் தீர்க்கதரிசி மூலமாக அவருக்கு இச்சிறப்பான வாக்குறுதியைக் கடவுள் அனுப்பினார். கடவுளுக்காகத் துன்பப்படுகிறவர் மேல் நாம் எப்போதும் அக்கறை உள்ளவர்களாகஇருப்போமாக. அவர் நமக்குப் பலன் அளிப்பவர்.

தம்மேல் பழிவாங்கக் காத்திருந்தவர்களைக் குறித்து எபெத்மெலேக்கு அச்சம் கொண்டிருந்தார். ஆனால் அவர்களிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்னும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அவர் தாழ்மையும் எளிமையும் ஆனவர். ஆனால்யேகோவா அவரைக் காத்துப் பேணினார். ஆயிரக்கணக்கானவர்களை வெட்டிக்கொன்ற போதிலும் அவர்களால் அடக்கவொடுக்கமான அந்த எத்தியோப்பியருக்கு எவ்விதத் தீங்கும் செய்யமுடியவில்லை. நம்மேல் விரோதம் கொண்டிருக்கும் பலரைக் குறித்து நாமும் அச்சம் கொண்டிருக்கலாம்.ஆனால் நாம் துன்பப்படும் போது ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால் அவர் நம்மைக் குறித்து உண்மையுள்ளவராய் இருப்பார். ஆண்டவரின் உத்தரவு இல்லாமல் யார் என்ன செய்ய முடியும்? ஆண்டவர் கோபம் கொண்டவரின் வாயையும் வலிமை வாய்ந்தவரின் தலையையும் கடிவாளத்தால்அடக்குவார். நாம் கடவுளுக்குப் பயப்படலாம்

வேறு யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. கடவுளுக்காக இகழப்பட்ட ஒரு தீர்க்கதரிசிக்கு ஒரு பாத்திரம் தண்ணீர் கொடுப்பவனும் அதற்கான பலனை அனுபவிக்காமற் போவதில்லை. நாம் இயேசுவுக்காக அக்கறை கொண்டால் இயேசு நமக்காக அக்கறைகொள்வார்.

# 6. அவர் அன்பு அவர் குமாரன்

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை வசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி உலகத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் (யோ.3:16).

வானத்தில் காணப்படும் எல்லா நட்சத்திரங்களிலும் வடதுருவ நட்சத்திரமே கப்பலோட்டிகளுக்கு மிகவும் பிரயோஜனமானது. மேலே கூறப்பட்ட வசனமும் ஒரு துரவ நட்சத்திரம் ஆகும் ஏனெனில் வேறெந்த வேதவசனத்தை விட இதுவே பல ஆத்துமாக்களை இரட்சிப்புக்குவழிநடத்தியிருக்கிறது. நட்சத்திரக்கூட்டங்களில் பெரியகரடி எனப்படும் கூட்டத்திற்கு இருக்கும் முக்கியத்துவம் வாக்குறுதிகளில் இதற்கு இருக்கின்றது. இதில் பலசொற்கள் சிறப்புத் தன்மையுடன் ஒளிவீசுகின்றன. இங்கு கடவுளின் அன்பின் அளவு இவ்வளவாய் என்று குறிக்கப்படுவதுஅதன் அளவிடமுடியாத சிறப்பைக் குறிக்கின்றது. அவர் அளித்த சிறப்பான ஈவைத் தந்தருளினார் என்பது அது சிறப்பானதும் இலவசமானதும் ஆகும் என்பதைக் காட்டுகிறது. மேலும் வாக்குஅளிக்கப்பட்டவர் கடவுளின் குமாரன். கடவுளின் ஒரே பேறானகுமாரன் மனிதனுக்காக வாழ்ந்துமரிப்பதற்காக அனுப்பப்பட்டதால் மட்டுமே விலைமதிப்பும் ஈடு இணையற்றதுமான அந்த அன்பு முழுவதுமாக வெளிப்படுத்தப் பட்டது. இந்த மூன்று குறிப்புகளும் அறிவு விளக்குத்துக்குத் துணையானவை.

மனிதரிடம் எதிர்பார்க்கப்படுவது அவரை விசுவாசித்தல் என்னும் எளிய செயலேஆகும். இது குற்றவாளியான மனிதனுக்கு இரக்கமாக இரட்சிப்பின் வழியைக்காட்டுகிறது. குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ என்று கூறப்பட்டிருப்பது விரிவாகப் பலருக்கு ஆதரவாயிருக்கிறது. இதைவிட குறுகிய தன்மையுடைய வேறெந்த சொல்லும் பயன்படுத்தப்பட்டிருந்தால் பலர் இதை அடையாமல்விடப்பட்டிருக்கலாம். இறுதியாக இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள் என்னும் பெரிய வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. கெட்டுப்போய்விடும் நிலைமையிலும் தன்னை இரட்சிக்க முடியாத நிலைமையிலும் இருப்பதாக உணரும் ஒவ்வொருவருக்கும் இதுமகிழ்ச்சி அளிப்பதாகும். நாம் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கிறோம். ஆகையால் நமக்கு நித்திய ஜீவன் உண்டு.

# 7. மலைப் பாடகர்கள்

வானங்களே கெம்பீரித்துப் பாடுங்கள் பூமியே களிகூரு .பர்வதரங்களே கெம்பீரமாய் முழங்குங்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார். சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார் (ஏசா.49:13).

ஆண்டவர் ஆறுதல் அளிக்கும் விதம் மிகவும் இனிமையானது. ஆகையால் அதைக்குறித்துப் பரிசுத்தவான்கள் பாடுவதோடல்லாமல் வானமும் பூமியும்கூட அவர்களோடு சேர்ந்து பாடுகின்றன. ஒரு மலையைப் பாடச் செய்வதே எளிதல்ல. ஆயினும் தீர்க்கதரிசிபல மலைகளைப் பாடச்சொல்லி அழைக்கிறார். யேகோவா தமக்குச் சொந்தமான சீயோனுக்குக் காட்டின கிருபையினால் லீபனோனும் சீயோனும் உயர்ந்தவைகளான மோவாப்பும் பாசானும் பாடும் என்கிறார். மலைபோன்ற துன்பங்கள் சோதனைகள் கடுமுயற்சி நம்மைத்

துன்புறுத்தும் போதும்அவற்றைக் கடவுளைத் துதிக்கும் சந்தர்ப்பங்கள் ஆக்கலாம் அல்லவா? ஆகவே கெம்பீரமாய் முழங்குங்கள்.

கடவுள் தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார் என்னும் வாக்குறுதி நம் காதுகளில் இனிமையாகத் தொனிக்கக் கூடியது. அது பாடுங்கள் களிகூரு முழங்குங்கள் என்றுஇனிமையாகப் பாட்டு இசைப்பதைக் கேளுங்கள். கடவுள் மாறாத அன்பு உள்ளவராக இருப்பதால் தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாய் இருப்பதையே விரும்புகின்றார். நாம் துக்கப்படுகிறவர்களாயும் சந்தேகப் படுகிறவர்களாயும் இருப்பதை அவர் விரும்புவதில்லை. நம்பிக்கையுள்ள உள்ளங்களோடுஅவரைத் தொழ வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அவர் கைவிடமாட்டார். அவர் கைவிட்டு விடுவாரோ என்று நாம் ஏன் பெருமூச்சு விட்டுக்கொண்டு செயலற்றிருக்க வேண்டும்? நன்றாக மீட்டப்பட்ட கருவியுடனும் சிங்காசனத்திற்கு முன்பாடும் சேராபீன்களின் குரலோடும் நாம்பாடிக்கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

# 8. தேவதூதர்கள் பாளயம்

கர்த்தருடைய தூதுவன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார் (சங்.34:7).

நாம் தேவதூதர்களைபு; பார்க்க முடிவதில்லை. ஆனால் அவர்கள் நம்மைப் பார்க்கக்கூடியவர்களாய் இருப்பதே நமக்குப் போதுமானது. உடன்படிக்கையின் தூதரான சிறப்பு வாய்ந்தவர் ஒருவர் இருக்கிறார். அவரை நாம் பார்த்ததில்லை என்றாலும் அவர் மேல்அன்புகூருகிறோம். அவர் கண்கள் பகலிலும் இரவிலும் நம்மேல் நோக்கமாயிருக்கின்றன. அவருக்குக் கீழே பரம சேனையின் கூட்டம் இருக்கிறது. அவர்கள் அவருடைய பரிசுத்தவான்களுக்குக் காவலாயிருந்து எல்லாத் தீமைகளிலிருந்தும்

அவர்களைப் பாதுகாக்கச் செய்கிறார். பிசாசுகள்நமக்குத்தீமை செய்தால் பரம வீரர் நமக்குச் சேவை செய்கிறார்கள்.

பரமசேனையின் ஆண்டவர் அவ்வப்போது வந்து நம்மைப் பார்த்துவிட்டுப் போய்விடுவதில்லை. அவரும் அவர் சேனைகளும் நம்மைச்சூழ பாளையமிறங்கியிருக்கிறார்கள். உயிருள்ள கடவுளை நம்புகிறவர்கள் வாழும்இடமே இரட்சிப்பின் சேனையுடைய தளபதி அலுவலகம் ஆகும். பரமசேனையின் தளபதியுடைய வலிய கோட்டையை உடைத்துச் சென்றாலன்றி விசுவாசிகளை எப்பக்கத்திலிருந்தும் தாக்கமுடியாதபடி தேவதூதர்களின் பாளயம் இருக்கிறது. நமக்கு நித்திய காவலும் நிலையான பாதுகாப்பும் இருக்கிறது.கடவுளின் தூதர்கள் நமக்குக் காவலராய் இருப்பதால் நம்மைத் திடீரென்று யாரும் தாக்கவும் முடியாது. சமாளிக்க முடியாதபடி பெரிய சேனையால் நம்மைச் சூழ்ந்து கொள்ளவும் முடியாது. இந்த வாக்குறுதியில் இரட்சிப்பு அளிக்கவல்ல தளபதி நமக்கு விடுதலையை வாக்களிக்கிறார்.இந்தப்போர்க்களத்திலிருந்து நாம் இளைப்பாற மேல்வீடு செல்லும்வரை அவர் மறுபடியும் மறுபடியும் நமக்கு விடுதலை அளிப்பார்.

# 9. உண்மையும் பயன் உள்ளவனும் ஆனவன்

தேசத்தின் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும் உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்(சங்.101:6).

தாவீது இவ்விதம் கூறினால் தாவீதின் குமாரனும் இவ்விதமே கூறுவார் என்பது நிச்சயம். இயேசு உண்மையானவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை முன்னேறச் செய்யவும் அவர்களுக்கு ஊக்கமும்பரிசும் அளிக்கவும்

அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறார். உண்மையான எந்த மனிதனும் தான் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகக் கவலைப்படவேண்டியதில்லை. அரசரே அவர்மேல் நோக்கமாயிருக்கிறார்.

அரசர் அவர்மேல் நோக்கமாயிருப்பதால் இருபயன்கள் ஏற்படுகின்றன. முதலாவதுஅவர்கள் அவரோடு வாசம் பண்ணுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு உண்மையானவர்களைத் தம் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து தம் அரண்மனையில் அமர்த்துகிறார். அவர்களைத் தம் தோழர் ஆக்கி அவர்களோடு இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.

நாம் ஆண்டவருக்குஉண்மையுள்ளவர்களாக இருந்தால் அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்துவார். நாம் உண்மையுள்ளவர்களாய் இருப்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு பெருமுயற்சி தேவைப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பயன் கொடுப்பதாய் இருக்கும். எவ்வளவுக்கெவ்வளவு வெறிகொண்டு மக்கள் நம்மை விலக்கிவைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு மகிழ்ச்சியுடன் ஆண்டவர் நம்மை வரவேற்கிறார்.

இரண்டாவதாக உத்தமமான வழியில் நடப்பவன் என்னைச் சேவிப்பான் என்கிறார். மதிநுற்பத்தின் தந்திரங்களை வெறுத்து ஒதுக்கி இயேசுவுக்கும் அவர் வார்த்தைக்கும் அவர் சிலுவைக்கும்உண்மையாய் நடப்பவர்களை அவர் மகிமைக்கென்று பயன்படுத்துவார். அவர்கள் அரசரான அவருடைய பரிவாரமும் மதிப்புக்குரிய ஊழியக்காரரும் ஆவார்கள். உண்மையாய் நடப்பவர்கள் தோழமையும் பயனுடைமையும் பெறுவார்கள். ஆண்டவரே நான் உம்மோடு இருந்து உமக்கு ஊழியம் செய்வதற்காக என்னைஉண்மையுள்ளவன் ஆக்கும்.

# 10. சபையை நேசி

தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர். அதற்குத் தயை செய்யும் காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது. உம்முடைய ஊழியக்காரர் அதின் கல்லுகள் மேல் வாஞ்சை வைத்து, அதின்மண்ணுக்குப் பரிதபிக்கிறார்கள் (சங்.102:13-14).

ஆம் நாம் நம் சபைக்காக ஏறெடுக்கும் விண்ணப்பங்கள் கேட்கப்படும். அதற்கான நேரம் வந்து விட்டது. ஆண்டவரின் வீட்டில் நடக்கும் ஜெபக்கூட்டங்களையும்ஓய்வுநாள் பள்ளியையும் மற்ற ஆராதனைகளையும் நாம் நேசிக்கிறோம். ஆண்டவரின் பிள்ளைகள் ஒவ்வொருவரோடும் நாம் அன்பினால் இணைக்கப்பட்டிருக்கிறோம்.

சபையலுள்ள ஒவ்வொருவரும் இவ்விதம் உணர்ந்தால் ஆண்டவரின் பிரசன்னத்தினால் புதுக்கிளர்ச்சி அடைந்துமகிழ்ச்சி அடைவோம். நம் ஆலயங்கள் நிரம்பி வழியும். பரிசுத்தவான்கள் புத்தூக்கம் பெறுவார்கள். பாவிகள் மன மாறுதல் அடைவார்கள். ஆண்டவரின் கிருபையினாலேயே இது நடைபெறும். ஆனால் நிச்சயம் நடைபெறும். அதைநாம் எதிர் பார்க்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அதற்காகக்குறித்த நேரம் வந்தது. நாம் எழுச்சி கொள்வோமாக. சீயோன் விழுந்து விட்டிருந்தாலும் அதன் ஒவ்வொரு கல்லையும் நாம் நேசிப்போமாக. மிக மிக அற்பமான உண்மையையும் ஆணையையும் விசுவாசியையும் சிலர் தூசிபோல இழிவாகக் கருதினாலும் நாம் அவற்றை மதிப்புடையவையாய்பாராட்டுவோமாக.

நாம் சீயோனை ஆதரித்தால் ஆண்டவர் அதை ஆதரிக்கும் காலம் நெருங்கி விட்டது. ஆண்டவரின் செயலில் நாம் மகிழ்ச்சி அடைவோமேயானால் ஆண்டவரே அதில் மகிழ்ச்சி அடைவார்.

# 11. கடவுளை விட்டுப் பிரிக்கப்படுவதில்லை

உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் இதை விசுவாசிக்கிறாயா ? (யோ.11:26).

ஆம் ஆண்டவரே நாம் அதை விசுவாசிக்கிறோம். நாங்கள் என்றென்றைக்கும் மரிப்பதில்லை. நம் ஆத்துமா சரீரத்திலிருந்து பிரிக்கப்படலாம். இது ஒருவிதமான மரணம், ஆனால் நம் ஆத்துமா ஒருபோதும் கடவுளை விட்டுப் பிரிக்கப்படுவதில்லை. அப்படிப்பிரிக்கப்படுவது தான் உண்மையான மரணமாகும். அது பாவத்தின் தண்டனையாகும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். இவ்வித மரண தண்டனை பயங்கரமானதாகும் என்று நிச்சயமாக நம்புகிறோம். ஏனெனில் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம். அவர் தம் சரீரத்தின் அவயவங்களை இழக்கச் சம்மதிப்பாரா? நாம் இயேசுவோடு மணம் முடிக்கப்பட்டிருக்கிறோம். மரணத்தினால் நம்மை அவர் இழக்க ஆயத்தமாயிருப்பாரா? இது நடக்கக்கூடாதகாரியமாகும். நம்முள் இருக்கும் உயிர் கடவுளிடமிருந்து பிரிக்கக் கூடாததாகும். ஆம் பரிசுத்தஆவி நம்மில் வாசமாயிருக்கும் போது நாம் எப்படி மரணமடைவோம்? இயேசுவே நம் உயிர் ஆகையால் நமக்கு மரணம் ஏற்படாது. ஏனெனில் அவர் மறுபடியும் மரணமடைய முடியாது. அவரில் நாம் ஒருமுறைபாவத்திற்கு மரணம் அடைந்திருக்கிறோம். உயிரை இழப்பதற்கான இந்தத் தண்டனை இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட மாட்டாது. நாம் இப்போது உயிரோடிருக்கிறோம். நாம் என்றென்றைக்கும் உயிரோடிருப்போம். நீதியின் பலன் நித்திய வாழ்வாகும். நமக்குக் கடவுளின் நீதிஇருக்கிறது. ஆகையால் மிக உன்னதமான பலனுக்கு உரிமை கோரலாம். நாம் மகிழ்ச்சியுடன் உயிரோடிருப்போம் என்று நம்புகிறோம். ஆகையால் உயிரோடிருக்கும் நம் தலைவரில்

நம் வாழ்க்கை பாதுகாப்பாய் இருக்கிறது என்னும் முழு நிச்சயத்துடன் நாம் முன்னேறுகிறோம்.

# 12. யார், எப்போது, எப்படி இரட்சிப்பது?

கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார் (1.பேது.2:9).

தேவபக்தியுள்ளவர்கள் சோதிக்கப்படுகிறார்கள். ஒரு போதும் சோதிக்கப்படாத நம்பிக்கை உண்மையான நம்பிக்கை அல்ல. தேவ பக்தியுள்ளவர்கள் சோதனையினின்று இரட்சிக்கப்படுகிறார்கள்.தற்செயலாகவாவது வேறு யார் மூலமாயாவது இரட்சிக்கப்படுவதில்லை. கர்த்தரே அவர்களை இரட்சிக்கிறார். தம்மை நம்புகிறவர்களை இரட்சிப்பதை அவரே செய்கிறார். தேவபக்தியுள்ளவர்களைக் கர்த்தர் நேசிக்கிறார். அவர்கள் எங்கு எவ்விதமாக இருக்கிறார்கள் என்றும் கவனித்துவருகிறார்.

சில வேலைகளில் அவர்கள் செல்லும் வழி வளைந்து, வளைந்து போவதுபோல இருப்பதால் அச்சுறுத்தும் ஆபத்திலிருந்து எவ்விதமாகத் தப்புவது என்று அவர்களுக்கு நினைத்துப்பார்க்க முடிவதில்லை. அவர்கள் அறியாததை ஆண்டவர் அறிந்திருக்கிறார். யாரை,எப்போது, எப்படி இரட்சிப்பது என்று அவர் அறிந்திருக்கிறார். தேவ பக்தியுள்ளவர்களுக்கு மிக பயனுள்ளதாகவும், அக்கிரமக்காரரை முற்றிலுமாக அடக்குவதாகவும், தமக்கு மிகுந்த மகிமை அளிப்பதுமான விதத்தில் அவர் செயல்படுகிறார். ஆண்டவர் நிச்சயமாகஇரட்சிப்பார் என்னும் நம்பிக்கையில் நிலைத்திருப்போமாக. தம் சொந்த மக்களை எவ்விதமாயாவது இவ்வுலக வாழ்க்கையில் அபாயங்கள், துன்பங்கள், சோதனைகளைக் கடந்து தம் வலது பக்கத்தில் மகிமையோடு

வாழ்வதற்குக் கொண்டு சேர்ப்பார் என்னும் நிச்சயத்தில்திருப்தியோடு வாழ்வோமாக.

இந்நாளில் ஆண்டவரின் இரகசியங்களைத் துருவிக்கொண்டிருப்பது என் வேலையல்ல. எனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் என் பரமபிதா எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்னும் நிச்சயத்துடன் அவர் குறித்திருக்கும் காலத்திற்கென்றுபொறுமையுடன் காத்திருப்பேனாக!

## 13. முழு நிறை நம்பிக்கை

உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை. நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன்உனக்குக் கிடைத்த கொள்ளை பொருளைப்போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமி.39:18).

ஆண்டவரில் வைக்கும் நம்பிக்கை நம்மை எவ்விதம் காப்பாற்றக்கூடியது என்பதைப் பாருங்கள்.எருசலேமிலிருந்து வலிமை வாய்ந்தவர்கள் பட்டயத்தினால் வீழ்ந்தார்கள். ஆனால் எளியவரான எபெத்மெலேக்கு பத்திரமாய்க் காக்கப்பட்டார். ஏனெனில் அவர் யேகோவாவை நம்பினார். தன்னைப் படைத்தவரையெல்லாம் வேறு யாரை மனிதன் நம்பலாம்? படைத்தவரை விட்டுவிட்டுபடைக்கப்பட்டவைகளை நம்பினால் நாம் மூடரே. நாம் விசுவாசிகளாகவே எப்போதும் நிலைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவ்விதமிருந்தால் நாம் எல்லாவிதமான ஆபத்துகளிலிருந்தும் விடுவிக்கப்படுவோம். ஆண்டவரை நம்பினவர்கள் ஒருவரும் ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை.வெட்கப்படவும் மாட்டார்கள்.

கர்த்தர் உன்னை நிச்சயமாக விடுவிப்பேன் என்கிறார் நிச்சயமாக என்று கூறியிருப்பதைக் கவனித்துப் பாருங்கள். வேறு ஏது நிச்சயமற்றதாய் இருந்தாலும் விசுவாசிகளை ஆண்டவர்

பராமரித்துக் காப்பாற்றி வருகிறார் என்பது நிச்சயம்.கர்த்தரே இரக்கமுள்ளவர்களின் பாதுகாவலராய் இருக்கிறார். எல்லா இடங்களிலும் ஆபத்து இருந்தாலும் அவர் தூய செட்டைகளின்கீழ் அடைக்கலம் இருக்கிறது. இந்த வாக்குறுதி உண்மையானதென்று நாம் ஒப்புக்கொள்கிறோமோ? அப்படியானால் இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கும்ஆபத்திலும் அதை நம்பலாம். நமக்கு நண்பர்கள் இருப்பதினால் அல்லது நாம் விவேகம் உள்ளவர்கள் ஆனபடியால் அல்லது நல்ல அறிகுறிகள் காணப்படுவதால் நாம் விடுவிக்கப்படுவோம் என்று நினைக்கலாம். ஆனால் கடவுள் நீ என்னை நம்பினபடியால் என்று சொல்வதோடு ஒப்பிட்டால் அவைஓரளவே வலிமை வாய்ந்தவை என்பதை நாம் காணலாம். இதை வாசிப்பவரே, இவ்விதம் இருக்க முயற்சி செய்வீராக. ஒருமுறை முயன்று பார்த்தால் வாழ்நாள் முழுவதும் கைக்கொள்வீர். இது எவ்வளவு நிச்சயமானதோ அவ்வளவு இனிமையானதும் ஆகும்.

## 14. அவர்மேல் வைக்கப்படும் பாரங்கள்

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங்.55:22).

இது கனமான பாரம், அதை எல்லாம் வல்ல இறைவன்மேல் தள்ளிவிடு. இப்பொழுது அது உன் பாரமாய் இருக்கிறது. அது உன்னை நசுக்குகிறது. ஆனால் ஆண்டவர் அதைத் தூக்கிக்கொண்டால் அது அவருக்கு கனமானதல்ல. நீ அதைத் தூக்கிக்கொள்ளவேண்டுமென்றாலும்அவர் உன்னை ஆதரிப்பார். அது அவர்மேல் இருக்கும். உன்மேல் இருக்காது. அதன் பளுவைத் தாங்கிக்கொண்டிருக்கும்போது நீ ஆதரிக்கப்படுவதால் அந்தப் பாரம் உனக்கு ஆசீர்வாதமாயிருக்கும். ஆண்டவரோடு உன் பாரத்தைப் பற்றிக் கலந்து பேசு. அப்போது

உன்னை வளையச்செய்யக்கூடியஅந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டிருந்தாலும் நீ நிமிர்ந்து நிற்பாய்.

நமக்கேற்படும் சோதனை கடமையின் பாதையிலிருந்து நம்மை வழி விலகச் செய்துவிடுமோ என்றுதான் நாம் பயப்படுகிறோம். ஆனால் இவ்விதம் நேரிட நம் ஆண்டவர் அனுமதிக்கமாட்டார். அவர்முன்பாக நாம் நீதிமான்களாயிருந்தால் நம் சோதனை நம்மை நிலைபெயரச் செய்ய அவர் ஒரு நாளும் அனுமதிக்கமாட்டார். இயேசுவில் அவர் நம்மை நீதிமான்களாக ஏற்றுக்கொள்கிறார். இயேசுவில் நாம் அவ்விதமே நிலைத்திருக்கவும் செய்வார்.

இன்றைய தினத்தில்ஏற்படக்கூடிய சோதனைகளை நீ தனியாகவே சமாளிக்கப்போகிறாயா? அந்தப் பாரம் மறுபடியும் உன் தோள்களை அழுத்தப்போகிறதா? மதியீனமாய் இராதே. உன் கவலைகளையெல்லாம் ஆண்டவரிடம் சொல்லி, அவர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. உன் பாரத்தைக் கீழே இறக்கிவைத்துவிட்டு மறுபடியும் தூக்கிக்கொள்ளாதே. கர்த்தர்மேல் தள்ளி அங்கேயே வைத்துவிடு. பின் நீ பாரமற்ற மகிழ்ச்சியான விசுவாசியாக, உன் பாரத்தை சுமக்கிறவரின் புகழைப் பாடிக்கொண்டு, சுதந்திரமாக நடமாடலாம்.

# 15. துயரப்படுகிறவருக்கு ஆறுதல் அளிக்கப்படும்

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் அறுதலடைவார்கள் (மத்.5:4).

நாம் அழுகையின் பள்ளத்தாக்கைக் கடந்து சீயோனைஅடைகிறோம். துயரப்படுதலும் ஆசீர்வதிக்கப்படுதலும் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை என்று நாம் நிலைக்கலாம். ஆனால் எல்லையற்ற ஞானமுள்ள இரட்சகர் அவற்றை இந்த வசனத்தில்

ஒன்றாகவே இணைத்துள்ளார். அவர் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக. நம்முடைய பாவங்களுக்காகவும்மற்றவர்களுடைய பாவங்களுக்காகவும் துயரப்படுவதை ஆண்டவரால் அவருக்கு உண்மையானவர்கள் மேல் வைக்கப்பட்ட அடையாளமாகும். தாவீதின் வீட்டார் மேலாவது அல்லது வேறு எந்த வீட்டாரின் மேலாவது கிருபையின் ஆவி ஊற்றப்படும்போது, அவர்கள் துயரப்படுவார்கள். அரிய பொருள்கள்நீர் மூலம் நமக்குக்கிடைப்பதுபோல், பாவத்திற்கு துயரப்படுவதின்மூலம் நாம் சிறந்த ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம். துயரப்படுகிறவர் எதிர்காலத்தில் ஆசீர்வதிக்கப்படுவார் என்பதில்லை. அவர் இப்போதே ஆசீர்வதிக்கப்பட்டவராயிருக்கிறார் என்று கிறிஸ்துஅறிவிக்கிறார்.

பாவத்துக்காகத் துயரப்படுகிறவர்களைத் தூய ஆவியானவர் நிச்சயமாகவே ஆறுதல்படுத்துவார். இயேசுவின் இரத்தம் பூசப்படுவதாலும் தூய ஆவியானவரின் சுத்திகரிக்கும் ஆற்றலினாலும் அவர்கள் ஆறுதல்படுத்தப்படுவார்கள். மக்கள் கடவுளுக்கு விரோதமாகஎவ்வளவு கலகம் செய்தாலும் அவர் தம்மை மகிமைப்படுத்துவார் என்னும் உறுதி அளிக்கப்பட்டிருப்பதால் அவர் பிள்ளைகள் தங்கள் நகரத்தினரின் மிகுந்த பாவங்களைக் குறித்தும் ஆறுதல்படுத்தப்படுவார்கள்;. சீக்கிரத்தில் பாவத்திலிருந்து விடுதலையடைந்து அவர்கள் ஆண்டவரின்மகிமையான பிரசன்னத்தில் நித்தியமாய் வாழ எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதில் ஆறதல்படுத்தப்படுவார்கள்.

# 16. நொண்டியானவனுக்கு ஒரு வார்த்தை

நொண்டியானவனை இரட்சித்து, (செப்.3:19)

ஆண்களிலும் பெண்களிலும் நொண்டியானவர் பலர் இருக்கிறார்கள். ஒரு மணிநேரத்தில் பல தடவை தங்கித் தங்கி நடப்பவரை நீங்கள்சந்தித்திருக்கலாம். அவர் சரியான பாதையில் ஊக்கத்தோடு ஓட ஆர்வமுள்ளவராயிருக்கலாம். ஆனால் அவர் நொண்டியாக இருப்பதால் அதில் சரியாக நடந்து போக முடிவதில்லை. மோட்சப் பாதையில் பல நொண்டிகள் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனதில் நமக்கு என்ன நேரிடுமோ?ஒரு வேளை பாவம் நம்மை மேற்கொண்டு விடும். சாத்தான் நம்மை விழத்தள்ளி விடுவான். அவ்வப்போது நின்று விடுவது தான் நம் தன்மையாகும். ஆண்டவர் ஒருபோதும் நம்மைச் சிறந்த போர் வீரராகவாவது அவர் செய்தியைக் கொண்டு செல்லும் தூதராகவாவது ஆக்கவும் முடியாது என்றுநினைத்துக் கொள்ளலாம். பரவாயில்லை அவர் நம்மை இரட்சிப்பார் என்பதே சிறந்த செய்தியல்லவா? நொண்டியானவனை இரட்சிப்பேன் என்று அவர் கூறுகிறார். நம்மை இரட்சிப்பதில் அவர் நம்மை அதிகம் மகிமைப்படுத்துவார். எப்படியெனில் இந்த நொண்டி எப்படிப் பந்தயத்தில் ஓடிகிரீடத்தைப் பெற்றான்? என்று எல்லாரும் கேட்பார்கள். அவ்வமயம் சர்வ வல்லவரின் கிருபையையே எல்லாரும் புகழுவார்கள்.

ஆண்டவரே நான் நம்பிக்கையிலும் வேண்டுதலிலும் புகழ்வதிலும் ஊழியத்திலும் பொறுமையிலும் தயக்கமுள்ளவனாயிருந்தாலும் என்னை இரட்சியும் என்றுவேண்டிக்கொள்கிறேன். என்னைப் போன்ற நொண்டியை நீர் ஒருவர் தான் இரட்சிக்க முடியும். நான் மிகவும் பின்தங்கியவருள் ஒருவனானபடியால் நான் அழிந்து போக விட்டு விடாதேயும். உம்முடைய யாத்திரிகரில் மந்தமானவனாகிய என்னை உம் கிருபையினால் சேர்த்துக் கொள்ளும் என்றுவேண்டினேன். அப்படியே ஆகட்டும் என்று அவர் சொல்லி விட்டார். ஆகையால் யாக்கோபு ஜெபத்தில் நீடித்திருந்து வெற்றி

பெற்றதைப்போல் என் நரம்பு சுருங்கிப்போனாலும் நான் முன்னேறிச்செல்வேன்.

# 17. உண்மைக்காக வீரதீரமாயிருத்தல்

*தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள் (தானி.11:32).*

கர்த்தரே யுத்தத்தில் வல்லவர் கர்த்தர் என்பது அவருடைய நாமம் அவர் படையில் இடம் பெறுகிறவர்கள் யுத்தத்திற்குப் பயிற்சி கொடுத்து வலிமையும் போராண்மையும் அளிக்கும் படைத்தலைவரை உள்ளவர்கள் ஆவார்கள். தானியேல் குறிப்பிட்ட காலம் மிகவும்பயங்கரமான காலம் ஆகும். அந்தக் காலத்தில் கடவுளின் மக்கள் சிறப்பாக வெற்றி பெறுவார்கள் என்றும் வலிமை வாய்ந்த பகைவர்களை எதிர்த்து நிற்க அவர்கள் ஆற்றல் பொருந்தியவர்களாயும் வீரமிக்கவர்களாயும் இருப்பார்கள் என்றும் வாக்களிக்கப்பட்டது.

நாம்கர்த்தருக்காக எல்லாவற்றையும் இழப்பதற்குத் துணிவு உள்ளவர்களாக கர்த்தரை அவரது வல்லமையையும் நேர்மையையும் மாறாத அன்பையும் அறிந்தவர்களானால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவர் தன்மை நம் ஆர்வத்தை ஊக்குவித்து அவருக்காக நம்மை உயிரோடிருக்கவும் மரிக்கவும் ஏவுகிறது.கர்த்தரோடு நாம் நெருங்கிய பழக்கமுடைய தோழமை உள்ளவர்களாயிருந்து அவரை நன்கு அறிந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவ்விதம் இருந்தால் நாம் அவரைப்போல் இருப்போம். உண்மையையும் நேர்மையையும் ஆதரிக்கிறவர்களாயும் இருப்போம். கர்த்தரை முகமுகமாய்த் தரிசித்துவருகிறவன் ஒருநாளும் மனிதனின் முகத்தைக்கண்டு அச்சங்கொள்ளமாட்டான். நாம் அவரோடு நெருங்கி வாழ்ந்தால் அவருடைய வீரப்பண்புகளை அடைவோம். அதற்குப் பின் ஏராளமான பகைவரும் நமக்கு மிகச் சிலர் ஆனவர்களாகவே

காணப்படுவார்கள். கர்த்தர் பார்வையில் உலகமக்கள்வெட்டுக்கிளிகளைப்போல காணப்படுவதைப்போல ஏராளமான மக்களும் பிசாசுகளும் கூட நமக்குக் காணப்படுவார்கள். பொய்யே அதிகமாயிருக்கும் இக்காலத்தில் உண்மைக்காக வீரதீரமாயிருப்பது எவ்வளவு நல்லதாகும்.

# 18. வனாந்தரத்தில் ஆன்மீகக் கூட்டுறவு

இதோ நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டு போய், அவளோடே பட்சமாய்ப்பேசி, (ஓசி.2:14)

நாம் பாவத்தினால் வருதப்படுத்தப்படுவதை ஆண்டவர் கண்டு தம் அன்புடைமையினால் நம்மைக் கவரத் தீர்மானிக்கிறார். நம் ஆத்தும நேசர் முதலில் நம்மைக் கவர்ந்து உலகப்பற்றிலிருந்து நம்மை ஈர்த்தது நம் நினைவில் இருக்கிறதல்லவா? தீமையில் நாம் சிக்கிக் கொள்வதைப்போல்காணப்படும் போதெல்லாம் அவர் அவ்விதம் செய்வார்.

நம்மோடு சிறந்த முறையில் செயல் தொடர்பு கொள்ளக்கூடிய இடத்துக்கு நம்மைப் பிரித்துச் செல்வதாக ஆண்டவர் வாக்களிக்கிறார். இது பரதீசைப்போல் இருக்காது. ஆனால் வனாந்தரமான இடமாயிருக்கும். ஏனெனில் அங்கேதான் கடவுள் மேலிருந்து நம் கவனத்தைத் திருப்ப எதுவும் இருக்காது. நாம் துன்பம் என்னும் வனாந்தரத்தில் இருக்கும்போது ஆண்டவரின் பிரசன்னமே எல்லாவற்றுக்கும் எல்லாமாக இருக்கும். அந்த நேரம் நம் நண்பரோடு நமக்குச் சொந்தமான திராட்சைச் செடிகள் அத்தி மரங்களுக்குக்கீழே அமர்ந்திருந்தபோது இருந்ததை விடப் பல மடங்கு அவரது தோழமையை மதிக்கிறவர்களாயிருப்போம்.

இவ்விதம் நயங்காட்டி தனியே அழைத்துக் கொண்டு போனபின் ஆண்டவர் நம்மை ஆற்றித்தேற்றுவதற்கு தகுந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். மூலமொழியில் அவர் நம்மனதிற்கேற்றவாறு பேசுகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு விளக்கப்பட்டிருக்கும் வாக்குறுதியை நம் அனுபவத்தில் கண்டறிந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். அன்பினால் கவரப்பட்டும் துன்பத்தினால் பிரிக்கப்பட்டும் உண்மையான ஆவியினால் தேற்றப்பட்டும் நாம்ஆண்டவரை அறிந்து மகிழ்ச்சிப் பெருக்கினால் பாடி ஆனந்தமடைவோமாக!

# 19. கடும் உழைப்புக்குரிய பாதரட்சைகள்

இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையின் கீழிருக்கும். உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும் (உபா.33:25).

பயணம் செய்பவர்களுக்குத் தேவையான இரண்டு நமக்குக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை பாதரட்சைகளும் பெலனும் ஆகும். பாதரட்சைகள் கரடுமுரடான இடங்களில் நடந்து செல்லவும் பயங்கரமான எதிரிகளை மிதித்து வைக்கவும் இவை தேவை. நாம் வெறுங்காலோடு நடக்கவேண்டியதில்லை. இந்தப்பாதரட்சைகள் அரசபரம்பரையினருக்கு ஏற்றவையாக இரா. சாதரணமானவையாகவும் இரா. ஏனெனில் அவற்றின் அடிப்பாகம் இரும்பினாலும் வெண்கலத்தினாலும் ஆனது. பிரயாணம் நீண்டதாயும் கடுமை வாய்ந்ததாயும் இருந்தாலும் அவை தேய்ந்து விடாமலிருக்கும். நாம்செல்லும் பாதைக்கும் செய்யும் போருக்கும் தேவையானளவு பாதுகாப்பு நமக்கு இருக்கும். ஆகையால் நாம் சர்ப்பத்தின் மேல் நடக்கவேண்டியிருந்தாலும் வேதாளத்தையே மிதிக்க வேண்டியிருந்தாலும் நமக்குத் தீங்கு நேரிட்டு விடுமோ என்னும் பயம் இல்லாமல் முன்னேறிச் செல்வோமாக!

பெலன் — நம் நாட்களுக்குத் தக்கதாய் நம் பெலனும் இருக்கும். அந்நாட்களின் நெருக்கடிக்கும் இடுக்கண்களுக்கும் ஏற்ற அளவும் இருக்கும். உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும் என்பது சுருக்கமாய் இருந்தாலும் பொருள் நிறைந்தது. இன்று ஒரு வேளைசோதனைகள் ஏற்படலாம். வேலை செய்ய அதிகமான ஆற்றல் தேவைப்படலாம். அவற்றிற்குத் தேவையான அளவு பெலனும் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கலாம். ஆசேருக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாக்குறுதி நமக்குக் கொடுக்கப்பட்டதாகும் என்று நம்புகிறவர்களுக்கெல்லாம் இது உரியதாகும்.இதை விசுவாசிக்கிறவர்களுக்கு ஏற்படும் தைரியம் நமக்கும் ஏற்படட்டும்.

# 20. அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்கள்

*தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி.9:28).*

இதுதான் நம் நம்பிக்கையாகும்.ஏற்கெனவே பலருடைய பாவங்களைச் சுமப்பதற்காக இவ்வுலகிற்கு வந்தவர் மறுபடியுமாக மனுமக்களிடையே வருவார். இது நாம் மகிழ்ச்சியுடன் எதிர் பார்க்கக் கூடிய நிகழ்ச்சியாகும். அதோடு இதைக்குறித்த சில சிறப்பியல்புகள் இது மிகவும் புகழ் வாய்ந்த நிகழ்ச்சி என்பதைக்காட்டுகின்றன.

அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்பாக நமது ஆண்டவர் பாவத்தையே இல்லாமற் போகப்பண்ணி விடுவார். தம் மக்களிடம் இருந்து அதை முற்றாக நீக்கி விட்டபடியாலும் அதற்கான தண்டனையை மெய்யாகவே ஏற்றுக்கொண்டு விட்ட படியாலும் அவர் இரண்டாவது முறையாகவரும்போது

*அதைக்குறித்து வேறே ஒன்றும் செய்ய வேண்டியதிருக்காது. பாவத்திற்காக எந்தப் பலியும் செலுத்த மாட்டார். ஏனெனில் அதற்குள் அதை முற்றிலும் ஒதுக்கி விட்டிருப்பார்.*

*பின்னர் நம் ஆண்டவர் தம் மக்களின் இரட்சிப்பை நிறைவேற்றுவார். அவர்கள் இறுதியாகவும்பூரணமாகவும் இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள். அந்த இரட்சிப்பின் நிறைவை முழுவதுமாக அனுபவிப்பார்கள். நமது பாவங்களைச் சுமந்து தீர்க்க அவர் வரப்போவதில்லை. அவருடைய கீழ்ப்படிதலின் பயனைக் கொண்டுவர வருவார். நாம் பாவிகள் என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை நீக்கவரமாட்டார். நம் இரட்சிப்பைப் பூரணப்படுத்த வருவார்.*

*இவ்விதமாக அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு மட்டும் அவர் காட்சியளிப்பார். அகந்தையினாலும் பாவத்தினாலும் குருடரானவர்கள் அவர் இம்முறை வரும்போது அவரைப் பார்க்கக் கூடாதவர்களாயிருப்பார்கள்.அவர்களுக்கு அவர் பயங்கரமான நியாயாதிபதியாகவே இருப்பார். நாம் முதலாவது அவரை நன்கு ஆராயவேண்டும். பின் அவரை எதிர் நோக்கியவர்களாய் இருக்க வேண்டும். அவரை ஆராய்வதும் எதிர்நோக்குவதுமே வாழ்வளிக்கும்.*

# 21. நட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள்

*ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும் அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானி.12:3).*

இது என்னை விழிப்படையச் செய்யக்கூடிய வசனம். இவ்விதமான வாழ்க்கை ஆர்வத்துடன் விரும்பக்கூடிய ஒன்றாகும். ஞானவானாயிருப்பதே சிறப்பு வாய்ந்தது. அதோடு இங்கு குறிப்பிடப்படும் ஞானம் ஆண்டவர் ஒருவரே அளிக்கக்கூடிய தெய்வீக ஞானமாகும். என்னையும்என் தேவனையும் என் இரட்சகரையும் அறிந்து கொள்வது எவ்வளவு நலமானதாகும். பரலோக உண்மையை நான் செயலில் காட்டுபவனாகவும் அந்த ஒளியில் வாழ்பவனாகவும் இருக்கத் தக்கதாக கடவுள் எனக்குக் கற்பிப்பாராக! என் வாழ்க்கை ஞனம் நிறைந்ததாய் இருக்கிறதா? நான்தேடவேண்டியவைசகளைத் தேடுகிறேனா? மரணமடையப் போகும் நேரத்தில் என் வாழ்க்கையைக் குறித்துத் திருப்தி உள்ளவனாய் இருக்கத் தக்கதாக நான் வாழ்கிறேனா? அப்படிப்பட்ட வாழ்க்கையே ஆகாய மண்டலத்தின் ஒளியை எனக்குத் தேடித் தருவதாகும்.

ஆத்துமங்களை ஆண்டவருக்கென்று ஆதாயப்படுத்துவராயிருப்பது மகிமையான பேறாகும்.

ஒரு ஆத்துமாவை நீதியின் பாதையில் நடத்த வேண்டுமென்றாலும் நான் ஞானமுள்ளவனாய் இருக்க வேண்டும். பலரை அவ்விதம் நடத்த வேண்டுமென்றால் மிகுதியான ஞானம் தேவை. பலரை மனம்மாறச் செய்வதற்கான கடவுளையும் மக்களையும் வேதவசனங்களையும் பற்றிய அறிவு எனக்கிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! இந்த வேலைக்கென்றே என்னை ஒப்புவிப்பேன். இதைச் செய்து முடிக்கும் வரை இளைப்பாறமாட்டேன். விளையாட்டுப் போட்டிகளில் பலவெற்றிகளையும் விருதுச்சின்னங்களையும் பெறுவதை விட இது சிறந்தது. இது என்னை ஒரு நட்சத்திரமாக மட்டுமல்ல, பிரகாசிக்கும் நட்சத்திரமாகவும் நித்தியமாகப் பிரகாசிக்கும் நட்சத்திரமாகவும் ஆக்கும். அது மட்டுமல்லாமல் பல

*நட்சத்திரங்களைப்போலப் பிரகாசிக்கச் செய்யும். என் ஆத்துமாவேவிழித்தெழு! ஆண்டவரே என்னை உயிர்ப்பியும்!*

# *22. நிலையான வாக்குறுதி*

*நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னைஎனக்கு நியமித்துக் கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய் (ஓசி.2:19-20).*

*ஆண்டவரால் விவாகத்துக்கென்று நியமிக்கப்பட்டிருத்தல்எவ்வளவு மகிழ்ச்சியும் மேன்மையுமானது! என் ஆத்துமாவே ஆண்டவர் காட்டின கருணையினால் இயேசு உண்மையாகவே உன்னுடையவரா? இது நித்திய விவாகத்துக்கென்று என்பதை அறிந்து கொள். அவர் ஒருநாளும் இந்தப் பிணைப்பை முறிக்கவும் மாட்டார். விவாகத்தினால் தன்னோடு இணைக்கப்பட்டஆத்துமாவை விவாகரத்து செய்யவும் மாட்டார்.*

*உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன் என்று மூன்று முறை சொல்லுகிறார். இவ்விதம் நியமித்துக் கொள்வதை விளக்க என்னென்ன வார்த்தைகளை அடுக்கியிருக்கிறார் பாருங்கள். இது நீதியாய் செய்யப்படுவதால் இது சட்டத்தின்உடன்பாடு உடையது. யாரும் இதைத் தடை செய்ய முடியாது. இது நியாயமாய் செய்யப்படுவதனால் இது முடிவானது. இது மாற்ற முடியாதது என்று தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இதில் எவரும் எந்தக் குற்றமும் காணமுடியாது. இது கிருபையால் நிறைவேற்றப்படுவதால் இது அன்பினால் ஏவப்பட்ட பிணைப்பாகும்.அன்பு இல்லாவிட்டால் அடிமைத்தனம் ஆனதும் ஆசீர்வாதம் அற்றதும் ஆகும். உருக்கமான இரக்கமும் இதில் இடம் பெறுகிறது. இணைப்பில்*

கிருபை நிறைந்திருப்பதால் உருக்கமான இரக்கங்களும் நிறைவாய் இருக்கின்றன.

உண்மையாய்ச் செய்யப்படுவதால் இது பதிவுசெய்யப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரும் இதை ஏற்றுக் கொண்டு இந்த மகிமையான நிலைக்கேற்றபடி புனித அறிவு அளிப்பதாக வாக்களிக்கிறார். இது எவ்வளவு சிறந்த வாக்குறுதியாகும் என்று நினைத்துப் பாருங்கள்.

## 23. நினைவுபடுத்திக்கொள்ளவே மாட்டார்

அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை (எபி.10:17).

கிருபை நிறைந்த இந்த உடன்படிக்கையின்படி கடவுள் தம் மக்கள் பாவமே செய்யாதவர்கள் என்று கருதுகிறார். அவர்கள் பாவங்களையெல்லாம் உண்மையாகவே மறந்து விடுகிறார். எல்லா விதமான பாவங்களும் செய்யப் படாதவை போலும் தம் நினைவிலிருந்து அகற்றப்பட்டுவிட்டவை போலும் கருதுகிறார். இது கிருபையினால் ஏற்பட்ட அற்புதமாகும். இங்கு ஒருவிதத்தில் கடவுள் தமக்கு முற்றிலும் பொருத்தமற்றதைச் செய்வதாகச் சொல்கிறார். அவர் இரக்கத்தினால் எல்லா அற்புதங்களையும் விட மேலான அற்புதத்தைச் செய்கிறார்.

இயேசு தம்மையேஒரே பலியாக ஒப்புக்கொடுத்ததனால் உடன்படிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகையால் கடவுள் நம் பாவங்களைப் பொருட்படுத்தாமல் இழந்துவிடுகிறார். நம் பாவங்களினால் நமக்கு விரோதமாக கோபங்கொள்ள அவரைத் தூண்டி விட்டுவிடுவோமா என்று அச்சங்கொள்ளாமல் நாம் அவரில்மகிழலாம். அவர் நம்மைப் பிள்ளைகளாகக் கருதுகிறார். நீதிமான்களாக ஏற்றுக் கொள்கிறார். நாம் முற்றிலும் பரிசுத்தமானவர்களாக இருப்பது போல் நம்மைக் குறித்து மகிழ்ச்சி

அடைகிறார். பொறுப்புள்ள இடங்களில் நம்மை அமர்த்துகிறார். அவர் புகழை நாம் காத்துக் கொள்வோம்என்று நம்புகிறார். நம்மை அவர் சம்பத்தின் காப்பாளராகவும் நற்செய்தியை அறிவிப்பவர்களாகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். நாம் தகுதி உள்ளவர்கள் என்று கருதி ஊழியத்தையும் கொடுக்கிறார். நம் பாவங்களை நினைப்பதில்லை என்பதற்கு இது சிறந்த அத்தாட்சியாகும். ஒரு பகைவனைநாம் மன்னித்து விட்டாலும் அவனை நம்புவதற்குத் தயங்குகிறோம். அவ்விதம் நம்புவது விவேகமானதல்ல என்று நினைக்கிறோம். ஆனால் ஆண்டவர் நம் பாவங்களை மறந்து நாம் பாவமே செய்யாதவர்கள் போல் நம்மை நம்புகிறார். என் ஆத்துமாவே இது எவ்வளவு சிறந்த வாக்குறுதி என்றுநினைத்துப் பார். அதை நம்பி மகிழ்ச்சியாயிரு.

# 24. முற்றிலும் தூய்மை

ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் (வெளி 3:5).

சிலுவை வீரனே தொடர்ந்து போர் செய். நீ பூரண வெற்றி அடையும்வரை இளைப்பாறாதே. ஏனெனில் நீ பெறப்போகும் நித்திய பரிசு வாழ்க்கை முழுவதும் போரில் ஈடுபட்டிருப்பதற்கு ஏற்றதாய் இருக்கும்.

உனக்குப் பூரண தூய்மை வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறதை அறிந்துகொள். சர்தை சபையிலுள்ள சிலர் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாதிருந்தார்கள். அதன் பலனாக அவர்கள் வெண்வஸ்திரம் தரிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம் உன்னத அழைப்பின் பலன் பூரண தூய்மை ஆகும். அதை நீ இழந்துவிடாதிருப்பாயாக. உனக்கு மகிழ்ச்சி வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. திருமண விருந்துக்குச் செல்பவர்கள் அணியும் உடையை நீயும் அணிவாய். நீ உற்சாகமும் மகிழ்ச்சியும் அடைவாய். துன்பம் நிறைந்த போராட்டங்களின்

இறுதியில் மனச் சமாதானமும் ஆண்டவரில் மகிழ்ச்சியும்அடைவாய்.

உனக்கு வெற்றி வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. நீ வெற்றி அடைவாய். பரிசாக வெற்றிவாகையும் பொன்முடியும் சூடி வெண்வஸ்திரம் தரித்திருப்பாய். வெற்றியடைந்த வீரனாகக் கருதப்படுவாய். ஆண்டவரே என்னை அப்படிப்பட்டவனாக ஏற்றுக்கொள்வார்.

உனக்கு ஆசாரியரின் உடை வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. ஆரோனின் குமாரர் அணிந்த உடை அணிந்து ஆண்டவரின் முன் நின்று ஸ்தோத்திரப் பலி செலுத்தி துதிகளாகிய தூப வர்க்கத்தோடு நீ ஆண்டவரை நெருங்குவாய்.

தம்முடைய உண்மையான ஊழியக்காரராய் மிகஅற்பமானவர்களுக்கும் இவ்வித சிறப்புரிமை அளிக்கும் ஆண்டவருக்காக யார் தான் போர் புரிய மாட்டார்கள்? அவர் மகிமையான உடைகளை அளிப்பார் என்று அறிந்த பின்னும் யார் தான் அவருக்காக அறிவிலியின் உடைகளை அணியத் தயங்குவார்கள்?

# 25. நம்மை அச்சுறுத்தக் கூடியது ஒன்றுமில்லை

நீயோவென்றால் முடிவு வருமட்டும் போயிரு. நீ இளைப்பாறிக் கொண்டிருந்து நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான் (தானி.12:13).

தீர்க்கரின் எல்லா உரைகளையும் நாம் விளங்கிக் கொள்வதில்லை. ஆயினும் அவை மகிழ்ச்சி அளிப்பவை என்று கருதுகிறோமே அல்லாமல் அவற்றைக் குறித்து கலக்கம் அடைவதில்லை. பிதாவின் ஆணையில் யாதொன்றும் அவர்

பிள்ளையைக் கலக்கமடையச் செய்யக்கூடியதாய் இருக்க முடியாது.பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்பட்டாலும் உண்மையான விசுவாசி கறைப்படுத்தப்படாமல் இருப்பான். சுத்திகரிக்கப்பட்டு வெண்மையாக்கப்பட்டு புடமிடப்பட்டவராயிருப்பான். பூமி எரிந்து போனாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மேல் அக்கினியின் வாசனை இராது. பூமியும்அதில் உள்ளவைகளும் அளிக்கப்படும்போது யேகோவா தமக்கு உரியவர்களைக் காப்பாற்றி விடுவிப்பார்.

நாம் பாதையை விட்டு விலகுகிறவர்களாயாவது பாதையில் அலைந்து திர்ந்து பொழுது போக்குகிறவர்களாயாவது இராமல் கடமையைச் செய்வதில் கண்ணும் கருத்தும் உள்ளவர்களாய்போராடுவதில் துணிவு மிக்கவர்களாய் துன்பத்தில் பொறுமை உள்ளவர்களாய் இருப்போமாக! முடிவு எப்படியும் வரும். அது வரை நாம் சரியான பாதையில் செல்வோமாக!

நமக்கு இளைப்பாறுதல் எப்படியும் கிடைக்கும். மற்றவையெல்லாம் ஊசலாடுபவையாக இருந்தாலும் நம் அஸ்திவாரம்உறுதியாய் நிலைத்திருக்கிறது. கடவுள் அவர் அன்பில் நிலைத்திருக்கிறார். ஆகையால் நாம் அதில் நிலைத்திருக்கிறோம். நம் சமாதானம் இப்போதும் எப்போதும் ஆறு போலிருக்கும். பரம கானானில் எப்படியும் நமக்கு ஓர் இடம் உண்டு. தானியேலைப் போல் உண்மையாகவும்தூய்மையாகவும் இருக்கத் தைரியம் காட்டுபவர்களுக்குத் தானியேலின் கடவுள் தகுந்த மதிப்பு அளிப்பார். எந்தச் சிங்கக்கூட்டமும் நமக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளைத் தடை செய்ய முடியாது.

# 26. பெயர் மாற்றம்

அக்காலத்தில் நீ என்னை இனி பகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார். பாகால்களுடைய நாமங்களை அவள் வாயிலிருந்து அற்றுப்போகப்

பண்ணுவேன். இனிஅவைகளின் பேரைச் சொல்லி, அவைகளை நினைக்கிற நினைப்பும் இல்லாமற்போகும் (ஓசி.2:16-17).

இந்த நாள் வந்து விட்டது. நம் கடவுள் கொடுங்கோலனும் வலிமை வாய்ந்த தலைவனுமான பாகால் என்றுநாம் நினைப்பதில்லை. ஏனெனில் நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். நம் கடவுளாகிய யெகோவா நம் ஈஷி அதாவது நம் அன்பான கணவர், அன்பு நிறைந்த ஆண்டவர் தூயபிணைப்பில் நமக்கு நெருங்கிய உறவினர் என்றுகருதுகிறோம். நம் பக்தி குறைவுபடாமலிருக்கிறது. ஆனால் அன்போ அதிகமாயிருக்கிறது. நாம் கீழ்ப்படிவதில் குறைவுபட்டவர்களாய் அவருக்கு ஊழியம் செய்வதில்லை. ஆனால் பேரன்பு உள்ளவர்களாய் மேலான நோக்கத்துடன் அவருக்கு ஊழியம் செய்கிறோம். அவர் அடிக்கு அஞ்சிநடுங்குவதில்லை. ஆனால் அவர் அன்பில் மகிழ்ச்சி உள்ளவர்களாய் இருக்கிறோம். அடிமையாய் இருந்த நாம் பிள்ளையாக மாறுகின்றோம். நம் வேலைப்பளு மகிழ்ச்சியுடன் செய்யப்படும் ஊழியம் ஆகிறது.

அன்பான வாசகரே நீர் இவ்வித நிலையில் இருக்கிறீரா? கிருபை அடிமைக்குஇருந்த பயத்தை நீக்கி மகனுக்குரிய அன்பை நிலை நாட்டியிருக்கிறதா? இவ்வித அனுபவத்தில் நாம் எவ்வளவு மகிழ்ச்சி உள்ளவர்களாய் இருக்கிறோம்! இப்பொழுது கர்த்தருடைய பரிசுத்த நாளை மனமகிழ்ச்சியின் நாள் என்கிறோம். அவரை ஆராதிப்பதில் ஒரு போதும் சோர்வுஅடைவதில்லை. அவரை நோக்கி விண்ணப்பம் செய்தலை பெரிய சிலாக்கியமாகக் கருதுகிறோம். அவரைத் துதிக்கும் போது இன்பம் அடைகிறோம். அவருக்குக் கீழ்ப்படிவது பெரும் பேறு என்று எண்ணுகிறோம். அவர் சேவைக்கென்று பொருள் உதவி செய்யும் போது விருந்து உண்பதைப் போன்றமகிழ்ச்சி அடைகிறோம். இவ்விதமாக யாவும் புதிதாகின்றன. நம் வாய்ப்பாட்டினாலும் இதயம் சங்கீதத்தினாலும்

நிறைந்திருக்கின்றது. பரலோகத்திலுள்ள நம் ஈஷி என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படுவாராக!

# 27. வெறும் வார்த்தைகளை விட மேலானவை

தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்குக் கட்டளையிடுவேன் (அப்.13:34).

மனிதனைக் குறித்த எவையும் நிச்சயமானவையல்ல.ஆனால் கடவுளைக் குறித்த எல்லாம் நிச்சயமானவை. சிறப்பாக உடன்படிக்கையில் வாக்குப்பண்ணப்பட்ட கிருபைகள் நிச்சயமானவை. ஏனெனில் தாவீதே நித்திய உடன்படிக்கையை உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று சொல்லுகிறார்.

கடவுள் நம் கிருபையைக் குறித்தே இவ்விதம்கூறியிருக்கிறார் என்று நிச்சயமாய் நாம் நம்பலாம். அவர் வெறும் சொற்களைப் பேசவில்லை. அவர் வாக்குறுதி ஒவ்வொன்றும் உண்மையானது. சாரம் நிறைந்தது. அவர் கிருபைகள் உண்மையான கிருபைகள். மரணம் ஏற்பட்டு விட்டால் வாக்குறுதி நிறைவேறாமற் போய்விடுமோ என்று நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் நமது நல்ல ஆண்டவர் எப்படியும் அதை நிறைவேறச் செய்வார். தாம் யாரோடெல்லாம் உடன்படிக்கை செய்துள்ளாரோ அவர்களுக்கெல்லாம் கிருபை நிறைந்த வாக்குறுதியை அளிப்பார். ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்படுவர்களுக்கெல்லாம் சமயம் வரும் போது அவைநிறைவேறும். சிறுவரிலிருந்து பெரியவர்வரை அவை நிச்சயமாய் அருளப்படும்.

தம் சொந்த மக்களுக்கு தம் கிருபைகளைத் தொடர்ந்து அளித்து வருவார் என்பது நிச்சயம். அவர் கொடுத்து விட்டுத் திரும்ப எடுத்துக்கொள்ளமாட்டார். அவர் இப்போது

கொடுப்பவை இனி அதிகம்கொடுப்பதற்கான அடையாளமாகும். இனிமேல் நாம் அடையப்போகிறவை இப்போது பெற்றுள்ளவையைப்போல் நிச்சயமானவை. ஆகையால் நாம் ஆண்டவர் சமூகத்தில் அமைதியாய்க் காத்திருப்போமாக! நாம் சந்தேகப்படுவதற்குக் காரணமேயில்லை. கடவுளின் அன்பும் வாக்குகளும் நேர்மையும்நிச்சயமுமானவை. பலவற்றைக் குறித்து நாம் சந்தேகம் கொள்ளலாம். ஆனால் கடவுளைக் குறித்து நாம் அவர் தயை என்றைக்கும் தாசரோடு நிலைக்கும் என்று பாடுகிறோமே!

## 28. அடங்கியிரு, உயர்த்தப்படு

ஆகையால் ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1.பேது.5:6).

இது ஒரு வாக்குறுதிக்குஒப்பானது. நாம் அடங்கியிருந்தால் ஆண்டவர் நம்மை உயர்த்துவார். இப்பொழுது தாழ்மையாயிருத்தல் பின் நன் மதிப்பு பெறச் செய்கிறது. உயர்த்தப்படுவதற்கு வழி பணிவான நடத்தையாகும். நம்மை அடக்கி வைத்திருக்கும் அதே ஆண்டவரின் கை அவர் ஆசீர்வாதங்களைப் பெற நாம்ஆயத்தமாயிருக்கும் போது நம்மைத் தூக்கிவிடக் காத்திருக்கிறது. இறுதியில் வெற்றி பெறுவதற்காக இப்பொழுது நாம் பணிந்து செல்கிறோம். பலர் மனிதர் முன் கூனிக்குறுகி நடக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் அவர்கள் கெஞ்சிக் கேட்கும் ஆதரவைப் பெறத் தவறுகிறார்கள். ஆனால்கடவுளின் கையின் கீழ் அடங்கியிருப்பவன் எப்பொழுதும் கிருபை பொருந்தினவராய் இருக்கும் அவரால் மதிப்படையவும் உயர்த்தப்படவும் ஊக்குவிக்கப்படவும் ஆறுதலடையவும் தவறுவதில்லை. பெருமையானவர்களை ஒதுக்கித் தள்ளுவதும்

தாழ்மையானவர்களை உயர்த்துவதும் யேகோவாவின் பழக்கமாகும்.

ஆயினும் ஆண்டவர் கிரியை செய்வதற்கு குறித்த காலம் என்று ஒன்று உண்டு. இப்போதே இந்தவினாடியே நாம் தாழ்மையுள்ளவர்கள் ஆகவேண்டும். நாம் துயருற்றாலும் இல்லை என்றாலும் தாழ்மையுள்ளவர்களாகவே இருக்க வேண்டும். ஆண்டவர் சிட்சிக்கும் போது அந்த சிட்சையை மிகுந்தபணிவுடன் ஏற்றுக்கொள்வது நம் கடமையாகும். அவர் ஏற்ற காலத்திலே நம்மை உயர்த்துவார். அந்த நாளும் நேரமும் எதுவெனக் குறிக்கச் சிறந்தவர் கடவுளே. நாம் பொறுமையற்று ஆசீர்வாதத்துக்காக வேண்டிக் கொள்கிறோமா ? உரிய காலத்துக்கு முன்பதாகவே மேன்மையடைய வேண்டுமென்றுவிரும்புகிறோமா? அப்படியானால் நாம் இன்னமும் தாழ்மையுள்ளவர்கள் ஆகவில்லை. நாம் பணிவாகக் காத்திருக்க வேண்டும். அவ்விதம் இருப்போமாக !

## 29. நம் பகைவரை அவர் நிலைகுலையச் செய்கிறார்

*கர்த்தர்•••••••..உன் சத்துருக்களை விலக்கினார் (செப்.3:15).*

அது எவ்விதமான நிலை குலைவு! சாத்தான் பரலோகத்தில் தன் இடத்தைஇழந்ததைப்போல் நம் உள்ளத்தில் வீற்றிருந்து நம் உள்ளாற்றல் மேல் ஆளுகை செய்ததையும் இழந்து விடுகிறான். நம்மை ஆட்சி செய்ய நம் பகைவனுக்கு இருந்த ஆற்றலை நம் ஆண்டவராகிய இயேசு அழித்து விடுகிறார். அவன் நமக்குத் தொல்லை கொடுக்கலாம். ஆனால் நாம்அவனுக்குரியவர்கள் என்று உரிமை கொண்டாட முடியாது. அவன் கட்டுக்கள் நம் ஆன்மாவிலிருந்து அகற்றப்பட்டுவிட்டன. குமாரன் நம்மை

விடுதலையாக்கி இருப்பதால் நாம் மெய்யாகவே விடுதலை அடைந்திருக்கிறோம்.

ஆயினும் பழைய எதிரி இன்னும் சகோதரர் மேல் குற்றம்சாட்டுகிறவனாய் இருக்கிறான். ஆனால் நம் ஆண்டவர் இந்நிலையிலிருந்தும் அவனை விரட்டி விட்டிருக்கிறார். நமக்காகப் பரிந்து பேசுகிறவர் நம் மேல் குற்றம் சாட்டுகிறவனின் வாயை அடைக்கிறார். சாத்தானின் திட்டுக்களால் எவ்விதத் தீமையும் ஏற்படாதவாறு ஆண்டவர் நம்பகைவரைக் கண்டித்து நம் ஆன்மாவுக்காக வேண்டிக்கொள்கிறார்.

சோதனைக்காரனான அசுத்த ஆவி இன்னும் நம்மைத் தாக்கி மெல்ல நம் எண்ணங்களுள் புகுந்து கொள்கிறான். அங்கிருந்தும் அவன் விரட்டப்படுகிறான். ஒரு சர்ப்பத்தைப்போல அவன் நெளிந்துகொண்டிருக்கிறான். ஆனால் அரசனைப்போல அவன் ஆட்சி செய்ய முடியாது. சமயம் வாய்க்கும் போது தேவதூஷணமான எண்ணங்களை வீசி எறிகிறான். ஆனால் அமைதியாயிருக்கும்படி அவன் அதட்டப்படும் போதும் அடிபட்ட நாயைப்போல அவன் வாலை மடக்கிக் கொண்டு போகும் போதும் துயர்தீர்க்கப்படுகிறது. ஆண்டவரே சாத்தானின் தொந்தரவுகளால் தளர்ச்சியும் சோர்வும் அடைந்திருப்பவர்களுக்கு அவனிடமிருந்து விடுதலை அளியும். பகைவனை விரட்டிவிட்டு அவர்களுக்கு மகிமையாய்க் காட்சியளியும். அவனைக் கீழே விழத்தள்ளினீர். அவனை அகற்றியும் விடும். இந்த உலகில்இருந்தே அவன் நீக்கப்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் !

# 30. பின்னால் சந்திப்பதாக வாக்குறுதி

நான் மறுபடியும் உங்களைக் காண்பேன். அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும் (யோ.16:22).

இரண்டாம் முறையாக ஆண்டவர் மறுபடியும் கண்டிப்பாக வருவார். அப்போதுஅவர் நம்மைப் பார்த்தும் நாம் அவரைப் பார்த்தும் அளவிட முடியாத மகிழ்ச்சி அடைவோம். அந்த நாள் எப்பொழுது வரும் ?

இன்னொரு விதத்தில் இந்த வாக்குறுதி ஒவ்வொரு நாளும் நிறைவேறி வருகிறது. கிருபை நிறைந்த ஆண்டவர் நம்மைக் குறித்து மறுபடியும் என்ற வார்த்தையைப்பல முறை உபயோகிக்கின்றார். அவர் ஏற்கனவே நமக்கு மன்னிப்பு அளித்தார். புதுப்பாவங்களினால் நாம் துக்கமடைந்திருக்கும்போது நம்மை மறுபடியும் பார்த்து பாவங்களிலிருந்து விடுதலை அளிக்கும் வார்த்தையைக் கூறுகிறார். நாம் கடவுளின் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதைவெளிப்படுத்தியிருக்கிறார். அந்த ஆசீர்வாதத்தின் மேல் நமக்குள்ள நம்பிக்கை சிறிது குறையும்போது அவர் மறுபடியும் வந்து உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக என்கிறார். நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

பிரியமானவர்களே இறந்த காலத்தில் நாம் பெற்ற கிருபைகள் எல்லாம்எதிர் காலத்தில் நாம் பெறப்போகும் கிருபைகளின் உறுதிச் சின்னமாகும். இயேசு இதுவரை நம்மோடு இருந்திருந்தால் மறுபடியும் நம்மைச் சந்திப்பார். முன்பு நாம் அடைந்த எந்தச் சலுகையும் அதோடு முடிந்து விட்டது. இனி ஒருபோதும் நாம் அதைப் பெறமாட்டோம் என்று நினைக்கவேண்டாம். ஆனால் அது ஊற்றப்பட்ட விதையைப் போன்றது. அது முளைத்து வளர்ந்து மறுபடியும் உங்களைக் காண்பேன் என்று சொல்லக் கூடியது என்று நம்புங்கள். இயேசு முன்பு நம்மோடு இருந்தது போல இப்போது இல்லாதபடியால் நாட்கள் இருண்டு காணப்படுகின்றனவா? தைரியங் கொள;ளுங்கள். அவர்அதிக காலம் தரித்திருக்க மாட்டார். அவர் பாதங்கள் கலைமான் அல்லது மான் குட்டியின் பாதங்கள் போன்றவை. அவை சீக்கிரத்தில் அவரை நம்மண்டை வரச்செய்யும் இப்போது

அவர் நம்மிடம் நான் மறுபடியும் உங்களைக் காண்பேன் என்று சொல்லுகிற படியால் நாம் சந்தோஷப்படத்தொடங்குவோமாக!

# 31. வேண்டுகோளும் விடுதலையும்

ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங்.50:15).

இது உண்மையாகவே ஒரு வாக்குறுதியாகும். இதோ உடனடியாக செய்யவேண்டிய இரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஆபத்துக்காலம். இந்நாளில் உச்சிவேளையே இருட்டாயிருக்கிறது. தொடர்ந்து வரும் ஒவ்வொரு மணிநேரமும் முந்தையை விட இருட்டாகிக் கொண்டேயிருக்கிறது.இது அப்படிப்பட்ட நாளுக்கேற்ற வாக்குறுதியாகும். மேகமூட்டமான நாளுக்கென்றே இது கொடுக்கப் பட்டதாகும்.

நமக்கு அருள் நிறைந்த ஆலோசனை கொடுக்கப்படுகிறது. ஆண்டவர் என்னை நோக்கிக் கூப்பிடு என்கிறார். நமக்கு அவ்விதம் சொல்லப்பட வேண்டியதில்லை. ஒவ்வொருநாளும் நாள் முழுவதும் அவ்விதம் நோக்கிக் கூப்பிடுவது நம் பழக்கமாயிருக்க வேண்டும். கடவுளை நோக்கிக் கூப்பிடும் சுதந்திரம் இருப்பது எவ்வளவு பெரிய கிருபையாகும்! அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்வது எவ்வளவு ஞானமாகும்! மனிதரிடம் ஓடுவது முட்டாள் தனமாகும்.நம் வழக்கை அவரிடம் கூறச்சொல்லி ஆண்டவர் அழைக்கிறார். அவ்விதம் செய்ய நாம் நிச்சயமாகத் தயங்க மாட்டோம்.

திரும்பவும் நம்பிக்கை ஊட்டத்தக்கதாக அவர் நான் உன்னை விடுவிப்பேன் என்று ஊக்குவிக்கிறார். நம் தொல்லை எதுவாயினும் விதிவிலக்கின்றிமுழுவதுமாக நிச்சயமாக மகிழ்ச்சி தரும் விதமாய் விடுதலை அளிப்பதாக ஆண்டவர்

வாக்களிக்கின்றார். அவரே நமக்கு விடுதலை அளிப்பார். நாம் அதை நம்புகிறோம். நம் நம்பிக்கையை அவர் மதிக்கிறார். இதன் இறுதியான பயனும் கூறப்பட்டிருக்கிறது. நீ என்னை மகிமைப்படுத்துவாய்என்கிறார். நிச்சயமாக நாம் அவரை நிறைவாக மகிமைப்படுத்துவோம். அவர் விடுதலை அளித்தவுடன் நாம் அவரைப் போற்றித் துதிப்போம். அவர் கண்டிப்பாக நமக்கு விடுதலை அளிப்பார். ஆகையால் இப்போதே அவரை மகிமைப்படுத்தத் தெடங்குவோமாக!

# 08 அகஸ்ட்


1. பிள்ளைகளோடும் உடன்படிக்கை
2. அவர் போதிப்பவைகளைப் பேசுங்கள்
3. பரிசுத்தமானவைகளை அனுபவிக்கும் உரிமை
4. அவர் ஆசீர்வதித்துக் காக்கிறார்
5. வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது
6. போய் உன் சொத்தைக் கைப்பற்றிடு
7. வாழ்வில் வளம் பெறுவதற்கான வழிகள்
8. நம்பக்கூடியவர் மேல் நம்பிக்கை
9. வெட்டிஎடுத்தலும் கனிதருதலும்
10. உயர்த்துவதற்காக அவர் தாழ்த்துகிறார்
11. அமர்ந்திரு ஓடிவிடாதே
12. இருளில் வெளிச்சம்
13. கூப்பிடுகிறதற்கு முன்னும் கூப்பிடும்போதும்
14. தண்டிக்கப்படுவோம் ஆனால் எந்நாளுமல்ல
15. பெயர்அளிக்கும் உத்தரவாதம்
16. பாவத்தை வெளிப்படுத்தி அறிக்கைசெய்
17. பெரும்பான்மையோர் யார் பக்கம்
18. தொடுகிறவர்களும் கண்டுபிடிக்கிறவர்களும்
19. நீதிமானுக்குப் பலன் உண்டு
20. வரையறைக்குட்படாத விடுதலை
21. அழுகை நிறைந்த இரவு, மகிழ்ச்சியான பகல்
22. கடவுளை மகிமைப்படுத்தும் கோபம்
23. அன்பு கூரு, ஞானத்தைத் தேடு
24. கடவுள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்
25. உணவும் இளைப்பாறுதலும்
26. நுட்பமான மனச்சாட்சி உடையவர்
27. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
28. எந்தச் சூழ்நிலையிலிருந்தும்

29. ஏராளமான உணவு
30. ஆறுதல், அபாயமின்மை, திருப்தி
31. புனிதமானது, நித்தியமானது, மாறாதது

# 1. பிள்ளைகளோடும் உடன்படிக்கை

உனக்கும் உனக்குப் பின்வரும் என் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும் உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே என்உடன்படிக்கையை ஸ்தாபிப்பேன் (ஆதி.17:7).

ஆண்டவரே என் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவில் உம் ஊழியக்காரனான என்னோடு ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறீர். அதன் நிபந்தனைகள் இப்போது என்பிள்ளைகளுக்கும் பொருந்தத் தக்கவையாய் இருக்கச் செய்யுமாறு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். மேலே கொடுக்கப்பட்ட வாக்குறுதியை ஆபிரகாமுக்கு அளித்தது போல எனக்கும் அளித்திருக்கிறீர் என்று நம்பச்செய்யும். மற்ற மக்களின் பிள்ளைகள் போல் என் பிள்ளைகளும்துர்க்குணத்தில் உருவாகி பாவத்தில் கர்ப்பந்தரித்தருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பிறப்பைச் சார்ந்ததாக நான் எதையும் வேண்டிக்கொள்ளவில்லை. ஏனெனில் மாம்சத்தால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆண்டவரே உம்முடைய பரிசுத்த ஆவியினால் அவர்களை உம் கிருபையின்உடன்படிக்கையின் கீழ்ப் பிறக்கச் செய்யும்.

தலைமுறை தலைமுறையாக என் மரபில் பிறப்பவர்களுக்காகவெல்லாம் நான் வேண்டிக்கொள்கிறேன். நீர் என் கடவுளாயிருப்பது போல் அவர்களின் கடவுளாயும் இரும். உமக்கு ஊழியம் செய்ய என்னை அனுமதித்திருப்பதே எனக்குக்கிடைத்த பெரும் வாய்ப்பாகும். வரும் ஆண்டுகளில் என் மரபினர் உமக்கு ஊழியம் செய்வார்களாக! ஆபிரகாமின் கடவுளே ஈசாக்கின் கடவுளாயும் இரும். அந்நாளின் கடவுளே அந்நாளின் சாமுவேலை ஏற்றுக் கொள்ளும்.

ஆண்டவர் என் குடும்பத்தினருக்கு ஆதரவு காட்டியிருக்கிறீர்.உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெறாத

நிலையிலிருக்கும் மற்றக் குடும்பத்தினருக்காக உம்மைவேண்டிக் கொள்ளுகிறேன். இஸ்ரவேலின் எல்லாக் குடும்பங்களுக்கும் கடவுளாயிரும். உமக்குப் பயப்படுகிறவர்கள் கடவுள் பயமில்லாத துன்மார்க்கமான குடும்பத்தினரால் சோதனைக்கு ஆளாகாமல்இருப்பார்களாக. இயேசு கிறிஸ்துவின் மூலம் இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும்.

## 2. அவர் போதிப்பவைகளைப் பேசுங்கள்

ஆதலால் நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் (யாத்.4:12).

ஆண்டவரின் ஊழியக்காரரில் பலர் பேச்சாற்றல் அற்றவர்களாய் இருக்கிறார்கள். அந்நிலையில் ஆண்டவரை ஆதரித்துப் பேசவேண்டிய வாய்ப்புக்கிட்டினால் சந்தர்ப்பத்தைத் தங்கள் சாமர்த்தியம் இன்மையால் இழந்துவிட நேரிடுமோ என்னும் குழப்பத்தில் வீழ்ந்து தவிக்கிறார்கள்.அப்படிப்பட்ட சூழ்நிலையில் பேச்சாற்றல் அற்ற நாவை உண்டாக்கினவரே ஆண்டவர் என்றும் நம்மைப் படைத்தவரை நாம் குறைசொல்லக் கூடாதென்றும் நினைவுபுடுத்திக் கொள்ளவேண்டும். ஒருவேளை விரைவாகப் பேசுவதைக் காட்டிலும் விரைவாகப் பேசுவதே தீமை விளைவிப்பதாய் இருக்கலாம்.குறைவான சொற்களைப் பேசுவது அநேகமான சொற்களைப் பேசுவதைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொடுப்பதாய் இருக்கலாம். சொல்லணிக் கலையும் சொல்லாட்சித்திறமும் சொல்நயமும் நிறைந்த பேச்சில் உண்மையான ஆற்றல் இருப்பதில்லை என்பது நிச்சயம். பேச்சுத்திறம்இல்லாதது நாம் நினைப்பது போல் பெரிய குறைபாடல்ல.

நம் நாவிலும் மனதிலும் ஆண்டவரின் திறமிருந்தால் சத்தமிடுகிற வெண்கலத்தையும் ஓசையிடுகிற கைத்தாளத்தையும் விட சிறப்பான ஆற்றல் வாய்ந்தவர்களாய் இருப்போம்.

ஆண்டவரின் போதனையே ஞானமாகும் அவர்பிரசன்னம் ஆற்றலாகும். பேச்சு வலிமை உள்ளவர்களாய் எகிப்தில் இருந்தவர்களை விட திக்குவாயரான மோசேக்கு பார்வோன் பயப்படவேண்டியதாயிற்று. ஏனெனில் அவர் சொன்னவை ஆற்றல் வாய்ந்தவையாய் இருந்தன. மோசே வாதைகளையும் மரணத்தையும் அறிவிக்கிறவராய் இருந்தார்.இயற்கையாக நமக்கு இருக்கும் பலவீனத்தில் ஆண்டவர் நம்மோடு இருந்தால் வியக்கத்தக்க ஆற்றலும் வலிமையும் உள்ளவர்கள் ஆவோம். ஆகையால் நாம் பேசத்தக்க விதமாய் தைரியமாக இயேசுவுக்காகப் பேசுவோமாக!

## 3. பரிசுத்தமானவைகளை அனுபவிக்கும் உரிமை

ஆசாரியானால் பணத்துக்குக் கொள்ளப்பட்டவனும் அவன் வீட்டிலே பிறந்தவனும் அவனுடைய ஆகாரத்தில் புசிக்கலாம் (லேவி.22:11).

பரிசுத்தமானவைகளை அந்நியனும்வீட்டைச் சேர்ந்தவனாயிராமல் வீட்டில் தங்கியிருக்கிறவனும் கூலி வேலை செய்கிறவனும் புசிக்கக் கூடாது. ஆத்துமப் பிரகாரமானவற்றிற்கும் இவ்விதி இன்றும் பொருந்துவதாகும். ஆனால் இரண்டு பிரிவினருக்கு பரிசுத்தமானவைகளைப் புசிக்கும் உரிமை உண்டு. அவர்கள் ஆசாரியனால்பணத்துக்குக் கொள்ளப்பட்டவனும் அவன் வீட்டிலே பிறந்தவனும் ஆகும். கொள்ளப்பட்டவனுக்கும் வீட்டிலே பிறந்தவனுக்கும் பரிசுத்தமானவைகளைப் புசிக்க உள்ள உரிமை மறுக்க முடியாததாகும்.

கொள்ளப்பட்டவர்கள் தம்மேல் நம்பிக்கை உள்ளவர்களையெல்லாம் நம் உத்தம பிரதானஆசாரியார் விலைக்கு வாங்கிவிட்டார். அவர்கள் முழுவதும் அவருக்கே

உரியவர்கள் அவர்களில் இருக்கும் எந்தது; தன்மைகளுக்காகவும் அல்லாமல் அவர்களைக் கொண்டவருக்காகவே அவர் அனுபவிக்கும் எல்லாவற்றையும் அனுபவிக்கும் உரிமை பெறுகிறார்கள். ஆகவே அவர்களும் அவருடைய ஆகாரத்தில்புசிக்கலாம். உலகியல் சார்ந்த வாழ்க்கையை விரும்புகிறவர்கள் அறியாத ஆகாரம் அவரிடம் இருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாக இருக்கின்றபடியினாலே உங்கள் ஆண்டவரோடு எல்லாவற்றையும் அனுபவிப்பீர்கள்.

பிறந்தவர்கள் தனிச்சலுகை பெறுவதற்கு இதுவும்; நிச்சயமானஒரு வழியாகும். ஆசாரியனுடைய குடும்பத்தில் பிறந்தால் குடம்பத்தில் உள்ள மற்றவர்களைப்போல உரிமைகளையயும் அடைகிறோம். மறுபிறப்பு நம்மை உடன் சுதந்தரராயும் ஒரே விதமான சரீரம் உள்ளவர்களாயும் ஆக்குகிறது. ஆகையால் பிதா கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ள சமாதானம்சந்தோஷம் மகிமை யாவையும் கிறிஸ்து நமக்கு அளித்துள்ளார். இயேசுவில் கிடைக்கும் மீட்பும் மறுபிறப்பும் இந்த வாக்குறுதி நமக்கு இரட்டிப்பு உரிமை அளிக்கின்றன.

## 4. அவர் ஆசீர்வதித்துக் காக்கிறார்

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காக்கக்கடவர் (எண்.6:24).

பிரதான ஆசாரியரின்ஆசீர்வாதத்தின் முதற்பாகம் மொத்தத்தில் ஒரு வாக்குறுதியாகும். நம் பிரதான ஆசாரியர் நமக்குக் கொடுக்கும் ஆசீர்வாதம் உண்மையாகவே நிறைவேறும், ஏனெனில் அவர் கடவுள் நினைப்பதைக் கூறுகிறார்.

பரம ஆசீர்வாதத்தைப் பெறுவது எவ்வளவு மகிழ்ச்சியாகும் என்றுநினைத்துப் பாருங்கள்? இதனால் எல்லாம் கிருபை பெற்றவையாகும். நாம் ஆசீர்வதிக்கப்பட்டால் நம் உடமைகளும்

நம் அனுபவங்களும் ஆசீர்வதிக்கப்பட்டவையாய் இருக்கும். அது மட்டுமல்ல நம் நாட்டங்களும் கஸ்டங்களும் ஏமாற்றங்களும் கூட ஆசீர்வதிக்கப்பட்டவையாய் இருக்கும்.கடவுளுடைய ஆசீர்வாதம் மதிப்பிட்டுரைக்க முடியாத அளவு ஆழமானது, மெய்யானது. மனிதனுடைய ஆசீர்வாதம் வெறும் வாய்ச்சொல்லாயிருக்கும். ஆனால் கடவுளுடைய ஆசீர்வாதம் மகிழ்வூட்டும் புனிதப்படுத்தும். நம் நண்பரில் சிறந்தவரை நீ செல்வச்செழிப்புப் பெற்று வாழ்வாயாக! என்றுவாழ்த்துவதைவிட கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக என்று வாழ்த்துவதே மேல்.

அதேபோல் கர்த்தர் நம்மைப் பேணிக் காப்பதும் மகிழ்வூட்டுவதாகும். அவர் நம்மைத் தம்மில் தம் அருகில் வைத்துப் பேணிக்காப்பது எவ்வளவு சிறப்பு வாய்ந்த நிலையாகும் என்று நினைத்துப்பாருங்கள். கடவுள் காக்கிறவர்கள் உண்மையாகவே காப்பாற்றப்பட்டவர்கள். அவர்கள் தீமையிலிருந்து காக்கப்படுவார்கள். அளவற்ற மகிழ்ச்சி அடைவதற்கென்று ஒதுக்கப்பட்டவர்களுமாயிருப்பார்கள். கடவுளின் ஆசீர்வாதம் இருந்தால் இப்போதிலிருந்து நித்திய காலமாகக் காணப்படுவோம்.இந்த நேரத்தில் இந்த வரிகளை வாசிக்கும் ஒவ்வொருவரும் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டுக் காக்கப்பட வேண்டுமென்று இச்சிறு நூலை எழுதியவர் விரும்புகிறார். தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குறுதியை அவர் ஊழியக்காரருக்காக நீங்கள் விண்ணப்பமாக ஏறெடுங்கள்.

## 5. வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது

*அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது. நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை (சங்.37:31).*

வேதத்தில் கூறப்பட்டிருப்பவைகளை மனதில் வைத்திருக்கும் மனிதனின் நடைகள் சரியானவையாய் இருக்கும்.

வேதம் இருதயத்தில் தான் இருக்கவேண்டும். ஏனெனில் கற்பனைகள் அடங்கிய கற்பலகைகள் உடன்படிக்கைப் பெட்டியில் இருந்தது போல் வேதத்திற்கென்று குறிக்கப்பட்ட இடம்இருதயம்தான். வேதத்தைக் குறித்து நினைத்துப் பார்த்தால் குழப்பமாயிருக்கும். அதைச் சுமப்பது கடினமாய்த் தெரியும். ஆனால் அது இருதயத்தில் இருந்தால் ஆதரவளிக்கும்.

அவனுடைய தேவன் அருளிய வேதம் என்று சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். தேவன்நம்முடைய கடவுள் என்று நாம் அறிந்தால் அவர் வேதம் நம் தனி உரிமை ஆகிறது. கடவுள் நம்மோடு செய்த உடன்படிக்கை அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவும் அவர் சித்தத்திற்குக் கீழ்ப்படியவும் நம்மை ஆவல் உள்ளவர்கள் ஆக்குகிறது. எந்தக் கட்டளையும் என் பிதாவினுடையகட்டளையானால் அதைக் கைக்கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

கீழு;ப்படிதலிலுள்ள மனிதன் அவன் நடைகளில் தாங்கிப் பிடிக்கப்படுவான் என்று நமக்கு உறுதி கூறப்பட்டுள்ளது. அவன் சரியானவைகளையே செய்வதால் விவேகமானவைகளைச் செய்வான். தூயசெயல்கள்எப்போதும் அறிவு நுட்பம் வாய்ந்தவையாய் இருக்கும். ஒருவேளை அவற்றைச் செய்யும்போது அப்படிப்பட்டவையாய்த் தோன்றாமல் இருக்கலாம். கடவுளின் வேதம் கூறுகிற பாதையில் நாம் நடந்தால் கடவுளின் அருளும் கிருபையும் நிறைந்த நெடுஞ்சாலையில் நடக்கிறவர்களாய் இருப்போம்.இந்நாள்வரை கடவுளின் வார்த்தை யாரையும் தவறான பாதையில் நடத்தியதில்லை. நம் ஆடைகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளக் கொடுக்கப்பட்டுள்ள தூய வழிகளைப் போல் தாழ்மையுள்ளவர்களாயும் நீதியுள்ளவர்களாயும் அன்புள்ளவர்களாயும் கடவுள் பயமுள்ளவர்களாயும் நடக்கச்சொல்லிக்கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் நம்

பாதையை வளமாக்கக் கூடியவை. நீதியான பாதையில் நடப்பவர்கள் உறுதியாய் நடப்பவர்கள் ஆவார்கள்.

# 6. போய் உன் சொத்தைக் கைப்பற்றிடு

இதோ உன் தேவனாகிய கர்த்தர் அந்தத் தேசத்தை உனக்கு முன்பாக வைத்திருக்கிறார். உன்பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே நீ போய் அதைச் சுதந்தரித்துக் கொள். பயப்படாமலும் கலங்காமலும் இரு (உபா.1:21).

கிருபையின் மரபுரிமையாக நாம் பெறவேண்டியது ஒன்றுஇருக்கிறது. அதை நம் உரிமையாக்கிக் கொள்ள நாம் துணிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும். விசுவாசி ஒருவர் அடைந்தவையெல்லாம் மறறொருவர் இலவசமாய் அடையக் கூடியவையாய் இருக்கின்றன. நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருக்கலாம். அன்பில் ஊக்கமாய் இருக்கலாம் அதிகமாய்ப்பிரயாசப்பட்டிருக்கலாம். இவற்றிற்குத் தடையாக ஒன்றும் இருப்பதில்லை. நம் சகோதரரில் ஒருவர் அடைந்த அரிய அனுபவமும் சிறப்பு வாய்ந்த கிருபையும் நமக்கு உரியதாய் இருக்கிறது. யேகோவா அவற்றை நம் முன் வைத்திருக்கிறார். நம் உரிமையை யாரும் மறுக்க முடியாது. நாம் போய்அவர் நாமத்தில் அவற்றைச் சுதந்தரித்துக் கொள்வோமாக!

உலகமும் இயேசுவுக்கென்று சுதந்தரிக்கப்பட இருக்கிறது. எந்த நாட்டையாவது நாட்டின் கோடியைக்கூடவாவது நாம் சுதந்தரிக்காமல் விடக்கூடாது. நம் வீட்டின் அருகிலுள்ள குடிசைப் பகுதி நம் முயற்சிகளில் திகைப்புஊட்டுவதற்கு அல்லாமல் பயன் அளிக்கவே அங்கு இருக்கிறது. நாம் முன்னேறுகிறவர்களில் தைரியம் உள்ளவர்களாய் இருந்தால் இருண்ட குடும்பங்களையும் கடினமான இருதயங்களையும் ஆண்டவருக்கென்று ஆதாயப்படுத்துகிறவர்களாய் இருப்போம். இயேசுவின் மேலும் போய் சுதந்தரித்துக் கொள் என்றுஅவர் கொடுத்துள்ள நற்

செய்தியின் மேலும் நமக்கு நம்பிக்கை இல்லாதபடியால் சந்துபொந்துகளிலுள்ள மக்கள் மரணமடைய விட்டுவிடாமல் இருப்போமாக! கிருபையினால் மீட்கப்படாதபடி எந்த இடமும் பாழ்பட்டுக் கிடக்கவுமில்லை, யாரும் தூய்மையற்றும் இல்லை. கோழைத்தனத்தைஅகற்றிவிட்டு வெற்றி பெற முன்செல்வோமாக!

# 7. வாழ்வில் வளம் பெறுவதற்கான வழிகள்

என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு அதைவிட்டு வலதுஇடது புறம் விலகாதிருப்பாயாக! (யோசு.1:7).

நம் போராட்டத்தில் ஆண்டவர் நம்மோடு இருப்பார். ஆனால் அவர் கொடுத்திருக்கும் விதிகளை நாம் கண்டிப்பாகக் கைக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.நாம் அடையும் வெற்றி நம் முழுமனதுடனும் பெலனுடனும் தைரியத்துடனும் அவருக்குக் கீழ்ப்படிவதைப் பொறுத்தே இருக்கிறது. நாம் அரைமனதுடன் செயல்ப்பட்டால் நாம் முழு ஆசீர்வாதத்தையும் பெறமுடியாது. பாதியளவு ஆசீர்வாதமே பெறுவோம்.

நாம் கவனத்தோடும் முன்னாலோசனையோடும்ஆண்டவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது பொருள் நிறைந்தது. இது ஆண்டவருடைய திருச்சித்தத்துக்கு முழுவதுமாகக் கீழ்ப்படிவதைக் குறிக்கின்றது. நாம் எப்பொழுதும் எல்லாவற்றிற்கும்ஆயது;தமாயிருக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்க வேண்டும். நமக்கு விருப்பமானவற்றை மட்டும் செய்தாற்போதும் என்று சொல்லப்படவில்லை. எல்லாவற்றையும் செய்யக்

கவனமாயிருக்க வேண்டும். எல்லாவற்றையும் திட்டவட்டமாயும் உறுதியுடனும்செய்யவேண்டும். வலது இடது புறம் சாயாமல் நேரான பாதையில் நடந்து செல்ல வேண்டும். யோசனையில்லாமல் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவும் கூடாது. அதைக்குறித்து அக்கறையில்லாமல் நம் இஷ்டம் போல் நடக்கவும் கூடாது. இவ்விதமான கீழ்ப்படிதலினால் ஆத்துமப்பிரகாரமாகவெற்றி கிட்டும். ஆண்டவரே அது உண்மையென்று எங்களைக் கண்டறியச் செய்யும். உம்வாக்குறுதி உண்மையா என்று நாங்கள் சோதனை செய்யத் துணியோம்.

# 8. நம்பக்கூடியவர் மேல் நம்பிக்கை

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார் (ஏசா.50:7).

மேசியாமரணபரியந்தம் கீழ்ப்படிந்தபோது அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும் தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன் என்று சொல்வதாகத் தீர்க்கர் கூறுகிறார். கடவுள் நிச்சயமாகத் தமக்குத் துணைசெய்வார் என்னும் உறுதியுடன் யேகோவாவை நம்பினார்.

என் ஆத்துமாவே என் ஆண்டவருடைய வருத்தத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்முடையது தூசிபோன்றதே ஆகும். அப்படியிருக்கும்போது கர்த்தராகிய ஆண்டவர் நமக்கு உதவி செய்வார் என்று நம்ப முடியாதா? நம் ஆண்டவருடைய நிலை தனித்தன்மை வாய்ந்ததாய் இருந்தது. பாவியான மக்களின்பிரதிநிதியாக அவர்களுக்குப் பதில் ஆள் ஆகவும் அவர்களுக்கான பலியாகவும் அவர் இருந்தார். ஆகையால் பிதா அவரைக் கைவிடவேண்டியதாயும் இருந்தது. ஆனால் இதைவாசிப்பவரே நீர் அவ்விதம் செய்யவேண்டிய தேவையுமில்லை. ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதற

வேண்டியதுமில்லை. உம்இரட்சகர் அவ்வித நிலையிலும் கடவுள் மேலும் சார்ந்திருந்தார். நீர் அவ்விதம் இருக்க முடியாதா? அவர் உமக்காக மரித்து நீர் கைவிடப்பட வேண்டியதில்லை என்ற நிலையை ஏற்படுத்தினார். ஆகையால் உற்சாகம் கொள்வீராக!

இந்த நாளின் வேலைகளும் தொல்லைகளும் எதிர்ப்படும்போது கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார் என்று சொல்லித் தைரியமாக முன்னோக்கிச் செல்லுவீராக! முகத்தில் எந்த விதமான மாற்றத்தின் அறிகுறியும் இல்லாமல் எவ்விதத் தளர்ச்சியும் அவமானமும் உம் அருகில்கூட வராது என்று நம்புவீராக! கடவுள் உதவி செய்வதை யார்தடை செய்ய முடியும்? எல்லாம் வல்ல இறைவனின் உதவி கிடைக்கும் என்று திட்டமாக நம்பினால் உமக்கு எதுவும் கடினமானதாய் இருக்காதே. இந்த நாளை மகிழ்ச்சியுடன் தொடங்கும். உமக்கும் நித்திய இன்பத்துக்கும் இடையே ஐயத்தின் அறிகுறி கூடத் தோன்றாமல் இருப்பதாக!

# 9. வெட்டிஎடுத்தலும் கனிதருதலும்

என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார். கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார் (யோ.15:2).

கனிகொடுக்கத் தக்கதாய் வாழ்கிறவர்களுக்கு இது ஒரு சிறந்த வாக்குறுதியாகும். இதன் முதற்பாகம் மிகவும் கடுமையானதாய்க் காணப்படுகிறது. கனிகொடுக்கும் கொடி வெட்டி சுத்தப்படுத்தப்படவேண்டுமா? சிறந்ததும் பயனுள்ளதுமான கொடிகூடக் கத்தியால் வெட்டப்பட வேண்டுமா? வேண்டும் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் அறிகிறோம். ஆண்டவர் ஏதாவதொரு இன்னலின் மூலமாக வெட்டிச் சுத்தப்படுத்தும் வேலையைச் செய்கிறார்.

தீயவர்களுக்கல்ல நல்லவர்களுக்கேஇவ்வாழ்க்கையின் துன்பங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் விளைவு எதிர்பாராத நன்மைகள் ஆகும். ஆண்டவருக்கென்று நாம் அதிகமான கனிகளைக் கொடுப்பதற்காக அவர் வெட்டிச் சுத்தம் பண்ணுவதாயிருந்தால் அதைக்குறித்து நாம் கவலை அடையமாட்டோம்.

சில வேளைகளில் துன்பங்களின் மூலமாக அல்லாமல் வேதத்தின் மூலமாக ஆண்டவர் சுத்தப்படுத்துகிறார். இவ்விதம் செய்தல் வாக்குறுதியில் கடுமையாகத் தோன்றிய பகுதியை மென்மையானதாக ஆக்குகிறது. வேதத்தின் வார்த்தைகள் மூலமாக நாம் கிருபை நிறைந்தவர்களாகவும் பயம்உள்ளவர்களாகவும் ஆவோம். நாம் ஓரளவு கனி கொடுக்கிறவர்களாய் இருக்க நம்மைப் படைத்த ஆண்டவர் நாம் இன்னும் அதிக கனி கொடுப்பவர்கள் ஆவதற்கு நம்மில் கிரியை செய்வார். இது நமக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது அல்லவா? நமக்கு மிகுதியான செல்வம் சுகம் புகழ்கொடுக்கப்படும் என்பதைவிட நாம் மிகுதியான கனிகொடுப்பவர்களாய் இருப்போம் என்னும் வாக்குறுதி நமக்கு அதிகமான ஆறுதல் அளிக்கிறதாய் இருக்கிறது அல்லவா? ஆண்டவராகிய இயேசுவே கிருபை நிறைந்த உம்வாக்கை விரைவில் என்னில் நிறைவேற்றி உம் புகழுக்காக நான் மிகுந்தகனிகளைக் கொடுக்கச் செய்யும்.

# 10. உயர்த்துவதற்காக அவர் தாழ்த்துகிறார்

கர்த்தர் தரித்திரம் அடையச் செய்கிறவரும் ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாய் இருக்கிறார். அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர் (1.சாமு.2:7).

எல்லா மாற்றங்களும் ஒருபோதும் மாறாதவராகிய அவரிடமிருந்தே வருகின்றன. நான் ஐசுவரியவான். ஆனால் அவராலேயே ஆனேன் என்று அவரைப் போற்றிப் புகழ்ந்திருக்க

வேண்டும். நான் தரித்திரம் அடைந்தாலும் அவராலேயே அந்நிலைஅடைந்தேன் என்று அவரைத் துதித்துப்பாட வேண்டும். உலகில் நாம் தாழ்ந்த நிலை அடைந்தால் ஆண்டவராலேயே அடைந்திருக்கிறோம் என்று பொறுமையாய் இருக்க வேண்டும். நாம் உயர்நிலை அடைந்தாலும் ஆண்டவராலேயே அந்நிலை அடைந்தோம் என்று நன்றியுடன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். எந் நிலையானாலும் அது ஆண்டவராலேயே ஏற்பட்டது. அது நன்மையாகத்தான் இருக்கும்.

தாம் உயர்த்த நினைத்தவர்களைத் தாழ்த்துவதும் தாம் உடுத்த நினைத்தவர்களை வெறுமையாக்குவதும் யேகோவாவின் வழியென்று தோன்றுகிறது. அது அவர் வழியானால் அதுவே சிறந்ததும்ஞானமானதும் ஆகும். நான் இப்போது தாழ்த்தப்பட்டதைச் சகித்துக் கொண்டிருந்தால் நான் சீக்கிரத்தில் உயர்து;தப்படுவேன் என்று மகிழ்ச்சி அடையலாம். கிருபையினால் எவ்வளவுக்கெவ்வளவு தாழ்த்தப்படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மகிமையினால் உயர்த்தப்படுவோம். நாம்வளமூட்டப்படுவதற்காக உதறித்தள்ளப்போகும் வறுமை நிலையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆண்டவரே இப்போது என்னைத் தாழ்த்தி நான் பாவி என்றும் எவ்வளவு அற்பமானவன் என்றும் உணரச் செய்திருக்கிறீர். இந்த அனுபவம் என் மனதிற்கு உகந்ததல்ல. அதை எனக்குநலந்தருகிறதாக மாற்றியருளும். இவ்விதமாக நான் மிகுந்த பயன் கொடுக்கிறவனாயும் ஆழ்ந்த இன்பத்தை அனுபவிக்கிறவனாயும் மாற்றப்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அந்நிலை அடைய நான் தகுதியுள்ளவனாயிருக்கும் போது என்னை அந்நிலை அடையச் செய்யும். கிறிஸ்துவின் மூலம்நான் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

# 11. அமர்ந்திரு ஓடிவிடாதே

தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது. அவரால் என் இரட்சிப்பு வரும் (சங்.62:1).

மெய்யாகவே தேவனையே நோக்கி அமர்ந்திருத்தல் இன்ப வாழ்வை நோக்கியிருக்கும் நிலையாகும். இந்தநாள் முழுவதும் ஒவ்வொரு நாளிலும் இதுவே நம் நிலையாய் இருப்பதாக! ஆண்டவர் ஊழியம் செய்துகொண்டு மகிழ்ச்சியானஎதிர்பார்ப்புடனும் ஜெபத்துடனும் திருப்தியுடனும் அவருக்கேற்ற தருணத்திற்காக அமர்ந்திருக்கிறோம். ஆத்துமா இவ்விதம் அமர்ந்திருக்கவே அது சிருஷ்டிக்கப்பட்டது. சிருஷ்டிப்பு சிருஷ்டிகர் முன்னும் ஊழியக்காரன் எஜமான் முன்னும் பிள்ளை தகப்பன் முன்னும் காத்திருக்கும் நிலை சிறந்தநிலை ஆகும். இது நாம் தேவனைக் குறித்த எந்த அதிகார ஆணைக்கும் அவரைக்குறித்த குறைகூறுதலுக்கும் எந்த எரிச்சலுக்கும் நம்பிக்கை இன்மைக்கும் இடம் கொடுப்பதில்லை. அதேசமயத்தில் ஆபத்து வருமுன் ஓடிவிடவாவது மற்றவர்களிடம் உதவிக்குப் போகவாவது நாம் பிரயாசப்படுவதில்லை.ஏனெனில் இவ்விதம் செய்தால் நாம் தேவனையே நோக்கி அமர்ந்திருப்பவர்களாய் இருக்க மாட்டோம். கடவுள் ஒருவரையே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இது பேரின்பத்திற்குரிய நம்பிக்கையாகும். அவரிடமிருந்து இரட்சிப்பு வருகிறது. அது வந்துகொண்டிருக்கிறது.அது அவரிடமிருந்தே வரும். வேறொருவரிடமிருந்தும் இல்லை. எல்லா மகிமையும் அவருக்கே உரியது. ஏனெனில் அவர் ஒருவரே இரட்சிக்கக்கூடும். அவருக்குரிய காலத்தில் அவருக்கேற்ற விதமாக நிச்சயமாக இரட்சிப்பார். தயக்கத்திலிருந்தும் துன்பத்திலிருந்தும் அவதூறிலிருந்தும்இக்கட்டிலிருந்தும் இரட்சிப்பார். அதற்கான அறிகுறிகள் இன்னும் தென்படாவிட்டாலும் ஆண்டவரின்

சித்தத்துக்குக் காத்திருப்பதில் திருப்தியாய் இருக்கிறோம். ஏனெனில் அவர் அன்பையும் நேர்மையையும் குறித்து நமக்கு எவ்விதமான ஐயமும் இல்லை. கூடிய சீக்கிரத்தில் அவர்இரட்சிப்பை நிறைவேற்றுவார். வரப்போகும் கிருபைக்காக இப்போதே அவரைப் போற்றித் துதிப்போமாக!

# 12. இருளில் வெளிச்சம்

கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர். கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர் (2.சாமு.22:29).

நான் வெளிச்சத்தில் இருக்கிறேனா? அப்படியானால் தேவரீரே நீர் ஏன் விளக்காயிருக்கிறீர்? நீர் என்னை விட்டுச் சென்றுவிட்டால் என் மகிழ்ச்சியும் நீங்கிவிடும். நீர் என்னோடு இருக்கும் வரை காலம் என்னும் கைப்பந்தமாவது வசதிக்காக நான் ஏற்படுத்திக் கொள்ளும்மெழுகுவர்த்தி போன்றவையாவது எனக்குத் தேவையில்லை. கடவுளின் பிரசன்னம் எல்லாவற்றின் மேலும் எவ்வளவு சிறப்பாக ஒளிவீசுகிறது! இருபது மைலுக்கு அப்பால் கூட வெளிச்சம் காட்டும் கலங்கரை விளக்கம் பற்றி அறிந்துள்ளோம். ஆனால் யேகோவா நம் அருகிலேயே இருப்பவராய்மட்டும் அல்லாமல் தூரத்தில் உள்ள நம் பகைவரின் நாட்டில் கூட நாம் பார்க்கக் கூடியவராய் இருக்கின்றார். ஆண்டவரே உன் அன்பு என் இதயத்தை நிரப்பும் போது நான் தேவதூதனைப்போல் மகிழ்ச்சி அடைகிறேன். நான் உம்மையே தான் விரும்புகிறேன்.

நான் இருளில்இருக்கிறேனா? அப்படியானால் கர்த்தராகிய நீர் என் இருளை வெளிச்சம் ஆக்குவீர். கூடிய சீக்கிரத்தில் எல்லாம் மாறுதலடையும். விவகாரங்கள் மேலும் மேலும் துயர் நிறைந்தவை ஆகலாம், துன்பங்களாகிய மேகங்கள் ஒன்றோடொன்று சேரலாம். ஆனால் என் கையைக்கூட நான் பார்க்கமுடியாத இருள் சூழுமே. ஆனால் ஆண்டவருடைய கையை நான் பார்க்கு முடியும்.

எனக்குள்ளேயாவது என் நண்பர்களுக்குள்ளேயாவது உலகிலாவது நான் வெளிச்சம் காணமுடியாமற் போனாலும் வெளிச்சம் உண்டாகக் கடவது என்று சொல்லி வெளிச்சத்தை உண்டாக்கின ஆண்டவர் மறுபடியும் அவ்விதம்சொல்லக்கூடும். அவர் இப்போதும் நான் வெளிச்சத்தில் இருக்கச் செய்ய முடியும். நான் மரணமடையாமல் உயிரோடு இருப்பேன். பொழுது விடிந்து கொண்டிருக்கிறது. அதைக் குறித்த இனிய வேதவசனம் விடிவெள்ளிபோல் பிரகாசிக்கிறது. சீக்கிரத்தில் நான் மகிழ்ச்சியால் கைதட்டுவேன்.

# 13. கூப்பிடுகிறதற்கு முன்னும் கூப்பிடும்போதும்

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன் (ஏசா.65:24).

இது எவ்வளவு விரைவான கிரியை என்று பாருங்கள்! நாம் கூப்பிடுவதற்கு முன்பே ஆண்டவர் கேட்கிறார். பல தடவைகளில் அதே வேகத்தில் நமக்கு மறு உத்தரவு அருளிச் செய்கிறார். நம் தேவைகளையும் விண்ணப்பங்களையும் முன்னதாகவே அறிந்து,நமக்குத் தேவை ஏற்படுவதற்கு முன்னதாகவே அவற்றைக் கொடுத்து விடுகிறார். சோதனை நம்மைத் தாக்குவதற்கு முன்னதாகவே அதை மேற்கொள்ள நமக்கு ஆற்றல் அளிக்கிறார். இதுதான் எல்லாம் அறிந்த கடவுள் விரைவில் செயல்படும் முறையாகும். அதை நம் அனுபவத்தில் நாம்கண்டறிந்திருக்கிறோம். நம்மை எதிர்நோக்கியிருந்த இன்னல்களை நாம் அறியுமுன்னரே நம்மைத் தாங்கக் கூடிய ஆறுதலை நாம் அடைந்து விடுகிறோம். நமது வேண்டுதலுக்கு எவ்விதம் மறு உத்தரவு அளிக்கக் கூடிய கடவுள் நமக்கு இருக்கிறார் என்று நினைத்துப் பாருங்கள்.

மேலேகொடுக்கப்பட்ட வாக்குறுதியின் இரண்டாம் பாகம் நமக்குத் தொலைபேசியை ஞாபகப்படுத்துகிறது. நாம் இவ்வுலகிலும் கடவுள் மேலுலகிலும் இருந்தாலும் அவர் சொற்களைப் போல் நம் சொற்களும் துரிதமாகச் செல்ல ஏவுகிறார். நாம் சரியான விதமாய் வேண்டுதல் செய்யும்பொழுதுஆண்டவரின் செவிக்குள் பேசுவது போல் அமைகிறது. கிருபை நிறைந்த நம் மத்தியஸ்தர் நம் வேண்டுதல்களை உடனே தெரிவிக்கிறார். மகிமை பொருந்திய தகப்பன் அவற்றைக் கேட்டு புன் சிரிப்புடன் அவற்றை ஏற்றுக் கொள்கிறார். இது விண்ணப்பிப்பதற்கு எவ்வளவு சிறந்த முறையாகும்என்று நினைத்துப் பாருங்கள். இராஜாதி ராஜனே, நம் விண்ணப்பங்களுக்கு செவிசாய்க்கிறார் என்று அறிந்திருக்கும் போது யார் தான் வேண்டுதல் செய்யாமல் இருக்க முடியும்? இன்றைய தினம் நான் நம்பிக்கையோடு ஜெபிப்பேன். என் வேண்டுதல் கேட்டுக்கொள்ளப்படும் என்பதுமட்டுமல்லாமல் என் வேண்டுதலை ஆண்டவர் கேட்டுக் கொண்டேயிருக்கிறார் என்னும் நம்பிக்கையுடன் ஜெபம் செய்வேன். எனக்கு மறு உத்தரவு அருளப்படும் என்று நான் மட்டும் நம்பாமல், மறு உத்தரவு அருளிச் செய்யப்பட்டுவிட்டது என்றும் நம்புவேன். பரிசுத்த ஆவியானவரே இவ்விதம்இருக்க எனக்கு உதவி செய்யும்.

# *14. தண்டிக்கப்படுவோம் ஆனால் எந்நாளுமல்ல*

*நான் இந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் சந்ததியைச் சிறுமைப் படுத்துவேன். ஆகிலும் எந்நாளும் அப்படியிராது (1. இராஜா.11:39).*

கிருபையினால் ஆளப்படும் குடும்பத்தில் கட்டுப்பாட்டுக்கும் தண்டிப்புக்கும்கூட இடம் இருக்கிறது. அந்தத் தண்டனை பாவம் செய்வது எவ்வளவு தீமையும் கசப்புமான

அனுபவமாகும் என்று காட்டக்கூடிய அளவு கடுமையானதாய் இருக்கின்றது. அந்நிய நாட்டினரான மனைவிகளால் சாலோமோன் கடவுளைவிட்டுப் பின்வாங்கிப் போய் வேறு தேவர்களை உண்டாக்கி, அவன் முற்பிதாக்களின் கடவுளுக்குச் சினமூட்டினான். ஆகையால் பன்னிரண்டு பிரிவுகளாலான அவன் அரசின் பத்துப்பிரிவுகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அவன் அரசுக்குப் போட்டியான வேறொரு அரசாக்கப்பட்டது. இதுதாவீதின் குடும்பத்தினருக்குப் பேரிடர் ஆயிற்று. சாலோமோனின் பொல்லாத நடத்தையினால் கடவுளே அவ்விதம் செய்தார். கடவுளின் கட்டளைகளுக்கு முழுவதுமாகக் கீழ்ப்படியாமல் இருந்தால் தம் சிறந்த ஊழியக்காரரைக் கூட அவர் தண்டித்துத் திருத்துவார். ஒருவேளை இந்நேரத்தில் நாம்அவ்விதத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். நாம் தாழ்மையாக நீர் என்னிமித்தம் என்னோடே வழக்காடுகிறீர். அதை எனக்குத் தெரியப்படுத்தும் என்று கூறலாம்.

ஆகிலும் எந்நாளும் அப்படியிராது என்பது எவ்வளவு இனிய வாக்குறுதியாகும். பாவத்திற்குத் தண்டனைநித்தியமானது. ஆனால் ஆண்டவரின் பிள்ளை தகப்பனால் தண்டிக்கப்படுவது வரையறையுடைய காலத்திற்கேயாகும். நோவும், வறுமையும், சோர்வும் எவ்வளவு காலத்திற்கு எம்மை வருத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளதோ அவ்வளவு காலத்திற்குப் பின் மாறிவிடும். நாம்நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்களல்ல, கிருபைக்கு உட்பட்டவர்கள் என்பதைநினைவில் வைத்துக்கொள்ளுங்கள். சாட்டையின் அடியினால் ஏற்படும் வலி தாங்கமுடியாததாய் இருக்கலாம். ஆனால் வாள் நம்மை வெட்டி வீழ்த்தாது. நாம் பொல்லாதவர்களுடன் அழிக்கப்பட்டு விடாதபடிமனந்திரும்புவதற்காகவே இக்காலத் துன்பங்களை அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது.

## 15. பெயர்அளிக்கும் உத்தரவாதம்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன் (யோ.14:13).

கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக் கொள்ள வேண்டுமென்பதை எல்லா விசுவாசிகளும் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. அவரில் வேண்டிக்கொள்வது மட்டுமல்லாமல் அவர் கொடுத்திருக்கும் அதிகாரத்தின்படி அவர் நாமத்தினாலே வேண்டிக்கொள்வது விண்ணப்பம்செய்வதன் சிறந்த முறையாகும். சிலவற்றைப் புனிதமான அந்த நாமத்தில் வேண்டிக்கொள்ள நமக்குத் துணிவு இருக்காது. ஏனெனில் அப்படி வேண்டிக் கொள்வது அந்த நாமத்தைக் களங்கப்படுத்துவதாகும். ஆனால் நாம் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளத் தக்க நம் வேண்டுதல்நேர்மையானதாய் இருந்தால் அது நிச்சயமாக நமக்கு அளிக்கப்பட வேண்டியதாகும்.

விண்ணப்பத்தில் குமாரனின் மூலமாகப் பிதா மகிமைப்பட வேண்டியதாய் இருப்பதால் அது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும். அது அவர் உண்மையையும், நேர்மையையும், ஆற்றலையும்,கிருபையையும் மகிமைப்படுத்துகிறது. இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படும் விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பது பிதாவுக்கு அவர் மேல் உள்ள அன்பையும் நன்மதிப்பையும் வெளிப்படுத்துகிறது. இயேசுவின் மகிமையும் பிதாவின் மகிமையும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதால் ஒன்றைப்புகழடையச் செய்யும் கிருபை மற்றொன்றையும் புகழடையச் செய்கிறது. ஊற்று நிறைந்திருப்பதால் அதிலிருந்து செல்லும் வாய்க்கால் சிறப்படைகிறது. வாய்க்காலின் மூலமாக ஊற்று சிறப்படைகிறது. நம் விண்ணப்பங்களுக்குப் பதில் அளிப்பது நம் ஆண்டவரை இகழ்ச்சிஅடையச்செய்யுமேயானால், நாம் விண்ணப்பங்களை ஏறெடுக்க மாட்டோம். ஆனால் அவற்றால் அவர் மகிமை

அடைவதால் கடவுளுக்கும் அவர் மக்களுக்கும் கூட்டாக மகிழ்ச்சி அளிக்கும் அந்த அருமையான நாமத்தினாலே இடைவிடாது வேண்டுதல் செய்வோமாக!

# 16. பாவத்தை வெளிப்படுத்தி அறிக்கைசெய்

தன்பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி.28:13).

பாவம் செய்துவிட்டுப் பின் மனம் திரும்பிய பாவிக்குக் காட்டப்படும் இரக்கத்தின் பாதை இதுவாகும். பாவத்தை மூடிமறைக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். பாவத்தை மறுக்கத் தூண்டும் பொய்யினாலும், மறைக்கத்தூண்டும் மாய்மாலத்தினாலும்,நேர்மையென விளங்கும் தற்புகழ்ச்சியினாலும், அது சரியென வெளிப்படுத்துவதற்காக விளக்கம் செய்வதனாலும் இவ்விதம் செயல்பட ஏவப்படுகிறோம்.

பாவம் செய்தவன் பாவத்தை அறிக்கையிட்டு, அதைவிட்டுவிட வேண்டும். இரண்டும் ஒன்றையொன்று சார்ந்ததாகும்.ஆண்டவரிடமே உண்மையாகப் பாவத்தை அறிக்கையிட வேண்டும். அது தவறு என்றும் அதனால் ஏற்படும் தீமையையும் அதை வெறுப்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மற்றவர்களைக் குற்றப்படுத்தக் கூடாது. சூழ்நிலை மேல் பழிசுமத்தவும; கூடாது. இயற்கையான தளர்வினால் அவ்விதம்செய்துவிட்டதாக மன்றாடவும் கூடாது. அதை முழுவதுமாக அறிக்கை செய்து குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்யும்வரை இரக்கம் காட்டப்படமாட்டாது.

அதுவுமல்லாமல் அப்பாவத்தை விட்டுவிடவேண்டும். நாம் பாவம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டபின்நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் அப்பாவத்தில் நிலைத்திருப்பதற்கான விருப்பத்தை ஒழித்துக்கட்ட வேண்டும். அரசருக்கு விரோதமாகக் கலகம் செய்து கொண்டே அரசரோடு வாழமுடியாது. பாவம் செய்வதற்கான பழக்கத்தையும் அந்த ஆவலை நீடிக்கச்செய்யக் கூடிய இடங்கள், தோழர்கள், பொழுதுபோக்கு, நூல்கள் முதலியவற்றையும் விட்டுவிட வேண்டும். பாவ அறிக்கை கடமைக்காக செய்வதோ சமுதாய சீர்திருத்தத்தை உண்டுபண்ணுவதோ அல்ல. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மட்டுமே விசுவாசத்தினால் நாம் மன்னிப்பைப் பெறுகிறோம்.

# 17. பெரும்பான்மையோர் யார் பக்கம்

அதற்கு அவன் பயப்படாதே. அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான் (2.இராஜா.6:16).

குதிரைகளும், இரதங்களும் பலத்த இராணுவமும் தீர்க்கரைச் சூழ்ந்து கொண்டன. அவருடைய வேலைக்காரன் பயந்து விட்டான். இவ்வித இராணுவத்திடம் இருந்து எப்படித் தப்பித்துக் கொள்ள முடியும் என்று திகைத்தான். ஆனால் வேலைக்காரன் பார்க்காததைத்தீர்க்கர் பார்த்தார். தம்மைச் சூழ்ந்து கொண்டிருந்த இராணுவத்தை விட பலத்த இராணுவம் சிறப்பான படைக் கலங்களுடன் தமக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொண்டிருப்பதை அவர் கண்டார். சாதாரணமான குதிரைகளை விட அக்கினி மயமான குதிரைகள் சிறப்பு வாய்ந்தவை. இரும்பினாலான இரதங்களை விட அக்கினி மயமான இரதங்கள் சிறப்பு வாய்ந்தவை.

இந்த நேரத்திலும் அவ்விதம்தான் இருக்கிறது. உண்மைக்குப் பகைவரானவர்கள் பலராயும், செல்வாக்கு

மிக்கவர்களாயும், படிப்பறிவு உள்ளவர்களாயும், தந்திரம் மிக்கவர்களாயும் இருக்கிறார்கள். உண்மையைக் குறித்து அவர்கள் அக்கறை கொள்வதில்லை. ஆனால் காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான ஆற்றல் வாய்ந்த படைபலம் நீதிமான்களின் பக்கம் இருக்கிறது. ஒளிந்து கொண்டு காத்திருக்கும் இராணுவம் உங்களுக்கு உண்டு. தேவையானபோது அவை வெளிப்பட்டு உதவும். நல்லவர்களும் உண்மையானவர்களுமானவர்களோடு இருக்கும் படைகள் தீயசக்தியோடு இருப்பவைகளைக் காட்டிலும் அநேகம். ஆகையால் நாம் உற்சாகம் கொண்டு, மகிழ்ச்சி அளிக்கக்கூடிய மறைபொருளை அறிந்தவர்களாய், அச்சம் இல்லாமல் நிமிர்ந்து நடந்து செல்வோமாக!

நாம் வெற்றி பெறுகிறவர்கள் பக்கமாய் இருக்கிறோம். போர் கடுமையாய் இருக்கலாம். ஆனால் அது எப்படி முடியும் என்று நமக்குத் தெரியும். நம்பிக்கையும் கடவுளும் நம் பக்கம் இருப்பதால் நம்மோடு இருப்பவர்கள் அநேகர். அவர்களோடு இருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடுஇருக்கிறவர்கள் அதிகம்.

# 18. தொடுகிறவர்களும் கண்டுபிடிக்கிறவர்களும்

நீ அவரைத்தேடினால் உனக்குத் தென்படுவார் (1.நாளா.28:9).

நமக்கு நம் கடவுள் தேவை. அவரைத் தேடினால் கண்டடைவோம். நாம் அவரைத்தரிசிக்க வேண்டுமென்று முழு மனதுடன் விரும்பினால் அவர் தம்மை மறைத்துக் கொள்ளமாட்டார். அவரைத் தரிசிக்க நாம் ஏற்றவர்களாய் இருக்க வேண்டும் என்பதுமில்லை. அவர் அன்பு ஆதரவை விலை கொடுத்து வாங்க வேண்டுமென்பதுமில்லை. அவரைத்

தேடினாலே போதும். ஆண்டவரை ஏற்கனவேநன்கு அறிந்தவர்கள் வேண்டுதலினாலும் ஊக்கந்தவறாத ஊழியத்தினாலும் சீரிய நன்றியறிதலினாலும் அவரைத் தேட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு அவர் அன்பு ஆதரவையும் தோழமையையும் மறுக்க மாட்டார். அவரிலே தங்கள் ஆத்துமாக்கள் சமாதானத்தோடு தங்கக்கூடும் என்று இன்னும்அறியாதவர்கள் இப்போதே அவரைத் தேடத்தொடங்கி அவரைத் தங்கள் இரட்சகராகவும் நண்பராகவும் பிதாவாகவும் கடவுளாகவும் அறிந்து கொள்ளும்வரை தேடிக்கொண்டே இருக்க வேண்டும்.

அவரைத் தேடுகிறவர்களுக்கு இந்த வாக்குறுதி எவ்வளவு திடம் அளிக்கிறது என்று பாருங்கள்.அவரைத் தேடுகிறவன் கண்டடைவான். இதை வாசிக்கிறவரே நீர் கடவுளைத் தேடினால் அவரைக் கண்டடைவீர். அவரைக் கண்டடைந்தவுடன் வாழ்வு, மன்னிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், பாதுகாப்பு, மகிமை எல்லாவற்றையும் பெறுவீர்கள். நீங்கள் அவரைத்தேட மாட்டீர்களா?தேடிக்கொணுடேயிருக்க மாட்டீர்களா? ஏனெனில் நீங்கள் தேடுவது வீணாய்ப் போகாது. அன்பான நண்பரே நீர் உடனே கடவுளைத் தேடும். இதுவே சரியான இடமும் காலமும் ஆகும். விறைப்பான அந்த முழங்காலை முடக்கும் இன்னமும் கடினமான கழுத்தையும் வளைத்து கடவுளை அதாவது உயிருள்ள கடவுளைநோக்கிக் கூப்பிடும். இயேசுவின் நாமத்தில் சுத்திகரிக்கப்படவும், பரிசுத்தமாக்கப்படவும் நாடுங்கள். உங்கள் வேண்டுதல் மறுக்கப்படாது. இது தாவீது தன் மகன் சாலோமோனுக்கு சொன்ன சான்றுரையாகும். இதுவே இதை எழுதியவர் இதை வாசிப்பவருக்கும் சொல்லும்சான்றுரையுமாகும். கிறிஸ்துவின் நாமத்தினால் இதை நம்பி இதன்படி செய்யுங்கள்.

# 19. நீதிமானுக்குப் பலன் உண்டு

அப்பொழுது மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும் மெய்யாய்ப் பூமியிலே நியாயஞ் செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான் (சங்.58:11).

இல் வாழ்க்கையில் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு தெளிவாய்க் காணப்படுவதில்லை. எப்படியெனில் ஒரு நிகழ்ச்சியினால் பலதரப்பட்டவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஏனெனில் இது தெரிந்தாயும்நிலையாகும். தண்டனை அல்லது பலன் அளிக்கப்படும் நிலையல்ல. ஆயினும் சிவேளைகளில் கடவுள் நீதியை நிலைநிறுத்த பயங்கரமான காரியங்களைச் செய்கிறார். எல்லாவற்றைக் குறித்தும் அசட்டையாயிருப்பவர்கள் கூட அது அவருடைய செயல் என்று ஒத்துக் கொள்ளுகிறார்கள்.

இந்தவாழ்க்கையிலும் நீதிமான் எல்லாவற்றுக்கும் மோலானதாகக் கருதும் பலனைப் பெறுகிறான். அது கடவுளின் பூரண திருப்தியாகும். அது அமைதியாக மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட நிலையை உண்டாக்குகிறது. பின்வேறு சில நற்காரியங்களையும் கைம்மாறாகப் பெறுகிறோம். ஏனெனில் கடவுள்ஒருநாளும் ஒருவருக்கும் கடனாளியாக இருப்பதில்லை. ஆயினும் நீதிமானுக்கு இனிவரும் காலத்தில்தான் பலன் கிட்டும்.

அதுவரை பல நாட்டினருக்கும் இடையே மாமன்னரின் கிரியைகளைக் காண்கிறோம். அவர் கொடுங்கோன்மையான சிங்காசனங்களை உடைத்துப் போடுகிறார்.குற்றவாளிகளைத் தண்டிக்கிறார். பேரரசுகள் தோன்றி அழிவதை வரலாற்றின் மூலமாய் அறிபவர்கள் நீதியை விரும்பி இறுதியில் அநீதியைத் தடுத்து நிறுத்தி எப்பக்கமும் சாயாத நீதியின்படி தீர்ப்பு அளிக்கும் சக்தி உண்டென்பதைத் திட்டமாய் அறிவார்கள். பாவத்திற்குத் தண்டனைவராமற்போகாது. அதே போல நற்குணத்திற்குப் பலன் வராமற்போகாது. உலகத்தின் நியாயாதிபதி சரியானதையே செய்யவேண்டும். ஆகையால் அவருக்குப் பயப்படுவோமாக!

தீயவர்களின் ஆற்றலைக் குறித்து அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

## 20. வரையறைக்குட்படாத விடுதலை

ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார் ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது (யோபு 5:19).

எலிப்பாஸ் இங்கு கடவுளைப்பற்றிய உண்மையைக் கூறுகிறார். வாரத்தின் ஒவ்வொரு நாளும் நமக்குத் தொல்லைகள் ஏற்படலாம். ஆனால் அந்த ஆறு நாட்களும் கிரியை செய்த ஆண்டவர் நாம்முழுவதுமாக விடுதலை அடையும் வரை கிரியை செய்வார். ஓய்வு நாளில் நாம் அவரில் அவரோடு இளைப்பாறுவோமாக! தொடர்ந்து விரைந்து வரும் தொல்லைகள் நம் விசுவாசத்தைக் கடுமையாகச் சோதிக்கும் முறைகளில் ஒன்றாகும். ஒரு அடியிலிருந்து நாம் மீழு முன் மறுஅடி விழுந்து விடுகிறது.இவ்விதம் தள்ளாடும் வரை அடிமேல் அடியாக விழுந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் தொடர்ந்து அதேவேகத்தில் நமக்குக் கிடைக்கும் விடுதலை நம்மை உற்சாகப்படுத்துகிறது. கடவுளை ஒரு கருமானாக நினைத்துக் கொண்டால் அவர் சம்மட்டியால் அடிக்கும் அடிகள் ஆன்மீக உலகில் சிறந்தபண்ணோசை எழும்பும் வரை துன்பம் என்னும் சம்மட்டி பட்டடைக் கல்லைத் தாக்கும் போதெல்லாம் புதுப்புதுப் பாட்டுக்களின் ஒலி எழும்பிக் கொண்டே இருக்கிறது. நாம் ஆறு முறை தொல்லைக்குட்படுவோம் என்று ஆண்டவர் நிர்ணயித்திருந்தால் அது ஆறு முறையாகவே இருக்கும். அதற்கு மேல்இருக்காது என்று நிச்சயமாக நம்பலாம்.

நம்மை ஏழு தொல்லைகள் தாக்கியிருப்பதால் நமக்கு ஓய்வு கூட இல்லாமலிருக்கலாம். அப்படியானாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் ஏழாவதிலும் பொல்லாப்பு நம்மைத் தொடாது. சிங்கம் போன்ற தீங்கு நம்மை அச்சுறுத்தபேரொலி

எழுப்பலாம். ஆனால் அது நம்மைத் தாக்கமுடியாது. நம்மைத் தொடக்கூட முடியாது. அது வெகு அருகில் இருப்பதை நாம் உணரலாம். ஆனால் அதன் சிறுவிரல் கூட நம்மைத் தொட முடியாது. நம் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு நம்மைத் தாக்க வரும் தொல்லைகளை தைரியமாகஎதிர்ப்போமாக! பரமதகப்பனும், இரட்சகரும், பரிசுத்தமாக்குகிறவரும் அற்றவர்கள்தான் அச்சம் கொள்வர். நமக்குப் பயம் இல்லை.

## 21. அழுகை நிறைந்த இரவு, மகிழ்ச்சியான பகல்

அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு. சாயங்காலத்திலே அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும் (சங்.30:5).

பிதா நம்மேல் ஒரு நிமிடம் மட்டுமே கோபப்பட்டாலும் நமக்கு அது அதிக காலம் போல் காணப்படலாம். ஆனால் நினைத்துப் பார்த்தால் அது ஒரு நிமிடம் மட்டுமேயாகும். நாம் அவருடைய ஆவியைத் துக்கப்படுத்தினால் அவருடைய மகிழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது.ஆனால் அவர் மன்னிக்க ஆயத்தமாயிருக்கும் கடவுள். நம் குற்றங்களைப் பற்றிய நினைவையே அவர் அப்புறப்படுத்திவிடுவார். அவருடைய கோபத்தினால் நாம் மயக்கமுற்று மரணமடையும் நிலை அடைந்தாலும் அவருடைய தயவு நமக்குப் புத்துயிர் அளிக்கிறது.

இந்த வாக்குறுதியின் இன்னோருசிறப்பு என்னவெனில் இதில் அழுகை நிறைந்த இரவு சீக்கிரத்தில் களிப்பு நிறைந்த விடியற் காலமாகி விடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் கண்டித்துத் திருத்தப்படும் போது சீக்கிரத்தில் இரக்கம் காட்டப்பட்டு விடுகிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களைஅடித்து நொறுக்குவதை ஆண்டவர்

விரும்புவதில்லை. ஓரிரண்டு அடிகளோடு நிறுத்தி விடுகிறார். அவர் கோபமும் அதனால் நாம் துக்கப்படுவதும் தொடர்ந்து வரும் மகிழ்ச்சியும் நம் துக்கத்தை அறவே மறந்துவிடச் செய்கின்றன.

என் இதயமே அல்லேலூயா என்று பாடத் தொடங்கு. இரவுமுழுவதும் அழுது கொண்டிராதே. விடியற்காலையில் வர இருக்கும் இன்பத்தை எண்ணி உன் கண்களைத் துடைத்துக் கொள். அவை மறுநாள் தோன்றப்போகும் ஞாயிற்றின் கதிரைப்போல் நமக்கு நன்மை விளைவிக்கும் பனித்துளிகளாகும். அவை கிருபை நிறைந்த கடவுளைபு; பார்ப்பதற்கு நம்கண்களைத் தெளிவாக்கக் கூடியவை. அவை அக் கிருபைக் காட்சியை மதிப்பு மிக்கது ஆக்குகின்றன. ஒரு படத்தின் காட்சிகள் சிறப்புடன் தோன்ற அதை வரைவதில் காட்டப்படும் நுண்திறம்போல் துக்கம் நிறைந்த இரவு அமைகிறது. இறுதியில் எல்லாம் நன்கு இருக்கும்.

# 22. கடவுளை மகிமைப்படுத்தும் கோபம்

மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப் பண்ணும். மிஞ்சும் கோபத்தை நீர் அடக்குவீர் (சங்.76:10).

அநீதியான மக்கள் சீற்றங் கொள்கிறார்கள். அவர்கள் கோபத்தை நம் அழைப்பின் சின்னமாகவும் அவர்களிலிருந்து நாம் தனிப்பட்டவர்கள் என்பதின் அடையாளமாகவும் பொறுத்துக்கொள்ளவேண்டும். நாம் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையவர்களை நேசிக்கும். மனிதனுடைய கோபம் கடவுளின் மகிமை பெருக உதவத் தக்கதாக மாற்றப்படும் என்பதே நமக்கு ஆறுதல் அளிப்பதாகும். பழிபாவத்துக்கு அஞ்சாத மக்கள் தங்கள் கோபத்தினால் தேவனுடைய குமாரனைச் சிலுவையில்அறைந்த போது, அறியாமலே கடவுளின் திட்டத்தை நிறைவேற்றினார்கள். அதேவிதமாகக் கடவுள் பயம் இல்லாதவர்களும் பலவிதங்களில் செய்கிறார்கள். அவர்கள் சுதந்திரமானவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால்

சங்கிலிகளால் கட்டப்பட்ட குற்றவாளிவளைப்போல் தங்களைஅறியாமலே சர்வ வல்லவரின் கட்டளைகளை நிறைவேற்றுகிறார்கள்.

துன்மார்க்கரின் திட்டங்கள் உதறித்தள்ளப்படுவதால் அவை தோல்வியடைகின்றன. அவர்கள் அறியாமலே தங்களுக்குத் தீமை இழைக்கும் விதமாகத் திட்டங்கள் தீட்டி அவற்றினால் குழப்பம் அடைகிறார்கள்.அவர்களின் சீற்றத்தினால் நமக்கு எந்தவிதமான தீமையும் நேரிடாது. இரத்தசாட்சிகளைத் தீக்கிரையாக்கின போது அத்தீயிலிருந்து கிளம்பின புகை தீயிட்டவர்களுக்கே தீமை விளைவித்தது.

கரடி போன்றவர்களை அடக்கக் கூடிய சங்கிலியும் முகவாய்க் கட்டும் ஆண்டவரின்கையில் இருக்கின்றன. பகைவரின் மிஞ்சும் கோபத்தை அவர் அடக்குவார். அவர் ஓர் ஆலையின் உரிமையாளரைப் போல் இருக்கிறார். தேவைக்கு அதிகமான நீரை வாய்க்கால் வழியே செல்லாமல் தடுத்து விடுகிறார். அவ்விதமாகத் தடுத்த நீரை ஆலையின் காற்றாடியைச் சுற்றப்பயன்படுத்துகிறார். நாம் பெருமூச்சு விடவேண்டியதில்லை. பாட்டுகள் பாடலாம். எவ்வளவு வேகமாகக் காற்று வீசினாலும் எல்லாம் நல்ல விதமாக முடியும்.

# 23. அன்பு கூரு, ஞானத்தைத் தேடு

என்னைச் சினேகிக்கிறவர்களை நான் சினேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் (நீதி.8:17).

ஞானத்தைத் தேடுகிறவர்களை ஞானம் தேடிவந்தடைகிறது. ஞனத்தைத் தேடுகிறவன் ஞானம் உள்ளவன். ஊக்கந்தளராமல் ஞானத்தைத் தேடுகிறவன் அதை ஏற்கனவே பெற்றுள்ளவன் ஆகிறான். பொதுவாக ஞானம் என்று நாம்

குறிப்பிடும் தன்மையில் பொருந்தியுள்ள உண்மைகள்யாவும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் உள்ளடங்கிய ஞானத்திற்கும் சிறப்பாகப் பொருந்துவனவாகும். அவரையே நாம் தேடி, அவரிலேயே நாம் அன்புகூர்ந்தால் அவரைக் கண்டுபிடிக்கிறவர்களாகவும் அவர் அன்பை ருசிக்கிறவர்களாகவும் இருப்போம்.

இளம் வயதிலேயேஇயேசுவைத்தேட வேண்டும். அதிகாலையை இயேசுவோடு செலவிடும் இளவயதினர் நிறைவான மகிழ்ச்சி உள்ளவர்கள் ஆவார்கள். ஆண்டவராகிய இயேசுவை எவ்வளவு சீக்கிரம் தேடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையடைவோம். இளமையிலேயே அவரைத் தேடினால் கண்டிப்பாக அவரைக் கண்டடைவோம்.இளமையிலேயே ஊக்கத்துடன் அவரைத் தேடவேண்டும். விடியற் காலையிலேயே தூக்கத்திலிருந்து எழும் வியாபாரிகள் முன்னேறுகிறவர்களாய் இருப்பார்கள். அதேபோல் முன்னேற விரும்பும் அடியார்களும் இளமையிலேயே இயேசுவைத் தேடுவார்கள். தாங்கள் ஆன்மீக வளர்ச்சியடைய இயேசு துணையாய்இருப்பதாக உணருகிறவர்கள் அவரை முழு முயற்சியுடன் தேடுகிறார்கள். முதலாவது அதாவது இளமையிலேயே அவரைத்தேட வேண்டும். அவரையே எல்லாவற்றுக்கும் மேலாகக் கருதவேண்டும். நம் வாழ்க்கையிலே இயேசுவே முதலாவதாக இருக்க வேண்டும்.

அவரைத் தேடினால் அவரைக் கண்டடைவோம்என்பதே நாம் பெறக்கூடிய ஆசீர்வாதம். நாம் தேடத்தேட அவர் தம்மை வெளிப்படுத்துவார். நம்மோடு முழுத்தோழமை கொள்ளுவார். தம்மைத் தேடிக் கண்டுபிடித்து விட்டவர்களோடு நித்திய காலமாய் இருந்து, அவர்கள் அறிவுக்கும் ஆன்மாவுக்கும் சிறப்பு மிக்கவர்ஆகிக்கொண்டேயிருக்கிறவரைத் தேடுகிறவர்கள் மகிழ்ச்சி மிக்கவர்கள் ஆவார்கள்.

ஆண்டவராகிய இயேசுவே நாம் உம்மைத்தேடிக் கண்டுபிடித்து விட்டேன். விவரிக்க முடியாத அளவு மகிழ்ச்சி நிறைந்த திருப்தியை எனக்கு அளியும்.

# 24. கடவுள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்

ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது (1.கொரி.1:19).

இந்தவசனம் உலகப்பிரகாரமான ஞானிகளைப் பொறுத்தவரையில் அச்சம் உறுத்துகிறதாய் இருக்கிறது. ஆனால் சாதாரண விசுவாசியைப்பொறுத்த வரையில் இது ஒரு வாக்குறுதியாகும். ஞானிகள் என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள், சாதாரண விசுவாசிகளின் நம்பிக்கை,ஒன்றுக்கும் உதவாதென்று ஆக்கவே எப்போதும் முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சிகளில் அவர்கள் தோற்றே விடுகிறார்கள். அவர்கள் விவாதங்கள் வியர்த்தமாகி விடுகின்றன. அவர்கள் கோட்பாடுகள் அர்த்தமற்றவையாகி விடுகின்றன. அவர்களுடைய ஆழமான திட்டங்கள்நிறைவேறுமுன்பே வெளியரங்கமாகி விடுகின்றன. பழமையான நற்செய்தி இன்று வரை அழிந்து விடவில்லை. ஆண்டவர் உயிரோடு இருக்கும் வரை அது அழியவே அழியாது. அதை வேரோடு ஒழிக்க முடிந்திருக்குமேயானால் வெகு நாட்களுக்கு முன்னரே அழிக்கப்பட்டிருக்கும். ஞானிகளுடைய ஞானத்தை நாம்அழிக்கவே முடியாது.

அவ்விதம் செய்ய நாம் முயலவும் வேண்டியதில்லை. ஏனெனில் ஆண்டவர் நான் அழிப்பேன் என்கிறார். அவர் செய்து முடிக்காததைக் குறித்து திட்டமிடுவதில்லை. மேலே

கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில் அவர் இரண்டு முறை தம் திட்டத்தை வெளிப்படுத்துகிறார். அதைநிறைவேற்றியே தீருவார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். தர்க்க சாஸ்திரத்தையும் நவீன கருத்துக்களையும் அவர் அடியோடு அழித்து விடுவார். அவ்விதம் செய்வார் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது கண்டிப்பாகச் செய்து முடிக்கப்படும். ஆண்டவரே அதை விரைவில் நிறைவேற்றும்ஆமென், ஆமென்.

# 25. உணவும் இளைப்பாறுதலும்

என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் (எசேக்.34:15).

ஆண்டவர் மேய்ப்பராயிருந்தால் விசுவாசிகள் திருப்தியடையும் வரை மேய்ச்சலைக் கண்டடைகிறார்கள். அவர்கள் ஆன்மாவுக்கான உணவு திருப்தியளிக்க முடியாததான மக்களின் வெறும் எண்ணங்கள் மட்டுமல்ல, கடவுள் தாம் வெளிப்படுத்தும் உண்மையினால்அவர்களைத் திருப்தியாக்குகிறார். பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களைத் தெளிவாக்குவாரேயானால், அது ஆன்மாவுக்குச் சத்துள்ள உணவாகும். விசுவாசிகளின் உயிருக்கு ஆதாரமான உணவு இயேசு கிறிஸ்துவே. இந்த வாக்குறுதியில் நம் சிறந்த மேய்ப்பரான அவர் தாமே நமக்குத் தேவையானஉணவு அளிப்பதாக வாக்களிக்கிறார். ஆண்டவரின் நாளில் உலகப்பிரகாரமான நம் மேய்ப்பர்கள் வெறும்கையோடு இருந்தாலும் ஆண்டவர் அவ்விதம் இருப்பதில்லை.

தூய உணவினால் நிரப்பப்படும் போது நம் மனம் அமைதி அடைகிறது. யேகோவா யார்யாருக்கு உணவு அளிக்கிறாரோஅவர்கள் சமாதானத்துடன் இருக்கிறார்கள். எந்த நாயும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. எந்த ஓநாயும்

அவர்களை விழுங்கி விடுவதில்லை. அமைதியற்ற எந்த மன நிலையும் அவர்கள் மனஅமைதியைக் குலைப்பதில்லை. அவர்கள் உண்ட உணவு ஜீரணிக்க அமர்ந்திருப்பார்கள். கிருபையைக்குறித்துக் கொள்கைகள் ஒருவர் விழாமல் நிலைநிறுத்தக் கூடியவைகள் மட்டுமல்லாமல் தேற்றக்கூடியவையாயும் அமைகின்றன. அவை நம் வளர்ச்சிக்குப் பயன்படுபவை மட்டுமல்லாமல் நம்மை அமர்ந்திருக்கவும் செய்கின்றன. போதகர்களால் நமக்குத் தேவையான அமைதியைக் கொடுக்கமுடியாமற்போனால் நாம் அத்தேவையை நிறைவேற்ற ஆண்டவரை நோக்கிப்பார்ப்போமாக!

இந்நாளிலே நாம் வேதவசனங்களை உண்டு அவற்றைப் பற்றி ஆராய அமர்ந்திருப்போமாக! இந்நாளிலே எந்த விதமான கவலையும் நம்மைத் தாக்காமலிருப்பதாக! நாம் எந்த முட்டாள்தனமானசெய்கையும் செய்யாமல் சமாதானத்தோடு ஆண்டவரைப் பற்றித் தியானம் செய்வோமாக!

# 26. நுட்பமான மனச்சாட்சி உடையவர்

நான் ஆடுகளுக்கும் ஆடுகளுக்கும் நியாயந்தீர்ப்பேன் (எசேக்.34:22).

சில ஆடுகள்கொழுத்தவையாய் செழிப்பாக வளருகின்றன. இவை பலவீனமானவைகளைத் துன்புறுத்துகின்றன. இது கொடூரமான பாவமாகும். இதனால் அதிகமான துன்பம் ஏற்படுகிறது. விசுவாசிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் மத்தியிலும் சிலர் பக்கத்தினாலும் முன்னந்தெடையினாலும் மற்றவர்களைத் தள்ளியும்நோய்வாய்ப்பட்டவர்களைக் கொம்புகளைக் கொண்டு முட்டித்தள்ளியும் தொல்லை கொடுக்கிறார்கள். இவ்விதமான பெருமையானதும் இரக்கமற்றதுமான செய்கையை ஆண்டவர் கவனித்துக்

கொண்டேயிருந்து சினம் கொள்கிறார். ஏனெனில் அவர் பலவீனமானவர்களை நேசிக்கிறார்.

இதைவாசிப்பவரே, நீர் இகழப்பட்டவர்களில் ஒருவராய் இருக்கிறீரா? சீயோனிலே நீர் துக்கம் கொண்டாடுகிறவராயும் உம்முடைய நுட்பமான மனச்சாட்சியினால் தனித்துக் காணப்படுகிறவராயும் இருக்கிறீரா? உம்முடைய சகோதரர் உம்மேல் கடுமையான குற்றங்கள் சாட்டுகிறார்களா?அப்படியானால் அவர்களுடைய நடத்தையைக் குறித்துக்கோபம் கொள்ளாதீர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் செய்கைக்குப் பதிலாக அவர்களைத் தள்ளியும் முட்டியும் தொல்லை கொடுக்காதீர். அவர்கள் செய்கையை ஆண்டவர் கரத்தில் ஒப்புவித்து விடும். அவரே நியாயாதிபதி. நம்மைவிடநியாயமாக அவர் நியாயந்தீர்ப்பார். அவர் நியாயந்தீர்க்கக் குறித்திருக்கும் காலமே சிறப்பானதாகும். அது சீக்கிரம் வரவேண்டுமென்று நாம் துடித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

கடின இதயமுள்ளவராய் கொடுமை செய்பவரே பயந்து நடுங்க வேண்டும். அவர் இப்போதுதண்டனையைக் குறித்த பயமில்லாமல் மற்றவர்களைக் கொடுமைப் படுத்தினாலும் அவருடைய பெருமையான பேச்சுக்களெல்லாம் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றைக் குறித்தும் பெரிய நியாயாதிபதியின் முன் அவர் கணக்குக் கொடுக்க வேண்டும்.

என்ஆத்துமாவேபொறுமையாய் இரு. உன் துக்கத்தை ஆண்டவர் அறிந்திருக்கிறார். உன்னுடைய இயேசு உன்மேல் பரிதாபமுள்ளவராய் இருக்கிறார்.

## 27. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன் *(ஏசா.48:10).*

இந்தநீதி வாக்கியம் நம் படுக்கை அறைகளில் நீண்டகாலமாக எழுதித்தொங்க விடப்பட்டிருக்கிறது. பலவிதங்களில் நம் இதயத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாய் இருப்பது சாதாரணமான ஒரு நிகழ்ச்சியல்ல. கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆகிறார்கள். ஒரு நாட்டின் மக்களில் சிறந்தவர்களாய்த் தேர்ந்தெடுக்கப்படுவதை விட கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருப்பது எவ்வளவோ நல்லது. அப்படிப்பட்டவர்கள் யூதர் பாஸ்கா ஆட்டுக்குட்டிக்காகக் கசப்பான கீரையைப்புசித்தது போல் எவ்வளவு பிரதிகூலங்கள் இருந்தபோதிலும் அந்த மேன்மையான சலுகையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள். அக்கினிச் சூளையையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில் நாம் அதில் இருக்க வேண்டுமென்று ஆண்டவர் தெரிந்து கொள்கிறார்.

செழித்தோங்கும் மக்களாக அல்ல, வருத்தம் அனுபவிப்பவர்களாகவே நாம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம். நாம் அரண்மனையில் தெரிந்துகொள்ளப்படவில்லை. அக்கினிச் சூளையிலே தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம். சூளையில் அழகு கெட்டுவிடுகிறது, உலகநடைஅழிக்கப்பட்டு விடுகிறது, வலிமை குன்றிவிடுகிறது, மகிமை எரிக்கப்பட்டு விடுகிறது. ஆயினும் அங்கு தான் நித்திய அன்பு அதன் இரகசியங்களை வெளிப்படுத்துகிறது. அதன் தெரிந்தெடுத்தலை நிச்சயப்படுத்துகிறது. இது நமக்குப் பொருந்துவதாகும். கடுமையான சோதனையின்நேரத்தில் ஆண்டவர் நம் அழைப்பையும் தேர்தலையும் தெளிவாக்குகிறார். நாமும் அதை உறுதியாய் அறிந்து கொள்கிறோம். பின்

ஆண்டவரை நம் கடவுளாக ஏற்றுக்கொள்கிறோம். நாம் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதையும் அவர் நிச்சயப்படுத்துகிறார். ஆகையால் இன்றுஅக்கினிச்சூளை ஏழு மடங்கு வெப்பமாக்கப்பட்டாலும் நாம் அதைக்குறித்து அச்சம் கொள்ளமாட்டோம். ஏனெனில் கடவுளின் மகிமை பொருந்திய குமாரன் அக்கினியின் மத்தியில் நம்மோடு நடமாடுகிறார்.

## 28. எந்தச் சூழ்நிலையிலிருந்தும்

நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். கர்த்தர் என்னை இரட்சிப்பார் (சங்.55:16).

ஆம்! நான் கண்டிப்பாக ஜெபிக்க வேண்டும். நான் ஜெபிப்பேன். நான் வேறு என்ன செய்ய முடியும்? அதைவிட மேலானதான செயலாக நான் செய்யக் கூடியது எது? நம்பிக்கைத் துரோகத்தினாலும், கைவிடப்பட்டதினாலும், குழப்பமுற்றதினாலும் திகைத்துநிற்கும்போது, என் ஆண்டவரே, உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நான் சாம்பலில் அமர்ந்திருக்கிறேன். என் மேல் கல்லெறிவதாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். நானோ இதுவரை பல சோதனைகளிலும் என்னைத் தாங்கி நடத்தி வரும் இந்தச் சோதனையிலும் என்னைத் தாங்கக்கூடியவருமான ஆண்டவரிலேயே என் ஆன்மாவைத் தைரியப்படுத்துகிறேன். யேகோவா என்னைக் காப்பாற்றுவார். அவர் காப்பாற்றுவார் என்று நிச்சயமாய் நான் நம்பி என் விசுவாசத்தை அறிக்கையிடுகிறேன்.

ஆண்டவரேயல்லாமல் வேறு யாரும் என்னை இரட்சிப்பதில்லை. வேறுயாரும்எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று நான் விரும்புவதுமில்லை. நான் நம்பக்கூடுமானால் கூட மாம்சமான ஒருவரையும் நம்பமாட்டேன். ஆண்டவரை நோக்கியே காலையிலும் மத்தியானத்திலும்,

மாலையிலும் கூப்பிடுவேன். வேறு யாரையும் உதவிக்கு அழைக்க மாட்டேன். ஏனெனில் அவரே எனக்குப்போதுமானவர்.

எவ்விதமாக அவர் என்னை இரட்சிப்பார் என்று நான் ஊகிக்க முடியாது. ஆனால் அவர் என்னை இரட்சிப்பார் என்று திட்டமாய் அறிவேன். அவர் சிறப்பானதும் நிச்சயமானதுமான முறையில் என்னை இரட்சிப்பார். அவர் விரிவாகவும், உண்மையாகவும், முழுவதுமாகவும்கிரியை செய்வார். சிறப்பானவராக நானே இருக்கிறேன் என்று சொல்லியுள்ளவர் இந்தத் தொல்லையிலிருந்தும் இனிவரும் தொல்லைகளிலிருந்தும் என்னை விடுவிப்பார். மரணம் நேரிட்டு நித்தியத்தின் இரகசியங்கள் பின்தொடரும் போதும், இது உண்மையாகவே இருக்கும். கர்த்தர்என்னை இரட்சிப்பார். இலையுதிர் காலத்தின் இந்த நாளில் இதுவே என் பாட்டாயிருக்கும். இது ஜீவவிருட்சத்தின் கனியைப்போல் இருக்கிறது அல்லவா? நான் அதை உண்பேன். அது என் வாய்க்கு இனிப்பாயிருக்கிறது.

# 29. ஏராளமான உணவு

*அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கிறது (எரேமி.31:12).*

ஒருவரின் ஆன்மா பரலோகத்தின் தோட்டமாயிருப்பது எவ்வளவு சிறப்பானது என்று நினைத்துப் பாருங்கள். அது இனிமேல் வனாந்தரம் போல் இருப்பதில்லை. ஆண்டவரின் தோட்டமாயிருக்கும். பாழ்நிலத்திலிருந்து வேலியால் பிரிக்கப்பட்டு, கிருபையினால்சூழப்பட்டு, போதனையினால் நடப்பட்டு, அன்பினால் பராமரிக்கப்பட்டு, பரலோகத்தின் ஒழுங்குமுறையினால் களைகள் களையப்பட்டு, புனிதமான ஆற்றலினால் பாதுகாக்கப்பட்டு ஒருவரின் மிகப் பிடித்தமான ஆன்மா ஆண்டவருக்கென்று கனிகள் கொடுக்கஆயத்தமாக்கப்படுகின்றது.

சிலவேளைகளில் நீர் இல்லாமல் தோட்டம் காய்ந்து செடிகள் வாடி மடிந்து விடும். என் ஆன்மாவே ஆண்டவர் உன்னை விட்டுச் சென்றுவிட்டால் எவ்வளவு சீக்கிரத்தில் இவ்விதம் நேர்ந்து விடும் என்று நினைத்துப்பார். கீழ் நாடுகளில் நீரில்லாததோட்டம் வெகு சீக்கிரத்தில் பாழானதாகி விடுகின்றது. அங்கு ஒன்றும் முளைக்கவாவது உயிர் பெறவாவது செழித்துவளரவாவது முடியாது. நீர் பாய்ச்சப்பட்டுக் கொண்டேயிருந்தால் அதன் பயன் தோட்டத்தின் அழகில் காணப்படும். ஒருவரின் ஆன்மா பரிசுத்த ஆவியால் ஒரே விதமாகநீர்பாய்ச்சப்பட்டாலும், தோட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஏராளமான நீரைக் கொடுக்கக் கூடிய நீரூற்றுக்கள் இருந்தாலும், இயற்கையாக எவ்வளவு நீர் தேவை என்றாலும், ஒவ்வொரு மரத்துக்கும் செடிக்கும் தேவையான நீர் கிடைத்தாலும், தேவையான வெப்பம்மட்டுமன்றி உணவும் ஒவ்வொன்றிற்கும் தேவையான அளவு கிடைத்தாலும் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஒரு தோட்டத்தில் நீர் நன்றாகப் பாயும் இடம் பசுமையாய் இருப்பதைக் காணலாம். அதேவிதமாக ஆவி வரும் இடத்தையும் சீக்கிரத்தில் கண்டுகொள்ளலாம்.

அண்டவரே, இன்று ஏனெனில் நீர்பாய்ச்சி, உமக்கென்று ஏராளமான கனிகள் கொடுக்கச் செய்யும். இயேசுவின் மூலம் வேண்டிக்கொள்ளுக்றேன் ஆமென்.

## 30. ஆறுதல், அபாயமின்மை, திருப்தி

என்னுடைய வீடு தேவனிடத்தில் இப்படியிராதோ? சகலமும் திட்டம் பண்ணப்பட்டிருக்கிற நிச்சயமான நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார். ஆதலால்என்னுடைய எல்லா இரட்சிப்பும் எல்லா வாஞ்சையும் வளர்ந்தோங்கச் செய்யாரோ? (2.சாமு.23:5).

இது சரியானபடி ஒரு வாக்குறுதியல்ல. பல வாக்குறுதிகளின் தொகுப்பு ஆகும். முத்துக்கள் நிறைந்த ஒருபெட்டியைப் போன்றது. உடன்படிக்கையே எல்லாம் நிறைந்த பெட்டியாகும்.

இவை தாவீது இறுதியாகக் கூறின சொற்களாகும். இன்று இவை என்னுடைய வார்த்தைகளும் ஆகலாம். சந்தர்ப்பம் பெருமூச்சு விடக்கூடியதாய் இருக்கின்றது. எனக்கும் என்னைச்சேர்ந்தவர்களுக்கும் நான் விரும்பும்சூழ்நிலை இல்லை. சோதனைகள், கவலைகள், பாவங்கள் இருக்கின்றன. இவை தலையணையைக் கடினமாக்குகின்றன.

இதோ, ஆறுதலும் இருக்கிறது. நித்திய உடன்படிக்கையை என்னுடன் அவர் செய்திருக்கிறார். யேகோவா என்னுடன் வாக்குறுதியால் இணைந்து, இயேசுவின்இரத்தத்தால் முத்திரை இட்டுள்ளார். நான் என் தேவனுக்குக் கட்டுப்பட்டுள்ளேன். என் தேவன் எனக்குக் கட்டுப்பட்டுள்ளார்.

இது அபாயமின்மையையும் தெளிவாக்குகிறது. ஏனெனில் உடன்படிக்கை நித்தியமானதும், ஒழுங்கானதும், நிச்சயமானதும் ஆகும். நாங்கள் கடந்துபோவதைக் குறித்தாவது, ஏதாவது மறைக்கப்பட்டு விட்டதே என்றாவது, இயற்கையாக எல்லாம் நிலையற்றவை என்றாவது பயப்படவேண்டியதில்லை. உடன்படிக்கையானது வாழ்வுக்கும் மரணத்துக்கும் பாறை போன்ற அஸ்திபாரமாகும்.

தாவீது திருப்தி உள்ளவராயும் இருக்கிறார்.இரட்சிப்புக்காவது, மகிழ்ச்சிக்காவது வேறு எதுவும் தேவையென்று அவர் விரும்பவில்லை. அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார். அதைக்குறித்து மகிழ்ச்சி உள்ளவராய் இருக்கிறார். ஒரு மனிதன் விரும்பக் கூடியது எல்லாம் உடன்படிக்கையே ஆகம்.

என் ஆன்மாவே எல்லாமக்களுக்கும் உடன்படிக்கையாகத் தேவன் அருளியுள்ள உன் ஆண்டவர் இயேசுவை நோக்கிப்பார். அவரையே எல்லாவற்றுக்கும் எல்லாமாக ஏற்றுக்கொள்!

# 31. புனிதமானது, நித்தியமானது, மாறாதது

கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் (1.பேது.1:25).

மக்களுடைய போதனைகளும்மக்களும் வயல்வெளியின் புல்லைப்போல் அழிந்துபோகலாம். ஆனால் கர்த்தருடைய வசனமோ அப்படிப்பட்டதல்ல என்று இங்கு நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் அது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

புனிதமான நற்செய்தி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில்நித்திய கடவுளால் பேசப்பட்டதல்லாமல் வேறெந்த வார்த்தை நித்திய காலமாய் நிலைத்திருக்கக் கூடும்?

நித்திய காலமாய் உயிர் உள்ளதாய் இருக்கும் நற்செய்தி நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அது கர்த்தரின் வாயிலிருந்து வந்தபோது இருந்த உயிர்ப்புடனேயே எப்போதும்இருக்கிறது. ஆதிநாட்களில் வியப்பூட்டும் செயல்களைச் செய்ததுபோல் இப்போதும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நம்பச்செய்யவும், மனமாற்றம் அடையச் செய்யவும், சீர்திருத்தவும், ஆறுதல்படுத்தவும், ஊறுதிப்படுத்தி நிலைநிறுத்தவும், புனிதமாக்கவும் வல்லது.

மாறாததான நற்செய்தி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இன்று பசுமையாய் இருந்து நாளைக்கு வாடிப்போவதில்லை. ஆனால் நிலையான யேகோவாவின் உறுதியான உண்மையாய் இருக்கிறது. கருத்துக்கள் மாறலாம். ஆனால் கடவுளால்

நிரூபிக்கப்பட்ட உண்மைகள் அவற்றைக்கூறினவரைப் போலவே இருக்கின்றன.

மகிழ்ச்சி அளிக்கும் நற்செய்தி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நாம் முழுவதுமாகச் சார்ந்து கொள்ளக் கூடிய நம் ஆண்டவரின் வார்த்தையாகும். என்றென்றைக்கும் என்பது வாழ்வையும், மரணத்தையும்,நியாயத்தீர்ப்பையும், நித்தியத்தையும் குறிக்கிறது. கிறிஸ்து இயேசுவில் நித்திய ஆறுதலுக்காக கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக! நீ இன்றும் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் கர்த்தரின் வசனத்தை உட்கொள்வாயாக!

# 09 செப்டம்பர்

1. கீழ்ப்படிதலில் அன்பில் நிலைத்திருத்தல்
2. அறிந்துகொள்வதற்காகப் பின்பற்று
3. ஆன்மாவின் மரணத்திலிருந்து
4. போரின்றி வெற்றி
5. நான் எங்கிருந்தாலும் என்னோடிருப்பார்
6. வலுவான இதயம்
7. சர்வவல்லவரின் கிருபை
8. நெரிந்ததும் புகைகிறதும்
9. அச்சத்துக்கு இடமுண்டு
10. உள்ளேவருதல் வெளியேபோதல்
11. துன்புறுவோர் வலிமை வாய்ந்த விசுவாசிகள் ஆகிறார்கள்
12. என் வீட்டாரைக் குறித்து என்ன ?
13. பரலோகத்தின் பனி
14. கடவுள் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம்
15. மிகவும் பத்திரமான ஒதுக்கிடம்
16. கண்டிப்பாகப் பரிசு பெறுவோம்
17. பனையையும் கேதுருவையும் போல
18. முழுப் பாதுகாப்பு
19. பாடுவதற்கான காரணம்
20. முழு மனப்பூர்வம்
21. உபத்திரவங்களினால் வரும் ஆசீர்வாதங்கள்
22. படகுகள் ஓடாத விசாலமான நதிகள்
23. தூசியிலும் பதரிலும் இருந்து விடுதலை
24. உயிரளிக்கும் ஓடை
25. பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது
26. மீட்கப்பட்டவர்களின் மத்தியில்
27. இருட்டில் தெய்வீக ஒளி

28. வேலைமுடிந்தது அவரில் இளைப்பாறுங்கள்
29. இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தவே
30. நம் வாயை விரிவாய்த் திறக்க வேண்டும்

# 1. கீழ்ப்படிதலில் அன்பில் நிலைத்திருத்தல்

நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோ.15:10).

கீழ்ப்படிதலில் நிலைத்திருத்தலையும்இயேசுவின் அன்பில் நிலைத்திருத்தலையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. கிறிஸ்துவின் கீழ் வாழும் வாழ்க்கை மட்டுமே நாம் நம் ஆண்டவருக்கு மகிழ்ச்சி அளிப்பவர்கள் என்பதை நிரூபிக்கும். ஆண்டவரின் அன்பில் நாம் திளைக்க வேண்டுமானால் அவர் கற்பனைகளைக்கைக்கொள்ள வேண்டும். நாம் பாவத்தில் வாழ்ந்தால் கிறிஸ்துவின் அன்பில் வாழமுடியாது. கடவுளுக்குத் திருப்தியளிக்கும் தூய்மை உள்ளவர்களாய் இராவிட்டால் இயேசுவுக்குத் திருப்தியளிப்பவர்களாய் இருக்க முடியாது. தூய்மையைப் பற்றிக் கவலைப்படாதவன் இயேசுவின் அன்பைக்குறித்து ஒன்றும் அறியாதவன் ஆவான்.

ஆண்டவரின் அன்பை முழு அன்போடு ருசிப்பது நுண்மையான உணர்வாகும். பாதரசம் வெப்பத்தையும் குளிரையும் உணர்வதை விட அது பாவத்தையும் தூய்மையையும் எளிதில் கிரகித்துக் கொள்ளுகிறதாய் இருக்கும். இளகிய இருதயம் உள்ளவர்களாய்நம்முடைய ஆண்டவர் இயேசுவை மகிமைப்படுத்துவதைக் குறித்து எண்ணத்திலும், வார்த்தையிலும், வாழ்க்கையிலும் கவனமுள்ளவர்களாயிருந்தால் அவர் அன்பில் பல அடையாளங்களைக் காண்பவர்களாயிருப்போம். இப்படிப்பட்ட ஆசீர்வாதம் நிலைத்திருக்க வேண்டுமானால் நாம் தூய்மையில்நிலைத்திருக்க வேண்டும். நாம் ஆண்டவராகிய இயேசுவின் முன் நம் முகத்தை மறைக்காவிட்டால் அவர் தம் முகத்தை மறைக்கமாட்டார். நம் சூரியனை இருட்டாக்கும் மேகத்தைப் பாவம் உண்டாக்குகிறது. நாம் கீழ்ப்படிவதில் கவனமாய் நம்மை முழுவதுமாக அற்பணம் செய்தால்

கடவுள்ஒளியில் இருப்பது போல் ஒளியில் நடக்கிறவர்களாய் இருக்கக்கூடும். இயேசு பிதாவின் அன்பில் நிலைத்திருப்பது போல நாம் இயேசுவின் அன்பில் நிலைத்திருக்கக் கூடும். அவர் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் நாம் மிகவும் சிறப்பு நிலை அடைவோம் என்னும் வாக்குறுதிகொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவரே நான் அவ்விதம் கைக்கொண்டு அச்சிறப்பான நிலை அடைவேனாக!

## 2. அறிந்துகொள்வதற்காகப் பின்பற்று

அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம் (ஓசி.6:3).

ஒரே நேரத்தில் அல்ல படிப்படியாகத்தூய அறிவை அடைவோம். விடாமுயற்சியுடன் சிறிது சிறிதாக் கற்பதே நம் கடமையாகும். மெதுவாகவே முன்னேற்றம் அடைவதைக் குறித்து நாம் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை. ஏனெனில் நாம் எப்படியும் அறிவடைவோம். இதெப்படியெனில் நாம் எவ்வளவு தாமதமாக விளங்கிக்கொண்டாலும் நம் போதகர் ஆகியுள்ள ஆண்டவர் தம் முயற்சியை விட்டுவிட மாட்டார். ஏனெனில் மக்களுடைய முட்டாள்தனத்தினால் அவர் முயற்சி தோல்வியடைவது அவருக்குப் பெருமை அளிக்காது. சாதாரணமான மக்களை ஞானிகளாக்குவதில் ஆண்டவர் மகிழ்ச்சி அடைகிறார்.

தனித்தனிகொள்கைகளைப் பற்றி அலசுவதிலன்றி முக்கியமான கருத்தை மனதில் வைத்து, யேகோவாவைப் பற்றியே அறிந்து கொள்வது நம் கடமையாகும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரில் ஒருவரான கடவுளை அறிந்து கொள்வதே நித்தியஜீவனாகும். இதையே நம் நோக்கமாகக்கொள்வோமாக! ஏனெனில் இவ்விதம் நாம் அறியவேண்டியவைகளையெல்லாம் அறியலாம். ஆண்டவரைப்பற்றி அறிந்து கொள்ள முயன்றால்

கிழிக்கப்பட்டபின் சுகமடைவதையும், நொறுக்கப்பட்டபின் கட்டப்படுவதையும், மரணத்திற்குப்பின் உயிர் அடைவதையும் பற்றிக்கற்றுக்கொள்வோம். சர்வ வல்லமையுள்ள ஆண்டவரின் பாதையில் முழுமனதுடன் சென்றால், நாம் அடையும் அனுபவங்கள் மூலம் கற்க வேண்டியவைகளைக் கற்றுக்கொள்வோம்.

என் ஆன்மாவே, இயேசுவுக்கு நெருங்கி வாழ்ந்து, இயேசுவில் கடவுளை அறிந்து கொள்ள தொடர்ந்துமுற்பட்டால் சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததான கிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொள்வாய். பரிசுத்த ஆவி சகல சத்தியத்துக்குள்ளும் நடத்துவார். இது அவருடைய கிருபை நிறைந்த முயற்சி அல்லவா? இதை நிறைவேற்ற அவர் மேல் சார்ந்திருங்கள்.

## 3. ஆன்மாவின் மரணத்திலிருந்து

என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும் போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் (எசேக்.37:13).

அவ்விதமாகவே நடைபெறும். மரணமடைந்து, பின் உயிர் பெறுகிறவர்கள் அவ்விதமான உயிர்த்தெழுதல் கடவுளால் மட்டுமே ஆகக்கூடியது என்று கண்டிப்பாக அறிந்துகொள்வார்கள்.இவ்விதம் ஆன்மீக மரணமடைந்து, பிரேதக்குழியிலிருந்து வெளிப்படப் பண்ணி, ஆன்மீக வாழ்வின் ஒளியிலும் விடுதலையிலும் மகிழ்ச்சி அடைவதே ஒரு மனிதன் அடையக்கூடிய மாறுதல்களில் எல்லாம் பெரியதும் குறிப்பிடத்தக்கதும் ஆகும். எப்பொழுதும்; உயிருள்ளவராயிருக்கும்கடவுளும், ஆண்டவரும், உயிர் கொடுப்பவருமான கடவுளைத் தவிர வேறுயாரும் இதைச்செய்ய முடியாது.

உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கில் மற்ற எலும்புகளைப் போலவே உலர்ந்து நானும் கிடந்ததை நன்றாக நினைவு கூருகிறேன். இலவசமானதும் ஆற்றல் வாய்ந்ததுமான கிருபை என்மீது தீர்க்க தரிசனம் உரைக்கக் கடவுளின் மனிதனை அனுப்பின நாள் ஆசீர்வதிக்கப்பட்ட நாளாகும். நம்பிக்கை நிறைந்த வார்த்தைகள் உலர்ந்த எலும்புகள் மத்தியில் ஏற்படுத்தின அசைவுக்காகக் கடவுளுக்கு மகிமை உண்டாவதாக! நான்கு திசையிலிருந்தும் வந்து என்னை உயிரடையச்செய்த பரலோகத்தின் ஆவி மிகவும் மங்கள கரமானதாகும். நித்திய காலமாய் உயிரோடிருக்கும் யேகோவாவின் உயிரளிக்கும் ஆவியைப் பற்றி இப்போது நான் நன்றாக அறிந்துள்ளேன். உண்மையாக யேகோவாவே உயிருள்ள ஆண்டவர். ஏனெனில் அவர் என்னை உயிரடையச் செய்தார். என்னுடையபுது வாழ்க்கை ஏக்கங்களும் துக்கங்களும் உள்ளதாய் இருந்தாலும் ஆண்டவர் கொல்லவும் உயிரடையச் செய்யவும் கூடியவர் என்பதை நிரூபிக்கிறது. அவர் ஒருவரே கடவுள் சிறப்பும், கிருபையும், மகிமையும் எல்லாம் அவரே உயிரடைந்த என் ஆன்மா எல்லாவற்றிற்கும் உரியவராக அவரைவணங்குகிறது. அவர் தூய நாமத்துக்கு எல்லா மகிமையும் உண்டாவதாக! நான் உயிரோடிருக்கும் வரை அவரை மகிமைப்படுத்துவேன்.

# 4. போரின்றி வெற்றி

யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன். வில்லினாலும், பட்டயத்தினாலும், யுத்தத்தினாலும், குதிரைகளினாலும், குதிரை வீரரினாலும் நான் அவர்களை இரட்சியாமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தரினாலே அவர்களை இரட்சிப்பேன் என்றார் (ஓசி.1:7).

தம் மிகுந்த இரக்கத்தினால் யேகோவாவே தம் மக்களை இரட்சிப்பார் என்பது மதிப்பு மிக்க வார்த்தையாகும். ஆனால்

பொதுவாகப் பயன்படுத்தப்படும் முறைகளை அவர் உபயோகிக்க மாட்டார். கடவுளின்நாமத்திற்கு ஏற்ற மகிமையைக் கொடுக்க மக்கள் தாமதிக்கிறார்கள். அவர்கள் பட்டயத்தோடும் வில்லோடும் போருக்குச்சென்று வெற்றி பெற்றால் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும், ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. தங்கள் வலது கைகளை மகிமைப்படுத்தி, தங்கள்குதிரைகளையும் குதிரை வீரரையும் குறித்துப் பெருமை கொள்ளுகிறார்கள். ஆகவே எல்லா மகிமையும் தம்மையே சேரவேண்டுமென்று யேகோவா தம் மக்களை வேறுவிதமாக இரட்சிக்கத் தீர்மானிக்கிறார்.

என் ஆன்மாவே மனிதரையல்லாமல் ஆண்டவரையே நோக்கிப் பார். நோக்கிப்பார்ப்பதற்கு வேறு யாரும் இல்லாதபோது கடவுளை வெகு தெளிவாகப் பார்க்கமுடியும் என்று எதிர்பார்த்திரு. என்னைத் தாங்குபவரும் ஆலோசனை கொடுப்பவருமாக எந்த நண்பரும் இல்லையென்றாலும், ஆண்டவர் மட்டுமே என்பக்கம் இருந்தாலும் நான் நம்பிக்கை இழக்காமல் இருப்பேனாக! மேலேகூறப்படும் வசனத்தில் சொல்லியிருப்பது போல அவர் போரின்றி வெற்றி கொடுத்தாலும் மகிழ்ச்சி அடைவேனாக! யேகோவாவே என் மேல் இரக்கம் கொண்டு என்னைப் பாதுகாக்க அவர் கரத்தை உயர்த்தும் போது நான் ஏன் குதிரைகளும் குதிரை வீரர்களும் வேண்டுமென்று கேட்கவேண்டும்? இந்தநாளிலிருந்து இனிவரும் நாட்களிலெல்லாம் நான் பயமில்லாமல் நம்பிக்கையுடன் இருப்பேனாக!

# 5. நான் எங்கிருந்தாலும் என்னோடிருப்பார்

*கர்த்தர் உங்களோடே இருக்கிறார் (2 நாளா.20:17).*

இது யோசபாத்துக்குக் கிடைத்த பெரிய கிருபை. ஏனெனில், அவனுக்குஎதிராகப் பெருங்கூட்டத்தார் வந்திருந்தார்கள். எனக்கும் இது பெரிய கிருபையாகும். ஏனெனில்,

நான் தேவையில் இருக்கிறேன் எனக்கு ஆற்றலோ ஞானமோ இல்லை. ஆண்டவர் என்னோடு இருந்தால் என்னை விட்டு யார் பிரிந்துபோய் விட்டாலும் எனக்குக் கவலை இல்லை. வாழ்க்கைப்போரில் நான் வெற்றி பெறுவேன். என் சோதனைகள் எவ்வளவு பெரியவையாய் இருக்கின்றனவோ அவ்வளவு மகத்தானதாய் என் வெற்றி இருக்கும். ஆண்டவர் என்னோடு இருக்கிறார் என்பதை நான் எப்படி நிச்சயமாய் அறியலாம்?

நான் அவரோடு இருந்தால் அவர் நிச்சயமாய் என்னோடுஇருக்கிறார். அவர் உண்மையுள்ளவர் என்று நான் நம்பி, அவர் வார்த்தைகளை விசுவாசித்து, அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நிச்சயமாக என்னோடிருக்கிறார். நான் சாத்தானின் பக்கம் இருந்தால் தேவன் எனக்கு விரோதமாயிருப்பார். அவர் அப்படித்தான் இருக்கமுடியும்.ஆண்டவருக்கு மகிமையாக நான் வாழ்ந்தால் அவர் என்னை மகிமைப்படுத்துவார்.

இயேசுவே என் இரட்சகராயிருந்தால் கடவுள் என்னோடு இருக்கிறார் என்கிற நிச்சயம் எனக்கு உண்டு. கடவுளின் ஒரே பேறான குமாரனின் கையில் என் ஆன்மாவை ஒப்படைத்து விட்டால் அவர் குமாரன்அவமானப்பட்டுவிடாதபடி என்னைக் காப்பாற்ற அவர் ஆற்றலையெல்லாம் பயன்படுத்துவார் என்று நான் நிச்சயமாய் நம்பலாம்.

சுருக்கமானதாயிருந்தாலும் பொருள் புதைந்துள்ளதான இந்த வசனத்தை இன்று நான் நம்பினால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஆண்டவரே, உம் அடியானில்இந்த வாக்குறுதியை நிறைவேற்றும். என்னோடு வீட்டிலும், தெருவிலும், வயல்வெளியிலும், கடைத்தெருவிலும், பலரோடு இருக்கும் போதும், தனியாய் இருக்கும் போதும் இரும். உம்முடைய மக்கள் எல்லோரோடும் இரும்.

# 6. வலுவான இதயம்

*கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு (சங்.27:14).*

காத்திரு! காத்திரு! கர்த்தருக்கே காத்திரு. அவருக்குக் காத்திருப்பது நன்மை பயக்கும். காத்திருக்கும் ஆன்மாவை அவர் ஒரு நாளும் ஏமாற்றமாட்டார்.

காத்திருக்கும் போது உற்சாகமாயிரு.சிறப்பாக விடுதலை அளிக்கப்படுமென்று எதிர்பார்த்து, அதற்காகக் கர்த்தருக்குத் துதி செலுத்த வேண்டுமென்று ஆயத்தமாயிரு. எனக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வாக்குறுதி வசனத்தின் நடுவில் அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் என்று இருக்கிறது. உங்களுக்குத் தேவையான உதவியைஇது வாக்குப் பண்ணுகிறது. இருதயம் ஸ்திரமாயிருந்தால் உடலின் மற்றப் பகுதிகளெல்லாம் சரிவர வேலை செய்யும். இருதயத்தை அமைதிப்படுத்தவும் மகிழ்ச்சி அடையச் செய்யவும் வேண்டும். அது ஸ்திரமாயிருந்தால் இவ்விதம் இருக்கும் வலிமை வாய்ந்த இருதயம் அமைதியாயும்உற்சாகமாயும் இருந்து மனிதனுக்கு ஆற்றலை அளிக்கிறது. உயிரின் இரகசியமான இருதயத்தை அடைந்து அதற்கு வலுவூட்ட வேறு யாராலும் முடியாது. அதை உண்டாக்கினவரே அதைப் பலப்படுத்த முடியும். கடவுள் பலமுள்ளவர் ஆகையால் பெலன் தேவையானவர்களை அவரே பெலப்படுத்த இயலும். நீ தைரியம்உள்ளவனாய் இரு. ஏனெனில் கர்த்தர் தம் பெலத்தை உனக்கு அருளுவார். புயல் வீசும்போது நீ அமைதியாயும் துக்கம் நேரிடும் போது மகிழ்ச்சியாயும் இருக்கலாம்.

இந்நூலை எழுதியவர் தாவீதைப்போல கர்த்தருக்குக் காத்திரு என்று நான் சொல்லுகிறேன் என்று எழுதக் கூடும்.

நான்உண்மையாகவே அவ்விதம் சொல்லுகிறேன். நீண்டதும் ஆழ்ந்ததுமான அனுபவத்தின் மூலம் கர்த்தருக்குக் காத்திருப்பது நல்லது என்று நான் சொல்லக்கூடும்.

# 7. சர்வவல்லவரின் கிருபை

நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும் (ஓசி.1:10).

சர்வ வல்லவரின் கிருபை அந்நியரைப் பிள்ளைகள் ஆக்கக் கூடும். தனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தவர்களை இவ்விதம் மாற்றி, தம்முடைய மகத்தான செய்கையை அவர்கள் அறிந்து கொள்ளச் செய்வதாகஆண்டவர் இங்கு கூறுகின்றார். இதை வாசிக்கும் அன்பானவரே ஆண்டவர் எனக்கு இவ்விதம் செய்துள்ளார். உமக்கு இதைப்போல் ஏதாவது செய்துள்ளாரா? அப்படியானால் நாம் ஒன்றாய்ச் சேர்ந்து வணங்கத்தக்க அவர் நாமத்தைத் துதிப்போமாக!

நம்மில் சிலர் தெய்வபக்திஇல்லாதவர்களாய் இருந்தபடியால் கடவுளின் வார்த்தை நம் மனச்சாட்சியையும் இருதயத்தையும் நீங்கள் என் ஜனமல்ல என்று உண்மையாகவே தாக்கியுள்ளது. ஆலயத்திலும் வீட்டிலும் திருமறையை வாசித்த போது கடவுளின் ஆவி நம் ஆன்மாவிடம் நீங்கள் என் ஜனமல்ல என்று கூறியுள்ளது.உண்மையாகவே அது துக்கம் நிறைந்ததும், கண்டனம் செய்வதுமான குரலாகும். ஆனால் இப்போது அதே இடங்களில் திருமறையின் மூலமாகவும் கடவுளின் செய்தியின் மூலமாகவும் நீங்கள் ஜீவனுள்ள தேவனின் பிள்ளைகள் என்னும் குரலைக் கேட்கிறோம். இதற்குத் தகுந்த விதமாக நாம்நன்றியுள்ளவர்களாய் இருக்க முடியுமா? இது ஆச்சரியமானதல்லவா? இது மற்றவர்களைப் பொறுத்த வரையிலும் நம்பிக்கை அளிக்கக் கூடியது அல்லவா? சர்வ

வல்லவரின் கிருபை கிட்டாதவர்களாக யாரும் இருக்க முடியுமா? ஆண்டவர் நம்மில் இவ்வளவு ஆச்சரியமாகக் கிரியை செய்துள்ளபடியால் நான்எப்படி யாரைக்குறித்தும் நம்பிக்கை அற்றிருக்க முடியும்?

மகத்தான இந்த வாக்குறுதியை நிறைவேற்றியவர் மற்றவைகளையும் நிறைவேற்றுவார். ஆகையால் நாம் நம்பிக்கையோடு அவரைப் பின்பற்றித் துதித்துக் கொண்டு முன்னேறிச் செல்வோமாக!

# 8. நெரிந்ததும் புகைகிறதும்

அவர் நெரிந்த நாணலை முறியாமலும் மங்கி எரிகிற திரியை அணையாமலும்....... வெளிப்படுத்துவார் (ஏசா.42:3).

ஆகையால் என் ஆண்டவர் என்னை அன்போடு நடத்துவார் என்று நான் நம்பலாம். நான் சிறந்தவன் என்று நினைக்கும் போதே நாணலைப்போல் திடமற்று எளிதில் வளையக்கூடியவனாயும், மதிப்பற்றவனாயும் இருப்பதாக உணருகின்றேன். ஒருவர் என்னிடம் நாணலைப்போல் கூடி நான் உன்னை மதிப்பதில்லை என்றார். இது இரக்கமற்ற குறிப்பானாலும் உண்மை அற்றதில்லை. ஏனெனில் ஆற்றில் வளரும் நாணலைவிட நான் கேவலமானவனாயிருக்கிறேன். நாணலாவது தலைதூக்கி நிற்கிறது. நனோ நெரிந்தவனாய் முழுவதும் நெரிந்தவனாய் இருக்கிறேன். இப்போதுஎன்னில் எந்த இசையும் இல்லை. ஒரு பிளவினால் இன்னிசையெல்லாம் சிதறிப் போய்விடுகிறது. ஆயினும் இயேசு என்னை முறித்து விடமாட்டார். அவர் அவ்விதம் செய்யாதிருக்கும் போது மற்றவர்கள் என்ன செய்தாலும் நான் கவலைப்பட மாட்டேன். இனிய இரக்கம் நிறைந்த ஆண்டவரே உம்பாதுகாப்பில் நான் வாழ்ந்து என் காயங்களை மறந்து விடுகிறேன்.

உண்மையாகவே என்னை மங்கியெரியும் திரிக்கும் ஒப்பிட முடியும். அதில் வெளிச்சம் இல்லை புகை மட்டும் இருக்கிறது. நான் நன்மை செய்பவனாய் இராமல் தொந்தரவு கொடுப்பவனாகவே இருக்கிறேன்.சாத்தான் அருவருப்பான புகையை மட்டும் விட்டு விட்டு என் ஒளியை மங்கிவிடச் செய்துள்ளான் என்றும், சீக்கிரத்தில் ஆண்டவர் என்னை அணைத்து விடுவார் என்றும் பயப்படுகிறேன். சட்டப்படி திரியைக் கத்தரித்து விடுபவர்களைப் போன்றவர்கள் இருந்தாலும் அணைந்து விடுபவர்கள்இல்லையென்றே கண்டிருக்கிறேன். இயேசு என் ஒளியை அணைக்க மாட்டார். ஆகையால் நான் நம்பிக்கை உள்ளவனாய் இருக்கின்றேன். ஆண்டவரே, என் திரியை மறுபடியும் கொளுத்தி நான் உம் மகிமைக்கென்றும் உம் இரக்கத்தைப் புகழ்வதற்கென்றும் வாழச்செய்யும்.

# 9. அச்சத்துக்கு இடமுண்டு

எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான் (நீதி.28:14).

உண்மையான பக்தியில் தொடக்கமும் அஸ்திபாரமும் கர்த்தருக்குப் பயப்படுதலே ஆகும். கடவுளைக் குறித்தபெருமதிப்பும் பயபக்தியும் இல்லாவிடில் மற்ற சிறப்பான பண்புகள் அமைவதற்கு இடம் இருக்காது. கடவுளை வணங்கும் ஆன்மா இல்லாதவன் தூய வாழ்வு வாழ முடியாது.

பாவம் செய்வதைக் குறித்து அச்சம் உள்ளவன் மகிழ்ச்சி நிறைந்தவன் ஆகிறான். சீரிய ஒழுக்கத்தில்தவறிவிடுவோமோ என்னும் அச்சம் உள்ளவன் தாண்டுவதற்கு முன்மட்டும் அல்லாமல் அசைவதற்கு முன்னரே எல்லாவற்றையும் கவனிப்பவனாயிருப்பான். அதாவது தவறு செய்வதையும், கடமையிலிருந்து தவறுவதையும், பாவம் செய்வதையும், தீயநண்பர்களோடு சேர்வதையும்,வம்பளப்பதையும், முற்றிலும் நேர்மையானதாய் இராத நடத்தையையும் குறித்து அச்சம்

உள்ளவனாயிருப்பான். இவ்வித நடத்தை ஒருவரை மனக்குறை உள்ளவர் ஆக்காமல் மகிழ்ச்சி உள்ளவர் ஆக்குகிறது. தன் பணியிடத்தில் தூங்கிவிடும் போர் வீரனைவிட விழிப்புடன் இருக்கும் காவலாளள்மகிழ்ச்சி உள்ளவனாய் இருக்கிறான். தீமையைக் குறித்து முன்னுணர்வுடன் இருந்து அதற்குத் தப்பித்துக் கொள்ளுபவன் கவனமில்லாமல் இருந்து அழிந்து போகிறவனை விட இன்பம் அனுபவிப்பவனாயிருப்பான்.

கடவுளுக்குப் பயப்படுதல் என்னும் அடக்கமான பண்பு அதை உடையவரைத்தேர்ந்தெடுக்கப்பட்ட பாதை வழியே அழைத்துச் செல்கிறது. அப் பாதையைப் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. அங்கே சிங்கம் இருப்பதில்லை, துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை. தீமையென்று காணப்படுகிறவர்களைக் குறித்துக் கூட அச்சம் கொள்ளுகிறவர்களாயிருந்தால் அதுநம்மைச் சுத்தமான கோட்பாட்டை உடையவர்களாக்கும். அது பரிசுத்த ஆவியின் ஆற்றலினால் நம் வஸ்திரங்கள் தீமைகளால் கறைப்படாமல் காத்துக்கொள்ளும். எப்படியாயினும் எப்பொழுதும் பயந்திருக்கிறவன் மகிழ்ச்சி நிறைந்தவன் ஆக்கப்படுவான். சாலோமோன் உலகப்பிரகாரமாகவும் வாழ்ந்து பார்த்தான். புனிதமான அச்சம் உள்ளவனாயும் வாழ்ந்து பார்து;தான். முதல்விதமான வாழ்க்கையில் வெறுமையையே கண்டான். இரண்டாம் விதமான வாழ்க்கையில் இன்பத்தைக் கண்டான். அவன் சோதித்துப் பார்த்தது போல நாம் பார்க்காமல் அவன் கண்டமுடிவின்படியே வாழ்வோமாக!

# 10. உள்ளேவருதல் வெளியேபோதல்

நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் (உபா.28:6).

நியாயப்பிரமாணத்தின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் நீக்கப்படவில்லை. இயேசு தண்டனைகளை அனுபவித்த போது முன்பு கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதிகளை உறுதிப்படுத்தினார். என் ஆண்டவர் கொடுத்துள்ள கட்டளைகளை நான் கைக்கொண்டால் எந்தத் தடையுமில்லாமல் நான்அந்த வாக்குறுதிகளுக்குத் தகுதியுள்ளவன் ஆகிறேன். இந்த நாளிலே துர்ச்செய்திகளைப் பற்றிய அச்சம் இல்லாமல் நான் என் வீட்டுக்குள் வருவேன். என் ஆண்டவரிடமிருந்து நற்செய்தியை எதிர்பார்த்து நான் என் வழிபாட்டு அறைக்குள் நுழைவேன். தற்சோதனை செய்து என்னை அறிந்துகொள்ளவும், என் கடமைகளைப் பற்றித் தளரா ஊக்கத்துடன் ஆராய்ந்து விவகாரங்களைப் புரிந்து கொள்ளவும் நான் அச்சம் கொள்ள மாட்டேன். எனக்குள்ளே, என் ஆன்மாவுக்குள்ளே எவ்வளவோ தொண்டுகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. என்னோடு நிலைத்திருப்பேன் என்றுவாக்களித்த இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதங்கள் எல்லாவற்றின்மேலும் நிலைத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

நான் வெளியே போகவேண்டியது அவசியம். எளிதில் மருளுகிற தன்மையினால் பாவம் நிறைந்த உலகினுள் போகாமல் உள்ளே இருந்துவிடலாம் என்றுநினைக்கத்தோன்றுகிறது. ஆனால் நான் அழைக்கப்பட்டிருப்பதனாலும், என் சகோதரருக்கு உதவி செய்யும் தெய்வ பயமற்றவர்களுக்குப் பயப்படுகிறவனாயிருக்கவும் வெளியே போகவேண்டியிருக்கிறது. நான் விசுவாசத்தின் பாதுகாப்பாளனாகவும், தீமையை எதிர்ப்பவனாகவும்இருக்கவேண்டும். இந்த நாளில் நான் வெளியே செல்லும் போது ஆசீர்வாதத்தோடு சென்றால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆண்டவரே நீர் எங்கு அழைத்துச் செல்கிறீரோ அங்கு உம் பணி செய்ய உம் கட்டளைப்படி உம் ஆவியின் ஆற்றலோடு செல்ல உதவும்.

ஆண்டவரே என்னோடு உள்ளேவந்து என் விருந்தினராய் இரும். பின் என்னோடு வெளியே வந்து வழியில் என்னோடு பேசும் போது என் இருதயத்தைக் கொளுந்து விட்டு எரியச் செய்யும்.

# 11. துன்புறுவோர் வலிமை வாய்ந்த விசுவாசிகள் ஆகிறார்கள்

தன் இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புல.3:27).

இது ஒரு வாக்குறுதியைப் போன்றதே. அது நல்லதாயும் இருந்திருக்கிறது!நல்லதாயிருக்கிறது! நுகத்தைச் சுமக்கிறது எனக்கு நல்லதாயிருக்கும்.

இளம் பிராயத்திலே குற்றவாளியெனத் தீர்க்கப்பட்ட பாரத்தை நான் சுமக்க வேண்டியதாயிருந்தது. அன்றிலிருந்து அது ஆன்மாவை வளமூட்டும் பாரமாகத் தெளிவுபடுத்தியுள்ளது. ஆழ்ந்த அனுபவத்தின் மூலம்கிருபையினால் இரட்சிக்கப்படுவதன் தேவையை நான் கற்றிடா விட்டால் நற்செய்தியை இவ்வளவு நேசித்திருப்பேனா? யாபேசின் தாய் அவரை மிகுந்த துக்கத்தில் பெற்றெடுத்தபடியால் மதிப்பு வாய்ந்தவராய் இருந்தார். அது விதமாகக் கடவுளுக்கென்று மறுபடியும் பிறப்பதில் மிகவும்வருத்தம் அனுபவிப்பவர்கள் கடவுளின் கிருபையில் ஆற்றல் வாய்ந்த விசுவாசிகள் ஆகிறார்கள்.

கண்டனம் செய்கிற நுகம் வெறுப்பூட்டுகிறதாய் இருக்கும். ஆனால் அது மனிதன் எதிர் காலத்தில் புகழ் அடைவதற்கு ஆயத்தம் செய்கிறது. அனைவரின் கண்டனத்துக்கும் ஆளாகிஅவமதிப்படையாதவன் தலைவனாய் இருக்கத் தகுதியற்றவன். புகழ்ச்சி அடையுமுன் வசவை அனுபவித்திராவிடில் அது கிளர்ச்சி ஊட்டுவதாய் இருக்கிறது. பொதுவாகப்

போராட்டம் இன்றி சிறப்படைகிறவர்கள் அவமதிப்படைகிறார்கள்.

பேரிடர், ஏமாற்றம், கடினமான உழைப்பு ஆகியநுகங்கள் விருப்பப்படுபவையல்ல. ஆனால் இளம்பிராயத்தில் அவற்றை ஆண்டவர் நம்மேல் சுமத்தினால் அது பல சமயங்களில் கடவுளை மகிமைப்படுத்தும் பண்பை வளரச் செய்து சபையை ஆசீர்வதிக்கிறது.

என் ஆன்மாவே கழுத்தை வளைத்து உன் சிலுவையை ஏற்றுக்கொள்.இளம்பிராயத்தில் அது உனக்கு நல்லதாயிருக்கும். ஆகையால் அது உனக்கு இப்போது தீமை செய்யாது. இயேசுவுக்காக மனநிறைவோடு அதைத் தாங்கிக்கொள்!

## 12. என் வீட்டாரைக் குறித்து என்ன ?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப்.16:31).

மரணத்தை எதிர்நோக்கியிருந்த மனிதனுக்கு நற்செய்தியாய் இருந்த இது எனக்கும் நற் செய்தியாகும். நான் மரணத்தை எதிர் நோக்கியிருந்தாலும் இது எனக்கு ஏற்றது. நான் உயிரோடு இருக்கும் போது எனக்கு இதுவே போதுமானது. என்னையும் பாவத்தையும், என்னுடைய தகுதியையும் சிறப்பையும் நான்பார்ப்பதில்லை. ஆண்டவர் இயேசுவே கடவுள் அருளிய இரட்சகர் என்று நம்புகிறேன். அவரை விசுவாசிக்கிறேன், அவரில் இளைப்பாறுகிறேன். அவரே எனக்கு எல்லாவற்றுக்கும் எல்லாம் ஆனவர் என்று ஏற்றுக் கொள்கிறேன். ஆண்டவரே, நான் இயேசுவை நம்புகிறபடியால்இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். நித்திய காலமாய் இரட்சிக்கப்பட்டிருப்பேன். இதனால் உம் நாமம் மகிமையடைவதாக! தன்னயத்திலிருந்தும் உலகப்பற்றிலிருந்தும்

எல்லாவிதமான தீமையிலிருந்தும் இரட்சிக்கப்பட்டவன் என்று நான் ஒவ்வொரு நாளும் செயல் மூலம் விளக்குவேனாக!

என் வீட்டாரைப் பற்றிய சொற்களையும் நான் கவனித்துக் கொண்டேன். நீர் முழு வாக்குறுதி அளித்திருக்கும் போது நான் பாதி வாக்குறுதியோடு ஓடிவிடமாட்டேன். என் வீட்டார் எல்லாரையும் இரட்சியும் என்று மன்றாடுகிறேன். எனக்கு நெருங்கியவர்களாயும் அருமையானவர்களாயும்உள்ளவர்களை இரட்சியும். எனக்குப் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இருந்தால் அவர்களையும் மனமாற்றம் அடையச் செய்யும். என் வேலையாட்களுக்கும், என்னோடு ஒரே வீட்டில் குடியிருப்பவர்களுக்கும், எனக்காக வேலை செய்பவர்களுக்கும் கிருபையாய் இரும். நான் இயேசு கிறிஸ்துவைவிசுவாசித்தால் இந்த வாக்குறுதியை நேராக எனக்கு அளிக்கிறீர். நீர் சொல்லியுள்ள பிரகாரம் செய்ய உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்னும் வாக்குறுதி நிறைவேறும் வரை ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் என் சகோதரர்,சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள், நண்பர், உறவினர்கள், வேலையாட்கள் ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி வேண்டிக்கொள்வேன்.

# 13. பரலோகத்தின் பனி

அவருடைய வானமும் பனியைப் பெய்யும் (உபா.33:28).

கிழக்கு நாடுகளில் இயற்கை உலகிற்குப் பனியால் என்ன பயன் ஏற்படுகிறதோ அதே விதமான பயன் பரிசுத்த ஆவியினால் கிருபையின் துறையில் ஏற்படுகிறது. அது எனக்கு மிகவும் தேவையாயிருக்கிறது. கடவுளின் ஆவி இல்லாவிட்டால் நான் உலர்ந்து காய்ந்தவனாய் இருக்கிறேன். நான் வாடிவதங்கி இல்லாமற்போய் விடுகிறேன். எவ்வளவு அருமையாக இந்தப் பனி

எனக்குப் புத்துயிர் அளிக்கிறது. அது ஒரு முறை என்மேல் இறங்கி விட்டால் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் சுறுசுறுப்பானவனாகவும், உள்ளுரம் வாய்ந்தவனாகவும், மேம்பட்டவனாகவும் இருக்கிறேன். இதற்குமேல் எனக்கு ஒன்றும் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் மறுவாழ்வையும் அதற்குத் தேவையான எல்லாவற்றையும் எனக்கு அளிக்கிறார். ஆவியின் பணியைத் தவிர மற்றவையெல்லாம் எனக்கு ஒரு பொருட்டல்ல. நான் கேட்கலாம், வாசிக்கலாம், பாடலாம், ஜெபிக்கலாம்,திருவிருந்தில் பங்கு பெறலாம், ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்னைச் சந்திக்கும் வரை ஓர் ஆசீர்வாதத்தையும் பெற்றதாக உணர்வதில்லை. ஆனால் அவர் பனித்துளியால் என்னை நனைக்கும் போது கிருபையின் எல்லா முயற்சிகளும் இனிமையாயும் பயன் அளிக்கக் கூடியவையாயும்இருக்கின்றன.

இது எனக்கு எவ்வளவு அருமையான வாக்குறுதியாகும்! அவருடைய வானம் பனியைப் பெய்யும். எனக்குக் கிருபை அருளப்படும். என்னுடைய இயற்கையான வரட்சி உலகின் கடும் வெப்பம் சாத்தானால் ஏற்படும் சோதனையாகிய வேனில் வெங்காற்று இவற்றின் தாக்குதலுக்குவிடப்படுவதில்லை. இந்த நேரத்தில் நான் ஆண்டவரின் மென்மையானதும் அமைதியானதுமான பனி என்மேல் இறங்கி ஊறச் செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அதற்குத்தடை ஏதும் இல்லையே! வயல் வெளியின் புல்லைப்போல் என்னை வாழச் செய்தவர் புல்லுக்காகக் கவலைப்படுவது போல்எனக்காகவும் கவலைப்படுவார். வானத்திலிருந்து எனக்குப் புத்துயிர் அளிப்பார். பனி வேண்டுமென்று புல் என்னைப் போல் கேட்க முடியாது. வேண்டுதல் செய்ய இயலாத புல்லைக்கூட சந்திக்கும் ஆண்டவர் மன்றாடும் தம்முடைய பிள்ளையைக் கண்டிப்பாகச் சந்திப்பார்.

# 14. கடவுள் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளம்

சோதனையைச் சுமக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான் (யாக்.1:12).

ஆம்!சோதனையைச் சகித்துக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான். அவன்மேல் புண்ணாற்றும் கண் மருந்து பரலோகத்திலிருந்து ஊற்றப்படும் வரை யாராலும் அதைக் காண முடியாது. ஆனால் அதற்கு அவன் சகிக்கிறவனாய் இருக்கவேண்டும். கடவுளுக்கு விரோதமாய்க் கலகம் செய்கிறவனாயாவதுநேர்மையிலிருந்து விலகிச் செல்கிறவனாயாவது இருக்கக் கூடாது. அக்கினியின் ஊடாக நடந்து சென்றவனும் அவ்விதம் செல்கையில் போலியானவன் என்று அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டவனும் பாக்கியவான்.

சோதனை முடிந்தபின் கடவுள் அவன் நடத்தையை ஏற்றுக் கொள்ளுகிறார்என்பதன் அடையாளமாக ஜீவகிரீடத்தைப் பெறுவான். ஆண்டவர் அவன் வாழட்டும் அவன் தராசில் நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்படவில்லை என்று சொல்வது போல் இருக்கும். அவன் பரிசாக அடைவது வாழ்வேயாகும். வெறும் வாழ்க்கையல்ல, ஆனால் பரிசுத்தமும் மகிழ்ச்சியும்உள்ளவனாய் அவனைக் குறித்த ஆண்டவரின் திட்டத்தை உணர்ந்து வாழும் மெய்யான வாழ்க்கையாகும்.

நம்பிக்கையையும் அன்பையும் குறித்த கடுமையான சோதனைகளை மேற்கொண்டவர்கள் மேலான ஆன்மீக வாழ்க்கையையும் மகிழ்ச்சியையும் அனுபவித்திருப்பார்கள். ஆண்டவர் தம்மைநேசிப்பவர்களுக்கு ஜீவ கிரீடத்தை வாக்குப்

பண்ணியிருக்கிறார். ஆண்டவரை நேசிப்பவர்கள் மட்டு;மே சோதனையின் நேரத்தில் உறுதியுடன் நிலைத்திருப்பார்கள். மற்றவர்கள் அமிழ்ந்து விடுவார்கள். அல்லது சிடுசிடுப்பார்கள் அல்லது கோழைத்தனமாக உலகப் பிரகாரமான வாழ்க்கையில்ஈடுபட்டு விடுவார்கள். என் ஆன்மாவே நீ உன் ஆண்டவரை நேசிக்கிறாயா? அப்படியானால் அந்த அன்பு சோதனைக்குள்ளாக வேண்டும். தண்ணீர்கள் அதை அணைத்துவிட முடியாது. ஆண்டவரே எம் அன்பு முடிவு பரியந்தம் என் அன்பைப் பேணிக் காக்கட்டும்.

# 15. மிகவும் பத்திரமான ஒதுக்கிடம்

*அவர் காற்றுக்கு ஒதுக்காகவும் பெரு வெள்ளத்துக்குப் புகலிடமாகவும்•••••••••இருப்பார் (ஏசா.32:2).*

அவர் யாரென்று நம்மெல்லோருக்கும் தெரியும். இரண்டாவது மனிதனானவரும் பரலோகத்திலிருந்து வந்த ஆண்டவரும் மனுஷ குமாரனுமானவரைத் தவிர அவர் வேறு யாராயிருக்க முடியும்? அவர் தம் பிள்ளைகளுக்கு எவ்வளவு சிறந்த ஒதுக்கிடமாய் இருந்திருக்கிறார். காற்றின்முழு வேகத்தையும் அவர் தாங்கிக் கொண்டு அவரில் மறைந்து கொள்ளுகிறவர்களுக்கு ஒதுக்காயிருக்கிறார். இவ்விதமான கடவுளின் கோபத்துக்கு நாம் தப்பித்திருக்கிறோம். இவ்விதமாகவே மனிதரின் கோபத்துக்கும் இவ்வாழ்க்கையின் கவலைகளுக்கும் மரணபயத்துக்கும் தப்புவோம்.ஆண்டவரின் பின் மறைந்து நின்றால் உடனடியாகவும் நிச்சயமாகவும் காற்றின் வேகத்துக்குத் தப்புவிக்க முடியும்போது நாம் ஏன் காற்றில் நின்று அல்லல் படவேண்டும்? இன்று அவரிடம் ஒடி சமாதானமாய் இருப்போமாக!

பொதுவாக தொல்லை என்னும் காற்று வலுவடைந்து புயலாகிஅதன் முன்னுள்ள எல்லாவற்றையும் வாரிக் கொண்டு சென்று விடுகின்றது. உறுதியாயும் திடமாயும் காணப்பட்டவை

அதன் வலிமையால் ஆட்டங் கண்டு விடுகின்றன. இம்மையின் வாழ்வுக்காகவும் நாம் நம்பியிருந்தவை பல வீழ்ச்சியடைந்து விடுகின்றன. நம் ஆண்டவராகிய இயேசு மகிமைபொருந்திய மனிதனாவர் ஒரு நாளும் காற்று வீசித்தள்ள முடியாத ஒதுக்கிடம் போன்றவர். எல்லாவற்றையும் வாரிக்கொண்டு போகும் புயலை அவரில் பதிவு செய்கிறோம் ஆனால் நாம் மகிழ்ச்சி நிறைந்த அமைதி உள்ளவர்களாய் இருக்கிறோம்.

இந்த நாளிலே நாம் மறைவிடத்தில்ஒளிந்திருந்து அதன் பாதுகாப்பில் அமர்ந்து பாடி மகிழுவோமாக! இன்ப வாழ்வுக்குரியவரான இயேசுவே நாங்கள் உம்மை எவ்வளவாய் நேசிக்கிறோம்! அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் புயல் வீசும்போது நீர் எங்களுக்கு ஒதுக்கிடமாய் இருக்கிறீர்.

# 16. கண்டிப்பாகப் பரிசு பெறுவோம்

சீஷன் என்னும் நாமத்தின் நிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்றுமெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்.10:42).

அந்த அளவு உதவியாவது நான் செய்ய முடியும். ஆண்டவரின் ஊழியக்காரனுக்கு இரக்கம் காட்டி உதவி செய்ய என்னால் முடியும். அவர்கள் எல்லோரையும்நான் நேசிக்கிறேன் என்றும் அவர்கள் கால்களைக் கழுவுவதைச் சிறப்பான செயலாகக் கருதுகிறேன் என்றும் ஆண்டவர் அறிவார். எஜமானரின் பொருட்டு சீடரை நான் நேசிக்கிறேன்.

ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவன் என்று சிறப்பில்லாத செயலை நம்ஆண்டவர் எவ்வளவு கிருபையுடன் சிறப்பித்துக் கூறுகிறார் என்பதை நினைத்துப் பாருங்கள். நான் எவ்வளவு ஏழையானாலும் இதைச் செய்யலாம்.

நான் எந்தத் தாழ் நிலையில் இருந்தாலும் இதைச் செய்யலாம். நான் மனமகிழ்வோடு இதைச் செய்வேன். சாதாரணமான இச்செயலைக்கூட ஆண்டவர்கவனிக்கிறார். அது அவரைப் பின் பற்றுகிறவர்களில் சிறியவரான ஒருவருக்குச் செய்யப்படும்போது அவர் அக்கறையோடு பார்க்கிறார். அச் செயலின் விலைமதிப்பையாவது திறமையையாவது அளவையாவது அவர் பார்ப்பதில்லை. ஆனால் அது எந்த நோக்கத்துடன் செய்யப்படுகிறது என்பதையேகவனிக்கிறார். ஒருவர் அவருடைய சீடராயிருப்பதால் நாம் அச்சீடருக்குச் செய்வதை அச் சீடரின் ஆண்டவர் பார்த்துக் கைம்மாறு செய்கிறார். நாம் செய்யும் செயலின் தகுதிக்காக அவர் ஈடு செய்வதில்லை. அவர் கிருபையின் ஐசுவரியத்தின்படி செய்கிறார்.

நான் ஒரு கலசம்தண்ணீர் மட்டும் கொடுக்கிறேன். அவர் நான் குடிக்க ஜீவ தண்ணீர் அளிக்கிறார். அவருடைய சிறியரில் ஒருவனுக்கு நான் கொடுக்கிறேன். அவர் என்னையும் அப்படிப்பட்டவரில் ஒருவனாகக் கருதுகிறார். அவருடைய கிருபையினால் வழி நடத்தப்பட்டே நான் அவ்விதம் கொடுக்கிறேன். ஆனால்அவர் நான் என் பலனை அடைவேன் என்று வாக்களிக்கிறார்.

# 17. பனையையும் கேதுருவையும் போல

நீதிமான் பனையைப்போல செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல வளருவான் (சங்.92:12).

இந்த மரங்களைமனிதன் விரும்பியபடி கத்தரித்துச் செப்பனிடுவதுமில்லை. இவற்றில் வேண்டாத கிளைகளை அவன் வெட்டி அகற்றுவதுமில்லை. இவை ஆண்டவரின் மரங்கள் அவர் பராமரிப்பில் அவை செழித்து வளருகின்றன. ஆண்டவரின் பரிசுத்தவான்களும் இவ்விதமே அவரால் பராமரிக்கப்படுகிறார்கள். மேலேகுறிப்பிடப்பட்ட மரங்கள்

எப்போதும் பசுமையாய் ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் அழகாய்க் காணப்படுகின்றன. விசுவாசிகள் சில வேளைகளில் தூய்மை அற்றவர்களாயும் சிலவேளைகளில் தெய்வ பக்தி அற்றவர்களாயும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாக் காலத்திலும் ஆண்டவரின்அழகு உடையவர்களாய் இருக்கிறார்கள். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மரங்கள் எங்கே இருந்தாலும் அவை கவனிக்கத்தக்கவையாய் இருக்கின்றன. பனை அல்லது கேதுரு ஓங்கி வளர்ந்து நிற்கும் நிலப்பகுதியைப் பார்ப்பவர் எவரும் கம்பீரமான அவற்றின் தோற்றத்தால் கவரப்படாமல்இருப்பதில்லை. மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைக்கப்படாமல் இருப்பது போல இயேசுவைப் பின்பற்றுகிறவர்களும் பார்க்கிறவர்கள் எவராலும் கவனிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஒரு கிளை கூட இல்லாமல் தன் முழு வலுவையும் உயர்ந்து வளரும் ஒரே மரத்தில் இருக்கச்செய்யும் பனைபோல கடவுளின் பிள்ளையும் செழித்து வளருகிறான். அவன் சிறப்பான தலைப்பாகம் உள்ள தூண் போல இருக்கிறான். அவன் ஆற்றல் வலது இடது புறம் செல்வதில்லை. ஆனால் நேரே பரலோகத்தை நோக்கிச் சென்று அதற்கு எவ்வளவு அருகில் கனிகொடுக்க முடியுமோ அவ்வளவுஅருகில் கனி கொடுக்கிறது. ஆண்டவரே நானும் இவ்விதம் ஓங்கி வளரச் செய்யும்.

கேதுரு மரமானது பலத்த காற்றையும் தாங்கிக் கொண்டு எப்போதும் பனிமூடியிருக்கும் மலைகளில் வளருகிறது. அதன் உட்புறம் வெப்பமாயும் அதன் கிளை வலுவானதாயும் இருக்கத்தக்கதாக ஆண்டவரே அதைஉயிர்ச் சாறினால் நிரப்புகிறார். ஆண்டவரே நானும் அவ்விதம் வளர்ந்து நிலைக்கச் செய்யும் என்று வேண்டிக் கொள்கிறேன். ஆமென்!

# 18. முழுப் பாதுகாப்பு

பென்யமீனைக் குறித்து: கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான். அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றார் (உபா.33:12).

கடவுளோடு நெருங்கி வாழ்வதன் பயனாய்க் கிடைக்கும் பாதுகாப்புப் போல சிறந்தது வேறெதுவுமில்லை. அவருக்கு மிக அருமையானவனுக்கு ஆண்டவர் அதைப்போன்ற உறுதி வாய்ந்ததும் பாதுகாப்பானதுமான வேறு இடம் கண்டுபடிக்க முடியாது. ஆண்டவரே நான் அப்போதும் உம்நிழலில் காயமடைந்த உம் உடலின் பாகத்தில் நெருங்கி வாழ உதவி செய்யும். ஒரு முறை சிறப்பாக உம் அருகில் இருந்தால் அங்கேயே எப்போதும் நிலைத்திருப்பேன்.

தாம் தெரிந்தெடுக்கிறவர்களுக்கு ஆண்டவர் அருளும் பாதுகாப்பு எப்படிப்பட்டதென்று பாருங்கள். நல் ஆதரவானகூரை அல்லது குண்டு ஊடுருவாத பாதுகாப்பறை அல்லது தேவதூதனின் இறக்கை அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதில்லை. யேகோவாவே அவர்களை மூடிக் காப்பாற்றுவார். அவ்விதம் மூடப்பட்டிருக்கும் போது எதுவும் நம்மைத் தாக்க முடியாது. ஒருநாளுக்கு எத்தனை மணிநேரம் இருந்தாலும் நாள் முழுவதும்ஆண்டவர் நம்மை மூடியிருப்பார். ஆண்டவர் இந்த நாளில் நான் மனமார இவ்விதமான அன்பின் பாதுகாப்பிலும் உம் ஆற்றலின் பாதுகாப்பிலும் இருப்பேனாக!

மேலே கூறப்பட்ட வாக்குறுதியின் மூன்றாம் பகுதி ஆண்டவர் பென்யமீனின் மலைகளுக்கு ஊடே தம் ஆலயத்தில் வாசம் பண்ணுவார்என்பதைக் குறிக்கிறதா? அல்லது பென்யமீனின் பாரம் வைக்கப்படும் இடத்தில் இருப்பார் என்பதைக் குறிக்கிறதா? எதுவாயினும் ஆண்டவர் தம் பரிசுத்தவான்களின் ஆதரவும் பெலனுமானவர் என்பது நிச்சயம். ஆண்டவரே உம் உதவி

எனக்குக் கிட்டுவதாக. அப்படியானால் என் ஆற்றலேஎனக்குப் போதுமானது.

## 19. பாடுவதற்கான காரணம்

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார். அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தன்னுடையஅன்பினிமித்தம் அமர்ந்திருப்பார். அவர் உன்பேரில் கெம்பீரமாய் களிகூருவார் (செப்.3:17).

இது எவ்வளவு சிறப்பான வாக்குத்தத்தம் என்று பாருங்கள். யேகோவா வல்லமையுள்வராகத் தம் மக்கள் நடுவில்இருப்பார். சமாதானத்திலும் நம்பிக்கையிலும் நமக்கு ஊக்கமளிக்க அவர் பிரசன்னமே போதுமானது. நம் யேகோவாவிடம் அளவிட முடியாத ஆற்றல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அவர் தம் சபை நடுவே இருக்கிறார். ஆகையால் அவர் மக்கள் ஆர்ப்பரித்துக் கெம்பீரிப்பார்களாக!

அவர்சமூகம் மட்டும் நம்மோடு இருப்பதில்லை. அவர் இரட்சிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். அவர் இரட்சிப்பார். அவர் எப்போதும் இரட்சித்துக் கொண்டேயிருக்கிறார். அதனாலேயே இயேசு என்னும் பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது. நமக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று நாம் அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் அவர் இரட்சிப்பதற்கு வல்லமை உள்ளவராயிருக்கிறார்.

அதுமட்டுமல்ல அவர் நித்தியமாய் மாறாதவராயிருக்கிறார். அவர் நேசிக்கிறார். நேசிப்பதில் இளைப்பாறுதல் காண்கிறார். அவர் அன்பு கூருவதை நிறுத்தமாட்டார். நேசிப்பது அவருக்கு மகிழ்ச்சிஅளிக்கிறது. நாம் அன்பு கூருகிறவர்களில் கெம்பீரமாய்க் களி கூருகிறார். இது மிகவும் அதிசயமானது. கடவுள்

எல்லாவற்றையும் படைத்தபோது பாடவில்லை. அது நல்லது என்று கண்டார் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் இரட்சிக்கத் தொடங்கின போது பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவர் கெம்பீரித்துப் பாடி களிகூர்ந்தார். அதை நினைத்துப் பார்த்து ஆச்சரியப்படு. தாம் தெரிந்தெடுத்த மணவாட்டியைக் குறித்து யேகோவா விவாகத்திற்கான பாட்டுப் பாடுகின்றார். அவள் அவர் நேசிப்பவள். அவர் மகிழ்ச்சி ஆனவள் அவர் இளைப்பாறுதலானவள் அவர் பாட்டானவள்.ஆண்டவராகிய இயேசுவே உம்முடைய அளவற்ற அன்பினால் உம்மில் களிகூரவும் கெம்பீரித்துப் பாடவும் போதித்தருளும்.

# 20. முழு மனப்பூர்வம்

உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும்.... உள்ளவர்களாயிருப்பார்கள் (சங்.110:3).

இவ்விதம் இருப்பதால் கிருபையின் கடவுள் ஸ்தோத்திரிக்கப்பட்டவராய் இருப்பாராக! ஆதிகாலத்திலேயே தனக்கென்று தெரிந்தெடுத்த மக்கள் அவருக்கு இருக்கிறார்கள். ஆதாமின் வேண்டுமென்றே தவறு செய்யும் மற்றகுமாரரைப் போல் இவர்கள் இயற்கையாகவே பிடிவாத குணமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் கடவுளின் ஆற்றல் வெளிப்படும் நாளில் கிருபையினால் அவரின் சர்வ வல்லமை காணப்படும் போது அவர்கள் மனமாற்றம் அடைய மனம் உள்ளவர்களாயும் இயேசுவை நம்புகிறவர்களாயும் ஆகிறார்கள்.விருப்பமில்லாதவர்கள் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. ஆனால் அவர்கள் விருப்பத்தோடு மனமாற்றம் அடைய ஏவப்படுகிறார்கள்! மனதை வலுக்கட்டாயப்படுத்தி மாற்றாமலே அதை அடக்கி ஆளும் ஆற்றல் எவ்வளவு ஆச்சரியமானதாகும் என்று நினைத்துப்

பாருங்கள். கடவுள் பூட்டைஉடைப்பதில்லை. ஆனால் அவர் ஒருவரே பயன்படுத்தக் கூடிய சாவியினால் அதைத் திறக்கின்றார்.

இப்பொழுது நாம் ஆண்டவர் சித்தப்படி இருக்கவும், செய்யவும், துன்புறவும் ஆயத்தமாய் இருக்கிறோமா? நாம் ஒழுங்குக் கட்டுப்படாதவர்கள் ஆகும்பொழுது அவர் வல்லமைமிக்கவராய் நம்மண்டை வருவதே ஒரே வழியாகும். உடனே நாம் மனமொத்து அவர் கட்டளைகளின்படி நடக்கிறோம். கடவுளின் நன்மைக்கென்றும் அவரால் படைக்கப்பட்ட மக்களின் நன்மைக்கென்றும் சிறப்பான முயற்சியெடுக்க அவர் இந்த நாளில் வல்லமை மிக்கவராய் என்னிடம் வருவாராக!ஆண்டவரே நான் உம்மால் உம் தூய நோக்கத்திற்கென்று பயன்படுத்தப்பட விருப்பமும் ஆர்வமும் உள்ளவனாய் இருக்கிறேன். நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பம் என்னிடத்தில் இருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை என்று நான் துயரப்படாதபடி எனக்கு மன உரம்கொடுப்பதோடு ஆற்றலையும் கொடும்.

# 21. உபத்திரவங்களினால் வரும் ஆசீர்வாதங்கள்

*உபத்திரவம் பொறுமையை....... உண்டாக்குகிறது என்று அறிந்து (ரோ.5:3).*

இது கொடுக்கப்பட்டிருக்கிறபடி ஒரு வாக்குறுதியாய் இராவிட்டாலும் அதன்சாரத்தில் ஒரு வாக்குறுதியாய் இருக்கிறது. நமக்குப் பொறுமை தேவை. அதை எப்படி அடைவதென்று இங்கு காண்கிறோம். நீச்சல் அடித்துப் பழகுவதனாலேயே மனிதர் நீச்சல் அடிக்கக் கற்றுக் கொள்வதுபோல், சகித்துப் பழகுவதனால் சகிப்புத் தன்மையைக் கற்றுக் கொள்கிறோம்.கட்டாந் தரையில் நீச்சல் கற்றுக்கொள்ள முடியாது. அதே விதமாக உபத்திரவங்கள்

இல்லாமல் பொறுமையைக் கற்றுக்கொள்ள முடியாது. எல்லாவற்றிலும் கடவுளுடைய சித்தத்துக்கு விரைவில் இணங்கும் மன அமைதி அடைவதற்காக உபத்திரவங்களைச் சகிப்பது நல்லது என்று நீங்கள்நினைக்கவில்லையா?

மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் உபத்திரவம் என்று ஒருமையில் கூறப்பட்டிருக்கிறது. இயற்கையின்படி இது சரியல்ல. ஆனால் இயற்கை முறைக்கு உள்ளடங்காத விதமாக இது சரியாகும். உபத்திரவம் எரிச்சல் அடையும் தன்மையையும், நம்பிக்கைஇன்மையையும், எதிர்ப்புணர்ச்சியையும் உண்டாக்குகிறது. புனிதத்தன்மை வாய்ந்த கிருபையினாலேயே அது நம்மில் பொறுமையை வளர்க்கிறது. தூசு படிவதற்காக நாம் கோதுமையை சூடடிப்பதில்லை. ஆனால் உபத்திரவமாகிய சூடடிக்கும் கோல் கடவுளின் களத்தில் இவ்வேலையைச் செய்கிறது. ஒருமனிதனுக்கு இளைப்பாறுதல் அளிக்க நாம் அவனை அலைக்களிப்பதில்லை. ஆனால் நம் ஆண்டவர் தம் பிள்ளைகளுக்கு அவ்விதம் செய்கிறார். மெய்யாகவே இது மக்கள் செயல்படும் முறையல்ல. ஆனால் சர்வ ஞானமுள்ள நம் கடவுளின் மகிமையைப் பெருக்க இது மிகவும் உதவுகிறது.

என்உபத்திரவங்கள் மூலமாக நான் ஆசீர்வாதங்கள் பெறக்கூடிய கிருபை எனக்கு அளிக்கப்படுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவை கிருபையாய் செயல்படுவதை நான் ஏன் தடுக்க விரும்ப வேண்டும்? ஆண்டவரே எனக்கிருக்கும் தொல்லைகளை நீக்கிவிட வேண்டுகிறேன். அதைவிடப் பத்து மடங்குஅதிகமாக என் பொறுமையின்மையை அகற்றிவிட வேண்டிக் கொள்கிறேன். மதிப்பு மிக்க ஆண்டவராகிய இயேசுவே உம் சிலுவையினால் என் உள்ளத்தில் பொறுமையின் மனச்சாட்சித் தோற்றத்தைப் பதித்து விடும்.

# 22. படகுகள் ஓடாத விசாலமான நதிகள்

மகிமையுள்ள கர்த்தர் அங்கே நமக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம் போலிருப்பார். வலிக்கிற படவு அங்கே ஓடுவதும் இல்லை. பெரிய கப்பல் அங்கே கடந்து வருவதும் இல்லை (ஏசா.33:21).

பொதுவாக உலகப் பிரகாரமாக சிறப்பு வாய்ந்த எந்த நன்மையோடும் தொடர்புள்ளதாயிருக்கும் குறைபாடுகள் ஏதும் இல்லாத சிறந்த நன்மையாக ஆண்டவர் நமக்கு இருப்பார். ஒரு நகரில் விசாலமான நதிகள் இருக்குமேயானால் அது வலிக்கிறபடவுகளினாலும் போர்க் கப்பல்களினாலும் தாக்கப்பட ஏதுவுண்டு. ஆனால் ஆண்டவர் மகிமையுள்ளவராய் இருந்து அங்குள்ளவர்களுக்கு எந்த விதமான பயமும் இல்லாமல் பாதுகாக்கிறார் என்று இங்கு விளக்கப்படுகிறது.

ஆண்டவரே விசாலமான நதிகளைப்போல் நீர் எனக்குச் செல்வம்அனுப்பினால் வலிக்கிற படவுகளைப்போல் உலகப் பற்றும் பெருமையும் என்னைத் தாக்காமல் இருக்கச் செய்யும். நீர் எனக்கு நற்சுகமும் மன மகிழ்ச்சியும் அளித்தால் பெரிய கப்பலைப் போல் உலகப் பொருள்களை அனுபவித்து சுக வாழ்வு வாழ வேண்டுமென்ற ஆசை என்னை ஆட்கொள்ளாமல்இருக்கச் செய்யும். உமக்கு ஊழியம் செய்வதில் ஓடிப்பாயும் நதியைப் போல் நான் சிறப்பான வெற்றி உள்ளவனாயிருந்தால் பயன் நிறைந்த வாழ்க்கையில் மிதக்கும் அழுக்குகளாகிய தற்பெருமையும் தன்னம்பிக்கையும் ஒரு நாளும் என்னில் காணப்படாமலிருக்கச் செய்யும். உம்முகத்தின் பிரகாசத்தினால் ஆண்டாண்டாக நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாலும் வலுக்குறைந்த விசுவாசிகளை அவமதியாமலும் என்மேல் உள்ள முழு நம்பிக்கையால் நான் குறைபாடே இல்லாதவன் என்னும் எண்ணம் மிதந்து வராமலும் இருக்கச் செய்யும். ஆண்டவரே எனக்கு வேதனையைக்கூட்டாததும் பாவம் செய்யத்தூண்டாததுமான ஆசீர்வாதத்தைக் கொடுத்தருளும்.

# 23. தூசியிலும் பதரிலும் இருந்து விடுதலை

இதோ ஜல்லடையினால் சலித்தரிக்கிறது போல இஸ்ரவேல் வம்சத்தாரை எல்லா ஜாதிக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன். ஆனாலும் ஒரு கோதுமை மணியும் தரையிலே விழுவதில்லை (ஆமோ.9:9).

சலிக்கும் வேலை இன்றும் நடைபெற்று வருகின்றது. நாம் எங்கு போனாலும் புடைக்கவும் சலிக்கவும்படுகிறோம். எல்லா நாடுகளிலும் கடவுளின் மக்கள் தானியத்தை சல்லடையில் சலிப்பது போல சலித்தரிக்கப்படுகிறார்கள். சில வேளைகளில் சாத்தான்சல்லடையைத் தன் கைகளிலே பிடித்து நம்மை ஒழித்துக் கட்டுவதற்காக மேலும் கீழும் தூக்கிப் போடுகிறான். நம்பிக்கையின்மையால் நம் மானிட இதயமும் அமைதியை இழந்து அச்சம் கொண்டு கலக்கமடைகிறது. உலகமும் இச் செயலுக்குக் கை கொடுத்து நம்மை ஒரு திசையிலிருந்து மறுதிசைக்கு இழுத்து இழுத்து அலைக்கழிக்கிறது. துர்அதிஷ்டவசமாக சமயக் கோட்பாடுகளுக்கு அடங்காத சபையும் சலித்தரிக்கும் செயலைத் துரிதமாக்குவதற்குக் கைகொடுக்கிறது.

நடப்பது நடக்கட்டும். இவ்விதமாகத்தான் பதரும் உமியும் கோதுமை மணியிலிருந்து பிரிக்கப்படுகின்றன.ஆனாலும் ஒரு கோதுமை மணியும் விழுவதில்லை என்னும் வசனத்தில் நமக்கு எவ்வளவு அதிகமான இரக்கம் காட்டப்படுகிறது என்று பாருங்கள். நல்லதும் உண்மையானதும் கிருபை நிறைந்ததுமான எல்லாம் பாதுகாக்கப்படும். விசுவாசிகளில் சிறியவர் கூட இழந்து போக விடமாட்டார். விசுவாசிகளில்ஒருவர் கூட எதையும் இழக்கமாட்டார். நாம் சலித்தெடுக்கப்படுவது இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு இலாபமானதாகவே இருக்கத்தக்கதாகக் காக்கப்படுவோம்.

# 24. உயிரளிக்கும் ஓடை

இந்த நதி போகுமிடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்..... இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும்ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும் (எசேக்.47:9).

தீர்க்கர் கண்ட காட்சியில் சவக்கடலுக்குள் பாய்ந்த ஜீவ தண்ணீர் தேங்கிநின்ற அந்த ஏரிக்குள் உயிருள்ள பிராணிகளை இழுத்துச் சென்றது. கிருபைசெல்லும் இடமெங்கும் ஆவிக்குரிய வாழ்க்கை உடனே காணப்படும். ஆறு தான் விரும்பியபடி பாய்வது போல கடவுளின் சித்தப்படி கிருபை தனியுரிமையோடு செயலாற்றுகிறது. உயிர் பெற அது காத்திருப்பதில்லை. ஆனால் உயிர்ப்பிக்கத்தக்கவாறு அது பாய்ந்து உயிர்பெறச் செய்யகிறது. அது நம்தெருக்களில் பாய்ந்து சென்று நம் சேரிகளில் வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடினால் எல்லா அறைகளும் வெள்ளத்தால் நிறைந்து விடச்செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஆண்டவரே ஜீவத்தண்ணீர் என் வீட்டாருக்குள்ளும் நண்பருக்குள்ளும் பாயட்டும். என்னையும் கடந்து சென்று விடாமல்இருக்கட்டும். நான் ஏற்கெனவே அதைக் குடித்திருக்கிறேன் என்று நம்புகிறேன். ஆனால் அதில் மூழ்கிக் குளிக்கவும் நீச்சல் அடிக்கவும் விரும்புகிறேன். இரட்சகரே நான் நிறைவான வாழ்க்கையை விரும்புகிறேன். என் இயல்பான தன்மையின் ஒவ்வொரு பாகமும் ஒளிமயமாய் வலுப்பெற்றுசுறுசுறுப்படையும் வரை என்னண்டை வாரும். உயிருள்ள கடவுளே எம் உயிரினால் என்னை நிரப்பும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

நான் காய்ந்துபோன கோலைப்போல இருக்கிறேன். ஆரோனின் கோலைப்போல நான் உம் மகிமைக்கென்று துளிர்விட்டு பூப்பூத்து கனிகொடுக்கச்செய்யும். என் ஆண்டவரான இயேசு கிறிஸ்துவுக்காக என்னை உயிர்ப்பியும்.

# 25. பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது

கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகன பலியையும் போஜன பலியையும் ஒப்புக்கொள்ளமாட்டார். இவைகளையெல்லாம்நமக்குக் காண்பிக்கவும் மாட்டார் (நியா.13:23).

இது வாதப்பொருத்தத்தினால் உய்த்துணரப்பட்ட ஒரு வாக்குறுதியாகும். இது உறுதிப்படுத்தப்பட்ட செய்தியினால் முடிவாகப் பெற்ற பொருளாகும்.மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் ஒரு மகன் பிறப்பான் என்று ஆண்டவர் ஒரு வேளை வெளிப்படுத்தியிருக்கமாட்டார். ஆயினும் அவர்களை அழிக்கச் சித்தங்கொண்டார். மனோவாவின் மனைவி நன்றாய் வாதிட்டார். நாமும் அவ்விதம் செய்வது நல்லது.

கல்வாரியில் அளிக்கப்பட்டசிறப்பான பலியைப் பிதா ஏற்றுக் கொண்டு அது தம் மனதுக்கு உகந்ததாக இருந்ததாய் அறிவித்தார். அப்படியானால் இப்போது எப்படி நம்மைக் கொன்றுபோடச் சித்தங்கொள்வார் ? பாவியும் அழிந்து போகவேண்டுமென்றால் பதிலாள் தேவை இல்லையே, இயேசு பலியாக ஏற்றுக்கொள்ளப்படாததால் நாம் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

நாம் தெரிந்து கொள்ளப்பட்டிருப்பதையும், நம்மை சுவீகார புத்திரராக முன் குறித்திருப்பதையும், நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருப்பதையும், பிரியமானவரோடு விவாகத்தால்இணைக்கப்பட்டிருப்பதையும் வெளிப்படுத்தி இருக்கும்போது இப்போது எப்படி நம்மை அழித்து விடுவார்? நமக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் ஏராளமான ஆசீர்வாதங்களை உள்ளடக்கி இருக்கின்றன. அவை நித்திய வாழ்வுக்கு நாம் பாதுகாக்கப்பட வேண்டுவதை

இன்றியமையாததாக்குகின்றன. ஆண்டவர் நம்மைத் தள்ளிவிட்டால் எப்படி அவர் உடன்படிக்கையை நிறைவேற்ற முடியும்? அப்படி நடக்காது என்று இறந்த காலம் உறுதிப்படுத்துகிறது. எதிர்காலம் மீண்டும் உறுதி செய்கிறது. நாம் மரணமடைய மாட்டோம், நாம் வாழ்வோம். ஏனெனில் நாம் இயேசுவைக் கண்டுள்ளோம்.பரிசுத்த ஆவியின் ஒளியினால் பிதாவையும் கண்டுள்ளோம். உயிரளிக்கும் இந்தக் காட்சியினால் நாம் நித்திய காலமாய் வாழ்வோம்.

## 26. மீட்கப்பட்டவர்களின் மத்தியில்

*அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள் (எண்.23:9).*

ஜாதிகளோடுவாசமாயிருந்து அவர்களில் ஒருவராக எண்ணப்பட யார் விரும்புவார்கள்? உரிமை கொண்டாடும் சபையில்கூட அங்கத்தினனாய் இருந்து ஆண்டவரை முழுவதுமாய்ப் பின்பற்றுவது சிலவேளைகளில் கஷ்டமாய் இருக்கிறது. அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறவர்களோடு அவ்வளவு கலந்தும் ஒன்றுபட்டும்இருப்பதால் வனாந்தரத்தில் தனியாக ஒரு இருப்பிடம் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்ற ஏக்கம் கொள்ளத் தேன்றுகிறது.

தம் ஜனங்கள் உலகத்தின் பாதையிலிருந்து வேறுபட்ட பாதையில் சென்று அதிலிருந்து வேறுபட்டவர்களாய் வாழ வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார்என்பது நிச்சயம். கடவுளின் ஆணையின்படியும் அவரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டதாலும் நம் அழைப்பினாலும் நாம் பிரித்து எடுக்கப்பட்டவர்கள். நம் மனதின் அனுபவமும் உலகப் பிரகாரமான மக்களிலிருந்து நம்மை முற்றிலும் வேறுபட்டவர்கள் ஆக்கியிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நாம் மாயச் சந்தையிலும் அழிவின் நகரிலும் சுற்றாமல் எல்லா

யாத்திரிகர்களும் நம் ஆண்டவரைப் பின்பற்றிச் செல்லும் குறுகலான பாதை வழியே செல்லவேண்டும்.

இது நம்மை உலகத்தினரின் பழிப்பையும் பரிகாசத்தையும் ஏற்றுக்கொள்ள மட்டுமல்லாமல்உடன்படிக்கையில் நம் பங்காக அவற்றை மகிழ்ச்சியோடு சகித்துக் கொள்ளவும் செய்கிறது. நம் பெயர் அவர்களோடு ஒரே புத்தகத்தில் இருப்பதில்லை. நாம் அவர்களைப் போல் ஒரே விதையிலிருந்து வளரவில்லை. நாம் ஒரே இடத்தை நோக்கியும் செல்லவில்லை. நாம் ஒரேவழிகாட்டியையும் நம்பவில்லை. ஆகையால் நாம் அவர்களோடு ஒருவராக இல்லாமல் இருப்பது நல்லது. நாம் தனித்து இருந்தாலும் மீட்கப்பட்டவர்கள் கூட்டத்தில் ஒருவராகக் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

# 27. இருட்டில் தெய்வீக ஒளி

தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர் (சங்.18:28).

என் ஆன்மா இருளில் அமர்ந்திருக்கலாம். இதுஆவிக்குரியதாய் இருந்தால் மனிதரின் ஆற்றல் எனக்கு வெளிச்சம் அளிக்க முடியாது. கடவுள் துதிக்கப்படுவாராக! அவர் என் இருளை வெளிச்சமாக்கி உடனே என் விளக்கை ஏற்றக்கூடியவர். நான் உணரக்கூடிய இருளினால் சூழப்பட்டிருந்தாலும் அவர் இருளை நீக்கி உடனே என்னைச் சுற்றிலும்ஒளிமயமாக்கக் கூடியவர்.

அவர் இரக்கம் எப்படிப்பட்டதென்றால் அவர் ஏற்றும் விளக்கை யாரும் அணைக்க முடியாது. எண்ணெய் இல்லாததால் அது தானாகவே அணைந்து போகாது. அதிகநேரம் ஆனதால் எரிந்து போயும் விடாது. படைப்பின் போது ஒளிதர ஏற்றியவை இன்றும்பிரகாதசித்துக் கொண்டிருக்கின்றன. ஆண்டவரின்

விளக்குகள் தூண்டடப்பட வேண்டியதாயிருக்கலாம். ஆனால் அவர் அவைகளை அணைத்து விடுவதில்லை.

ஆகையால் நான் நைட்டிங்கேல் பறவையைப்போல இரவிலே பாடுவேனாக! எதிர்பார்ப்பு எனக்கு இசை அமைத்துக் கொடுக்கும். நம்பிக்கைசுதியெடுத்துக் கொடுக்கும். கடவுள் ஏற்றிய விளக்கினால் சீக்கிரத்தில் நான் மகிழ்ச்சி அடைவேன். இப்பொழுது நான் ஊக்கமற்றவனாகவும் தூயராரர்ந்தவனாயும் இருக்கிறேன். ஒருவேளை வானிலையினால் அல்லது திடீரென்று ஏற்பட்ட தொல்லையினால் அப்படி இருக்கலாம். ஆனால்எக்காரணத்தினால் இருள் ஏற்பட்டாலும் கடவுள் ஒருவரே வெளிச்சம் கொண்டுவர முடியும். நான் அவரையே நோக்கியிருக்கிறேன். சீக்கிரம் என்னைச் சுற்றிலும் வெளிச்சம் கொடுக்கக் கூடிய ஆண்டவரின் விளக்குகள் ஏற்றப்படும். அதற்குப்பின் அவர் குறித்துள்ள காலத்தில் விளக்காவதுசூரியனின் ஒளியாவது தேவைப்படாத இடத்தில் நான் இருப்பேன். அல்லேலூயா!

# 28. வேலைமுடிந்தது அவரில் இளைப்பாறுங்கள்

தேவனுடையஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது (எபி.4:9).

ஆண்டவர் ஓய்வுப் பருவத்துக்கு வசதி செய்துள்ளார். சிலர் அதை அனுபவிக்க வேண்டும். இதைப்பற்றி யாருக்கு முதலாவதுஅறிவிக்கப்பட்டதோ அவர்கள் நம்பிக்கையின்மையினால் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் இது கடவுளின் மக்களுக்கே உரியதாய் இருக்கின்றது. தாவீது அதைப்பற்றிப் பாடினார். ஆனால் அவர் ஊக்கமளிக்கக் கூடிய விதமாய்ப் பாட முடியவில்லை. ஏனெனில் இஸ்ரவேலர்

கடவுளின்இளைப்பாறுதலை அனுபவிக்க மறுத்தார்கள். யோசுவாவால் அதை அளிக்க முடியவில்லை. கானான் தேசமும் அதற்கு ஊக்கம் அளிக்கக் கூடாததாய் இல்லை. விசுவாசிகளே அதை அனுபவிக்கலாம்.

இந்த இளைப்பாறுதலை அனுபவிக்க உழைப்போமாக! பாவமும் நம்மைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதுமான வேலைகள் நம்மைக் களைப்படையச் செய்யக்கூடியவை. அவற்றை விட்டு விடுவோமாக! நன்மையானவை என்று சொல்லப்படுகிறவைகளில் கூட நம்பிக்கை வைக்காமல் இருப்போமாக! அவ்விதமானது எவற்றையாவது நாம் நம்புகிறோமா? அப்படியானாலும் கடவுள் தம் வேலையிலிருந்துஓய்வு எடுத்துக் கொண்டதைப்போல நம் சொந்த வேலைகளைச் செய்யாமல் ஓய்வு எடுத்துக் கொள்வோமாக. நம் ஆண்டவர் இயேசு முடித்துள்ளவைகளை நினைத்து ஆறுதல் அடைவோமாக! எல்லாம் முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டு விட்டது. நியாயப்படி வேறொன்றும் தேவையில்லை. இயேசு கிறிஸ்துவில்நமக்கு சிறப்பான சமாதானம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆன்மாவில் கிருபைக்கான கிரியையும், மற்றவர்களின் ஆன்மாக்களில் ஆண்டவர் செய்ய வேண்டியதுமான தெய்வச் செயல்களை ஆண்டவரின் மேல் போட்டு அவரில் இளைப்பாறுவோமாக! ஆண்டவர் நாம் சுமப்பதற்கென்று ஒரு நுகத்தைக்கொடுப்பாரேயானால் அதைச் சுமப்பதனால் நாம் இளைப்பாறுதல் அடைய வேண்டுமென்று அதை அளிக்கிறார். விசுவாசத்தினால் நாம் கடவுளின் இளைப்பாறுதலை அடைய உழைக்கிறோம். நம்மிலே திருப்தி அடைவதிலும் சோம்பலினாலும் வரும் ஓய்வை நாம் துறந்து விடுகிறோம். இயேசுவே பூரணஇளைப்பாறுதல். அவரில் அதை முழுவதுமாக நாம் அனுபவிக்கிறோம்.

# 29. இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தவே

அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார் (யோ.16:14).

கிறிஸ்துவைப் பற்றியவைகளைநமக்குக் காட்டுவதன் மூலம் அல்லாமல் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்த முடியாது.

இயேசுவே தம்மைக் குறித்த சிறந்த பாராட்டு தங்கத்தைப் போன்ற அவர் தன்மையினாலல்லாமல் வேறு எதனாலும் அவரை மகிமைப்படுத்த முடியாது.

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவில் தாம் அடைந்தவைகளைப் தேற்றரவாளன் வெளிப்படுத்துகிறார். அவர் வெளிப்படுத்தாவிட்டால் நாம் எதையும் சரியாகக் கண்டு கொள்வதில்லை. அவர் நம் மனங்களையும் வேதத்தையும் தக்க விதமாய்த் திறந்து நம் ஆண்டவரை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒரு பொருளைவிளக்குவதில் சிறப்பான ஒரு முறை இருக்கிறது. உண்மையின் ஆவியானவர் அந்த முறையை நன்கு அறிந்திருக்கிறார். அவர் எல்லா சாதனங்களையுமே நமக்குக் காட்டுகிறார். இந்தத் தூய்மையான காட்சியைக் கண்டு அனுபவித்தவர்கள் அறிந்திருக்கிறபடி இது மிகச் சிறந்த வாய்ப்பாகும்.

நாமும் பரிசுத்த ஆவியானவர் தெளிவாக்க வேண்டுமென்று நாடுவோமாக! நம் ஆர்வத்தைத் திருப்திப்படுத்துவதற்காகவாவது நமக்குத் திருப்தி அளிக்கவாவது இல்லாது ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்துவதற்காக நாடுவோமாக! அவரைத் தகுந்த விதமாய் அறிந்து கொண்டால் எவ்வளவுநலமாயிருக்கும்! கீழான எண்ணங்கள் நம் அருமை ஆண்டவரை அவமதிக்கின்றவை

ஆகின்றன. நம் முழு இருதயத்தோடும் ஆன்மாவோடும் அவர் புகழைப் போற்றத்தக்கதாக அவரையும் அவர் வேலையையும் மகிமையையும் பற்றிய தெளிவான கருத்துக்கள் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! பரிசுத்தஆவியின் போதனையினால் வளமாக்கப்பட்ட இருதயம் இருந்தால் விவரிக்க முடியாத அளவு இரட்சகர் மகிமைப்படுவார். பரிசுத்த ஆவியானவரே, வானத்தின் ஒளியே, வந்து எங்கள் ஆண்டவராகிய இயேசுவைக் காட்டும் !

# 30. நம் வாயை விரிவாய்த் திறக்க வேண்டும்

*உன் வாயை விரிவாய்த் திற. நான் அதை நிரப்புவேன் (சங்.81:10).*

இது ஜெபிப்பதற்கு நமக்கு எவ்வளவு ஊக்கம் அளிக்கிறது என்று பாருங்கள். மனித எண்ணப்படி நாம்சிறியவைகளே வேண்டுமென்று வேண்டிக்கொள்வோம். ஏனெனில் நாம் குறைந்த அளவே தகுதி உள்ளவர்களாய் இருக்கிறோம். ஆனால் ஆண்டவர் நாம் பெரிய ஆசீர்வாதங்களுக்காய் வேண்டிக்கொள்ள வேண்டுமென்கிறார். ஜெபிப்பது நம் வாயைத்திறப்பது போல் எளிமையான வேலையாய் இருக்கவேண்டும். அது இயற்கையாகப் பேசுவது போல் குழப்பமற்று அமையவேண்டும். ஒருவன் அக்கறையுள்ளவனாய் இருந்தால் அவன் வாயை விரிவாய்த் திறப்பான். மேலே கூறப்பட்ட வசனம் நாமும் வேண்டுதல் செய்யும் பொழுது ஆர்வத்துடன் செய்யவேண்டுமென்று வற்புறுத்துகிறது. அதுவுமல்லாமல் நாம்கடவுளிடம் தைரியமாகப் பல பெரிய ஆசீர்வாதங்களைக் கேட்கலாம் என்பதையும் குறிக்கிறது. முழு வசனத்தையும் வாசித்து அதற்கான ஆதாரத்தைக் கண்டறியுங்கள். உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே உன் வாயை விரிவாய்த் திற நான் அதைநிரப்புவேன். ஆண்டவர் அவ்வளவு

ஏராளமானவைகளை நமக்குக் கொடுத்திருப்பதால் நாம் இன்னும் அதிகமாய்க் கேட்கலாம் என்றும் அதிகமாய் எதிர்பார்க்கலாம் என்றும் விளக்குகிறார்.

கூட்டிலிருக்கும் பறவைக் குஞ்சுகளிற்கு தாய்ப்பறவை உணவளிக்க வரும்போது அவை எவ்வளவுவிரிவாய் வாய்களைத் திறக்கின்றன என்று பாருங்கள்! நாமும் அவ்விதம் செய்வோமாக! ஒவ்வொரு வாசல் வழியாகவும் கிருபையை அடைவோமாக. கடற்பஞ்சு நீரை உறிஞ்சிக்கொள்வது போல் நாமும் உறிஞ்சிக் கொள்வோமாக. நாம் நிரப்பப்பட ஆயத்தமாயிருந்தால் ஆண்டவர் நிரப்பஆயத்தமாயிருக்கிறார். நம் தளர்ச்சி நம்மை வாயைத் திறந்து மூச்சு இரைக்கச் செய்யட்டும். சிறுபிள்ளையைப் போல் நாம் திறக்க எச்சரிக்கை ஏவுவதாக! திறக்கப்பட்ட வாய் ஆண்டவராலேயே நிரப்பப்படும். ஆண்டவரே இன்று என் வாய் அவ்விதம் நிரப்பப்படுவதாக!

# 10 அக்டோபர்


1. அவர் நினைவில் இருக்கும் உடன்படிக்கை
2. நித்திய வீட்டுக்குப் போகிற வழியில் ஆறுதல்
3. ஆண்டவரின் அழகை பிரதிபலிப்பவர்கள்
4. ஆற்றல் வாய்ந்த காந்தம்
5. ஆண்டவரின் ஆணைப்படி
6. நம் வழிகாட்டியின் தலைமையில்
7. அவரே முதலில் தோழமைகொள்கிறார்
8. ஒருபோதும் தனிமையாய் இருப்பதில்லை
9. தம் பலிகளைப் பரிசுத்தப்படுத்துவது எது ?
10. ஐக்கியத்திற்குத் திறந்த வாசல்
11. கட்டுப்பாடுகளற்றுப் பயணம் செய்தல்
12. உடன்படிக்கை கிருபையின் அடையாளம்
13. செய்ய வேண்டியதும் பெறுவதும்
14. ஒருபோதும் வெட்கமடைய மாட்டோம்
15. உணவு பெற்று ஆதரிக்கப்படுதல்
16. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருத்தல்
17. தூய அச்சம்
18. கண்ணீருக்குப் பின் கெம்பீரமான அறுவடை
19. கட்டுப்பாட்டுக்குள்ளான சிட்சிப்பு
20. ஒவ்வொரு பாவத்திலிருந்தும்
21. கடவுளின் பெருக்கல் வாய்ப்பாடு
22. அவர் வாக்குறுதியைக் குறித்து மன்றாடுதல்
23. வெளிச்சத்தின் அறுவடை மகிழ்ச்சி
24. கடவுள் பற்றில் திடநிலை
25. முதலாவது கடவுள் பின் மற்றவை
26. நமக்காக
27. அவர் சேவை, அவர் சமூகம், அவர் நாமம்
28. அறியாமையினால் ஏற்படும் பாவங்கள்

29. வித்தியாசத்தை நிலைநிறுத்து
30. முழுவதுமாக சுத்திகரிக்கப்படல்
31. வேலை முடியும்வரை இறவாப்புகழ்

# 1. அவர் நினைவில் இருக்கும் உடன்படிக்கை

தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார் (சங்.111:5).

கடவுளுக்குப் பயந்தவர்கள் வேலையிலிருக்க நேரிட்டு விடுமோ என்றுஅச்சங்கொள்ளவேண்டியதில்லை. கடந்த ஆண்டுகளில் எல்லாம் தம் சொந்தப் பிள்ளைகள் வனாந்தரத்தில் இருந்தாலும், கேரீத் ஆற்றண்டையில் இருந்தாலும், சிறையிருப்பில் இருந்தாலும், பஞ்சத்தை அனுபவித்தாலும் ஆண்டவர் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்துவந்திருக்கிறார். நமக்கு இதுவரை அன்றன்றைக்குத் தேவையான ஆகாரத்தை அளித்து வந்திருக்கிறார். நமக்கு இனிமேல் ஆகாரம் தேவையில்லை என்னும் காலம்வரை தொடர்ந்து கொடுத்து வருவார் என்பதைக் குறித்து நாம் ஐயப்படவேண்டியதில்லை.

கிருபையின் உடன்படிக்கையின்படி அவர் வாக்குப் பண்ணியிருக்கும் உயர்வானவையும் சிறப்பானவையுமான ஆசீர்வாதங்களை நமக்குத் தேவையானவரை அளிக்கத் தவறமாட்டார். அவர் செய்துள்ள உடன்படிக்கையை நினைவில் வைத்துள்ளார். அதைக் குறித்து துக்கப்படுவது போல் ஒரு நாளும்நடந்துகொள்ளமாட்டார். நம்மை அழித்துவிடத் தூண்டத்தக்கதாக நாம் எரிச்சல் மூட்டும் போதுகூட அவர் தம் உடன்படிக்கையை நினைப்பார். அவர் வாக்குறுதி செய்துள்ளதுபோல் நம்மை நேசிக்கவும், பாதுகாக்கவும், ஆறுதல்படுத்தவும் வேண்டும் என்பதை நினைவில்வைத்துள்ளார். அவர் செய்வதாகச் சொல்லியுள்ள ஒவ்வொரு சிறு செயலையும் ஞாபகத்தில் வைத்து, அவற்றில் ஒன்றைக்கூடச் செய்யாமல் இருக்கமாட்டார்.

நாமோ நம் கடவுளை நினைப்பதில்லை. அவர் கிருபையாக நம்மை நினைத்துக்கொண்டேயிருக்கிறார். உடன்படிக்கையின் அச்சாரமான அவர் குமாரனையும், உடன்படிக்கையைச் செயல்படுத்தும் பரிசுத்த ஆவியானவரையும் உடன்படிக்கையோடு தொடர்புள்ள அவர் புகழையும் ஒரு நாளும் மறக்கமாட்டார். ஆகவே கடவுளின் அஸ்திபாரம் உறுதியாய் இருக்கிறது. மாறாத உடன்படிக்கையின்படி தன்னுடையதாயிருக்கும் சுதந்தரத்தை எந்த விசுவாசியும் இழப்பதில்லை.

# 2. நித்திய வீட்டுக்குப் போகிற வழியில் ஆறுதல்

யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப் போகிறேன். ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப்போகப்பண்ணுவார் என்று சொன்னதுமன்றி......... (ஆதி.50:24).

யோசேப்பு தன் சகோதரருக்கு மனித உருவில் காணப்பட்ட கடவுள் போன்றவர். நமக்கும் யோசேப்பைப் போன்றவர்கள் யாவரும்இறந்துவிடலாம். அவர்கள் நமக்கு அளித்து வந்த ஆறுதல்; தேறுதலும் அவர்களோடு இல்லாமற்போய்விடும். யோசேப்பு மரித்தபின் இஸ்ரவேலுக்கு எகிப்து ஒருபோதும் யோசேப்பு உயிரோடு இருந்தபோது இருந்ததுபோல் இல்லை. அதேபோல் நம்மில் சிலருக்கும், நமக்கு அருமையானவர்கள்உயிரோடு இருந்தபோது இருந்ததுபோல் உலகம் இருக்காது.

துக்கம் தரும் அப்பேர்ப்பட்ட மரணத்தினால் ஏற்பட்ட வேதனை எவ்விதமாகக் குறைக்கப்பட்டது என்று பாருங்கள். எப்போதும் உயிரோடிருக்கும் கடவுள் அவர்களைச் சந்திப்பார் என்னும் வாக்குறுதிகொடுக்கப்பட்டது. யேகோவா அவர்களைச் சந்திப்பார். அது எப்படிப்பட்ட சலுகை என்றும், ஆறுதல் அளிக்கும் செய்தி என்றும். பூலோகத்திற்குப் பரலோகம் வந்தது போன்ற நிகழ்ச்சி என்றும் நினைத்துப் பாருங்கள். ஆண்டவரே, நீர் எங்களிடம் வர நாங்கள் தகுதிஅற்றவர்கள், என்றாலும் இன்று எங்களைச் சந்தியும்.

இவ்வளவு மட்டுமல்ல இன்னும் சிறப்பானவையும் வாக்குப்பண்ணப்பட்டன. கடவுள் அவர்களை அந்தத் தேசத்தை விட்டு....போகப்பண்ணுவார். யோசேப்பு மரணம் அடைந்தபின் எகிப்தியர் முகஞ்சுளித்தேஅவர்களுக்கு வரவேற்பு அளிப்பார்கள் என்று அவர்கள் அறிந்துகொள்வார்கள். அது அவர்களுக்கு அடிமைத்தனத்தின் வீடாகவே இருக்கும், ஆனால் எப்போதைக்கும் அப்படி இருக்காது. கடவுள் அவர்களுக்கு அந்தத் தேசத்திலிருந்து விடுதலை அளித்து, தான் ஆபிரகாமுக்கும்,ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார். நாம் நித்தியமாக இங்கு இருந்து, அழுதுகொண்டிருக்கமாட்டோம். நமக்கு அன்பானவர்களோடு சேர்ந்துகொள்ள மகிமையான நாட்டுக்குச் செல்வோம். ஆகையால் இந்தவார்த்தைகளினாலே ஒருவரையோருவர் தேற்றுங்கள்.

# 3. ஆண்டவரின் அழகை பிரதிபலிப்பவர்கள்

நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன். நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் (சங்.17:15).

சாதாரணமான மக்கள்அடையும் செல்வம் அவர்கள் உடல்களை நிரப்ப, அவர்கள் பிள்ளைகளைப் பணக்காரரர் ஆக்குகிறது, ஆனால் விசுவாசி அடையும் பங்கோ வேறுவிதமானது. இவ்வுலகத்தினரானவர்கள் தங்கள் செல்வத்தை இந்த உலகிலேயே அடைகிறவர்களாயிருக்கிறார்கள். ஆனால் இனிவரும் உலகைஎதிர்நோக்கியிருப்பவர்கள் மேல் நோக்கினவர்களாய் இனிவரும் காலத்தில் அதை அடைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம் உடமை இருமடங்கானது. இங்கு ஆண்டவரின் பிரசன்னம் நம்மோடு இருக்கிறது. இனிவரும் காலத்தில் அவர் சாயலைக் காண்போம்.இங்கு நீதியில் ஆண்டவருடைய முகத்தைத் தரிசிக்கிறோம். ஏனெனில் கிறிஸ்து இயேசுவில் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். ஒப்புரவாக்கப்பட்டவர்களாய்க் கடவுளின் முகத்தைத் தரிசிப்பது எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும். இயேசு கிறிஸ்துவின் முகத்தில் காணப்படும்கடவுளின் மகிமை நமக்கு இவ்வுலகில் மோட்சத்தை அளிக்கிறது. அது இனிவரும் வாழ்வில் நமக்கு மோட்சத்தின் மோட்சமாயிருக்கும்.

அதைக் காணுவதோடு எல்லாம் முடிந்துவிடுவதில்லை. நாம் எதைக் கருத்தூன்றிப் பார்க்கிறோமோ அதைப்போல் மாற்றப்படுவோம்.நாம் சிறிது காலம் நித்திரை செய்வோம். பின் கண்ணாடியைப்போல் நம் ஆண்டவரின் அழகைப் பிரதிபலிக்கிறோம் என்று கண்டறிய விழித்தெழுவோம். நம்பிக்கையினால் உருமாற்றப்பட்ட பார்வையால் கடவுளைக் காண்போம். நம் ஆன்மாவில் இயேசுவின் பண்புகள் யாவும்பொறிக்கப்படும்வரை இதயம் அதன் ஆழத்தில் இயேசுவின் பிம்பத்தை ஏற்றுக்கொள்கிறது. இது நமக்கு திருப்தி அளிக்கிறது. கடவுளைக் காண்பதையும் அவரைப்போல் இருப்பதையும்விட வேறு நமக்கு என்னவேண்டும்? தாவீதின் உறுதியான

தன்னம்பிக்கை இங்கு பரிசுத்த ஆவியானவரால்ஆண்டவரின் வாக்குறுதியாக நமக்கு அளிக்கப்படுகிறது. நான் அதை நம்புகிறேன். அதை எதிர்பார்க்கிறேன். ஆண்டவரே, அதை எனக்கு அருள் செய்யும், ஆமென்.

# 4. ஆற்றல் வாய்ந்த காந்தம்

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன். யோவான் *12:32*

ஊழியக்காரரே, வந்துஊக்கமடையுங்கள். உங்கள் போதனையைக் கேட்க பலர் கூடமாட்டார்கள் என்று அஞ்சுகிறீர்கள். சிலுவையில் அறையப்பட்டு, உயிரோடு எழுந்து, பரலோகத்துக்கு ஏறிப்போன இரட்சகரைப் பற்றிக் கூறுங்கள். மனிதரைக் கவர்ந்து இழுக்க வெளிப்படுத்தப்பட்ட முறைகளில் இதுவேசிறந்தது ஆகும். கிறிஸ்துவேயல்லாமல் வேறு யார் உங்களைக் கிறிஸ்து வண்டை இழுத்தார். இப்போது அவரேயல்லாமல் வேறு யார் உங்களை அவரண்டை இழுக்கிறார்? வேறு எதனாலாவது இழுக்கப்பட்டு நீங்கள் கடவுளை நம்பியிருந்தால் கூடிய சீக்கிரத்தில் அந்த நம்பிக்கையிலிருந்து வேறுஒன்றுக்கு இழுக்கப்பட்டுவிடுவீர்கள். ஆனால் இயேசு உங்களை உறுதியாகப் பற்றிக் பிடித்திருக்கிறார். இறுதிவரை இழுத்துப் பிடித்திருப்பார். அப்படியானால் மற்றவர்களை இழுத்துப் பிடிக்க அவருக்கு வல்லமை இருக்கிறதா என்று ஏன் சந்தேகப்படுகிறீர்கள்? இதுவரை பிடிவாதமாய்இருந்தவர்களிடம் இயேசுவின் நாமத்தை அறிவித்து, அதனால் அவர்கள் இழுக்கப்படுகிறார்களா இல்லையா என்று பாருங்கள்.

இந்த ஆற்றலால் கவரப்படாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். முதியோரானாலும், வாலிபரானாலும், படிப்பறிவு இல்லாதவர்கள்ஆனாலும், படித்தவர்கள் ஆனாலும்,

மோசமானவர்கள் ஆனாலும், மனத்துக்கு இனியவர்கள் ஆனாலும் எல்லாரும் இழுக்கும் அதன் காந்த சக்தியை உணர்ந்தவர்கள். இயேசுவே ஒரே காந்தம் ஆனவர். வேறு எதைப்பற்றியும் நாம் நினைக்காமல் இருப்போமாக. இசையோ, பேச்சுத்திறமையோ, காரசாரமான வாதங்களோ, சடங்காசாரங்களோ, அதிகமான சப்தமோ நம்மை இயேசுவண்டை இழுக்க முடியாது. இயேசுவே எல்லாரையும் தம்மண்டை இழுத்துக்கொள்ளவேண்டும். அதைச் செய்ய அவருக்கு வல்லமை உண்டு. இக்காலத்தில் போலியான முறைகளினால் ஏமாற்றப்படாமல்இருங்கள். ஆண்டவரின் ஊழியக்காரராக அவர் முறைகளை உபயோகித்து, ஆண்டவரின் சக்தியால் இழுங்கள். கிறிஸ்துவால் கிறிஸ்துவண்டை இழுங்கள். அப்படியானால் கிறிஸ்து உங்களண்டை வருவார்.

# 5. ஆண்டவரின் ஆணைப்படி

யாக்கோபிலே மீதியானவர்கள், சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமாதானமாகவும், கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பார் இல்லாமல் பீறிப் போடுகிற பால சிங்கம் ஆட்டு மந்தைகளுக்குள்ளேஇருக்கிறதற்குச் சமானமாகவும் ஜாதிகளுக்குள்ளே அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள் (மீகா 5:8).

மேலே குறிப்பிடப்பட்டவை இஸ்ரவேல் எனப்படுகிறவர்களைக் குறித்து உண்மையாய் இருக்குமேயானால்கடவுளை நம்புகிறவர்களாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலரைக் குறித்தும் இன்னும் அதிகம் உண்மையாய் இருக்கும். ஆண்டவரின் பரிசுத்தவான்கள் தாங்கள் இருக்கவேண்டிய விதமாய் இருந்தால் அவர்கள் யார் மத்தியில் பரவியிருக்கிறார்களோ அவர்களுக்கு அளவிட முடியாத ஆசீர்வாதமாய்இருப்பார்கள்.

அவர்கள் பனியைப்போல் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அமைதியாக முனைப்பற்ற முறையில் சுற்றிலும் இருக்கிறவர்களுக்குப் புது வலுவூட்டுகிறார்கள். அடக்கமானதாய் இருந்தாலும் பயனுடையதான முறையில் சுற்றிலுமுள்ளவர்களின் வாழ்க்கை,வளர்ச்சி, மகிழ்ச்சிக்கென்று உழைக்கிறார்கள். பனிபோன்றவர்களாய், கருணை நிறைந்த ஆண்களும் பெண்களும் பரலோகத்திலிருந்து சூரிய வெளிச்சத்தில் வைரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டு, வலுக்குறைந்தவர்களும் அற்பமானவர்களும் தங்களுக்குத் தேவையான ஒரு துளிபனியாவது பெறும்வரை அவர்களுடன் இருக்கிறார்கள். தனித்து நிற்கும்போது இழிந்தவர்களாய் இருக்கும் அவர்கள் ஒற்றுமையாக ஒருங்கிணையும்போது, அவர்கள்மூலமாய் ஆண்டவர் அன்பின் கிரியைகளைச் செய்ய போதிய திறமை உள்ளவர்களாய் ஆகிறார்கள். பரந்த நிலப்பரப்பிலுள்ளபயிர்கள் பனித்துளிகளினால் புது மலர்ச்சி பெறுகின்றன. ஆண்டவரே, எங்களையும் பனியைப் போலாக்கும்.

மனிதனின் உத்தரவையும் அனுமதியையும் பெறாமல் கடவுளின் ஆணைப்படி பெய்யும் மழையைப்போல் கடவுள் பற்றுடையவர்கள் இருக்கிறார்கள். மனிதர்விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள் கடவுளுக்கென்று உழைக்கிறார்கள். மழை எப்படி மனிதனின் அனுமதியை எதிர்பார்ப்பதில்லையோ அப்படி அவர்களும் எதிர்பார்ப்பதில்லை. ஆண்டவரே, நாங்கள் எங்கு இருந்தாலும் உம் ஊழியத்தை தைரியமாயும், காலந்தவறாதும்,சுறுசுறுப்பாயும் செய்ய உதவும்.

# 6. நம் வழிகாட்டியின் தலைமையில்

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோ.16:13).

சத்தியம் என்பது பரந்தகன்ற ஒரு குகை போன்றது. அதற்குள்நுழைய நமக்கு விருப்பம் உண்டு. ஆனால் அதைத் தனியாகக் கடக்க நமக்கு முடியவில்லை. அதன் நுழைவாயில் தெளிவும் ஒளிமிக்கதாயும் இருக்கிறது. ஆனால் நாம் அதன் உள்ளேபோய் உள்ளிடத்தை ஆராயவேண்டுமானால் நமக்கு ஒரு வழிகாட்டி தேவை. இல்லையென்றால் நாம் வழிதவறிப்போய்விடுவோம். எல்லா சத்தியங்களையும் முழுவதுமாய் அறிந்த பரிசுத்த ஆவியே உண்மையான விசுவாசிகளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட வழிகாட்டி ஆவார். அவரே அவர்கள் ஆற்றலுக்கு ஏற்றவாறு அவர்கள் கடவுளைப்பற்றி ஆழ்ந்தவற்றைக் கண்டறியவும், ஓர் உள் அறையிலிருந்து அடுத்தஅறைக்காக அவர்களை அழைத்துச் செல்கிறார்.

தாழ்மையாக விவரங்களை ஆராய விரும்புகிறவர்களுக்கு இது எவ்வளவு சிறந்த வாக்குறுதியாகும் என்று நினைத்துப்பாருங்கள். நாம் சத்தியத்தை அறிந்துகொள்ளவும் அதன்படி நடக்கவும் விரும்புகிறோம். நாம் தவறுசெய்யக்கூடியவர்கள் என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே ஒரு வழிகாட்டி நமக்கு உடனே தேவை என்று உணருகிறோம். பரிசுத்த ஆவியானவர் வந்துவிட்டார் என்றும் நம்மோடு நிலைத்திருக்கிறார் என்றும் மகிழ்ச்சி அடைகிறோம். நமக்கு வழிகாட்டியாக இருக்க அவர் ஆதரவுகாட்டுகிறார். அவர் நமக்குத் தலைவராக இருப்பதை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். நாம் ஒரு சார்பானவர்களாயும், சமநிலையிலிருந்து விலகிவிடுகிறவர்களாயும் இராதபடி சகல சத்தியத்தையும் கற்றுக்கொள்ள விரும்புகிறோம். ஆண்டவர் வெளிப்படுத்துகிறவர்களைவேண்டுமென்றே நாம் அறியாதவர்களாயிருக்கமாட்டோம். ஏனெனில் நாம் அப்படியிருப்பதினால் ஏதாவது ஆசீர்வாதத்தை இழந்து விடுவோமோ அல்லது பாவஞ்செய்துவிடுவோமோ என்னும் பயம் உள்ளவர்களாயிருக்கிறோம். நம்மை எல்லா சத்தியத்திற்குள்ளும்

நடத்த கடவுளின் ஆவியானவர்வந்து விட்டார். நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் சத்தியத்தைக் கேட்டு, அவர் நடத்தும் பாதையில் செல்வோமாக!

# 7. அவரே முதலில் தோழமைகொள்கிறார்

உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அவர் உங்களுக்கு சொன்னபடியே அங்கே அவரைக் காண்பீர்கள் (மாற்.16:7).

இயேசு எங்கே தம்முடைய சீடரைச் சந்திப்பதாகக்காலங்குறித்திருக்கிறாரோ அங்கே குறித்த நேரத்தில் இருப்பார். இயேசு தாம் குறிப்பிட்டிருந்த இடத்தில் கண்டிப்பாகச் சந்திப்பார். கிருபாசனத்திலும், பொது ஆராதனைகளிலும், கட்டளைகளிலும் நம்மைச் சந்திப்பதாக வாக்களித்திருந்தால் அங்கே கண்டிப்பாகஇருப்பார் என்று நாம் திட்டாய் நம்பலாம். சந்திக்கக் குறிப்பிட்ட இடத்துக்கு நாம் போகாமல் இருக்கலாம். ஆனால் அவர் ஒரு நாளும் அவ்விதம் செய்வதில்லை. அவர் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலேஇருக்கிறேன் என்று கூறுகிறார். அவர் அங்கே நான் இருப்பேன் என்று சொல்லவி;ல்லை, ஆனால் ஏற்கெனவே அங்கே இருக்கிறேன் என்று சொல்கிறார்.

இயேசுவே எப்போதும் முதலில் தோழமை கொள்கிறார். அவர் உங்களுக்கு முன்னே..... போகிறார். அவர் இதயம்அவர் மக்களோடு இருக்கிறது. அவர்களில் மகிழுகிறார். அவர்களைச் சந்திக்க அவர் தாமதிப்பதில்லை. முழு தோழமையோடு அவர் நமக்கு முன்னே போகிறார்.

ஆனால் அவரைப் பின் செல்லுகிறவர்களுக்கே தம்மை வெளிப்படுத்துகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள்.எவ்வளவு

மகிழ்ச்சியளிக்கும் காட்சி. மனிதரில் பெரியவர்களைக் காண நாம் அக்கறை கொள்வதில்லை. ஆனால் இயேசுவைக் காண்பதால் மகிழ்ச்சியாலும், சமாதானத்தாலும் நிரப்பப்படுவோம். நாம் கண்டிப்பாக அவரைக் காண்போம். ஏனெனில் அவரை விசுவாசிக்கிறவர்களிடம்வந்து, தம்மை வெளிப்படுத்துவதாக அவர் வாக்களிக்கிறார். அது அவ்விதமே நடக்கும் என்று நம்பி, அமர்ந்திருங்கள். ஏனெனில் அவர் தம் வாக்குப்படி எல்லாவற்றையும் செய்கிறார். உங்களுக்குச் சொன்னபடியே என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தைகளைக்கவனத்தில் கொண்டு உங்களுக்குச் சொன்னபடியே இறுதிவரை செய்வார் என்று அமர்ந்திருங்கள்.

# 8. ஒருபோதும் தனிமையாய் இருப்பதில்லை

நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்பட்டாலும்..... (ஏசா.62:4).

கைவிடப்பட்டவள் என்பது கவர்ச்சியற்ற ஒரு சொல்லாகும்.அது சாவு மணியோசையைப் போன்றது. அது தாங்கொணா மனத்துயரம் அனுபவித்ததைக் குறிக்கிறது. இனி வரும் கொடிய தீங்கை முன் அறிவிக்கின்றது. கைவிடப்பட்டவள் என்னும் வார்த்தை ஆழ்துயரைக் குறிக்கிறது. தன் உயர் ஒழுக்க நெறியைக் குறித்து வாக்குறுதி கொடுத்தவரால்கைவிடப்பட்டதையும் நெடுங்காலம் நெருங்கிப் பழகி நம்பியிருந்த நண்பனால் கைவிடப்பட்டதையும் அருமையான உறவினர் ஒருவரால் கைவிடப்பட்டதையும் பெற்றோரால் கைவிடப்பட்டதையும் எல்லாராலும் கைவிடப்பட்டதையும் குறிக்கிறது. இவ்விதம் நேர்ந்தால் இது உண்மையாகவே கடுந்துயர்ஆகும். ஆயினும் ஆண்டவர் நம்மை

ஆதரித்தால் நாம் இதைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளலாம்.

ஆனால் கடவுள் கைவிடப்பட்டதாக உணர்ந்தால் எப்படியிருக்கும்? என் தேவனே என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்? என்னும் பரிதாபமான சத்தத்தை நினைவு படுத்திப்பாருங்கள். அந்தவிதமாகக் கைவிடப்பட்டதாக நாம் எப்போதாவது உணர்ந்திருக்கிறோமா? அப்படியானால் அவ்விதமான சொல்லொணாத் துயர் மறுபடியும் நேரிடாமல் காப்பாற்றுமாறு ஆண்டவரைக் கெஞ்சிக் கேட்போமாக! அவ்விதமான இருண்ட காலம் மறுபடியும் ஒருபோதும் வராதிருப்பதாக! ஒருபரிசுத்தவானைக் குறித்து மக்கள் வன்மத்துடன் தேவன் அவனைக் கைவிட்டார் அவனைத் தொடர்ந்து பிடியுங்கள் என்றார்கள். ஆனால் அது ஒருபோதும் உண்மையான கூற்றாக இல்லை. ஆண்டவரின் அன்பு நிறைந்த கருணை கொடியவரான நம் பகைவரை அவர்கள் சொன்ன சொல் தவறு என்று மனமார ஒப்புக்கொள்ளச் செய்யும் அல்லது அவ்விதம் பேசாது இருக்கவாவது செய்யும்.

இவ்விதமான நிலைக்கு மாறானது எப்சிபா — கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார் என்பது. இது அழுகையை ஆடல்பாடலாக மாற்றுகிறது. தாங்கள் கைவிடப்பட்டு விட்டதாகக் கனவு கண்டவர்கள் ஆண்டவர் நான்உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்வதைக் கேட்கட்டும்.

## 9. தம் பலிகளைப் பரிசுத்தப்படுத்துவது எது ?

பின்பு ஆசாரியன் அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து ஆசாரிப்புக் கூடாரத்திலே கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும் சுகந்த தூப பீடத்துக் கொம்புகளின் மேல்பூசி.... (லேவி.4:7).

பரிசுத்தவான்கள் தங்கள் விண்ணப்பங்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கும் இடம் சுகந்த தூபபீடமாகும். அதன் மேல் சிறப்பான பலியின் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கும் என்று நினைப்பது மனநிறைவு அளிக்கிறது. இது தான் நம் வழிபாட்டையெல்லாம்யேகோவாவின் முன் அங்கீகரிக்கப்படச் செய்கிறது. அவர் தம் சொந்தக் குமாரனின் இரத்தத்தைப் பார்த்து அதனால் நம் வணக்கத்தை ஏற்றுக் கொள்கிறார்.

பாவத்திற்காக ஏறெடுக்கப்பட்ட இரத்தமாகிய ஒரே பலியின் மேலேயே நம் கண்களைப் பதிய வைத்திருப்பது நமக்குநல்லது. பரிசுத்தமான செயல்களோடு கூட பாவம் கலந்து விடுகிறது. நம்மில் சிறப்பாகக் காணப்படும் மனந்திரும்புதல், நம்பிக்கை, வேண்டுதல், ஸ்தோத்திரம் முதலியவை ஒப்புரவாக்கும் பலியின் தகுதியினாலேயே கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பலர் அந்தப்பலியின் இரத்தத்தை ஏளனமாக இகழுகிறார்கள். ஆனால் நம் ஆறுதலுக்கும் நம்பிக்கைக்கும் அதுவே அஸ்திபாரம் ஆகும். பலிபீடத்தின் கொம்புகள் மேல் பூசப்பட்ட இரத்தம் நாம் கடவுளண்டை நெருங்கும் போது நம் கண்கள் முன் சிறப்புப் பெற்றதாகக் காணப்பட வேண்டும். இந்தஇரத்தம் வேண்டுதலை ஆற்றல் உள்ளதாக்குகிறது. ஆகையால்தான் அது பலிபீடத்தின் கொம்புகள் மேல் இருக்கிறது. அது கர்த்தருடைய சந்நிதியில் இருக்கிறது. அது நம் பலியையும் காணிக்கைகளையும் பரிசுத்தப்படுத்துகிறது.

பலியாகத் தம்மை அளிக்க முன் வந்தவர் தம்மை அளித்துவிட்டார். ஆகவே பலி செலுத்தப்பட்டு அதன் சிறப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இரத்தம் திரை மறைவில்

இருக்கிறது. விசுவாசிகளின் வேண்டுதல்கள் கர்த்தருக்கு இனிமையானவையாய் இருக்கும்.

# 10. ஐக்கியத்திற்குத் திறந்த வாசல்

இதோ திறந்த வாசலை உமக்கு முன்பாக வைத்திருக்கிறேன் (வெளி 3:8).

ஆண்டவரின்சத்தியத்தின் மேல் திடப்பற்று உள்ளவர்களாய் வாழும் பரிசுத்தவான்கள் முன் திறந்திருக்கும் வாசல் இருக்கிறது. என் ஆத்துமாவே ஆண்டவர் தம் வேதத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளபடி நீ வாழவும் மரணமடையவும் தீர்மானித்திருக்கிறாய். ஆகையால் உன் முன்னால் திறந்த இந்தவாசல் இருக்கிறது.

கடவுளோடு ஐக்கியம் ஏற்படுத்தும் திறந்த வாசல் வழியாக நான் நுழைவேன். அதை யார் தடுக்கக் கூடும்? இயேசு என் பாவங்களை நீக்கி தம் நீதியை எனக்கு அளித்திருக்கிறார். ஆகையால் நான் தாராளமாக உள்ளே நுழையலாம். ஆண்டவரே உம் கிருபையினாலேயேஅவ்விதம் நுழைகிறேன்.

வேதத்தின் இரகசியங்களை அறிந்து கொள்ளவும் என் முன் திறந்த வாசல் இருக்கிறது. கடவுளைப்பற்றிய ஆழமான விவரங்களையும் நான் அறிந்து கொள்ளலாம். தெரிந்துகொள்ளப்படுதல், கிறிஸ்துவோடு ஐக்கியப்படுதல், இரண்டாம் வருகை எல்லாம்என் முன் இருக்கின்றன. அவற்றை நான் அறிந்து மகிழலாம். நான் அறிந்து கொள்ள முடியாத எந்தக் கோட்பாடும் இல்லை. எந்த வாக்குறுதியும் இல்லை.

தனி வாழ்க்கையில் எல்லாவித நுழைவுரிமையும் எனக்கு இருக்கிறது. பொது வாழ்க்கையில் எல்லாவிதத்திலும் பயன்உள்ளவனாய் இருக்க எனக்கு வாய்ப்பு இருக்கிறது. கடவுள் எனக்குச் செவிசாய்ப்பார். கடவுள் என்னைப் பயன்படுத்துவார்.

பரலோகத்திலுள்ள சபையை அடையவும் பூலோகத்தில் உள்ள பரிசுத்தவான்களோடு தோழமைகொள்ளவும் நான் செல்லும்போதும் எனக்காக வாசல் திறந்திருக்கிறது. சிலர்என்னை உள்ளே வைத்துக் கதவைத் தாளிட்டு விட அல்லது வெளியே விட்டு மூடிவிடப் பிரயாசப்படுவார்கள். ஆனால் அவர்கள் முயற்சி வெற்றி பெறாது.

நான் பரலோகத்தில் நுழைவதற்கான திறந்த வாசலைச் சீக்கிரத்தில் காண்பேன். முத்தாலான வாசல் வழியாக என் ஆண்டவரும்அரசரும் ஆனவரிடம் சென்று நித்தியமாக அவருடனேயே இருப்பேன்.

# 11. கட்டுப்பாடுகளற்றுப் பயணம் செய்தல்

நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன். அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்து கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (சக.10:12).

இது நோயுற்றிருக்கும் பரிசுத்தவான்களுக்கு ஆறுதலான செய்தி. அவர்கள் தளர்வான நிலை அடைந்து விட்டார்கள். சந்தேகமும் அச்சமுமான படுக்கையிலிருந்து ஒரு நாளும் எழ முடியாது என்று அஞ்சுகிறார்கள். ஆனால் சிறந்த வைத்தியர் நோயை நீக்கவும் அதனால்ஏற்பட்டுள்ள தளர்ச்சியை அகற்றவும் கூடியவர். அவர் வலுக் குறைந்தவர்களைப் பெலப்படுத்துவார். இதை மிகச் சிறந்த முறையில் செய்வார். ஏனெனில் அது யேகோவாவில் செய்யப்படும். நாம் நம்மில் பெலன் உள்ளவர்களாய் இருப்பதைவிடக் கடவுளில் பெலன் உள்ளவர்களாய் இருப்பது மிகவும்நல்லது. ஆண்டவரில் இருந்தால் அது தோழமை உண்டாக்குகிறது. நம்மில் இருந்தால் அது பெருமையை உண்டாக்கும். நம்மில் இருந்தால் எல்லைக்குட்பட்டிருக்கும், கடவுளில் இருந்தால் எல்லையற்றிருக்கும்.

ஆற்றல் கொடுக்கப்படும்போது விசுவாசி அதைப் பயன்படுத்துகிறார்.அதாவது அவருடைய நாமத்திலே நடந்து செல்லுவார். நோயிலிருந்து சுகம் பெற்று எழுந்து நடப்பது எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும். நேயினால் சிறிதுகாலம் வலு இழந்து விட்டிருந்து பின் ஆண்டவரில் பெலன் அடைந்து இருத்தல் எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும். நோயுற்றுப் படுக்கையில்இருந்துவிட்டுப் பின் ஆண்டவரில் ஆற்றல் பெற்றவர்களாய் இருப்பது எவ்வளவு ஆற்றல் அளிப்பதாகும். தம் மக்கள் அங்குமிங்கும் நடந்து செல்ல ஆண்டவர் சுதந்திரம் அளிக்கிறார். அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்த ஒய்வும் அளிக்கிறார். நம்மைப் பண்புள்ளவர்கள் ஆக்குகிறார்.நாம் இளைப்பாறுதலின்றி எந்தக் காட்சியையும் கண்டுகளிக்காமல் இருக்கும் அடிமைகள் அல்ல. இம்மானுவேலின் நாட்டில் நம்முடைய விருப்பப்படி எல்லா இடமும் பயணம் செய்ய சுதந்திரம் உடையவர்கள்.

என் இதயமே நீ இனிமேல் நோய்வாய்ப்பட்டுத் துக்கத்தில் ஆழ்ந்தும்இருக்க வேண்டியதில்லை. நீ வலுவடைந்து கடவுளுடன் சிந்தனையோடு நடமாட இயேசு கட்டளையிடுகிறார். அன்பான அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்திரு!

# 12. உடன்படிக்கை கிருபையின் அடையாளம்

உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து பிழைக்கும்படி உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்த சேதனம் பண்ணி... (உபா.30:6).

உண்மைளயான விருத்த சேதனத்தைப் பற்றி இங்கு வாசிக்கிறோம்.

அதைச் செய்வது யார் என்று பாருங்கள். உன் தேவனாகிய கர்த்தர். அவர் ஒருவரே நம் இதயம் முடிவான பயன் அடையத்தக்கதாக நடவடிக்கை எடுத்துஅதன் சிற்றின்ப நாட்டத்தையும் தூய்மைக் கேட்டையும் அகற்றக்கூடியவர். கர்த்தரில் அன்பு கூரச் செய்வது கிருபையின் அற்புதமாகும் அதைப் பரிசுத்த ஆவியானவரே நிறைவேற்றக் கூடியவர். இதைச் செய்ய நாம் ஆண்டவரையே நெருங்கிப் பார்க்க வேண்டும். அவர் செய்வதைவிடக் குறைவாகச்செய்யப்பட்டால் இதில் திருப்தி அடையக் கூடாது.

எங்கே விருத்தசேதனம் செய்யப்படுகிறது என்றும் பாருங்கள். அது மாம்சத்திற்கானதல்ல, ஆவிக்குரியது. அது உடன்படிக்கைக் கிருபையின் இன்றியமையாத அடையாளமாகும். ஆண்டவரில் அன்புகூருவது தெரிந்து கொள்ளப்பட்டவித்தைப் போன்றவர்களின் நிலையான உறுதிச் சின்னமாகும். இரகசியமான இந்த முத்திரையின் மூலம் விசுவாசி கிருபையைப் பெறத் தகுதியானவர் என்று அறிவிக்கப்படுகிறது. நாம் வெளிப்படையான எந்தச் சடங்காசாரத்தையும் நம்பாமல் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதால் மட்டுமேஇருதயத்தில் அந்த முத்திரை இடப்படுவதைகு; குறித்துக் கவனம் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

இதனால் விளையும் பலன் என்னவென்று பாருங்கள். பிழைக்கும்படி என்று சொல்லப்பட்டிருக்கிறது. சிற்றின்ப நாட்டம் மரணத்தை விளைவிக்கும். மாம்சத்தை மேற்கொண்டால்வாழ்வையும் சமாதானத்தையும் கண்டடைகிறோம். ஆவிக்குரியவற்றில் நாம் அக்கறை காட்டினால் பிழைப்போம். நாம் முழுவதுமாகச் சிறந்த முறையில் ஆண்டவருக்கென்று பிழைத்திருக்க நம் கடவுள் நம் இயற்கை சக்தியில் கிருபையாய்க் கிரியை செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்.

# 13. செய்ய வேண்டியதும் பெறுவதும்

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத்தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற நான் கேட்டு அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சேமத்தைக் கொடுப்பேன் (2.நாளா.7:14).

நாம் ஆண்டவரின் நாமத்தால்அழைக்கப்பட்டவர்களாயிருந்தாலும் குற்றம் புரியும் ஆண்களும் பெண்களுமாயிருக்கிறோம். நம் ஆண்டவர் மன்னிக்க ஆயத்தமாய் இருப்பது எவ்வளவு பெரிய கிருபையாகும் ! நாம் பாவம் செய்யும் போதெல்லாம் நம் கடவுளின் மன்னிப்பை வேண்டி கிருபாசனத்தண்டை ஓடுவோமாக! நாம் நம்மைத்தாழ்த்த வேண்டும். கடவுளின் அழவற்ற அன்பை அனுபவித்த போதிலும் பாவம் செய்கிறோமே என்பதைக் குறித்து நாம் தாழ்மை உள்ளனவர்களாய் இருக்க வேண்டும் அல்லவா? ஆண்டவரே நாங்கள் உம் முன் புழுதியில் இருந்து வணங்கி நாங்கள் நன்றி கெட்டவர்களாய் இருந்து விட்டதைஅறிக்கையிடுகிறோம். பாவம் எவ்வளவு இழிவானது. நம்மைப்போல் அன்பாதரவு பெற்றவர்களிடம் அது காணப்படுமேயானால் அது ஏழு மடங்கு இழிவானது.

அடுத்தபடியாக நம் இரக்கத்திற்காகவும் சுத்திகரிப்பிற்காகவும் பாவத்தின் வலிமையிலிருந்து விடுதலைக்காகவும்வேண்டிக்கொள்வோமாக! ஆண்டவரே எங்கள் விண்ணப்பத்தைக் கேளும் எங்கள் வேண்டுதலைக் கேட்காமல் இருந்து விடாதேயும்.

இந்த விண்ணப்பத்தில் நம் ஆண்டவரின் முகத்தைத் தேட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. நம் குற்றங்களினால் அவர்

நம்மை விட்டுப்போய்விட்டார். அவர் திரும்பி வரவேண்டுமென்று நாம் மன்றாட வேண்டும். ஆண்டவரே உம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக எங்களை நோக்கிப் பார்த்து உம் ஊழியக் காரராகிய எங்கள் மேல் ஆதரவு காட்டும்.

இதற்காக நாம் தீமையை விட்டு விலக வேண்டும். நாம்தீமையிலிருந்து விலகாவிட்டால் கடவுள் நம்மண்டை வர முடியாது.

இதற்குப் பின் 3 வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. கடவுள் கேட்டு மன்னித்து சேமத்தை அளிப்பதாக வாக்குறுதி கொடுக்கிறார். பிதாவே எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக இவை மூன்றையும் எங்களுக்குஅருளிச் செய்யும்.

# 14. ஒருபோதும் வெட்கமடைய மாட்டோம்

மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன் அறிக்கை பண்ணுவேன் (மத்.10:32).

இது கிருபை நிறைந்த வாக்குறுதியாகும். என் ஆண்டவரை அறிக்கை பண்ணுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்னுடைய தவறுகள் எவையானாலும் நான் இயேசுவைக் குறித்து வெட்கமடைவதில்லை. அவர் சிலுவையின் கோட்பாடுகளை பலர் அறியக் கூறவும் அஞ்சுவதில்லை.ஆண்டவரே உம் நீதியை நான் என் இதயத்துள் இரகசியமாக வைக்கவில்லை.

மேலே கூறப்பட்டுள்ள வாக்குறுதி எனக்கு எடுத்துச் சொல்லும் எதிர்கால வாய்ப்பு மகிழ்ச்சியூட்டுவதாய் இருக்கிறது. நண்பர் கைவிட்டு விடுகிறார்கள். பகைவர் மகிழ்ச்சியடைகிறார். ஆனால் ஆண்டவர் அவர்ஊழியக்காரனை ஏற்க மறுப்பதில்லை.

சந்தேகத்துக்கு இடமின்றி இங்கு என் ஆண்டவர் என்னை ஏற்றுக் கொண்டு அவர் என்மேல் தயவாய் இருப்பதைப் புதிய அடையாளங்களினால் காட்டுவார். ஆனால் நான் சிறப்பு வாய்ந்த பிதாவின் முன் நிற்க வேண்டிய நாள் வருகின்றது. அந்நாளில் இயேசுஎன்னை அறிக்கை பண்ணுவார் என்பது எப்பேற்பட்ட பேறாகும்! அவர் இவன் உண்மையாகவே என்னை விசுவாசித்து என் நாமத்திற்காக நிந்திக்கப்பட ஆயத்தமாயிருந்தான். ஆகையால் இவன் என்னுடையவன் என்று நான் அறிக்கையிடுகிறேன் என்பார். முன்பு ஒரு நாள் பெரியவர் ஒருவர் ஆங்கிலஅரசின் சிறப்புப் பட்டம் பெற்றார். அப்பட்டத்தின் சின்னத்தை அரசி அவருக்கு அளித்தார். அதனாலென்ன பரலோகத்தில் இருக்கிற பிதாவின் முன்பாக இயேசு நம்மை அறிக்கை பண்ணுவது எல்லா சிறப்புகளிலும் மேலானதாகும். என் ஆண்டவரை அறிக்கை பண்ண நான் ஒருநாளும்வெட்கப்படாமல் இருப்பேனாக! அறிக்கை பண்ணுவதற்கு அஞ்சிக் கோழைத்தனத்தினால் ஒருநாளும் அமைதியாக இருந்து விடாதிருப்பேனாக, அல்லது தளர்ந்த உள்ளத்துடன் சமரசம் பண்ணாதிருப்பேனாக! என்னை அறிக்கை பண்ணுவதாக வாக்குக் கொடுப்பவரை அறிக்கை பண்ண நான்வெட்கப்படாமல் இருப்பேனாக !

# 15. உணவு பெற்று ஆதரிக்கப்படுதல்

ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினது போலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான் (யோ.6:57).

தேவனுடைய குமாரனோடு நாம் ஐக்கியப்பட்டிருப்பதால் பிழைத்திருக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராய் இருந்து தம்மை அனுப்பின பிதாவால் பிழைத்திருக்கிறார்.அதே விதமாக நம்மை உயிர்ப்பித்த இரட்சகராலே நாம் பிழைத்திருக்கிறோம். நம்

உயிருக்கு ஆதாரமானவர் அதை ஆதரித்தும் வருகிறார். நமக்கு உணவு அளிக்கப்படுவதால் வாழ ஆதரிக்கப்படுகிறோம். ஆவியின் வாழ்க்கையை ஆவியின் உணவினால் ஆதரிக்க வேண்டும். ஆவியின் உணவு ஆண்டவர்இயேசுவே. அவர் வாழ்க்கையும் மரணமும் வேலையும் வார்த்தையும் மட்டுமல்ல. ஆனால் இவையெல்லாம் ஒழுங்கமைந்த அவராலேயே இயேசுவிலேயே நாம் உணவு பெறுகின்றோம்.

இது திருவிருந்தில் நமக்கு அளிக்கப்படுகிறது. அதோடு நாம் ஆண்டவரைப் பற்றித் தியானிக்கும் போதும் அதைஅனுபவித்து மகிழ்கிறோம். அவருக்குத் தகுதியான நம்பிக்கையினால் அவரை விசுவாசிக்கிறோம். அன்பினால் அவரை நமக்கு உரியவராக ஏற்றுக்கொள்கிறோம். நம் உள்மனம் உயிர்த்துடிப்புடன் இருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள ஆற்றலினால் அவரோடு ஒன்றாக இணைக்கப்படுகிறோம்.இயேசுவின் சரீரத்தை உட்கொள்வதைப் பற்றி அறிந்திருக்கிறோம். ஆனால் அதைப்பேச அல்லது எழுத இயலாது. ஞானமான முறை அதில் பயிற்சி பெறுவதும் பெற்றுக் கொண்டே இருப்பதும் ஆகும். அதை அளவின்றி உட்கொள்ள அழைக்கப்படுகிறோம். இயேசுவே நம் உணவும் நாம் பருகும் நீருமாய்இருக்கும்போது அவ்விதம் செய்வது மிகுதியான பலனை அளிக்கும்.

ஆண்டவரே இதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். இது என் புது வாழ்க்கைக்குத் தேவையானதாயும் எனக்கு மகிழ்ச்சி அளிப்பதாயும் இருக்கிறது. ஆகவே இப்போதே உம்மை உட்கொள்கிறேன்.

# 16. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருத்தல்

*நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோ.14:19).*

நாம் பிழைக்கிறபடியால் நம்மை விசுவாசிக்கிறவர்களும் பிழைப்பார்கள் என்று இயேசு திட்டமாய்க்கூறியிருக்கிறார். தலைவர் பிழைத்திருப்பதால் அவரைச் சார்ந்தவர்களும் பிழைத்திருப்பார்கள். இயேசு உயிர்த்தெழுந்திராவிட்டால் நாம் நம் பாவத்தில் மரித்திருப்போம். ஆனால் அவர் உயிர்த்தெழுந்தபடியினால் எல்லா விசுவாசிகளும் அவரில் உயிர்த்தெழுந்திருக்கிறார்கள். அவர்மரணம் நம் பாவங்களை அகற்றி மரண ஆக்கினைக்குட்பட்டிருந்த நம் கட்டுகளை அவிழ்த்து விட்டிருக்கிறது. அவர் உயிர்த்தெழுதல் நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவதை நிச்சயப்படுத்துகிறது. நாம் கடவுளின் மன்னிப்பைப் பெற்றிருக்கிறோம். கிருபையினால் அவர் நீ சாகாதபடிக்கு கர்த்தர்உன் பாவம் நீங்கச் செய்தார் என்கிறார்.

இயேசு கிறிஸ்து தம் வாழ்க்கையைப்போல் தம் மக்களின் வாழ்க்கையையும் நித்தியமானதாக்கியிருக்கிறார். அவர்கள் அவரில் இருக்கிறபடியால் அவர் உயிரோடிருக்கும் வரை அவர்களும் உயிரோடிருப்பார்களேயல்லாமல் எப்படி மரித்துப்போவார்கள்? அவர் இனி மரணமடைய மாட்டார். மரணம் அவரை ஆட்கொள்ள முடியாது. அதேவிதமாக அவர்களும் அவர்கள் பழைய பாவங்களாகிய கல்லறைக்குச் செல்லாமல் புது வாழ்வு பெற்று ஆண்டவருக்கென்று வாழ்வார்கள். விசுவாசியே நீ அதிகமாகச் சோதிக்கப்படும்பொழுது ஒரு நாள் பகைவனால்அழிக்கப்பட்டு விடுவாயோ என்று அஞ்சினால் இது நீ இழந்துவிடும் நம்பிக்கையை மீட்டு அளிப்பதாக இருக்கட்டும். நீ ஒருநாளும் உன் ஆன்மீக வாழ்க்கையை இழப்பதில்லை. ஏனெனில் அது கிறிஸ்துவோடு கடவுளில் மறைத்துவிடப்பட்டிருக்கிறது. உன் ஆண்டவர் நித்தியமாய்வாழ்வதைக்குறித்து உனக்கு ஐயம் இல்லை அல்லவா ? ஆகையால் நீ மரணமடைய அவர் விட்டுவிடுவார் என்று நினைக்க வேண்டாம். ஏனெனில் அவரும் நீயும் ஒன்றாயிருக்கிறீர்கள். நீ வாழ்வாய் என்பதற்கான ஆதாரம் அவர் வாழ்வதேயாகும்.

இதைக்குறித்து நீ பயப்பட வேண்டியதேயில்லை.ஆகையால் ஆண்டவரில் அமர்ந்திரு.

# 17. தூய அச்சம்

கற்பனைக்குப் பயப்பிடுகிறவனோ பலனடைவான் (நீதி.13:13).

கடவுளின் வார்த்தையின் மேல் காட்டப்படவேண்டிய பயபக்தி மிகவும் புறக்கணிக்கப்படுகிற ஒன்றாய் இருக்கிறது. மக்கள் தாங்கள் அதைவிட ஞனமுள்ளவர்கள் என்று நினைத்து அதை மதிப்பீடு செய்ய முன்வருகிறார்கள். நானோ தேவனுக்குப் பயந்ததினால் இப்படிச் செய்யவில்லை என்று ஒருவர் வேதத்தில் சொல்லுகிறார். தெய்வீகஉள்ளுக்கம் பெற்ற வேதம் பிழையே இல்லாதது என்று நாம் ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறதனால் நாம் அதற்கு சிறப்பானதாக மதிப்பைக் காட்டுகிறோம். நாம் அதைக்குறித்துத் திகில் கொள்ளுவதில்லை. ஆனால் பரமதகப்பன் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்குக் கூடிய பயபக்திஉள்ளவர்களாய் இருக்கிறோம். அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டனைகளைக் குறித்து நாம் பயப்படுவதில்லை. ஏனெனில் அதில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆணைகளைக் குறித்து அச்சம் உள்ளவர்களாய் இருக்கிறோம்.

இவ்விதக் கட்டளைகளைக் குறித்து தூய அச்சம்உள்ளவர்களாயிருப்பது அமைதியளிக்கும் தாழ்மையை உண்டாக்குகிறது. இது முரட்டுத்தனமான பெருமையைவிட இனிமையானது. இது நம் உள்ளத்தூண்டுதலுக்கு வழிகாட்டியாய் அமைகிறது. நாம் கீழ்நோக்கிச் செல்லும்போது தடையாய் அமைகிறது. நாம் மேல் நோக்கிச் செல்லத் தூண்டுகோலாய்அமைகிறது. கட்டளைகளை நாம் மதித்துக் கைக்கொள்ளுவது தீமையிலிருந்து நம்மைக் காத்து நீதியின் பாதையில் வழிநடத்தி நன்மை தீமை அறியும் நேர்மை உணர்வு

அடையச் செய்கிறது. அது திராட்சை இரசம் நிறைந்த கிணறு போன்றது. கடவுளுக்கு நாம் திருப்தி அளிக்கிறோம் என்னும்தன்னம்பிக்கை அளிக்கிறது. அது உலகத்திலேயே பரலோக இன்பங்களை அனுபவிக்கும் நிலையாகும். ஆண்டவரின்மேல் நமக்குள்ள பயபக்தியை குறித்துத் தெய்வபயம் அற்றவர்கள் நம்மைப் பரியாசம் பண்ணலாம் அதனாலென்ன? நம்முடைய மேலான அழைப்புக்கான பரிசே நமக்கு ஏற்ற விதமாகஆறுதலளிக்கக் கூடியது. கீழ்ப்படிவதனால் நாம் அடையும் பயன்கள் நம்மை ஏளனம் செய்பவர்களின் ஏளனத்தை செய்யத் தூண்டுகிறது.

# 18. கண்ணீருக்குப் பின் கெம்பீரமான அறுவடை

*கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் (சங்.126:5).*

கண்ணீர்விடும் காலங்கள் விதைப்பதற்கு ஏற்றவை. பூமி காய்ந்து இருப்பதை நாம் விரும்புவதில்லை. அக்கறையாகிய கண்ணீர்கசிந்தொழுகும் விதை சீக்கிரத்தில் முளைக்கும். வேண்டுதலோடு கூடிய கண்ணீரிலுள்ள உறுப்பானது நல்ல விதைக்கு நறுமணச் சுவை அளிக்கும். அது புழுக்கள் அரிக்காதபடி அதைப் பாதுகாக்கும். பயபக்தி நிறைந்த மெய்யார்வத்தோடு பேசிய உண்மை நீடித்த வாழ்வு உள்ளது. ஆகையால் நம்அழுகையினால் விதைப்பதை நிறுத்திவிடாமல், அது விதைப்பதற்கு ஏற்ற காலம் ஆனபடியால் நம் முயற்சிகளை இருமடங்கு ஆக்குவோம்.

பரலோகத்து விதையை மகிழ்ச்சியுடன் விதைப்பது ஏற்றதல்ல. கடவுளைப்பற்றி போதிக்கும்போது பொறுப்பற்ற போக்கில்போதிக்காமல் மற்றவர்களின் ஆத்துமாக்களைக் குறித்து

*ஆழ்ந்த துக்கமும் கவலையும் உள்ளவர்களாய்ப் போதிப்பது நல்லது. கவலை இல்லாமல் போருக்குச் சென்றவர்களைக் குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் தோல்வி அடைந்திருக்கிறார்கள். அவ்விதமாக விதைப்பவர்களும்அவர்களைப்போன்றே இருப்பார்கள்.*

*என் இதயமே, கண்ணீரோடு நீ விதைப்பாயாக. ஏனெனில், நீ கெம்பீரத்தோடு அறுவடை செய்வாய் என்னும் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. நீ கண்டிப்பாக அறுவடை செய்வாய். உன் ஊழியத்தின் பலனை நீயே காண்பாய். அதுஉனக்கு மகிழ்ச்சி அளிக்கத்தக்கதாய் இருக்கும். காய்ந்துபோனதும் நன்றாய் விளையாததுமான பயிர்களை அறுவடை செய்வது இவ்வித மகிழ்ச்சியை அளிக்காது. கண்ணீரால் உன் பார்வை மங்கலாக இருக்கும்போது பொன் போன்ற மணிகளாலான விளைச்சலை நினைத்துப் பார். இக்காலத்துஉழைப்பையும் ஏமாற்றத்தையும் மகிழ்ச்சியாக சகித்துக்கொள். ஏனெனில் நீ ஊழைப்புக்கேற்ற ஊதியத்தை அறுவடை செய்வாய்.*

# *19. கட்டுப்பாட்டுக்குள்ளான சிட்சிப்பு*

*உன்னை... மட்டாய்த் தண்டிப்பேன் (எரேமி.30:11)*

*தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படுதல் அழிவடையும் நிலையாகும். அவன் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான்.அவனைப் போகவிடு என்று ஆண்டவர் சொல்வதை அது மெய்ப்பிக்கும். இந்நிலை நமக்கு ஏற்படாதவாறு கடவுள் கிருபை செய்வாராக! இடையறாத வாழ்வு அச்சத்தையும் நடுக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். யார் யாரை ஆண்டவர் அதிகமாக நேசிக்கிறாரோ அவர்களைக் கண்டித்து,தண்டிக்கிறார். யார்மேல் அவருக்கு மதிப்பு இல்லையோ அவர்களை அடிக்கப்பட இருக்கும்*

காளைகளைப்போல அச்சமில்லாமல் கொழுத்து வளர விடுகிறார். அவர் பிள்ளைகளைத் தண்டிக்கிறார்.

மட்டாய்த் தண்டிப்பேன் என்று அவர் கூறியிருப்பதைக் கவனித்துப் பாருங்கள். அவர்அன்பை அளவில்லாமல் அளிக்கிறார். ஆனால் தண்டனையை மட்டாய் அனுப்புகிறார். நியாயப்பிரமாணத்தின்படி எந்த இஸ்ரவேலனையும் நாற்பது அடிவரைக்கும்தான் அடிக்கலாம். அதனால் அடிக்கும்போது கவனமாய் எண்ணவேண்டும். அடிப்பதனால் ஏற்படும் துன்பமும் வரம்புக்குட்பட்டே இருக்கும்.அதேவிதமாக விசுவாசிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவராய்த் துன்பம் அனுபவிக்கும் ஒவ்வொருவர்மேல் விழும் ஒவ்வொரு அடியும் எண்ணப்படும். மட்டான ஞானம், மட்டான இரக்கம், மட்டான அன்பின் மூலம் நம் தண்டனை கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகிறது. இவ்வளவு தெய்வீகமானதீர்ப்புக்கு எதிராக நாம் கலகம் செய்யாதிருப்போமாக. ஆண்டவரே, என் பாத்திரத்தில் விழும் கசப்பான துளிகளை எண்ண நீர் அருகிலேயே இருந்தால் மகிழ்ச்சியுடன் அந்தப் பாத்திரத்தை உம் கையிலிருந்து வாங்கி, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றுசொல்லிக்கொண்டே உம் கட்ளைப்படி அதைப் குடிப்பேனாக.

## 20. ஒவ்வொரு பாவத்திலிருந்தும்

அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார் (மத்.1:21).

ஆண்டவரே, என் பாவங்களிலிருந்து என்னை இரட்சியும். இயேசு கிறிஸ்துவின்நாமத்தினால் நான் அவ்விதம் ஜெபிக்கத் தூண்டப்படுகிறேன். கடந்த காலத்தில் பாவங்கள் செய்த பழக்கம் என்னை அடிமைப்படுத்திவிடாதபடி அவற்றிலிருந்து என்னை இரட்சியும். நான் என் பெலவீனத்துக்கு அடிமையாகிவிடாதபடி

உடல் நலத்தைச் சார்ந்த பாவங்களிலிருந்து என்னைஇரட்சியும். பாவங்களைக் குறித்து வெறுப்பு என்னை விட்டு நீங்கிவிடாதபடி தொடர்ந்து என் கண் எதிரிலேயே இருக்கும் பாவங்களிலிருந்து என்னை இரட்சியும். என்னில் தேவையான வெளிச்சல் இல்லாதபடியால் நான் பார்க்கத் தவறிய இரகசியப் பாவங்களிலிருந்து என்னை இரட்சியும்.திடீரென்று நேரிட்டு என்னை வியப்பில் ஆழ்த்தும் பாவத்திலிருந்து என்னை இரட்சியும். தொடர்ந்து வேகமாக ஒன்றன்பின் ஒன்றாக வரும் சோதனைகள் என்னில் ஆர்வத்தை எழுப்பிவிடாதபடி என்னை இரட்சியும். ஆண்டவரே, ஒவ்வொரு பாவத்திலிருந்தும் என்னை இரட்சியும். எந்தப்பாவமும் என்னை மேற்கொள்ள ஒட்டாதேயும்.

நீர் ஒருவரே இதைச் செய்ய முடியும். நானாக என் சங்கிலிகள் அறுத்து எறியவாவது என் பகைவர்களை வெட்டி வீழ்த்தவாவது முடியாது. நீர் சோதிக்கப்பட்டபடியால் உமக்குச் சோதனைகளைப்பற்றித் தெரியும். பாவத்தின்பாரத்தை நீர் சுமந்தபடியால் உமக்குச் சோதனையைப்பற்றித் தெரியும். பாவத்தின் பாரத்தை நீர் சுமந்தபடியால் உமக்குப் பாவத்தைப் பற்றித் தெரியும். போராட்டத்தின்போது எனக்கு எவ்வித உதவி அளிக்கவேண்டுமென்று உமக்குத் தெரியும். பாவம் செய்வதிலிருந்துஇரட்சிக்கவும், பாவம் செய்தபின் இரட்சிக்கவும் உமக்கு முடியும். நீர் இதைச் செய்வீர் என்று உம் பெயரிலேயே வாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாளிலேயே அந்த தீர்க்கதரிசனத்தை உண்மையாக்க உம்மை வேண்டிக்கொள்கிறேன். எரிச்சலுக்காவது, பெருமைக்காவது,மனத்தளர்ச்சிக்காவது, வேறு எவ்விதத் தீமைக்காவது நான் இடங்கொடாதபடி என்னைக் காப்பாற்றும். இயேசுவின் நாமம் என்னில் மென்மேலும் மகிமைப்படும்படி என்னை இரட்சியும்.

# 21. கடவுளின் பெருக்கல் வாய்ப்பாடு

சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான். கர்த்தராகிய நான் ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன் (ஏசா.60:22).

ஆண்டவருக்காகச்செய்யப்படும் வேலைகள் பல சந்தர்ப்பங்களில் சிறிய அளவிலேயே தொடங்கப்படுகின்றன. ஆயினும் அவை மதிப்பில் குறைவதில்லை. வலுக்குறைவு நம்பிக்கையைப்பேணி வளர்த்து, கடவுளை நம் அருகில் கொண்டு வந்து, அவர் நாமத்திற்கு மகிமை தேடித் தருகிறது. அதன் பயன் யாவும்பெருகும் என்பது வாக்குறுதி. விதைகளில் மிகச் சிறியது கடுகு விதையாகும். ஆயினும் அது ஆகாயத்துப் பறவைகள் வந்து அடையத்தக்கதான பெரிய கிளைகளையுடைய மரமாகிறது. நாம் ஒன்றை, மிகச் சிறிய ஒன்றை வைத்துத் தொடங்கலாம். ஆயினும் அது ஆயிரமாகப் பெருகக்கூடியது. பலுகிப்பெருகச் செய்வதில் ஆண்டவர் சிறப்பு வாய்ந்தவர். தனியாக இருந்த தம் ஊழியக்காரரிடத்தில் அவர் எத்தனையோ முறை நான் உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்று சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள். ஒருவராயும், இருவராயும் இருக்கிறவர்களே, ஆண்டவரைநம்புங்கள். நீங்கள் அவர் நாமத்தில் கூடியிருந்தால், அவர் உங்கள் மத்தியில் இருப்பார்.

எண்ணிக்கையின் மதிப்புப்படி ஆற்றலைக் கண்கிடுகிறவர்களுக்கு சின்னவன் என்பதைவிட இகழத்தக்கது வேறு எதாய் இருக்கலாம். ஆயினும் அவனே ஒரு பெரிய ஜாதியினருக்குக்கருமூலம் போன்றவன். சாயந்திரத்தில் முதலாவது ஒரே ஒரு நட்சத்திரம் ஒளி வீசுகிறது. அதன் பின் விரைவாகப் பல நட்சத்திரங்கள் வானத்தில் ஒளிவீசத் தோன்றிவிடுகின்றன.

இவ்விதம் பெருகுவது வெகு காலத்துக்குப் பின்தான் என்று நாம் நினைக்கவேண்டியதில்லை. ஏனெனில் கர்த்தராகிய நான் ஏற்ற காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன் என்று சொல்லியிருக்கிறார். ஆயினும் மக்கள் கிளர்ச்சியுற்றிருக்கும்

கூட்டங்களில் ஏற்படுவதுபோல உரிய காலத்துக்கு முன்னதாக பரபரப்புடன் இது நடைபெறாது. ஏற்றகாலத்தில்நடைபெறும். கால தாமதம் இராது. ஆண்டவர் தீவிரமாய் செயல்படும்போது அவர் வேகம் மேன்மை பெருந்தியதாய் இருக்கும்.

# 22. அவர் வாக்குறுதியைக் குறித்து மன்றாடுதல்

கர்த்தரான ஆண்டவரான தேவரீர் அதைச்சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக (2.சாமு.7:29).

இது கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதியை எடுத்துக்கூறி மன்றாடுவதனால் நமக்கு இரண்டு மடங்கு போதனை அளிக்கிறது. ஆண்டவராகிய தேவன் கூறிய எல்லாம் உண்மையென்று நாம் ஏற்றுக்கொண்டு கிருபாசனத்தின் முன் எடுத்துக் கூறி மன்றாடவேண்டும்.

நமக்குஉரியவரான தேவன் கூறியதை மேற்கோளாக எடுத்துக் கூறுவது எவ்வளவு இனிமையானது என்று நினைத்துப் பாருங்கள். மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில் முதல் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்கும் நடுவில் ஆகையால் என்னும் வார்த்தை இருப்பது போல் தாவீது மன்றாடுகிறார்.

நாம்சந்தேகப்படுவதால் அல்லாமல் நம்புவதாலே ஜெயிக்கிறோம். நம்பிக்கையில்லாமல் ஜெயிப்பது ஆண்டவரின் பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல. ஆம் ஆண்டவரே நாங்கள் உம்மேல் சந்தேகம் கொள்ள முடியாது. நாங்கள் தைரியமாக எதிர்பார்ப்பதற்கெல்லாம் உம்முடைய ஒவ்வொரு வார்த்தையும்திடமான ஆதாரம் என்று நம்ப ஏவப்படுகிறோம். நாங்கள் உம்மண்டை வந்து நீர் சொன்னபடி செய்யும். என்று கேட்கிறோம். உம் ஊழியக்காரனுடைய வீட்டை ஆசீர்வதியும்.

எங்களில் நோயுற்றவர்களைச் சுகப்படுத்தும். தயக்கம் உற்றவர்களை இரட்சியும். வழிவிலகி அலைந்து திரிபவர்களைமீட்டுக் கொள்ளும். உமக்குப் பயந்து வாழ்பவர்களை நிலைநாட்டியருளும். ஆண்டவரே உம் வார்த்தையின்படி எங்களுக்கு உணவும் உடையும் அளியும். நாங்கள் செய்வதெல்லாம் வளம்பெறச் செய்யும். முக்கியமாக எங்களுக்கு அருகில் இருப்பவர்களுக்கு நற்செய்தியை எடுத்துச் சொல்லும். எங்கள்முயற்சியில் வெற்றியடையச் செய்யும். எங்கள் வேலைக்காரரை உம் வேலைக்காரரும் எங்கள் பிள்ளைகளை உம் பிள்ளைகளும் ஆக்கும். எங்கள் பின் சந்ததியார் மேலும் உம் ஆசீர்வாதம் இருப்பதாக! இவ்வுலகில் எங்கள் சந்ததியார் இருக்கும் வரை அவர்கள் உமக்கு உண்மையுள்ளவர்களாய்வாழ்வார்களாக! ஆண்டவரே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக!

# 23. வெளிச்சத்தின் அறுவடை மகிழ்ச்சி

நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது (சங். 97:11).

நீதியின் பாதையில் செல்ல துணிந்து முயற்சி செய்பவன் முதலில் இடர் அடைந்தாலும் இறுதியில் இடரெல்லாம் நீங்கப் பெற்று பயனும் அடைவான். தூயவாழ்க்கை விதைப்பதைப் போன்றது. பார்வைக்கு எல்லாம் மறுபடியும் சேர்க்கப்படுவதற்கு ஏற்றதாயிராமல்பூமிக்குள் புதைக்கப்பட்டது போல் காணப்படும். அதன் பலனை உடனே அறுவடை செய்வோம் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. ஆனால் அத்தவறு இயற்கையானதே. ஏனெனில் வெளிச்சத்தை பூமிக்குள் புதைத்து வைக்கமுடியாது. ஆயினும் மேலே கொடுக்கப்பட்ட வசனத்தில் வெளிச்சம்விதைக்கப்பட்டிருக்கிறது என்று

சொல்லப்பட்டிருக்கிறது. அது வெளியில் காணப்படாமலிருக்கிறது. அதை விதைக்கப்பட்டிருப்பதால் யாரும் அதைப்பார்க்க முடியாது. ஒருநாள் அது தன்னை வெளிப்படுத்தும் என்று நாம் நிச்சயமாய் நம்பலாம்.

வெளிச்சத்தை விதைப்பவர்களுக்குஅறுவடையை ஆண்டவர் ஏற்படுத்தி இருக்கிறார். ஒவ்வொருவரும் தங்களுக்காக அறுவடை செய்வார்கள். பின் மகிழ்ச்சி உண்டாகும். வெளிச்சத்தின் விதைகள் மகிழ்ச்சி என்னும் கதிர்களை வளரச்செய்யும். அவர்கள் நேர்மையைக்குறித்து மனிதர் அவர்களைப் பாராட்டாவிட்டாலும் அவர்களைக்கண்டித்தாலும் கடவுளுக்கு முன் அவர்கள் நேர்மையாய் நடந்தார்கள். சுற்றியுள்ளவர்கள் அவர்கள் குற்றம் கண்டுபிடிக்கிறவர்கள் என்று பழித்துரைத்தாலும் அவர்கள் நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள். பூமியின் அரிய பலனைக்காண விவசாயிகள் காத்திருப்பது போல் அவர்கள் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் அவர்களுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டது. அறுவடையின் ஆண்டவரால் அவர்கள் சார்பில் மகிழ்ச்சி ஆயத்தம்பண்ணப்பட்டது.

சகோதரரே தைரியம் கொள்ளுங்கள். நாம் அவசரப்படவேண்டியதில்லை. பொறுமையுடன் நம் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்வோமாக. ஏனெனில் சீக்கரத்தில் நம் ஆத்துமாக்கள் வெளிச்சத்தையும் மகிழ்ச்சியையும் அடையும்.

# 24. கடவுள் பற்றில் திடநிலை

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெங்கல அலங்கமாக்குவேன் அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள். உன்னை இரட்சிப்பதற்காகவும் உன்னைத்தப்புவிப்பதற்காகவும்

நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.15:20).

கடவுள் பயத்திலும் நம்பிக்கையிலும் திடநிலை ஒரு மனிதனை வெண்கல அரண்போல் ஆக்கும். அதை ஒருவரும்நொறுக்கவாவது உடைக்கவாவது முடியாது. ஆண்டவர் ஒருவரே அவ்விதம் ஆக்கக் கூடும். உலகிலும் சபையிலும் முக்கியமாகப் போதிக்கவும் இப்படிப்பட்டவர்கள் தேவை.

போலி வாழ்க்கை மிகுந்திருக்கும் இக்காலத்தில் உண்மையைக் குறித்த சமரசத்திற்கு இணங்கிப் போகாத மக்களைமற்றவர்கள் கடுமையாகத்தாக்குவார்கள். சாத்தானையும் அவன் வித்துக்கள் போன்றவர்களையும் மன உறுதியைப்போல் வேறெதுவும் வெறுப்பூட்டுவதாகத் தெரியவில்லை. அசீரியர்கள் மதிற்சுவர்களால் பாதுகாக்கப்பட்ட நகரங்களையும் முற்றுகையிட்டது போல் இவர்கள் பக்தியில்உறுதியானவர்களைத் தாக்குகிறார்கள். ஆனால் தம்முடைய பலத்தினால் கடவுள் பலப்படுத்தியவர்களுக்கு எதிராக அவர்கள் தாக்குப்பிடிக்க முடியாது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. சமயக்கோட்பாடுகளாகிய காற்றினால் அலைக்களிக்கப்படுகிறவர்கள் தாக்கப்பட்டவுடன் விழுந்து விடுகிறார்கள்.ஆனால் கோட்பாடுகளின் கிருபையை உள்ளவர்கள் அக்கோட்பாடுகளின் கிருபையை நேசிப்பதால் கொந்தளிக்கும் கடவுளின் மத்தியில் இருக்கும் பாறைகளைப்போல் ஊறுதியாய் நிற்பார்கள்.

இவ்வித திட நிலையை எங்கிருந்து பெறுகிறார்கள்? நான் உன்னுடனே இருக்கிறேன் என்றுகர்த்தர் சொல்லுகிறார். இதுதான் உண்மையான காரணம் தம்மேல் திடப்பற்று உள்ளவர்களை யேகோவா எதிரிகளின் தாக்குதலிலிருந்து காப்பாற்றி விடுவிப்பார். தமக்கு எதிராகச் சேனைகள் வருகின்றன. ஆனால் சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கிறார். நாம் இங்கிருந்து ஓர் அங்குலம் கூடநகரத்துணியோம். ஏனெனில் ஆண்டவரே அந்த இடத்தில்

நம்மை வைத்துப் பிடித்திருக்கிறார். நாம் அங்கேயே நித்தியமாய் நிலைத்திருப்போம்.

## 25. முதலாவது கடவுள் பின் மற்றவை

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத்.6:33).

திருமறை எப்படித் தெடங்குகிறது என்று பாருங்கள். ஆதியிலே தேவன் என்று தொடங்குகிறது. உங்களுடைய வாழ்க்கையும் அவ்விதமே தொடங்கப்படும். முதலாவது உங்களுடைய முழு ஆத்துமாவோடும் Nதுவனுடைய ராஜ்யத்தை உங்கள் குடியுரிமைத்தொகுதிஎன்றும் அவர் நீதியை உங்களுடைய வாழ்க்கையின் சிறப்பு இயல்பு என்றும் தேடுங்கள். மீதியைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவை ஆண்டவரிடமிருந்தே உங்களை வந்தடையும். இந்த வாழ்க்கைக்குத் தேவையான எல்லாமும் கடவுள் பற்றும் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்.

இது எப்படிப்பட்ட வாக்குறுதி என்று நினைத்துப் பாருங்கள். நீங்கள் கடவுளைத்தேடும் போது அவர் உணவு, உடை, இருப்பிடம் எல்லாவற்றையும் உங்களுக்குக் கொடுப்பதாக ஏற்றுக் கொள்கிறார். நீங்கள் அவர் வேலையைச் செய்யுங்கள். அவர் உங்களைக்கவனித்துக் கொள்வார். நீங்கள் ஏதாவதொரு முக்கியமான பொருளை வாங்கும் போது உங்களுக்கு வேண்டிய கயிறும் காகிதமும் கொடுக்கப்படுகிறது. அதே விதமாக தேவனுடைய ராஜ்யத்தோடு உங்கள் உலகப்பிரகாரமான தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். இரட்சிப்புக்கு உரிமையானவன்பட்டினியால் மாண்டுபோவதில்லை. தன் ஆன்மாவுக்கு நீதியின் ஆடைகளைத் தரித்துக் கொள்கிறவனை கடவுள் ஆடையில்லாத உடம்போடு இருக்க விடமாட்டார்.

கவலைப்படுவதை விட்டு ஒழியுங்கள். முழு மனதோடும் தேவனைத் தேடுங்கள். பிறர் பொருளை இச்சித்தல் வறுமையாகும். கவலைப்படுதல்ஆழ்துயர் நிலையாகும். கடவுளை நம்புதல் சொத்தாகும். கடவுளைப்போல் இருத்தல் வழி வழிச் சொத்தாகும். ஆண்டவரே நான் உம்மைத் தேடுகிறேன் எனக்குத் தென்படும்.

## 26. நமக்காக

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும் (மத்.24:22).

தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக ஆண்டவர் பல தீர்ப்புகளைச் செயல்படுத்தாமல் இருக்கிறார். சில தண்டனைகளைக் குறைக்கிறார். பெரிய இன்னல்களில் ஆண்டவர் தாம் தெரிந்து கொண்டவர்களைக் குறித்த அக்கறையினால் நெருப்பைத் தணிக்காமல் இருந்திருந்தால், அது எல்லாவற்றையும்எரித்து விட்டிருக்கும். இவ்விதமாக இயேசுவுக்காக அவர் தெரிந்து கொண்டவர்களை இரட்சிப்பது மட்டுமல்லாமல், அவர் தெரிந்து கொண்டவர்களுக்காக அவர்கள் வம்சம் அழியாது பாதுகாக்கிறார்.

பரிசுத்தவான்கள் எவ்வளவாக மதிக்கப்படுகிறார்கள் என்று பாருங்கள். அவர்கள்எவ்வளவு ஊக்கத்தோடு தங்கள் ஆண்டவரோடு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும் என்றும் பாருங்கள். பாவிகளுக்காக அவர்கள் ஏறெடுக்கும் ஜெபத்தை அவர் கேட்டு அவர்கள் இரட்சிப்புக்காக அவர்கள் எடுக்கும் முயற்சிகளை ஆசீர்வதிப்பார். நம்பிக்கை இல்லாதவர்களுக்குவிசுவாசமாய் இருக்கும்படி விசுவாசிகளை அவர் ஆசீர்வதிக்கிறார். ஆண்டவர் உயர்வாக மதிக்கும் தாய், மனைவி, மகள் போன்றவர்களின் வேண்டுதலினாலேயே பல பாவிகள் வாழ்கின்றார்கள்.

ஆண்டவர் நம்மிடம் ஒப்படைத்திருக்கும் ஒப்பிணைவற்ற ஆற்றலை நாம் சரியாகப்பயன்படுத்தியிருக்கிறோமா? நாம் இக்காலத்திற்காகவும் நம் நாட்டிற்காகவும் மற்ற நாடுகளுக்காகவும் ஜெபிக்கிறோமா? போர், பஞ்சம், கொள்ளை நோய், ஏற்படும்போது அவை பல நாட்கள் நீடிக்காமல் இருக்க கடவுளிடம் கெஞ்சி மன்றாடுகிறோமா? திடீரென்று கடவுள்மேல்நம்பிக்கையின்மையும் குற்றங்களும் சிற்றின்பப்பற்றுகளும் வெளிப்படும்போது கடவுளிடம் புலம்புகிறோமா? பாவத்தின் ஆட்சிக்கு முடிவுகட்ட தம் மகிமையான வருகையைத் துரிதமாக்க ஆண்டவர் இயேசுவிடம் மன்றாடி கெஞ்சுகிறோமா? நாம் முழங்காலில் நின்று ஜெபித்து கிறிஸ்துகாணப்படும் வரை இளைப்பாறாமல் இருப்போமாக!

# 27. அவர் சேவை, அவர் சமூகம், அவர் நாமம்

அவருடையஊழியக்காரர் அவரைச்சேவித்து அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும் (வெளி 22:4).

மகிமையின் நாட்டில் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் நம்முடையவையாய் இருக்கும்.

அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள்

வேறெந்த தலைவரும் நம்மை ஒடுக்கமாட்டார்கள். எந்த வேலையும் நமக்குத் தொல்லை உண்டுபண்ணாது. நாம் எப்போதும் தளர்ச்சியோ தளர்வோ இல்லாமல் இயேசுவைச் சேவிப்போம். இதுதான் விசுவாசிக்கு மோட்சமாகும். ஆண்டவர் இயேசுவை எல்லா வகையிலும்சேவிப்பதும் அவர் நம்மைத் தம் ஊழியக்காரர் என்று ஏற்றுக் கொள்வதுமே நித்தியத்துக்கு நம் ஆன்மாவின் குறிக்கோளாகும்.

அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்

இது சேவையை மகிழ்ச்சி நிறைந்தது ஆக்குகிறது. ஆம் அதுவே சேவையின் இப்போதைய பரிசாகும். நாம் நம் ஆண்டவரை அறிவோம். ஏனெனில் அவர் இருக்கிற வண்ணமாக அவரைக் காணலாம். ஆண்டவரின் மிக உண்மையான ஊழியக்காரன் மிகப்பெரிய சலுகை இயேசுவின்முகத்தைக் காணவேண்டும் என்பதே. மோசே நான் உம்முடைய முகத்தைக் காண வேண்டும் என்பதைத் தவிர வேறெதைக்கேட்டிருக்க முடியும்?

அவருடைய நாமம் அவருடைய நெற்றிகளில் இருக்கும்

ஆண்டவரின் நாமம் அவருடைய நெற்றிகளில் காணப்படும்வரை அவர்கள் அவரை உற்றுப்பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். அவர் அவர்களைத் தம்முடையவர்கள் என்று ஏற்றுக்கொள்வார்கள். அகத்தின் உள்ளிருக்கும் கிருபையின்இரகசியமான அடையாளம் ஒப்புக் கொள்ளப்பட்ட உறவாக மலரும்.

ஆண்டவரே! இவை மூன்றையும் உம்முடைய ஆசீர்வாதம் நிறைந்த இருப்பிடத்தில் நாங்கள் முழுமையாகப் பெறத்தக்கதாக இங்கேயே அவற்றைப் பெறத்தொடங்க அருளும்.

# 28. அறியாமையினால் ஏற்படும் பாவங்கள்

அது அறியாமையினால் செய்யப்பட்டபடியினாலும் •••..அவர்களுக்கு மன்னிக்கப்படும் (எண்.15:25).

நம் அறியாமையால் ஏற்படும்பாவங்களை நம் அறியாமையாலே நாங்கள் முழுமையாக அறிந்து கொள்வதில்லை. ஆயினும் செய்யவேண்டியனவாயும் செய்யவேண்டாதனவாயும் அவற்றில் பல உண்டு என்பதை நாம் அறியவேண்டும். கடவுள்

நாம் செய்ய வேண்டும் என்று ஆணையிடாததும் அவர் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளக் கூடாததுமானஎத்தனையோ செயல்களை நாம் கடவுளின் ஊழியமாகக் கருதி மனமார்ந்து செய்து வருகிறோம்.

நாம் அறியாமையினால் செய்யும் ஒவ்வொரு பாவத்தையும் ஆண்டவர் அறிவார். நியாயப்படி இவற்றிற்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பது நமக்கு அச்சம் தருகிறதாய் இருக்கலாம்.ஆனால் நாம் பார்க்கக்கூடாத பாவக் கறைகள்கூடக் கழுவப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் ஆறுதல் அடையலாம். அந்தப் பாவத்தை அவர் முதுகுப்புறமாகத் தள்ளி பார்க்க முடியாமல் இருப்பதற்காக அதைப்பார்க்கிறார்.

உண்மையான ஆசாரியராகிய இயேசு இஸ்ரவேலின் சபையில் எல்லாஜனங்களுக்காகவும் பாவநிவிர்த்தி செய்துவிட்டார் என்பதே நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடியது. இந்தப் பாவநிவிர்த்தி அறியப்படாத பாவங்களுக்குமான மன்னிப்பைப் பெறுகிறது. அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் நம் எல்லாப் பாவங்களிலுமிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கும். நம்கண்கள் அதைப்பார்த்து நாம் அதற்காகக் கண்ணீர் விட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் கடவுள் அதைப் பார்த்திருக்கிறார். கிறிஸ்து அதற்காகப் பாவநிவர்த்தி செய்திருக்கிறார். அது மன்னிக்கப்பட்டதென்பதற்கு ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார். ஆகையால் நமக்கு மும்மடங்குசமாதானம் கிடைக்கிறது.

பிதாவே, என் பாவங்களைப் பார்ப்பது மட்டுமல்லாமல் நான் குற்றவாளி என்று உணர்வதற்கு முன்பே அவற்றைப்பற்றிய குற்றப்பழியிலிருந்து விடுதலையாக்க பாவநிவிர்த்தி அருளிச் செய்த உம் தெய்வீக அறிவை நான் போற்றிப் புகழுகின்றேன்.

## 29. வித்தியாசத்தை நிலைநிறுத்து

என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன் (யாத்.8:23).

பார்வோனைச் சேர்ந்த மக்களும் இருந்தார்கள். ஆண்டவரைச் சேர்ந்தமக்களும் இருந்தார்கள். அவர்கள் ஒன்றாக வாழ்ந்து ஒன்றாகக் காலம் கழித்தாலும் அவர்களுக்குள் ஒரு வித்தியாசம் இருந்தது. ஆண்டவர் அதை வெளிப்படையானதாக்குவார். எப்போதும் எல்லோருக்கும் ஒரே விதமான சம்பவங்கள் நேரிடுவதில்லை. உலகப்பிரகாரமான மக்களுக்கும் யேகோவாதெரிந்துகொண்ட மக்களுக்கும் இடையே பெரிய மாறுபாடு காணப்படும்.

நியாயத்தீர்ப்பு காலத்தில் ஆண்டவர் தம் பரிசுத்தவான்களின் அடைக்கலம் ஆகும்போது இது காணப்படலாம். விசுவாசிகள் மனம் திரும்பி அவர்கள் பாவங்கள் அகற்றப்படும்போது விசுவாசிகள்அல்லாதவர்கள் கண்டனத்துக்குள்ளாய் இருக்கும்போது இந்த வேறுபாடு தெளிவாய்க் காணப்படலாம். அந்த நிமிடத்திலிருந்து விசுவாசிகள் தனிப்பட்ட மக்களாகி புதுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாகி, புது ஆசீர்வாதங்களை அனுபவிக்கிறார்கள். அப்போதிலிருந்து எகிப்தியரைக்கறைப்படுத்துவதும் வேதனைக்கு உட்படுத்துவதுமான பயங்கரமான தீங்குகளிலிருந்து அவர்கள் வீடுகள் விடுதலை பெறுகின்றன. பல குடும்பங்களை வருத்தி அழிக்கும் இச்சை என்னும் தூய்மைக்கேட்டிலிருந்தும், கவலை என்னும் பிடியிலிருந்தும், பொய் என்னும் ஒழுக்கக்கேட்டிலிருந்தும், வெறுப்பு என்னும் கொடிய வேதனையிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

கடுஞ்சோதனைக்குட்படுத்தப்பட்ட விசுவாசியே, எங்களுக்குத் தொல்லைகள் இருந்தாலும் உலகத்தின் அதிபதியான வேலைக்காரரர்களின் குடும்பங்களை வருத்தும் பயங்கரமானபலவற்றிலிருந்து நீங்கள்

*காப்பாற்றப்பட்டிருக்கிறீர்கள். ஆண்டவர் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தி உள்ளார். ஆவியிலும், குறிக்கோளிலும், பண்பிலும் அந்த வேறுபாட்டை நிலை நிறுத்துவதைக் குறித்து கவனமாயிருங்கள்.*

# *30. முழுவதுமாக சுத்திகரிக்கப்படல்*

*அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன் நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கிஉங்களைச் சுத்தமாக்குவேன் நீங்கள் சுத்தமாவீர்கள் (எசேக்.36:35).*

*இது எவ்வளவு மகிழ்ச்சி ஆனதாகும்! இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் தம்மை சுத்திகரித்தவர் பரிசுத்த ஆவியின் நீரினாலும்நம்மை சுத்தமாக்குவார். கடவுள் நீங்கள் சுத்தமாவீர்கள் என்று சொல்லியுள்ளார். ஆகையால் இது நிறைவேறும் ஆண்டவரே. நாங்கள் அசுத்தமாய் இருப்பதாய் உணர்கிறோம். அதைக்குறித்துத் துக்கப்படுகிறோம். ஆகையால் உம்முடைய வாயின் வார்த்தைகளாலே நாங்கள் சுத்தமடைவோம் என்றுமறுபடியும் நம்பிக்கை ஊட்டப்படுகிறது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அதைச் சீக்கிரம் நிறைவேற்றினால் எவ்வளவு நன்றாயிருக்கும்.*

*நம்முடைய பயங்கர பாவங்களிலிருந்து நமக்கு விடுதலை அளிப்பார். நம்பிக்கையின்மை எழுச்சியும் ஆன்மாவுக்கு விரோதமாகப் போரிடும்வஞ்சனையான இச்சைகளும் பெருமையான இழிந்த எண்ணங்களும் பரிசுத்தமான நாமத்தைப் பற்றி மதிப்புக் கேடாகப் பேச சாத்தான் தூண்டி விடுதலும் எல்லாம் மறுபடியும் காணப்படாதபடி அகற்றப்பட்டு சுத்தமாக்கப்படுவோம்.*

*பொன்னினால் அல்லது மண்ணினால் ஆன எல்லாவிக்கிரகங்களில் இருந்தும், அசுத்தமானவற்றின் மேல் நமக்குள்ள விருப்பத்திலிருந்தும், தங்களில் தூய்மையானவையாய் இருந்தாலும் அவற்றின்மேல் நமக்குள்ள பேராசையிலிருந்தும் சுத்திகரிப்பார். நாம் வணக்கத்திற்குரியவை ஆக்கினவை நம்மிடமிருந்து நீக்கப்படும்அல்லது நாம் அவற்றிலிருந்து நீக்கப்படுவோம். நாம் செய்யப்போவதைக் குறித்துக் கடவுளே இவ்விதம் பேசுகிறார். ஆகையால் இது நிச்சயம் நடைபெறும் என்று நாம் எதிர்நோக்கலாம். உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் சுத்திகரிக்கப்படுதலும் ஒன்றாகும். உடன்படிக்கைஎல்லாவற்றுக்கும் பொருந்துவதும் நிச்சயமானதும் ஆகும்.*

# 31. வேலை முடியும்வரை இறவாப்புகழ்

*நான் சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் (சங்.118:17).*

*இது தெளிவான வாக்குறுதியாகும். இதுசங்கீதக்காரனின் இதயத்தில் இரகசியமாய்க் கூறப்பட்ட மறை உரையாகும். அவர் அதை நம்பி, அனுபவித்து மகிழ்ச்சி அடைந்தார். என் நிலையும் தாவீதைப்போல் இருக்கிறதா? எதிரி நேர்முகமாக அவமதிப்பதால் நான் சோர்வுற்றிருக்கிறேனா? எனக்கு எதிராக எண்ணிக்கைஅற்றவர்களும் என் பக்கமாகச் சிலருமே இருக்கிறார்களா? நம்பிக்கையின்மை என்னைத் தோல்வியும் அவமானமும் அடைந்த மனிதனாகப் படுத்து தளர்ச்சியினால் மரித்துவிட ஏவுகிறதா? பகைவர் என் கல்லறையைத் தோண்டுகிறார்களா?*

*அப்படியானால் என்ன? பயத்தின் மறைஉரைக்கு நான்செவிகொடுத்து போர்செய்வதை நிறுத்தி, அதோடு எல்லா நம்பிக்கையையும் இழந்து விடலாமா? அவ்விதம் செய்யவே*

மாட்டேன். இன்னும் என்னில் உயிர் இருக்கிறது நான் சாகமாட்டேன். நான் மறுபடியும் வலிமை அடைந்து என் பெலவீனம் நீங்கப்பெறுவேன். நான் பிழைத்திருப்பேன் என்ஆண்டவர் உயிரோடிருக்கிறார். நானும் உயிரோடு இருப்பேன் என் வாய் மறுபடியும் திறக்கப்பட்டு நான் யேகோவாவின் செய்கைகளை விவரிப்பேன். ஆம் இப்போது எனக்கு ஏற்பட்டுள்ள தொல்லை என் ஆண்டவராகிய கடவுளின் வியப்பளிக்கும் நம்பிக்கைக்கும் அன்புக்கும் மற்றுமொருஎடுத்துக்காட்டாகும். என் சவப்பெட்டியின் அளவெடுப்பவர்கள் சிறிது காத்திருக்க வேண்டியதிருக்கும். ஏனெனில் கர்த்தர் என்னை வெகுவாய்த் தண்டித்தும் என்னைச் சாவுக்கு ஒப்புக் கொடுக்கவில்லை. அவர் நாமத்துக்கு எப்போதும் மகிமை உண்டாவதாக! என்வேலை முடியும்வரை நான்இறவாப்புகழோடு இருப்பேன். ஆண்டவர் குறித்திருக்கும் காலத்துக்கு முன் எந்தக் கல்லறையும் என்னை ஏற்றுக் கொள்ள முடியாது.

# 11 நவம்பர்

1. முழு நிறைவும் பேணப்படுதலும்
2. பரலோக செல்வம்
3. ஆண்டவரின் நேரத்தில்
4. வாய்க்கால்களை வெட்டுங்கள்
5. வேதனை தருபவை முடிவடையும்
6. மனமகிழ்ச்சியும் இருதயத்தின் வேண்டுதல்களும்
7. மெய்யான தாழ்மையான பரிசு
8. கிருபையின் பரிமாணம்
9. தேவையான அறிவு
10. தடுமாற்றம் இல்லாமல் நட
11. ஆண்டவரின் சுதந்தரமான மக்கள்
12. திருப்தியடைந்த ஆன்மாக்கள்
13. குறைவுபடாத காவல்
14. பயன்படுத்தக் கூடிய நாமம்
15. வரம் பெற்ற செல்வம்
16. வாய்க்காதே போதும் ஆயுதங்கள்
17. கர்த்தர் ஒருநாளும் கைவிடமாட்டார்
18. தெளிவான தெய்வநிலை
19. கீழ்ப்படிதலிலிருந்து ஆசீர்வாதத்துக்கு
20. பசி திருப்தியாக்கப்பட்டது
21. புறம்பான மேல்நோக்கிய பார்வை
22. ஆக்கினைத் தீர்ப்பில்லை
23. விடாமுயற்சியை அடைதல்
24. மன்னிக்கும் தேவன்
25. சமபூமிகளாக்கப்பட்ட மலைகள்
26. பரலோக இரசவாதம்
27. உன்போக்கிலெல்லாம் இளைப்பாறுதல்
28. தேவன் ஆசீர்வதிக்கக் கூடியவைகளைச் செய்

29. எவ்விதம் காத்திருப்பது என்று அறிந்துகொள்
30. ஆண்டவர் முன் வரிசையில் இருக்கிறார் கர்த்தர் தாமே

# 1. முழு நிறைவும் பேணப்படுதலும்

உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார் (1.தெச.5:24).

அவர் என்ன செய்வார் ?

அவர் நம்மை முற்றிலும் பரிசுத்தப்படுத்துவார். இதற்கு முந்தின வசனத்தைப் பாருங்கள். நம்முடைய எல்லாப் பாகங்களும் பரிசுத்தமாக்கப்படும்வரை நம்மை சுத்திகரிப்பார். நம் ஆவி,ஆத்துமா, சரீரம் முழுவதும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காப்பார் கிருபையை இழந்துவிடவாவது பாவத்திற்கு அடிமைப்பட்டுப் போய்விடவாவது அவர் விடமாட்டார். இவை எவ்வளவு பெரிய சிலாக்கியங்கள் என்று நினைத்துப் பாருங்கள்.சொல்லுதற்கரிய இவ்விதமான பரிசுகளை இலவசமாகக் கொடுத்தவரை நாம் போற்றி வழிபடாமல் என்ன செய்ய முடியும்?

யார் அவ்விதம் செய்வார் ?

நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும் பாவத்தினால் ஏற்படும் மரணத்திலிருந்து கிறிஸ்து இயேசுவில் நித்திய வாழ்க்கைக்கும் வரவழைத்தவர் மட்டுமே இவ்விதம் செய்ய முடியும். இவ்விதமான முழு நிறைவும் பேணுதலும் எல்லாக்கிருபைக்கும் உரியவரான கடவுளிடமிருந்து மட்டுமே வரும்.

ஏன் அவர் அவ்விதம் செய்வார் ?

அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறபடியால்அவ்விதம் செய்வார். விசுவாசியை இரட்சிப்பதாக உறுதியளிக்கும் தம் வாக்குறுதியைக் குறித்து உண்மையுள்ளவராய் இருக்கிறார். கடவுள் அவர் குமாரனுக்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார். அவர்

மக்கள் மாசற்றவர்களாய் நிறுத்தப்படுவார்கள் என்பதே அவர் பரிசாகும். பயனுள்ள விதமாய்நம்மை அழைத்ததன் மூலம் நம்மில் தொடங்கிய கிரியையைக் குறித்து உண்மையுள்ளவராய் இருக்கிறார். பரிசுத்தவான்கள் தங்கள் உண்மையின் மேல் சாராமல் ஆண்டவரின் உண்மையின்மேல் சார்ந்தவர்களாயிருக்கிறார்கள்.

என் ஆத்துமாவே சறுசுறுப்பற்ற ஒரு மாதத்தைத்தொடங்குவதற்கு இது எவ்வளவு சிறந்த விருந்து என்று நினைத்துப்பார். வெளியே மூடுபனி இருக்கலாம், ஆனால் உள்ளே சூரிய ஒளி இருக்கும்.

# 2. பரலோக செல்வம்

உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார் (சங்.84:11).

மகிழ்வூட்டுகிறவை பலவற்றை ஆண்டவர் வழங்காதிருக்கலாம். ஆனால்நன்மையை வழங்காதிரார். நமக்கு எது நன்மையானது என்பதைத் தீர்மானிக்க அவரே தகுந்தவர். சில உறுதியாக நன்மையானவை. இவற்றை நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கேட்டாலே பெற்றுக்கொள்வோம்.

தூய்மை நன்மையானது. அதை இலவசமாக நம்மில் நிறைவேற்றுவார்.தீயமனப்பாங்குகள், எரிச்சலான மனநிலை, தீயபழக்கங்கள் முதலியவற்றின்மேல் வெற்றி அருளிச்செய்வார்.

பூரண நம்பிக்கையையும், அவர் அருகிலிருக்கும் தோழமையையும், எல்லா உண்மையையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பையும், கிருபாசனத்தண்டைநெருங்கக்கூடிய வாய்ப்பையும் அருளுவார். இவை நமக்கு இல்லாவிடில் கடவுள் அவற்றை நமக்கு அளிக்கத் தயங்குகிறார் என்பதில்லை. நாம் அவற்றை அடைந்து கொள்வோம் என்னும் நம்பிக்கை அற்றவர்களாய் இருப்பதே ஆகும். சீரிய ஒழுக்கத்தில் தளரா ஊக்கம் உள்ளவர்களுக்கு

அமைதியையும்பரலோகத்திற்கான மனநிலையையும் அதிகமான பொறுமையையும் தணியா அன்பையும் அருளுவார்.

ஆனால் நாம் உத்தமமாய் நடக்கவேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். நம்மில் எந்த முரண்பட்ட நடத்தையும் கோணலான செயல் தொடர்பும் காணப்படக் கூடாது. நாம் வெறுப்புண்டாக்கும்முறையில் நடந்தால் கடவுள் நமக்குக் கருணை காட்டமுடியாது. ஏனெனில் அது பாவத்துக்கு ஊக்கப்பரிசு கொடுப்பது போல் ஆகிவிடும். உத்தமமாய் நடப்பதன்மூலம் பரலோக செல்வங்களைப் பெறலாம். அவை நன்மையானவையின் தொகுப்பாகும்.

இது ஜெபத்தில் எடுத்துச் சொல்லிமன்றாடக்கூடிய எவ்வளவு சிறந்த வாய்ப்பாகும் என்று பாருங்கள். நாம் இப்பொழுதே முழுங்காற்படியிட்டு ஜெபிப்போமாக!

# 3. ஆண்டவரின் நேரத்தில்

குறித்தகாலத்திற்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது. அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. அது நிச்சயமாய் வரும்அது தாமதிப்பதில்லை (ஆப.2:3).

இரக்கம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றும். ஆனால் அது நிச்சயமாய்க் கிடைக்கும். ஆண்டவர் தம்முடைய குறைவுபடாத ஞானத்திலே அவர் கிருபையின்ஆற்றல் செயல்படுவதற்கு ஏற்ற காலத்தைக் குறித்திருக்கிறார். அவர் குறித்துள்ள காலமே சிறந்த காலமாகும். நாம் அவசரப்படுகிறோம். நமக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களை எதிர்பார்ப்பதில் நம் ஆசை தூண்டிவிடப்பட்டு நாம் அவசரப்படுகிறோம். ஆண்டவர் தாம் உறுதி செய்துள்ளதை ஏற்றகாலத்தில் நிறைவேற்றுவார். அவர்

ஒருநாளும் நியமித்துள்ள காலத்துக்கு முன்னாவது பின்னாவது செயல்படுவதில்லை.

இங்கு கடவுளின் வார்த்தை உயிருள்ளதாகவும் அது பேசும் என்றும் அது வரும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அது நிறைவேறும் என்று எதிர்பார்த்து தாமதமாவதினால் நாம்பயப்படுவது போல் அது நம்மண்டையே திரும்பி வரும் கடிதம்போல் இருக்காது. உயிருள்ள வார்த்தை உயிருள்ள கடவுளிடமிருந்து வருகிறது. அது தாமதிப்பது போல் காணப்பட்டாலும் அவ்விதம் இருப்பதில்லை. அவருடைய ரெயில் வண்டி குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குப் பின்னால் வந்துகொண்டிருப்பதில்லை. நாம் பொறுமையோடு இருந்தால் நம் ஆண்டவருடைய உண்மையின் வெளிப்பாட்டை நாமே காண்போம். அவருடைய எந்த வாக்குறுதியும் நிறைவேறாமற் போகாது. அது பொய் சொல்லாது. அவருடைய எந்த வாக்குறுதியும் விளங்காமல் இருந்து விடாது. அது விளங்கும்நம்புகிறவர்களுக்கு அது என்னென்ன ஆறுதலான வார்த்தைகளைப் பேசும் என்று நினைத்துப் பாருங்கள். குறிப்பிட்ட நாளில் பணம் பெற முடியாத சீட்டைப்போல் ஆண்டவருடைய எந்த வாக்குறுதியையும் பின்னாள் தள்ளிப்போட வேண்டியிராது. அது தாமதிப்பதில்லை.

என் ஆன்மாவே,உன் தேவனுக்காக நீ காத்திருக்க முடியாதா? அவரில் அமர்ந்திருந்து சொல்லக் கூடாத சமாதானத்தோடு இரு.

# 4. வாய்க்கால்களை வெட்டுங்கள்

அவன்: கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால் வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள். மழையையும் காணமாட்டீர்கள். ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருக

ஜீவன்களும்குடிக்கும்படிக்கு இந்தப்பள்ளத்தாக்கு நீரினால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (2.இராஜா.3:16-17).

மூன்று சேனைகள் தாகத்தால் ஆற்றல் இழந்து கொண்டிருந்தன. ஆண்டவர்இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டார். அவர் மேகத்தையாவது மழையையாவது அனுப்பாவிட்டாலும் மிகுதியான தண்ணீர் கிடைக்கச் செய்தார். அவர் சாதாரண முறைகளைப் பயன்படுத்துவதில்லை. அவர் ஞானத்தையும் ஆற்றலையும் நவீனமான முறைகளில் வெளிப்படுத்துவார். சாதாரண முறைகள் அவரைவெளிப்படுத்துவதை விட இந்த முறைகள் கடவுளை நாம் அதிகமாய்க் கண்டறிய உதவும். நான் எதிர்பார்க்கும் அல்லது விரும்பும் அல்லது ஊகிக்கும் முறையில் ஆண்டவர் வெளிப்படாவிட்டாலும் ஏதாவது ஒரு முறையில் நமக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பார். நமக்குக் கிடைக்க வேண்டுமென்றுவிரும்புகிறவற்றையே பற்றி நினைத்துக் கொண்டிராமல் அவற்றைக் கொடுக்கிறவரின் அருள்முகத்தையே நோக்கிப்பார்க்கும் நிலைக்கு நம்மை உயர்த்திருப்பது பெரிய ஆசீர்வாதம் ஆகும்.

இன்று ஆண்டவரிடமிருந்து ஆசீர்வாதங்கள் பொழிந்து பெருக்கெடுத்து ஓடத்தக்கதாகவாய்க்கால்கள் வெட்டப் போதுமான கிருபை நமக்கு இருக்கிறதா? ஐயோ, நாம் பலதடவை உண்மையான நடைமுறைக்குரிய விசுவாசத்தை எடுத்துக்காட்டத் தவறிவிடுகிறோம். இந்த நாளிலே நம் ஜெபத்திற்கு பதிலாகக் கிடைக்கப் போகிறவைகளை நம்பிக்கையோடு எதிர்நோக்கிஇருப்போமாக! மழைக்காக ஜெபம் செய்யக் கூட்டத்திற்கு சென்ற ஒரு சிறுமி குடையை எடுத்துச் சென்றது போல இன்று உண்மையாகவே ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார் என்னும் விசுவாசத்தோடு இருப்போமாக! பள்ளத்தாக்கிலெங்கும்

வாய்க்கால்களை வெட்டி அவை நிரப்பப்படும் என்று நம்பிஇருப்போமாக!

# 5. வேதனை தருபவை முடிவடையும்

நான் எப்போதும் வழக்காடமாட்டேன் நான் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை. ஏனென்றால் ஆவியும் நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும் என் முகத்துக்கு முன்பாகச் சோர்ந்துபோகுமே (ஏசா.57:16).

நம் பரமபிதா நாம் அழிந்து போவதை விரும்புவதில்லை நமக்கு அறிவூட்டவே விரும்புகிறார். அவர் இரக்கமான நோக்கத்துடனேயே நம்மோடு வழக்காடுகிறார். அவர் எப்போதும் நமக்குவிரோதமாகவே இருக்க மாட்டார். அவர் நம்மை நீண்ட காலம் தண்டித்திருப்பதாக நாம் நினைக்கிறோம். ஆனால் நாம் பொறுமையில் குறைவுபட்டவர்களாயிருப்பதே இதற்குக் காரணம். அவர் நித்திய காலமாய் வழக்காடமாட்டார். ஆனால் நித்திய காலமாய் இரக்கம் காட்டுவார். இரவுநீடித்திருக்கலாம். ஆனால் எப்படியும் முடிவு பெறும். மகிழ்ச்சியான காலைதோன்றும். அவர் சிறிதுகாலமே வழக்காடுவது போல் அதற்குக் காரணமாயிருந்த சினமும் சிறிது நேரமே இருக்கும். ஆண்டவர் தாம் தெரிந்து கொண்டவர்களை அதிகமாய் நேசிப்பதனால் அவர்களோடு எப்பவும் கோபமாகஇருக்கமாட்டார்.

சிலவேளைகளில் நம்மோடு நடந்து கொள்வது போல் எப்போதும் இருந்தால் நாம் மயக்கமுற்று மரணத்தின் வாயிலை அடைந்து விடுவோம். இதயமே தைரியமாக இரு. ஆண்டவர் சீக்கிரத்தில் கடிந்து கொள்வதை நிறுத்தி விடுவார். எல்லாவற்றையும் சகித்துக்கொள்.ஏனெனில் ஆண்டவர் உன்னைப் பொறுத்துக் கொண்டு தாங்கிச் செல்வார். உன்னைப் படைத்தவர் நீ எவ்வளவு வலுவும் சகிப்புத் தன்மையும் குறைந்தவன் என்று அறிவார். இவ்வளவு மென்மையான அமைப்புடன் உன்னைப்

படைத்தவர் மென்மையாக உன்னைப் பேணுவார். ஆகையால் வேதனை நிறைந்தநிகழ்காலத்தை குறித்துப் பயப்படாதே. ஏனெனில் சீக்கிரத்தில் மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலம் தோன்றும். உன்னை அடித்தவர் உன்னைச் சுகப்படுத்துவார். அவர் உன்மேல் கொண்ட சிறிதளவு கோபத்தைத் தொடர்ந்து பெருமளவு கிருபைகள் உனக்குக் கிடைக்கும்.

# 6. மனமகிழ்ச்சியும் இருதயத்தின் வேண்டுதல்களும்

*கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார் (சங்.37:4).*

ஆண்டவரிடத்தில் மனமகிழ்ச்சியாய்இருத்தலுக்கு பெரு மாறுதல்களைச் செய்யக்கூடிய ஆற்றல் உண்டு. அது ஒருவனை அவன் வீழ்ச்சியடைந்த நிலையின் கீழ்த்தரமான ஆசைகளிலிருந்து உயர்த்தக் கூடியது. யேகோவாவில் மனமகிழ்ச்சியாய் இருத்தல் மகிழ்ச்சியூட்டக் கூடியது மட்டுமல்லாமல் இதயத்தின் ஆசைகளை ஆண்டவர் நம்பிநிறைவேற்றத்தக்கதாக ஆன்மா முழுவதையும் மனதிற்கு ஏற்றதாக்குகிறது. நம் இருதயத்தின் வேண்டுதல்களை கடவுளின் விருப்பங்களைப்போல் உருவாக்கக்கூடிய இது மன மகிழ்ச்சியானது அல்லவா?

நம் முட்டாள்தனத்தில் நாம் முதலாவது ஆசைப்பட்டு பின் நாம் விரும்புகிறதை அடைவதற்குஉழைக்கிறோம். கடவுளின் முறைப்படி நாம் உழைப்பதில்லை. அம்முறையில் முதலாவது அவரைத்தேட வேண்டும். பின் மற்றவையெல்லாம் கூடக்கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்க வேண்டும். நம் இருதயம் மனமகிழ்ச்சியால் நிரம்பி வழியும்வரை அதைக்கடவுள் நிரப்பாவிட்டால் நமக்கு எந்தநல்ல ஈவும் கிடைக்காமற்

போகாதபடி ஆண்டவர் கவனமாயிருப்பார். மகிழ்ச்சியைத் தேடி வெளியிடங்களிற்குப் போகாமல் கடவுளோடு வீட்டிலேயே இருந்து நம் ஊற்றிலிருந்து தண்ணீரைக் குடிப்போமாக! நம் நண்பர்கள் எல்லோரும் நமக்குச் செய்வதைவிட ஆண்டவர் அதிகமாய்ச்செய்யக்கூடியவர். காலத்திற்கும் புலனுக்கும் பொருத்தமான அற்பமானவற்றிற்காக நாம் ஏங்கி எரிச்சல்படாமல் கடவுளிலேயே திருப்தி உள்ளவர்களாய் இருத்தல் நல்லது. சிறிது காலம் நமக்கு ஏமாற்றங்கள் இருக்கலாம். ஆனால் நாம் ஆண்டவரை நெருங்கிச் சேர இவை உதவுமேயானால்இவற்றை நாம் உயர்வாக மதித்துப் பாராட்ட வேண்டும். ஏனெனில் இவற்றினால் இறுதியில் நம் நேர்மையான ஆசைகள் நிறைவேறும்.

# 7. மெய்யான தாழ்மையான பரிசு

*தன்னைத்தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (லூக்.18:14).*

நம்மைத் தாழ்த்துவது நமக்குசெய்தற்கரிய செயலாய் இருக்கவேண்டியதில்லை. ஏனெனில் நாம் எதைக்குறித்துப் பெருமை பாராட்ட முடியும் ? நமக்கு யாரும் சொல்லாமலே நாம் உயர்வற்ற இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் நல்லறிவும் உண்மையும் உள்ளவர்களானால் நாம் பார்வையிலேயே சிறியவர்களாய்இருப்போம். சிறப்பாக ஜெபத்தில் ஆண்டவர் சமூகத்தில் இருக்கும்போது நாம் ஒன்றுமில்லாதவர்களாக இருப்போம். அங்கு நாம் தகுதியைப் பற்றிப் பேசமுடியாது. ஏனெனில் நமக்குத் தகுதியே கிடையாது. நாம் இரக்கத்திற்காக மட்டுமே தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றுவேண்டிக்கொள்ள முடியும்.

கிருபாசனத்திலிருந்து நமக்கு மகிழ்ச்சி அளிக்கும் உறுதி அளிக்கப்படுகின்றது. நாம் நம்மைத் தாழ்த்தினால் ஆண்டவர் நம்மை உயர்த்துவார். நமக்கு மேல் நோக்கிச் செல்லும் பாதை கீழ்நோக்கிச் செல்வதேயாகும். நாம் நம்மைப் பற்றியஎண்ணத்தைக்

களைந்து போட்டு விட்டால் தாழ்மையால் உடுத்துவிக்கப்படுவோம். அது சிறப்பான ஆடையாகும். ஆண்டவர் நமக்கு சமாதானமும் மகிழ்ச்சியும் கொடுத்து உயர்த்துவார். அவர் வார்த்தையைப் பற்றிய அறிவும் தோழமையும் கொடுத்து உயர்த்துவார். நிச்சயமான மன்னிப்பைப் பெற்றுநீதிமானாக்கப்பட்டு மகிழ்ச்சி அடையும் நிலைக்கு உயர்த்துவார். யார் தாங்கள் பெற்ற நன்மதிப்பை அதை அளித்தவரின் நன்மதிப்புக்காக அணிந்து கொள்வார்களோ, அவர்களுக்கே நன்மதிப்பை அளிப்பார். யார் மிகுதியாய்ப் பயன்படுத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதினாலும்செல்வாக்கினாலும் அகந்தை கொள்ளாமல் இருந்து அவை அதிகமான பொறுப்பையே அளிக்கின்றன என்று தங்களைத் தாழ்த்துகிறார்களோ அவர்களுக்கே அவற்றை அளிப்பார். தன்னையே உயர்த்துகிறவனைக் கடவுளாவது வேறெந்த மனிதனாவது உயர்த்த அக்கறை கொள்ளமாட்டார்கள். ஆனால்மதிப்புள்ளவனாகவும் தன்னடக்கமுள்ளவனாகவும் இருப்பவனைப் பெருமைப்படுத்த கடவுளும் நன் மக்களும் ஒன்றுசேர்வார்கள்.

ஆண்டவரே நான் உம்மில் எழ, நான் என்ற எண்ணத்தில் என்னைத் தாழ்த்தியருளும்.

# 8. கிருபையின் பரிமாணம்

என் கிருபை உனக்குப் போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் (2.கொரி.12:9).

நம்முடைய பலவீனம் தெய்வீக பெலன் வர இடங்கொடுக்கிறபடியால் நாம் அதை எதிர்பாராப் பேறாகக் கருதவேண்டும். நாம் இயற்கையின் பலவீனத்தை உணராமற் போயிருந்தால் கிருபையின் ஆற்றலை ஒருநாளும் உணர்ந்திருக்க மாட்டோம். சரீரத்திலுள்ள முள்ளும்சாத்தானின் தூதுவனும்

கடவுளின் பலனைப்பெற நம்மை ஏவுவதால் ஆண்டவன் மகிமைப்படுவாரா!

இது நம் ஆண்டவரே கூறிய விலைமதிப்பற்ற வார்த்தையாகும். இதை எழுதியவரை இது மகிழ்ச்சியினால் பூரிக்கச் செய்துள்ளது. கடவுளின் கிருபை எனக்குப் போதுமானதா! போதுமானதென்றேநான் நினைக்கிறேன். பறவைக்கு வானவெளியும், மீனுக்கு சமுத்திரமும் போதுமானதல்லவா? என்னுடைய பெரிய தேவைக்கும் கூட எல்லாத் திறமையும் உடையவர் போதுமானவர். பூமிக்கும் வானத்துக்கும் போதுமானவர் சிறிய புழு போன்ற எனக்கும் போதுமானவர்.

ஆகவே தேவனையும்,அவர் கிருபையையும் சார்ந்திருப்போமாக! நம் துக்கத்தை அவர் நீக்கி விடாவிட்டாலும் அதைச்சகித்துக் கொள்ளக் கிருபை அளிப்பார். புழு மலையை உடைக்கும் வரைக்கும் ஒன்றுமில்லாதவன் பெயர் பெற்றவர்கள் மேலும் ஆற்றல் மிகுந்தவர்கள் மேலும் வெற்றி அடையும் வரையும் அவர் பெலன்நமக்குள் ஊற்றப்படும். நம் பெலனைவிட கடவுளின் பெலனை உடையவர்களாயிருப்பது நமக்கு நல்லது. ஏனெனில் நமக்கு இப்போது இருக்கும் பெலனைவிட ஆயிரம் மடங்கு பெலன் இருந்தாலும், எதிரியின் முன் அது ஒன்றும் இல்லாதது போலவே காணப்படும். நாம் இப்போது இருப்பதைவிடபலவீனமாயிருந்தாலும் கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்யக்கூடியவர்களாய் இருப்போம்.

# 9. தேவையான அறிவு

தங்கள் தேவனாகிய கர்த்தராய் இருக்கிற நான் தங்களோடே இருக்கிறதையும் இஸ்ரவேல் வம்சத்தாராகிய தாங்கள் என் ஜனமாய் இருக்கிறதையும் அவர்கள் அறிந்து

கொள்ளாதவர்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறார் (எசேக்.34:30).

ஆண்டவரின் மக்களாயிருப்பது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசீர்வாதமாகும். நாம் அப்படிப்பட்டவர்கள் என்று அறிவதோ ஆறுதலளிக்கக் கூடிய ஆசீர்வாதமாகும். ஆண்டவர்நம்மோடிருக்கிறார் என்று எதிர்நோக்குவது ஒன்றாகும். அவர் அவ்விதம் இருக்கிறார் என்று அறிவது வேறொன்றாகும். நம்பிக்கை நம்மைக் காப்பாற்றுகிறது. இசைவுறுதி நம்மைத் திருப்திப்படுத்துகிறது. நாம் கடவுளை நம்பும்போது அவரை நம் கடவுளாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அவர்நம்முடையவர் என்றும் நாம் அவருடையவர்கள் என்றும் அறியும்போது அவருடைய மகிழ்ச்சியை அடைகிறோம். எந்த விசுவாசியும் எதிர்நோக்குவதிலும் நம்புவதிலும் மட்டும் திருப்தி அடையக்கூடாது. ஆனால் நம்புகிறவை நிச்சயமானவை என்று அறிந்துகொள்ளக் கூடிய முழு நம்பிக்கைக்குவழிநடத்தும்படி ஆண்டவரை வேண்டிக்கொள்ள வேண்டும்.

நாம் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் போதும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு நமக்காகப் புகழ் பெற்றநிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதையும் பார்க்கும் போதும் கடவுளுக்கு நம்மேல் உள்ள கருணையைப் பற்றியதெளிவான அறிவை அடைகிறோம். நியாயப்பிரமாணத்தினால் அல்லாமல் கிருபையினாலே நாம் ஆண்டவரின் மக்கள் என்று அறிகிறோம். நம் கண்கள் எப்போதும் இலவசமான கிருபையை நோக்கியே இருப்பதாக! நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருபோதும் நம்பிக்கையைப் பற்றியநிச்சயம் ஏற்படாது. அது கிறிஸ்தவ நெறி சார்ந்த ஒழுக்கமாகும். அது நற்செய்தியின் மூலமாகவே நம்மை அடையக்கூடும். நாம் நமக்குள்ளே பார்க்காமல் ஆண்டவரையே பார்ப்போமாக! இயேசுவை நாம் பார்க்கும்போது நம் இரட்சிப்பைக் காண்போம்.

ஆண்டவரே சந்தேகமும்அச்சமுமாகிய சேற்றிலிருந்து கழுவி சுத்திகரிக்கப்பட உம் அலை எழுந்து முன்னேறும் வெள்ளத்தை அனுப்பும்.

# 10. தடுமாற்றம் இல்லாமல் நட

உன் காலைத் தள்ளாடவொட்டார் (சங்.121:3).

ஆண்டவர் அனுமதிக்காவிட்டால் மக்களாவதுபிசாசுகளாவது ஒன்றும் செய்ய முடியாது. அவமானத்திற்கு இடமான வகையில் நம்மை விழத் தள்ளினாலும் நம் நிலையிலிருந்து விரட்டிவிட்டாலும், நம் நினைவுகூட இல்லாத வகையில் நம்மைப் புதைத்து விட்டாலும் இவர்கள் எவ்வளவாய் மகிழ்வார்கள். ஒரேஒரு தடை இல்லாவிட்டால் இவர்கள்விரும்புகிறதை நிறைவேற்றிவிட முடியும். ஆண்டவர் அவ்விதம் செய்ய அனுமதிக்க மாட்டார். அவர் அனுமதிக்காவிட்டால் நாம் துன்புறமாட்டோம்.

வாழ்க்கை முறை ஆல்ப்ஸ் மலைகளின் மேல் பயணம் செய்வதைப் போன்றதாகும். மலைப்பாதையில் நடப்பவன் கால் சறுக்க ஏதுவுண்டு.உயரமான இடத்தில் தலையில் கிறுகிறுப்பு ஏற்பட்டு கால் வழுக்கி விடும். சில இடங்கள் கண்ணாடியைப்போல் வழவழப்பாகவும் சில உறுதியான கற்களினால் கரடுமுரடாகவும் இருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் வழுக்கி விழுவது தவிர்க்க முடியாததாகும். வாழும் நாளெல்லாம் செம்மையாயும்தடுமாற்றமில்லாமலும் நடக்க உதவி பெற்றவர் நன்றியுள்ளவராயிருப்பதவசியம். இடறு குழிகளும் கண்ணிகளும் தளர்ந்தமுழங்கால்களும் தளர்ச்சியுற்ற கால்களும் இரண்டகமான பகைவரும் இருப்பதால் காலைத் தள்ளவொட்டாத அன்பில்லாவிட்டால் கடவுளின் எந்தப் பிள்ளையும் ஒருமணிநேரம்கூடத் தாக்குப் பிடிக்க முடியாது.

உம் கரத்தால் தாங்கப்பட்டும் உம்மால் பாதுகாக்கப்பட்டும் ஆயிரக்கணக்கான கண்ணிகள் மத்தியில் நான் நிற்கிறேன். காணமுடியாத அக்கிரமம் என்னைத் தாங்கிப்பிடித்து உம் தூயமலைக்கு வழிநடத்தும்.

# 11. ஆண்டவரின் சுதந்தரமான மக்கள்

நீங்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது (ரோ.6:14).

கூடுமானால் பாவம் மேற்கொண்டு விடும். இதயத்தில் வீற்றிருந்து ஆட்சி செய்வதைவிடக் குறைவான எந்த நிலையில் இருந்தாலும் அது திருப்தி அடையாது. சிலவேளைகளில் அது நம்மை மேற்கொண்டு விடும் என்று நாம்அஞ்சி எந்தப் பாவமும் என்னை மேற்கொள்ள விடாதேயும் என்று ஆண்டவரை நோக்கிக் கெஞ்சுகிறோம். அவர் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது என்னும் ஆறுதலான வார்த்தைகளைக் கூறுகிறார். அது உன்னைத்தாக்கிக் காயப்படுத்தலாம். ஆனால் ஒருநாளும் உன்னை மேற்கொண்டு விடாது.

நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தால் நம் பாவங்கள் வலிமை பெற்று நம்மை அதன் ஆற்றலின் கீழ் அடக்கி வைத்துக் கொள்ளும். ஏனெனில் பாவத்திற்குத் தண்டனையாகவே மனிதன் பாவத்தின் வலிமையின்கீழ் நசுக்கப்படுகிறான். நாம் கிருபையின்உடன்படிக்கைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் உடன்படிக்கையின் உறுதி மொழியினால் உயிருள்ள கடவுளிடமிருந்து அகன்று விடாமல் காப்பாற்றப்படுகிறோம். கிருபை நமக்கு வாக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் நாம் வழிவிட்டகலும் போது பழைய நிலைக்கு மீண்டும்கொண்டுவரப்படுகிறோம். பாவ அழுக்கிலிருந்து சுத்திகரிக்கப்படுகிறோம். பழக்கங்கள் என்னும் நம்மைக் கட்டுகிற

சங்கிலிகளில் இருந்து விடுவிக்கப்படுகிறோம். நாம் நித்திய வாழ்வுக்கென்று உழைக்கும் அடிமைகளைப் போல இன்னும் இருந்தால் மனக்கசப்பினால் அயர்வுற்றுஎகிப்தியருக்குக் கூட உழைப்பதில் திருப்தி உள்ளவர்களாய் இருப்போம். ஆனால் நாம் நம் ஆண்டவரின் சுதந்திர மக்கள். பாவம் நம்மை ஒருக்காலும் மேற்கொள்ளாது என்னும் நிச்சயத்தில் நம் ஒழுக்கக் கேட்டையும் சோதனைகளையும் எதிர்த்துப் போர்புரியத் தைரியம்கொள்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்கு வெற்றி அருளுகிறார். அவருக்கே நித்திய காலமாய் மகிமை உண்டாவதாக!

# 12. திருப்தியடைந்த ஆன்மாக்கள்

என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியடைவார்கள் (எரேமி.31:14).

என், நான் என்று இரண்டு தடவை வருவதைக் கவனியுங்கள். என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்.

தேவன்மேல் திருப்தியுள்ளவர்கள் கடவுளுக்குச் சொந்தமானவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். அவர்கள் அவர் மேல் மகிழ்ச்சி அடைவதால் அவர்அவர்கள் மேல் மகிழ்ச்சி அடைகிறார். அவர்கள் அவரைத் தங்கள் தேவன் என்கிறார்கள். அவர் அவர்களைத் தம் மக்கள் என்கிறார். அவர்களைத் தம் மக்களாக ஏற்றுக்கொள்வதில் அவர் மகிழ்ச்சி அடைகிறார். அவர்கள் அவரைத் தம் தேவனாக ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சிஅடைகிறார்கள். கடவுளின் இஸ்ரவேலும் இஸ்ரவேலின் கடவுளும் ஒருவரைக் குறித்து ஒருவர் மகிழ்ச்சி உள்ளவர்களாயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் திருப்தி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இது சிறப்பானதாகும். எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் மனுபுத்திரரில் சிலரேதிருப்தி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் மனம் எப்போதும் இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்றே தவித்துக் கொண்டிருக்கிறது. பரிசுத்தமாக்கப்பட்ட ஆன்மாக்களே திருப்தியடைந்த ஆன்மாக்களாகும். தேவனே நம்மை மனம் மாறச் செய்து திருப்தியடையச் செய்யவேண்டும்.

ஆண்டவரின் மக்கள் அவருடைய நன்மையினால் திருப்தியடைவது ஆச்சரியமானதல்ல. இங்கு கலப்படமில்லாத நன்மையும் வரையறை இல்லாத ஊக்க ஊதியமும் இடித்துக் காட்டுதல் இல்லாத இரக்கமும் மாற்றம் இல்லாத அன்பும் கட்டுப்பாடற்ற கருணையும் காணப்படுகின்றன. தேவன்அளிக்கும் நன்மை நம்மைத் திருப்தி செய்யாவிட்டால் வேறு எது திருப்தி செய்யும்? நாம் இன்றும் புலம்பிக் கொண்டிருக்கிறோமா? அப்படியானால் கடவுளின் நன்மை திருப்தி செய்யாத தகாத ஆசையொன்று நம்முள் இருக்கிறது.

ஆண்டவரே நான் திருப்தியடைந்திருக்கிறேன். நீர் மகிமையடைவீராக!

## 13. குறைவுபடாத காவல்

இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை (சங்.121:4).

யேகோவாவே இஸ்ரவேலைக் காக்கிறவர் அவருக்கு எந்த விதமான மயக்கமும் ஆழ்ந்த நித்திரையும்சாதாரணமான தூக்கமும் ஏற்படுவதில்லை. தம் மக்களின் வீட்டையும் இருதயத்தையும் காக்க அவர் தவறுவதில்லை. இந்தக் காரணத்தினால் நாம் முழுஅமைதியுடன் தூங்கலாம். தம் நண்பர் பர்மீனியோ காவல்

காத்ததனால் தாம் நன்றாக உறங்கினதாக மாமன்னர் அலெக்ஸாண்டர் கூறினார். நம்தேவன் நம்மைக் காவல் காப்பதால் நாம் இன்னும் நன்றாக உறங்கலாம்.

நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய உண்மையை நாம் கவனிக்கச் செய்வதற்காக இதோ என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஒரு கல்லைத் தலையணையாக வைத்து உறங்கினார். ஆனால் அவர்தேவன் விழித்துக்கொண்டிருந்து அவருக்குச் சொப்பனத்தில் காட்சியளித்தார். நாம் பாதுகாப்பில்லாமல் படுத்திருக்கும்போது யேகோவாவே நம் தலையை மூடுவார்.

செல்வந்தன் ஒருவன் தன் செல்வத்தைப் பாதுகாப்பதைப் போலவும் படைத்தலைவன் தன் படையோடு நகரத்தைப்பாதுகாப்பதைப் போலவும் காவற்காரன் தன் மன்னனைப் பாதுகாப்பது போலவும் ஆண்டவர் தம் மக்களைப் பாதுகாப்பார். இவ்விதமாகப் பாதுகாக்கப்படுகிறவர்களுக்கு யாரும் தீங்கு செய்ய முடியாது. என் ஆன்மாவை நான் அவர் கைகளில் ஒப்புவித்துவிடுவேன். அவர் ஒரு நாளும் நம்மை மறந்துவிடுவதில்லை. ஒருநாளும் நமக்காகக் கவலைப்படாமல் இருப்பதில்லை. ஒருநாளும் நம்மைப் பாதுகாக்க இயலாமற் போனதாக உணர்வதில்லை.

ஆண்டவரே, நான் வழி தப்பிப்போய் மாண்டுவிடாதபடி என்னைப் பாதுகாத்தருளும். உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்வதற்காக என்னைப்பாதுகாத்தருளும். நீர் உறங்காமல் பாதுகாப்பதால் நான் சோம்பேறி போல் தூங்காமலும் மரண நித்திரை அடைந்தவர்களைப் போல் உறங்கி அழியாமலும் இருக்கச் செய்யும்.

## 14. பயன்படுத்தக் கூடிய நாமம்

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் செய்வேன் (யோ.14:14).

எவ்வளவு பரந்தகன்ற வாக்குறுதி என்று பாருங்கள்! எதைக்கேட்டாலும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பெரிதோ சிறிதோ ஆன என் தேவைகள் எல்லாம் நிறைவு செய்யப்படும் என்பதைக் குறிக்கிறது. என் ஆன்மாவே கிருபாசனத்தண்டையில் தன்னுரிமையுடன் வந்துஆண்டவர் உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன் என்று சொல்வதைக் கேள்.

இது எவ்வளவு ஞானமான வாக்குறுதியாகும்! எப்போதும் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ள வேண்டும். இது நமக்கு ஊக்கமும் அளிக்கிறது. அவரையும் மகிமைப்படுத்துகிறது. இது நிலையானவேண்டுதலாகும். சிலவேளைகளில் மற்ற வேண்டுதல்கள் முக்கியமாகக் கடவுளுக்கும் நமக்கும் மட்டுமே உள்ள தொடர்பைச் சார்ந்தவை அல்லது அவர் கிருபையைக் குறித்த நம் அனுபவத்தைச் சார்ந்தவை பயனற்றவை ஆகிவிடும். அப்படிப்பட்ட சமயங்களில் இயேசுவின் நாமம் எப்போதும் போல்ஆற்றல் வாய்ந்ததாகும். நாம் அதன் மூலமாய் முழு நம்பிக்கையுடன் வேண்டிக்கொள்ளலாம்.

இது எவ்வளவு அறிவுறுத்தும் வேண்டுதலாகும்! கிறிஸ்துவின் கரமும் முத்திரையும் வைக்கப்படாத எந்த ஜெபத்தையும் நான் ஏறெடுக்க முடியாது. தன்னயமானதும் தன்னிச்சையானதுமான எந்தவேண்டுதலுக்கும் நான் என் ஆண்டவரின் நாமத்தைப் பயன்படுத்தத் துணிவு கொள்ள முடியாது. ஆண்டவர் என் நிலையிலிருந்தால் ஏறெடுக்கும் வேண்டுதல்களைப் போன்றவற்றிற்கே அவர் நாம்தைப் பயன்படுத்தவேண்டும். இயேசுவே வேண்டிக்கொள்வது போல் நாம் இயேசவின் நாமத்தில்வேண்டிக்கொள்ள அதிகாரம் பெற்றிருப்பது பெரிய சிலாக்கியமாகும். ஆனால் நமக்கு அவர்

மேல் உள்ள அன்பினால் அவர் உபயோகிக்காத விதத்தில் அவர் நாமத்தை உபயோகிக்க நாம் முற்படமாட்டோம்.

இயேசு ஒப்புக்கொள்ளக் கூடியவற்றை நான் கேட்கிறேனா? என்ஜெபத்திற்கு அவர் முத்திரையைப் பயன்படுத்த எனக்குத் துணிவுண்டா? அப்படியானால் பிதாவிடம் நான் வேண்டிக் கொள்கிறதைப் பெற்றுக்கொள்வேன்.

# 15. வரம் பெற்ற செல்வம்

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவிற்குள் மகிமையிலே நிறைவாக்குவார்(பிலி.4:19).

பவுலின் கடவுள் நம்முடைய கடவுளும் ஆவார். அவர் நம் குறைவையெல்லாம் நிறைவாக்குவார். பிலிப்பியரைக் குறித்து இக் கூற்று உண்மையானதென்று பவுல் நம்பினார். நாமும் நம்மைக் குறித்து இதுஉண்மையானதென்று நம்புகிறோம். தேவன் இதைச் செய்வார். ஏனெனில் இது அவர் தன்மையாகும். அவர் நம்மை நேசிக்கிறார். நம்மை ஆசீர்வதிப்பதில் மகிழ்ச்சியடைகிறார். அவ்விதம் செய்வது அவரை மகிமைப்படுத்தும். நாம் கடும்பசியினால் மடிந்து விடாதபடி அவர் இரக்கம்,ஆற்றல், அன்பு நேர்மை யாவும் ஒன்றாய் இணைந்து செயல் படுகின்றன.

ஆண்டவர் பயன்படுத்தும் அளவுமுறை எது? தம்முடைய ஐசுவரியத்தின்படி....... கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே அவர் கிருபையின் ஐசுவரியமே எல்லையற்றது. அப்படியிருக்கும் போது அவர் மகிமையின்ஐசுவரியத்தை எப்படி அளக்கக்கூடும்? கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையை யார் கணக்கிடக்கூடும்? நம் தேவைகளான படுகுழியை அளவுக்குட்படாத அவர் அளவினால் அவர் நிரப்புவார். ஆண்டவர் இயேசுவை அவர் நிறைவை ஏற்றுக் கொள்ளும் கொள்கலமாகவும் அதை எடுத்துச் செல்லும்

வாய்க்காலாகவும்ஆக்குகின்றார். பின் அவர் அன்பின் ஐசுவரியத்தை அதன் மேம்பாடான நிலையில் நம் பங்காக அளிக்கிறார். அல்லேலுூயா!

ஆண்டவரின் ஊழியத்தில் சோதனைக்கு உட்படுவதைப் பற்றி இதை எழுதியவர் நன்கு அறிவார். கடமை தவறாமையின் உழைப்பூதியமாக அளிக்கப்பட்டது சினமே.தாராளமாகக் கொடுத்தவர்கள் தங்கள் நன்கொடையை நிறுத்தி விட்டார்கள். ஆனால் அவர்கள் துன்புறுத்த விரும்பியவருக்கு ஒரு பைசா கூடக் குறையவில்லை. சொல்லப்போனால் அவர் தேவையானவற்றிற்கும் அதிகமாய்ப் பெற்றிருக்கிறார். ஏனெனில் என் தேவன் உங்கள் குறைவையெல்லாம்நிறைவாக்குவார் என்னும் வாக்குறுதி உண்மையானதாய் இருந்திருக்கிறது. ஆண்டவர் அளிப்பது எந்த வங்கியும் அளிப்பதை விட நிச்சயமானது.

# 16. வாய்க்காதே போதும் ஆயுதங்கள்

உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம். உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய் (ஏசா.54:17).

எதிரிகளின் கொல்லுலைகளிலும் பட்டறைகளிலும் சுறுசுறுப்பாக வேலை நடைபெறுகிறது. பரிசுத்தவான்களைத் தாக்குவதற்காக அவர்கள் ஆயதங்களைச் செய்கிறார்கள். பரிசுத்தவான்களின் ஆண்டவர் இடமளித்திரா விட்டால் அவர்கள் இவ்வளவு கூட செய்திருக்க முடியாது.கரித்துண்டுகளை நெருப்பில் வைத்து ஊதும் கொல்லரை அவரே படைத்தார். அவர்கள் எவ்வளவு சுறுசுறுப்பாய் வேலைசெய்கிறார்கள் என்று பாருங்கள்! எத்தனை வாள்களையும் ஈட்டிகளையும் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்றும் கவனியுங்கள். இவற்றினால் ஆவது ஒன்றுமில்லை. ஏனெனில்ஒவ்வொரு ஆயுதத்தின் மேலும் இது

வாய்க்காதேபோம் என்று எழுதப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

இன்னொரு சத்தத்தையும் கவனித்துக் கேளுங்கள். அது நாவுகள் உண்டாக்கும் சத்தம். சம்மட்டியாலும் பட்டைக் கல்லாலும் செய்யப்படும் ஆயுதங்களைவிட நாவுகள் பயங்கரமானஆயுதங்கள். அவைகளால் ஏற்படும் தீமைகள் ஆழமாயும் அகலமாயும் வெட்டிவிடுகின்றன. இப்பொழுது நமக்கு என்ன நேரிடும்? அவதூறு, பொய்யுரை, சுட்டிக்குறைகூறுதல், ஏளனம்.... இவை விஷ அம்புகள். அவற்றின் தாக்குதலை நாம் எவ்விதம் சமாளிக்க முடியும்? ஆண்டவராகிய தேவன்அவற்றை நம்மால் அடக்க முடியாவிட்டாலும் அவற்றால் அழித்து விடப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவோம் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார். அவர்கள் இப்பொழுது நம்மைக் குற்றப்படுத்துகிறார்கள். ஆனால் இறுதியில் நித்திய காலத்துக்குமாக நாம் அவர்களைக் குற்றப்படுத்துவோம்.பொய்யுரைக்கும் வாய்கள் அடைக்கப்படும் அவர்கள் கூறின பொய்கள் அவற்றினால் தீங்கு அனுபவித்த நல்ல மனிதர்களுக்கு நன்மதிப்புக்கானவையாக மாற்றப்படும்.

# 17. கர்த்தர் ஒருநாளும் கைவிடமாட்டார்

கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்திரத்தைக் கைவிடாமலும் இருப்பார் (சங்.94:14).

அவர் மக்களில் ஒருவரைக்கூட அவர் நெகிழவிடமாட்டார். மனிதன் நெகிழவிடுவான். ஆனால் கடவுள் ஒருபோதும் ஒருவரையும் நெகிழவிடமாட்டார். அவர் தெரிந்து கொள்கிறவர்களை மாற்றிக் கொண்டே இருக்க மாட்டார். அவர்கள்மேல் அவர் காட்டும் அன்பு நித்தியமானஅன்பு ஒருவருக்குத் தாம் இரட்சகர் என்று வெளிப்படுத்தின பின் அவரைக் கைவிட்டதாக நாம் கேள்விப்பட்டதே இல்லை.

அல்லல்படுகிறவர்களின் இதயங்களை மகிழ்ச்சியாக்கவே சிறப்பான இந்த உண்மை சங்கீதத்தில் கூறப்பட்டிருக்கிறது. தமக்குச் சொந்தமானவர்களை ஆண்டவர் தண்டித்துத்திருத்துகிறார். ஆனால் ஒருபோதும் அவர்களைக் கைவிடுவதில்லை. நமக்குப் போதிப்பதற்காகவே கற்பனைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அந்தப் போதனையின் விளைவு அமைதிப்படுத்தப்பட்ட ஆவியும் சமநிலை அடைந்த மனமுமாகும். இவற்றினால் இளைப்பாறுதல் பெறுகிறோம். தெய்வபயம்அற்றவர்கள் விழவேண்டிய குழி தோண்டப்பட்டு அவர்கள் அதில் விழும்வரை அவர்கள் செயலில் தலையிடுவதில்லை. ஆனால் தெய்வபயமுள்ள கடவுளின் மக்கள் இனிமேல் அவர்கள் அடையப்போகும் மகிமையான நிலைக்கு ஆயத்தம் பண்ணப்படுவதற்காக கற்றுக் கொள்ள அனுப்பப்படுகிறார்கள். கலகம்செய்கிறவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டனையடைவார்கள். அதேவிதமாக பக்தியுள்ளவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்கள் உரிமை நிறுவப்படும். ஆகவே நாம் தண்டிக்கப்பட்டு திருத்தப்படும்போது அமைதியாகப் பணிந்து போவது நல்லது. அது சினத்தையல்ல அன்பையே காட்டுகிறது.

கடவுள் தண்டித்துத் திருத்தலாம்

ஆயினும் ஒருநாளும் புறக்கணிக்க மாட்டார்

அன்பினால் கடிந்துரைக்கலாம்

ஆயினும் நேசிப்பதை நிறுத்தமாட்டார்

# 18. தெளிவான தெய்வநிலை

அந்நாளிலே கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார். அவைகளில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போல இருப்பான். தாவீது குடும்பத்தார்அவர்களுக்கு முன்பாகத் தேவனைப் போலும் கர்த்தருடைய தூதனைப்போலும் இருப்பார்கள் (சக.12:8).

ஆண்டவர் தம் மக்களின் இன்னல் தடுத்துக் காப்பாற்றும் முறைகளில் ஒன்று அவர்களை மனவலிமையும் ஆற்றலும் உள்ளவர்கள்ஆக்குவதேயாகும். சுவர்களை விட மக்கள் சிறந்தவர்கள். விசுவாசம் மாளிகைகளை விட வலிமை வாய்ந்தது.

நம்மில் தள்ளாடினவர்களைக் கூட ஆண்டவர் தூக்கியெடுத்து இஸ்ரவேலின் வீர முதல்வனான தாவீதைப்போல் ஆக்கக்கூடியவர். ஆண்டவரே, என்னை அவ்விதமாக்கும். ஆண்டவரேதேவனில் ஊறுதியான நம்பிக்கை உள்ளவனாக நான் கவணையும் கல்லையும் வைத்துக் கொண்டே இராட்சதனை எதிர்க்கத்தக்கதாக உம் ஆற்றலை என்னுள் செலுத்தி புனித வீரத்தினால் என்னை நிரப்பும்.

ஆண்டவர் தம் சிறந்த வீர முதல்வர்களை அவர்கள் இருப்பதைவிட அதிகமான வலிமைவாய்ந்தவர்கள் ஆக்கக் கூடியவர். இது ஆச்சரியமான வளர்ச்சியாகும். ஆனால் இது நிகழக் கூடியதாகும். அப்படியில்லையெனில் அதைப்பற்றிப் பேசியிருக்க மாட்டார். ஆண்டவரே எங்கள் தலைவர்களில் சிறந்தவர்களிடம் கிரியை செய்யும். உமக்கு உத்தமமான ஊழியக்காரரைக் கிருபையிலும்புனிதத் தன்மையிலும் தெளிவாகவே தெய்வ நிலைக்கு உயர்த்தி நீர் என்ன செய்யக்கூடும் என்பதை எங்களுக்குக் காட்டியருளும். ஆண்டவரே உம் பரிசுத்தவான்களில் வாசம் செய்யும். அப்பொழுது அவர்கள் தெய்வ நிலையினராய் இருப்பார்கள். அவர்களில் உம் ஆற்றல் நிறைந்திருக்கச்செய்யும். அப்பொழுது அவர்கள் யேகோவாவின் சமூகத்தில் வாசம்செய்யும் உயிருள்ளவர்களைப்போல் இருப்பார்கள். எங்கள் காலத்திலேயே உம் சபை முழுவதிலும் இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் இயேசுவின் மூலம் வேண்டிக்கொள்கிறோம் ஆமென்!

## 19. கீழ்ப்படிதலிலிருந்து ஆசீர்வாதத்துக்கு

நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் (ஆகாய் 2.19).

எதிர்காலம் நமக்குமறைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இங்கு இருக்கும் கண்ணாடியில் நாம் இனி வரும் ஆண்டுகளைக் காணக்கூடும். ஆண்டவர் நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று கூறுகிறார்.

இந்த வாக்குறுதியில் கூறப்படும் நாளை கவனித்துக்கொள்வது நல்லது. மக்களின் பாவத்தின்காரணமாக பயிர்கள் சரியாய் விளையவில்லை. கருக்காயும் விஷப்பனியும் கல்மழையும் அவற்றை அழித்தன. இவ்விதம் தண்டிக்கப்பட்டவர்கள் இப்பொழுது அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படியத் தொடங்கி அவர் ஆலயத்தையும் கட்ட ஆரம்பித்திருந்தார்கள். ஆகையால் அவர் கர்த்தருடையஅஸ்திபாரம் போடப்பட்ட அந்நாள் வரைக்கும் சென்ற காலத்திலே நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துப் பாருங்கள் என்று சொல்கிறார். நாம் ஏதாவது பாவத்தில் வாழ்ந்துகொண்டிருந்துவிட்டு பின் பிரிசுத்த ஆவி நாம் சுத்திகரிக்கப்பட நம்மை ஏவும் போது ஆண்டவரின்ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கக் கூடும் என்று நாம் கணக்கிடலாம். அவர் மலர்ந்த முகம், அவர் ஆவி, அவர் கிருபை, அவர் உண்மையை அவர் இன்னமும் பூரணமாக வெளிப்படுத்துதல் எல்லாம் விரிவான ஆசீர்வாதமாக நமக்குக் காணப்படும். நம் விசுவாசத்தினால் மக்கள்இன்னும் அதிகமாக நம்மைத் தாக்கலாம். ஆனால் நம் அண்டவரும் கடவளும் அனைவரோடு இன்னும் நெருங்கி இருக்கும் நிலையையும் அவரில் நாம் ஏற்றுக்கொள்வதை இன்னும் தெளிவாய் அறிந்த கொள்ளும் நிலையையும் நாம் அடைவோம்.

ஆண்டவரே உம்மோடு இன்னும் உண்மையுள்ளவனாய்இருக்கவும், உம் கொள்கைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளுவதில் இன்னமும் கவனமாக

இருக்கவும் தீர்மானித்துள்ளேன். அகையால் இயேசு கிறிஸ்துவின் மூலம் எனக்குத் தினசரி கிடைக்கும் ஆசீர்வாதங்களை இனிமேலும் நித்திய காலமாகவும் அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

# 20. பசி திருப்தியாக்கப்பட்டது

பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார் (சங்.107:7).

அவர் இருப்பது நல்லது. அது எவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ அவ்வளவு நல்லது. ஆன்ம அவாக்கள் எவ்வளவு அதிகமாயும் கருத்தைக் கவர்கிறதாயும் இருந்தாலும் ஆண்டவர் அவற்றைத் திருப்தியாக்குவார். நாம் அதிகமாக அவாக்கொள்ளலாம். ஏனெனில் தேவன் அதிகமாகஅளிப்பார். நாம் நம்மிலே திருப்தியடைந்து அவா இல்லாமல் இருந்தால் நாம் சரியான மனநிலையில் இருக்க முடியாது. அதிகமான கிருபையை விரும்புவதும் வாய்விட்டுச் சொல்ல முடியாத ஏக்கமும் அதிகரித்துக் கொண்டே போகும் வலிகளாகும். அவற்றை நாம் அதிகம் அதிகமாய் உணர விரும்பவேண்டும். பரிசுத்தமான ஆவியானவரே இன்னும் சிறப்பு வாய்ந்தவற்றிற்காகவும் சிறப்பு வாய்ந்தவை இன்னும் அதிகமாகக் கிடைக்கவும் நாங்கள் ஏங்கித் தவிக்கச் செய்யும்.

பசி விரும்பத்தக்க ஓர் உணர்ச்சியல்ல. ஆயினும் நீதியின் மேல் பசி தாகம் உள்ளவர்கள்பாக்கியவான்கள். அப்படிப்பட்டவர்களின் பசி சிறிதளவு உணவினால் குறைக்கப்படுவது மட்டுமன்றி அவர்கள் நிரப்பப்பட்டுத் திருப்தி அடைவார்கள். ஏதோ ஒருவிதமான மட்டமான உணவினால் அவர்கள் நிரப்பப்படமாட்டார்கள். அவர்கள் உணவு அவர்கள் நல்ல ஆண்டவருக்கு ஏற்றதாய் இருக்கும்.ஏனெனில் யேகோவாவே அவர்களை நன்மையால் நிரப்புவார்.

நாம் அவர் உள்ளவர்களாகவும் பசி உள்ளவர்களாகவும் இருப்பதினால் எரிச்சல் அடையாமல் சங்கீதக்காரன் கடவுளின் சிறப்பைக்காண ஏங்கிப் பசியடைந்து அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும் மறுபுத்திரருக்குஅவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதிப்பார்களாக என்று சொல்வதைக் கேட்போமாக!

## 21. புறம்பான மேல்நோக்கிய பார்வை

பூமியின் எல்லையெங்கும் உள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன் வேறொருவரும் இல்லை (ஏசா.24:22).

இது வாக்குறுதிகளின் வாக்குறுதியாகும். இது நம் ஆன்மீக வாழ்க்கையின் அடிப்படையாய் இருக்கிறது. நீதிபரரும் இரட்சகருமாகியவரை நோக்கிப் பார்ப்பதினாலே இரட்சிப்புக் கிடைக்கிறது. நமக்குக் கொடுக்கப்படும்கட்டளை எவ்வளவு எளிதானதென்று பாருங்கள். அது என்னை நோக்கிப்பாருங்கள் என்பதே. அவர் எதிர்பார்ப்பது எவ்வளவு நியாயமானது. படைக்கப்பட்டது நிச்சயமாகப் படைக்கப்பட்டவரை நோக்கிப் பார்க்க வேண்டும். அதிக காலமாக நாம் எங்கெல்லாமோ நோக்கிப் பார்த்துவந்திருக்கிறோம். இனி நாம் எதிர்பார்ப்பதை வரவேற்கும் விருப்பம் தெரிவிப்பவரையும் நமக்குத் தம் இரட்சிப்பைத் தருவதாக வாக்களிப்பவரையும் மட்டுமே நாம் நோக்கிப் பார்க்கும் காலம் வந்து விட்டது.

நோக்கிப் பார்ப்பதே போதுமானது. நாம் உடனே நோக்கிப்பார்ப்போமா? நாம் நம்மில் ஒன்றும் கொண்டு செல்ல வேண்டியதில்லை. ஆனால் சிலுவையிலிருந்து தம் சிங்காசனத்துக்கு ஏறிச் சென்றவரான நம் ஆண்டவரை வெளிநோக்கியும் மேல்நோக்கியும் பார்க்கவேண்டும். பார்ப்பதற்கு ஆயத்தமும் தேவையில்லை. அதிகமான முயற்சியும்தேவையில்லை.

அதற்கு நகைத்திறனும் தேவையில்லை ஞானமும் தேவையில்லை. செல்வமும் தேவையில்லை வலிமையும் தேவையில்லை. நமக்குத் தேவையானது எல்லாம் ஆண்டவராகிய நம் தேவனில் இருக்கிறது. நாம் எல்லாவற்றுக்கும் அவரை நோக்கிப் பார்த்தால் எல்லாம் நமக்குக் கிடைக்கும்இரட்சிப்பும் கிடைக்கும்.

தூரவிலகிப் போனவர்களே! வந்து இங்கு பாருங்கள். உலகின் மூலை முடுக்கிலெல்லாம் உள்ளவர்களே இந்தப் பக்கமாக நோக்கிப் பாருங்கள். வெகுதூரமான இடங்களில் உள்ளவர்கள் கூட சூரியனைப் பார்த்து அதன் வெளிச்சத்தை அனுபவிப்பது போலமரணத்தின் எல்லையிலும் நரகத்தின் வாயிலிலும் இருக்கும் நீங்களும் நோக்கிப் பார்த்தாலே கடவுளின் வெளிச்சத்தையும் பரலோக வாழ்க்கையையும் கடவுளாய் இருப்பதால் இரட்சிக்கக் கூடியவருமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பையும் பெறுவீர்கள்.

## 22. ஆக்கினைத் தீர்ப்பில்லை

அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும். யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகிடையாதிருக்கும். நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் (எரேமி.50:20).

இது உண்மையிலேயே மகத்தான வார்த்தை. பாவம் செய்து வந்த யூதாவும் இஸ்ரவேலுமான நாடுகளுக்கு எப்படிப்பட்ட பூரண மன்னிப்புவாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். அவர்கள் பாவம் தேடப்படாவிட்டாலும் அது காணப்படாமலிருக்கும். அது இல்லாமற் போகத்தக்கதாக நீக்கப்பட்டுவிடும் மன்னிப்பின் கடவுளுக்கு மகிமை உண்டாவதாக!

சாத்தான் நம்மைக் குற்றப்படுத்துவதற்காக நம் பாவங்களைத்தேடி அலைகிறான். நம்மேல் குற்றம் சுமத்துவதற்காக நம் எதிரிகள் அவற்றைத்தேடித் திரிகிறார்கள். நம்முடைய மனச்சாட்சியே மனநிலை திரிந்த ஆர்வத்துடன் அவற்றைத்தேடிப் பார்க்கிறது. ஆனால் தேவன் இயேசுவின் இரத்தத்தைப் பூசும்பொழுது அவர் அவற்றைத் தேடுவார் என்று நாம்அஞ்சவேண்டியதில்லை. ஏனெனில் அவை காணாதிருக்கும். அவை கிடையாதும் இருக்கும். ஆண்டவர் தம் மக்களின் பாவங்களை இல்லாதிருக்கப்பண்ணுவார். அவர் பெரும் பாதகங்களுக்கு முடிவு கட்டி பாவங்களை அறவே நீக்கிவிட்டார். இயேசு தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்து நம் பாவங்களைக்கடலின் ஆழத்துக்குத் தள்ளிவிட்டது இது நம்மை மகிழ்ந்து ஆரவாரிக்கச் செய்கிறது.

தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு யேகோவாவே மன்னிப்பு அருளுவதனால் அவை முழுவதுமாக நீக்கப்பட்டு விடுகின்றன. கிருபைநிறைந்த அவர் வார்த்தை வெறும் அரசருக்கு உரியதாய் மட்டும்இல்லாமல் தெய்வீகத்தன்மையும் வாய்ந்தது. அவர் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை அளிக்கிறார். நாம் மன்னிப்புப் பெறுகிறோம். அவர் ஒப்புரவாகுதலை நமக்கு கிடைக்கப்பண்ணுகிறார். நாம் ஆக்கினைத் தீர்ப்பைக் குறித்த பயம் இல்லாதவர்கள் ஆகிறோம். பாவத்தை நீர் மூலமாக்கும்தேவனின் நாமம் மகிமைப்படுவதாக!

# 23. விடாமுயற்சியை அடைதல்

அந்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாய் உன்னைவிட்டுத் துரத்தி விடுவார் (உபா.7:22).

நாம் ஒரு தாக்குலிலேயே நம் ஆண்டவராகிய இயேசுவுக்கு வெற்றி பெற்று விடலாம் என்று எதிர்பார்க்க முடியாது. கெட்ட ஒழுக்க முறை விதிகளும் பழக்கங்களும் எளிதில் ஒழிந்து

போவதில்லை. மக்களின் மத்தியில் காணப்படும் ஒரு தீய பழக்கத்தைக்கூட நீக்கிவிடசில இடங்களில் பல ஆண்டுகள் ஆகின்றன. வெளிப்படையான வெற்றி காணப்படாவிட்டாலும் நாம் முழு ஆற்றலுடன் போர் புரிய வேண்டும்.

இவ்வுலகில் நம் வேலை ஆண்டவருக்கென்று அதை வெல்வதேயாகும். நாம் தீமைகளோடு சமரசம் செய்யாமல் அவற்றை வேரோடு அழித்துவிட வேண்டும்.நாம் பொது மக்களிடையே மதிப்பைத் தேடாமல் அக்கிரமத்தை எதிர்த்து விடாமுயற்சியுடன் போர் புரிய வேண்டும். நம்பிக்கையின்மை, குடிப்பழக்கம், தூய்மைக்கேடு, மற்றவர்களை ஒடுக்குதல், உலகப்பற்று, தவறு இவற்றையெல்லாம் நிலை பெயரச் செய்ய வேண்டும்.

நம் ஆண்டவராகிய தேவனே இதைச் செய்ய முடியும். அவர் தம் உண்மையுள்ள ஊழியக்காரர் மூலமாய் செயல்ப்படுகிறார். அவர் நாமம் மகிமைப்படுவதாக! அவ்விதம் செயல்ப்படுவதாக அவர் வாக்குக் கொடுக்கிறார். அந்த ஜாதிகளை உன் தேவனாகிய கர்த்தர்……உன்னை விட்டுத் துரத்திவிடுவார். நாம் விடாமுயற்சியைக் கற்றுக் கொள்ளவும் நம்பிக்கையில் வளரவும் மெய்யார்வத்துடன் கவனிக்கவும் உடல் இன்பத்திற்குரிய கவலையற்ற தன்மையைத் தவிர்க்கவும் அவர் கொஞ்சம் கொஞ்சமாகவே அதைச் செய்வார். நமக்குக் கிடைத்திருக்கும் சிறு வெற்றிகளுக்காக கடவுளுக்குநன்றி சொல்லி இன்னும் அதிகத்திற்காக வேண்டிக் கொள்வோமாக! எல்லா இடங்களையும் இயேசுவுக்காக வெற்றி உடைமையாகக் கைக்கொள்ளு முன், நம் பட்டயத்தை உறையில் போடாமல் இருப்போமாக!

என் இதயமே, திடன்கொள், சிறிது சிறிதாக முன்னேறு. சிறியவை பல சேர்ந்தே பெரிய முழுமை ஆகிறது.

## 24. மன்னிக்கும் தேவன்

அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார். என்றைக்கும் கோபம் கொண்டிரார் (சங்.103:9).

அவர் சில சமயங்களில் கடிந்து கொள்வார். நாம்குற்றம் செய்யும் பிள்ளைகளானபடியால் அவர் அவ்விதம் செய்யாவிட்டால் ஞானமுள்ள தகப்பனாய் இருக்கமாட்டார். உண்மையாய் இருக்க விரும்புகிறவர்களுக்கு அவர் கடிந்து கொள்வது மனவருத்தத்தை அளிக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு அது பொருந்தும் என்றும் அவரைத் துக்கப்படுத்துவதுகுற்றமேயாகும் என்றும் உணர்கிறார்கள். இவ்விதம் கடிந்து கொள்வதைக் குறித்து நாம் அறிந்து கொள்கிறோம். அவன் நம்மேல் கோபம் கொள்ளத்தக்கதாக நாம் நடந்து கொண்டதற்காக நாம் துக்கப்பட்டு ஆண்டவரைப் பணிந்து கொள்கிறோம்.

மேற்கூறிய வசனம் நமக்குஎவ்வித ஆறுதலை அளிக்கிறது என்று பாருங்கள். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார். நாம் மனந்திரும்பி பாவத்துக்காக நொருங்குண்ட இதயத்தோடும் பாவத்தை நீக்கியவர்களாயும் அவரை நோக்கிப் பார்த்தால், அவர் உடனே மனமகிழ்ச்சியுடன் நம்மை ஏற்றுக் கொள்வார். தாம்முழுமனதோடு நேசிப்பவர்கள்மேல் கோபம் கொள்வது அவருக்கு மகிழ்ச்சி அளிப்பதில்லை. நம் மகிழ்ச்சி நிறைவடைவதிலேயே அவர் மனம் மகிழ்கிறார்.

வந்து, அவர் முகத்தைத் தேடுங்கள். மனக்கசப்பும், மனத்தளர்ச்சியும் கொள்ள வேண்டியதில்லை. நம்மைக் கடிந்துகொள்ளும் தேவனை நேசிப்போமாக. கூடிய சீக்கிரத்தில் உம்முடைய கோபம் நீங்கிற்று. நீர் என்னைத் தேற்றுகிறீர் என்று பாடுவோம். ஆத்துமாவுக்குத் தீங்கு செய்யும் காகங்களாகிய இருண்ட தீக்குறிகளே, என்னை விட்டு அகன்று போங்கள். ஆன்மாவின் புறாக்களாகிய எளிமையானநம்பிக்கைகளே, நன்றியறிதலுள்ள நினைவுகளே உள்ளே வாருங்கள்.

நியாயாதிபதியாக முன்பு நம் தண்டனையை நீக்கியவர் தகப்பனாக மறுபடியும் நமக்கு மன்னிப்பு அளிப்பார். மாறாததும் இனியதுமான அவர் அன்பில் நாம் மகிழ்ச்சி அடைவோம்.

## 25. சமபூமிகளாக்கப்பட்ட மலைகள்

பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய். தலைக்கல்லை அவன் கொண்டு வருவான். அதற்குக் கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் (சக.4:7).

இந்த நிமிடத்தில் இடையூறுகள் இக்கட்டு தேவைகள் ஆகிய மலைகள் நம் பாதையை அடைத்துக் கொண்டிருக்கலாம். இயற்கையின் தோற்றப்படி அதன் மேலேயாவது அதன் மூலமாகவாவது அதைச் சுற்றியாவது எந்தப் பாதையும் நமக்குக் காணப்படாமல் இருக்கலாம். இந்தச்சந்தர்ப்பத்தில் நம்பிக்கை தோன்றினால் உடனே அந்த மலைகள் மறைந்து போய் சமபூமி காணப்படுகிறது. ஆனால் அந்த நம்பிக்கை முதலாவது ஆண்டவர் பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்திலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சொல்வதைக் கேட்க வேண்டும். வாழ்க்கையில்எதிர்த்துச் சமாளிக்க முடியாத தொல்லைகளை மேற்கொள்ள சிறப்பான இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

என்னாலும் ஒன்றும் செய்ய முடியாது. மக்களைச் சார்ந்து கொள்வதும் மாயை என்று நான் அறிகிறேன். பலத்தினால் அல்ல என்பது உண்மை. காணக்கூடிய எதன்மேலும்சார்ந்து கொள்ள முடியாது. காணமுடியாத ஆவியாலேயே வலிமை இருக்கிறது. தேவனே கிரியை செய்யவேண்டும். மனிதனையும் துணைப்பொருட்களையும் நினைத்துக் கூடப்பார்க்கத் தேவையில்லை. சர்வ வல்ல கடவுள் தம் மக்களின் மேல் அக்கறை கொண்டால் மலைகள் ஒன்றையும் தடுக்கமுடியாது.விளையாட்டு

வீரர்கள் பந்துகளைப் போட்டுப் பிடிப்பதைப் போலவும், காலால் உதைத்து விளையாடுவதைப் போலவும், அவர் பூமியை நிலை பெயரச் செய்யக் கூடியவர். இந்த வலிமையை அவர் எனக்கும் கொடுக்கக் கூடும். ஆல்ப் என்னும் மலையை அசைக்கச் சொல்லி, அவர் எனக்குக்கட்டளையிட்டால், அவர் நாமத்தின் மூலம் நான் அவ்விதம் செய்யக் கூடும். அது பெரிய மலையாயிருக்கலாம், ஆனால் என் தளர்ச்சியினால் கூட அது சமபூமி ஆகக்கூடும். ஏனெனில் ஆண்டவர் அவ்விதம் சொல்லியிருக்கிறார். தேவன் என் பக்கத்தில் இருக்கும் போது நான் எதற்குஅஞ்சவேண்டும்.

# 26. பரலோக இரசவாதம்

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோ.12:20).

அவர்களுக்கு ஏற்பட்ட துக்கம் அவர்கள் ஆண்டவர்மரித்ததனாலும் அவர்களை விட்டுப்போய் விட்டதனாலும் ஏற்பட்டது. ஆனால் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து அவர்கள் மத்தியில் உயிர் உள்ளவராகத் தம்மை வெளிப்படுத்திய பொழுது அது மகிழ்ச்சியாக மாறியது. இவ்விதமே பரிசுத்தவான்களின் துக்கமெல்லாம் மாற்றப்படும்.அவைகளில் மிகவும் பயங்கரமானவைகளாக நித்திய காலமாய்க் கசப்பின் ஊற்றுக்களாய் நிலைத்திருப்பவை போல் காணப்படுபவை கூட மாற்றப்படும்.

துக்கம் எவ்வளவுக்கு அதிகமாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அதிகமாய் மகிழ்ச்சி பெருகும். நமக்கு மூட்டைமூட்டையாய்த் துக்கம் இருக்குமேயானால் அவை வண்டிக் கணக்காக மகிழ்ச்சியாய் மாறும். நம் தொல்லை எவ்வளவு கசப்பானதாய் இருக்கிறதோ, அவ்வளவு இனிமையானதாய் மாறும். கடிகாரத்தின் ஊசற்குண்டு இடது பக்கம் எவ்வளவு தூரம் போகிறதோ அவ்வளவு தூரம் வலது பக்கமும்போகும். துயரத்தைப் பற்றிய நினைவு பின்னால் வரும்

மகிழ்ச்சியைப் பல மடங்காக்கும். துக்கத்தையும் மகிழ்ச்சியையும் நாம் நினைத்துப் பார்க்கும் பொழுது வைரம் கூட அதன் கீழே வைக்கப்பட்டிருக்கும் கறுப்பு உலோகத் தாளினால் தெளிவாகப் பார்க்கக் கூடியதாகிறது என்பதைஅறியவேண்டும்.

என் இதயமே உற்சாகம் கொள். இன்னும் சிறிது காலத்திற்கு அப்புறம் நான் இப்பொழுது எவ்வளவுக்கெவ்வளவு மனச்சோர்வு உற்றிருக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு மகிழ்ச்சியடைவேன். பரலோக இரசவாதத்தினால் என் துக்கம் மகிழ்ச்சியாகமாற்றப்படும் என்று இயேசு சொல்கிறார். அது எவ்விதம் நடைபெறும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதை நான் நம்பி அது நடைபெறும் என்று எதிர்பார்த்து இப்போதே பாடத் தொடங்குகிறேன். என் மனத்தளர்ச்சி அதிககாலம் நீடிக்காது. கூடிய சீக்கிரத்தில் நான் ஆண்டவரை இரவும்பகலும் பாடித்துதிக்கும் கூட்டத்தாரோடு சேர்ந்து என் துக்கத்திலிருந்து எனக்கு விடுதலை அளித்த கிருபையைப் போற்றித் துதிப்பேன்.

# 27. உன்போக்கிலெல்லாம் இளைப்பாறுதல்

அவர்: என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் (யாத்.33:14).

சிறப்பான வாக்குறுதி! ஆண்டவரே இதை எனக்கு உரியதாக்கிக் கொள்ள எனக்கு உதவி செய்யும்.

இந்த நம்முடைய இருப்பிடத்தை விட்டு நாம் என்றாவது ஒரு நாள் போய்விடவேண்டும். ஏனெனில் இது நமக்கு நிலையான இடமல்ல. பலமுறை நாம் ஒரு இடத்தில் வசதியானவாழ்க்கை வாழும்போது திடீரென்று அங்கிருந்து வேறோர் இடத்திற்குச் செல்ல வேண்டியதாகி விடுகின்றது. இந்த நிலைக்கு ஓர் மாற்று இருக்கின்றது. ஆண்டவரே நம்மோடு இருப்பார். அவர் சமூகத்தோடு அவர் தயவு, அவர் தோழமை, அவர் அக்கறை,

அவர் ஆற்றல் எல்லாம் நாம் பயணம்செய்யும் போது நமக்குக் கிடைக்கும். இதில் கூறப்பட்டுள்ளதை விட அதிகமாய்க் கிடைக்கும். ஏனெனில் எல்லாம் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. தேவன் நம்மோடு இருந்தால் உலகமும் பரலோகமும் நம் கைவசம் இருக்கின்றன. ஆண்டவரே, என்னோடு வாரும்! பின் நான் எங்குபோகவேண்டுமென்று எனக்குக் கட்டளையிடும்.

இளைப்பாறுவதற்கு ஓர் இடத்தைக் கண்டுபிடிப்போம் என்று நாம் நம்புகிறோம். தேவனே கொடுக்கும் இளைப்பாறுதலை நாம் பெறுவோம். நாம் பயணம் செய்யும் போதும் போர்புரிந்து கொண்டிருக்கும் போதும் அவர் சமூகம் நம்மைஇளைப்பாறச் செய்யும். இளைப்பாறுதல் என்பது மும்மடங்கு மகிமை அளிக்கக் கூடிய சொல். மக்களால் அவ்வித இளைப்பாறுதலை எப்போதாவது அடைய முடியுமா? ஆம் அந்த வாக்குறுதி இருக்கிறது. நாம் அதை அடைய வேண்டிக்கொள்ள வேண்டும். தேற்றரவாளனிடமிருந்தும் சமாதானப்பிரபுவிடமிருந்தும் எழும் நாளில் தம் வேலைகளில் இருந்து ஓய்வுடன் இருந்த மகிமையான பிதாவிடமிருந்தும் இளைப்பாறுதல் வருகிறது. தேவனோடு இருப்பதே இளைப்பாறுவதாகும்.

# 28. தேவன் ஆசீர்வதிக்கக் கூடியவைகளைச் செய்

*கர்த்தர் உன்களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார் (உபா.28:8).*

நம் தேவனாகியகர்த்தருக்கு நாம் கீழ்ப்படிந்தால் அவர் நமக்குக் கொடுப்பதை ஆசீர்வதிப்பார். செல்வம் ஆண்டவரால்

ஆசீர்வதிக்கப்படும் போது அது சாபமாயிராது. அவசரத் தேவையானதற்கு அதிகமாக மக்களுக்கு இருக்கும் போது அவர்கள் அதைக் களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறார்கள். அப்போதுஇச்சையும் இருதய கடினமாகிய வெப்பு நோயும் அவற்றைத் தாக்குகின்றன. ஆனால் ஆண்டவரின் ஆசீர்வாதம் இருந்தால் அவ்விதம் நேரிடாது. முன்மதியுடன் சேமித்து வைப்போம். வள்ளன்மையோடு செலவு செய்வோம். நன்றியறிதல் அதைச் சரியான பணிக்கென நேர்ந்து விடச் செய்கிறது.கடவுளைத் துதித்துக் கொண்டே அதைச் செலவு செய்வோம். நம்முடைய சேமிப்புப் பெட்டகத்திலும் வங்கிக் கணக்கிலும் ஆண்டவரின் ஆசீர்வாதம் இருப்பது பெரிய கிருபையாகும்.

நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார் என்பது எவ்வளவுசிறந்த கருணையாகும். ஆண்டவர் ஆசீர்வதிக்க வேண்டுமென்று கேட்கக் கூடாத எந்த வேலையையும் நாம் செய்யத் தொடங்கவும் மாட்டோம். ஜெபம் செய்யாமலும் நம்பிக்கை இல்லாமலும் அதைச் செய்யவும் மாட்டோம். ஒவ்வொரு வேலையிலும் ஆண்டவரின் உதவியை எதிர்பார்ப்பது எவ்வளவுசிறந்த ஒரு வாய்ப்பாகும்! சிலர் அதிஷ்டமுள்ள மக்களைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் அதிஷ்டத்தை விட ஆண்டவரின் ஆசீர்வாதம் மேலானது. ஆண்டவரின் கருணையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பெரியவர்களின் ஆதரவு ஒன்றுமில்லாததே ஆகும். தன்னம்பிக்கை நல்லதுதான் ஆனால்ஆண்டவரின் ஆசீர்வாதம் சிறப்பான வரங்கள் கூர்மதி சாமர்த்தியம் எல்லாவற்றிலும் அடையும் பயன்களை விடச் சிறந்தது.

## 29. எவ்விதம் காத்திருப்பது என்று அறிந்துகொள்

விசுவாசிக்கிறவன் பதறான் (ஏசா.28:26).

ஆண்டவரின் கற்பனைகளைக் கைக்கொள்ள அவன் விரைவான். ஆனால் அவசரப்பட்டு அல்லது தகாத முறையில் பதறமாட்டான்.

அவன் அவசரப்பட்டுஓடிவிடமாட்டான். ஏனென்றால் திகில் அடையும்படி அவன் பயப்படமாட்டான். தங்கள் மதியை இழந்து விட்டதுபோல் மற்றவர்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும் போது விசுவாசி அமைதியாகவும் அமைதலாகவும் இருந்து யோசிப்பான். ஆகையால் சோதனை வரும்போது ஞானமாய் நடந்துகொள்வான்.

நல்ல காரியங்கள் இப்போதே இந்த இடத்திலேயே கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதிலும் அவசரம் காட்டமாட்டான். கடவுளின் காலத்துக்குக் காத்திருப்பான். சிலர் பறவை தங்கள் கைக்கு வந்துவிட வேண்டுமென்று அவசரப்படுகிறார்கள். ஆண்டவரின்வாக்குறுதியை செடியிலிருக்கும் பறவையாகவே மதித்து அது தங்களுக்குக் கிடைக்காது என்று நினைக்கிறார்கள். விசுவாசிகளுக்குக் காத்திருக்கத் தெரியும்.

விசுவாசி அவசரத்திலே தவறான செயலைச் செய்யமாட்டான். நம்பிக்கையின்மை எவ்விதத்திலாவது கிரியைசெய்யும். அது தன் அழிவையே தேடிக்கொள்கிறது. ஆனால் விசுவாசம் நல்ல வேகத்திலே பதறாமல் போக ஏவுகிறது. ஆகையால் அவ்விதம் செயல்படுகிறவர்கள் முட்டாள் தனமாகப் பதறி, சென்ற பாதையிலேயே துக்கத்துடன் திரும்புகிறவர்களைப் போல் இருக்கமாட்டார்கள்.

நான் எப்படிப்பட்டவனாயிருக்கிறேன். நான் நம்பி ஆண்டவரோடு நடந்துசெல்லும் விசுவாசியின் வேகத்தில் செல்கிறேனா? பதறும் ஆவியே சமாதானமாயிரு. ஆண்டவரில்

அமர்ந்து பொறுமையாய்க் காத்திரு. இதயமே உடனே இவ்விதம் இருக்கத் தொடங்கு.

# 30. ஆண்டவர் முன் வரிசையில் இருக்கிறார் கர்த்தர் தாமே

உமக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் (உபா.31:8).

பெரிய வேலையாவது போராட்டமாவது நம்மை எதிர்நோக்கி இருக்கும்போது இந்த வசனம் நம்மைத் தைரியத்துடன் ஆயத்தப்பட ஏவக்கூடியது. யேகோவாவே நம்முன் போனால் அவரைப் பின்பற்றிப் போவது பாதுகாப்பானதாய் இருக்கும். ஆண்டவரே நம்மோடு இருந்தால்நாம் முன்னேறிச் செல்வதை யார் தடுக்க முடியும்? சக வீரரே வாருங்கள் நாம் உடனே முன்னேறிப் போகலாம். வெற்றியை அடையச் செல்வதற்கு நாம் ஏன் தயங்க வேண்டும்?

ஆண்டவர் நம்முன் மட்டும் இல்லை. நம்மோடு நமக்கு மேலும் கீழும் சுற்றிலும் இருக்கும் சர்வவியாபியும் சர்வ வல்லவருமானவர். அவர் நம்மோடு இது வரை இருந்தது போல் எல்லாக் காலமும் நித்தியத்துக்கும் நம்மோடு இருப்பார். இது நம்மை எவ்விதம் தைரியப்படுத்தக் கூடியது என்று பாருங்கள். சிலுவையின் வீரர்களே தைரியமாக முன்னேறுங்கள். ஏனெனில் கர்த்தர்உங்களோடிருக்கிறார்.

நமக்கு முன்னும் நம்மோடும் இருப்பவர் ஒருநாளும் உதவி செய்வதை நிறுத்தி விடமாட்டார். அவர் தம்மிலே தளர்வடைய மாட்டார். நம்மைக் கைவிடவும் மாட்டார். முடிவுவரை நம் தேவைகளுக்கேற்ப தொடர்ந்து நமக்கு உதவி செய்வார். அவர்

நம்மைஏமாற்றாதவரானபடியால் நம்மைக் கைவிடமாட்டார். நாம் போர்கள் செய்யவேண்டிய நாட்கள் முடிவடையும் வரை நமக்குப் பெலனும், உதவியும் அளிக்கக் கூடியவர் அவற்றை எப்படியும் அளிப்பார்.

நாம் அச்சமும் சோர்வும் அடைய வேண்டியதில்லை. ஏனெனில் நாம்போருக்குச் செல்லும் போது சேனைகளின் கர்த்தர் நம்மோடு வந்து அவரே போர் புரிந்து வெற்றியையும் கொடுப்பார்.

# 12 டிசம்பர்

1. சரியாக நடப்பதற்கு ஏற்ற பாங்கு
2. நம் புனித முன்மாதிரி
3. எல்லா நிலையிலும் சமாதானம்
4. மூடி பாதுகாப்பு அளிப்பார்
5. அரண்களாகிய உயர்ந்த இடங்கள்
6. கடப்போம், அமிழ்ந்துபோகமாட்டோம்
7. பெலன்கொடுத்துச் சமாதானம் அருளுவார்
8. பின்பற்றினால் கனம்பண்ணப்படுவாய்
9. விசுவாசத்தின் முழுமை
10. கடவுள் நம் நண்பர்
11. நம்பிக்கையோடுசெய், செய்துவிட்டு நம்பு
12. அமைதியடைந்த இதயம்
13. மாலை பகலாக மாறும்
14. பழமையானது ஒன்றுமில்லை
15. உலக ஒப்பந்தம்
16. தெய்வீக வெளியேற்றுதல்
17. நெருக்கமான அருமையான தோழமை
18. மூடுவார் ஆதரவாக இருப்பார்
19. இன்னல்கள். முறிக்கப்படாத எலும்புகள்
20. மக்களைமக்களாகவும் கடவுளைக் கடவுளாகவும் கருதுதல்
21. சினத்திலிருந்து அன்புக்கு
22. அனுகூலமான துணையானவர்
23. செல்வம்
24. பாட்டுக்களோடு யோர்தானுக்கு அப்பால்
25. அவர் வந்தார், இனி வருவார்
26. கடவுள் ஒருவரையே நீ நம்பமுடியும்
27. அவர் இரக்கமும் உடன்படிக்கையும்

28. வரம்பற்ற உறுதி

29. அவர் பரம வீட்டுக்கு நம்மைச் சுமந்து செல்வார்

30. பூரணமடையும் வரை அன்பு கூர்ந்தார்

31. மோட்சத்தில் புதியவர் அல்ல

# 1. சரியாக நடப்பதற்கு ஏற்ற பாங்கு

உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான் (நீதி.10:9).

அவன் மெதுவாய் நடக்கலாம். ஆனால் பத்திரமாய் நடப்பான். விரைவாகப் பணக்காரனாகப்பிரயாசப்படுகிறவன் குற்றமற்றவனாயும் பத்திரமாய் நடப்பவனாயும் இருக்க முடியாது. உண்மையாய் நடக்க விடா முயற்சியுடன் பிரயாசப்படுகிறவன் செல்வந்தன் ஆகாவிட்டாலும் சமாதானம் உள்ளவனாயிருப்பான். நாம் நீதியும் நேர்மையுமானவைகளைச் செய்தால், பாறையின்மேல்நடக்கிறவர்களைப் போல் இருப்போம். ஏனெனில் நாம் வைக்கும் ஒவ்வொரு அடியும் கெட்டியானதும், பத்திரமானதுமான தரையில் வைப்பதாயிருக்கும் என்று நாம் நிச்சயமாய் நம்பலாம். ஆனால் தவறான தொழில் முறைகளினால் நாம் அடையும் சிறப்பான வெற்றியும் வெறுமையானதும்நம்பிக்கைத் துரோகமானதும் ஆகும். அதை அடைந்தவனும் பழிவாங்க வேண்டிய நாள் வரும்போது அவன் இலாபமாக அடைந்த பொருளெல்லாம் அவனைக் குற்றவாளியெனத் தீர்க்கும் என்ற அச்சத்துடனேயே இருப்பான்.

நாம் உண்மையும் நியாயமுமானவற்றைச் செய்வோமாக! வாயில்வஞ்சனையே வராத நம் ஆண்டவரும் எஜமானும் ஆனவரையே கடவுளின் கிருபையினால் நாம் பின் பற்றுவோமாக! வறுமையைக் குறித்தாவது மற்றவர்களின் ஏளனத்தைக் குறித்தாவது நாம் அஞ்சாதிருப்போமாக! நம் மனச்சாட்சி நேர்மையென விளக்காததை ஒருநாளும் செய்யாதிருப்போமாக! மனஅமைதியைநாம் இழப்போமேயானால் விலை கொடுத்து வாங்க முடியாத செல்வத்தை இழந்தவர்களாவோம். நாம் ஆண்டவரின் வழியே சென்று நம் மனச்சாட்சிக்கு விரோதமாகப் பாவம் செய்யாதிருப்போமேயானால் யார் வந்தாலும் நாம்

பத்திரமாய் இருப்போம். நாம் நன்மையானவைகளைப்பின்பற்றுகிறவர்களாய் இருப்போமேயானால் யார் நமக்குத் தீங்கு செய்ய முடியும்? நாம் வாய்மையில் உறுதியாய் இருந்தால் மூடர் நம்மை மூடர் என்று நினைத்துக் கொள்வார்கள். ஆனால் பிழையாத நியாயப்படி நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாயிருப்போம்.

# 2. நம் புனித முன்மாதிரி

கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில்இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங்.16:8).

வாழ்வதற்கு ஏற்ற வழி இதுதான். ஆண்டவர் எப்போதும் நமக்கு முன்னேசெல்கிறபடியால் நமக்குப் பெருந்தன்மை உடையவரின் தோழமையும், புனிதமானவரின் முன்மாதிரியும், இனிமைமிக்க ஆறுதலும், ஆற்றல் வாய்ந்த ஆறுதலும் இருக்கும். இது மனதின் தயக்கமற்ற செயலாய் இருக்க வேண்டும். நான் வைத்திருக்கிறேன் என்பது நிலைநாட்டப்பட்டதும்முடிவுசெய்யப்பட்டதுமான செயலாயிருக்க வேண்டும். தெய்வ பயமுள்ளவன் எப்பொழுதும் கடவுள் தன்னைப் பார்க்கிறாரா என்று அறிந்து கொள்ளவும், அவர் சத்தத்தைக் கேட்கவும் விழிப்புள்ளவனாய் இருக்க வேண்டும். அவன் கடவுள் அவன் அருகே இருந்து அவன் பார்வையைநிறைத்திருப்பவராயும் அவனைச் சரியானமுறையில் வழிநடத்துபவராயும் அவன் தியானிக்க வேண்டிய தலைப்புக்களைக் கொடுத்து உதவுபவராயும் இருக்கிறார். ஆண்டவரை நமக்குமுன் வைத்திருந்தால், எப்படிப்பட்ட மாயைகளையெல்லாம் தவிர்ப்போம், எப்படிப்பட்ட பாவங்களைமேற்கொள்வோம், எப்படிப்பட்ட நற்குணங்களை எடுத்துக் காட்டுவோம், எவ்வித மகிழ்ச்சியை அனுபவிப்போம்

என்று நினைத்துப் பாருங்கள்.........நாம் ஏன் அவ்விதம் செய்யக் கூடாது?

பத்திரமாயிருக்க இதுவே வழியாகும். நாம் எப்போதும் ஆண்டவரைப்பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால், அவர் அருகிலிருக்கிறார் என்று உணர்ந்து பத்திரமாய் இருப்பதாகவும் உறுதிப்பாடு கொண்டவர்களாயும் இருக்கிறோம். அவர் நம்மை வழிநடத்தவும் நமக்கு உதவி செய்யவும் நம் வலது பாரிசத்தில் இருக்கிறார். ஆகையால் அச்சம் வலிமை மோசடிநிலையற்றவை எவையும் எம்மை அசைக்கமுடியாது. கடவுள் ஒரு மனிதனின் வலது பாரிசத்தில் நின்றால் அவன் திடமாக நிற்கிறவனாய் இருப்பான். ஆகவே எதிரிகளே வேண்டுமானால் கடும் புயல் மாதிரி என்மீது வீசுங்கள். கடவுள் என்னைத் தாங்குவார். என்னோடு நிலைத்திருப்பார். நான்யாருக்குப் பயப்பட வேண்டும்?

## 3. எல்லா நிலையிலும் சமாதானம்

*நான் அவர்களோடு சமாதான உடன்படிக்கைசெய்து, துஷ்ட மிருகங்களை தேசத்தில் இராதபடிக்கு ஒழியப் பண்ணுவேன். அவர்கள் சுகமாய் வனாந்தரத்தில் தாபரித்து, காடுகளில் நித்திரைபண்ணுவார்கள் (எசேக்.34:25).*

ஆற்றல் அற்றவனும், பாவியும் மரிக்கவேண்டிய தன்மை உள்ளவனுமான மனிதனோடு யேகோவா உடன்படிக்கை செய்வது கிருபையின் உச்சநிலையாகும். ஆயினும் ஆண்டவர் நம்மோடு திட்டமிட்டுச் செய்யப்பட்டவிதமாக உடன்படிக்கைசெய்திருக்கிறார். இந்த உடன்படிக்கையினால் நாம் பத்திரமாக இருக்கிறோம். மேய்ப்பர்களால் சிங்கங்களும் ஓநாய்களும் விரட்டியடிக்கப்படுவதுபோல எல்லா நச்சுத்தன்மை வாய்ந்த சக்திகளும் விரட்டியடிக்கப்படும். அமைதியைக் குலைக்கக் கூடியவர்களிடமிருந்தும்,அழிக்கக்கூடியவர்களிடமிருந்தும்

ஆண்டவர் நமக்கு இளைப்பாறுதல் அளிப்பார். நாட்டில் தீய விலங்குகள் இல்லாமற்போகும். ஆண்டவரே, இப்போதே அந்த வாக்குறுதியை உண்மையாக்கும்.

இடர்காப்பின்மையான இடங்களிலும் ஆண்டவரின் மக்கள் பத்திரமாய்க்காக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் மந்தைக்கு வனாந்தரவெளியும், காடுகளும், மேய்ச்சல் நிலமும் ஆடுகள் அடைக்கப்படும் பட்டியும்போல இருக்கும். ஆண்டவர் இதைவிட நல்ல நடத்தை நமக்கு மாற்றிக்கொடுக்காவிட்டால் இந்த இடத்திலேயே நம்மை சிறப்புமிக்கவர் ஆக்குவார்.வனாந்தர வெளி வாழ்வதற்கு ஏற்ற இடமல்ல. ஆனால் ஆண்டவர் அதை ஏற்றதாக்கக்கூடியவர். காடுகளில் தூங்குவதைவிட விழிப்புநிலையில் காவல் காப்பதிலேயே நாம் கவனம் செலுத்துவோம். ஆனால் அந்த இடத்திலேயும் ஆண்டவர் தமக்கு அருமையானவர்களுக்கு நித்திரை அருளுகிறார். ஆண்டவரின்பிள்ளைக்கு உள்ளேயும் வெளியேயும் எந்த இடத்திலும் அச்சம் கொடுக்கக்கூடியது எதுவுமில்லை. விசுவாசத்தினால் வனாந்தரவெளி பரலோகத்தின் புறநகராகவும், காடுகள் மகிமையின் முன்கூடமாகவும் மாறக்கூடும்.

# 4. மூடி பாதுகாப்பு அளிப்பார்

அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். அவர் செட்டைகளின்கீழே அடைக்கலம் புகுவாய். அவருடைய சத்தியம் பரிசையும் கேடகமுமாகும் (சங்.91:4).

இது கருணை நயம்படச் செயலாற்றும் உவமையாகும். ஒரு கோழி எவ்விதம் தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளாலே மூடி, அவைகளுக்கு அடைக்கலம் கொடுக்கிறதோ, அவ்விதம் ஆண்டவர் தம் மக்களைப் பாதுகாத்து, அவர்கள் தம்மில் அடைக்கலம் புகச் செய்வார்.தாய்க் கோழியின் சிறகுக்குள்ளிருந்து குஞ்சுகள் வெளியே எட்டிப் பார்ப்பதை நாம் கண்டிருக்கிறோம்

அல்லவா? அவை திருப்தியடைந்து மகிழ்ச்சியுடன் செய்யும் சத்தத்தையும் நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? இவ்விதமாக நாமும் கடவுளில் அடைக்கலம் தேடி, அவர் நம்மைப்பாதுகாத்து வருகிறார் என்று உணர்வோமாக!

ஆண்டவர் நம்மை மூடியிருக்கும்வரை நாம் நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறோம். அவ்விதம் இல்லாமல் இருப்பதுதான் எதிர்பாராத நிலையாகும். யேகோவா நம் வீடும், குடும்பமும், அடைக்கலமும், இளைப்பாறுதலுமாய்இருக்கும்போது நாம் எவ்விதம் நம்பிக்கை அற்று இருக்கமுடியும்?

இவ்விதம் நம்பினபின்பு அவர் நாமத்தில் போருக்குச் சென்று, அதே பாதுகாப்பை அனுபவிக்கிறோம். நமக்குப் பரிசையும் கேடகமும் தேவை. ஆனால் நாம் குஞ்சு, கோழியை நம்புவதைப்போல ஐயம்இல்லாத உறுதிப்பாடுடன் கடவுளை நம்பும்போது அவர் உண்மை நமக்குத் தலையிலிருந்து கால்வரை கவசம்போல இருப்பதைக் காண்போம். ஆண்டவர் பொய்சொல்லமாட்டார். அவர் தம் மக்களுக்கு உண்மையுள்ளவராயிருப்பார். அவர் வாக்குறுதிகளில் நிலைத்திருக்கவேண்டும். நமக்குத் தேவையானதுஇந்த உண்மையாகிய பரிசையே. அதன் மறைவில் இருந்து நாம் எதிரிகளின் பயங்கரமான அம்புகளை எதிர்த்துநிற்கிறோம்.

என் ஆன்மாவே, அந்தப் பெரிய சிறகுகளின் கீழ் அடைக்கலம் புகுந்துகொள். பஞ்சைப்போன்ற இறகுகளின் மத்தியில் அமர்ந்திரு. நீமகிழ்ச்சி உள்ளவனாய் இருக்கிறாய் அல்லவா?

## 5. அரண்களாகிய உயர்ந்த இடங்கள்

அவன் உயர்ந்த இடங்களில் வாசம்பண்ணுவான். கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த

அடைக்கலமாகும். அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும். அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும் (ஏசா.33:16).

குற்றமற்ற வாழ்க்கை நடத்த கடவுள் கிருபை அளித்தவன் முற்றிலும் பாதுகாப்பான நிலையில் வாழ்கிறான்.

அவன் உலகிற்கு மேலாக எதிரிகளின் தாக்குதலுக்கு அப்பாற்பட்டு, பரலோகத்துக்கு அருகில், உயர்ந்தஇடத்தில் வாழ்கிறான். அவன் குறிக்கோள்களும் நோக்கங்களும் உயர்ந்தவை. அவன் உயர்வான். ஆறுதலும் உயர்ந்தவர்களின் தோழமையும் உள்ளவனாய் இருக்கிறான். நித்திய அன்பாகிய மலையின்மேல் அவன் வாழ்ந்து, மகிழ்ச்சியுடன் இருக்கிறான்.

மிகப் பெரியபாறைகளாகிய படைத்தளவாடங்களினால் அவன் பாதுகாக்கப்படுகிறான். பரபஞ்சத்தில் உறுதியானவை மாறாத கடவுளின் வாக்குறுதிகளும் கருத்துக்களுமாகும். இவை கீழ்ப்படிதலுள்ள விசுவாசியின் பாதுகாப்பாகும்.

அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும் என்னும்வாக்குறுதியின்மூலம் அவன் உணவுக்கான வசதி செய்து கொடுக்கப்படுமென்று அறிகிறோம். எதிரிகள் கோட்டையின்மேல் ஏறவாவது, காப்பாளனை அழித்துவிடவாவது முடியாது. ஆகையால் முற்றுகையிட்டாவது, பஞ்சத்தை ஏற்படுத்தியாவது கோட்டையைக் கைப்பற்ற முடியாது. வனாந்தரத்தில்மன்னாவை அளித்தவர், தம் மக்களைப் பட்டினியால் வருத்த எதிரிகள் சூழ்ந்திருந்தாலும், அவர்களுக்குத் தேவையான உணவைக் கொடுப்பார்.

ஆயினும் தண்ணீர் கிடைக்காமற்போனால் என்ன செய்வது? அவ்விதம் நேரிடாது. அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க்கிடைக்கும். தாக்குதலுக்கு அசையாத கோட்டையின் உள்ளே வற்றாத கிணறு இருக்கிறது. எந்தத் தேவையும் இல்லாமல் இருக்கவேண்டுமென்று ஆண்டவர் அக்கறை உள்ளவராய்

இருக்கிறார். உண்மையான சீயோனின் குடி மகனுக்கு யாரும் எந்தத் தீமையும் செய்யமுடியாது. எதிரி எவ்வளவு வலிமைவாய்ந்தவனாக இருந்தாலும் தாம் தெரிந்துகொண்டவர்களை ஆண்டவர் காப்பாற்றுவார்.

# 6. கடப்போம், அமிழ்ந்துபோகமாட்டோம்

நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது (ஏசா.43:2).

பாவம் ஒன்றும் இல்லாதபடியால் நாம் தண்ணீர்களின் ஊடே கடந்து செல்லவேண்டும். தண்ணீர் பாய்ந்து ஓடுவதை உணர்வோம். அப்பொழுது நம்மோடு இருக்கும் ஆண்டவரின் சமூகம் படகைவிடச் சிறந்தது. இப்பொழுதுகடுந்துன்பத்துக்கு உட்பட்டவர்களாய் இருப்போம். இனிமேல் வெற்றி பெற்றவர்கள் ஆவோம். ஏனெனில் பல தண்ணீர்களைவிட வலிமை வாய்ந்த யேகோவா நம்மோடு இருப்பார். வேறு எந்தச் சமயத்திலாவது அவர்தம் மக்களைவிட்டுப் பிரிந்தாலும் துன்பத்திலும் ஆபத்திலும் கண்டிப்பாகஅவர்களோடு இருப்பார். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் எவ்வளவு அதிகமானாலும் அவை ஒவ்வொன்றையும் சமாளிக்க அவர் ஏற்றவராயிருப்பார்.

கடவுளின் எதிரிகள் தாங்களாகவே திட்டமிடும் அட்டுழியம், ஏளனம் முதலிய ஆபத்துகளால் நம்மைத் தாக்கலாம். அவைஅக்கினிச் சூளையைப்போல் இருக்கலாம். அப்படியானால் நமக்கு என்ன நேரிடும்? நாம் அக்கினிக்கு ஊடாக நடக்கலாம். ஆனால் தேவன் நம்மோடு இருப்பதால் நாம் எரிந்துவிடமாட்டோம். அக்கினியின் வாசனைகூட நம்மேல் இருக்காது.

பரலோகத்தில் பிறந்தவனும்பரலோகத்தை நோக்கிப் பயணம் செய்துகொண்டு இருப்பவனுமான யாத்திரீகனுக்கு எப்படிப்பட்ட சிறப்பான பாதுகாப்பு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது என்று கவனியுங்கள். வெள்ளம் அவனை மூழ்கடிக்கமுடியாது. நெருப்பு அவனை எரித்துவிடமுடியாது. ஆண்டவரே, உம்முடைய பரிசுத்தவான்களுக்குவழியில் ஏற்படும் எல்லா ஆபத்துக்களிலும் உம் சமூகம் பாதுகாப்பாயிருக்கிறது, இதோ விசுவாசத்தோடு நான் என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன். என் ஆவி இப்போது சமாதானமாயிருக்கிறது.

# 7. பெலன்கொடுத்துச் சமாதானம் அருளுவார்

கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார் (சங்.29:11).

தாவீது இப்போது பலத்த மின்னலில்ஆண்டவரின் சத்தத்தைக் கேட்டிருக்கிறான். பலத்த காற்றில் அவர் ஆற்றலைக் கண்டிருக்கிறான். அந்தக் காற்று வீசினபோது ஏற்பட்ட சம்பவங்களை ஒவ்வொன்றாக விவரிக்கிறார். இப்பொழுது புயலுக்குப்பின் ஏற்பட்டிருக்கும் அமைதியில், வானத்தையும் பூமியையும் அதிர்ச்சிக்குஉட்படுத்திய அந்த வல்லமை மிகுந்த ஆற்றல் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பெலனாயிருக்கும் என்று வாக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறது. குறியை நோக்கிச் செல்லும் அம்பை விரைவாகச் செல்ல ஏவுகிறவர் தம்மால் இரட்சிக்கப்பட்டவர்களுக்குக் கழுகுகளைப்போன்ற இறக்கைகளைக்கொடுப்பார். தம் சத்தத்தினால் பூமியை அதிரப்பண்ணுகிறவர் தம் பரிசுத்தவான்களின் எதிரிகளைத் திகிலடையச் செய்து, தம் மக்களுக்குச் சமாதானம் அருளுவார்.

தேவையானபோது கடவுளின் ஆற்றல் நமக்குக் கிடைக்க இருக்கும்போது நாம் ஏன் பெலன் அற்றவர்களாய் இருக்கவேண்டும்?ஆண்டவரின் சமாதானம் நமக்கு இருக்கும்போது நாம் ஏன் கவலைப்படவேண்டும்? வல்லமையுள்ள கடவுளாகிய இயேசு நம் பெலனானவர். அவரோடு நம் வேலைக்குச் செல்வோமாக. மகிமையுள்ள ஆண்டவராகிய இயேசு நம் சமாதானமும் ஆனவர். இன்று அவரில் அமர்ந்திருந்து நம் அச்சங்களைநீக்கிவிடுவோமாக. இப்போதைக்கும் எப்போதுக்குமாக அவரை நம் ஆற்றலும் சமாதானமுமாகப் பெற்றிருப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாகும் !

புயலின்போது வெள்ளத்தின்மேல் ஏறிவரும் கடவுள் நம் இன்னல் ஆகிய சூறாவளியின்மேலும் அதிகாரம்செலுத்துகிறவராயிருக்கிறார். அவர் கூடிய சீக்கிரத்தில் சமாதானம் தந்தருளுவார். புயலின்போது பெலனும், விரும்பத்தக்க காலநிலையின்போது பாட்டும் நமக்கு இருக்கும். நம் பெலனும் சமாதானமுமானவரை உடனே பாடத்தொடங்குவோமாக! இருண்ட எண்ணங்களே, அகன்றுவிடுங்கள்!நம்பிக்கையும் ஆர்வமும் துளிர்விடட்டும்.

# 8. பின்பற்றினால் கனம்பண்ணப்படுவாய்

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் (யோ.12:26).

சிறந்த ஊழியம் கிறிஸ்துவைப் பின்பற்றுதல் ஆகும். நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனாய் இருக்கவேண்டுமானால் அவரைப் பின்பற்றுகிறவனாய் இருக்கவேண்டும். இயேசு செய்ததைச் செய்வதுதான் அவர் நாமத்தைக் கனம்அடையச் செய்வதற்கு

சிறந்த வழி ஆகும். நான் ஒவ்வொரு நாளும் இவ்விதம் செய்வேனாக!

நான் இயேசுவைப் பின்பற்றினால் அவர் என்னோடு இருப்பார். இங்கு நான் அவரைப் பின்பற்ற மனமார முயற்சி செய்திருந்தால் ஏற்ற காலத்தில் அவரோடு இருப்பதற்காக என்னைஎடுத்துக்கொள்வார். பாடுகள்பட்டபின் நம் ஆண்டவர் தம் சிங்காசனத்தை அடைந்தார். அதேவிதமாக நாமும் இங்கு அவரோடு சிறிதுகாலம் பாடுபட்டிருந்தால் மகிமையடைவோம். நம் ஆண்டவருடைய வாழ்க்கையின் பலனே நம்முடைய வாழ்க்கையின் பலனும் ஆகும். அவருடைய தாழ்ந்த நிலையில்நாம் பங்கெடுத்து இருந்தால் அவர் மகிமையில் அவரோடு இருப்போம். என் ஆன்மாவே, தைரியங்கொள். உன் ஆண்டவர் உனக்குவிட்டுச் சென்றிருக்கும் இரத்தம் தோய்ந்த அடிச்சுவட்டில் உன் பாதங்களையும் எடுத்துவை.

தம் குமாரனைப் பின்பற்றுகிறவர்களைப்பிதாவானவர் கனம்பண்ணுவார் என்பதை நான் கவனிக்கத் தவறமாட்டேன். நான் இயேசுவுக்கு உண்மையுள்ளவனாய் இருப்பதை அவர் கண்டால், அவர் குமாரனுக்காக எனக்குக் கருணை காட்டி, மகிமைப்படுத்துவார். இதற்கொத்த மகிமை வேறு எதுவும் இல்லை. அரசர்களும் சக்கரவர்த்திகளும்அளிக்கும் பட்டங்களும் பதவிகளும் நிழல்கள் போன்றவையே. உண்மையான மகிமை பிதாவிடமிருந்தே வருகிறது. ஆகவே, என் ஆன்மாவே, உன் ஆண்டவராகிய இயேசுவை முன்பைவிட அதிகமாக நெருங்கிப் பற்றிக்கொள்.

## 9. விசுவாசத்தின் முழுமை

இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார் (மாற்.9:23).

நம் நம்பிக்கையின்மையே நம் பாதையில் உள்ள பெரிய தடையாகும். சொல்லப்போனால் ஆன்மீக வாழ்க்கையில் நம் வாழ்வு வளம் பெறுவதற்கு அதைத் தவிர வேறு எந்த தடங்கலும் இல்லை. ஆண்டவருக்கு எல்லாம் செய்யமுடியும். ஆனால் நம் விசுவாசத்தின்படியேநமக்கு ஆகக்கடவது என்று அவர் ஓர் ஆணை பிறப்பித்துவிட்டால், நம் நம்பிக்கையின்மையெல்லாம் வல்ல அவர் கையைக்கூடக் கட்டிப்போட்டு விடுகிறது.

நாம் விசுவாசித்தால் தீமை செய்யும் சதிக் கும்பல் சிதறடிக்கப்படும். சத்தியத்தின் கடவுள்மேல் நமக்குநம்பிக்கையிருந்தால் இழிவானதாகக் கருதப்பட்ட உண்மை தலைதூக்கும். சமாதானமாகிய அரைக்கட்டு நம்பிக்கை என்னும் கைகளால் மாட்டப்படுமேயானால் நாம் நம் தொல்லை ஆகிய சுமையைச் சுமக்கமுடியும், உபத்திரவம் என்னும் அலைகளையும் காயப்படாமல் கடந்து செல்லமுடியும்.

நாம் நம்பமுடியாதது எது? கடவுளை நம்புவதைவிட மற்ற எல்லாவற்றையும் நம்மால் செய்யமுடிகிறதா? அவர் எப்பொழுதும் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அவரை நாம் நம்பாமல் இருப்பதற்கு காரணம் என்ன? அவர் சொன்னதைச் செய்கிறவராய் இருக்கிறார். அப்படி இருக்கும்போதுநாம் அவரை விசுவாசியாமல் இருப்பது ஏன்? நம் இதயம் சரியான நிலையில் இருக்கும்போது அதிக முயற்சி இல்லாமல் நம்ப முடியும். அப்போது ஒரு குழந்தை தன் தகப்பனை நம்புவதைப்போல நமக்கும் இயற்கையாகவே கடவுள்மேல் சார்ந்திருக்க முடிகிறது.

இப்பொழுது நம்மைநெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ள சோதனையைத் தவிர மற்ற எல்லாவற்றுக்கும் நமக்குக் கடவுளை நம்பமுடிகிறது. இது முட்டாள்தனமானது. என் ஆன்மாவே, இப்படிப்பட்ட பாவத்தைவிட்டு ஒழித்து, உன் சுமைக்காகவும், உழைப்புக்காகவும், இக்கால அவாக்களுக்காகவும் உன்

கடவுளைநம்பு. இதைச் செய்வது எல்லாவற்றையும் செய்ததுபோல ஆகும்.

# 10. கடவுள் நம் நண்பர்

நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன் (யாத்.23:22).

தம் மக்களின் மத்தியில் இருக்கும் ஆண்டவராகிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். அவருக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். அவர் கடவுளின் பிரதிநிதியாவார். அவர் கடவுளின் நாமத்தில் பேசுகிறவர். அவர் ஆணையிடுவதற்கு உடனே நாம் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் தெய்வீக ஆணையை மதியாமற்போனால் வாக்குறுதியை இழந்தவர்கள் ஆவோம்.

முற்றிலுமாகக் கீழ்ப்படிந்தால் எவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தைப் பெறுவோம் என்று நினைத்துப் பாருங்கள்! ஆண்டவர் தாக்கவும், பாதுகாக்கவும் தம் மக்களோடு சேர்ந்துகொள்ளுகிறார். நம்மை ஆசீர்வதிப்பவர்களை அவர் ஆசீர்வதிப்பார். நம்மைச் சபிப்பவர்களை அவர் சபிப்பார். கடவுள் அவர் மக்களோடு முழுவதுமாக ஒத்துழைப்பார். அவர்கள் துன்பப்படும் போது ஆழ்ந்த அனுதாபம் காட்டுவார். இது நமக்கு எவ்விதப் பாதுகாப்பை அளிக்கிறது என்று நினைத்துப்பாருங்கள். நம் எதிரிகளைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் கடவுளின் எதிரிகள் ஆகிவிடுகிறார்கள் என்று நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. நம் பகைவரோடு போர் செய்ய யேகோவா முன்வந்திருப்பதால் அவர்களை அவர் கையில் விட்டுவிடலாம்.

நம்மைக்குறித்து நினைத்துப்பார்த்தால் நமக்கு எதிரிகளே கிடையாது. ஆனால் ஊண்மைக்காகவும் நீதிக்காகவும் நாம் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு போர் செய்யப் போகிறோம். புனிதமான இந்தப் போரில் நாம் நித்தியமான கடவுளோடு சேர்ந்திருக்கிறோம். ஆகவே நாம் நம் ஆண்டவராகியஇயேசுவின் கட்டளைக்குக் கவனமாகக் கீழ்ப்படிந்தால் அவர் நமக்காக அவருடைய முழு ஆற்றலையும் பயன்படுத்துவார். ஆகையால் நாம் எந்த மனிதனுக்கும் பயப்பட வேண்டியதில்லை.

# 11. நம்பிக்கையோடுசெய், செய்துவிட்டு நம்பு

*கர்த்தரை நம்பி நன்மை செய். தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்து கொள் (சங்.37:3).*

நம்பு, செய் என்ற இரு சொற்களும் பரிசுத்த ஆவியானவர் அவற்றைவைத்திருக்கும் வரிசைப்படி நன்றாய்ப் பொருந்திப் போகின்றன. நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அந்த நம்பிக்கை கிரியை செய்ய வேண்டும். கடவுளை நம்புவது புனிதமான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. நன்மைக்காகக் கடவுளை நம்புகிறோம். கடவுளை நம்புகிறதனால்நன்மை செய்கிறோம். நாம் நம்புவதனால் ஒன்றும் செய்யாமல் அமர்ந்து விடுவதில்லை. ஆனால் நாம் எழுந்து ஆண்டவர் நம் மூலமாகக் கிரியை செய்ய எதிர்பார்க்கிறோம். நாம் கவலைப்பட்டுத் தீமையைச் செய்ய வேண்டியதில்லை. ஆனால் நம்பி நன்மை செய்ய வேண்டும். நாம் கிரியைசெய்யாமல் நம்புவதுமில்லை. நம்பாமல் கிரியை செய்வதுமில்லை. நம் எதிரிகளுக்குக் கூடுமானால் நம்மை வேரோடு அற்றுப் போகப் பண்ணலாம். ஆனால் நம்புவதாலும் கிரியை செய்வதாலும் நாம் நாட்டில் பிழைத்திருக்கிறோம். நாம் எகிப்துக்குப் போகமாட்டோம். ஆனால் கடவுளின்அருள் செயலும் உடன்படிக்கையின்

அன்புமான கானானாகிய இம்மானுவேலின் நாட்டிலேயே தங்கியிருப்போம். ஆண்டவரின் எதிரிகள் நினைப்பது போல நம்மை எளிதாக அகற்றி விட முடியாது. கடவுள் நமக்கு எங்கு பெயரும் இடமும் கொடுத்திருக்கிறாரோ அங்கு தங்கியிருப்போம்.

ஆனால் நமக்குத் தேவையானவை எப்படிக் கிடைக்கும்? இந்த வாக்குறுதியில் ஆண்டவர் மெய்யாகவே என்னும் வார்த்தையையும் சேர்த்திருக்கிறார். ஆண்டவர் உண்மையாய் இருக்கிறது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் அவர் மக்களுக்கு உணவு அளிக்கப்படும். அவர்கள் நம்பிசெய்யப்பட்டால், ஆண்டவர் அவர்கள் நம்பிக்கையின்படி கிரியை செய்வார். அவர்களுக்குக் காகங்களினாலாவது, ஒபதியாவினாலாவது, ஒரு விதவையினாலாவது உணவு அளிக்கப்படா விட்டாலும், அவர்கள் எப்படியாவது உணவைப் பெறுவார்கள். ஆகையால் பயமே என்னை விட்டு அகன்று போ!

# 12. அமைதியடைந்த இதயம்

*அமெரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் (ஏசா.30:15).*

எப்போதும் எரிச்சலடைவதும்கவலைப்படுவதும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பதும் நம்பிக்கையின்மையால் அவதிப்படுவதும் பெலவீனத்தைக் காட்டுகிறது. நாம் மெலிந்து உருத்தெரியாமற் போனால் என்ன செய்ய முடியும்? அச்சம் கொள்வதனாலும், சீற்றம் கொள்வதனாலும், நாம் ஏதாவது நன்மை அடையமுடியுமா? முடியாது. அதற்குப் பதிலாக செயல்படுவதற்கு நம்மைத் தகுதியற்றவர்கள் ஆக்கிக்கொள்வோம். ஞானமான தீர்மானங்கள் செய்வதற்கும் ஏற்றவர்களாய் இருக்கமாட்டோம். நம்பிக்கையினால் மிதப்பதற்குப் பதிலாக நம் போராட்டங்களில் மூழ்கிப்போகிறோம்.

நாம் அமைதியாய் இருப்பதற்கு கிருபை பெற்றால் எவ்வளவு நன்றாயிருக்கும். ஏன் வீடுவீடாகச் சென்று நம்மைச் சோர்வுறச் செய்யும் அச் செய்தியைச் சொல்ல வேண்டும்? அதைச் சொல்வதினால், நம் இதயம் அதிகம் அதிகமாக ஊக்கம் இழக்கும் நிலையை அடைகிறது. ஒரு போதும்நேராமற்போகும் இடருக்கான முன்னறிகுறிகளைக் கண்டு ஏன் வீட்டில் அமர்ந்து அழுது புலம்ப வேண்டும்? அப்படிப்பட்டவைகளைப் பேசாமல், நம் நாவை அடக்கி வைத்திருப்பது நல்லது. அதைவிடச் சிறந்தது அமைதியான இதயம் உள்ளவர்களாய் இருப்பதுதான். அமர்ந்திருந்து யேகோவாவே கடவுள்என்று அறிந்து கொள்வது எவ்வளவு நல்லது!

கடவுளில் ஊறுதியான நம்பிக்கை வைக்கக் கிருபை பெற்றிருப்பது எவ்வளவு மேன்மையான நிலையாகும். இஸ்ரவேலின் பரிசுத்தர் தமக்குச் சொந்தமானவர்களைப் பாதுகாத்து விடுவிக்க வேண்டும். அவர் மனப் பூர்வமாகக்கொடுத்துள்ள உறுதிமொழியின்படி செயல்படாமல் பின்வாங்கமாட்டார். மலைகள் அகன்று போனாலும், அவர் சொல்லியுள்ள ஒவ்வொரு வார்த்தையும் நிறைவேறும் என்னும் நிச்சயம் உள்ளவர்களாய் நாம் இருக்கலாம். நம்பிக்கை வைப்பதற்கு அவர் தகுதியுள்ளவர். நாம் அவரை நம்பிஅமர்ந்திருந்தால் சிங்காசனத்தின் முன் அமர்ந்திருக்கும் ஆவிகளைப்போல் மகிழு;ச்சி உள்ளவர்களாய் இருப்போம்.

என் ஆன்மாவே, உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பி, ஆண்டவராகிய இயேசுவின் மார்பில் உன் தலையைச் சாய்த்துக்கொள்!

## 13. மாலை பகலாக மாறும்

*சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும் (சக.14:7).*

இவ்விதம் நடப்பது ஆச்சரியமாகும். ஏனெனில்சாயங்காலத்திலே இருட்டாகும் என்றே நாம் அறிந்திருக்கிறோம். கடவுள் நம் அச்சங்களுக்கு மேலும் நம்பிக்கைகளுக்கு அப்பாலும் செயல்படுவதால், நாம் வியப்படைந்து அவர் வல்லமையுள்ள கிருபையைப் போற்றத் தூண்டப்படுகிறோம். நம் இதயங்கள் முன்னறிவிப்பது போல் இருள்அதிகமாகி நடுநிசி வராது. ஆனால் திடீரென்று சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். நாம் கவலையடைய வேண்டியதில்லை. மிகப்பயங்கரமான நாளிலும் மரணத்தின் நிழலைக் காலையாக மாற்றக் கூடிய ஆண்டவரை நம்புவோமாக! இஸ்ரவேலர் செய்யவேண்டிய செங்கல்லின் அளவு இரண்டு மடங்குஆக்கப்படும்போது மோசே தோன்றினார். துன்பங்கள் அதிகமாகும் போது அவை முடிவடையும் காலம் வந்துவிட்டது என்று அறியலாம்.

இந்த வாக்குறுதி நம்மைப் பொறுமையுள்ளவர்கள் ஆக்கலாம். வீணாகப் பலநாள்கள் காத்திருந்து, நாம் நம்பிக்கை அற்ற நிலைஅடையும்வரை முழு வெளிச்சமும் காணப்படாமல் இருக்கலாம். துன்மார்க்கருக்குப் பகலாய் இருக்கும் போதே, சூரியன் அஸ்தமித்து விடும். நீதிமான்களுக்கு இரவு நெருங்கும் போது சூரியன் உதயமாகி விடும். அந்தப் பரலோக வெளிச்சத்துக்கு நாம் காத்திருக்கக் கூடாதா? ஒருவேளை அதுவரத்தாமதமாகலாம். ஆனால் அது வரும்போது நாம் காத்திருந்ததைக் குறித்து நாம் வருந்த மாட்டோம்.

என் ஆன்மாவே, இயற்கை ஒருக்காலும் கண்டிராத விதமாக வாழ்க்கையிலும் மரணத்திலும் உன்னை ஆசீர்வதிக்கப் போகிறவரைப் பாடித்துதி.

## 14. பழமையானது ஒன்றுமில்லை

*சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர் இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார் (வெளி 21:5).*

அவர் நாமம் மகிமைப்படுவதாக!எல்லாரும் புதுப்பிக்கப்படவேண்டும். ஏனெனில் அவை பாவத்தினால் நொறுக்கப்பட்டும் பழமைப்பட்டும் போயிருக்கின்றன. பழைய ஆடைகளைச் சுருட்டி ஒதுக்கி வைத்துவிட்டு, படைக்கப்பட்ட உலகம் தன் சிறப்பான ஆடைகளைப் போட்டுக் கொள்ளும் காலம் வந்து விட்டது. ஆனால்முதலாவது உலகைப் படைத்த ஆண்டவரைத் தவிர, வேறு யாரும் எல்லாவற்றையும் புதிதாக்க முடியாது. ஒற்றுமையில்லாமையில் இருந்து எல்லாவற்றையும் படைக்க எவ்வளவு ஆற்றல் தேவைப்பட்டதோ, அவ்வளவு ஆற்றல் தீமையிலிருந்து நீக்கிப் புதிதாக்கவும் தேவைப்படுகிறது. அந்தவேலையைச் செய்வதாக நம் ஆண்டவராகிய இயேசு ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதைச் செய்ய அவர் தகுதி வாய்ந்தவர். ஏற்கெனவே அவர் அவ்வேலையைத் தொடங்கி விட்டார். பல நூற்றாண்டுகளாக அவர் விடா முயற்சியுடன் மக்களின் இதயத்தையும் சமுதாயத்தின் தரத்தையும் புதிதாக்க முயன்றுவருகிறார். அவர் சிறிது சிறிதாக மக்கள் அரசியல் சாசனத்தைப் புதிதாக்குவார். அவர் கிருபையினால் மக்களின் தன்மை மாற்றப்படும். ஒருநாள் நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.

அரசரின்ஆற்றலினால் எல்லாம் புதுப்பிக்கப்படும். இராச்சியத்தின் மக்களாயிருப்பது எவ்வளவு மகிழ்ச்சி தருவதாகும் என்று நினைத்துப் பாருங்கள். நாம் படிப்படியாய் மறைந்து போகமாட்டோம். இன்றும் மகிமையான வாழ்க்கையை எதிர்நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கிறோம். தீயசக்திகள் எதிர்த்தாலும் நம் மகிமையுள்ள ஆண்டவராகிய இயேசு தம் திட்டத்தை நிறைவேற்றி நம்மையும் எல்லாவற்றையும்

புதிதாக்கி எல்லாம் படைக்கப்பட்டபோது எவ்வளவு அழகுடன் இருந்ததோ, அவ்வளவு அழகுடன் விளங்கச் செய்கிறார்.

## 15. உலக ஒப்பந்தம்

அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும், அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை (ஏசா.2:4).

அந்த மகிழ்ச்சியான நாள் வந்து விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்! தன்னைப் போன்ற மக்களைக் கொன்று குவிப்பதனாலேயே மனிதனின் நோக்கம் நிறைவேறும் என்பது போல் இக்காலத்தில் மக்கள் ஏராளமானஆயுதங்களைச் செய்து சேமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதுவுமல்லாமல் இன்னும் பயங்கரமான ஆயதங்களைக் கண்டுபிடித்துக் கொண்டுமிருக்கிறார்கள். ஆயினும் ஒருநாள் சமாதானம் நிலைத்திருக்கும். அந்த நாளில் அழிவின் ஆயுதங்கள் வேறு வடிவங்களில் மாற்றி அடிக்கப்படும்.அவை வேறு நல்ல செயல்களுக்கும் பயன்படுத்தப்படும்.

இவ்விதமான மாறுதல் எப்படி நடைபெறும்? வாணிபத்தினாலா? நாகரீகத்தினாலா? நடுவர் தீர்ப்புக்கு விட்டுவிடுவதனாலா? நாம் அதை நம்புவதில்லை. இவ்வளவு வலுக்குறைந்த வழிவகைகளை நம்பக் கூடாதென்று பழைய அனுபவங்கள்நமக்குக் காட்டுகின்றன. சமாதானப் பிரபுவின் ஆட்சியினால் மட்டுமே சமாதானம் நிலைநிறுத்தப்படும். அவர் தம் ஆவியினால் மக்களுக்குப் போதிக்க வேண்டும். தம் கிருபையினால் அவர்கள் இதயங்களைப் புதுப்பிக்க வேண்டும். அவர் மகத்தான கிருபையினால் அவர்கள் மேல் ஆட்சி புரியவேண்டும். அப்பொழுது அவர்கள் கொல்லுவதையும்

காயப்படுத்துவதையும் நிறுத்துவார்கள். மனிதனின் இரத்தம் கொதித்து எழுப்போது அவன் மிருகமாகி விடுகிறான். ஆண்டவராகிய இயேசுவே சிங்கத்தை ஆட்டுக்குட்டியாக மாற்றமுடியும். மனிதனின் இதயத்தை மாற்றுவதனால் இரத்த தாகமுள்ள அவன்வெறி உணர்ச்சிகள் நீக்கப்படுகின்றன. வாக்குறுதிகள் அடங்கிய இந்த நூலை வாசிப்பவர் ஒவ்வொருவரும் இன்று ஆண்டவரும் சமாதானம் அளிப்பவருமான கடவுளை நோக்கி அவர் யுத்தங்களை ஒழித்து உலகம் முழுவதிலும் சமாதான உடன்பாடு ஏற்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கொள்வார்களாக!

# 16. தெய்வீக வெளியேற்றுதல்

*கானானியருக்கு இருப்பு ரதங்கள் இருந்தாலும், அவர்கள் பலத்தவர்களாயிருந்தாலும் நீங்கள் அவர்களைத் துரத்திவிடுவீர்கள் (யோசு.17:18).*

நிச்சயமாக வெற்றி கிட்டும் என்பதும் பேராண்மைக்கு உற்சாகம் அளிப்பதாகும். ஏனெனில் அந்த நிச்சயம் உள்ளவன் நம்பிக்கையோடு போருக்குச் செல்லுவான். எங்கு போக அச்சம் கொண்டவனாய் இருந்தானோ அங்கு தைரியத்துடன் செல்லுவான். நமக்குள்ளும்நமக்குச் சுற்றிலும் இருக்கும் தீமையை எதிர்த்தே நாம் போர் புரிகிறோம். அதில் நமக்கு வெற்றி கிட்டும் என்றும் அந்த வெற்றியும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலேயே வரும் என்றும் நம்மை நம்ப வைக்க வேண்டும். நாம் வீழ்ச்சியடைவதற்குச் சென்று கொண்டிருக்கவில்லை. வெற்றியடைவதற்கே சென்று கொண்டிருக்கிறோம். நாம் கண்டிப்பாக வெற்றியடைவோம். கடவுளின் கிருபை அதன் வரம்பில்லாத ஆற்றலில் எல்லாவிதத் தீமைக்கும் எதிராகப் போர்புரிகிறது. ஆகையால் வெற்றி கிடைப்பது நிச்சயம்.

நம் பாவங்களில் சில நம் மனதின் ஆக்கநலத்தினாலும் பழைய பழக்கங்களினாலும் நெருங்கிய நட்பினாலும் பொழுதுபோக்குப் பணிகளினாலும் வலிமை வாய்ந்த பக்க பலம் பெறுகின்றன. எப்படியானாலும் அவற்றை மேற்கொள்ள வேண்டும். அவை ஆற்றல் வாய்ந்தவையாய் இருக்கின்றன. அவற்றோடு ஒப்பிடும் போது நாம்வலுக்குறைந்தவர்களாய் இருக்கிறோம். ஆயினும் கடவுளின் நாமத்தில் நாம் அவற்றை அடக்கியாள வேண்டும். நாம் அடக்கியாளுவோம். ஒரே ஒரு பாவம் நம்மேல் ஆட்சி செலுத்தினாலும் நாம் மோட்சத்திற்குச் செல்ல முடியாது. ஏனெனில் பரிசுத்தவான்களைக் குறித்து பாவம் உங்களைமேற்கொள்ளமாட்டாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே எழுந்து கானானியர் ஒவ்வொருவரையும் வெட்டி வீழ்த்துங்கள். அவர்கள் இருப்பு ரதங்களை உடைத்தெறியுங்கள். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். பாவத்தை அழிக்கும் அவர் ஆற்றல் கிரியை செய்வதை யாரும் தடை செய்யமுடியாது.

## 17. நெருக்கமான அருமையான தோழமை

இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் (1.தெச.4:17).

நாம் இங்கு இருக்கும்போது ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். நாம் அழைக்கப்பட்ட பின்னும் நாம் அவரோடுஇருப்போம். பரிசுத்தவானை அவர் இரட்சகரிலிருந்து பிரிக்க முடியாது. அவர்கள் ஒன்றாய் இருக்கிறார்கள். அவர்கள் எப்போதும் ஒன்றாய் இருக்க வேண்டும். இயேசு அவர் சொந்தமான மக்கள் இல்லாமல் இருக்க முடியாது ஏனெனில் அப்படி இருந்தால் அவர் உடலற்ற தலையாய் இருப்பார். நாம்மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் பரதீசில் இளைப்பாறினாலும் இங்கே பரதேசிகளைப் போல்

சஞ்சரித்தாலும் நாம் இயேசுவோடு இருக்கிறோம். அவரை விட்டு நம்மைப் பிரிக்கக் கூடியவர் யார்?

இது எவ்வளவு மகிழ்ச்சி அளிப்பதாகும் என்று நினைத்துப்பாருங்கள். நாம் அடையக்கூடிய சிறந்த புகழும் இளைப்பாறுதலும் ஆறுதலும் மகிழ்ச்சியும் ஆண்டவரோடு இருப்பதே ஆகும். இந்த தெய்வீக தோழமையை விட சிறப்பு வாய்ந்தது அல்லது இதைப்போன்றது எதுவும் இருக்க முடியாது. இப்புனித தோழமையினால் நாம் அவரோடு அவர் தாழ்விலும்ஒதுக்கப்படுதலிலும் வேதனையிலும் இருக்க வேண்டும். அப்படியானால் அவர் மகிமையிலும் அவரோடு இருப்போம். கூடிய சீக்கிரத்தில் நாம் அவரோடு அவர் இளைப்பாறுதலிலும் அரச உரிமையிலும் எதிர்பார்த்தலிலும் வெளிப்படுத்தலிலும் சேர்ந்தவர்களாய் இருப்போம். அவர் முன்னேறுவது போல்நாமும் முன்னேறுவோம். அவர் வெற்றி பெறுவது போல் நாமும் வெற்றி பெறுவோம்.

என் ஆண்டவரே நான் நித்திய காலமாய் உம்மோடு இருப்பேனானால் அது மாற்ற முடியாததும் வேறு எதனோடும் ஒப்பிட முடியாததுமான நிலையாகும். நான் தலைமைத் தூதனின் பதவியைக் கூடஇச்சிக்க மாட்டேன். நித்திய காலமாய் ஆண்டவரோடு இருப்பதே என் கருத்துப்படி மோட்ச இன்பமாகும். பொன்சுர மண்டலங்களையும் வாடாத கீரிடங்களையும் மங்காத வெளிச்சத்தையும் நான் மகிமையாகக் கருதவில்லை. ஆனால் இயேசுவையும் நெருக்கமானதும் அருமையானதுமான தோழமையில்அவரோடு நித்திய காலமாய் இருப்பதையுமே மகிமையாய்க் கருதுகிறேன்.

# 18. மூடுவார் ஆதரவாக இருப்பார்

பறந்து காக்கிற பட்சிகளைப் போல சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாக இருப்பார் (ஏசா.31:5).

தன் குஞ்சுகளைப் பாதுகாக்கதாய்ப்பறவை விரைவாகப் பறந்து செல்கிறது. அவைகளுக்கு உணவு எடுத்துக் கொண்டு போகும்போதும் ஆபத்திலிருந்து பாதுகாக்கப் போகும்போதும் அது நேரத்தை வீணாக்குவதே இல்லை. அதே விதமாக ஆண்டவரும் தாம் தெரிந்து கொண்டவர்களைப் பாதுகாக்க கழுகுகளின் செட்டைகளின் மேல் பறந்துவருவார். ஆம் அவர் காற்றின் செட்டைகளில் பறந்து வருவார்.

கூட்டில் இருக்கும் குஞ்சுகளைத் தாய்ப்பறவை தன் சிறகுகளை விரித்து மூடிக்காக்கிறது. தன் உடலை இடையில் வைத்து அவைகளை மறைத்துக் காக்கிறது. அதே விதமாக யேகோவாவே தாம் தெரிந்து கொண்டவர் மேல்ஆதரவாக இருப்பார். அவர்கள் அடைக்கலமும் இருப்பிடமும் எல்லாம் அவரே.

பறந்து காக்கும் பட்சிகளைப்போல ஆண்டவர் நமக்கு இருப்பார். இக் கிரியையைத் தொடர்ந்து மறுபடியும் மறுபடியும் வெற்றிகரமாகச் செய்வார். நாம் எல்லாத் தீமையிலிருந்தும்பாதுகாக்கப்படுவோம். தம்மைப் பறவைகளோடு ஒப்பிடும் ஆண்டவர் அவைகளைப் போல வலுக் குறைந்தவராய் இருக்க மாட்டார். ஏனெனில் அவர் சேனைகளின் கர்த்தராகிய யேகோவா சர்வ வல்லவரின் அன்பு உதவிக்கு விரைந்து ஆதரவு அளிக்கும் என்பது நமக்கு ஆறுதலாய் இருக்கட்டும். கர்த்தரின்இறக்கைகள் பறவையின் இறக்கையை விட மென்மையானதும் விரைவானதும் ஆகும். ஆகையால் இன்றிலிருந்து வரப்போகும் காலத்திலெல்லாம் அதன் நிழலை நாம் நம்பியிருப்போமாக!

# 19. இன்னல்கள். முறிக்கப்படாத எலும்புகள்

அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (சங்.34:20).

பல துன்பங்களால் அவதிப்படும் நீதிமானைக் குறித்துப்பேசும்போது மேலே குறிப்பிடப்பட்ட வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தோலிலும் சதையிலும் காயங்கள் ஏற்படலாம். ஆனால் பலத்த தீமைஎதுவும் ஏற்படாது. அவன் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை.

சோதனைகளினால் தவித்துக் கொண்டிருக்கும் கடவுளின் பிள்ளைக்கு இது மிகுந்த ஆறுதலை அளிப்பதாகும். இதை நான் உண்மையென்று ஏற்றுக் கொள்கிறேன். ஏனெனில் இந்த நிமிடம் வரை என் பலதொல்லைகளினால் நான் எதையும் இழந்து விடவில்லை. நான் விசுவாசத்தையாவது அன்பையாவது நம்பிக்கையையாவது இழக்கவில்லை. நற்குணங்களின் எந்த எலும்பையும் இழக்காமல் இருந்திருக்கிறேன். அவை வலுவடைந்திருக்கின்றனவேயன்றி முறிக்கப்படவில்லை. இந்தச் சோதனைகள் வருமுன்எனக்கு இருந்ததைவிட அதிகமான அறிவு அனுபவம் திடநிலை பெற்றிருக்கிறேன். என் மகிழ்ச்சி கூட அழிக்கப்படவில்லை. வியாதி, மரணம், சோர்வு, அவதூறு, எதிர்ப்பு முதலியவற்றால் காயம் அடைந்திருக்கிறேன். ஆயினும் அந்தக் காயம் கூட ஆறிவிட்டது. எலும்பில்எவ்வித முறிவும் ஏற்படவில்லை. அதற்கான காரணத்தை எளிதில் கண்டு கொள்ளலாம். நாம் ஆண்டவரை நம்பினால் அவர் நம் எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவர் காப்பாற்றினால் அவற்றில் ஒன்று கூட முறிக்கப்படுவதில்லை.

என் இதயமே துக்கப்படாதே,நீ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறாய். ஆனால் எந்த எலும்பும் முறிக்கப்படவில்லை.

வன்மையைத் தாங்கிக்கொள். நீ எதிர்த்து நிற்பதைக் குறித்து அச்சம் கொள்ளச் சொல்.

## 20. மக்களைமக்களாகவும் கடவுளைக் கடவுளாகவும் கருதுதல்

நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். சாகப்போகிற மனுஷருக்கும் புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களைவிரித்து, பூமியை அஸ்திரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்? இடுக்கண் செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்துக்கு இடைவிடாமல் பயப்படுகிறதென்ன? இடுக்கண் செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே? (ஏசா.51:12-13).

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களையே இன்றைய தினத்துக்கான வாக்குறுதியாக எடுத்துக் கொள்ளவும். அதை விவரிக்க அவசியமில்லை. நடுங்கிக் கொண்டிருப்பவனே, அதை வாசி, விசுவாசி, அதைஉண்மையென்று ஏற்றுக்கொண்டு ஆண்டவரிடம் மன்றாடு. நீ யாரைக்குறித்துப் பயப்படுகிறாயோ அவன் மனிதனே. அதே சமயத்தில் உனக்கு ஆறுதல் அளிப்பதாக வாக்கு அளிப்பவர் கடவுள். உன்னைப் படைத்தவர் வானத்தையும் பூமியையும் படைத்தவர் ஆபத்து சிறிதளவேயானது. அதற்காகவாக்களிக்கப்படும் ஆறுதல் எல்லையற்றது.

இடுக்கண் செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே? அது ஆண்டவர் கையில் இருக்கிறது. அது மரணத்தறுவாயில் இருக்கிறவனுடைய உக்கிரமேயாகும். மூச்சு அடங்கினவுடன் அது அடங்கி விடும். நம்மைப் போல் நலிந்தவனைக்குறித்து நாம்ஏன் பயப்படவேண்டும்? அற்பமான மனிதனைக் கடவுளுக்கொப்பாக நினைப்பதனால் கடவுளை அவமானப்படுத்தாமல் இருப்போமாக.

மனிதனுக்கு அளவுக்கு அதிகமாகப் பயப்படுவதனாலும் அவனை மட்டுக்கு மீறி நேசிப்பதனாலும், அவனை விக்கிரகம் போல் ஆக்கலாம். மக்களை மக்களாகவும்கடவுளைக் கடவுளாகவும் கருதுவோமாக. அப்பொழுது ஆண்டவருக்கு மட்டுமே பயப்படுகிறவர்களாய் அமைதியுடன் நம் கடமைகளைச் செய்கிறவர்களாய் இருப்போம்.

## 21. சினத்திலிருந்து அன்புக்கு

அவர் திரும்ப நம்மேல் இரங்குவார். நம்முடைய அக்கிரமங்களை அடக்கி நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார் (மீகா 7:19).

கடவுள் ஒருபோதும் தம் அன்பிலிருந்து மாறுவதில்லை. ஆனால் அவர் சினம் சீக்கிரத்தில் மாறிவிடும். அவர் தெரிந்துகொண்டவர்கள் மேல் அன்பு கூருவது அவர் தன்மைக்கானது. அவர் சினமோ அவர் கடமைக்கானது. அவர் அன்பே உருவானவர். ஆகையால் அன்புகூருகிறார். நம்நன்மைக்காக அவர் கோபங்கொள்கிறார். அவர் இதயம் இளைப்பாறும் இடத்துக்கு அவர் திரும்பி வந்து விடுவார். அது அவருக்குச் சொந்தமானவர்கள் மேல் அவருக்கு இருக்கும் அன்பேயாகும். அதன் பின்னர் அவர் நம் துக்கத்தைக் குறித்து இரக்கப்பட்டு அதை முடிவடையச் செய்வார்.

இது எவ்வளவு சிறப்பான வாக்குறுதியாகும் என்று நினைத்துப் பாருங்கள். அவர் நம்முடைய அக்கிரமங்களை அடக்குவார். அவை நம்மை அடிமைகளாக்கக் கூக்குரலிடுகின்றன. ஆனால் ஆண்டவர் தம்முடைய வலது கையினால் நமக்கு அவற்றின் மேல் வெற்றி அருளுவார். கானானியரைப்போல்அவர்கள் முறியடிக்கப்பட்டு நுகத்தில் மாட்டப்பட்டு இறுதியாகக் கொல்லப்படுவார்கள்.

நம் பாவங்களின் குற்றப்பழி எவ்வளவு சிறப்பாக அகற்றப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். நம்முடைய பாவங்களையெல்லாம், ஆம் எல்லாப் பாவங்களையும் பார்வோனும் அவன்இரதங்களும் சென்ற சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். சர்வ வல்லமையுள்ள கரமே அவ்வித அதிசயத்தை செய்ய முடியும். ஆழம் குறைவான இடத்தில் போடப்பட்டால் ஒருவேளை அவை நீரோட்டத்தினால் கரையில் ஒதுக்கப்பட்டு விடும். ஆகையால் ஆழங்களில் போட்டுவிடுவார். அவைஅகற்றப்பட்டு விட்டன. கல்லைப்போல் அவை ஆழத்தில் அமிழ்ந்து போய் விட்டன. அல்லேலூயா! அல்லேலூயா!

## 22. அனுகூலமான துணையானவர்

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர் (சங்.46:1).

நமக்குத் தேவையானபோது கிடைக்காதஉதவியின் மதிப்பு மிகவும் குறைவானதே. வீட்டில் வைத்துவிட்டுப்போன நங்கூரம் புயல் ஏற்படும் போது மாலுமிக்குப் பயன் அற்றதாகும். கடன்பட்டிருப்பவனுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கும் போது ஒரு காலத்தில் அவனிடமிருந்த பணம் பயனற்றதாகும். உலகப்பிரகாரமானதுணைகளில் ஒன்றிரண்டையே அனுகூலமான துணைகள் எனலாம். அவைகளைத் தேடிக்கண்டு பிடிக்க வேண்டியதாயும் பயன்படுத்துவதற்கு சிரமமாயும் இருக்கும். ஒரு முறை பயன்படுத்தப்பட்டபின் அவை அனுகூலமான துணையாய் இரா. ஆனால் நம் கடவுளாகிய ஆண்டவர் நாம் தேடும்போதும் நமக்குத்தேவைப்படும்போதும் நாம் ஒருமுறை பயன்படுத்தி மகிழ்ச்சி அடைந்த பின்னும் அனுகூலமான துணையாகவே இருப்பார்.

அவர் நமக்கு மிகவும் நெருக்கமான துணையானவர். நம் நெருங்கிய நண்பரைவிட அனுகூலமான துணையானவர். ஏனெனில் ஆபத்துக்காலத்தில் நம்மில் இருக்கிறார்.நம்மைவிட நமக்கு அனுகூலமான துணையானவர். ஏனெனில் சிலவேளைகளில் நமக்கு மனஞ்சோராமை தேவைப்படுகிறது. அவர் எப்போதும் நேர்பயனுள்ளவராய் இரக்கமுள்ளவராய் முழுவதுமாக அனுகூலமான துணையிருக்கிறார். இது நமக்குத் துக்கமான காலமாயிருந்தால் அவர் இப்போது அனுகூலமான துணையானவர். நாம்அவரைச் சார்ந்து இளைப்பாறலாம். அவர் நமக்கு அடைக்கலமானவர். ஆகையால் அவரில் மறைந்திருக்கலாம். அவர் நமக்குப் பெலனானவர். ஆகையால் அவரோடு சேர்ந்திருக்கலாம். அவர் நமக்குத் துணையானவர். ஆகையால் அவர்மேல் சார்ந்திருக்கலாம். அவர் நமக்கு அனுகூலமான துணையானவர். ஆகையால்இப்போது அவரில் மன அமைதி உள்ளவர்களாய் இருக்கலாம். நமக்கு ஒரு நிமிடம்கூட கவலை அல்லது அச்சம் இருக்க வேண்டியதில்லை. சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு அடைக்கலமானவர்.

# 23. செல்வம்

யோசேப்பைக் குறித்து: கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக அது வானத்தின் செல்வத்தினாலும் பனியினாலும் ஆழத்திலுள்ள நீரூற்றுக்களினாலும்....... (உபா.33:13).

யோசேப்புக்குக் கிடைத்த செல்வத்தைப் போல் நாமும் செல்வம் உள்ளவர்களாய் இருக்கலாம். ஆயினும் வானத்தின் செல்வத்தைப் பெற்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! கடவுளோடு ஆற்றலும் கடவுளிடமிருந்து பெற்ற ஆற்றலின் எடுத்துக்காட்டுகளும் எவ்வளவுசிறப்பானவை என்று நினைத்துப்

பாருங்கள். கடவுளின் சமாதானத்தையும் ஆண்டவரின் மகிழ்ச்சியையும் கடவுளின் மகிமையையும் அனுபவிப்போம். நம் ஆசீர்வாதத்தில் எடுத்துக்கூறப்படும் இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமுமான தூயவர்மூவரின் ஆசீர்வாதங்கள் பொன்னை விட நமக்குச் சிறப்பானவை. வானத்தின் செல்வத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது உலகப்பிரகாரமான செல்வங்கள் ஒன்றுமில்லாதவை ஆகும்.

பனி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்று பாருங்கள்! பனிபெய்யும்போது நாம்எவ்விதமாயெல்லாம் ஜெபித்து புகழ்ந்து போற்றுகிறோம்! பனிப் பெய்யும்போது நம்மில் எப்படிப்பட்ட கிளர்ச்சி, வளர்ச்சி, மணம், உயிர் எல்லாம் காணப்படுகின்றன! எல்லாவற்றுக்கும் மேலாக நம் ஆண்டவர் தமது வலது கையினால் நட்ட செடிகளாகிய நமக்கு அவர் பரிசுத்தஆவியாகிய பனி மிகவும் தேவையாகும்.

ஆழத்திலுள்ள நீரூற்றுக்கள் நிச்சயமாக இது உலகிற்கு மகிழ்ச்சி ஊட்டுவனவாக சமுத்திரத்தின் ஆழத்திலிருந்து வரும் நீரூற்றுக்களைக் குறிப்பதாகும். நித்தியமாய் வற்றாதவையான நீரூற்றுக்களை வடியவிடுதல்எவ்வளவு நல்லதாகும்! இது வாய்விட்டு விவரிக்க இயலாத வரமாகும்! ஒவ்வொரு விசுவாசியும் இதை அடையும்வரை இளைப்பாறாமல் இருக்கட்டும். எல்லாருக்கும் எப்போதைக்கும் போதுமானதான யேகோவாவின் இந்த வரம் நமக்கு நித்தியமாய்க் கிடைக்கக் கூடியது. நாம் இப்போதே அதைவிரும்பி அணுகுவோமாக!

# 24. பாட்டுக்களோடு யோர்தானுக்கு அப்பால்

உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள் (உபா.33:29).

முதல் எதிரியாகிய பிசாசுஆதியிலிருந்தே பொய் பேசுபவன். ஆயினும் அவன் எளிதில் நம்பத்தகுந்தவனாயிருப்பதால் ஏவாளைப்போல் நாமும் அவனை நம்பிவிடுகிறோம். ஆனால் நாம் அனுபவமடைந்தபின் அவன் பொய்யன் என்று அறிவோம்.

நாம் கிருபையிலிருந்து நழுவி விடுவோமென்றும், நம்தொழிலைக் கனவீனப்படுத்தி விடுவோம் என்றும் சமயப்பகைவரின் தண்டனைத் தீர்ப்புப்படி அழிந்துவிடுவோமென்றும் அவன் சொல்லுகிறான். ஆனால் ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை வைத்தவர்களாய் நாம் சரியான பாதையில் சென்று, பிதா அவருக்குக் கொடுத்தவர்களில் ஒருவரையும் அவர்இழந்து விடவில்லை என்பதை மெய்ப்பிப்போம். பிசாசு நமக்கு உணவு கிடைக்காது என்றும் நம் பிள்ளைகளோடு நாம் பட்டினி கிடப்போம் என்றும் சொல்லுகிறான். ஆனால் காகத்திற்கும் உணவு அளிப்பவர் நம்மை இன்னும் மறந்து விடவில்லை. நம்மை ஒருநாளும் மறக்கவும் மாட்டார். நம்பகைவருக்கும் எதிரே நமக்கு ஒரு பந்தியை ஆயத்தம் பண்ணுவார்.

தூரத்தில் காணப்படும் சோதனையிலிருந்து ஆண்டவர் நம்மை விடுவிக்கமாட்டார் என்று அவன் நம் காதில் இரகசியமாகச் சொல்லி, கடைசியாக வரப்போகும் சோதனை நம்மை நிலைகுலையப் பண்ணிவிடும் என்றுபயப்படுத்துகிறான். அவன் எப்படிப்பட்ட பொய்யன் என்று பாருங்கள்! ஆண்டவர் நம்மைவிட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை. பொய்பேசும் பிசாசு இப்போது அவனை விடுவிக்கட்டும் என்கிறான். ஆனால் ஆண்டவர் நம்மை விடுவிக்க விரைந்து வந்து, அவன் வாயைஅடக்கி விடுவார்.

மரணம் நமக்குத் தாங்க முடியாததாய் இருக்கும் என்று சொல்வதில் அவன் மகிழ்ச்சி அடைகிறான். பெருக்கெடுத்தோடும் யோர்தானின் தண்ணீரில் என்ன செய்வாய்? என்று அவன் கேட்கிறான். இதிலும் அவன் பொய்யனே. நாம் மகிமையான கீதங்களைப்பாடிக்கொண்டு ஆற்றைக் கடந்து செல்வோம்.

## 25. அவர் வந்தார், இனி வருவார்

உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியேமறுபடியும் வருவார் (அப்.1:11).

நம் ஆண்டவர் உலகிற்கு முதன் முறையாக வந்ததை இன்று பலர் கொண்டாடுகிறார்கள். அவர் இரண்டாம் வருகையைக் குறித்த வாக்குறுதியை நினைத்துப் பார்ப்போமாக! முதல் வருகையைப்போலவே இதுவும் நிச்சயமானது. முதல் வருகையினால் உய்த்துணரவும்படுகிறது. ஊழியம் செய்யும் எளியவராக வந்தவர் இவர் ஊழியத்தின் பயனை அடையக் கண்டிப்பாக வருவார். பாடுகள் படவந்தவர், அரசாட்சி செய்வதற்கு வருவதற்குத் தாமதிக்க மாட்டார்.

இது தான் நம் மகிமையானநம்பிக்கை. அவர் மகிழ்ச்சியில் பங்கு பெறுவோம். அன்று அவர் இருந்தது போல் இன்று நாம் மறைவிலும், தாழ்விலும் இருக்கிறோம். ஆனால் அவர் வரும்போது அது அவர் திருவெளிப்பாடாய் இருப்பது போல் நம் உருவை வெளிப்படுத்திக் காட்டுவதாயும் இருக்கும். அவர் வெளிப்படும் போதுமரித்த பரிசுத்தவான்கள் உயிரோடிருப்பார்கள். பழிசுமத்தப்பட்டவர்களும் புறக்கணிக்கப்பட்டவர்களும் அவர்கள் பிதாவின் இராச்சியத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள். பரிசுத்தவான்கள் அப்போது அரசர்களையும் ஆசாரியர்களையும் போல் தோன்றுவார்கள்.

அவர்கள் துக்கநாட்கள் முடிந்துவிடும். அவர்கள் போர்புரிந்த காலத்துக்கும் சாட்சியாய் வாழ்ந்த காலத்துக்கும் ஏற்ற உழைப்பூதியமாக நீண்ட கால இளைப்பாறுதலும் ஆயிர ஆண்டு ஆட்சிக்காலத்தின் மகிமையும் இருக்கும்.

ஆண்டவர் வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவர் வந்துகொண்டிருக்கிறார். அவர் வருகையின் சத்தம் நம் இதயத்துக்கு இனிமையான இசையாய் இருக்க வேண்டும். நம்பிக்கையின் மணிகளே ஓசை எழுப்புங்கள்.

## 26. கடவுள் ஒருவரையே நீ நம்பமுடியும்

பேதுரு அவருக்குப் பிரதியுத்தமாக: உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும் நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான் (மத்.26:33).

என்ன இது கடவுளின் வாக்குறுதி அல்லவே என்று நீங்கள் எல்லாம் கூறலாம். உண்மைதான் இது ஒரு மனிதனின் வாக்குறுதி ஆனபடியால் நிறைவேறாமற் போய்விட்டது. பேதுரு நாம் நிறைவேற்ற வேண்டும் என்று தோன்றியதைச் சொன்னார். ஆனால் ஒரு மனிதனின் தீர்மானம்இல்லாமல் வேறு நல்ல அஸ்திபாரம் இல்லாத வாக்குறுதி நிறைவேறாமற் போய்விடும். சோதனை ஏற்பட்டவுடன் பேதுரு தம் ஆண்டவரை மறுதலித்து அதை ஊறுதிப்படுத்த ஆணையும் இட்டார்.

மனிதனின் வார்த்தை எப்படிப்பட்டது? ஒரே அடியில் உடைக்கப்படும் மண் பானையைப் போன்றதா?உன் சொந்தத் தீர்மானம் எப்படிப்பட்டது? கடவுளின் பராமரிப்பில் விடப்பட்டு, கனியாகும் பூவைப் போன்றதா? அல்லது அப்படியே விடப்பட்டதால் கிளையை அசைக்கும் முதல் காற்றில் கீழே விழுந்து விடுவதைப் போன்றதா?

மனிதனின் வார்த்தை அவன் செயல்படுத்தக் கூடியவற்றையே சார்ந்திருக்கும்.

உன் சொந்தத் தீர்மானத்தின் மேல் சாராதே .

உன் கடவுளின் வாக்குறுதியின் மேல் காலமும், நித்திய உலகமும், இந்த உலகமும், மறு உலகமும், உன்னிடம் உள்ளவைஎல்லாமும், உனக்கு அன்பானவர்கள் எல்லாருக்கும் உள்ள எல்லாமும் சார்ந்திருக்கின்றன.

இந்நூல் விசுவாசிகளுக்கு காசோலை ஏடாகும். இப் பக்கம் அவர்கள் எந்த வங்கியில் பணம் பெறுகிறார்கள் என்பதையும் யாருடைய கையொப்பத்தை அங்கீகரிக்கிறார்கள் என்பதையும்குறித்து எச்சரிக்கை விடுப்பதாகும். இயேசுவின்மேல் வரம்பின்றி சார்ந்திருங்கள். உங்களையும், பெண்ணிடம் பிறந்த யாரையும் எல்லைக்கு மீறி நம்பாதிருங்கள்: ஆண்டவரையே முழுவதுமாக நம்புங்கள்.

# 27. அவர் இரக்கமும் உடன்படிக்கையும்

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என்கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்றுஉன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா.54:10).

தெய்வீக அன்பின் மிகச்சிறந்த அம்சம் அதன் நிலைத்திருக்கும் தன்மையே ஆகும். உலகைத் தாங்கி நிற்கும் தூண்கள் அவை இருக்கும்இடத்திலிருந்து நிலை பெயர்ந்து விடலாம். ஆனால் இரக்கமுள்ள யேகோவாவின் கருணையும் உடன்படிக்கையும் அவர் மக்களை விட்டு ஒருபோதும் அகன்றுவிடா. தெய்வீக உள்ளுக்கம் பெற்ற இந்த ஊறுதிமொழியை உறுதியாய் நம்புவதால் என் ஆன்மா எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது! இந்தஆண்டு முடியப்போகிறது. என்

வாழ்க்கையின் ஆண்டுகளும் குறைந்து கொண்டே வருகின்றன. ஆனால் காலத்தினால் என் ஆண்டவர் மாறுவதில்லை. பழைய விளக்குகளின் இடத்தில் புதிய விளக்குகள் வருகின்றன. எல்லாவற்றிலும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கிறது. ஆனால் ஆண்டவர்மாறாதவராயிருக்கிறார். குன்றுகள் இயற்கை ஆற்றல் குன்றினால் நிலை பெயர்ந்து விடுகின்றன. ஆனால் கருதத்தக்க எந்த சக்தியும் நித்தியமான கடவுளின் நிலையை மாற்ற முடியாது. இறந்தகால நிகழ்கால எதிர்கால சம்பவம் எதுவும் யேகோவாவை என்மீது இரக்கம் அற்றவர் ஆக்க முடியாது.

என் ஆத்துமாவே, அவர் நெருங்கிய உறவினர் போல் உன்னை நடத்தும் ஆண்டவரின் நித்திய இயக்கத்தின் நிச்சயத்தில் அமர்ந்திரு. நித்திய உடன்படிக்கையையும் நினைவில் வைத்திரு. கடவுள் எப்பொழுதும் அதை நினைத்திருக்கிறார். நீயும் அதை நினைத்திருக்கக்கவனமாயிரு. மகிமையுள்ள கடவுள் இயேசு கிறிஸ்துவில் தாம் உன் கடவுளாக இருப்பதாகவும், உன்னைத் தம் மக்களில் ஒருவராக வைத்திருப்பதாகவும் வாக்குறுதி அளித்திருக்கிறார். இந்த வாக்குறுதியை இரக்கமும் உடன்படிக்கையும் உறுதி செய்திருப்பதால் நித்திய காலமாய் அதுஉன்னிடமிருந்து எடுபடாது.

# 28. வரம்பற்ற உறுதி

நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே (எபி.13:5).

வேதத்தில் பலமுறை ஆண்டவர் இந்த வார்த்தைகளைச் சொல்லி இருக்கிறார். இதை உறுதி செய்ய மறுபடியும் மறுபடியும் சொல்லியிருக்கிறார். அதைக்குறித்து நாம் எவ்வித ஐயமும் கொள்ளாதிருப்போமாக! தன்னிலேயே இந்த வாக்குறுதி அழுத்தமானது. கிரேக்கமொழியில் இந்த வார்த்தைக்கு 5 எதிர்மறைச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தம் மக்களில்

ஒருவராவது கைவிடப்பட்டவர்களாக உணராதவாறு அவ்வித நிலை ஏற்படக்கூடிய எல்லா நிலைகளும் அகற்றப்பட்டிருக்கின்றன. விலை மதிக்க முடியாத வேதம் நமக்குத் தொல்லைகள் இல்லாமலிருக்கும்என்று உறுதி கூறுவதில்லை. ஆனால் நாம் கைவிடப்படுவதில்லை என்று உறுதி கூறுகிறது. நாம் பழக்கப்படாத பாதைகளில் செல்ல அழைக்கப்படலாம். ஆனால் நமக்கு எப்போதும் ஆண்டவரின் தோழமையும், உதவியும், வழிவகைகளும் இருக்கும். நாம் பணத்தை இச்சிக்க வேண்டியதில்லை.ஏனெனில் நம் கடவுள் எப்போதும் நம்மோடு இருப்பார். அவர் தங்கத்தை விட மேலானவர். அவரது நட்பாதரவு செல்வ வளத்தை விடச் சிறந்தது.

நமக்கு இருப்பவைகளில் நாம் திருப்தி அடைய வேண்டும். ஏனெனில் கடவுளைத் தன் பங்காகக் கொண்டவன் உலகத்திலுள்ள எல்லாவற்றையும்அடைந்தவனாக இருக்கிறான். எல்லையற்ற பரம்பொருளை விட வேறு எது நமக்கு வேண்டும்? சர்வ வல்லவரின் நன்மைகளை விட வேறு எதன் மேல் நமக்கு விருப்பம் இருக்க முடியும்?

என் இதயமே, கடவுள் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்றுசொல்லியிருப்பதால் நீ உன் ஆண்டவரை விட்டு விலகாமலும், ஒரு நிமிடம் கூட அவரைக் கைவிடாமல் இருப்பதற்கான கிருபைக்காகவும் அதிகமாக வேண்டுதல் செய்.

# 29. அவர் பரம வீட்டுக்கு நம்மைச் சுமந்து செல்வார்

உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான்

*அப்படிச் செய்து வந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (ஏசா.46:4).*

ஆண்டு முடியும் நிலையில் இருக்கிறது. வயது முதிர்ந்தவர்களுக்கு ஏற்றதான வாக்குறுதி ஒன்று இதோ இருக்கிறது. நமக்கும் வயதாகிக் கொண்டே போகிறது. ஆகையால் இது எல்லாருக்கும் ஏற்றதான வாக்குறுதியாகும். நாம்நீண்ட நாள் வாழ்வோமாக! அப்பொழுது முதிர் வயதில் நரை முடி காணப்படும். ஆகையால் நம்பிக்கையின் எதிர்பார்க்குதலின் மூலம் நாமும் இந்த வாக்குறுதியில் மகிழ்ச்சி அடையலாம்.

நாம் முதிர் வயதடையும் போதும் நம் கடவுள் இருக்கிறவராகவே மாறாதவராய் இருப்பார்.நரைமுடி நம் உடலின் காலச் சிதைவைக் காட்டுவதாகும். ஆனால் அவர் காலச்சிதைவு அடைவதில்லை. நாம் ஒரு சுமையைத் தூக்க முடியாத நிலையிலும் நம்மையே சுமக்க முடியாத நிலையிலும் இருக்கும் போதும் ஆண்டவர் நம்மைச் சுமப்பார். நம் குழந்தைப் பருவத்தில் ஆட்டுக்குட்டிகளைப் போல்நம்மை மார்பில் சுமந்தார். அதைப்போல நம் பெலவீனமான நிலையிலும் சுமப்பார்.

அவர் நம்மைப் படைத்தார். அவர் நம்மைப் பராமரிப்பார். நாம் நம் நண்பருக்குச் சுமையாகி, நமக்கும் சுமையாகும் போது ஆண்டவர் நம்மை உதறித் தள்ள மாட்டார். நம்மை ஏந்துவார்,சுமப்பார், தப்புவிப்பார், அவர் ஊழியக்காரரில் பலரை முதிர்வயதில் சமாதானமாக அமர்ந்திருக்கச் செய்கிறார். அவர்கள் வாழ்நாளில் கடினமாக உழைத்து, உடல் தேய்ந்தவர்களாயிருக்கிறார்கள். ஆண்டவர் அவர்களிடம் உங்களுக்காக நான் ஆயத்தம் பண்ணியிருக்கும் நித்தியஓய்வு நாளை எதிர்நோக்கி இப்போது இளைப்பாறுங்கள் என்று சொல்லிருக்கிறார். முதிர்வயதைக் குறித்து நாம் திகில் அடையாமல் இருப்போமாக! ஆண்டவர் கிருபையின் நிறைவில் நம்மோடு இருப்பதால் அருளோடு முதிர் வயதடைவோமாக!

# 30. பூரணமடையும் வரை அன்பு கூர்ந்தார்

தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே முடிவு பரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் (யோ.13:1).

இச்செய்தி ஒரு வாக்குறுதியேயாகும். ஏனெனில் நம் ஆண்டவர்அக்காலத்தில் இருந்ததைப் போலவே இக்காலத்திலும் இருக்கிறார். அவர் உலகத்திலிருந்த போது அவர்களோடு வாழ்ந்தவரிடம் எப்படி இருந்தாரோ, அவ்விதமே சந்திரன் இருக்கும் வரை அவருக்கு அன்பானவர்களிடமும் இருப்பார்.

அன்பு வைத்தபடியே இதுதான் ஆச்சரியமானது.மனிதனில் அவர் அன்பு வைத்ததே ஆச்சரியமாகும்! ஏழைகளான அவர் சீடர்கள் மேல் அவர் அன்பு வைத்ததற்கு அவர்களில் என்ன இருந்தது? என்னில் என்ன இருக்கிறது?

ஆனால் அவர் ஒரு முறை நேசிக்கத் தொடங்கி விட்டால் தொடர்ந்து நேசிப்பது அவர் தன்மையாகும்: அன்புபரிசுத்தவான்களை அவர்களுடையதாக்கியது. இது எவ்வளவு சிறந்த பட்டமாகும். அவர் தமது இரத்தத்தினால் அவர்களை விலைக்கு வாங்கினார். அவர்கள் அவர் அரும்பொருள் ஆனார்கள். அவர்கள் அவருடையவர்கள் ஆனபடியால் அவர் அவர்களை இழக்க மாட்டார். அவர்கள் அவருக்கு அருமையானவர்கள் ஆனபடியால்அவர்கள் மேல் அன்பு வைக்காமல் இருக்கமாட்டார். என் ஆன்மாவே, அவர் உன்மேல் அன்பு வைக்காமல் இருக்கமாட்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட வசனம் முடிவு பரியந்தம் என்று கூறுகிறது. அவர் மரணமடையும்வரை அவருக்குச் சொந்தமானவர்கள் மேல் அவருக்கு இருந்த அன்பு அவர்புனிதமான இதயத்தில் இருந்தது. இது எல்லைக் கோடிவரை என்பதையும் குறிக்கிறது. இதைவிட அதிகமாக அவர் அவர்களில்

அன்பு வைக்க முடியாது. அவர்களுக்காகத் தம்மையே ஒப்புக் கொடுத்தார். சிலர் பூரணமடையும் வரை என்று சொல்கிறார்கள். அவர்கள்மேல் குற்றமற்றதும், மாசற்றதும்,முட்டாள் தனமற்றதும், நம்பிக்கைக் கேடு அற்றதுமான அன்பைப் பொழிந்தார்.

இயேசுவுக்கு அவர் மக்கள் ஒவ்வொருவர் மேலும் அப்படிப்பட்ட அன்பே இருக்கிறது. நமக்கு அன்பானவர் மேல் ஒரு பாட்டுப் பாடுவோமாக.

# 31. மோட்சத்தில் புதியவர் அல்ல

உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்ளுவீர் (சங்.73:24).

ஒவ்வொருநாளும் ஆண்டு ஆண்டாகவும் நான் ஆண்டவரின் ஞானத்திலும் அன்பிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். நான் வீணாக நம்பிக்கை வைக்கவில்லை என்றும் அறிந்திருக்கிறேன். அவர் கூறிய எந்த நல்ல வார்த்தையும் ஒருநாளும் பொய்யானதில்லை. ஒன்றும் ஒருநாளும் வீணாய்ப்போகாது என்றும் நான் நம்புகிறேன்.

நான் அவர் வழிநடத்தலுக்காக என்னை அவர் கைக்குள் வைக்கிறேன். எந்த வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரியாது. என் சுதந்திரத்தை ஆண்டவர் எனக்காகத் தெரிந்து கொள்வார். எனக்கு ஆலோசனையும்,புத்திமதியும் தேவை. ஏனெனில் என் கடமைகள் திருக்கு மறுக்கானவையாயும், என் நிலை சிக்கலானதாயும் இருக்கிறது. ஆதிகாலத்தில் பிரதான ஆசாரியார் தம் ஊரீம் தும்மீம்மை நோக்கிப் பார்த்தது போல் நான் ஆண்டவரைத் தேடுகிறேன். என் திறனாய்வுக்கும் நண்பர்கள்ஆலோசனைக்கும் மேலாக தவறா நிலையுடைய கடவுளின் ஆலோசனையை நாடுகிறேன். மகிமையுள்ள யேகோவாவே நீர் என்னை வழிநடத்துவீராக!

சீக்கிரத்தில் முடிவு வரும். இன்னும் சில ஆண்டுகளில் நான் இந்த உலகை விட்டு, பிதாவண்டை செல்வேன். என் ஆண்டவர் என்படுக்கையண்டை இருப்பார். மோட்சத்தின் வாசலில் அவர் என்னைச் சந்திப்பார். மகிமையின் நாட்டிற்குள் அவர் என்னை அழைத்துசு; செல்வார். மோட்சத்தில் நான் அந்நியனாய் இருக்க மாட்டேன். என் சொந்தக் கடவுளும் பிதாவுமானவர் அதன் முடிவில்லா மகிமைக்குள் என்னை ஏற்றுக்கொள்வார்.

இங்கு என்னை வழி நடத்துபவரும், இனிமேல் என்னை ஏற்றுக்கொள்பவரும் ஆனவருக்கு மகிமை உண்டாவதாக! ஆமென்.

*Download / பதிவிறக்கம்:*

*www.WordOfGod.in and www.Archive.org*



இந்த மொழிபெயர்ப்பு
*www.TamilChristian.com* என்னும்
இணையதளத்தில் இருந்து எடுக்கப்பட்டது.